அகிலம்

2018

வெள்ளி விழா - பவள விழா சிறப்பு மலர்



கலை இலக்கிய அறிவியல் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமான தங்க நகைகளுக்கு.....

Nagalingams Jewellers

Designers and
Manufacturers of 22 Kt
Sovereign Gold Quality
Jewellery

No. 101, Colombo Street, Kandy
Tel : 081 2232545

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

அகிலம்

"அகிலம்" அறிவியல் சஞ்சிகை

கண்டி, கலை இலக்கிய இரசிகர் மன்றம்

இணைந்து நடாத்தும்

மாபெரும் கலை, இலக்கியப் போட்டிப் பரிசளிப்பு, வெள்ளி விழா – பவள விழா சிறப்பு மலர்

2018

9133 (P)
PL

ஆசிரியர் :

கலாபூஷணம் கே. வி. இராமசாமி

அகில இலங்கை சமாதான நீதவான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PATRONS :-

Hon. P. P. Devaraj
Chairman
GOPIO, Council

Prof. Durai Manoharan
Former Head, Tamil Department,
University of Peradeniya.

CHAIRMAN :-

Sevajothy S. Muthiah J.P. (Whole Island)
Luckyland Biscuits, Kundasale.

PRESIDENT :-

Kalabooshanam K.V. Ramasamy J.P
Editor - Akilam
Kandy.

VICE PRESIDENTS :-

Prop. R. Mohan Nagalingam
Justice of the Peace (**Whole Island**)
Nagalingam Jewellers,
Kandy.

Mr. R. Manoharan J.P.
Managing Director,
Luckyland Biscuits, Kundasale

Prop. P. Palaniappan J.P. (Whole Island)
Ranjitha Traders - Kandy

HONY. SECRETARY :-

Mr. P. Sivakumar
Principal,
K/Hindu senior College, Kandy

HONY. TREASURER :-

Mr. R. Sudharshan
Kandy.

EXECUTIVE COMMITTEE :-

Mr. M. Rajendran
Nesto Confectionery, Kundasale.

Mr. P. Ramaraj
Green Apple Foods, Kundasale.

Mr. P. Kanagaraj
Mega Collection, Kandy.

Mr. M. Sathiyamoorthy J.P (Whole Island)
Saratha Jewellers, Meera Travels
Digana - Kandy.

Mr. R. Saravanan J.P.
Latha Jewellers, Kandy

Mr. V. Kanagaraja J.P.
Jayanthy's Kandy

Mr. A. Ariyaratnam
Accountant & Auditor, Kandy.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

தமிழ்மொழி

வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே.

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே.

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே.

சூழ்கவி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே.

தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே.

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே.

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகிலமே வருக ....

என்றும் இதயத்தில் - கவிமணி தமிழோவியன்

எங்கள் நண்பர் இராமசாமியின்
இலக்கிய வேட்கையால்
இல்லந்தோறும் "அகிலம்" இதழை
இன்று காண்கின்றோம்!
பொங்குந்திறன் ஆய்வறிவு
புலமை மிளிர்ந்திடும்
புதுமையான ஆக்கம் நிறைந்த
அகிலம் வளர்கவே ....!

தனி ஒருவர் தளர்ந்திடாமல்
தொடர்ந்து வெளியிடும்
தடைகடந்த 'அகிலம்' ஏடு
தழைத்து ஓங்கவே ......!

இனிவரும் இளையோர்களின்
எழுதும் ஆற்றலை
இலங்கச் செய்யும் நோக்குடனே
இலக்கியப் போட்டியை,
நடத்தி மகிழும் 'அகிலம்' இதழ்
நாளும் மலரட்டும்!
நல்லதமிழ்ப் படைப்புகளை நமக்கு
நல்கட்டும்.

படத்தைக்காட்டிப் பணஞ்சுருட்டும்
போக்கும் இன்றியே
படிக்கப்படிக்கச் சுவை பயக்கும்
அகிலம் வருகவே!

பெற்றதாயின் பெயரையிட்டு
இதழ் நடத்திடும்
பேறுபெற்ற இராமசாமி
பெருமை பெற்றிட
கற்றதமிழ் வாசகர்கள்
கரங் கொடுக்கட்டும்!

காலந்தோறும் அகிலம் மக்கள்
கரத்தில் தவழட்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம்

01. ஆசிரியர் உள்ளத்திலிருந்து...... VII
02. **சேவாஜோதி எஸ். முத்தையா** அவர்களின் பவளவிழா சிறப்பு மலர்
- வாழ்த்துச் செய்திகள் A-01 - A28
03. **கலாபூஷணம் கரு. வேலு. இராமசாமி** அவர்களின் பவளவிழா சிறப்பு மலர்
- வாழ்த்துச் செய்திகள் B-01 - B56
04. அகிலம் கௌரவப் பரிசளிப்பு - கலைவிழா படங்கள் 1994 - 2016 B-57 - B76
05. விநாயகர் தேவாரம் 01
06. கண்டி ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலய வரலாறு – **கலாபூஷணம் கே. வி. இராமசாமி** 02
07. மலையகத்தின் அடையாளத்தை பிரதிபலிக்க பல்கலைக்கழகம் அவசியம்
– **பேராசிரியர் சோ. சந்திரசேகரன்** 06
08. கல்வியின் முடிவு நற்பண்புகள் – **தேசபந்து தெ. ஈஸ்வரன்** 07
09. உயிர்பெற்ற கருங்கற் பாறை – **திரு. ந. லெப்டின்ராஜ்** 09
10. இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்கள் – **மாண்புமிகு P. P. தேவராஜ்** 15
11. காலப் பெருவெளி – **தியத்தலாவ எச். எப். ரிஸ்னா** 18
12. இலங்கையில் உயர் கல்வி – **பேராசியர் M.S. மூக்கையா** 19
13. தமிழ் மரபில் அழகிய நோக்கு – **பேராசிரியர் சபா. ஜெயராசா** 29
14. உரிமை மறுப்பும் வறுமையும் – **பேராசிரியர் எம். சின்னத்தம்பி** 33
15. உலகமயமாக்கமும் வளர்முக நாடுகளில் மனிதவள விருத்தியும்
– **பேராசிரியர் வித்தியாநிதி சோ. சந்திரசேகரன்** 37
16. இலங்கையில் உள்ளூர்ப் பிரபுத்துவம் – **பேராசிரியர் துரை. மனோகரன்** 45
17. மலையக சமூக அபிவிருத்தியும் உயர் கல்வியும் – **பேராசிரியர் தை. தனராஜ்** 49
18. பன்றியும் ஆமையும் கல்விக் கோட்பாடு – **கலாநிதி தமிழ்மணி அகளங்கன்** 55
19. தமிழ் அரசியல் சிந்தனையின் வளர்ச்சிப் போக்குகள்
– **பேராசிரியர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்** 61
20. கிழக்கு மாகாணத்தில் வழங்கிவரும் கண்டி மன்னர்கள் பற்றிய வாய்மொழி
இலக்கியங்கள் – **பேராசிரியர் செ. யோகராசா** 70
21. சங்கச் செய்யுள்களும் தற்காலக் கவிதைகளும் – **விரிவுரையாளர் எஸ். ஆர். தேவகுமாரி** 73
22. மலையகச் சமூகத்தை வலுப்படுத்துதல் – **திரு. எம். வாமதேவன்** 81
23. இன்றைய உலகை ஆளும் இன்றைய சாதனங்கள் – **கவிஞர் எஸ். முரளிதரன்** 88
24. தாய் மொழியின் சிறப்பு – **திரு. த. மனோகரன்** 96
25. சூரியக் குழந்தைகள் – **குறிஞ்சி கவிமழை புசலாவ இஸ்மாலிஹா** 99
26. முகம்மது சலீம் - ஒரு முற்போக்கு இலக்கிய முன்னோடி – **லெனின் மதிவானம்** 101
27. ஆசிரியனாக எமது அனுபவங்கள் – **திறனாய்வாளர் கே. எஸ். சிவகுமாரன்** 107
28. புதுமைப் பித்தன் - ஒரு நோக்கு - **கலாபூஷணம் ஆ. இரகுபதி பாலாஸ்ரீதரன்** 109
29. விண்மட்டும் தெய்வமன்று மண்ணும் அ∴தே – **கம்பவாரிதி இ. ஜெயராஜ்** 113
30. எல்லாமே தரவேண்டும் எங்களுக்கும் – **காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன்** 121
31. மனிதவாழ்க்கையில் 18 படிகள் – **திருமதி குமாரசாமி** 122

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. இலக்கிய வித்தகர் – **திருமதி கோகிலா மகேந்திரன்** 124
33. மனோசக்தியெனும் சங்கல்பசக்தி - சிவநெறிச்செல்வன் பெ. சிவகுமார் 128
34. சிறுநீருடன் வலியின்றி இரத்தம் வெளியேறுவது – **டாக்டர் ச. முருகானந்தன்** 131
35. இலங்கையின் முதல் வெற்றிகரமான இருதய சிகிச்சை – **திருமதி எம் கோகிலேஸ்வரி ராம்குமார்** 133
36. மலைநாடும் சூழலும் – Dr. S. Paskaranathan 137
37. உண்மையான நட்பு எது? – **கலாபூஷணம் வயலற் சரோஜா** 141
38. மரபுக் கவிதை – **விரிவுரையாளர் ந. பார்த்தீபன்** 145
39. சட்டங்களுக்குட்பட்ட பிரஜாவுரிமை – **கலாபூஷணம் மு. சிவலிங்கம்** 149
40. கைலாசபதியும் விமர்சன பின்னணியும் – **திரு. இரா. நித்தியானந்தன்** 153
41. மாணவர்களின் கல்வி அபிவிருத்தி – **மொழிவரதன் C. மகாலிங்கம்** 159
42. திருமுருகன் தடுத்தாட்கொண்ட சித்தர் – **கவிஞர் கலாபூஷணம் கா. சிவலிங்கம்** 161
43. எங்களுக்கும் காலம் வரும் – **ஆசிரியை குழந்தைவேல் ஞானவள்ளி** 164
44. அனைத்து மதங்களும் நேசிக்கும் அழியாத சொத்து ......
– **கலாபூஷணம் மாத்தளை ராஜ்சிவா சிவலிங்கம்** 165
45. இலக்கிய உலகில் இஸ்லாமியத் தமிழ் – **தேசாபிமானி திருமதி ஏ. யு. எஸ்.அரபா** 167
46. பார்துதவாரோ மனிதப் பண்புள்ளோர்கள் – **கீழ்கரவை இ. குலசேகரன்** 170
47. மொழிபெயர்ப்புக் கலை – **செல்வி எம். எம். பி. நதா** 171
48. மனிதனுடைய ஆளுமை பற்றிய – **திரு. திரவியநாதன் திலீபன்** 173
49. பெருந்தோட்டத் துறையினர் எதிர்கொள்ளும் சவால்கள் – **செல்வி. வி. விஜயதர்ஷினி** 177
50. பெண்ணே நீ பெருமைகொள் – **செல்வி ரோசானி சிங்கராசா** 182
51. நல்லிணக்க அடிப்படையில் கச்சதீவு திருவிழா – **யாழ். தர்மினி பத்மநாதன்** 183
52. சுதந்திர இலங்கையில் மலையக மக்களின் சமூக குடியுரிமை: சில அவதானிப்புகள்
– **கலாநிதி இரா. ரமேஷ்** 189
53. மாத்தளைப் பிராந்தியமும்மலரன்பனின் படைப்புலகமும் கோடிச்சேலைச் சிறுகதைத்
தொகுப்பை முன்னிறுத்தி : சில அறிமுகக் குறிப்புக்கள் – **பெ. சரவணகுமார்** 194
54. மாணவர்களின் ஊக்கத் தொழிற்பாட்டில் – **ஆசிரியை ஜெயராம் சசிகலா** 200
55. மலையக இலக்கியமும் சி. வி. வேலுப்பிள்ளையும் – **விரிவுரையாளர் பன்னீர்செல்வம்** 203
56. வலைப் பூக்களின் தொலைப் பயணம் – **கவிஞர் பூனாகலை நித்தியஜோதி** 210
57. முத்தமிழ் வளர்ச்சியும் பெண்களின் வகிபாகமும் – **செல்வி செ. பரமேஸ்வரி** 211
58. மலையக இலக்கியம் – **எழுத்தாளர் பாலா சங்குப்பிள்ளை** 213
59. அம்மாவின் கட்டளைகள் – **இரா. சடகோபன்** 215
60. வோல்ட் டிஸ்னி – **கவிஞர் எம். பிரேம்ராஜ்** 217
61. கட்டுப்பாடாகச் செயற்பட வேண்டிய கண்டி மாவட்ட தமிழர்கள் – **த. மனோகரன்** 220
62. கின்னஸ் சாதனைக் கனவுகளுடன் – **ஆர். ஏ. விக்னேஸ்வரன்** 223
63. மலையகத் தலைநகர் கண்டியில் வரலாற்று முத்திரை பதித்த - P. T. இராஜன் 224
64. என்றென்றும் மறக்கமுடியாத – **செய்தி ரா. மு. நாகலிங்கம்** 226
65. செம்மொழி வல்லான் மானுட நேயன் – **கலாநிதி க. நாகேஸ்வரன்** 228
66. "அகிலம்" இலக்கியப் போட்டியில் பரிசு பெறுவோர் 231

ஆசிரியர் கலாபூஷணம் கே, வி. இராமசாமி, J. P.

கடித தொடர்பு முகவரி :

அகிலம் பப்ளிகேஷன்ஸ்

10,1/1, திம்பிரிகஸ்யாய பிளேஸ், கொழும்பு - 05 - இலங்கை.

தொலைபேசி : 0766987504 / 0765490085

இச்சஞ்சிகையில் வெளிவரும் கட்டுரைகளுக்கு கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர்

வங்கிக் கணக்கு : *K. V. Ramasamy, A/c No. 96684 - BOC - Kandy*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகம் கல்வியில் தன்னிறைவுகண்டு எழுச்சிபெற மலையகத்திற்கென தனியான ஒரு பல்கலைக்கழகம் காலத்தின் கட்டாயத் தேவையுமாகும்.

- எனது அன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய பெருந்தகைகள் அனைவருக்கும் முதற்கண் எமது நன்றி கலந்த வணக்கத்தை தெரிவிப்பதில் பெருமகிழ்வும் மனநிறைவும் அடைகின்றேன்.

- எமது மலையக மண்ணின் மைந்தர்கள் தலைநிமிர்ந்து நிற்பதற்கும் எமது பண்பாட்டு கலாசார பாரம்பரிய முதுசங்களை களஞ்சியப்படுத்தி பேணி பாதுகாப்பதற்கும் எமக்கென தனியான பல்கலைக்கழகமொன்று மிக அவசரத் தேவையாகும். அத்துடன் ஏனைய சமூகங்களுக்கு நிகராகவும் போட்டி நிறைந்த நவீன தொழில்நுட்ப உலகுக்கு முகங்கொடுக்கவும் எமது மாணவர்களின் அறிவியல் திறனையும் வளர்க்க வேண்டியது அவசியமாகும்.

- தமிழர்களின் பெரும் சொத்தான இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் மலையக மண்ணிலிருந்து அழிந்துகொண்டு வருவது வேதனை தரக்கூடிய ஒன்றே. இவற்றைப் பேணிப் பாதுகாப்பாரும் போற்றுவாரும் இல்லாமல் போனால் அழிவது சாத்தியமே!

- இப் பல்கலைக்கழகம் குறித்த வாதப் பிரதிவாதங்களும் அவசியப்படுவதும் அனைவரும் அறிந்ததே. எனினும் அதிகாரத்திலிருப்பவர்களும் அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் அதனைச் சாத்தியப்படுத்தும் நிலையிலிருப்பவர்களும் ஒன்றிணைந்து இத்தேவையை நிறைவேற்றுவது வரவேற்கக்கூடிய ஒன்றாகும்.

- எனவே, இலைமறைகாயாக அங்கங்கே உதிரிகளாக இருக்கும் எமது மண்ணின் கல்விமான்களையும் கலைஞர்களையும் ஒன்றிணைந்து ஓர் உறுதியான அமைப்பினைத் தோற்றுவித்து இப்பெருமுயற்சியை முன்னெடுத்தச் செல்வது சம்பந்தப்பட்டோரின் பாரிய கடமையாகும்.

- மலையகத்திற்கென தனியானதொரு பல்கலைக்கழகம் குறித்து மிக நீண்டகாலமாக குரல் கொடுத்தும் எழுதியும் வருகின்ற பேராசிரியர் சோ. சந்திரசேகரன், பேராசிரியர் எம். எஸ். மூக்கையா, பேராசிரியர் எம். சின்னத்தம்பி, பேராசிரியர் தை. தனராஜ், கலாநிதி ஏ. எஸ். சந்திரபோஸ், திரு, எம். வாமதேவன் முதலியவர்களோடு ஒரு ஆலோசனைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுவை அமைத்து அது குறித்து ஆர்வத்துடனும் முனைப்புடனும் இருக்கின்ற மலையகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், சட்டத்தரணிகள், அதிபர்கள், ஆசிரியப் பெருந்தகைகள் மற்றும் கல்வி ஆர்வலர்கள் அனைவரும் இத்தருணத்தில் ஒன்றிணைந்து எமக்கான பல்கலைக்கழகம் குறித்த முன்னேற்பாடுகளை செய்வது அவசியமாகும். இது சம்பந்தமாக மாண்புமிகு ஜனாதிபதி, கௌரவ பிரதம மந்திரி, கல்வி மந்திரி, உயர்கல்வி அமைச்சர் ஆகியோருடன் கலந்தாலோசித்து எதிர்வரும் மாகாணசபை தேர்தலுக்கு முன்பு நடைமுறைப்படுத்துவது அவசியமாகும். காலத்தின் கட்டாயத் தேவையுமாகும்.

- மேலும் இப் பெருமுயற்சியின் தூண்களான முன்னாள் இராசாங்க அமைச்சர் திரு. பீ. பீ. தேவராஜ் அவர்கள், இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் தெரிவுசெய்யப்பட்ட கல்வி இராசாங்க அமைச்சர் கௌரவ வேலுசாமி இராதாகிருஷ்ணன் அவர்கள், தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் கௌரவ பழனி திகாம்பரம் அவர்கள், நல்லிணக்க தேசிய கலந்துரையாடல் அமைச்சர் கௌரவ மனோ கணேசன் அவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களாக கௌரவ வேலுகுமார் அவர்கள், கௌரவ மயில்வாகனம் திலகராஜ் அவர்கள், கௌரவ அ. அரவிந்தகுமார் அவர்கள், கௌரவ வடிவேல் சுரேஷ் அவர்கள் ஆகிய அனைவரும் மலையகப் பல்கலைக்கழகத்திற்கு உந்துசக்தியாக இருப்பார்களாயின் அதுவே, எமது சமூகத்திற்கு செய்யும் மகத்தான பணியாகும்.

- எதிர்கால சந்ததியினரை எடை போட்டுப் பார்க்கக்கூடிய கலை, இலக்கிய அறிவியல் சஞ்சிகையான "அகிலம்" நாம் ஆரம்பத்தில் பிரகடனப்படுத்தியதிலிருந்து இம்மியளவும் மாறவில்லை. தமிழ் பேசும்மக்கள், குறிப்பாக மலையக மாணவ மணிகள் கல்வியில் ஒரு புரட்சியைக் காணவேண்டுமென்றும் கல்வியில் தன்னிறைவு காணவேண்டுமென்றும் எமது நோக்கத்தை இதழுக்கு இதழ் "அகிலம்" வெளிப்படுத்தி வந்திருக்கிறது.

- "அகிலம்" கடந்து வந்த பாதை மிகவும் கரடுமுரடானது. என்றாலும் நாம் தொடர்ந்து மேற்கொண்டிருக்கும் பாதை, அதன் பணி புனிதமானது. இப்பணி தங்குதடையின்றி சிறப்புடன் தொடர்ந்து வரும் என்பதில் எந்தவிதமான சந்தேகமுமில்லை. வேதனையில் சாதனை பல படைத்தவர்கள் நாம். "அகில"த்தின் தொனியும் அதுதான்.

- "அகில"த்திலும் எமது கலை, கலாசாரத்தைப் பற்றி எழுதுகின்றோம். விரசமில்லாமல் ரசனையோடு சமூகத்தின் பல்வேறு வளர்ச்சிப் பாதையை மனதிற்கொண்டு படிப்படியாக புதிய புதிய அம்சங்களையும் சேர்த்து வருகின்றோம் என்றால் மிகையாகாது. இவைகள் தொடர்பான எமது அன்பிற்குரிய வாசகர்கள், நலன் விரும்பிகளின் எண்ணங்களையும் கருத்துக்களையும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

கலாபூஷணம் கே. வி. இராமசாமி
அகில இலங்கை சமாதான நீதவான்
- ஆசிரியர் "அகிலம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



லக்கிலேண்ட்

தொழிலதிபர் , இலக்கியக் காவலர்,

சேவாஜோதி

சின்னசாமி முத்தையா ஜே. பி.

அவர்களின்

பவள விழா
சிறப்பு மலர்
2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமர்ப்பணம்

லக்கிலேண்ட் தொழிலதிபர், சேவாஜோதி எஸ். முத்தையா அவர்களின் பெற்றோர்
திரு. சின்னசாமி கவுண்டர் திருமதி அங்கம்மாள் தம்பதியினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவள விழா ஆண்டில் தடம்பதித்திருக்கும்

லக்கிலேண்ட் நிறுவனத்தின் தொழிலதிபர்
சேவாஜோதி எஸ். முத்தையா ஜே.பி.,
இல்லத்தரசி திருமதி லக்ஷ்மி முத்தையா அவர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லக்கிலேண்ட் நிறுவன ஸ்தாபகரும்,

சின்னசாமி முத்தையா அவர்களின் சகோதரருமான

அமரர் சின்னசாமி இராமசாமி அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துச் செய்தி

அகவை எழுபத்தைந்து பவள விழா ஆண்டில் தடம் பதித்துள்ள எனது சித்தப்பா சேவாஜோதி எஸ். முத்தையா பற்றிய சில வார்த்தைகள்.

எனது தந்தையார் அமரர் எஸ். இராமசாமி அவர்களினால் பள்ளிப் படிப்பை மேற்கொள்வதற்காக கண்டிக்கு அழைத்து வரப்பட்டு, பின்பு தன்னிலும் ஒன்பது வயது வித்தியாசம் கொண்ட முத்தையாவை தனது தொழிலிலும் இணைத்துக்கொண்டார்.

சித்தப்பா எமது லக்கிலேண்ட பிஸ்கட் நிறுவனத்திற்காக தனது வாழ்நாளை அர்ப்பணித்தவர். கடின உழைப்பாளி எமது நிறுவனத்தின் சகல வேலைகளையும் தன் கைப்பட செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்டு ஒரு நாளில் 14 மணித்தியாலங்கள் இன்றும் அயராது உழைத்து வருபவர்.

எனது தந்தையார் எஸ். இராமசாமி அவர்களின் மறைவிற்குப் பின் எனக்கு, அவர் இல்லாத குறையை நிவர்த்தி செய்வதுடன் நிறுவனத்தின் வளர்ச்சிக்காக நான் எடுக்கும் சகல முடிவுகளுக்கும் மறுப்புத் தெரிவிக்காமல் சம்மதம் தெரிவித்து என்னை இன்று வரை ஊக்குவித்துக் கொண்டிருப்பவர்.

அவர் எமது தாத்தா பாட்டியைப் போன்று 100 வருடங்களுக்குமேல் தேக ஆரோக்கியத்துடன் வாழ வேண்டுமென சித்தப்பாவையும் சித்தியையும் அவரது குடும்பத்தினரையும் எனது மனைவி மற்றும் பிள்ளைகளின் சார்பாக மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

R. மனோகரன்
நிர்வாக இயக்குனர்
லக்கிலேண்ட பிஸ்கட் நிறுவனம்
குண்டசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெதமாஹநுவர முருகாமலை ஸ்ரீ முருகன் தேவஸ்தானத்தில்
புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அறங்காவலர் முத்தையா லக்ஷ்மி கல்யாண மண்டபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலதிபர், சேவாஜோதி

சின்னசாமி முத்தையா இல்லத்தரசி லக்ஷ்மி முத்தையா

தம்பதிகளின்

செல்வப் புதல்வர்களான

சசிதரன், முரளிதரன், ஸ்ரீதரன், பிரபாகரன் ஆகியோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Current Wickets

Test - 800 One day - 534

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துச் செய்தி

எனது தந்தையார் சேவாஜோதி முத்தையா அவர்களின் அகவை 75வது பவள விழாவின் போது லண்டனில் ICC புகழ் மண்டபத்தில் பெயர் பொறிக்கப்படும் முதல் இலங்கை பிரஜையாக நான் அங்கு சென்றதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இந்த உயர்ந்த பெறுபேறு எனக்கு கிடைத்திருப்பது எனது அருமை பெற்றோர்களின் சிறப்பான வழிநடத்தலாலும் அவர்களது முறையான வளர்ப்பு திறனாலுமேயாகும்.

வாழ்க்கையில் அவருக்கிருந்த நம்பிக்கை அளவிடமுடியாதது. எத்தகையான கஷ்ட சூழ்நிலையிலும் மனம் தளராது சகலருக்கும் நம்பிக்கை ஒளியூட்டும் அதிசய மாமனிதர் என்றால் மிகையாகாது. இவரது வழிகாட்டலும், ஊக்கமும் இல்லாதிருப்பின் இத்தகைய பாரிய வெற்றிகளையோ, உலகப் புகழையோ என்னால் ஒருபோதும் அடைந்திருக்க முடியாது. அவர் பேசும் சொற்ப வார்த்தைகளை விட அவரது செயல்களே அவரது உயரிய குணாதிசயங்களை உறைத்து பறைசாற்றும். இத்தேசத்தின் பெருமைக்காக நான் ஏதேனும் செய்திருப்பேன் எனின் அது எந்தச் சந்தர்ப்பத்திலும் நான் அவரை முன்மாதிரியாகக் கொண்டு நடப்பதினாலேயாகும். நான் ஒரு கிரிக்கட் வீரனாக அடைந்துள்ள புகழை அவர் தனது நன்மைக்காக பயன்படுத்தியதில்லை. அவரது எளிமைமிக்க நடத்தை எங்கள் எல்லோருக்கும் ஒரு சிறந்த உதாரணமாகத் திகழ்ந்துள்ளது.

அகவை 75 இல் தடம்பதித்திருக்கும் எனது தந்தையை வணங்கி அவருக்கு நீண்ட ஆயுளும் பூரண சுகமும் அளவற்ற மகிழ்ச்சியும் என்றும் பிறரோடு பகிர்ந்துகொள்ளக் கூடிய ஐஸ்வரியத்தையும் இறைவன் அருள வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

எனதருமைத் தந்தை - தாயாருக்கும் இறைவன் சகல ஆசிகளையும் வழங்கட்டும்.

- முத்தையா முரளீதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவாஜோதி எஸ். முத்தையா - லக்ஷ்மி தம்பதிகளின்
புதல்வர்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் குடும்ப உறவினர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துச் செய்தி

இலங்கையின் மத்திய மலைநாட்டின் மஸ்கெலியாவில் பிறந்து கண்டியில் லக்கிலேண்ட பிஸ்கட் நிறுவுன ஸ்தாபகரான அமரத்துவமடைந்த தனது அண்ணன் திரு. இராமசாமி அவர்களுடன் இணைந்து லக்கிலேண்ட் பிஸ்கட் நிறுவனத்தை உருவாக்கிய பெரும் மதிப்பிற்குரிய சேவாஜோதி சின்னசாமி முத்தையா அவர்கள் தனது 75 வது அகவை பவளவிழா ஆண்டில் காலடி எடுத்து வைத்திருக்கும் இத் தருணத்தில் அவரை வாழ்த்துவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இவர் எமது நாட்டில் கலை, இலக்கிய, கலாசார வளர்ச்சிக்கு அளப்பரிய உதவிகளையும் சேவைகளையும் வழங்கி வருகிறார். உதவி தேடி வருபவர்களை இன்முகத்தோடு வரவேற்று, இல்லை என்று சொல்லாது தன்னாலான உதவிகளை வாரி வழங்கும் வள்ளல் குணம் படைத்தவர். தனது வாழ்வில் எளிமையைக் கடைப்பிடிக்கும் இவர் பழகுவதற்கும் மிக இனிமையானவர்.

எனது மாமா முத்தையா அவர்கள் இனம், மதம், சாதி பாராது ஆற்றிய, ஆற்றிவரும் சமய, சமூக பணிகளுக்கு இலங்கை திருநாடானது பல்வேறுபட்ட உயரிய விருதுகளை இவருக்கு வழங்கி கௌரவித்துள்ளது.

ஆன்மீகப் பணிகளில் ஈடுபடும் இவர் கண்டியில் மெதமாஹநுவர சின்னக் கதிர்காமம் என்று அழைக்கப்படும் ஸ்ரீ முருகாமலை ஆலயத்தின் தர்மகர்த்தாவாக சேவை ஆற்றி புனருத்தாரணம் செய்து அதன் வளர்ச்சிக்காக தொண்டாற்றி வருகின்றார். இவரது அயராத பங்களிப்புச் சேவையின் நிமித்தம் திரு. முத்தையா லக்ஷ்மி கல்யாண மண்டபம் அமைத்திருப்பது சாலச்சிறந்ததாகும்.

பவள விழா ஆண்டில் தடம் பதித்திருக்கும் மதிப்பிற்குரிய மாமா முத்தையா அவர்கள் நல்ல தேகாரோக்கியத்துடன். நோய் நொடியின்றி பல்லாண்டு காலம் அவரும் அவரது குடும்பத்தினரும் நலமுடன் வாழ வேண்டுமென வாழ்த்தி இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

பழ. ராமராஜ்
உதவிப் பொருளாளர் (க.த.வ.க.)
கிரீன் அப்பிள் புட்ஸ், குண்டசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துச் செய்தி

"நாமெல்லாம் ஒரு குடும்பம் இந்த
நயமிகுந்த வார்த்தையில் தான் என்னே இன்பம்."

இது ஒரு பாடலின் வரிகள். இந்த அற்புதமான வார்த்தைகளில் எத்தனை அர்த்தங்கள். ஐயா முத்தையா அவர்களோடு, அவரது குடும்பத்தோடு இணைந்து வாழ்ந்து மகிழ்ந்து ஒரு குடும்பமாக வாழ்வது எவ்வளவு மகிழ்ச்சிகரமான ஒரு அம்சம்.

ஒரு மனித நேயம்கொண்ட ஒரு சமூக உணர்வாளரோடு, வாரி வழங்கும் வள்ளலோடு, கொடுத்துச் சிவந்த கரங்களோடு, எளிமையின் சின்னமான ஒரு மாமனிதரோடு பழகி அன்பைப் பரிமாறிக் கொள்வது எங்களுக்கு கிடைத்த பெரும்பேறாகக் கருதுகின்றேன். இவரது நட்பின் மூலம் அவரிடம் கற்றுக்கொண்டது ஏராளம்.

மெதமாஹநுவர முருகாமலை ஸ்ரீ முருகன் கோவில் அறங்காவலரான இவருடன் இணைந்து செயலாற்றுவது எனக்குக் கிடைத்த ஒரு வரமாகும். சமயத்துறையில் அறிவும் தெளிவும் கொண்டவர். இக்கோவில் வளர்ச்சியில் இவர் ஆற்றிவருகின்ற பணிகள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை.

ஐயா முத்தையா அவர்கள் அகவை 75ல் தடம்பதித்திருப்பது கண்டு நான் மனமகிழ்வடைந்தேன். மக்களால் போற்றப்படும் சமூக உணர்வாளருக்கு எடுக்கின்ற இம் மாபெரும் விழா சிறப்படையவும் இவரும் இவரது குடும்பத்தினரும் பல்லாண்டுகள் வாழ்ந்து மேலும் இச் சமூகத்திற்கு சிறந்த பங்களிப்பை வழங்க வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பார் என்பது சான்றோர் வாக்கு. ஐயா முத்தையா அவர்களுக்குப் பின்னால் இவரின் துணைவியார் லக்ஷ்மி அக்கா இருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். இவருக்கும் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

பெ. பழனியப்பன். ஜே. பி.
செயலாளர்
முருகாமலை ஸ்ரீ முருகன் தேவஸ்தானம்.
உரிமையாளர், ரஞ்ஜிதா டிரேடர்ஸ், கண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்த்துச் செய்தி

அகவை 75 பவள விழா ஆண்டில் தடம்பதித்திருக்கும் திரு. எஸ். முத்தையா அவர்கள் 1964ம் ஆண்டு தனது வர்த்தகத் துறையில் பெரும் சிரமத்தோடும், அர்ப்பணிப்போடும் லக்கிலேண்ட் பிஸ்கட் நிறுவனத்தைக் கட்டியெழுப்பி இலங்கை முழுவதும் மனிதாபிமானமிக்க ஒரு வர்த்தகராக எல்லோரது பாராட்டுக்களுக்கும் உள்ளானார். உலக கிரிக்கட் சாதனையாளர் பட்டியலில் இடம் பிடித்துள்ள இலங்கை கிரிக்கட் விளையாட்டு வீரராக திகழும் முத்தையா முரளிதரன் மற்றும் மூன்று புதல்வர்களை இவ்வுலகிற்கு தந்த முத்தையா அவர்கள் தந்தையாக இருப்பது கௌரவ பாராட்டுக்களுக்கு உரியது.

முத்தையா அவர்களது சமூகப் பங்களிப்புகள் பாராட்டுக்கு உள்ளானவையாகும். முருகாமலை ஸ்ரீ முருகன் தேவஸ்தானத்தின் அறங்காவலராக இருப்பதோடும் சிங்கள, தமிழ் வணக்க வழிபாட்டுத் தலங்களின் முன்னேற்றத்திற்கு தனது இறவாத பங்களிப்பை வழங்கி வருகிறார். அதுபோன்று மொழி, இன, மத பேதமின்றி பாடசாலைகளின் அபிவிருத்திக்கு தனது பங்களிப்புகளை செய்து வருவது பாராட்டுக்குரியது. தனது வாழ்க்கைப் பயணத்தில் அகவை 75 பவளவிழா ஆண்டில் தடம்பதித்திருக்கும் எஸ். முத்தையா அவர்கள் நோயற்ற வாழ்வும் நீண்ட ஆயுளும் பெற்று பெருவாழ்வு வாழ பிரார்த்திக்கின்றேன்.

கௌரவ சரத் ஏக்கநாயக்க
ஆளுநர், வடமத்திய மாகாணம்,
மத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



වී. එස්. රාධාක්‍රිෂ්ණන් (පා.ම)
வி.எஸ். இராதாகிருஷ்ணன் (பா.உ)
V. S. Radhakrishnan (M.P)

අධ්‍යාපන රාජ්‍ය අමාත්‍ය
கல்வி இராஜாங்க அமைச்சர்
State Minister of Education

வாழ்த்துச் செய்தி

உலகப் புகழ்பெற்ற கிரிக்கட் வீரர் முத்தையா முரளிதரனின் தந்தையாகிய லக்கிலேண்ட் பிஸ்கட் நிறுவனத்தின் தொழிலதிபர் எஸ். முத்தையா அவர்கள் தனது 75 ஆம் ஆண்டில் தடம் பதித்தமைக்காக ஆசிச்செய்தி வழங்குவதில் உவகையடைகின்றேன்.

நுவரெலியா, மஸ்கெலியா பிரதேசத்தில் பிறந்து அவரின் சகோதரருடன் இணைந்து லக்கிலேண்ட் பிஸ்கட் நிறுவனத்தில் தொழிலை ஆரம்பித்தார். அந் நிறுவனத்தின் சம உரிமையாளரானதுடன் சமூக, சமய, கலை, கலாசார நிகழ்வுகளில் பங்கேற்பது மட்டுமல்லாது சிறந்த பிரஜையாகவும் திகழ்ந்தார். மேலும் முருகாமலை ஸ்ரீ முருகன் ஆலயத் தலைவராக இருந்து அதன் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றியுள்ளார், செயலாற்றியும் வருகிறார்.

பாரதப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு வருகை தந்தபோது திரு. முத்தையா முரளிதரனைப் பாராட்டிப் பேசியமை தமிழ் பேசும் மக்களுக்கான பெருமிதம் என்றே கூறலாம். அந்த வகையில் ஒரு மனிதனது விருத்தி தன்னை மட்டும் சார்ந்ததாக அமையாது அதையும் தாண்டி தன்னையும் தனது குடும்பம் உட்பட முழு சமூகத்திற்கும் மாறுதலை ஏற்படுத்தும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. அவ்வகையில் இவரது அளப்பரிய சேவை இதற்கு சான்றாக அமைகிறது.

அந்த வகையில் இவரது உழைப்பின் உயர் பணியில் ஒருபடியாய் மிளிரும் இவ்விழா 75 வருட வளர்ச்சியின் பயனாக இன்னும் பல்லாண்டுகள் சிறந்த சேவையை இச்சமூகத்திற்கு செய்து மென்மேலும் உயர வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

அகவை 75இல் தடம்பதித்து மகுடம் சூடி நிற்கும் லக்கிலேண்ட் பிஸ்கட் நிறுவனத்தின் தொழிலதிபர் எஸ். முத்தையா அவர்கள் ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி உலகம் உள்ளவரை நீடூழி வாழ வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

கௌரவ வீ. எஸ். இராதாகிருஷ்ணன், பா.உ.
விசேட பிராந்திய அபிவிருத்தி அமைச்சர்,
முன்னாள் இராஜாங்க கல்வி அமைச்சர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியக் காவலர், எங்கள் பெருந்தலைவர்....



கண்டி, கலை இலக்கிய இரசிகர் மன்றத்தின் பெருந்தலைவர், இலக்கியக் காவலர், லக்கிலேண்ட் பிஸ்கட் நிறுவனத்தின் தொழிலதிபர் அகில இலங்கை சமாதான நீதவான், ஜனசேவா சிரோன்மணி, சேவா ஜோதி எஸ். முத்தையா அவர்கள் கண்டிவாழ் மக்களையும், பொது அனைத்து இலக்கியவாதிகள், எழுத்தாளர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் உற்சாகப்படுத்தி, உறுதுணையாக இருந்து செயல்பட்ட, செயல்படுத்திக் கொண்டிருக்கும் ஒரு சிறந்த நல்லிதயம் படைத்த கொடை வள்ளல் என்றால் மிகையாகாது. குறிப்பாக அகிலம் சஞ்சிகை வளர்ச்சிக்கு பெரிதும் பங்களிப்பும் உதவியும் செய்த பெருந்தகையாவார்.

சின்னசாமி முத்தையா அவர்கள் புளும்பீல்ட் எஸ்டேட் மஸ்கெலியாவில் திரு. சின்னசாமி கவுண்டர் திருமதி சின்னசாமி அங்கம்மாள் அவர்களுக்கு 4 வது புதல்வராகப் பிறந்தார். அந்தக் காலத்தில் இது ஆங்கிலேய நிர்வாகத்தில் பெயர்பெற்ற தோட்டமாகும்.

திரு எஸ். முத்தையா அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை கண்டி சீ. எம். எஸ். பாடசாலையிலும் தொடர்ந்து எஸ். எஸ். சி. வரையில் கல்வி கற்று 1964ம் ஆண்டு நிறைவு செய்தார். அந்தக் காலத்தில் தனது அண்ணன் சின்னசாமி இராமசாமி உரிமையாளர் லக்கிலேண்ட் பிஸ்கட், நத்தரான்பொத்த குண்டசாலை அவர்களுடன் இணைந்து லக்கிலேண்ட் பிஸ்கட் கம்பனி வளர்ச்சிக்கு பெரும் உதவியாளராக இருந்து இன்றும் சிறந்த பங்களிப்பைச் செய்துகொண்டிருகின்றார்.

லக்கிலேண்ட் பிஸ்கட் நிறுவனத்தில் கிட்டத்தட்ட 200க்கு மேற்பட்டோர்களுக்கு மேல் தொழில் புரியும் இந்நிறுவனத்தின் தொழிலதிபர். நன்கு பெயர்பெற்ற இந்நிறுவனத்தில் பல குடும்பங்கள் தொழில்புரிந்து சிறப்பாக வாழ்ந்து கொண்டிருப்பதும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

திரு. முத்தையா அவர்கள் 1971 ஆம் ஆண்டு நாவலப்பிட்டியை வதிவிடமாகக் கொண்டிருந்த செல்வி லக்ஷ்மி அவர்களை திருமணம் செய்து தனது இல்லற வாழ்க்கையை ஆரம்பித்தார். இவர்களுக்கு முரளிதரன், ஶ்ரீதரன், சசிதரன், பிரபாகரன் என நான்கு செல்வக் குழந்தைகள் பிறந்தார்கள். திரு. முத்தையா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரான முத்தையா முரளிதரன் சுழற்பந்து வீச்சின் மூலம் துடுப்பாட்டத்தில் அதிக விக்கெட்டுக்களைப் பெற்று உலகப் புகழ்பெற்று சிறந்த கிரிக்கெட் வீரர் என்ற பெருமைக்குரியவர் என்பது அனைவரும் அறிந்தவிடயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னக் கதிர்காமம் என்று பெயர்பெற்று விளங்கும் மெதமஹாநுவர ஸ்ரீ முருகப் பெருமான் கோவிலுக்கு தலைவர் ஒருவர் தேவையென்று திரு. செல்லையா அவர்கள் என்னிடம் கேட்டபோது, திரு. முத்தையா அவர்கள் மிகவும் பொருத்தமானவர் என்று முன்மொழிந்ததையடுத்து அவரைத் தலைவராக நியமித்ததில் "அகிலம்" சஞ்சிகை ஆசிரியரான கலாபூஷணம் கே. வி. இராமசாமி ஆகிய எனக்கும் பெரும் பங்குண்டு என்பதையும் மிகவும் மகிழ்வுடன் அறியத்தருகின்றேன்.

முருகாமலை ஸ்ரீ முருகன் ஆலய தலைவராகவும் சிறந்த தர்மகர்த்தாவாகவும் இருந்து கடமை ஏற்றுக்கொண்டது முதல் இன்றுவரை ஆலயத்தை புதுப்பித்து புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் செய்து இன்றைக்கு எல்லோராலும் பக்தியுடன் வணங்கி போற்றப்படும் சிறந்த வணக்கஸ்தலமாகத் திகழ்வதற்கு பெரும்பங்களிப்பைச் செய்த, செய்துகொண்டிருக்கின்ற அறங்காவலர் திரு. முத்தையா என்றும் பாராட்டுக்குரியவர் என்றால் அது மிகையாகாது.

திரு முத்தையா லக்ஷ்மி கல்யாண மண்டபம் திறப்பு விழா வரலாற்றில் பதிவு செய்யும், இப் பொன்னான நன்நாளில், நூற்றாண்டு காலம் சீருடனும் சிறப்புடனும் வாழவேண்டுமென எல்லாம் வல்ல எம் பெருமானை வணங்கி பிரார்த்திக்கின்றோம்.

கண்டி கலை இலக்கிய இரசிகர் மன்றம்
"அகிலம்" அறிவியல் சஞ்சிகை ஆசிரியர்
எழுத்தாளர்கள், வாசகர்கள் அனைவரும் ஒன்றிணைந்து
இவர்களை நிறைந்த மனதுடன் நெஞ்சாரப்
பாராட்டி நல்வாழ்த்து கூறுவதில் பெரும்
மகிழ்ச்சி அடைகின்றோம்.

என்றும் அன்புடன்

கலாபூஷணம் கே. வி. இராமசாமி

அகில இலங்கை சமாதான நீதவான்

ஆசிரியர் "அகிலம்" சஞ்சிகை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி வாழ் மக்களுக்கு அளப்பரிய சேவைகளை ஆற்றிவரும் மக்கள்

சேவையாளன் சிரோன்மணி சின்னசாமி முத்தையா

அவர்களுக்கு சேவை நலன் பாராட்டு

பசுமை பொருந்திய மஸ்கெலிய புளும்பீல்ட் தோட்டத்தில் சின்னசாமி கவுண்டருக்கும் திருமதி சின்னசாமி அங்கம்மாவுக்கும் நான்காவது பிள்ளையாகப் பிறந்தவர் திரு. முத்தையா அவர்கள்.

1964 இல் கண்டி சி. எம். எஸ். பாடசாலையில் உயர்கல்வி (எஸ் எஸ். சி) வரை கல்வி பயின்ற முத்தையா, அதன் பின்னர் கண்டி குண்டசாலை நத்தரம்பொத்தையில் அமைந்திருந்த அவரது சகோதரர் சின்னசாமி இராமசாமிக்குச் சொந்தமான லக்கிலேண்ட் பிஸ்கட் தொழிற்சாலையில் தொழிலில் அமர்ந்தார்.

திரு. முத்தையாவின் மனதில் குடும்பமே முதலிடம் பெற்றுள்ளது. அவரது வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் அவரின் உடன் பிறந்த உடன் பிறவா சகோதரர்களே பேராதரவுச் சக்திகளாக இருந்திருக்கின்றார்கள். திரு. முத்தையா லக்ஷ்மி என்ற பெயருக்கேற்ற பெண்மணியை 1971 இல் நாவலப்பிட்டியிலிருந்து மணந்து கொண்டார். லக்ஷ்மி முத்தையாவின் முன்னேற்றத்தின் ஒவ்வொரு படியிலும் அதிட்டத்தைக் கொடுத்ததுடன் நான்கு ஆற்றல் மிக்க ஆண் பிள்ளைகளைப் பெற்றுக் கொடுத்தார். அவர்களில் ஒருவரே கிரிக்கெட் உலகில் ஒருநாள் ஆட்டத்தில் 534 விக்கட்டுக்களையும் டெஸ்ட் விளையாட்டுக்களில் 800 விக்கட்டுகளுடன் (ஏனைய எந்த விளையாட்டு வீரராலும் அடைய முடியாத) "தூஸ்ரா" பந்து வீச்சு முன்னோடியென பெயர் பெற்ற சுழல் பந்து வீச்சுவீரரான முத்தையா முரளிதரன்.

தொழில் முறை வர்த்தகப் பின்னணியிலும் முத்தையா வசதி குறைந்தவர்களுக்கு கைகொடுக்க பின்வாங்குவதில்லை. மக்களால் நன்கறியப்பட்ட கொடை வள்ளல். சமூகத்திற்கு உதவும் நற்பண்புகளின் பெறுபேறாக ஜனசேவா சிரோன்மணி, அன்புமணி, சேவாஜோதி, சமூகஜோதி, சமூகச்சுடர் என்ற விருதுகளால் கௌரவிக்கப்பட்டுள்ளார். பெருந்தோட்டத்துறையை கட்டி எழுப்புவதிலும் வசதி, வாய்ப்புகள் குறைந்த சிறுவர்களுக்கு கல்விக்காக உதவி செய்வதிலும் பெருந்தோட்டப் பாடசாலை அபிவிருத்திக்காக பல்வேறு வேலைத் திட்டங்களையும் அவர் முன்னெடுத்துள்ளார். குண்டசாலை விவேகானந்தா பாடசாலைக்கு அவரின் வழிகாட்டல் உள்ளூர் சமூகத்தின் பெரும் பாராட்டைப் பெற்றுள்ளது. எவ்வாறெனினும் பண்பாளரான முத்தையா அவர்கள் சமூக சேவைகளை எவ்வகையிலும் விளம்பரம் செய்து கொள்ள விரும்புவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசார பாரம்பரிய விழுமியங்களை நேசிப்பவர். எனவே, இந்து கலாசார நிறுவனங்களினால் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்ச்சிகளில் பங்கேற்கத் தவறுவதில்லை. அதேபோன்று மதச் சிந்தனையுடன் வணக்கஸ்தலங்களால் ஏற்பாடு செய்யப்படும் விழாக்களிலும் பங்கேற்கத் தவறுவதில்லை. இதன் பயனாகவே முத்தையா, மொரஹாமுல்ல ஸ்ரீ முருகன் இந்துக் கோவிலின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

எண்ணிலடங்காத் தருணங்களில் உதவி மனப்பாங்கு - சமுதாயத்தின் ஒரு சாராருக்கு மட்டுமின்றி - இலங்கையின் அனைத்து இன மதங்களைச் சார்ந்தவர்களையும் சென்றடைந்துள்ளது. இவரின் சேவையைப் பாராட்டுமுகமாகவே இவர் அகில இலங்கை சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கண்டி திரித்துவக் கல்லூரியில் நடைபெற்ற திரு. முத்தையா அவர்களின் சேவை நலன் குறித்து பாராட்டி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார் என்பதையும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

- ஹேரணல் கலஹிட்டியாவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னதமாய் வாழியவே!

கள்ளமில்லாச் சிரிப்புடனே
காண்கின்ற அனைவரையும்
உள்ளமுடன் இணைக்கின்ற
உயர் மனிதர் முத்தையா ஐயா.

உலகப் புகழ் ஓங்கி நிற்கும்
உன்னத முரளிதரனின்
விலகாத பாசமுள்ள
விந்தை மிகு தந்தையிவர்.

பள்ளிக் கூடங்கள்
பலவாய் உருவாக
அள்ளிக் கொடுத்த
அருமை மனிதரிவர்

ஆலய புனரமைப்பா ?
அபிவிருத்தி வேலைகளா
சாலவும் செய்வதில்
சமர்த்தர் ஐயா

சிறையில் இருக்கின்ற
சிறைக் கைதிகட்கும்
குறையின்றி கொடுக்கும்
குணநலம் கொண்டவர்.

எழுத்தாளர் பலரதும்
இதயங் குளிரவே
முழுதாய் பல நூல்களை
முந்தி வெளியிட்டவர்.

பட்டங்கள் பரிசுகள்
பலதைக் கண்டாலும்
எட்டி இருக்கின்ற
இயல்பு கொண்டவர்.

சிந்தையில் இரக்க குணம்
சீர் மிகு தாராளம்
வந்தவர்க்கு வழங்குகின்ற
வழக்கமும் கொண்டவர்

இலக்கியக் காவலர்
இனிய சமாதான
நீதவான்
துலக்கமுடன் சேவாஜோதி
தூய சிரோன்மணி
பட்டம் பெற்றவர்.

ஒற்றுமைக்குப் பாலமாய்
இன்று இருக்குமிவர்
நற்தமிழர் சிங்களவர்
நலம் வாழ உதவுபவர்.

பார்க்க எளிமையுடன்
படாடோபம் எதுவுமின்றி
யார்க்கும் இனியவராய்
இருப்பவர் முத்தையா ஐயா.

கல்கண்டு ஆசிரியர்
லேனா தமிழ்வாணன்
கலைப் பணிக்காக
இவரைக் கௌரவித்தார்.

மனித நேயத்தோடு
மற்றவர்க்கு உதவுமிவர்
இனிவரும் தலை முறைக்கு
ஏற்ற உதாரணமாவார்.

எழுபத்தைந்து வயது தனை
ஏற்றமுடன் கடந்து நிற்கும்
முழுமை மிகு நல் மனிதர்
மிக நன்றாய் வாழியவே!

குன்றினில் தீபம் போல
குறைவிலா ஒளியை வீசி
நன்றாகப் பல்லாண்டுகள்
நலம் பெற வாழியவே!

பவளவிழா அகவை 75 ல்
தடம்பதித்திருக்கும் இவருமே
உவப்பான வெற்றியுடன்
உன்னதமாய் வாழியவே!

குறிஞ்சி கவிமழை
புசல்லாவை இஸ்மாலிஹா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று போல் என்றும் வாழ்க!

சமுதாயத்தில் நல்ல சேவை செய்து நலமுற வாழும் நன்மக்களை வாழ்த்துவது என்பது மனதுக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தரக்கூடியது. அத்தகையவர்களில் ஒருவரே இவ்வாண்டில் தமது பவளவிழாவைக் கொண்டாடும் முத்தையா அவர்கள். அவரைத் தெரியாதவர்கள் யாரும் இலங்கையில் இருக்கமுடியாது என்று சொல்லும் முறையில் தமது பெயரை ஆழமாகப் பதித்துக் கொண்டவர் அவர். மஸ்கெலியா புளும்பீல்ட் தோட்டத்தில் சின்னசாமி - அங்கம்மாள் தம்பதிகளின் நான்காவது பிள்ளையாகப் பிறந்து வளர்ந்த அவர் கண்டி சி.எம்.எஸ். பாடசாலையில் கல்வி பயின்று அக்காலச் சிரேஷ்ட பாடசாலைச் சான்றிதழ் (எஸ்.எஸ்..சி) பெற்றவர்.

பாடசாலைப் படிப்பை முடித்த பின்னர் கண்டி குண்டசாலைப் பிரதேசத்தைச் சேர்ந்த நத்தரம்பொத்தையில் தமது சகோதரர் இராமசாமியை உரிமையாளராகக் கொண்ட லக்கிலேண்ட் பிஸ்கட் கம்பனியில் தொழில் பார்க்கத் தொடங்கினார். அக்கம்பனியின் வளர்ச்சியில் முத்தையா அவர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. இன்று அக்கம்பனியின் முக்கியஸ்தராகப் பேரும் புகழும் பெற்று விளங்குகிறார் இவர். இன்று தொழில் அதிபர் என்ற முறையில் மிகவும் புகழ் பெற்று விளங்குகிறார்.

இவரது பிள்ளைகளில் ஒருவர் உலகப் புகழ் பெற்ற கிரிக்கட்வீரர் முரளிதரன். முரளிதரன் மூலம் முத்தையாவும் முத்தையா மூலம் முரளிதரனும் புகழ் பெற்றுள்ளனர். திரு. முத்தையா வர்த்தகத்துறையில் கோலோச்சுபவராக இருந்தபோதிலும் வசதி வாய்ப்புக்களுடன் வாழும்போதிலும் எளிமையும் அடக்கமும் அவரின் இயல்பான பண்புகளாக விளங்குகின்றன. இவை அவரது ஒரு தனி மதிப்பினை மக்களிடையே ஏற்படுத்துகின்றன. மக்கள்மீது அவர் கொண்டிருக்கும் நேசம் மக்களுக்கும் அவர்மீது பாசத்தை ஏற்படுத்துகின்றது. மக்களால் பெரிதும் விரும்பப்படும் இலங்கையின் வர்த்தகப் பிரமுகர்களில் ஒருவராக முத்தையா விளங்குகிறார். அவரது சமூக சேவைகள் காரணமாகச் சமூகஜோதி, சேவா ஜோதி, சமூகச்சுடர், ஜனசேவாசிரோன்மணி முதலான பட்டங்கள் அவரைத் தேடிச் சேர்ந்திருக்கின்றன. சமூக சேவைகளில் எப்போதும் மனம் குளிர்பவர் இவர்.

முத்தையா எப்போதுமே கலாசாரம் பாரம்பரியங்களுக்கு மதிப்பளிப்பவர். கலை இலக்கிய, பண்பாட்டு நிகழ்ச்சிகளில் எப்போதும் ஈடுபாட்டோடு கலந்துகொள்பவர். சகலரது அழைப்பினையும் ஏற்று நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு அவர்களுக்கு மதிப்பளிப்பவர். எழுத்தாளர்களின் நூல் வெளியீடுகளில் கலந்துகொண்டு மகிழ்ச்சியோடு முதல் பிரதிகளையும் பெற்றுக்கொள்பவர். எனது நூல் வெளியீட்டு விழாக்களிலும் திரு. முத்தையா சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டு முதல் பிரதியைப் பெற்று விழாக்களைச் சிறப்பித்துள்ளார்.

தொழில் அதிபர், சமூக சேவகர், கொடை வள்ளல், தேசாபிமானி, மானிட நேயர் முத்தையா அவர்களும் அவரது குடும்பத்தினரும் நீண்ட ஆயுளும் ஆரோக்கியமும் வளமும் சிறப்பும் பெற்று மகிழ்ச்சியுடன் வாழ அவரது பவளவிழா ஆண்டில் வாழ்த்துவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்றுபோல் என்றும் வாழ்க!

பேராசிரியர் துரை. மனோகரன்
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர், பேராதனைப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவாஜோதிக்கு கண்டி மக்களால் ஒரு வாழ்த்து

இலங்கையில் கண்டி இராச்சியம் ஸ்ரீ விக்ரம ராஜசிங்கனால் வரலாறு படைத்தது போல இந்த நூற்றாண்டுகளில் உலக வரைபடத்தில் வெளிச்சமிட்டுக் காட்டப்பட்டதற்குக் காரணமே முத்தையா என்ற அந்த பெயர்தான். 75 வருட பூர்த்தியை ஆணவ அழுக்கின்றி நகர்த்திக் கொண்டிருக்கும் திருவாளர் எஸ். முத்தையா அவர்கள் உலகம் புகழும் ஒருவர். அவருக்கு கண்டி வாழ் மக்கள் சார்பாக வாழ்த்துரை வழங்குவதில் பெருமை கொள்கிறோம்.

மலையக மண்ணின் மணம் எங்கெல்லாம் நறுமணமாய் கமழ்கிறதோ அங்கெல்லாம் திரைமறைவில் இருப்பவர் சேவாஜோதி தொழிலதிபர் கௌரவ எஸ். முத்தையா அவர்களாவார். தன் மனை வாழ மனிதர் வாழ இந்த மனுக்குலம் வாழ மலைவாழ் மக்கள் வாழ ஏன் இந்த முழு தேசமும் சிறந்து வாழ மிக மௌனமாய் காத்திரமான பெரும் சேவையாற்றுபவர் இவர். தம் எழுபத்தைந்து வயதிலும் இளமையுடன் வீறுநடை போடும் இவர் ஒரு பழம் பெரும் தொழிலதிபர். தமது வர்த்தக தேர்ச்சியினை குடும்பத்துடன் மட்டுப்படுத்திக் கொள்ளாது எங்கெல்லாம் சமூக தேவை உண்டோ அங்கெல்லாம் ஒரு கர்ணனாக நின்று ஒரு கை தருவதை மறு கை அறியா வண்ணம் வாரி வழங்குவது ஊரறிந்தது. அவரால் உயர் கல்வியில் உயர்ந்து நிற்போர் பலர். கல்வி மட்டுமல்ல இந்த மலைவாழ் ஆலயங்கள் ஒவ்வொன்றின் மூலஸ்தான தெய்வங்களும் அவருக்கு ஆசிசொல்லும். இன மத வேறுபாடின்றி நாட்டில் அரசன் முதல் ஆண்டிவரை அண்டாதோர் இலர்.

"அன்புடைமை ஆன்றகுடிப்பிறத்தல் இவ்விரண்டும் பண்புடைமை" என்பது வள்ளுவன் வேதம். தன்னைப்பற்றி மட்டுமல்லாது தன்னைச் சூழவுள்ளவரையும் எண்ணி வாழ்தலே நாம் இவ்வுடம்பெடுத்ததன் நோக்கம் ஆகும். அதனை அடையப்பெற்றவரே திருவாளர் முத்தையா ஆவார். மங்களகரமாக தமது கரம் நீட்டி மனிதர் குறைதுடைக்கும் அறப்பணியை எம்மால் மறக்கவோ மறுக்கவோ முடியாது.

வேருக்கு வார்த்திடும் நீரினைப்போல
விருப்புடனே வாழ்க்கையெல்லாம்
ஊருக்கும் உபகாரமாக உதவிடும்
உத்தமனே மனிதன்

என்ற கவியோகி சுத்தானந்த பாரதியார் வாக்கின் வண்ணம் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து சிறந்த சேவைகள் பல செய்து நீங்கள் எண்ணிய கருமம் கைகூட மனிதருள் உயர் மாணிக்கமாய் விளங்க அகம் நிறைந்து வாழ்த்துகிறோம்.

வாழ்க பல்லாண்டு !

திருமதி எம். கோகிலேஸ்வரி ராமகுமார்
பிரதி அதிபர், இரஜவல தமிழ் மகாவித்தியாலயம்
முன்னாள் பிரதி அதிபர், பெண்கள் உயர்தர பாடசாலை, கண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பால் உயர்ந்த மாமனிதர்

விடா முயற்சியாலும் கடின உழைப்பாலும் வாழ்வில் உயர்ந்த நிலைக்கு வந்தவர்கள் மிகச் சிலரே. பரம்பரைப் பணக்காரர்கள் மென்மேலும் உயர்ந்து செல்வதற்கான சூழ்நிலையே எமது நாட்டில் உள்ளது. எனினும் இந்த யதார்த்த நிலையை முறியடித்து சிறந்த தொழில் அதிபர்களாகிய சிலரையும் எம் நாட்டில் காணக்கூடியதாகவுள்ளமை மகிழ்சியான விடயம். அவ்வாறு திட்டமிட்ட முயற்சிகள் மூலம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு முன்னேறிய தொழில் அதிபர்களில் சமூகமாமணி முத்தையா அவர்களும் ஒருவர். அதிலும் இவர் ஓர் இலக்கிய ஆர்வலராகவும் இருப்பது இரட்டிப்பு மகிழ்ச்சி.

லக்கிலேண்ட் முத்தையா என கண்டியில் பிரபல்யம் பெற்ற இவரை எனக்கு கிட்டத்தட்ட அரை நூற்றாண்டுகளாகத் தெரியும். எனது அப்பா ஜெயானந்தா ஸ்ரோர்ஸ் சண்முகமும் லக்கிலேண்ட் சகோதரர்களும் ஆரம்ப கால வியாபார நண்பர்கள். அதிலும் முததையாவின் அண்ணருக்கும் அப்பாவுக்குமிடையே அப்படி ஒரு நெருக்கம். லக்கிலேண்ட் நிறுவனம் ஆரம்பிக்கப்பட முன்னதாகவே இவர்கள் உள்ளூர் ரக மாரி, நைஸ், ரஸ்க் பிஸ்கட்டுக்களைத் தயாரித்து விற்பனை செய்தபோது அப்பா இவர்களோடு பழகி, இவர்களது பிஸ்கட் வகைகளுக்கு முன்னுரிமை கொடுத்து விற்பனை செய்து வந்தார். அப்போது மலிபன், மஞ்சி, வில்லியம்ஸ் போன்ற பிஸ்கட்டுக்கள் முதல்தர பிஸ்கட்டுகளாக இருந்த காலம். அப்போதெல்லாம் சாதாரண மக்கள் இவற்றை வாங்கி பாவிக்கக்கூடிய பொருளாதார நிலையில் இல்லை. மேல், நடுத்தர வர்க்கத்தினரே இவைகளை வாங்கினார்கள். பொருளாதார வசதி குன்றியவர்கள் முத்தையா சகோதர்களின் பிஸ்கட்டுகளை வாங்கினார்கள். எனினும் Local என்று அழைக்கப்பட்டாலும் இவை சுவையும் தரமும் நிறைந்ததாக இருந்தன. 1970 களில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளின் இருண்ட கால கட்டத்தில் மக்கள் பிஸ்கட்டுக்களை தேநீருடன் அருந்தி ஒரு வேளை உணவை தவிர்த்துக் கொண்டிருந்த காலம். இந்தக் காலகட்டத்தில் இவர்களது பிஸ்கட்டின் விற்பனை அதிகமானது. லக்கிலேண்ட பிஸ்கட் மேலும் தரமான பிஸ்கட்டுக்களாகவும் சிறிய பக்கட்டுக்களிலான பிஸ்கட்டுக்களாகவும் ஒரு புதுவருடத்தை நெருங்கிய காலத்தில் அறிமுகப்படுத்தியதாக ஞாபகம். அதன்பின் லக்கிலேண்ட் நிறுவனமாக வளர்ந்தது.

சுவையும் தரமும் சிறப்பாக இருந்தமையால் லக்கிலேண்ட் பிஸ்கட் விரைவிலேயே பெயர் சொல்லிவாங்கும் அளவிற்கு பிரபலமானது. ஆரம்பகால கண்டி விநியோகஸ்தரான அப்பா பெரியப்பாவின் ஜெயானந்த ஸ்ரோர்ஸ் திகழ்ந்தது. பின்னர் லக்கிலேண்ட் தொழிற்சாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியதாகி நாடளாவிய விநியோகத்தை ஆரம்பித்தபோது வடபகுதியின் விநியோகஸ்தராக எனது மாமா செயற்பட்டார். இந்த வகையில் எமது குடும்பத்துடன் நெருக்கமாக பழகிய காலகட்டத்தில் முத்தையாவின் அண்ணர் நடுவயதிலேயே இறைவனடி சேர்ந்தார். பின்னர் முத்தையா இந்நிறுவனத்தை முழுமையாக நிர்வகித்து மேலும் விருத்தியடைய வைத்து ஒரு விருட்சமாக்கினார். இன்று லக்கிலேண்ட் பிஸ்கட் நிறுவனம் நாடளாவிய ரீதியில் பெயர்பெற்ற பிஸ்கட் நிறுவனங்களில் ஒன்றாக திகழ்வதற்கு முத்தையா அவர்களின் மதிநுட்பமும் முயற்சியும் முக்கிய காரணமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

எங்கள் அப்பாவின் மரணத்திற்குப் பின்னர் பிள்ளைகள் வியாபாரத்தில் இறங்காத நிலையில் எமக்கும் லக்கிலேண்ட் நிறுவனத்திற்குமான நெருக்கம் குறைவடைந்தது. எமது வர்த்தகத்தை தொடர்ந்துகொண்டிருந்த தம்பி யோகானந்தன் நாட்டில் ஏற்பட்ட விரும்பத்தகாத பிரச்சினைகளை அடுத்து சொத்துக்களையும் இழந்த நிலையில் புலம் பெயர்ந்து சென்றுவிட்டமையும் நான் அரச மருத்துவராக பணியாற்றியமையும் தொடர்பு குறைந்தமைக்குக் காரணமாகும்.

நாடெங்கும் உள்ள பலர் முரளிதரனின் அப்பாவாக முத்தையாவை அறிந்தனர். ஆனால் நானோ நண்பர் முத்தையாவின் மகனாகவே முரளிதரனை அறிந்தேன். முரளிதரனின் சாதனை வளர்ச்சியிலும் முத்தையாவின் பங்கு ஒரு தந்தையென்ற வகையில் மகத்தானது. பாடசாலை நாட்களிலிருந்து அவர் காட்டிய ஊக்குவிப்பும் ஒத்தாசையும் முரளிதரனை உலக சாதனை பந்துவீச்சாளனாக உருவாக்க வித்திட்டது.

முத்தையாவின் சமய, சமூக பங்களிப்புகள் பற்றியும், பல்லின மக்களுக்கும் வேலைவாய்ப்பு வழங்கிவருகின்றமை பற்றியும் பலரும் குறிப்பிட்டனர். முத்தையாவின் இலக்கிய பங்களிப்பு பற்றி குறிப்பிடுகையில் அவரை ஒரு புலவராக குறிப்பிடுகின்றார்கள். அந்தவகையில் கண்டி இலக்கிய நண்பர்கள் 1994 இல் எனது மீன்குஞ்சுகள் நூலுக்கு அறிமுக விழா ஏற்பாடு செய்திருந்தபோது அன்று முத்தையா அவர்களே முதற்பிரதியைப் பெற்று சிறப்பித்தமையை நன்றியுடன் நினைவு கூருகின்றேன். அன்றுதொட்டு இன்றுவரை அவர் இலக்கிய புரவலராக இருந்து வருகின்றமை மனங்கொள்ளத்தக்கது. வாழ்க அவர் பணிகள்

- டாக்டர் ச. முருகானந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பவளவிழா நாயகர்
"சேவாஜோதி" எஸ். முத்தையா அவர்களுக்கு
வாழ்த்துச் செய்தி....

பவளவிழா கண்டிருக்கும் பண்பானவரே,
கண்டி மாநகரின் கலியுகக் கர்ணனே,
இலக்கிய சஞ்சிகையா, பாடசாலைக்கு நிதியா,
விளையாட்டுப் போட்டிகளுக்குப் பணமா,
இல்லையெனக் கூறாது வாரி வழங்கும் வள்ளலே,
"சேவாஜோதி" விருதிற்குப் பெருமை சேர்த்த பெரியவரே,
முரளி என்ற முத்தை எமது நாட்டுக்களித்து
உலக மக்கள் எங்களைத் திரும்பிப் பார்க்கச் செய்த
உத்தமரே, முத்தையா என்ற பெருமகனே,
கொடுத்துச் சிவந்த தங்கள் கரங்கள்
தொடர்ந்து வாரி இறைக்க எல்லாம் வல்ல
நல்லிறைவன் நல்லருள் பாலிக்கட்டும்!
அந்த இறைவன் தங்களுக்கு நீண்ட ஆயுளையும்,
நிறைந்த செல்வத்தையும்
அள்ளி, அள்ளி வழங்கட்டும்!

வாழ்த்துக்கள்!

- இணுவையூர் - கலாபூஷணம் -
ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன்
கொழும்பு 06.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவாஜோதி எஸ். முத்தையா

அகில இலங்கை சமாதான நீதவான், லக்கிலேண்ட் பிஸ்கட் கம்பனி உரிமையாளர், தொழிலதிபர்

அவர்களின் பவளவிழாவிற்கான வாழ்த்துச் செய்தி

கண்டி கலை இலக்கிய முயற்சிகளின் முன்னேற்றங்களுக்கு உறுதுணையாக நிற்கின்ற திரு. எஸ். முத்தையா அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வெய்துகிறேன்.

மத்திய மாகாணத்தில் நடைபெறும் புத்தக வெளியீட்டு விழாக்களில் பிரதம விருந்தினராக, முதல் பிரதி பெறுபவராக கலந்து கொண்டு சிறப்பித்து எழுத்தாளர்களைக் காக்கும் கரம் இவருடையது.

கம்பனுக்கு சடையப்ப வள்ளல் போல், பாரதிக்கு எட்டயபுரத்து மன்னர் போல் எழுத்தாளர்களுக்கு திரு. எஸ். முத்தையா அவர்கள் திகழ்ந்துள்ளதை இலக்கிய ஈடுபாடு கொண்டவர்கள் அறிவர்.

லக்கிலேண்ட பிஸ்கட் கம்பனியில் வேலை செய்து கொண்டிருந்தவர், என் ஊரவரும் உறவினருமான பொன்னம்பலம். இவர் பின்னாளில் ஹிமாலயா பொன்னம்பலம் என அழைக்கப்பட்டார். இந்தப் பிரபல்யத்துக்குக் காரணம் அவர் ஹிமாலயா பிஸ்கட் கம்பனியை ஆரம்பித்தது தான். இந்த ஹிமாலயா பிஸ்கட் கம்பனியை ஆரம்பித்து நடத்துவதற்குப் பலவழிகளிலும் உறுதுணையாக நின்று பல ஒத்தாசைகளையும் வழங்கியவர் லக்கிலேண்ட் முதல்வர் திரு. எஸ். முத்தையா தான். இந்தப் பெருந்தன்மை யாருக்கு வரும். இறுதிவரை ஹிமாலயா பொன்னம்பலம் அண்ணருடன் மிக நெருக்கமான உறவைக் கொண்டிருந்தவர் என்பது குறிப்பிட வேண்டியது.

ஒரு நாள் மாணவன் ஒருவன் கலை முயற்சிக்காக வெளிநாடு செல்வதற்கு அவனுடைய தந்தையார் என்னை அணுகிய போது நான் அவரை திரு. எஸ். முத்தையாவிடம் அழைத்துச் சென்றேன். விடயத்தைக் கேட்டவுடன் எவ்வளவு பணம் வேண்டும் எனக் கேட்டு அத்தந்தையார் குறிப்பிட்ட பண உதவியை வழங்கியவர் திரு. எஸ் முத்தையா.

வசதி படைத்தவர்கள் எல்லோரும் வாரி வழங்குவதில்லை. வாரி வழங்கி, வந்தோரை வாழ வைத்தவர் தொழிலதிபர், அகில இலங்கை சமாதான நீதவான், சேவாஜோதி திரு. எஸ். முத்தையா, பவளவிழா ஆண்டில் தடம்பதித்திருக்கும் இவர் நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் பெற்று தன்னுடைய உதவிகளை தொடர்ந்து செய்ய நூறாண்டு வாழ வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றேன்.

ந. பார்த்தீபன்
விரிவுரையாளர், தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவள ஆண்டில் தடம்பதிக்கும் சேவாஜோதி எஸ். முத்தையா அவர்கள்

வையகமும் வானகமும் வாழ்த்திட வளர்ந்துவிட்ட
வான் புகழாம் எங்கள் ஐயாவை வாழ்த்துகிறேன்
அகவை 75 தில் அடியெடுத்து வைக்கும் உங்களை
ஆண்டவனும் சேர்ந்து வாழ்த்தும் தினமையா இன்று.

உற்றாரும் உறவினரும் நற்றாரும் நல்மனம் கொண்டோரும்
சுற்றாரும் ஒன்றாய்க்கூடி மலர்தூவி வாழ்த்துகிறோம்
இற்றாரை மறக்காது இனிமையாய் ஒன்றுகூடி
கற்றோரும் சுற்றாரும் கவிபாடி வாழ்த்துகின்றோம்.

வாழ்வாங்கு வாழ்ந்து காட்டிய வைகைப்புயல் நீங்கள்
வாழ்க்கைக்கு புதிய அர்த்தம் சொல்லி காட்டியவர் நீங்கள்
தூய்மையும் புனிதமும் ஒன்றாய் சேர்ந்து, சமூக வெளிச்சத்திற்கு
தூபமிட்டு வளர்ந்து காட்டினீர்கள் நீங்கள்.

சைவம் வளரத் தமிழ் வளரத்
தருமம் ஓங்கித் தழைத்துவரப்
பொய்யைப் போக்கி மெய்கண்ட
புனித ஞானியாம் எங்கள்
முத்தையா அவர்களின் திருப்பாதம்
வணங்கும் நன்நாளாம் இன்று
வையம் புகழ நீடூழி வாழ
வாழ்க வாழ்கவென வாழ்த்துகிறேன்.

அன்பால் எவரையும் தன்பாலாக்கி
லக்கிலேண்ட் முத்தையா என்றே புகழும்
ஐயா, சிவனருட் செல்வா, இன்றுன்
பொன்னடி தொழுது போற்றிய புண்ணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயமின்றி அருந்துணையாகிப்
பொய்யை அறவே போக்கி
மெய்யை உணர்த்தி மேல் விடும் தருமர் நீங்கள்.

கண்ணுக் கினியவர் கவிக்கினியவர் வாய்க்கினியவர்
பண்ணுக் கினியவர் அருள் பற்றுமினோ - நண்ணுபுகழ்
வாழ்ந்திட வாழ்ந்திட நாங்கள் வாழ்த்திடுவோம்
வையம் போற்ற பல்லாண்டு வாழ்ந்திடுவீர்.

ஆயிரத்து தொளாயிரத்து 42ம் ஆண்டில்
ஆனி யெட்டில் பிறந்திட்ட வாரம் தன்னில்
தூய கலையும் தமிழையும் வளர்த்த தியாக முத்தையாவின்
பவளவிழா காணும் புண்ணியம் பெற்றோம்.

வாழ்வில்லாத மனிதர்களின் வாழ்வுக்காக
வாழ தொழிலமைத்துத் தந்த மகான்
மேயபுகழ் இலகுமனம் கொண்ட ஐயா
பவளவிழாவில் வாழ்த்துகிறோம் வாழ்த்துகிறோம்.

புண்ணியங்கள் பல புரிந்தோன்
புவிநிறைந்த புகழுடையோன்
நல்லோர் போற்றும்
கண்ணியவான் எங்கள் ஐயா.

கண்டியிலே கலை வளர
பெரும்உதவிசெய்த மகான்
நூண்ணறிவோர் போற்றும்
எங்கள் மகான்

வாழ்க வளமுடன்

பெரி. சிவகுமார்
அகில இலங்கை சமாதான நீதவான்
அதிபர், இந்து சிரேஷ்ட பாடசாலை
கண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களது பணி இன்னும் பல்லாண்டு தொடரட்டும்



இலங்கைத் திருநாட்டின் மாமன்னர்கள் ஆட்சி புரிந்த கண்டி மாநகரத்தின் நத்தராம்பொத்தயில் இந்து சமயம் இனிது தளைத் தோங்கி நிற்கும் புண்ணிய பூமியில் சமய, சமூகப் பணியாற்றி வரும் சேவாஜோதி முத்தையா அவர்களது பணி சிறப்பானது. இவர் தம்மைச் சார்ந்து சுற்றியுள்ள சமூகத்தவர்களுடனும் பரந்து வாழுகின்ற அனைத்து இன மக்களுடனும் அன்பாகவும், பண்பாகவும், நேசிப்பவரும் நேசித்து வருபவருமாவார். இவர் மக்கள் சேவையே மகேசன் சேவையென்ற புனித எண்ணத்தை மனதில் வைத்து செயலாற்றிவரும் மாமனிதராவார். இவரது தொண்டு மகத்தானதும் புனிதமானதுமாகும். இவரது தொண்டுக்கு அம்பிகையின் அருளாசி என்றும் உண்டு.

இவரது சமய, சமூகப்பணி தொடரவும் இவரது பவளவிழா சிறப்பாக நடைபெறவும் எனது உளம் கனிந்த நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் இவரது பணி ஆல்போல் தளைத்து அறுகுபோல் வேர்விட்டு இங்குள்ள தமிழ் சமூகத்திற்கு பெருமை சேர்க்க ஆண்டவனை வேண்டுவதோடு எனது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்தோடு, எமது சமூகத்தின் மேம்பாட்டுக்காகவும், கலை, இலக்கிய வளர்ச்சிக்காகவும் பல்லாண்டு காலமாக தன்னை அர்ப்பணித்து சேவையாற்றி வரும் “அகிலம்” சஞ்சிகையின் ஆசிரியர் கலாபூஷணம் கே. வி. இராமசாமி அவர்களது சேவையை பாராட்டி பவளவிழா எடுக்கவிருப்பதையிட்டு பெருமிதமடைகின்றேன்.

மலையகத்தின் இன்றைய தேவை எதுவோ அதனை கருத்திற்கொண்டு, அதாவது மலையக மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என கல்வியை கருப்பொருளாகக் கொண்டு மாணவ சமூதாயத்தின் கல்வி வளர்ச்சிபெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு கடந்த கால் நூற்றாண்டு காலமாக மேற் கொண்டுவரும் இவரது சேவை போற்றுதற்குரியது மட்டுமல்லாமல் பாராட்டுதலுக்குமுரியதாகும். அகிலம் அறிவியல் சஞ்சிகையுடன் சமுதாய மாணவர்களது அறிவு வளர்ச்சிக்கான கட்டுரை, கவிதை, சிறுகதை, நாடக பிரதியாக்கம் போன்ற பலதரப்பட்ட அறிவு சார்ந்த போட்டிகளை நடாத்தி மாணவ சமுதாயத்தை முன்கொணர்வதற்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்து வருவது பெருமைக்குரிய விடயமாகும்.

இவரது கலை இலக்கியப் பணி தொடர ஆண்டவனை பிரார்த்திப்பதுடன் தாங்கள் நீடிய ஆயுளும் பூரண சுகமும் நிறைந்த செல்வமும் பெற்று பெருவாழ்வு வாழ ஆண்டவனை வேண்டுவதுடன் வெள்ளி விழாவும் பவளவிழாவும் மிக சிறப்பாகவும் விமரிசையாகவும் நடைபெற எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

சுபம்

கலாபூஷணம் - மாத்தளை ராஜ்சிவா சிவலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

"அகிலம்" சஞ்சிகை ஆசிரியர், கலாபூஷணம்

கரு. வேலு இராமசாமி ஜே. பி.

அவர்களின்

பவள விழா

சிறப்பு மலர்

2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவளவிழா ஆண்டில் தடம்பதித்திருக்கும்
கண்டி கலை இலக்கிய இரசிகர் மன்றத் தலைவர்
அகில இலங்கை சமாதான நீதவான்
"அகிலம்" அறிவியல் இலக்கிய சஞ்சிகையின் ஆசிரியர்

கலாபூஷணம் கரு. வேலு இராமசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாபூஷணம் கரு. வேலு இராமசாமி
இல்லத்தரசி விஜயலட்சுமி தம்பதிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமர்ப்பணம்



கலாபூஷணம் கரு. வேலு இராமசாமி
அவர்களின் அமரர்களான
தந்தை கரு. வேலு அன்னை அகிலாண்டம்
பாட்டி **மாரியம்மாள்**

கலாபூஷணம் கரு. வேலு இராமசாமி
அவர்களின்
இல்லத்தரசி தெய்வத்திருமதி. விஜயலட்சுமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாபூஷணம் கரு. வேலு இராமசாமி

இல்லத்தரசி விஜயலட்சுமி

மற்றும் பிள்ளைகளான

விஜயதர்ஷினி, சுதர்ஷன், பிரியதர்ஷன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாபூஷணம் கரு. வேலு இராமசாமி
அவர்களின்
மருமகன் சத்திவேல் பாலரமேஸ் மகள் விஜயதர்ஷினி
பேரன் தக்ஷன் ஈஸ்வர் குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாபூஷணம் கரு. வேலு இராமசாமி அவர்களின்
சிரேஷ்ட புதல்வர் சுதர்ஷன் மருமகள் சசிமா
பேரன் - திமத்கேய்ல்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Priyadharshan Ramasamy.
Sri Lanka's First U.S. Certified Zumba Instructor

ZUMBA

Your body is a gift for you from the creator, this precious gift can be treasured by you with care and love, make love with your body and be healthy for a beautiful, happy life. Exercise is an important aspect of daily human routine, but many of us ignore the importance of the body movement.

Zumba is a dance fitness program created by Colombian dancer and choreographer Alberto "Beto" Perez. Basically you dance to the music and burn extra fat from your body. Zumba is a fun fusion of dance like Salsa, Merengue, Flamenco, Cha Cha and Reggae ton which can burn around 500 to 1000 calories for an hours workout.

Mr. Priyadharshan Ramasamy Sri Lanka's First U.S. Certified Zumba instructor who works out with more than 2000 fitness fanatics says "Zumba is an easy and interesting way for people who love fun and entertainment to reduce weight". Since the inception many have followed Zumba with Dharshan and has excellent results as they have lost weight and also have become fit and strong.

Dharshan was a reputed rugby player from St.Anthony's College Kandy preaches keeping fit doesn't have an age barrier and Zumba is suitable for kids to elders on advice of the instructor. He also recommends Zumba as a stress reliever as its one hour of entertainment (Dancing to the Music) while toning your body.

கலாபூஷணம் கரு. வேலு இராமசாமி
அவர்களின்
கனிஷ்ட புதல்வன் பிரியதர்ஷன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

මනෝ ගනේසන්
ජාතික සහජීවනය,
සංවාද හා රාජ්‍ය භාෂා අමාත්‍ය

மனோ கணேசன்
தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல்
மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர்

MANO GANESAN
Minister of National Co-existence,
Dialogue and Official Languages

தேசிய நல்லிணக்க, தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் இந்து கலாசார அமைச்சரின் வாழ்த்துச் செய்தி



மலையக தலைநகராம் கண்டி மாநகரில் அனைவரது அமோக வரவேற்புடன் சிறப்பாக வெளிவந்து கொண்டிருக்கும் "அகிலம்" வெள்ளிவிழாச் சிறப்பு மலர் வெளியீட்டிற்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

"அகிலம்" என்ற பெயரில் கடந்த இருபத்தைந்தாண்டுகளாக கண்டி மாநகரிலிருந்து வெளிவரும் தமிழ் சஞ்சிகை பல்வேறு கலை, இலக்கிய, அறிவியல் ஆக்கங்களைத் தாங்கி தொடர்ந்து வெளிவருவது மகிழ்வுக்குரியதாகும். தமிழ் எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்களது மறைந்து கிடக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்தக் களமமைக்கும் சிறப்புமிகு சமூகப்பணியை "அகிலம்" ஆற்றிவருவது பாராட்டுக்குரியது.

கண்டி மாநகரிலிருந்து இப்பணியை மேற்கொண்டுவரும் அதன் ஆசிரியர் கலாபூஷணம் கரு. வேலு. இராமசாமி அவர்களது பல்லாண்டுகால தளராத சேவை நம் இளந்தமிழ் சமூகத்திற்கு ஒரு மகா முன்னுதாரணம் ஆகும்.

"அகிலம் என்றால் இராமசாமி", "இராமசாமி என்றால் அகிலம்" என்பவை மிகையான சொற்றொடர்கள் அல்ல.

கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலும் தேசிய சகவாழ்வை முன்னெடுக்கும் தேசிய நல்லிணக்க, தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் மற்றும் இந்து காலாசார துறைசார்ந்த அமைச்சரவை அமைச்சர் என்ற வகையிலும் வெள்ளிவிழாச் சிறப்பு மலராக மலரும் அகிலம் சஞ்சிகைக்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்ற இவ்வேளையில் பவளவிழா ஆண்டில் தடம் பதித்திருக்கும் லக்கிலேண்ட் தொழிலதிபர் சேவாஜோதி எஸ். முத்தையா அவர்களையும் அகிலம் சஞ்சிகையின் ஆசிரியர் கலாபூஷணம் கரு. வேலு இராமசாமி அவர்களையும் பாராட்டி, நல்லாசி கூறி நல்வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்ச்சி அடைகின்றேன்.

கௌரவ அமைச்சர்

மனோ கணேசன், பா. உ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Message of Greetings from Governor of the North Central Province

Hon. Sarath Ekanayake

It is with great pleasure that I extend my warmest greetings to the Tamil Literary Journal Akilam and congratulation to Akilam on celebrating 25th Silver Jubilee issue and 75 Diamond Jubilee to Sevajothi S. Muthaiah J.P. and Kalabooshanam K.V. Ramasamy J.P. Tamil language is become and most interesting and important language and it is essential to learn and improve.

Throughout this journal students will improve their Tamil Knowledge. The journal will be an invaluable resource for all Tamil learners who consider it important to learn.

On the occasion of this important anniversary, I wish to congratulate the devotion with which Akilam Jouranl will ambassador of our students.

I hope that the journal will continue to improve Tamil beginner's knowledge for many years to come.

Hon. Sarath Ekanayake
Governor
North Central Province

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

වී. එස්. රාධාක්‍රිෂ්ණන් (පා.ම)
வி.எஸ். இராதாகிருஷ்ணன் (பா.உ)
V. S. Radhakrishnan (M.P)

අධ්‍යාපන රාජ්‍ය අමාත්‍ය
கல்வி இராஜாங்க அமைச்சர்
State Minister of Education



இராஜாங்க கல்வி அமைச்சரின் வாழ்த்துச் செய்தி

மலையக சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தி சிறந்ததோர் சமூகத்தை எதிர்காலத்தில் ஏற்படுத்துவதற்காக அமையப்பெற்ற “அகிலம்” அறிவியல் சஞ்சிகை தனது 25வது ஆண்டு வெள்ளி விழா சிறப்பு மலருக்கான வாழ்த்துச் செய்தி ஒன்றை வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

கலை, இலக்கிய போட்டிகளை வருடாந்தம் நடத்துவதனூடாக மாணவர்களின் ஆற்றல்களை இனங்கண்டு அவர்களின் படைப்பாக்கத் திறனை வெளிக்கொணர்வதற்குரிய களமாக அமைவதுடன், ஏனையவர்களும் படைப்பாக்க முயற்சிகளில் ஈடுபடுவதற்கான தூண்டுதலாகவும் அமைகின்றது. தமிழ் பேசும் மாணவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி கவிதை, கட்டுரை, சிறுகதை, நாடகப் பிரதி, எழுத்து, பேச்சு, விவாதம் முதலிய பல்துறை மொழியாற்றலை பாடசாலைக்குள்ளேயும் வெளியேயும் வளர்த்துக் கொள்ளும் செயற்பாடானது மாணவர்களை எதிர்காலத்தில் ஆளுமை உள்ளவர்களாக மாற்றும் என்பதில் ஐயமில்லை.

அதுமட்டுமல்லாது இந்நிகழ்வு சமூகத்திற்காகவும் கலைக்காகவும் தொண்டாற்றி பவள விழா ஆண்டில் “அகிலம்” அறிவியல் சஞ்சிகை ஆசிரியர் கலாபூஷணம் இராமசாமி அவர்களுக்கு மலையகக் கல்வியில் தன்னிறைவு காண வேண்டுமென்ற திடமான முயற்சிக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதோடு மேலும் “அகிலம்” இது போன்ற பல சாதனைகளை புரிந்து சமூகத்திற்காக இன்னும் பல நலன்களை செய்து கலைப் பணிகளை வளரச் செய்ய வேண்டும். அத்தோடு மலையகத்தில் கலை சம்பந்தமான விழிப்புணர்வுகளையும் மக்களிடையே கொண்டு சேர்க்க எல்லாம் வல்ல இறைவனின் நல்லாசிகளை வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

கௌரவ வீ. எஸ். இராதாகிருஷ்ணன், பா. உ.
விசேட பிராந்திய அபிவிருத்தி அமைச்சர்,
முன்னாள் இராஜாங்க கல்வி அமைச்சர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

सत्यमेव जयते

Message from
The Assistant High Commissioner of India
His Excellency Dhirendra Singh

It is with great pleasure I send this message with my best wishes to the Tamil Journal titled "Akilam".

I would also like to congratulate Mr. K. V. Ramasamy, Editor for his efforts. This Magazine is targeted to improve the standard of education in Sri Lanka, particularly that of the students in upcountry and those who are studying in the Universities.

I wish the Kandy Art and Literature Enthusiasts Association and Mr. Ramasamy all the success.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

මහනුවර මහා නගර සභාව

கண்டி மாநகர சபை

Kandy Municipal Council

නගරාධිපති / நகர பிதா / Mayor 081-2222274 | නියෝජ්‍ය නගරාධිපති / உதவி நகர பிதா / Deputy Mayor 081-2222810 | නාගරික කොමසාරිස් / மாநகர ஆணையாளர் / Municipal Commisioner 081-2223921 | නියෝජ්‍ය නාගරික කොමසාරිස් / உதவி மாநகர ஆணையாளர் / Deputy Municipal Commisioner 081-2225638

MESSAGE FROM HIS WORSHIP THE MAYOR OF KANDY HON. KESERA D. SENANAYAKE.

I have taken notice of the fact that the above association has joined hands with Akilam publication to release the Silver Jubilee Year Tamil Literary Journal Akilam.

This journal will no doubt contain articles on Art and Literature, and other subjects useful to the G.C.E. Ordinary Level, Advanced Level and university students. They will also help the students of the plantation sector to get better results in the public examination that they seek to sit for. I am informed that there will also be a Tamil Essay, short stories, poetry, drama, oratory etc offered thereby allowing the students to attain high results at the exams held on an island wide basis.

I send my best wishes on this occasion.

Kesera D. Senanayake
Mayor of Kandy.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

सत्यमेव जयते

Message from The Assistant High Commissioner of India His Excellency Dhirendra Singh

It is with great pleasure I send this message with my best wishes to the Tamil Journal titled "Akilam".

I would also like to congratulate Mr. K. V. Ramasamy, Editor for his efforts. This Magazine is targeted to improve the standard of education in Sri Lanka, particularly that of the students in upcountry and those who are studying in the Universities.

I wish the Kandy Art and Literature Enthusiasts Association and Mr. Ramasamy all the success.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

මහනුවර මහා නගර සභාව
கண்டி மாநகர சபை
Kandy Municipal Council

නගරාධිපති நகர பிதா Mayor — 081-2222274	නියෝජ්‍ය නගරාධිපති உதவி நகர பிதா Deputy Mayor — 081-2222810	නාගරික කොමසාරිස් மாநகர ஆணையாளர் Municipal Commisioner — 081-2223921	නියෝජ්‍ය නාගරික කොමසාරිස් உதவி மாநகர ஆணையாளர் Deputy Municipal Commisioner — 081-2225638

MESSAGE FROM HIS WORSHIP THE MAYOR OF KANDY
HON. KESERA D. SENANAYAKE.

I have taken notice of the fact that the above association has joined hands with Akilam publication to release the Silver Jubilee Year Tamil Literary Journal Akilam.

This journal will no doubt contain articles on Art and Literature, and other subjects useful to the G.C.E. Ordinary Level, Advanced Level and university students. They will also help the students of the plantation sector to get better results in the public examination that they seek to sit for. I am informed that there will also be a Tamil Essay, short stories, poetry, drama, oratory etc offered thereby allowing the students to attain high results at the exams held on an island wide basis.

I send my best wishes on this occasion.

Kesera D. Senanayake
Mayor of Kandy.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25 ஆண்டுகள் வெற்றியின் பாதையில் பயணித்துவரும் "அகிலம்" சஞ்சிகைக்கு வாழ்த்துக்கள்

"மாறும் உலகில் மாற்றத்தின் சக்தியாக விளங்குகிறது ஊடகத்துறை"

இதற்கமைய இன்றைய காலத்தில் ஊடகத்துறையின் உதவி, மானிடரான எமக்கு எண்ணற்றளவில் தேவைப்படுகிறது. இன்றைய ஊடகங்களுக்கு உதாரணமாக தொலைக்காட்சி, வானொலி, சமூக ஊடகம் மற்றும் காலங்காலமாக பயன்படும் அச்சு ஊடகம் என்பவற்றை குறிப்பிட முடியும். இவையனைத்திலும் அச்சு ஊடகம் மத்திய ஸ்தானத்தை வகிக்கின்றது. ஏன் என்றால்? மற்றைய ஊடகங்களின் மூலம் கடந்த கால நிகழ்வுகளை ஆதாரபூர்வமாக அறிய முடியாத நிலையில், காலந்தொட்டு காலம் வளர்ந்து வருகின்ற அச்சு ஊடகத்தின் மூலம் அறிய முடியும்.

படிப்பறிவு இல்லாத பாமர மக்கள் கூட எழுத்துக்கூட்டியோ, திக்கித்திணறியோ வாசித்து செய்திகளை அறிந்துகொள்ள பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் ஊடகத்துறையில் பெருமளவில் பங்குவகிக்கின்றன. அந்தவகையில் என்னுடைய எண்ணப்படி எத்தனையோ பத்திரிகை ஸ்தாபனங்கள் ஸ்தாபிக்கப் பட்டு நீண்ட காலம் நடாத்த முடியாமற் போய் இடைநிறுத்தப்பட்டுள்ளன. அந்த வகையில் 25 வருடங்களாக பல சவால்களையும் தாண்டி எழில் கொஞ்சும் மலையக மக்களின் நலன் கருதி "தமிழ் வாழ்க, தமிழ் வளர்க" எனும் எண்ணக்கருவோடு ஆரம்பிக்கப் பட்ட இந்த "அகிலம்" சஞ்சிகையின் வளர்ச்சியை எண்ணி நான் பெருமிதம் அடைகின்றேன்.

இச்சஞ்சிகையின் வெற்றிக்கு பின்னணியாக அநேகமானோர் இருந்தாலும் அவர்களுள் முக்கிய இடம் வகிப்பவர் பதுளை எலதலுவை கரு. வேலு அகிலாண்டாம்மாள் ஆகியோரின் செல்வப் புதல்வன் கலாபூஷணம் இராமசாமி அவர்களே. இவர் தனது பள்ளிக் காலத்தில் இருந்தே எழுத்தார்வமும், இலக்கிய ஆர்வமும் உடையவராகக் காணப்பட்டார் என்பதை இச்சஞ்சிகையின் இத்தனை வருடகால வெற்றியின் மூலம் கண்டுகொள்ள முடிகிறது. இவரின் உடன் பிறவா சகோதரன் தொழிலதிபர் எஸ். முத்தையா அவர்களுக்கும் இவ்வெற்றியில் பங்குண்டு என்பதை நானறிவேன்.

இந்தப் பத்திரிகையின் ஸ்தாபகரான பவளவிழா ஆண்டில் தடம்பதிக்கும் கலாபூஷணம் கே.வி. இராமசாமி அவர்களுக்கும் அவருக்கு உறுதுணையாகவிருந்த தொழிலதிபர் எஸ். முத்தையா அவர்களுக்கும் மற்றும் அகிலம் நிறுவன ஊழியர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதோடு, இத்தனை வருடங்களாக வளர்ந்து வந்த "அகிலம்" இன்னும் பல்லாண்டு காலம் நீடூழி வாழ வேண்டுமெனவும் வெள்ளிவிழா மற்றும் பவளவிழா சிறப்பாக நடைபெறவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

கௌரவ வீ. புத்திரசிகாமணி
தலைவர், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கைத் தொழில், தொழில்நுட்பப் பயிற்சி முன்னாள் பிரதி அமைச்சர்

கௌரவ பெ. இராதாகிருஷ்ணன்

அவர்களின் வாழ்த்துச் செய்தி

மலையகத்தின் கல்வி, அரசியல், இலக்கிய வளர்ச்சிக்கு அரும்பணியாற்றி வந்த "கலை, இலக்கிய, அறிவியல்" சஞ்சிகையான "அகிலம்" வெள்ளிவிழா சிறப்பு மலராக வெளிவரவிருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன்.

சமூக அபிவிருத்தி எனும்போது கலை, இலக்கிய பாரம்பரியங்களின் வளர்ச்சியும் இணைந்தே வளர்ச்சியடைய வேண்டும். அதன் போதே அச்சமூகத்தின் அபிவிருத்தி பூரணமானதாக அமையும் இந்த வகையில் "அகிலம்" சஞ்சிகை தேசிய ரீதியில், மாணவ சமுதாயத்தையும், வளர்ந்து வரும் இளம் எழுத்தாளர்களையும் இலக்கிய விமர்சகர்களையும் ஊக்குவித்து வருவதோடு, மூத்த எடுத்தாளர்களின் வழிக்காட்டலுடன் கலை, இலக்கிய பணியாற்றி வருகின்றமை இச்சஞ்சிகையின் சிறப்பம்சமாகும்.

"அகிலம்" அறிவியற் சஞ்சிகை மீண்டும் கலை விழாவுடன் தனது இலக்கிய பணிக்கு அடியெடுத்து வைக்கவுள்ளமை ஒரு நல்ல ஆரம்பமாகும். இலக்கியத்துடன் அறிவியலையும் வளர்த்து அரும்பணியாற்றி வரும் அகவை 75ல் தடம்பதித்திருக்கும் இச் சஞ்சிகையின் ஆசிரியர் கலாபூஷணம் கே. வி. இராமசாமி அவர்களின் சேவையும் "அகிலமெல்லாம் பரவி அரும்பணியாற்ற வேண்டும்" என வாழ்த்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் பிரதிக் கல்வி அமைச்சர்

கௌரவ முருகன் சச்சிதானந்தன்

அவர்களின் வாழ்த்துச் செய்தி

"வாசிப்பதால் மனிதன் பூரணத்துவமடைகின்றான்"

மனிதனிடம் வாசிப்புப் பழக்கம் வளர்ச்சியடையும்போது அவனிடம் முழுமையேற்படுகின்றது. அறிவு நூல்களும் இலக்கியங்களும் இதிகாசங்களும் எமது மூளைக்கு நல்விருந்தாகி ஆரோக்கியமான வளர்ச்சிக்குதவும் மூலகங்களாக மிளிர்கின்றன. இந்த வரிசையில் சமகாலத் தேவைகளை உறுதிசெய்யும் பணியில் பல்வேறு நூல்கள் அறிஞர்களால் உருவாக்கம் பெற்றுவருகின்றன. இவற்றுள்ளே "அகிலம்" அறிவியல் சஞ்சிகையும் சிறப்பிடம் பெற்றிருப்பது மகிழ்ச்சிக்குரியது. இச் சஞ்சிகையும் சிறப்பிடம் பெற்றிருப்பது மகிழ்ச்சிக்குரியது. இச் சஞ்சிகையின் வெள்ளிவிழா மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது தாய்மொழியாம் தமிழ்மொழியில் "அகிலம்" போன்று ஆக்க சிந்தனைப் போக்குடன் மேலும் பல சஞ்சிகைகள் வெளிவரவேண்டும். "அகிலம்" சஞ்சிகை மிகச்சிறப்பாக கல்வி. கலை இலக்கிய ஆக்கங்களைத் தன்னகத்தே உள்ளடக்கி தமிழ் மாணவர்களுக்கும், இளைஞர் சமூகத்துக்கும், அறிவு வளர்ச்சி, ஆளுமை வளர்ச்சி ஆகியவற்றிற்கும் அரும்பணியாற்றி வருவதையிட்டு பெரு மகிழ்வுறுகின்றேன்.

அகவை 75 பவளவிழா ஆண்டில் தடம்பதிக்கும் "அகிலம்" அறிவியல் சஞ்சிகை ஆசிரியர் கே. வி. இராமசாமி அவர்களின் பணியினைப் பெரிதும் பாராட்டுகின்றேன். அவர் பணி தொடரவும் "அகிலம்" - ஆயிரம் பிறை காணவும் எல்லாம் வல்ல இறையருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் மத்திய மாகாண கல்வி அமைச்சர்
கௌரவ அனுஷியா சிவராஜா
அவர்களின் வாழ்த்துச் செய்தி

இன்று காணப்படும் பல்லாயிரக்கணக்கான மொழிகளில் இலக்கண இலக்கிய கலைகள் கொண்டதாகவும் கட்டுக்கோப்பானதும் தனித்துவம் மிக்கதுமாக உள்ள மொழிகளில் நமது தாய் தமிழும் அடங்கும் என்பதையிட்டு நாம் மிகவும் பெருமை கொள்ளுதல் வேண்டும்.

தமிழ்மொழி இனிமையானது, தொன்மையானது என்று புகழ்ந்துவிட்டால் மட்டும் போதாது. இயல், இசை, நாடகம் என்பவற்றுடன் தமிழ் இலக்கியங்கள் மக்களின் வாழ்க்கைக்கு எத்தகைய கருத்துக்களை போதிக்கின்றன என தெரிந்துகொண்டே அவற்றை வாழ்க்கையிலும் பின்பற்றுதல் வேண்டும்.

இந்த வகையில் கண்டி கலை இலக்கிய ரசிகர் மன்றமென ஒரு அமைப்பு முத்தமிழுடன் அறிவியல் துறைக்கும், தமிழ் வளர்ச்சிக்கும் குறிப்பாக மலையக மறுமலர்ச்சியினைக் கருத்தில் கொண்டு செயலுருவாக்கம் பெற்றிருப்பது மகிழ்ச்சிக் குரியதொரு விடயமாகும்.

அத்துடன் "அகிலம்" கலை, இலக்கிய, அறிவியல் சஞ்சிகை மூலம் அகில இலங்கை ரீதியில் கட்டுரை, கவிதை, சிறுகதை, நாடகப் பிரதி, பேச்சுப் போட்டி என பல்வேறு துறைகளுடன் மாபெரும் இலக்கியப் பரிசுப் போட்டியும் கலைவிழாவும் நடைபெற்றுவரும் செய்தி மனதிற்கு இதமளிக்கின்றது.

உண்மையில் எமது கலாச்சாரத்தின் சிறப்பினை எடுத்துக் காட்டவும் உளவியல் ரீதியாக உயர்வுபெறும் தனது தனித்துவ தன்மையை காத்து வெளிப்படுத்தவும், பெருமைமிக்க, தமிழ் பாரம்பரியத்தினை நினைவு கூருவதற்கும் இது போன்ற போட்டிகள் பெரிதும் உதவும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. மலையக சமூகத்தின் இலக்கிய வளர்ச்சிக்கு பெரிதும் உதவியாக இருந்து. எதிர்கால சந்ததியினரின் இலக்கிய முயற்சிகளுக்கு கண்டி கலை இலக்கிய ரசிகர் மன்றமும் "அகிலம்" சஞ்சிகையும் முன்னின்று பாடுபடவேண்டும் என வாழ்த்துகின்றேன். "அகிலம்" வெள்ளிவிழா சிறப்பு மலர் வெளியிடும் இவ்வேளையில் பவளவிழா ஆண்டில் தடம் பதித்து சிறப்புடன் செயல்படும் "அகிலம்" ஆசிரியர் கலாபூஷணம் கரு. வேலு இராமசாமி ஜே. பி. அவர்களின் சிறந்த பணிக்கு எனது நல்வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய மாகாண முன்னாள் விவசாய, தமிழ் கல்வி, இந்து கலாசாரம் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள்

கௌரவ அமைச்சர் எம். ராமேஸ்வரன்

அவர்களின் வாழ்த்துச் செய்தி

சரித்திரப் பதிவுகளின் பொக்கிஷம் என்று கருத்துரைக்கப்படுகின்ற கண்டி நகரில் செயற்படுகின்ற கண்டி கலை, இலக்கிய ரசிகர் மன்றத்தின் வெளியீடாக கலாபூஷணம் கே.வி. இராமசாமி அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவருகின்ற அகிலம் சஞ்சிகை வெள்ளிவிழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரிதும் உவகை அடைகிறேன்.

ஈழத்து இலக்கியப் பரப்பிற்கு சிறப்பான ஒரு பங்களிப்பினை நல்கி வரும் அகிலம் சஞ்சிகை பெரிதும் அறியப்பட்ட படைப்பாளிகளினதும், ஆய்வாளர்களினதும் பல்வேறு கருத்து நிலைத் தளங்களைக் கொண்ட ஆக்கங்களுடன் வெளிவருவது எமது சிந்தனை விருத்திக்கு மேலும் வளம் சேர்க்கும் என நம்புகின்றேன்.

இம் மன்றமும்,கலாபூஷணம் கே.வி. இராமசாமி அவர்களும் சஞ்சிகை வெளியிடுதல் என்ற செயற்பாட்டோடு மட்டும் சுருங்கி விடாது பாடசாலை மட்டத்திலும் திறந்த மட்டத்திலும் கலை, இலக்கியப் போட்டிகளை நடாத்துதல், பாடசாலை மாணவர்களின் கலைத் திறமைகளுக்கு களம் அமைத்தல், கலை இலக்கிய கர்த்தாக்களைப் பாராட்டி கௌரவித்தல் போன்ற பல சமூக நோக்குடைய பணிகளையும் முன்னெடுத்து வருவது மகிழ்ச்சிக்குரியது.

இச் சஞ்சிகை ஆசிரியர் கலாபூஷணம் கே.வி. இராமசாமி அவர்கள் தனிமனித ஆளுமைக்கு ஒரு சிறந்த முன்னுதாரணம். இத்துறையில் நீண்ட கால அனுபவத்தைப் பெற்றவர். தற்போதைய பொருளாதார பின்புலத்தில் படைப்பிலக்கிய வெளியீட்டுத் துறை எதிர்கொண்டு நிற்கின்ற சவால்களுக்கு மத்தியில் அகிலம் சஞ்சிகையை வெளிக் கொணர்வதில் அவர் கொண்டிருக்கின்ற அர்ப்பணிப்புமிக்க கரிசனை பாராட்டுக்குரியது.

"அகிலம்" சஞ்சிகை இலக்கியப் பரப்பில் நிலையான தடம் பதித்திடவும், ஆசிரியரின் இலக்கிய மற்றும் மனிதநேய சமூகப் பணிகள் சிறப்புடன் தொடர்ந்திடவும் எனது நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்.

கௌரவ எம். ராமேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவளவிழாக் காணும் கே. வி. இராமசாமி அவர்களுக்கான வாழ்த்துச் செய்தி

மலையக மக்களின் பாரம்பரியக் கலைகளோடு அறிவியல் துறைகளும் காலத்திற்கு தேவையான கட்டாயக் கல்வியும் மலையகத்திற்கு தேவை என வலியுறுத்தி முத்தமிழும் அறிவியலும் எழுச்சிபெற தன்னாலான பங்களிப்பை முழுமையாக நல்கின்றவர் "அகிலம்" சஞ்சிகை ஆசிரியர் கலாபூஷணம் கே. வி. இராமசாமி.

அதுமட்டுமன்றி மலையக மண்ணின் மைந்தர்கள் தலை நிமிர்ந்து நிற்பதற்கும், பண்பாட்டு பாரம்பரிய முதுசங்களை களஞ்சியப்படுத்தி பேணி பாதுகாப்பதற்கும், ஏனைய சமூகங்களுக்கு நிகராக நவீன தொழில்நுட்ப உலகுக்கு முகங்கொடுக்க முன்வரவேண்டுமென்பதற்கும் தொடர்ச்சியாக குரல் கொடுத்து வருபவர். இவ் வெண்ணத்தைச் செயலாக்குகின்ற வகையில் கண்டி கலை இலக்கிய இரசிகர் மன்றத்தை ஆரம்பித்து அதன் தலைவராகவிருந்து "அகிலம்" எனும் கலை இலக்கிய அறிவியல் சஞ்சிகையை தொடர்ச்சியாக வெளியிட்டு வருகின்றார்.

"அகிலம்" கல்விச் சேவையின் குறிக்கோள் இலை மறை காயாக இருக்கும் மாணவ மாணவிகளையும் படைப்பாளிகளையும் வெளிக் கொணர்வதோடு, குறிப்பாக மலையகம் கல்வி வளர்ச்சியில் தன்னிறைவு காணவேண்டும் என்பதே அகிலத்தின் குறிக்கோளாகும்.

"அகிலம்" சஞ்சிகையின் பெயரினாலேயே அகிலம் இராமசாமி எனப் பெயர் பெற்ற இவர் பல அளப்பரிய சேவைகளை மலையக மக்களுக்கென ஆற்றி பெருமை பெறுகின்றார். அன்றியும் நாடளாவிய ரீதியிலும் பாடசாலை மற்றும் திறந்த மட்டங்களிலும் பல்வேறு கலை இலக்கியப் போட்டிகளை நடாத்தி இலக்கியப்பணி செய்து வருவதோடு தமிழுக்கும் தமிழ் கலை இலக்கியத்திற்கும் பணியாற்றியவர்களைக் கௌரவித்து பரிசளித்தும் வருகின்றார்.

மேலும் மலையகத்தை மையமாகக் கொண்டு ஆரம்பித்திருக்கும் "அகிலம்" நுண்கலைக் கலையகம் எதிர்கால சந்ததியினரை எடைபோட்டுப் பார்க்கவைக்க முன்னுதாரணமாக விளங்குகின்றது.

பல இலக்கியவாதிகள், கலைஞர்கள், அரசியல்துறை சார்ந்தோர், பல்கலைக்கழக பேரறிஞர்கள் எனப் பல திறத்தினருடனும் சுமூகமான, நல்லிணக்க உறவினை பேணி வருகின்றார்.

கலைக்கும் இலக்கியத்திற்கும் இவர் ஆற்றிவரும் பணி போற்றிப் பாராட்டுவதற்குரியதாகும். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பணிப்பாளராக இருந்த காலம் முதல் இவரது பன்முக ஆற்றல், ஆளுமை கண்டு வியந்து பாராட்டியுள்ளேன். இந்து கலாசார திணைக்களத்தின் கலை, இலக்கிய நிகழ்வுகளில் பங்கு கொண்டது மட்டுமன்றி அளப்பரிய பங்களிப்பினையும் நல்கி உள்ளார்.

பவளவிழாக் கண்ட பெருந்தகையாளரை வாழ்த்தி பாராட்டுவதில் பெருமை அடைகின்றேன். இவரின் பணி மேலும் தொடரவும் எல்லா நலனும் பெறவும் இறை அருள் வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

திருமதி சாந்தி நாவுக்கரசன்
செயலாளர், புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் இராஜாங்க அமைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துச் செய்தி

மலையகத்தின் தலைநகராம் கண்டி மாநகரின் இலக்கிய நயமிக்க சஞ்சிகைகளுள் "அகிலம்" சஞ்சிகைக்கு தனி மதிப்புண்டு. அகிலம் தன் பெயருக்கேற்ப அகிலமெல்லாமுள்ள அளப்பரிய செய்திகளை ஆணித்தரமாக வெளிப்படுத்துவதில் மும்முரமாகச் செயற்பட்டு வருகின்றது.

"அகிலம்" சஞ்சிகை இவ்வாண்டுதான் வெள்ளி விழாவினை நோக்கிப் பயணிக்கின்றது. இவ்வேளையில் இச்சஞ்சிகைக்கு வாழ்த்து தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன். காலத்துக்குக் காலம் எத்துனையோ சஞ்சிகைகள் வெளிவருகின்றன. அவற்றுள் பல காலப்போக்கில் மின்னலைப்போல் மின்னி மறைகின்றன. அகிலம் சஞ்சிகை அவ்வாறல்ல. அகிலத்தின் ஆயுள் நீண்டுகொண்டே போகின்றது. சமகால நிகழ்வுகளை அவ்வப்போது சுடச்சுட வாசகருக்கு வழங்குவதில் அகிலம் முன்னணியில் நிற்கின்றது. அதுவே அதன் ஆயுளையும் நீடிக்கின்றது.

கண்டிப் பிராந்தியத்தில் ஏனைய சஞ்சிகைகளுக்கில்லாத ஒரு சிறப்பம்சம் இச்சஞ்சிகைக்கு உண்டு. பாடசாலை மாணவர்களது கல்வித் திறனைப் புடம்போடுவதற்கான வாய்ப்பினை அகிலம் ஏற்படுத்திக் கொடுக்கின்றது. வருடமொருமுறை பள்ளி மாணவர்களுக்கான இலக்கியப் போட்டிகளை நடாத்தி வருவதினூடாக மாணவர்களைத் தரப்படுத்தி வழிப்படுத்துகின்றது. அதேவேளை, சஞ்சிகையின் ஆக்கங்களைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டும் சஞ்சிகையின் தரத்தைப் பேணும் வகையில் ஆலோசனைகளைப் பெறுவதற்காகவும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும், மாணவர்களையும் உள்வாங்கிக் கொண்டு தன்னை வளப்படுத்தி வருவது கலாபூஷணம் கே. வி. இராமசாமி அகிலம் ஆசிரியரின் அறிவுத்திறனைக் காட்டுவதாக உள்ளது.

மேலும் தமிழ்மக்கள் சமூகத்தின் கலை மற்றும் பண்பாட்டம்சங்களை வளர்க்கும் வகையில் பல்வேறு கட்டுரைகள் இச்சஞ்சிகையில் வெளிவருவது பாராட்டுக்குரியதே. அதேவேளை, இன. மத பேதமின்றி எல்லோரையும் பேணும் வகையில் இச்சஞ்சிகை அமைந்துள்ளமை ஆசிரியரின் பெருந்தன்மையைக் காட்டுவதாக உள்ளது.

எதிர்வரும் காலங்களிலும் மாணவ சந்ததியினருக்கும் எமது சமூகத்திற்கும் பயன்படும் வகையில் இச்சஞ்சிகையின் பணி தொடர வேண்டும் என வாழ்த்துவதில் மகிழ்வெய்துகின்றேன்.

வாழ்க அகிலம்!
வளர்க தமிழ்ப்பணி!

கலாநிதி (திருமதி) எஸ். ஆர். தேவர்
தலைவர், தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துகிறோம்

ஊவா மண் தந்த உயரிய தமிழ் ஆர்வலர் கலாபூஷணம் திரு. கே. வி. இராமசாமி அவர்கள் பவள விழா ஆண்டில் தடம்பதித்ததையிட்டு பெருமகிழ்வடைகிறோம்.

சிறுவயது முதலே தமிழார்வம் மிக்க பதுளை "இராமு" அவர்கள் தமிழன்னையின் வளர்ச்சிக்கு தன்னாலான பணிகளைச் செய்து வந்துள்ளமை பாராட்டுக்குரியது. இவர் இளம் வயதிலேயே இலக்கியஞ்சார் முயற்சிகளிலும் எழுத்துத் துறையிலும் புலமைபெற்றதுடன் பல்வேறு சஞ்சிகைகளையும் காலத்திற்கு காலம் வெளியிட்டுள்ளார்.

தற்போது கண்டி கலை இலக்கிய இரசிகர் மன்ற தலைவராகவும் "அகிலம்" அறிவியல் சஞ்சிகையின் ஆசிரியராகவும் பல்வேறு பணிகளை ஆற்றி வருகிறார். குறிப்பாக எழுத்துத்துறையிலே இலைமறை காய்களாக இருக்கும் ஆர்வம் மிக்கவர்களை முன்கொண்டு வரவேண்டும் என்ற நல்நோக்குடன் கட்டுரை, கவிதை, சிறுகதை, நாடகபிரதியாக்கம் போன்ற ஆக்கப்போட்டிகளை வருடா வருடம் நடாத்தி பரிசில்களும் வழங்கி ஊக்குவித்து வருகிறார்.

இன்றைய காலகட்டத்தில் விழாக்களை நடத்துதல், நூல் வெளியிடுதல், பரிசில் வழங்குதல் போன்ற விடயங்களுக்கு பெருந்தொகையான பணம் தேவைப்படுகின்றது. அப்படியிருந்தும் சற்றும் மனம் தளராது பல நல்லுள்ளங்களை நாடி நிதி சேகரித்து தனது முயற்சிகளை சாதித்துவரும் திரு. கே. வி. இராமசாமி அவர்களின் அர்ப்பணிப்பும், ஆர்வமும், ஈடுபாடும் போற்றுதற்குரியது.

இவ்வாறு அர்ப்பணிப்போடு செயற்படும் இவரது சேவை வெள்ளிவிழா சிறப்பு மலரும் வெளிவரவிருக்கும் இவ் வேளையிலும் பவள விழா ஆண்டில் தடம் பதித்திருக்கும் இவ்வேளையில் இவரது பணி மென்மேலும் தொடர மனதார வாழ்த்துகின்றோம்.

பீ. எஸ். சதீஸ்
முன்னாள் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணம்,
கண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர்

திருமதி ஏ. ஆர். சத்தியேந்திரா அவர்களின் வாழ்த்துச் செய்தி

ஒரு சமூகத்தின் வளர்ச்சியில் கலை, இலக்கியம், ஆகியன பாரிய தாக்கத்தினை செலுத்துகின்றன. கலை, இலக்கியத்தின் ஊடாக ஒரு சமூகத்தின் வாழ்வியலானது மேலும் கட்டுறுதியாக பயணிப்பதுடன் அச் சமூகத்தின் தனித்துவத்தினையும் உறுதிப்படுத்தப்படுகின்றது.

அந்த வகையில் "அகிலம்" கலை, இலக்கிய அறிவியல் சஞ்சிகை ஆசிரியர் கலாபூஷணம் கே. வி. இராமசாமி தனது பயணத்தின் 25 வருடங்களை வெற்றிகரமாக பூர்த்தி செய்து வெள்ளி விழாவை எட்டியிருப்பது பாராட்டப்பட வேண்டிய ஒரு விடயமாகும். அத்துடன் இவ்விழாவினை மேலும் மெருகூட்டுவதற்காக வெளியிடப்படவுள்ள சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இயந்திரமயமான உலகில் கால் பதித்துவிட்ட நமது மாணவ மற்றும் இளைஞர் சமுதாயம் தமது பாரம்பரியத்தையும் தனித்துவத்தையும் இழந்துவரும் இன்றைய காலகட்டத்தில் இன மத பேதம் கடந்த சமத்துவமான மலையகத்தினை கட்டியெழுப்பும் முயற்சியாக இத்தகைய நூல்கள் எதிர்காலத்திலும் வெளியிடப்பட வேண்டும் என்பதே எனது ஆசையாகும்.

அத்தோடு இதில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களானது பாடசாலை மாணவர்களுக்கு மிகவும் பயன் தருகின்ற ஒன்றாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

மேலும் உங்கள் பணி சிறப்புற வாழ்த்துவதோடு இதற்காக முன்னின்று உழைத்த அகிலம் ஆசிரியருக்கு பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலக்கியப் புரவலர் இதயத்தால் வாழ்த்துகிறார்

அகிலம் ... பரந்து விரிகிறது!

அதேபோல் ... அகிலம் இராமசாமியின் அர்ப்பணிப்பும் விசாலமானது.

அகிலம் சஞ்சிகை வெள்ளி விழா சிறப்பு மலராக வரும் இவ்வேளையில் அகவை 75 இல் கலாபூஷணம் இராமசாமி அடியெடுத்து வைப்பதையறிந்து அகம் மகிழ்கின்றேன்.

லாப நோக்கு இல்லாது சிற்றிதழ் ஒன்றை தொடர்ந்து
வெளிக்கொணர்வது ஒரு சிரமமான காரியம்

சிரமத்தை சிரமேற்கொண்டு, சிரத்தையுடன் செயலாற்றினால்தான்
ஒரு சிறு சஞ்சிகையை தொடர்ந்து வெளியிட முடியும்.

அந்தவகையில் ...
சாதாரணமான ஒரு மனிதன் சஞ்சிகை உலகில் சஞ்சரிப்பது
எனக்குள் வியப்புணர்வை தோற்றுவித்தது.

சஞ்சிகைத் துறையில் கலாபூஷணம் “அகிலம்” இராமசாமி தனித்துவமாக விளங்குகிறார்.
இவரது இதழியல் பயணத்தில் ஓர் இலட்சிய மனிதனைக் காண முடிகிறது.

ஒரு வேட்டி கட்டிய மனிதரின் வியர்வையின் விளைச்சல்தான் “அகிலம்”
என்பதை எவரும் எளிதில் மறந்துவிடமாட்டார்கள்.

என் நன்றியும் - வாழ்த்துக்களும் எப்போதும் உண்டு.

- புரவலர் ஹாசிம் உமர்

நன்றி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவளவிழா வாழ்த்துச் செய்தி



"அகிலம்" அறிந்த இயற்கை எழில் கொஞ்சும் மலையக மண்ணின் தலையாய நகரமாகிய கண்டியில் இருந்து மலையக மாணவ மாணவிகளின் கலை, இலக்கிய, அறிவியல் ஆக்கங்களுக்கு ஒரு வெயீட்டு தளமாக விளங்கும் "அகிலம்" சஞ்சிகையின் வெள்ளிவிழா மலருக்கும் அதனை தனது அயராத உழைப்பினால் பொறுப்புடன் வெளிக்கொண்டு வரும் ஆசிரியர் கலாபூஷணம் திரு. கே. வி. இராமசாமி அவர்கள் தனது அகவை 75ல் தடம்பதித்திருக்கும் பவளவிழாவிற்கும் வாழ்த்துரை வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழ் இலக்கிய ஆக்கங்களை உலகறிய செய்வதில் எத்தனை தடைகள் ஏற்படினும் தனது விடாமுயற்சியின் மூலம் மாணவர்களை ஊக்குவித்து அகில இலங்கை அளவில் படைப்புக்களை சீர்தூக்கி அவற்றில் சிறந்த ஆக்கங்களை பிரசுரிக்கும் "அகிலம்" சஞ்சிகையின் செயற்பாடுகள் மேலும் சிறப்புடன் ஆண்டாண்டு காலங்கள் நிலைக்க எனது மனமார்ந்த வாழ்த்துக்கள். அத்துடன் பவளவிழா ஆண்டில் தடம் பதிக்கும் திரு. கே. வி. இராமசாமி அவர்கள் இறைவன் அருளால் அவரது ஆக்கப் பணிகளை நலமுடனும் சிறப்புடனும் செயற்படுத்த எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

இச்சந்தர்ப்பத்தில் அவரது உற்ற நண்பரான திரு. எஸ். முத்தையா ஜே.பி. அவர்களும் பவளவிழா காண்பது இரட்டிப்பு மகிழ்ச்சியை தருகின்றது. அவர் மலையக மண்ணில் தேயிலைக்கு நிகராக பிஸ்கட் நறுமணத்தையும் பரவவிட்டு அநேக இளஞ் சமுதாயத்திற்கு தொழில்வாய்ப்பு தந்தவராவார். பார் போற்றும் கிரிக்கெட் சுழல் பந்து வீச்சாளர் திரு. முத்தையா முரளிதரனை படைத்து உருவாக்கிய பெருமையும் இவரையே சாரும். அவர் நலமுடன் மேலும் சேவைகளை தொடர ஆண்டவனை பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

"அறிவை தந்தையாகவும் திருப்தியை தாயாகவும் சத்தியத்தை சகோதரனாகவும்" வைத்து சாதனைபடைத்த இந்த நல்லுள்ளங்களின் சேவைகள் தொடரட்டும், இறையருள் அவர்களுடன் வீற்றிருக்கட்டும்.

வாழ்க வளமுடன்!

என். சிவலிங்கம்
முன்னாள் தலைவர்
ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலயம்
ஹற்றன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துச் செய்தி



கண்டி கலை, இலக்கிய இரசிகர் மன்றமும் "அகிலம்" அறிவியல் சஞ்சிகை வெளியீடும் இணைந்து நடாத்தும் விசேட கலைவிழாவின் நிமித்தம் வெளியிடப்படும் வெள்ளி விழா சிறப்பு மலருக்கு என்னுடைய வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

இரண்டரை தசாப்த காலத்துக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட "அகிலம்" இடைக்காலத்தில் பல காரணங்களினால் நொடித்துப் போனாலும் ஒடிந்துபோகாது தொடர்ந்து வெளிவர நாட்டம் கொண்டிருப்பது நமக்கெல்லாம் நல்ல செய்தியாகும். கலை, இலக்கிய இரசிகர்களும் அகிலத்தின்மீது அக்கறை கொண்டோரும் இந்த நற்செய்தியினால் ஆறுதல் அடைவர் என்பது திண்ணம்.

உலகமானது இன்று மாற்றம் பெற்று வருகின்றது. மாற்றம் என்பது தொடர் தேர்ச்சியான ஒரு செயற்பாடாகும். மாற்றம் தவிர்க்க முடியாதது மட்டுமன்றி எவராலுமே தடுத்து நிறுத்திட முடியாததுமாகும். அவ்வாறு தவிர்க்கவும் தடைசெய்யவும் தடுத்து நிறுத்தவும் எண்ணுபவர்கள் நிச்சயமாகப் பின்தங்கிவிடுவர். பின் தள்ளப்பட்டுவிடுவர். எனவே, இந்த மாற்றத்தின் துணைகொண்டு எல்லாவகையிலும் எம்மை நாமே மாற்றிக்கொள்ள முனையவேண்டும். இந்த முனைப்புக்கு ஈடுகொடுக்கும் வகையிலேயே இன்று உலகமெங்கிலும் அறிவின் பரம்பலும் தகவல் தொடர்பாடலும் விஞ்ஞானத் தொழினுட்பமும் பிரவாகித்துச் சென்று கொண்டிருப்பதையும் இதன்பேறாக நவீன ஆற்றல்களும் திறன்களும் வெளிக்கொணரப்படுவதையும் காண்கின்றோம். இந்தனைக்கும் பக்கத்துணையாகப் பிரசுரங்களின் பிரவாகமும் (Publication Explosion) மிகவும் வேகமாக வளர்ந்து வருகின்றது. இம்முன்னேற்றத்தின் காரணமாக உலகமும் சுருங்கி மனிதனின் உள்ளங்கைக்குள் வந்துவிட்டதுமட்டுமன்றி உலகின் பல சமூகங்களும் ஒன்றிணையத் தொடங்கியுள்ளன. உலகமயமாக்கல் என்னும் இப்பாரிய சவாலைச் சமாளிக்கும் வண்ணம் நமது நாடும் நமது மொழியும் நமது சமூகங்களும் காரியமாற்றிடவேண்டிய தருணம் இதுவாகும். இக்காரியங்களின் பேரில் பிரவாகித்துவரும் பிரசுரங்களின் பங்களிப்பு மிகவும் இன்றியமையாதது என்பதில் ஐயமில்லை.

"அகிலம்" அறிவியல் சஞ்சிகை ஆசிரியர் கலாபூஷணம் கே. வி. இராமசாமி அவர்கள் இப்பணியில் தன்னை அவதானமாக இணைத்து அகிலத்திற்கே வழிகாட்டிடவேண்டும். அதற்குரிய பலத்தையும் தைரியத்தையும் அகிலம் தனதாக்கிக்கொள்ள வேண்டும். இக்கைங்கரியத்தின்பேரில் நாமனைவருமே அகிலத்துக்கு ஒத்துழைப்பு நல்கிடவேண்டும். இத்தகைய ஒத்துழைப்பின் மூலமே, உலகமயமாக்கல் என்னும் சவாலுக்கு முகங்கொடுக்கக்கூடிய புதிய சமுதாயமொன்றை உருவாக்கிட முடியும். அதனால் பலன்பெற முடியும்.

வெள்ளிவிழாச் சிறப்பு மலராகப் புதுப்பொலிவுடன் வெளிவரவிருக்கும் அகிலத்துக்கு என்னுடைய ஆசிகள் வாழ்த்துக்கள்.

இவ்வண்ணம்

அல்ஹாஜ் எம். வை. எம் முஸ்லிம் J.P.
முன்னாள் கல்விப் பணிப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முன்னாள் கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர், பேராசிரியர் எம். எஸ். மூக்கையாக அவர்களின்

வாழ்த்துச் செய்தி

பவள விழா ஆண்டில் தடம்பதித்திருக்கும் "அகிலம்" கலாபூஷணம் இராமசாமி அவர்களையும் தொழிலதிபர் சேவாஜோதி எஸ். முத்தையா சமாதான நீதவான் அவர்களையும் அவர்களுடைய கடந்தகால சமூக சேவைகளுக்காகவும் இலக்கியப் பணி மற்றும் தொழில்துறை சாதனைகளுக்காகவும் எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பவள விழா ஆண்டில் இவர்கள் ஆரோக்கியத்துடன் நீடூழி வாழ என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதிலும் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

ஆரோக்கியத்துடன் அவர்கள் மேற்கொள்ளும் பணிகள் பயனுள்ளதாக தொடர்வது அவர்களுக்கும் அவர்களது குடும்பத்திற்கும் மாத்திரமன்றி முழு சமூகத்திற்கும் நாட்டிற்கும் பெரும் பயனுடையதாகும்.

நல்வாழ்த்துக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"அகிலம்" ஆசிரியர் கலாபூஷணம் கே. வி. இராமசாமி அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி.

அன்பு மிகுந்த அகிலம் ஆசிரியரே,
ஆற்றல் மிகக் கொண்டவரே,
இனிமையான இராமசாமி அவர்களே,
ஈகையால் ஈழத்தை வலம்வருபவரே,
உண்மையான உழைப்பால் உயர்ந்தவரே,
ஊக்கத்தினால் "அகிலத்தின்" வெள்ளி விழா காண்பவரே,
எளிமையான வாழ்க்கையை மேற்கொள்பவரே,
ஏற்றமிகு மறுமலர்ச்சியைக் காண விளைபவரே,
ஐக்கியத்தில் நம்பிக்கை கொண்ட பெரியவரே,
தங்கள் பணிகள் தொடரவும், சிறக்கவும்
வாழ்த்த எண்ணுவது அழகாக
வார்த்தை வருவதுகுறைவாக - எனினும்
வாழ்த்துகிறேன் மனமார!

- இணுவையூர் - கலாபூஷணம் -
ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன்
கொழும்பு 06.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துச் செய்தி

பதுளை எலதலுவையைச் சேர்ந்த "அகிலம்" அறிவியல் சஞ்சிகை ஆசிரியர் இராமசாமி அவர்களை நான் அரை நூற்றாண்டு காலத்துக்கு மேலாக அறிவேன். எமது குடும்ப நண்பரான அவரின் பவளவிழா ஆண்டில் அவர்கள் சகல பேறுகளையும் பெற்று நீண்டு வாழ உளமாரப் பிரார்த்திக்கின்றேன்.

1960களில் அச்சுப்பணியிலும் பத்திரிகைப் பணியிலும் நுழைந்த இராமசாமி அவர்கள் இன்று கண்டி மாநகரில் பெரிதும் மதிக்கப்படும் ஒரு ஊடகப் பிரமுகராகவும் "அகிலம்" இராமசாமி என்று பெயர் பெற்றிருப்பதும் பாராட்டப்பட வேண்டிய விடயங்கள். இதன் மற்றொரு முக்கியத்துவம் அவருடைய இப்படிப்படியான வளர்ச்சியைக் கடந்த ஐம்பது ஆண்டுகளாகவே நானும் அவதானித்து வந்ததுதான்.

கண்டியிலிருந்து வெளிவந்த "செய்தி" பத்திரிகை நிர்வாக ஆசிரியருடன் இணைந்து பணியாற்றி அப்பத்திரிகை வளர்ச்சிக்கு உதவிய அதே வேளையில், அவர் அச்சுத் தொழிலையும் பத்திரிகைத் தொழிலையும் நன்கு கற்றுக் கொண்டார். இந்த அனுபவங்கள் அவர் அகிலம் இராமசாமியாக உயர்ச்சி பெறக் கைகொடுத்தன. இன்று வெள்ளிவிழா மலராக வெளிவரும் "அகிலம்" சஞ்சிகை ஒரு மலையக சஞ்சிகை என்றில்லாது ஒரு புலமைசார் இலங்கை சஞ்சிகை என்ற பெயரைப் பெற இராமசாமியின் பத்திரிகைச் சிந்தனைகளே பிரதான காரணம்.

இப்பத்திரிகையில் அவர் கடைப்பிடித்த இரு அம்சங்கள் புலமைசார் கட்டுரைகளும் புலமைசார் அறிஞர்களின் பங்களிப்புமாகும். கட்டுரைத் தலைப்புகளும் உள்ளடக்கங்களும் பல்கலைக் கழக சஞ்சிகைகளை நெருங்கி வருகின்ற தன்மையைச் சுட்டிக்காட்ட வேண்டும். பல்கலைக்கழகம் அருகில் இருப்பதால் கண்டி ஊடகவியலாளர்களுக்கு அதன் காற்று படத்தானே செய்யும் என்ற எண்ணம் அகிலம் இதழ்களைப் புரட்டும்போது தோன்றுகிறது.

இதற்கும் அப்பால் இராமசாமி அவர்கள் காலங்காலமாக இளைஞர்களுக்கான பல்வேறு எழுத்துமுறைப் போட்டிகளை நடாத்தி, வெற்றி பெற்றவர்களுக்குத் தாராளமாகப் பரிசில்களை வழங்கி ஊக்குவித்து வந்துள்ளார். எம்மைக் கேட்டால், இது மகத்தான இளைஞர் மேம்பாட்டுப்பணி: இதனை அரசோ அல்லது வளம்மிக்க அமைப்புக்களோ செய்ய வேண்டும். அதனைச் சிரமேற் கொண்டு பணியாற்றும் இராமசாமி இவ்விடயத்தில் தம்மை ஒரு நிறுவனமாகவே மாற்றிக் கொண்டுள்ளார் என்று தான் சொல்வோம்.

"அகிலம்" அறிவியல் சஞ்சிகை வெளியீட்டுப் பணியிலும் பல்வகைப் போட்டிகளை நடாத்துவுதிலும் பம்பரமாகச் சுழன்று சுறுசுறுப்புடன் பணியாற்றும் கலாபூஷணம் இராமசாமிக்குப் பவளவிழா ஆண்டு என்பது சிலருக்கு ஆச்சரியம். ஏனெனில் அவருடைய காத்திரமான பணிகளும் சுறுசுறுப்பும் அவருக்கு இளமைக் கோலத்தையே வழங்கிவிட்டன.

மீண்டும் அவரை உளமார வாழ்த்தும்,

வித்தியாநிதி

சோ. சந்திரசேகரன்

(ஓய்வுநிலைப் பேராசிரியர். பீடாதிபதி) கொழும்பு பல்கலைக்கழகம்,

அரசகருமமொழி ஆணைக்குழு தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் உயர்ந்து சிறந்து வாழ்க .....

"அகிலம்" என்ற சொல் காதில் விழும்போதெல்லாம் திரு. இராமசாமியின் பெயரும் உடன் நினைவுக்கு வரும். பதுளை எலதலுவையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. கே. வி. இராமசாமி கரு. வேலு - அகிலாண்டம்மாள் தம்பதியினரின் செல்வப் புதல்வன். எலதலுவை தோட்டத் தமிழ்ப் பாடசாலை, பதுளை சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம், பதுளை தர்மதூதக் கல்லூரி ஆகியவற்றில் அவர் கல்வி கற்றிருந்தார். பாடசாலை மாணவராக விளங்கிய காலத்திலேயே இலக்கிய ஆர்வமும் எழுத்தார்வமும் அவருள் குடிபுகுந்தன.

பாடசாலைக் கல்வியை முடித்துக்கொண்டபின் இவரின் ஆளுமையைச் சிறப்புற அடையாளம் கண்ட இவரது பாடசாலையின் தலைமை ஆசிரியர் திரு.சுப்பையா, பசறையில் இருந்த தமது பிரேமா அச்சகத்தில் இவரை முகாமையாளராக நியமித்தார். 1960 முதல் அச்சகத்துறையில் தமது ஈடுபாட்டை வளர்த்துக்கொள்ளத் தொடங்கினார். அத்தோடு பதுளையைச் சார்ந்த கல்விமான்கள், இலக்கியவாதிகள், கலைஞர்கள் ஆகியோருடன் நட்புறவுடன் பழகிவந்தார். காலப்போக்கில் பண்டாரவளை நகரசபைத் தலைவர் எஸ். எம். நடராஜாவுடனான நட்புறவின் காரணமாக 1965 இல் பண்டாரவளை ஜெகம் அச்சகத்தில் பணிபுரியும் வாய்ப்பு ஏற்பட்டது.

கண்டியில் செய்தி வாரப்பத்திரிகையின் நிர்வாக ஆசிரியரான கண்டி ராமு நாகலிங்கத்துடனான இவரது சந்திப்பு இவரது வாழ்க்கையின் முன்னேற்றத்துக்கு வழிவகுத்தது. ஆரம்பத்தில் செய்தி பத்திரிகை அலுவலகத்தில் உதவியாளராகவும் பின்னர் அதன் முகாமையாளராகவும் செய்திப் பத்திரிகையின் உதவி ஆசிரியராகவும் உயர்ந்துகொண்டார். பின்னர் நெஷனல் அச்சகம், செங்கடகல பிரிண்டர்ஸ் ஆகியவற்றின் அனுபவங்களின் அடிப்படையில் தமக்கென சொந்தமாக சென்றல் பிரிண்டர்ஸ் என்ற அச்சகத்தை அவர் நிறுவிக்கொண்டார்.

திரு. கே. வி. இராமசாமியின் முழு ஆற்றலையும் வெளிக்கொணர்ந்த முக்கிய சாதனையாக விளங்குவது அவரை ஆசிரியராகக் கொண்ட "அகிலம்" சஞ்சிகையாகும். பல்வேறு கல்விமான்கள், இலக்கியவாதிகள், கலைஞர்களின் பல சிறந்த ஆக்கங்களைக் கொண்டதாக அது வெளிவந்துள்ளது. அநேகமாக அதன் ஒவ்வோர் இதழிலும் நான் எழுதி வந்திருக்கிறேன். இலங்கையில் தடம் பதித்த ஒரு சஞ்சிகையாக "அகிலம்" விளங்கி வந்துள்ளது.

கண்டி கலை இலக்கிய இரசிகர் மன்றத்தை ஆரம்பித்து அதன் தவிசாளராகவிருந்து இவர் ஆற்றிவரும் சேவைகளும் பாராட்டுக்கு உரியன. இம்மன்றத்தின் சார்பில் பல்வேறு போட்டிகளை நடாத்தி கலைவிழாக்களை நிகழ்த்தி, பரிசுகள் வழங்கி கல்விமான்கள், கலை இலக்கியவாதிகளைக் கௌரவித்துச் சிறந்த பணிகளை இவர் ஆற்றிவந்துள்ளார். இம்மன்றத்தின் கலைவிழாக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் சோடைபோனதில்லை. இவரது சமூக-கலைச் சேவைகள் காரணமாக இலங்கை அரசினால் அகில இலங்கை சமாதான நீதவானாகவும் கலாசார அமைச்சினால் "கலாபூஷணம்" விருது முதலான பட்டங்கள் இவரைத் தேடிச் சென்றுள்ளன. அதுமட்டுமல்லாமல் இன்னும் பல விருதுகளை பெற்ற பெருமைக்குரியவர் என்றால் மிகையாகாது.

இத்தனைக்கும் காரணகர்த்தாவான கலாபூஷணம் கே. வி. இராமசாமி அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். தனியொரு மனிதராக நின்று தமிழ்த்தொண்டு ஆற்றும் திரு. இராமசாமி எம் அனைவரினதும் வாழ்த்துக்களுக்கு என்றும் உரியவர். அவரது பவளவிழா ஆண்டில் குடும்பத்தினருடன் என்றும் உயர்ந்து சிறந்து நீண்டகாலம் ஆரோக்கியத்துடனும் வளத்துடனும் வாழ மனமார வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர் துரை. மனோகரன்
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அகிலத்தால் அறிவைப்பரப்பும் இலக்கிய நெஞ்சன்”

மனிதன் எப்பொழுதுமே தனது மொழியில் தனித்துவமான பற்றினைக் கொண்டு சிந்தனைத் திறனுடன் வாழ முயற்சிப்பான். மொழியின் பன்முகப் பாண்டித்தியம் என்பது அபூர்வமான திறனாகும். ஒடுக்கப்பட்ட, அமுக்கப்பட்ட மக்களது உரிமைகளை வென்றெடுக்க மொழியையே பயன்படுத்திச் சிந்தனையை மக்கள் மத்தியில் விதைத்துச் சமுதாய எழுச்சி விடுதலையை வென்றெடுத்த வரலாறு உலகப் பிரசித்தமானது. நாடுகள், இனங்கள் விடுதலையடைய வழி சமைத்தவர்களும் இலக்கிய சிந்தனையாளர்களேயாம். சிந்தனையின் வேகம் எழுத்திலே செறியும்போது அது சீரிய மாற்றத்தை ஏற்படுத்துகிறது. அறிவு, சிந்தனை, கருத்தின் ஆழம் என்பன சமூகமயப்படுத்தப்படும் போது அதீத பயன் விளைகின்றது. புத்திக்கூர்மை, சமூகநலன், காரியசித்தி, உத்வேகம் என்பன இலக்கிய சிந்தனையின் பலாபலன்களெனலாம். அகிலம் ஆசிரியர் இலக்கிய நெஞ்சன் இராமசாமி அவர்கள் ஊவா தந்த சிந்தனையாளன். ஒருமுகப்படுத்தப் பட்ட கருத்துக்களை வெளியிடும் “அகிலம்” எனும் சஞ்சிகையைப் பல்பயன் குறித்த நோக்கோடு வெளியிட்டு அறிவுக்கனல் பரப்பும் பணி பாராட்டிற்குரியது, பயனுடையது. சஞ்சிகை வெளியீடு கூர்மையான சிந்தனையை ஏற்படுத்துவது. மக்கட் சிந்தனையின் அனுபவம் கட்டுரை வடிவிலே அகிலத்திலே வெளிவரும்போது வாசகருக்குப் புதியதோர் அனுபவம் பிறக்கும் என்பதுண்மை. சமூக நோக்கு, ஆளுமை விருத்தி, அறிவுத் தேடல், பன்முக விடயங்கள் குறித்த பார்வை, அபிவிருத்தி, வளர்ச்சி, எதிர்காலத் திட்டம், இலக்கியப்பயிற்சி, இலக்கிய விமர்சன நோக்குநிலை, தனிமனிதப் பங்களிப்பு, வெகுசன ஊடகத் தாக்கம், மொழிபெயர்ப்பியல் குறித்த விழிப்பு, அறிவுப் பரம்பல் என்பன அகிலத்தின் பயன்.

ஒருவரின் “மனவிரிவு“ என்பது தான் பிறந்த இடத்தைவிட்டு ஏனைய பிராந்தியங்களிலேயும் பிறரிடத்திலேயும் பிற கல்விமான்களிடையேயும் உரத்த - கனத்த - பெருத்த - பயனுள்ள சிந்தனைகள் உள என்று எண்ணும் மனோநிலை இருக்க வேண்டும். இந்த மனவிரிவும் - செம்மை நலமும் - உள மேன்மையும் “அகிலம்” இலக்கிய நெஞ்சனுக்கு இருப்பதுதான் குணவிசேடம். இது மனித மகத்துவத்தின் மேன்மை.

இஃதல்லாத வெட்டித்தனம் - மேதாவிலாசம் இலக்கிய மலட்டுத் தனத்தையே மிகுவிக்கும். பயன் தராதது: வெறும் பம்மாத்து மாத்திரமே. இலக்கிய நெஞ்சன் இராமசாமி அவர்களின் பணிகளுக்கு அவரது சுகநலம் - இருப்பு - நல்வாழ்வு அத்தியாவசியமாகிறது. சுகம், மனநலம், பணி வேகம் என்பனவற்றை வாழ்க்கை நலன் தீர்மானிக்கும். வாழ்க்கைத் துணையின் ஒத்துழைப்பின்றேல் காரியசித்தி அனுகூலமாகாது. கருத்தொருமித்த நிலையில் தற்கொண்டான் பேணி நடக்கும் தர்மபத்தினி விஜயலெட்சுமியின் அன்பும், பண்பும், அறிவும், அனுபவமும், ஐக்கியமும் இலக்கிய நெஞ்சனின் இதமான கருமங்களுக்கு இதஞ்செய்து நிற்பது கண்டுகொள்ளப்படவேண்டியது, பெருமிதந்தருவது.

“எங்கிருந்தும் நல்லவை ஏற்றுக்கொள்ளப்படும், அறிவும், தகைமையும், ஆற்றலும், ஆளுமையும் மதிக்கப்படும்” என்னும் கோட்பாடே “அகிலம்” சஞ்சிகை ஆசிரியர் கலாபூஷணம் கே. வி. இராமசாமி என்ற இலக்கிய நெஞ்சனின் விரிவாகும். இதற்கென வாழ்த்தலாமல்லவா. நீடு நலம்பெற்று வாழ்க!

என்றும் அன்புடன்

பேராசிரியர் கனகசபாபதி நாகேஸ்வரன், ஜே.பி.

மொழித்துறை சப்ரகமுவ பல்கலைக்கழகம் இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவைப் பரப்பிட அயராதுழைக்கும் கலாபூஷணம் "அகிலம்" இராமசாமி



பாடசாலைக்குச் செல்லும் சிறிய வயதிலிருந்தே பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆகியவற்றைப் படிப்பதில் நல்ல விருப்பம் கொண்டவன் நான். அதிலும் கல்வியோடு தொடர்பான விடயங்கள் மற்றும் மாணவர்களுக்கு உகந்த விடயமென்றால் விருப்பம் அதிகம். அரசாங்கத்தில் உயர் பதவிகளில் பொறுப்பான கடமைகளுக்கு மத்தியிலும் எப்படியோ நேரத்தை வரவழைத்துக்கொண்டு வாசிப்பிலும் கவனம் செலுத்துவதுண்டு.

90 களின் ஆரம்பத்தில் வவுனியாவில் கடமையாற்றிய காலத்தில் கண்டியிலிருந்து "அகிலம்" என்ற சஞ்சிகை வருவதாகக் கேள்விப்பட்டாலும் பல தடவை முயன்றும் அதைப் படிக்கவோ பார்க்கவோ சந்தர்ப்பம் கிடைக்க வில்லை.

சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன் கண்டி இந்து மாமன்றத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றுக்குச் சென்றிருந்தபோது அப்போதைய இராஜாங்க அமைச்சர் மாண்புமிகு பி. பி. தேவராஜ் "இவர் தான் அகிலம் இராமசாமி" என அறிமுகம் செய்து வைத்தார்.

தமிழ் மக்கள் தொடர்பாகவும் தமிழ் மாணவர்களின் கல்வி அபிவிருத்தி தொடர்பாகவும் கருத்துக்களைத் தெரிந்து கொள்வதில் கலாபூஷணம் இராமசாமிக்கு அக்கறை அதிகம். அன்று நாமிருவரும் நெடுநேரமாக கல்வித்துறை தொடர்பாகக் கலந்துரையாடினோம். அவரிடமிருந்து "அகிலம்" சஞ்சிகைகள் சிலவற்றையும் பெற்றுக் கொண்டேன். பின்னர் கண்டிக்குச் செல்லும் போதெல்லாம் அவரைச் சந்திக்கத் தவறுவதேயில்லை. கண்டியில் மேடை நிகழ்வுகள் நிறைவடைந்த பின் டி. எஸ். சேனாநாயக்க வீதியில் அமைந்திருந்த அவரது வீட்டுக்கும் சென்றிருக்கின்றேன், உணவுடன் உரையாடலும் தொடர்ந்திருக்கிறது.

கண்டியில் "அகிலம்" பத்திரிகை சார்பில் அவ்வப்போது பெரிய அளவிலான விழாக்கள் ஒழுங்கு செய்தபோது, அரசியல்வாதிகளுக்கு மாத்திரமன்றி இலங்கையின் பல்வேறு பல்கலைக்கழக புத்திஜீவிகளுக்கும், தூதுவர்கள் உட்பட உயர் அதிகாரிகளையும் அழைத்து அவர்களது கருத்துக்களையும் கேட்கக்கூடிய சந்தர்ப்பங்கள் பலவற்றை உருவாக்கிக் கொடுத்துள்ளார். இலங்கை முழுவதிலுமுள்ள பாடசாலைகளிலும் கல்வி பயிலும் மாணவர்கள் பங்கு கொள்ளத்தக்க வகையில் கதை, கட்டுரை, கவிதை, நாடகம் என பல்வேறு போட்டிகளை நடாத்தி வெற்றி பெற்றோருக்குப் பெறுமதியான சான்றிதழ்களுடன் பணப்பரிசில்களையும் வழங்கியுள்ளார். பாடசாலை மட்டத்தில் மாத்திரமன்றி திறந்த மட்டத்திலும போட்டிகளையும் சிறந்த முறையில் நடாத்தி படைப்பிலக்கியத்துறையில் பலரை ஊக்குவித்திருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டியில் மட்டுமல்லாமல் சில விழாக்களை கொழும்பு தமிழ்ச் சங்கத்திலும் ஏற்பாடு செய்து கொழும்பிலுள்ளவர்கள் கண்டுகளிக்கவும், வெளியூர்களில் வாழும் கலைஞர்கள், இலக்கியவாதிகளுக்கு கொழும்பிலும் களம் அமைத்துக் கொடுத்துள்ளார். பிரபலமான வானொலி, தொலைக்காட்சி கலைஞர்களுக்கு முக்கிய இடம் கொடுத்தது போல, பாடசாலைகளில் கல்வி பயிலும் வளரும் பயிர்களையும் மேடையேற்றியுள்ளார்.

பதுளையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. இராமசாமி, பாடசாலைக்காலம் முதல் இலக்கிய ஆர்வம் கொண்டவராக இருந்ததால் கண்டியில் அச்சகமொன்றில் கடமையாற்றியதையும் கண்டியிலிருந்து வெளிவந்த "செய்தி" பத்திரிகையில் உதவி ஆசிரியராகக் கடமையாற்றியதையும் அறிந்து கொண்டேன்.

அன்னை மேல் அதிக பாசம் கொண்ட திரு. இராமசாமி தாயார் அகிலாண்டம்மாள் பெயரின் முற்பகுதியையே தனது சஞ்சிகையின் தலைப்பாக்கி "அகிலம்" சஞ்சிகையை பல ஆண்டுகளாகத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறார்.

அகிலம் சஞ்சிகையில் வெளிவந்த விடயங்களைப் படிக்கும்போது, அவற்றைத் திரும்பவும் கவனமாகப் படிக்க வேண்டும் என்று எண்ணத்தூண்டு மளவுக்கு கருத்தாழமிக்க கருவூலங்களாக அவை அமைந்திருப்பதும் கல்வித்துறையில் அவை காலத்தின் தேவையாக இருப்பதும் காரணமாகும்.

அகவை எழுபத்தைந்தில் தடம்பதித்திருக்கும் பவளவிழா நாயகர் கலாபூஷணம் இராமசாமி, தொடர்ந்தும் அறிவைப்பரப்பும் பணியிலும் அகிலத்தை வெளியிடும் பணியிலும் மேலும் சிறப்பாக பன்மடங்கு பணியாற்ற நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்.

உடுவை எஸ். தில்லைநடராசா
முன்னாள் வவுனியா, கிளிநொச்சி அரசாங்க அதிபர்
முன்னாள் கல்வி மேலதிகச் செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகச் செம்மல் இருவர்
வாழ்த்துக்கும் நன்றிக்கும் உரியவர்கள்



தன் நலம் பாராது, பொதுநலம் கருதி இயங்கும் இரு முக்கிய பிரமுகர்களை வாழ்த்தி மகிழ்வதில் நான் புளங்காகிதம் அடைகின்றேன். அவர்களில் ஒருவர் சேவாஜோதி எஸ். முத்தையா அவர்கள். மற்றவர் "அகிலம்" ஆசிரியர் கலாபூஷணம் கே. வி. இராமசாமி அவர்கள்.

முத்தையா அவர்கள் கண்டியில் பெரிய வணிகத் துறையினர். லக்கிலேண்ட் பிஸ்கட் தயாரிப்பாளர். முத்தையா முரளிதரனின் தந்தையாவார். எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் பெருந்தகை. எனது நூலொன்றையும் அவர் அதிக விலை கொடுத்து வாங்கியதை நான் மறக்கவில்லை. அவர் சுகநலத்துடன் நீடூழி காலம் சுபீட்சமாக வாழ நான் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

அடுத்தவர் மிக எளிமையாகவும் இலக்கிய ஆர்வமும் கொண்டவராகத் திகழும் அற்புதமான மனிதநேயங் கொண்ட கே. வி. இராமசாமி அவர்கள். தொடர்ச்சியாக "அகிலம்" என்ற தரமான சஞ்சிகையை தயாரித்து எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் அறிஞர். உலக மனிதராகவே அவர் எனக்கு காட்சி தருகின்றார்.

அவர் இன்னும் அதிக காலம் நல்ல சுகத்துடன் வாழ இறைவன் அருள் புரிய வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

கே. எஸ். சிவகுமாரன்
எழுத்தாளர், பத்திரிகை ஆசிரியர்
ஊடகத்துறை திறனாய்வாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்த பணி தொய்வின்றித் தொடரட்டும் ....



மலையகத்தின் தலைநகரான கண்டி மாநகரிலிருந்து கடந்த கால் நூற்றாண்டு காலமாகத் தொடர்ந்து வெளிவரும் "அகிலம்" சஞ்சிகையின் இருபத்தைந்தாவது வெள்ளிவிழா மலர் சிறப்புற வெளிப்படும் இவ்வேளையில் தமிழ்வாழ, தமிழர் தம் நிலை உயர தளராது தன் பணியை ஆற்றிவரும் அதன் "அகிலம்" ஆசிரியர் இராமசாமி அவர்களைப் பாராட்டுவதுடன் அவர் பணி தொடர வேண்டுமென்று வாழ்த்துவதில் உவகை கொள்கின்றேன்.

தமிழ் மொழியைப் பாதுகாத்து அதன் பெருமைகளை வெளிக்கொண்டு வரும் வரலாற்று ஆதாரங்களாக நம்மிடையே காணப்படுபவை தமிழ்மொழியில் தோன்றிய நூல்களே. தமிழ் மொழி பக்தி மொழி, செந்தமிழ் மொழி, முத்தமிழ் மொழி, அறமொழி, மூத்தமொழி, ஆய்வுக்கான மொழி, செம்மொழி என்று பல சிறப்புகளைத் தன்னகத்தே வரிந்துள்ளது.

எழுத்தாக்கமானது ஏதாவது ஒருவருக்குப் பயன்படுமானால், சிந்தனையைத் தூண்டுமானால், நல்வழிப்படுத்துமானால், உண்மையைப் புரிந்துகொள்ள வழி செய்யுமானால் அதுவே குறித்த ஆக்கத்திற்கான பெறுமதியாகின்றது. அவ்வாறான தரமான ஆக்கங்களைத் தாங்கியதாகவே "அகிலம்" தமிழர் அகங்களில் நிறைந்துள்ளது.

தமிழ் மொழி நம்மவர் நிலையுயர எதிர்கால நம்மவர்கள் நல்வழியில் வாழ்ந்து அச்சமற்ற நிம்மதி நிறைந்த பெருவாழ்வை வாழ சிறந்த ஆக்கங்களுடன் "அகிலம்" தொடர்ந்து நடைபோடட்டும், தமிழர் சிந்தனை வெளிப்பாட்டிற்குக் களமமைத்துக் கொடுக்கட்டும்.

த. மனோகரன்
துணைத் தலைவர்
கல்விக் குழுச் செயலாளர்
அகில இலங்கை இந்து மாமன்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாபூஷணம் கே. வி. இராமசாமி அவர்களின் இலக்கிய தாகம்

தனது அயராத உழைப்பின் மூலம் நீண்ட காலமாக "அகிலம்" சஞ்சிகையை பல இடர்பாடுகளின் மத்தியிலும் நடாத்தி வந்தமையால் கே. வி. இராமசாமி "அகிலம்" இராமசாமி என்ற பெயரிலும் அறியப்பட்டுள்ளார். கலை, இலக்கிய, அறிவியல் சஞ்சிகையான அகிலத்தை கடந்த 25 ஆண்டுகளாக தனது அயராத முயற்சியினால் நடாத்தி வருகின்ற இராமசாமி அவர்களின் இலக்கியப் பணி பெரிதும் விதந்து போற்றுதற்குரியது. நான் அறிந்த வரையில் சாகித்திய இரத்தினா டொமினிக் ஜீவா 48 வருடங்கள் கலை இலக்கிய சஞ்சிகையான மல்லிகையை வெளியிட்டுள்ளமைக்கு அடுத்தபடியாக வெள்ளிவிழாக் காணும் சஞ்சிகையாக அகிலத்தைக் குறிப்பிடலாம். இவை தவிர சில சமய சார்பான கலை இலக்கிய சஞ்சிகைகள் தொடர்ந்து வெளி வருகின்றன. கிழக்கிலங்கையிலிருந்து "தொண்டன்", வடக்கிலிருந்து "நான்" உளவியல் சஞ்சிகை என்பன நீண்ட காலம் வெளிவருகின்றன. எனினும் தனித்துவமான கலை இலக்கிய சஞ்சிகைகள் வரிசையில் அகிலத்திற்கு இணையாக அவற்றைச் சொல்ல முடியாது. அகிலத்தை மேலும் தரமாக்குவது காலத்தின் தேவை.

மல்லிகை என்றதும் ஜீவாவும், ஜீவநதி என்றதும் பரணிதரனும், ஞானம் என்றதும் ஞானசேகரனும், அலை என்றதும் யேசுராசாவும் நினைவுக்கு வருவதுபோல அகிலம் என்றதும் கே. வி. இராமசாமி நினைவுக்கு வருகின்றார். மலையகத்தைப் பொறுத்தவரையில் அவ்வப்போது பல சஞ்சிகைகள் தோன்றி மறைந்துள்ளன. இலக்கிய சஞ்சிகைகளை தொடர்ந்து வெளியிடுவதென்பது எமது நாட்டைப் பொறுத்தவரையில் சவாலான விடயம். அதற்கென பொருளாதார பலம் வேண்டும். இலக்கிய சஞ்சிகைகளுக்கு விளம்பரங்கள் கிடைப்பதென்பது குதிரைக் கொம்புக்கு நிகராகும். தனிமனித முழுநேர விடாமுயற்சியுடன் தெருத்தெருவாகச் சென்று விளம்பரங்கள் சேகரித்து விற்பனை செய்து யுத்தகாலத்தில் இடர்களையும் இழப்புக்களையும் சந்தித்து மீண்டும் பீனிக்ஸ் பறவையாய் எழுந்து மல்லிகையை நோயில் விழும்வரை நடாத்திய, சாதாரண படிப்பாளியும் அசுர படைப்பாளியுமான மல்லிகை ஜீவாவை நான் "அகிலம்" இராமசாமியிலும் பார்க்கின்றேன்.

கண்டியைப் பொறுத்தவரையில் தமிழர்கள் கணிசமாக வாழ்ந்தாலும் மலையகத்தின் பிரதான நகராக இருந்தாலும் பேராதனைப் பல்கலைக்கழகத்தைக் கொண்டிருந்தாலும் இலக்கிய ஆர்வம் நிறைந்தவர்கள் இருந்தாலும் அதிகளவில் இலக்கிய சஞ்சிகைகள் வெளிவரவில்லை. இவர்களது வாசிப்புக்கு நீண்ட நெடுங்காலம் தீனிபோட்டதெல்லாம் தமிழக சஞ்சிகைகள் தான். விகடனையும் கல்கியையும் குமுதத்தையும் அறிந்திருந்தளவு மல்லிகையையோ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகிலத்தையோ படிப்பவர்கள் மிக குறைவாகவே இருந்தனர். நீண்ட நெடுங்காலம் மலையக தோட்டத் தொழிலாளர்களுக்கு இடைநிலைக் கல்வி தானும் மறுக்கப்பட்டிருந்தமையே மலையக மக்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் குன்றியிருந்தமைக்கு காரணம். தொழிலாளர்களுக்கென தொழிற்சங்கவாதிகள் வெளியிட்ட சில பத்திரிகைகள் அவ்வப்போது தோன்றி மறைந்தன. கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் கல்வியில் பெருந்தோட்ட மக்களுக்கு சந்தர்ப்பமும் ஆர்வமும் ஏற்பட ஆரம்பித்தது. இடைநிலைக் கல்விக்காக பல மைல்கள் தாண்டிச் சென்று சிலராவது படிக்க ஆரம்பித்தார்கள். மலையகம் வாழ் நடுத்தர, மேல் தட்டு மக்கள் மாத்திரமன்றி தொழிலாளர்களின் பிள்ளைகளும் கல்வி பயிலும் நிலையும் பல்கலைக்கழகம் செல்லும் நிலையும் புத்தாயிரமாண்டிலிருந்து தரிசனமாக ஆரம்பித்தது.

தொண்ணூறுகளின் ஆரம்ப வருடங்களில் "அகிலம்" சஞ்சிகையை இராமசாமி மலர வைத்தார். அதற்கு முன்னர் கண்டியைத் தளமாகக் கொண்டு வெளிவந்த சஞ்சிகைகளில் "தீர்த்தக் கரையினிலே" குறிப்பிடத்தக்கது. எனினும் அது அற்ப ஆயுளிலேயே நின்றுபோனது பேரிழப்பாகும். அதற்குப் பின்னர் வந்த சஞ்சிகைகளில் இடையிடையே தடங்கல்கள் ஏற்பட்டபோதிலும் "அகிலம்" சஞ்சிகை கடந்த இருபத்தைந்து வருடங்களாக தொடர்ந்து வெள்ளி விழா சிறப்பு மலராக வெளிவருவது சாதனை தான். இராமசாமி அவர்களும் கண்டி இலக்கிய ஆர்வலர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள். எனினும், கண்டியைத் தளமாகக் கொண்டு இயங்குவது "அகிலம்" தான். கலை இலக்கிய போட்டிகளை நடாத்தி மலையக இலக்கிய வளர்ச்சிக்கும் ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கும் பங்களிக்கும் "அகிலம்" இராமசாமி அவர்களின் பணி நீண்ட காலம் தொடரவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

டாக்டர் எஸ். முருகானந்தன்
கொழும்பு 06.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகம் கண்ட ஒரு இலக்கிய இணைப்பாளர்

அகிலத்தினூடே அனைவரையும் ஈர்த்து தம் சேவையை தேசிய ரீதியில் ஆற்றிவரும் கலாபூஷணம் கரு. வேலு இராமசாமி ஓர் கடும் உழைப்பாளி. ஒரு தனிமனிதனாக நின்று தனது "அகிலம்" பத்திரிகையினூடே இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களை இணைக்கும் ஒரு பாலம். கலை, இலக்கியம், ஆன்மீகம், விஞ்ஞானம், மருத்துவம், சமூகவியல் போன்ற அறிவியல் ஆக்கங்களால் அழகுற உயர்தரத்தில் வெளிவரும் சஞ்சிகையே "அகிலம்". இன்று அது வெள்ளிவிழா மலராக வெளிவருவது மாபெரும் சாதனை. இதற்கு என கடுமையாய் உழைத்துவரும் "அகிலம்" ஆசிரியர் கலாபூஷணம் இராமசாமி அவர்களுக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி கொள்கின்றேன்.

மலையகம் கண்ட இலக்கியவாதி, ஓர் ஊடகவியலாளர். இதற்கப்பால் கல்வி தேவைப்படும் நபரை கண்டறிந்து அவருக்கான தேவையை யாரிடம் கேட்டு இணைத்துவிடலாம் என்ற ஒரு இணைப்பாளராக செயற்படல் இவரிடம் நாம் கண்ட ஓர் உயர்பண்பு. கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக இவரோடு இணைந்து செயற்பட்டுக்கொண்டிருக்கும் மாணவர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக பேராசான்கள், கல்விமான்கள், அரசியல் பிரமுகர்கள் அனைவரும் இந்த மலையக மக்களின் கல்வித்தர உயர்வில் இவர் கொண்டுள்ள வேட்கையினை அறிவர். மலையகத்திற்கு ஒரு பல்கலைக்கழகம், மலையக கல்வித்தரம் உயர மாணவரை தட்டியெழுப்புவதில் உள்ள உத்வேகம் என்பன இவரின் வேட்கை. எங்கெல்லாம் உயர்ந்த வளங்கள் காணப்படுகின்றனவோ அவ்விடத்தையெல்லாம் தேடிச்சென்று தனது தனித்த ஆளுமையால் வென்று அவற்றை கல்விச்சமூகத்திற்கு ஆக்கித்தர வேண்டுமென்று அயராது உழைத்துவரும் தங்கள் சேவையை பாராட்டி வாழ்த்து சொல்வது பொருத்தமானது.

இன்றைய மாணவர்களுக்கு தரமான இலக்கியங்களைக் காட்டித் தருவது மாத்திரமன்றி தரம் மிகு மனிதர்களையும் இனங்காட்டித் தருவதில் மிக முனைப்பாகச் செயற்படுபவர் திரு இராமசாமி அவர்கள். அவரது "அகிலம்" சஞ்சிகை மிகவும் உயர்ந்த தரத்தில் அழகாய் வெளிவருவது இதற்குச் சான்று. இவர் அரசியல் சமூக பொருளாதார துறையில் ஆழ்ந்த அனுபவம் பெற்றவர். எழுத்துத் துறையில் தனக்கென ஒரு பாணியை அமைத்துக்கொண்டு காலத்தின் தேவை அறிந்து தமது "அகிலம்" சஞ்சிகையினை அறிவியல் சஞ்சிகையாக வெளியிட்டு சாதனை படைத்தவர். பேச்சுப் போட்டி, கட்டுரை, கவிதை, சிறுகதை, நாடகப் பிரதிப் போட்டி எனத் தேசிய மட்டத்தில் போட்டிகளை நடாத்தி அதன் பெறுபேறுகளை ஊடகங்களில் வெளியிட்டு மாணவரை உற்சாகப்படுத்தி மகிழ்தல் இவரது தனிப்போக்கு. "அகிலம்" சஞ்சிகை வெளியீட்டில் மாணவர்களுக்கு மாதிரிப் பாத்திரங்களாய் (Role Model) காட்டக்கூடிய பெரியார்களை வரவழைத்து அவர்களது காத்திரமிகு சொல்லாடலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டி மாணவரது தமிழ் மொழியாற்றலை வளர்ப்பதற்கு தமது விழாவை ஆக்கித்தருவதில் பெருமுனைப்போடு செயற்படுபவர்.

பாடசாலைகளை ஒன்றிணைப்பதிலும் அதிபர்களை தன் செயற்பாட்டிற்குள் உள்வாங்கிக் கொள்வதிலும் வளவாளர்களைத் தேடிப்பிடித்து மாணவ சமூகத்திற்கு நன்மை செய்ய வரவழைத்துக் கொள்வதிலும் விழாவுக்கான முழு செயற்பாடுகளையும் ஒரு தலைவனாக செயலாளராக, பொருளாளராக கண்காணித்து அருமைமிகு "அகிலம்" சஞ்சிகையும் வெளியிட்டு அழகாய் விழா எடுப்பதிலும் வல்லவர். சமூக வளங்களை உச்சமாய் பயன்படுத்துவதிலும் அவை மலையக சமூக கல்வி மேம்பாட்டிற்கு உள்ளீர்க்கப்பட வேண்டும் என்ற முனைப்பிலும் மிகவும் கடுமையான உழைப்பை நல்கி வருபவர் இவர்.

அனைத்துப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் சார்பாக திருவாளர் கே. வி. இராமசாமி அவர்களின் பணி இன்றுபோல் என்றும் வளர்ந்து இவரது மலையகம் தொடர்பான கனவுகள் நிதர்சனமாக அக மகிழ்ந்து வாழ்த்துக்கள் கூறி மகிழ்கிறோம்.

திருமதி எம். கோகிலேஸ்வரி ராமகுமார்
பிரதி அதிபர், இரஜவல தமிழ் மகாவித்தியாலயம்
முன்னாள் பிரதி அதிபர், பெண்கள் உயர்தர பாடசாலை, கண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டுக்குப் பாராட்டு

"அகிலம்" கலை இலக்கிய அறிவியல் சஞ்சிகை ஆசிரியர் கலாபூஷணம் கே. வி. இராமசாமி அவர்களை மீன்பாடும் தேன்நாட்டின் சார்பாக வாழ்த்துகின்றோம்.

தீந்தமிழின் உற்சாக ஊற்றே வாழி ...

நல்ல தமிழ் நாயகனே! நல்லறிஞர் காவலனே!!
வெல்லுகிற கூட்டத்தில் வித்தகனே! சொல்லுகிற
சொல்லுக்குள் வெல்லுஞ்சொல்; உன்சொல்!
இல்லை எம்முள் மூத்த வித்தகன்.

எத்தனை எத்தனை எண்ணிலா ஆற்றல்கள்!
அத்தனை பெற்றும் அடக்கமே! நித்தமும்
நட்பு வளர்த்திடும் நாகரீகம் கற்றதமிழன்
திட்டம் வளர்க்கும் திடநெஞ்சன்.

முன்னின்று நற்செயல் முத்தாய் முடிப்பதால்,
கண்ணின்று காட்சிதரும் கண்ணியனே! நான்
எவ்வாறு போற்றி எடுத்துரைப்பேன்! கலைஞரை,
இவ்வாறு நிற்கின்றார் கலைஞர்.

நின்ற இடமெல்லாம நேசம் வளர்க்கிறாய்!
சென்ற இடமெல்லாம் செந்தமிழாய் - வென்ற
களப்பணிகள் பற்பலவாம்! மன்னா ! நிகர் உன்
அளப்பரிய பண்பே அழகு.

சீர்பலவும் செயல் பலவும் சீராய் ஓங்கிடவே
பார் புகழ் நற் பணிகள் தொடர்ந்திடவே;
ஊர் சேர்ந்து உன்புகழ் பாடி மகிழ்ந்திடவே,
நேர் நின்று, நிகரற்ற உயர்ச்சி பெற வாழ்த்துகிறோம்.

சங்கத்தமிழில் சங்கமித்துப் பாடுகிறாய்!
பங்கம் நீங்க பைந்தமிழாய் பாடுகிறாய்!
பொங்கும் கலைவளம் திக்கெல்லாம் பரப்புகிறாய்!
வங்கக்கடலாய் வாழ்நாளில் புகழ்பரப்ப வாழ்த்துகின்றோம்.

கலாபூஷணம் - வித்தகர்- தேன் இலக்கியச்சுடர் - கவிக்குயில்
வயலற் சரோஜா B.Com - Dip.in.Ed - M.Com (hon)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன மொழிக்குச் சேவை செய்ய "அகிலம்" சஞ்சிகையைத் தவழவிட்ட ஆசிரியர் கலாபூஷணம் கே. வி. இராமசாமிக்கு எனது பாராட்டுக்கள்



புன்சிரிப்பால் கவர்ந்திழுக்கும்
பொற்பமைந்த திருமகனாம்
பொன்மனத்தான் எங்கள்திரு
பூந்தமிழான் இராமசாமி
இன் சொல்லான் எப்போதும்
இறைவனது திருவருளால்
நன்மக்கள் தம்மோடு
நலம்பெறவே வாழ்த்துகிறேன்.

பவளவிழா காணுகின்ற
பண்புநிறை தமிழ்மகனாம்
சிவனாரின் அருள்பெற்ற
சீலமிகு கே.வி.ஆரும்
உவகையுடன் நமக்களித்த
உன்னதமாம் "அகிலமுடன்"
குவலயத்தில் வாழ்ந்திடவே
குளிரமனம் வாழ்த்துகின்றேன்.

இனப்பற்றும் மொழிப்பற்றும்
இதயத்தில் சுரந்திடவே
இனமொழிக்குச் சேவைசெய்ய
"அகிலமெனும்" சஞ்சிகையை
மனமகிழ தவழவிட்டு
"கலாபூஷண" விருதை
தனமாகப் பெற்றுயர்ந்த
தலைமகனே வாழ்த்துகிறேன்.

அயராத சேவையினால்
அரசளித்த ஜே.பி. பட்டம்
உயர்வுக்கு வழிசமைக்க
ஊர்புகழ தொண்டுசெய்தாய்
கயவர்க்கு அடங்காத
காவலனே! அற்புதனே!
பயன்கொடுக்கும் கற்பகமே
பல்லாண்டு நீ வாழ்க!.

நாடறிய வெளிவந்த
நல்லிதழாம் "செய்தி"யிலே
ஊரறிய கவிஞர்களை
உருவாக்கும் உத்தமனாய்
ஏடெல்லாம் தான்புகழ
ஏற்றமுற நீ இருந்தாய்
நாடின்று போற்றிடவே
நலமாக வாழ்த்துகிறேன்.

புசல்லாவை குறிஞ்சிநாடன்
தமிழ்மணி கலாபூஷணம்
K. வெள்ளைச்சாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக உணர்வு கொண்ட ஒரு மாமனிதர்

எழுபத்தைந்து ஆண்டுகள் நிறைவு பெற்று பவள விழா ஆண்டில் தடம்பதித்திருக்கும் "அகிலம்" அறிவியல் சஞ்சிகை ஆசிரியர் கலாபூஷணம் கரு. வேலு இராமசாமி அவர்களை நாம் மட்டுமல்ல, தமிழ்கூறும் நல்லுலகம் அனைத்தும் மனநிறைவோடு வாழ்த்துகிறது.

ஒரு மனிதன் வாழுகின்ற காலத்திலேயே சமூகத்திற்காக எதனையாவது அடையாளப்படுத்திவிட்டு சென்றால், உலகம் உள்ளவரை அவரை மறக்காது. அந்த வரிசையில் மலையகத்திலும் கண்டியிலும் இலக்கியத் துறையில் பெரும் புரட்சியை ஏற்படுத்தி, மிக அமைதியாக சாதனை புரிந்து கொண்டிருக்கும் "அகிலம்" இராமசாமி அவர்களை அறிந்தவர்கள், சகல சமூக மட்டங்களிலும் பலர் உள்ளனர். அனைவரது இதயத்திலும் இடம் பிடித்த ஒரு மாமனிதர் என்றால் மிகையாகாது. அன்பான உள்ளமும் நல்ல பண்பாடும் முறையும் அனைவருக்கும் இரங்கும் உள்ளமும் சமூக உணர்வும் இன்னொருவர் திறமையை புடம்போட்டு பறைசாற்றும் இயல்பும் கொண்ட ஒரு மாமனிதராவார்.

எவரொருவரும் தாமெடுத்த சமூகப் பணியோ, இலக்கியப் பணியோ குறிப்பிட்ட கால அளவு செய்துவிட்டு சலித்தவுடன் அதனை தள்ளி போட்டுவிடுவார்கள். ஆனால் "அகிலம்" இராமசாமி அவர்கள் கண்டி கலை இலக்கிய மன்றத்தினூடாகவும் "அகிலம்" சஞ்சிகை வெளியீட்டின் ஊடாகவும் இடைவிடாத கலைப்பயணத்தைத் தொடர்ந்து வந்திருக்கிறார். ஒவ்வொரு பணியிலும் இதயபூர்வமாக இறங்கி இயங்குவதும் அப்பணியை மிக நேர்த்தியாக சிறப்புற செய்வதிலும் இவருக்கு நிகர் இவரே என்றால் அது மிகையாகாது.

இலக்கியத்துறை ஆர்வலர்கள் அனைவரினதும் நட்பிற்கு இவர் இலக்கணமானவர். நானே பலமுறை வியப்புற்றுள்ளேன். இத்தனை புத்திஜீவிகளை எப்படிப் பழகி வைத்துள்ளீர்கள் என்று கேட்டதும் உண்டு. மனதில் நம்பிக்கையுடனும் சிந்தனையில் இலட்சியத்தையும் கொண்டு பவள விழா ஆண்டில் தடம்பதித்திருக்கும் கலாபூஷணம் திரு. கே. வி. இராமசாமி அவர்கள் இன்றைய இளைஞர்களுக்கு ஓர் மிகச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகிறார்.

கலாபூஷணம் கே. வி. இராமசாமி போன்றோர் எமது மலையக சமூகத்தின் ஒரு விடிவெள்ளி நட்சத்திரம். அவர் வாழும் காலத்தில் நாமும் வாழ்கின்றோம் என்பதும் அவர் செல்லும் பாதையில் எமக்கும் பணிசெய்ய வாய்ப்புக் கிடைத்தது என்பதும் நாம் பெற்ற பெரும் பாக்கியமாகும். ஆண்டுகள் பல கடந்து "அகிலம்" போற்றும் அற்புத மனிதராக வாழும் ஐயாவை பல்லாண்டுகள் நலமுடன் வாழ வேண்டுமென இறைவனை வணங்கிப் பிரார்த்திக்கின்றேன்.

பெ. சிவகுமார்
அகில இலங்கை சமாதான நீதவான்
அதிபர், இந்து சிரேஷ்ட பாடசாலை, கண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாபூஷணம் கே. வி. இராமசாமி - அகில இலங்கைச் சமாதான நீதவான் -
"அகிலம்" சஞ்சிகை ஆசிரியர் அவர்களின்

பவளவிழா வாழ்த்துச் செய்தி

ஏறக்குறைய பதினைந்து ஆண்டுகளாக என் மனமதில் அசைபோட்டுக் கொண்டிருந்த கனவு இப்போதுதான் இந்த இதழ் மூலந்தான் நனவாகியுள்ளது. "அகிலம்" முழுவதும் பல்கிப் பரவி வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்களது வாழ்வினை மேம்பாடடையச் செய்யவும், அவர்களது சமூக, வரலாற்றுப் பின்னணியை ஆய்வு செய்யவும் இலக்கியக் கலை ஆக்கங்களுக்கு பிரசுர வாய்ப்பளிக்கவும் நாம் ஏற்பாடு செய்து வருகிறோம்.

மேற்குறிப்பிட்ட நன்னோக்குடன் 1994 யூன் மாதத்தில் வெளிவந்தது "அகிலம்" சஞ்சிகை. அருள்வாய் இறையே எமக்கென்றும் அருள்வாய் "அகிலம்" வலம் வரவே! என்ற இறை துதியோடு இதனை வெளிக்கொணர்ந்தவர் திரு. கே. வி. ஆர். எனச் சுருக்கமாக மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும் எனத் தமிழ் என்ற மூன்றெழுத்தைக் கருத்திற்கொண்ட கே. வி. இராமசாமி. "அகிலம்" முதலாவது இதழில் இவர் சமர்ப்பணமாகக் குறிப்பிட்ட கவிதையே இவருடைய ஆற்றலை, ஆர்வத்தை, அர்ப்பணிப்பை, ஆளுமையை வெளிப்படுத்தியது.

"பாட்டாலே உன்னெழிலைத் தமிழணங்கே!
பரிமளிக்கச் செய்திடவே ஆவலுற்றேன்!
எட்டாத தூரத்து விண் மீனாய்!
விளங்குகின்ற வைரத்தைப் பெயர்த்து கலை!
சொட்டுகின்ற இலக்கியப் பேழையென!
சொல் புதிதாய், சுவை புதிதாய், நறுமணத்தைக்!
கொட்டுகின்ற இதழாக அகிலத்தை!
குவலயத்தில் தூதுவிட எனக்கருள்வாய்"

என்று எழுதியிருந்ததைப் பார்க்கும் போது அகிலத்தின் மூலம் தமிழ் கலை - இலக்கிய ஆர்வலர்களுக்கு அளப்பரிய பணி புரியக்கூடியவர் என்ற நம்பிக்கை பிறந்தது. ஆயிரம் பூக்கள் மலரட்டும் என்பது போல் அகிலம்" மலர்ந்தது. அகிலமெங்கும் "அகிலம்" வலம் வரட்டும் என்று அன்றெழுதிய கவிஞன் தமிழோவியன் குறிப்பிட்டது போல் அச்சகம், பத்திரிகைத் துறையில் அனுபவம் பெற்ற நண்பன்! நிச்சயம் செய்து கொண்ட தன் நெடுநாட் திட்டங்கள் எல்லாம் அச்சு வாகனமேற்றி அதனை "அகில"மென வலம் வரச் செய்வோன் என்பது நினைவுகூரத் தக்கது.

இன்று எழுபத்தைந்தாவது அகவையிலும் இளைஞனாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் கண்டி கலை இலக்கிய மன்றத்தின் தலைவரும் தமிழ் மொழியின் காவலருமான திரு. கே. வி. ஆர். நீண்ட புகழும் கூடிய ஆயுளும் ஆரோக்கிய வாழ்வும் பெற வேண்டுமென வாழ்த்துவதில் பெரு மகிழ்வெய்துகிறேன்.

வாழ்க வளமுடன், நாளும் நலமுடன் நட்புடன்,

ந. பார்த்தீபன்

விரிவுரையாளர், தேசிய கல்வியற் கல்லூரி, வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அகிலம்"
கலாபூஷணம் கரு. வேலு இராமசாமி

அள்ளிவரும் தென்றலுடன்
அழகு கொஞ்சும் மலையகத்தில்
வெள்ளி விழா காணுதின்று
வீறு மிக்க அகிலமது

கலா பூஷணம் கரு.. வேலு இராமசாமி ஐயா
கலை விரும்பி சமூகத் தொண்டர்
உலா வந்து உழைத் தகிலம்
உயர வழி செய்துள்ளார்

மலையக மக்கள் வளர்ச்சி மீது
மாறா நேசம் கொண்டவர்
கலையும் கல்வியும் மேம்பட்டுயர
கருத்தாய் குரல் கொடுத்தவர்

பழையன கழிந்து
புதியன தோன்ற
உழைத்து வெற்றி பெற்றவர்
உயர்ந்த போட்டிகள் வைத்தவர்

இலக்கிய உலகில்
ஏற்பட்ட தடைகளை
கலக்கமின்றி தகர்த்தவர்
கடமையை அழகாய்ச் செய்தவர்

பதுளையில் நடந்த
தமிழ் எதிர்ப்பினால்
புதுமை வேகங் கொண்டவர்
பதிலடி கொடுத்து நின்றவர்

அகிலாண்டம் கரு வேலு
ஆகியோரின் புதல்வரிவர்
அகிலாண்டத்தின் நினைவாக
"அகிலம்" நூலைத் தந்தவர்

பசறை ஊரில் இருக்கின்ற
பிரேமா எனும் அச்சகத்தில் 1960ல்
அசர வைக்கும் இலக்கிய சேவை
ஆற்றிய பெரும் மனிதரிவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி எனும் பத்திரிகையில்
சேவை செய்த காலமதில்
மெய்யாய் மலையக விழிப்பிற்காய்
மனம் விரும்பி உழைத்தவர்

ஏற்புடைய காரியங்கள்
இயற்றி பெருமை சேர்த்ததுடன்
நாற்பது வருடக் காலமதில்
நல்ல பணிகள் செய்தவர்

கலா ஜோதி முத்தையாவுடன்
கலை மணம் படைத்த பலரும்
உலா வரும் “அகிலம்” வளர
உன்னதப் பணிகள் ஆற்றினார்கள்

பசறை முத்துலிங்கம் பெரி. கந்தசாமி
மதிப்புமிகு தமிழோவியன்
நித்தியானந்தன், தெளிவத்தை ஜோசப்
பசறையூர் வேலாயுதம் பாரதி இராமசாமி

இன்னும் பல படைப்பாளிகள்
இவருடன் ஒன்று சேர்ந்தார்கள்
இன்னல்கள் தீர்க்க வென்று
ஏற்ற கரம் கொடுத்தார்கள்

இலைமறை காயாய் இருக்கும்
இளைஞரை தட்டி எழுப்பி
கலையுடன் கல்வி வளர
கரிசனங் கொண்டார் இவரும்

மலையகப் பள்ளிகளின்
ஆசிரியர் தட்டுப்பாட்டை
களைந்திடும் நோக்கத்தோடு
கருத்தாக செயற்பட்டார்

எதிர்காலம் இனிதேயாக
எங்களது மலை நாட்டில்
அதிகமாய் பட்டதாரிகள்
உருவாக வேண்டுமென்றார்

இன்றைய தலைவர்களும்
ஏற்றமுடன் மலை நாட்டின்
நன்மைக்காய் பாடுபட்டு
நலன் செய்ய வேண்டுமென்றார்

இத்தனை சிறப்புப் பெற்ற
ஏற்றமிகு இராமசாமி ஐயா
முத்தமிழின் வளர்ச்சிக்காக
ஏற்ற பணி ஆற்ற வேண்டும்

தவறாது கூஷஅகிலம்; வளர்ந்து
தண்ணொளி வீச வேண்டும்
இவரது உயர்ந்த சேவை
அகிலம் போல் உயரவேண்டும்.

முத்தான சேவை பலதை
முந்தியே நீங்கள் செய்து
சத்தான மலையகத்தின்
சந்தோஷம் காண வேண்டும்

இங்குள்ள மாணவர்க்கு
ஏற்றமிகு போட்டி மூலம்
மங்காது தன் திறனை
மதிப்புடன் வளர்த்தல் வேண்டும்

எதிர் வரும் காலந் தன்னில்
ஏற்புடனே அகிலம் வாழ்க
கதிரொளி வீசி நாளும்
கவின் பெற நீடு வாழ்க.

குறிஞ்சி கவிமழை
புசல்லாவை இஸ்மாலிஹா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துரை



பவளவிழா நாயகன், எளிமையின் சின்னம், சமூகப்பற்றாளர், மனிதநேயன், அன்பின் இருப்பிடம், மக்கள் தொண்டன், சிரித்த முகத்தோன், வாரி வழங்கும் வள்ளல், எங்கள் சகோதரர் சேவாஜோதி, லக்கிலேண்ட் எஸ். முத்தையா அவர்களின் பிறந்த தினவிழா நடந்து முடிந்து பல மாதங்கள் ஆகிவிட்டன. இவரின் பவளவிழா அன்று ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வெள்ளத்தின் மத்தியில் கௌரவிக்கப்பட்டார். அன்று விழாவில் கலந்து கொண்ட மக்கள் வளமோடும் தீர்க்க ஆயுளோடும் வாழ பிரார்த்தித்தார்கள். நாங்களும் அவரை வாழ்த்தி மகிழ்ந்தோம்.

"அகிலம்" வெள்ளிவிழா சிறப்பு கலை நிகழ்ச்சி, பரிசளிப்பு விழாவின்போது அகவை 75ல் தடம்பதித்திருக்க கலாபூஷணம் கே. வி. இராமசாமி, சேவாஜோதி முத்தையா ஐயா இருவரும் கௌரவிக்கப்படவுள்ளார்கள் என்பது மகிழ்ச்சியளிக்கின்றது. அத்துடன் கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக சமூகத் துறையிலும் எழுத்துத்துறையிலும் தடம் பதித்து வரும் கலாபூஷணம் கே. வி. இராமசாமி ஜே. பி. அகவை 75ல் பவளவிழா நாயகனாக கால் பதிக்கின்றார்.

சமூகத்தின் மேம்பாட்டிற்காக எவரொருவர் பேனாவை கையிலேந்தி போராடுகின்றாரோ, மக்கள் சேவைக்காக தன்னை அர்ப்பணிக்கின்றாரோ அவர் என்றும் மக்கள் மனதில் நீங்காது ஓரிடத்தில் பதிந்திருப்பார். நண்பர் இராமசாமி அவர்களும் மக்கள் மனதில் என்றும் ஒரு உயர்ந்த மனிதராக குடியிருப்பார்.அந்த வகையில் கே. வி. இராமசாமி அவர்கள் பல்லாண்டு காலமாக ஆற்றிவருகின்ற சமூக எழுத்துப்பணிகள் பாராட்டத்தக்கவை.

மேலும் பேச்சுப் போட்டிகள். கவிதை, கட்டுரை, சிறுகதை, நாடகப் பிரதி போட்டிகளை நடாத்தி மாணவர்களை ஊக்கப்படுத்துவதோடு அவர்களை எழுத, வாசிக்கத் தூண்டுவதும் மனங்கொள்ளத்தக்க விடயமாகும். வருடந்தோறும் இவ்வாறான போட்டிகளை நடாத்தி மற்றவர்களுக்கு முன்மாதிரியாக விளங்குகிறார். அத்துடன் அவரை ஆசிரியராகக் கொண்ட "அகிலம்" சஞ்சிகை மூலம் வருடந்தோறும் சிறப்பு மலர்களை ஆக்கித்தருகின்றார். இவரது சமூகப் பணிகளுக்கு கலாபூஷணம், அகில இலங்கை சமாதான நீதவான் இரத்தின தீபம், தேசாபிமானி, சமூகதீபம் போன்ற கௌரவங்களும் இவருக்குக் கிடைத்துள்ளன.

இவ்வாறான ஆளுமைகளை வெளிப்படுத்தி பணிகளை ஆற்றும் தனது அகவை 75ல் தடம் பதித்திருக்கும் இவர் பல்லாண்டுகள் வாழ்ந்து பலவிதமான சமூகப் பணிகளை ஆற்றவும் வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றேன்.

வாழ்க வளமுடன்

என்றும் அன்புடன்

பெ. பழனியப்பன் - ஜே. பி.

உரிமையாளர், ரஞ்சிதா டிரேடர்ஸ், கண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவளவிழா காணும் திரு. கே. வி. இராமசாமி



நான் அறிந்தவரை கண்டி சென்றல் பிரின்டர்ஸ் உரிமையாளராக விளங்கியவர். அக்காலம் முதல் அவர் தன் மனதில் கொண்டுள்ள சமூக ஆர்வத்தை நான் அறிவேன். அக்காலத்தில் மாணவர்களுக்கும் கற்றறிந்தோர்க்கும் நல்ல நூல்களை அச்சிட்டு குறைந்த விலையில் வழங்கி உற்சாகமூட்டுகின்ற பண்பை நான் கண்டேன். அவரின் வாழ்வின் ஒரு திருப்புமுனை அல்லது பிரபல்ய தன்மை அவரை ஆசிரியராக கொண்டு வெளிவந்த "அகிலம்" இலக்கிய சஞ்சிகையுடன் ஆரம்பமாகின்றது. இலங்கையில் வெளிவரும் சஞ்சிகைகளில் குறிப்பிட்டு பேசத்தக்க சஞ்சிகை அது. பல்கலைக்கழக பேராசிரியர்கள் முதல் சாதாரண ஆரம்ப எழுத்தாளர்கள் வரை எல்லா படைப்பாளிகளையும் தனது சஞ்சிகையில் ஒருங்கிணைத்துக் கொண்டு ஒரு பொது மனிதனாக அவர் விளங்கினார். எழுத்தாளர்களின் பற்றாக்குறை, பொருளியல் சிரமங்கள், தனது அன்புக்குரிய துணைவியாரை இழந்த துயரம் தொடர்ந்தும் அவரால் இந்த சஞ்சிகையை வழமைபோல ஒரு மாதாந்த சஞ்சிகையாக வெளியிட முடியவில்லை. அதற்காக அவர் தனது முயற்சியில் பின் நிற்கவும் இல்லை.

இயல்பாக அவரிடமிருக்கும் விடாமுயற்சி, அவர் "அகிலம்" மீது கொண்டிருக்கும் காதல் அச்சஞ்சிகையை ஆண்டுக்கு ஒரு வெளியீடாக காத்திரமாக 100 பக்கங்களுக்கு மேல் வரத்தக்க பக்கங்களை கொண்டு நல்ல படைப்பாளர்களின் படைப்புகளை தெரிவு செய்து வெளியிட்டு வருவதுடன் அந்த இதழை மையமாகக் கொண்டு பல காத்திரமான கலை இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டுவருகிறார். இவரிடம் இருக்கும் இன்னுமொரு சிறப்பம்சம் மாணவர்களையும் எழுத்தாளர்களையும் எழுதத் தூண்டும் முயற்சி. பள்ளி மாணவர்களுக்கிடையில் கவிதை, கட்டுரை, சிறுகதை போட்டிகளை நடாத்தி சிறந்த படைப்புக்களுக்கான பரிசில்களை அவர் வருடம் தோறும் "அகிலம்" வெளியீட்டு விழாவில் வழங்கி படைப்பாளர்களை ஊக்குவிக்கிறார். இது அவர் ஆற்றுகின்ற மிகச்சிறந்த பணி என்று நான் எண்ணுகின்றேன். அத்துடன் நான் அறிந்தவரை எனது அன்புக்குரிய திரு. கே. வி. இராமசாமி அவர்கள் சிறந்த விழா ஏற்பாட்டாளர். மிக நேர்த்தியாக விழாக்களை ஏற்பாடு செய்வார். இதனை நான் பல விழாக்களில் நேரில் கண்டுள்ளேன். அத்துடன் எந்தவிதமான அச்சமுமின்றி, கூச்சமுமின்றி முன்னாயத்தங்கூட இல்லாமல் தமிழில் சரளமாக மேடையில் உரையாற்றும் திறன் கொண்டவர் நீண்டகால சமூகப் பணி இலக்கியப் பணி என்பவற்றை ஆற்றி வந்தமையால், இலங்கையில் கற்றோர் குழாமினர் அனைவருடனும் நெருக்கமான தொடர்பினை கொண்டவர். இன்று மனிதனுக்கு காலம் என்பது போதாது, நேரம் என்பது மிச்சம்பிடிக்க முடியாதது. எனவே, மனிதர்கள் தமது பொது வாழ்வை விட்டுவிட்டு குடும்பம், உறவுகள் என்ற தமது சுய வாழ்வில் மூழ்கிக்கிடக்கின்றபோது திரு. கே. வி. இராமசாமி போன்றவர்கள் இன்றும் தமது சுயநலம் பாராது சொந்த செலவில் பணத்தைச் செலவழித்து, மெனக்கட்டு பலரின் உதவியோடு இலக்கியப் பணி ஆற்றுவது மகத்தானது. தான் வாழ்கின்ற காலத்தில் ஏதாவது ஒன்றைச் செய்ய வேண்டும் என்ற, இளைஞரை போல ஓடியாடி பணியாற்றுகின்ற கே. வி. இராமசாமி அவர்களின் பவளவிழா ஆண்டில் தடம்பதித்திருக்கும் இப்பொழுதில் இன்னும் நீண்ட நெடுந்தூரம் இப்பணியை ஆற்ற வேண்டும் என்று ஆசி கூறிக்கொள்கின்றேன்.

என்றும் விழாதிருக்கும் விழா நாயகன் கே. வி. ஆர்.

இரா. நித்தியானந்தன் B.A. (Hon.) M. Phil.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்து மதங்களும்
நேசிக்கும் அழியா சொத்து .....



"தோன்றாத் துணையாய் துதிப்போர் துயர் களைந்து துலங்கிட வைக்கும் தும்பிக்கை நாதனாம்" கட்டுக்கலை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தின் அருள்பெற்று அபூர்வமாக அமையப்பெற்ற "அகிலம்" எனும் கலை, இலக்கிய பணியாற்றும் இல்லத்தின் சிறப்பு அகிலமே அறிந்த விடயமாகும்.

"யாதும் ஊரே! யாவரும் கேளீர்" என்ற சங்க மொழிக்கமைவாக 25 ஆண்டுகளாக இன்றுவரை வடிவம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற கலை, இலக்கிய, அறிவியலுடன் கால் நூற்றாண்டாக கண்டி மாநகரில் வெளிவந்து கொண்டிருக்கின்ற அகிலம் சஞ்சிகையின் ஆசிரியர் கலாபூஷணம் கே.வி. இராமசாமி அவர்களது சேவையை பாராட்டியே ஆக வேண்டும்.

இவ்வுலகில் அழியாத சொத்தாக திகழ்வதுதான் கல்வி, உலகத்தில் அனைத்து மதங்களும் கல்வியை நேசிப்பதோடு, கல்விக்கு முதலிடம் கொடுத்து கல்வியைச் சிறப்பித்து எடுத்துக்கூறி நிற்பதைக் காணலாம். உலகில் எம்மதமாக இருந்தாலும் அனைவருக்கும் கல்வி என்பது ஒன்றே, ஆகவே, இப்படிப்பட்ட மேன்மைமிக்க கல்வியோடு அறிவுசார்ந்த திட்டங்களை மாணவர்கள் மத்தியில் புகுத்தி அறிவு வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து வரும் அகிலம் சஞ்சிகை ஆசிரியர் திரு. கே.வி இராமசாமியின் வழிகாட்டல் சிறப்பானதாகும்.

இலங்கை வாழ் மாணவர்களின் உள்ளங்களில் பொதிந்து கிடக்கும் திறன்களை ஆக்கங்களாக வெளிக்கொணரவும் பண்பாட்டு அம்சங்களின் களஞ்சியமாக அமையும் இலக்கிய வளர்ச்சியினை புதிய தலைமுறையினருக்கு கையளிக்கும் நோக்குடனும் இக் கலை, இலக்கிய சஞ்சிகையான அகிலம் முன்னுதாரணமாக திகழ்வது பெருமைக்குரிய விடயமாகும்.

மலையக வாழ் மாணவர்களின் உள்ளங்களில் பொதிந்து கிடக்கும் திறமைகளை ஆக்கங்களாக வெளிக்கொண்டு வருவதோடு பண்பாட்டு அம்சங்களின் களஞ்சியமாக அமையும் இலக்கிய வளர்ச்சியினை புதிய தலைமுறையினருக்கு உந்து சக்தியாக ஃஃஃஅகிலம்;; சஞ்சிகை அமையப் பெற்றிருக்கிறது.

தற்போதைய காலகட்டத்தில் மாணவர்களிடையே வாசிப்பு திறன் முற்றாகவே அழிந்து போகும் இக்காலப் பகுதியில், இந் நிலையை மாற்றியமைக்க அவர்களிடம் இலக்கியம் கற்கும் ஆர்வத்தை, போட்டிகள் நடாத்தி தூண்டுவதன் மூலம் மாணவர்களினது மனதை பக்குவப்படுத்த ஆவன செய்ய முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றில் ஏற்ற இறக்கங்களை மாணவர்களின் உள்ளத்தில் பதிவதோடு, இலக்கியங்களின் பண்புகளை ஆராய்ந்து காணும்போது இலக்கிய நடப்பு இயல்பாகவே அவர்களுக்கு ஏற்பட்டுவிடும். இதன் மூலம் சிந்தனை, கற்பனை, ஆர்வம், செயற்றிறன் போன்றவை விரிவடைவதால் பல்துறைகளிலும தங்களது திறமைகளைக் காட்ட வழி ஏற்படுகிறது.

மலையக சமுதாயத்தினுடைய அறிவு வளர்ச்சி பெறுவதற்கும், அறிவுக் கண்களைத் திறப்பதற்கும், மாணவ சமுதாயத்திற்கு போட்டிப் பரீட்சைகள் நடாத்தி சிந்தனை வளர்ச்சியை பெருக்கி எவ்விடத்திலும், எவர் முன்னிலையிலும், முகம் கொடுக்கக்கூடிய ஆற்றலை ஏற்படுத்தி கொடுக்கிறது. நல்ல ஒழுக்கத்தை உருவாக்குகிறது. விரிந்த அறிவு வளர்ச்சியை தருகிறது. தன்னம்பிக்கையை கொடுக்கிறது. தனது சொந்தக் காலில் நிற்க உத்வேகத்தை கொடுக்கிறது. இவைகள் தான் ஒரு மாணவன் கற்றுக் கொள்ளும் உண்மையான கல்விக்கு அர்த்தமாகும்.

இந்த வகையில் சுமார் 25 வருட காலமாக பல பணிகளையும், கல்விசார் கலை, இலக்கிய உள்ளங்களை இனங்காட்டி வருவதோடு, கலாபூஷணம் திரு. கே.வி இராமசாமி அவர்களது தலைமையில் தனது அகிலம் சஞ்சிகையோடு கலை இலக்கியப் பணியை சிறப்பாக நடாத்தி வருவதுடன் 25 ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு அகிலமெங்கும் சுடர்விட்டு பிரகாசிக்கும் அகிலம் சஞ்சிகையினது வெள்ளி விழாவும், பவளவிழாவை காண இருக்கும் சேவாஜோதி லக்கிலேண்ட் எஸ். முத்தையா அவர்களதும், கலாபூஷணம் திரு. கே.வி. இராமசாமியினது பவளவிழாவும் மிக சிறப்பாகவும் மிக விமர்சையாகவும் நடைபெற எல்லாம் வல்ல அம்பிகையின் துணைகொண்டு எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

- கலாபூஷணம் மாத்தளை ராஜ்சிவா சிவலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளி விழாக்காணும் "வைரம்"

"அகிலம்" இராமசாமி ஐயாவை முன்னொருபோதும் நேரில் நானறியேன். கடந்த 2007 இல் அகிலம் கலை இலக்கிய அறிவியல் சஞ்சிகை நடாத்திய இலக்கியப் பரிசுப் போட்டிகள் தொடர்பில் பத்திரிகைகளில் விளம்பரம் வந்திருந்தது. வீரகேசரியின் அந்த விளம்பரத்தின் அடிப்படையில் போட்டியில் கலந்துகொண்டேன். அதில் பரிசில்களும் ஒரு பதக்கமும் கிடைத்திருப்பதாக பெறுபேறு வெளியான போது அளவற்ற மகிழ்ச்சி எனக்குள்.

கவிதை, சிறுகதை, கட்டுரை, பாடல் ஆக்கம் உட்பட நாடகப் பிரதியாக்கப் போட்டிகளிலும் பங்குபற்றி இருந்தேன். ஏற்கனவே சர்வதேச ரீதியிலான இலக்கியப் போட்டிகளில் பரிசில்களைப் பெற்ற எனக்கு 2007 இல் முதன் முதலில் "பதக்கம்" அகிலம் மூலம் கிடைக்கப்பெற்றேன். ஆயினும் பட்ட மேற்படிப்புக்காக இந்தியா செல்லும் ஆயத்தங்களில் இருந்தமையினால் பரிசளிப்பு நிகழ்வில் நேரில் கலந்து கொள்ளமுடியவில்லை. இருந்தும் அவை உரியமுறையில் என்னிடம் சேர்ப்பிக்கப்பட்டிருந்தன. அன்றைய அறிமுகம் தான் தற்போது 2018 வரை நட்பைத் தொடர வைத்துள்ளது என்பதிலும் ஒருவகை மகிழ்ச்சிதான். அக்கறையான நல விசாரிப்புக்கள், நம்பிக்கையான வழிகாட்டல்கள், கனம் நிறைந்த பகிர்வுகள் என்று நினைப்பின் வழி அவை தொடர்கின்றன. இவற்றிற்கும் அப்பால் எப்போதும் "அகிலம்" சஞ்சிகை பற்றிய ஆவலும் கலை இலக்கியச் செயற்பாட்டின் மீதான அக்கறையும் ஐயாவுக்கு அதிகம். ஒவ்வொரு இலக்கியப் போட்டிகளிலும் பாடசாலை மாணவர்களும் சரி, திறந்த போட்டியாளர்களும் சரி பங்குகொள்ள வேண்டும் என்பதில் தீவிரமாக உழைத்துவரும் 75 வயதில் தடம்பதித்து பவளவிழாக்காணும் "வைர" இளைஞன் இவர்.

எழில் கொஞ்சும் மலையகத் தலைநகரம் கண்டி மாநகரில் அனைவரினதும் ஒத்துழைப்புடன் சிறப்பாக வெளிவந்து கொண்டிருக்கும் "அகிலம்" அறிவியல் சஞ்சிகை தனது 25ஆவது வெள்ளி ஆண்டு விழாவை கொண்டாடுவதையிட்டு பெருமிதம் கொள்ள வேண்டும். ஏனெனில், பத்திரிகைப் பணி என்பது அவ்வளவு இலகுவான பணியல்ல. நெருடல்களும் நெருக்கடிகளும் அழுத்தங்களும் ஏன் அவமதிப்புக்களும் நிறைந்தது. இவற்றிற்கும் மேலாக ஏமாற்றத்தை தரக்கூடியதும் பத்திரிகைத்துறை என்பதும் என் அனுபவத்தில் மிகையல்ல. தற்பொழுது தொழில்நுட்பம் அதிகரித்து வருகின்றது. பத்திரிகை துறை குறிப்பாக பதிப்புத்துறை வீழ்ச்சி காணும் நிலை ஏற்படும் எனப் பலர் கூறும் இந்த சமுதாயத்தில் அச்சுக்கலை "சாகாவரம்" பெற்றது என்றே நான் கூறுவேன். இலத்திரனியல் ஊடகங்கள் நாளுக்கு நாள் மாற்றம் அடையும் போது எமது வாழ்வியலின் மாற்றங்களும் பதிவுகளுடனான மாற்றங்களைத் தாங்கி கடந்து செல்லும். ஆனால் அச்சுக்கலை அந்த காலப் பிரதிபலிப்புகளை அடுத்தடுத்த சந்ததிகளுக்கான ஆவணப்படுத்தலை மேற்கொண்டிருக்கும். அந்த வகையில் அச்சுக்கலை இன ஒடுக்குமுறை சமூகத்தின் மத்தியில் அளவற்ற தேவைப்பாடு கொண்டது. இதன் அடிப்படையில் "அகிலம்" நீண்ட காலம் எம் தமிழ்த் தேசிய அடையாளங்களுடன் என்றும் பயணிக்க வேண்டும் என வாழ்த்துவதில் பெருமை அடைகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன் முதலாக 2004 இல் மாணவ சாகித்திய விழாவில் விருது பெறுவதற்காக நண்பி பிரேமினியுடன் கண்டி பேராதனை பல்கலைக்கழகம் நோக்கிப் பயணம். அந்த நேரம் நண்பி சுலோஜனா அங்கு மாணவியாக இருந்தமையினால் ஒரு நாள் அவருடன் விடுதியில் தங்க முடிந்தது. ஆனால் கண்டி மாநகரை சுற்றிப் பார்க்கவே முடியவில்லை. இரண்டாவது பயணம் 2014 ல் கண்டி பெரஹராவை கற்றுக் கொள்ளும் களப்பணி அது. ஆனால் உறவுகள் உதவிகள் என்று யாருமே இல்லாத சூழலில் கண்டியில் எப்படி அந்த விழாவை கற்கமுடியும், பார்க்க முடியும் என்பது தீராத தேடல். ஓரிருநாட்களுக்கு தங்குமிடம் தேவை. துறை சார்ந்தவர்களுடன் சந்திப்பும் கலந்துரையாடலும் தேவை. இவற்றை பெற்றுக் கொள்ளும் தொடர்பாடல் ஊடகமாக இராமசாமி ஐயா கிடைக்கப்பெற்றார். தங்குமிடம், உணவு, போக்குவரத்து, வழிகாட்டல் என்று எல்லாமே ஐயாவே பொறுப்பேற்றுக் கொண்டார். கண்டிப் பெரஹரா தொடர்பான கற்றல், தேடல்கள், களப்பணி முடித்து பேராதனைப் பூங்கா, பல்கலைக்கழகம் என தொடர்ந்தது இரசனைச் சுற்று.

அடுத்த நாள் அதிகாலையில் கண்டி நகரில் இருந்து நுவரெலியா நோக்கி பயணமானோம். அடைமழை, கருமேகம், வளைவுப் பாதைகள் பயமூட்டிக் கொண்டிருந்தன. மினிபஸ் விசேட சேவையில் முன் இருக்கையில் இருந்தமையினால் கண்ணாடியூடாகவே இயற்கையை குறிப்பிட்ட அளவுக்கு இரசிக்க முடிந்தது. வர்ணிக்க முடியாத அழகும் அற்புதமும் நிறைந்த நுவரெலியாவை இன்னும் மீட்டிப் பார்த்து முடியவில்லை. அணு அணுவாய் இரசிக்கக்கூடிய புதிய உலகம் அது. இத்தகையதொரு களப்பயணத்தை அனுபவிக்க முடிந்த நினைவுகளும் அளப்பரியது.

தானுண்டு தன் வேலையுண்டு என்ற மனநிலைச் செயற்பாட்டாளர்களை விடுத்து தன் பிறப்பிற்கு அர்த்தம் சொல்லிப்போகும் ஒரு மனிதத்துவனாகவே கலாபூஷணம் இராமசாமியை நாம் பார்க்க முடியும். கலை இலக்கிய செயற்பாட்டினூடாக தன் வாழ் நாள் முழுக்க சமூகத்திற்காக தன் 75 வயதுவரை அர்ப்பணித்துள்ள “வைரம்” அவர். அவரது சுறுசுறுப்பும் வேகம் விவேகமும் நேர்மையும் திட்டமிடலும் நேர முகாமைத்துவமும் என பல்வேறு அடிப்படைப் பண்புகளும் இளம் சமுதாயம் ஐயாவிடம் இருந்து கற்றுக்கொள்ளக் கூடியவை.

மலையகத்திலும் பிற பிரதேசங்களிலும் இலைமறை காயாக இருக்கும் எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்களை இனங்கண்டு ஊக்கமளித்து பாராட்டும் அரிய பணியை “அகிலம்” ஊடாக செயற்படுத்தி வரும் இராமசாமி மாணவர்களுக்கான கவிதை, கட்டுரை, சிறுகதை, பேச்சு, நாடகப் போட்டி மூலம் எழுத்தாற்றலை ஊக்குவித்து பாராட்டி பரிசளித்து வருகின்றார். பல உயர் கல்விமான்களுடன் இலக்கிய தொடர்புகளை பேணிவரும் இவர் பொருளாதார நெருக்கடிகளையும் மறந்து குறிப்பாக மலையக மக்களுக்கு அவர்களின் வாழ்வியலில் தமிழ்ப் பணி புரிந்து வரும் சாதனையாளன்.

நீண்ட காலம் நோய்நொடி இன்றி இச் சமூகத்திற்கு கல்வி, கலை, இலக்கிய சமூகப் பணிகளை தொடர்ந்தும் வழங்கும் “சீவனாக” செயற்பட இறையாசிகள் என்றும் கிடைக்க வேண்டும்.

என்றும் யாழவளின் வாழ்த்துக்கள்.!

யாழ். தர்மினி பத்மநாதன் - M.A./ M.phil.
பத்திரிகையாசிரியர்
அறங்கச் செயற்பாட்டாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவளவிழா ஆண்டில் தடம் பதிக்கும் பண்பாளர் அன்பின் சிகரம்

"அகிலம்" கே. வி. இராமசாமி

ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு மனித இனம் புலம்பெயர்வது உலகின் வரலாறாகும். "திரைகடல் ஓடி திரவியம் தேடு" என்னும் பழமொழி தமிழர் சமூகத்தில் நிலைத்திருப்பதற்கு சான்றுகள் நிறைந்த அர்த்தம் உள்ளது. "இமயம் முதல் குமரி வரை" என்ற எடுகோளுக்கு அப்பாலும் பாரிய நாவாய்களைக் கட்டி ஆள்புலப் படர்ச்சியில் ஈடுபட்ட தமிழ் சமூகம் ஈழத்து "ஜனநாதமங்கள"த்தை மட்டுமன்றி கிழக்கு ஜாவா துமித்ரா வரை தம் தடத்தினைப் பதித்து, மாணிக்கவாசகப் பெருமானின் திருவாசகத்தை அரச மணிமகுடம் கூட்டும் விழாவில் இன்றுவரை ஓதும் பெருமையினை பெற்றிருப்பதை வரலாற்றில் அறிகின்றோம்.

19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி தொடக்கம் தமிழகத்தில் தமிழர் சமூகம் பஞ்சப்பராரிகளாக உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் கூலித்தமிழர்களாக சிதறி ஓடியமைக்கு அரசியல், அந்நிய படையெடுப்புகள் மட்டுமன்றி இன்றுவரை இச்சமூகத்தில் புரையோடிப்போயுள்ள அர்த்தமற்ற விஞ்ஞானபூர்வமற்ற பிற்போக்குத்தனமான நம்பிக்கைகளும் சடங்காசாரங்களும் காரணங்கள் என்பதை மறுக்கமுடியாது.

இலங்கையின் கடைசி மன்னர் இராட்சியமான கண்டி 1815 இல் ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்ட பின்னர் முன்னராக வந்த போத்துக்கேயர், ஒல்லாந்தர் காலப்பகுதியினை விடவும் ஆங்கிலேயரால் மலைநாட்டில் ஆரம்பிக்கப்பட்ட பெருந்தோட்டங்களில் உழைப்பதற்காக பல இலட்சக்கணக்கான தமிழகம் உட்பட்ட கேரளம், ஆந்திரா, கர்நாடகா ஆகிய பகுதிகளையும் சேர்ந்த விவசாயிகள் மற்றும் உழைப்பாளிகள் ஓரளவு கொத்தடிமை நிலையிலும் அதேவேளை ஒருசிலர் பெருமையோடு வாழக்கூடிய வகையிலும் இலங்கைக்கு வந்துசேர்ந்துள்ளனர்.

ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு மேலாக பல்வேறு கொடுமைகளுக்கும் அடக்கு முறைகளுக்கும் அழுத்தங்களுக்கும் உட்பட்டு போராடி இங்கு ஏனென்று கேட்பதற்கு நாங்கள் யார்? உழைப்பதற்கும் இறப்பதற்குமே பிறந்தோம் என்ற நிலையில் வாழ்ந்த மலையகச் சமூகம் மாற்றமும் கண்டது.

1956 இல் ஏற்பட்ட அரசியல் மாற்றம் இச் சமூகத்தின் நிலையில் பல சாதக, பாதகங்களை தவிர்க்கமுடியாமல் பல அம்சங்களை உருட்டியது. இந்நிலை மாற்றத்தினால் கல்விபெற்ற, ஓர் ஆத்திரப் பரம்பரையின் ஓர் ஜீவவித்தும் கலைக்கொழுந்தாகவும் தோற்றம் பெற்றவர்தான் பவளவிழா காணும் பண்பாளர் அன்பின் சிகரம் அண்ணன் கே. வி. இராமசாமி ஆவார். அகில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை சமாதான நீதவான். பன்முக ஆற்றல் கொண்ட இவர் ஓர் பத்திரிகையாளர் மட்டுமல்ல மலையகத்தின் உயர்வுக்காக பல தலங்களில் நின்று குரல்கொடுப்பதோடு எதிர்கால மலையகம் கல்வி வளர்ச்சியில் மேலோங்கி சிறக்கவேண்டும் என்பதற்காக அயராது உழைப்பவர்.

ஒரு காலத்தில் முகவரியற்ற சமூகமாக விளங்கிய இலங்கைவாழ் இந்திய வம்சாவழி தமிழரின் மேம்பாட்டுக்காக அரசியல், தொழிற்சங்கம், கல்வி, கலாசார, ஆன்மீகம் உட்பட்ட பல்வேறு பிரிவுகளில் அயராது உழைத்த பலர் உள்ளனர். இவர்களைப் பற்றிய சரியான விபரங்களையும் தகவல்களையும் இன்றுவரை விபரமாக தொகுக்கப்படாதது துரதிஷ்டவசமானது. இம்முயற்சியில் பலர் ஆத்மார்த்தபூர்வமாக ஈடுபட்டு உழைத்து பல உண்மைகளை கண்டறிந்தபோதும் அவ் ஆய்வாளர்களுக்கு காத்திரமான உதவிகள் கிட்டாதபடியால் பின்னடைவு ஏற்பட்டது என்பதையும் மறுப்பதற்கில்லை.

ஒரு சமூகத்தின் உயிர்நாடி அச்சமூகத்தில் தோன்றிய சமூகப்பற்றுள்ள கல்விமான்களும், பிரக்ஞ்ஞை மிக்க பண்பாட்டாளர்களுமே ஆவர். இந்த வகையில் மலையக எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், சிந்தனையாளர்கள் முக்கியத்துவம் பெறுகின்றனர். ஆபிரகாம் ஜோசப் முதல் “அகிலம்” இராமசாமி அவர்கள் வரை நாம் பெருமைகொள்ள முடியும். தேசபக்தன் நடேசய்யர் தொட்டு “அகிலம்” இராமசாமி உட்பட நம்மவர்களின் பணி வரலாற்றில் நிச்சயம் தடம்பதிக்கும்.

பதுளை எலதலுவையில் பிறந்து மலையகத்தின் தலைநகரான கண்டியை வாசஸ்தலமாகக்கொண்டு கொழும்பு, மலையகம் உட்பட தனது இலக்கிய வேர்களையும் விழுதுகளையும் படைத்துள்ள “அகிலம்” இராமசாமியின் பவளவிழாவோடு ஊவாமண் மலையக உரிமைபோராட்டங்களுக்கும் மலையக இலக்கிய வளர்ச்சிக்கும் உறுதுணையாக நின்ற சில அம்சங்களையும் சமூகப்பற்றுள்ள எழுத்தாளர்களையும் இணைத்துப்பார்ப்பது காத்திரமானதாகும்.

பதுளை கோகிலம் சுப்பையாவின் “தூரத்துப் பச்சை“ நாவல் மலையக இலக்கிய வரலாற்றில் ஒரு மைல் கல் ஆகும். சாகாவரம் பெற்ற “ஒரு கூடைக்கொழுந்து” முதலான சிறு கதைகளைப் படைத்த என். எஸ். எம். இராமையா மலையக இலக்கியத்தில் அழியாச் சுடராவார். “நாம் இருக்கும் நாடே” சிறு கதை தொகுதி முதல் இன்றளவும் சிறுகதை, நாவல் என பல படைப்புகளை படைத்து வழிகாட்டியாகத் திகழும் தெளிவத்தை எஸ். ஜோசப் மலையக இலக்கியத்தில் ஒரு சிகரமாகும். தெளிவத்தை ஜோசப்பின் கதைகளை தேடிப்பிடித்து அதனை சிறுகதை தொகுதியாக்கி நம் அனைவரும் பெருமைப்படச் செய்தவர் பதுளை மண்ணின் மைந்தன் மு. நித்தியானந்தன் ஆவார்.

கலைஒளி முத்தையாப்பிள்ளையின் வாரிசான இவரின் சமூகப்பற்றுக்கு நிகரேது? “துங்கிந்தை சாரல்” முதல் “கூலித்தமிழ்” வரை தொடரும் இவரது ஆய்வுகள் மலையக சமூகத்தின் ஈடிணையற்ற உயர்வை படம்பிடிப்பவையாகும். பதுளையின் இன்னுமொரு முத்து தமிழோவியன் ஆவார். இவரது கவிதைகளை நூலுருவாக்கி சாகித்திய மண்டல பரிசுபெற அடித்தளம் இட்டவர் அன்பர் விக்கிரமசிங்கவையும் இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூருவது சாலப்பொருத்தமானது. மலையக உரிமை போராட்டத்தில் தம் இன்னுயிரை நீத்த பதுளை கீனாக்களை இராமசாமி அழகர்சாமி ஆகியோரின் தியாகத்திற்கு நிகரேது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக பாரம்பரிய கலைகளின் ஊற்றாகவும் அதன் நிலைக்களனாகவும் திகழ்வது பதுளை மாவட்டமாகும். நிலச்சரிவு காலைப்பொழுதில் காவுகொண்ட தோட்டம் தான் பொன்னர் சங்கர் கூத்து பக்தி சிரத்தையுடன் வெகுவிமர்சையாக நடக்கும் மீரியபத்தை தோட்டமாகும். இக்கூத்தைப் பார்ப்பதற்காக நானும், திரு. அந்தனி ஜீவா அவர்களும் கவிஞர் சு. முரளிதரன் அவர்களும் இருபது வருடங்களுக்கு முன்னர் அங்கு சென்று கொட்டும் மழையிலும், பனியிலும் விடியவிடிய பார்த்து இரசித்தோம். பதுளை இராமசாமியின் தியாகம் நிறைந்த கல்விப்பணி காலத்தால் மறக்கமுடியாதது. மலையக தோட்டப் பாடசாலைகள் சுவீகரித்து அரசாங்க பாடசாலைகளாக மிளிரச் செய்த பெருமைக்கு அடித்தளமிட்ட தோழன் எஸ் நடேசன், அமரர் இரா. சிவலிங்கம் ஆகியோரின் செயற்பாட்டினை இளையதலைமுறையினர் குறிப்பாக மலையக ஆசிரியர்கள் அறிந்திருக்க வேண்டியதொன்று. இந்த மலையக செயற்பாட்டாளர்களின் பங்களிப்புக்கு “அகிலம்” இராமசாமியும் துணைநின்றுள்ளார்.

பதுளையில் மலையக எழுத்தாளர் மன்றத்தை தெளிவத்தை ஜோசப், செய்தி ஆசிரியர் என். எஸ். எம். இராமையா சாரல்நாடன், எஸ். எம். கார்மேகம் ஆகியோர் தோற்றுவித்து அதன் மகாநாட்டுக்கு டெல்லி பாராளுமன்ற உறுப்பினர்களான இரா. பாலதண்டாயுதம் முதலானவர்களை அழைத்து மலையக மக்களின் அரசியல், சமூகப்பிரச்சினைகளை அறியச் செய்ததின் பின்னணியில் “அகிலம்” இராமசாமியின் பங்கு கணிசமானது.

ஊவா மலையகத்தின் கல்விமான்களான பொருளியல் பேராசிரியர் மு. சின்னத்தம்பி, கல்வியியல் அறிஞர் சோ. சந்திரசேகரன், முதுநிலை விரிவுரையாளர் எஸ். விஜயச்சந்திரன், பதுளையின் நவீன சிருஷ்டி இலக்கியத்தின் புதிய குரல் சேனாதிராஜா, “வாழவா” அன்புச் செல்வன் நாட்டுப்புறவியல் ஆய்வாளர் பசறையூர் கே. வேலாயுதம், வேதாந்தமூர்த்தி உட்பட பல கல்விமான்களும், அறிஞர்களும் “அகிலம்” அறிவியல் சஞ்சிகையில் ஆகர்ஸ்சிக்கப்பட்டு இலக்கிய வட்டமாக துணை நின்று செயல்புரிபவர்கள். இதனோடு “அகிலம்” சஞ்சிகையின் வளர்ச்சிக்கு அருந்துணையாக நின்று கலாபூஷணம் இராமசாமியின் கரங்களை பலப்படுத்தும் சமூகஜோதி லக்கிலேண்ட் முத்தையா அவர்களையும் அமரர் ரட்ணசபாபதி அவர்களையும் மறப்பதற்கில்லை. இவர்களெல்லாம் பவளவிழா ஆண்டில் தடம்பதிக்கும் “அகிலம்” ஆசிரியர் கலாபூஷணம் கே. வி. இராமசாமி அவர்களுக்கு பெருந்துணையாக நின்று செயல்புரிபவர்கள். இராஜாங்க அமைச்சராகப் பணியாற்றிய பி. பி. தேவராஜ் அவர்கள் மலையகத்தில் பதுளை மாவட்டத்திற்கும் நுவரெலியா, ஹற்றன், கண்டி, மாத்தளை மாவட்டங்களுக்கும் ஆற்றிய கலை, இலக்கிய, சமூகப் பணிகள் மகத்தானவை. அவர் காலத்தில் பண்டாரவளை சிவசுப்பிரமணியர் ஆலயத்தில் நடாத்திய நாட்டுப்புறவியல் கருத்தரங்குகள், விழாக்கள் வரலாற்றில் தடம் பதிப்பவை. இவருக்கு துணையாக விளங்கிய பணிப்பாளர்கள் க. சண்முகலிங்கம், ஜனாப் நஹியா ஆகியோரையும் மறப்பதற்கில்லை.

ஒரு சமூகத்தின் வரலாற்றை அதன் துன்பியலை, அச்சமூகத்தின் மாற்றத்தை, எழுச்சியை, வீழ்ச்சியை உலகறியச் செய்வதில் பத்திரிகைகள், சஞ்சிகைகள், இலக்கியம் என்பனவற்றை விட வேறு சாதனம் இருக்க முடியாது. இதில் பத்திரிகைகள் சஞ்சிகைகளின் பங்கு மகத்தானது. இவைகள் காலம் காட்டும் கண்ணாடிகளாக மட்டுமன்றி நிர்தாட்சண்யமான காலத்தையும் கடந்து வரலாற்றை சமர்ப்பிக்கினற்ன. ஓர் இலட்சிய பத்திரிகையை ஆரம்பித்து, அதனை நடத்திச் செல்வதென்பது இலேசான காரியமல்ல. இந்த பகீரதப் பிரயத்தனத்தில் வென்றவர்களை விட தோற்றவர்களே அதிகம் எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அகிலம்" ஓர் இலட்சியப் பத்திரிகையாகும். அதன் இலக்கு மலையக சமூகத்தின் மேம்பாடு. தான் எடுத்துக்கொண்ட இலக்கை அடைவதற்கு இராமசாமி அவர்கள் கடின உழைப்பை மேற்கொண்டு வருகின்றார். இவரின் நெஞ்சுரமும் நேர்மைத்திறனும் "அகிலம்" பல படிகளைக் கடந்து முன்னேறுவதற்கு காரணமாக விளங்குகின்றது. பெரியோரை மட்டுமன்றி சிறியோரையும் மதித்து பாராட்டும் பண்புள்ளம் கொண்டவர் இராமசாமி. சிரித்தமுகமும் செஞ்சொல் பேசும் நாவன்மையும் இவரது வெற்றியின் இரகசியம் என்று கூறலாமா? இவரது வெற்றிக்குப் பின்னால் இவரது அன்பு மனைவி விஜயலட்சுமி, மக்கட் செல்வங்களான விஜயதர்ஷினி, சுதர்ஷன், பிரியதர்ஷன் ஆகியோர் கரம் கோர்த்து நிற்பது மகிழ்வினைத் தருகின்றது.

மலையக சமூகத்தின் மேம்பாட்டுக்காக பேச்சு, எழுத்து என்பதோடு மட்டுமல்ல, தனிப்பட்டமுறையிலும் தன்னைச் சுற்றியுள்ள சொந்தங்களுக்கு அப்பாலும் தன்னோடு தொடர்புகொண்டுள்ள மற்றவர்களுக்கும் துணைநின்று எதுவித பிரதியுபகாரத்தையும் எதிர்பாராது உதவுவது இவரது உயர்ந்த பண்பாகும். இவரிடம் கல்வி முதல் பல உதவிகளை நாடி உயர்வு பெற்றவர்கள் பின்னர் அலட்சியப்படுத்தி நடந்தாலும் இதனை பொருட்படுத்தாமல் மேலும் பலரின் தேவைகளை உணர்ந்து மனம் சோர்வடையாமல் உதவிகளைச் செய்து கொண்டே இருக்கிறார்.

மலையக வரலாற்றில் பதுளை மாவட்டத்திற்கு தனித்துவமான ஓர் இடமுண்டு. தலைமன்னாரில் இறங்கி கணவாய்க்கூடாக பல தூரம் நடந்து வந்தவர்கள் மாத்தளையில் பல்வேறு பகுதிகளுக்கும் பிரிந்தபோது நடைப்பயணத்தில் சோர்ந்து மடிந்தவர்கள் போக உள்ள உறுதியுடனும் உடற்தெம்புடனும் "தொத்தப் பயல்கள்" என்ற பெயரை வாங்காது மீண்டும் தொலைதூர பதுளைக்கு தொடர்ந்து வீராப்புடன் சென்ற பெருமைக்குரியவர்களின் அந்தக் காலத் தெம்மாங்கு மங்களம் இதுவாகும்.

"சிந்தாக்கட்டி மலையில் சிலுசிலுன்னு காத்தடிக்குது
சின்னலெவக்கந்த பால்வெட்டு சில்லறையா கேட்குது
சின்னதொர செகப்பாயி கையை புடிச்சிட்டான் படுபாவி
சீச்சீ வேணாம் இந்தபொழப்பு சீர்கெட்டுப் போச்சி
வாடிப்புள்ள வள்ளியம்மா நம்ம
வதுள பக்கம் போய் பிழைப்போம்."

வதுள என்பது பதுளையாகும். அந்த காலத்திலேயே பதுளைமீது நம்மவர்கள் கொண்ட நம்பிக்கையினை இது காட்டுகின்றது.

மலையகப் போராட்டங்களில் பதுளையே முதல் பாசறை ஆகும். கீனாக்கொல்லையை மறந்து மலையக போராட்ட வரலாற்றினை எழுதமுடியுமா? அந்த காலத்தில் இலங்கை திராவிட இயக்கத்தினர் நடத்திய போராட்டங்களில் பதுளையே உச்சம் கொண்டிருந்தது. "எலதலுவை", "பிட்டரத்துமலை", "பண்டாரவளை" தீண்டாமை ஒழிப்பு மகாநாடு என்பனவற்றுடன் பண்டாரவளையில் நடந்த இலங்கை திராவிட இயக்கத்தின் மகாநாட்டினை சிங்கள இன வெறியர் தாக்கியது தோழர் இளஞ்செழியன் உட்பட திராவிடக் கழகங்கள் தாக்கப்பட்டமை யெல்லாம் ஆவணப்படுத்துதல் அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப் பற்றும் எழுச்சியும் கொண்ட இடம் "எலதலுவை". அந்தக் காலத்தில் பொங்கு தமிழுக்கு பங்கம் என்றால் சங்காரம் நிஜம் என்று தமிழ் உணர்வுடன் இன வெறியர்களை விரட்டியடித்து வாகை சூடியவர்கள் எலதலுவை இளைஞர்கள். இத்தகைய எலதலுவையில் தான் கரு. வேலு அகிலாண்டம்மாள் தம்பதியினரின் புதல்வனாக 1941 இல் இராமசாமி பிறந்தார். இராம நாமம் நமக்கு திவ்வியமானது. அன்பர் இராமசாமியும் நமக்கு திவ்வியமானவர். இடுக்கண் களைவதாம் நட்பு என்னும் வாக்கிற்கு அமைய வாழ்பவர் மனிதநேயர் கண்டி "அகிலம்" நுண்கலை கலையகத்தை அமைத்து நம் எதிர்கால சந்ததியினரின் உயர்விற்காக உழைப்பவர்.

பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் பெயர் சூட்டுபவர்கள் அப் பெயர்களுக்கு பல காரணங்களை கூறுவார்கள். இராமசாமி அவர்கள் தன் தாயின் பெயரை தான் நடத்தும் சஞ்சிகைக்கும் "அகிலம்" என்று சூட்டி மகிழ்ந்து வருகின்றார். இந்த பாக்கியம் வேறெவருக்கு கிடைக்கும்? 1950களில் இலங்கையில் மலையகத்தில் உச்சம் கொண்டிருந்த திராவிட இயக்கத்தின் பகுத்தறிவு பாசறையில் புடம்போடப்பட்ட இராமசாமி அவர்கள் மலையக மாணவர்களின் நலனில் அக்கறை கொண்டு பலபோட்டிகளை நடாத்தி ஊக்குவித்து வருகின்றார்.

இவ்வாறு காலத்தால் மறையாத கலை இலக்கிய, பத்திரிகை, சஞ்சிகை, கல்வி, சமூக சேவையென தனது பணிகளை தளராது இன்முகத்துடன் ஆற்றிவரும் அன்பின் சிகரம் பவளவிழா ஆண்டில் தடம்பதித்திருக்கும் பண்பாளர் "அகிலம்" கே, வி. இராமசாமி அவர்கள் நல்ல ஆரோக்கியத்துடன் வாழ்ந்து மென்மேலும் பல சேவைகளை ஆற்றி எமக்கும் உறுதுணையாக விளங்க எல்லாம் வல்ல மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மனை நானும் எனது மனைவி குடும்பத்தாரும் பிரார்த்திக்கின்றோம்.

இலங்கையின் சஞ்சிகை வரலாற்றில் "அகிலம்" என்றென்றும் "பேசும்" பொருளாகத் திகழும் என்பதற்கு ஐயமில்லை.

- கலாபூஷணம் மாத்தளை பெ. வடிவேலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்
கணபதி துணை

தேவாரம்

நறைகொண்ட மலர்தூவி
விரையளிப்ப நாடேறும்
முறைகொண்டு நின்னடியார்
முட்டாமே பணிசெய்யச்
சிறைகொண்ட வண்டறையுஞ்
செங்காடங் குடியதனுள்
கறைகொண்ட கண்டத்தான்
கணபதிச் சரத்தானே!

- திருஞானசம்பந்தர் சுவாமிகள் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

கண்டி கட்டுக்கலை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய வரலாறு

தகவல்:

கலாபூஷணம் கரு. வேலு இராமசாமி

ஆசிரியர்- அகிலம் சஞ்சிகை

அகில இலங்கை சமாதான நீதவான்

கண்டி கலை, இலக்கிய ரசிகர் மன்றத் தலைவர்.

சமர்ப்பணம்

பூங்கமலும் மாவலி மலை சூழ் கண்டி மாநகரில்
பாங்குடனே வீற்றிருக்கும் ஸ்ரீ செல்வ விநாயகனை
முன்னோனை, ஐங்கரனை, முத்துவிநாயகனை
எந்நாளும் வணங்கிப் போற்றிடுவோம்!

இவ்வாலயம் வரலாற்று சான்றுகள் மிக்க பழைமை வாய்ந்ததும் தென்னிந்திய நாட்டுக்கோட்டைச் செட்டியார்களால் கண்டியில் கட்டப்பட்ட இந்துக்களின் ஒரே ஒரு வணக்கஸ்தலமுமாகும்.

ஆலயத்தின் ஆரம்பமும் அதன் வளர்ச்சியும்:

அழகுத் தவம் பெற்று அமைந்த எழில் கொஞ்சும் கண்டி மாநகருக்கு பல்வேறு வரலாற்று சிறப்புக்கள் இருக்கின்றன. இலங்கையில் தனிப்பெரும் இராஜதானியாக விளங்கியது கண்டி மாநகரம். அந்நியருக்கு அடிபணியாத ஸ்ரீ விக்கிரமராஜசிங்கன் இறுதி வரை போராடிய வீரத்தின் விளைநிலம் தான் கண்டி. அந்நியரான ஆங்கிலேயருக்குச் சுவர்க்க புரியாக காட்சியளித்த வளநகர் கண்டி மாநகரம். முதன் முதலாக கோப்பிப் பயிர்ச் செய்கையும் பின்னர் தேயிலை, இறப்பர் பயிர்ச் செய்கையும் ஆரம்பிக்கப்பட்டதும் இந்த கண்டி சீமையில் தான், இலங்கையின் வற்றாத ஜீவ நதியாம் மகாவலி கங்கை பெருக்கெடுத்து ஓடுவதும் கண்டி மாநகரைச் சுற்றித்தான். புத்த பகவானின் தந்ததாதுவை புனித சின்னமாகக் கொண்டு கோயில் எழுப்பியதும் கண்டியில் தான். இலங்கையிலேயே பெரிய தாவர நந்தவனம் அமைந்திருப்பதும் கண்டியில் தான். சேர நாட்டில் சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலையெடுத்துச் சிறப்பித்தபோது அதில் கலந்துகொண்ட கஜபாகு மன்னன் கண்ணகிக்கு கோயில் எழுப்பியதும் விழா எடுத்ததும் கண்டி மாநகரில்தான். கலை, கலாசார பாரம்பரிய சிறப்புமிக்க எசல பெரஹரா நிகழ்வதும் கண்டியில்தான். இப்படி இன்னும் பல்வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புக்கள் கண்டார் களிப்புறும் கண்டி மாநகருக்குண்டு. அத்தகைய சிறப்புக்களில் ஒன்றுதான் கண்டி கட்டுக்கலை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம் அமைந்திருப்பதுமாகும்.

இவ்வாலயத்தைப் பற்றி பல்வேறு கர்ண பரம்பரைக் கதைகள் வழக்கிலுள்ளன. கண்டி மாநகரின் நுழைவாயிலெனக் கருதப்படும் பேராதனை வீதியின் வடகோடியிலுள்ள பகுதிக்கு கட்டுக்கலை என்று பெயர். இக்கட்டுக்கலை பல்வேறு விதத்தில் முக்கியத்துவம் பெற்ற இடமாகும். அழகான கட்டிடத் தொகுதிகளையும் வர்த்தக, கல்விக் கலைக் கூடங்களையும் பொலிஸ் நிலையத்தையும் தன்னகத்தே கொண்டிருப்பதும் நெஞ்சையள்ளும் இயற்கைச் சோலைகளையும் கொண்டிருப்பதும் கட்டுக்குலையாத இக் கட்டுக்கலையாகும். அத்தகைய சோலை ஒன்றில் தான் கண்டி மாநகரை நோக்கிய வண்ணம் புத்த பெருமானுடைய பால் வண்ணத்திலான பளிங்குச் சிலை ஒன்றும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் முழு இலங்கையுமே கண்டிச் சீமை என்று குறிப்பிடும் அளவுக்கு கண்டி பெருமை பெற்றிருந்தது.

" கண்டி கதிர்காம வேலோனே"...

என்ற கதிர்காமப் பக்திப் பாடல் இதனை நிதர்ஷனமாக்குகிறது. இது தவிர இந்திய வம்சாவளி மக்கள் தம்மோடு இங்கு கொணர்ந்த நாட்டுப்பாடல்கள் பலவற்றில் கண்டியைப் பற்றிய பெருமை முன் வைக்கப்பட்டுள்ளது.

"மணிக்கவத்தை தோட்டத்திலே
மயிருவத்தி கண்டாக்கையா
உருளோசை அடகுவைத்து
உருட்டுராராம்" ஜின்னு போத்த....
கந்தளா தோட்டமுன்னு
ஆசையா நானிருந்தேன்
உரமூட்டை தூக்கச் சொல்லி
உதைக்கிறானே கண்டாக்கையா"

என்ற பாடலில் கண்டிக்கு அடுத்ததாகவுள்ள ஹந்தானை தோட்டமும் மணிக்கவத்தையும் பிரஸ்தாபிக்கப்படுகின்றன. ஹந்தானை தோட்டமே அந்தோனி மலையாயிற்று என்பார்கள்.

இவ்வாறே..................

"கண்டி, கண்டி என்காதீங்க
கண்டிப் பேச்சு பேசாதீங்க ..."

என்ற பாடலிலும் கண்டி முன் வைக்கப் படுகின்றது.

இலங்கை அரசியலில் மன்னராட்சி காலத்தில் தமிழ்மொழி அரியணை மொழியாக இருந்துள்ளதென்பதை வரலாற்றுக் குறிப்புகள் மூலம் அறியமுடிகின்றது. கண்டி மாமன்னர் ஸ்ரீ விக்கிரமராஜசிங்கன் காலத்தில் தமிழே ஆட்சி மொழியாக இருந்துள்ளதோடு அவர் தன் முதல் பெயரான கன்னுச்சாமி என்றிருப்பதையும் தமிழிலேயே கையெழுத் திட்டிருப்பதையும் பழைய சுவடிகள் வாயிலாக அறியக்கிடக்கின்றது.

1815ம் ஆண்டு கண்டிய சிங்களப் பிரதானிகளுக்கும் ஆங்கிலேயருக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பெரும்பாலான சிங்களப் பிரதானிகள் தமிழிலேயே கையெழுத்திட்டுள்ளனர். கண்டியில் நாயக்க வம்சத்தவர்கள் கண்டி ஒப்பந்தத்தில் தமிழிலேயே கையெழுத் திட்டுள்ளார்கள். கண்டிய அரசவையில் "சின்னமுத்து" என்ற தமிழ்க் காவியம் அரங்கேற்றப்பட்டதாகவும் ஓர் ஆய்வு தெரிவிக்கின்றது. மேலும் கண்டிய மன்னன் முதலாம் இராஜசிங்கன் (கி.பி.1583) இந்து மதத்தைத் தழுவிக் கொண்டான் என்று கூறப்படுகின்றது.

இவ்வாறு கண்டி இராச்சியம் சிறப்புற்றிருந்த காலத்திலேயே இந்து மத வளர்ச்சிக்கு அடிகோலப்பட்டதாக எண்ணுவதற்கு இடமுண்டு. இன்னுங்கூட கண்டி வாழ் பௌத்தர்களும் இந்துக்களும் பல்வேறு வழிகளில் இணைந்தும் பிணைந்தும் தெய்வ வழிபாடுகள் முதல் கலை, கலாசார மேம்பாடுகளிலும் ஈடுபட்டு வருவதனை அவதானிக்க முடிகின்றது. கண்டியிலுள்ள பத்தினி தேவாலயம், ஸ்ரீ விஷ்ணு தேவாலயம், ஸ்ரீ கதிரேசன் ஆலயம், கட்டுக்கலை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம் என்பவற்றில் நேர்த்திகள் வைப்பதிலும் திருவிழாக்களில் ஈடுபடுவதிலும் இருசாராரும் முன்னணி வகித்து வருகின்றார்கள். கண்ணகியை "பத்தினி தெய்யோ" என்றும் ஸ்ரீ கதிரேசனை "கதரகம தெய்யோ" என்றும் ஸ்ரீ விநாயகரை "கண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்யோ" என்றும் நாமமிட்டு பௌத்தர்கள் வழிபாடு செய்துவருகின்றனர்.

கண்டியை ஆங்கிலேயர் கைப்பற்றி சுமார் 150 ஆண்டுகளாகின்றன. ஆங்கிலேயர் வருகையுடன் பெரும் தோட்டப் பயிர்ச் செய்கையும் இந்திய மக்கள் வருகையும் தொடங்குகின்றன. இக்காலகட்டத்திலேயே கட்டுக்கலை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத் தோற்றமும் இடம் பெற்றிருப்பதாக நம்பப்படுகிறது. இந்தியத்தமிழ்த் தொழிலாளர்கள் மட்டும் இலங்கைக்கு வரவில்லை. இந்து சமய ஈடுபாடு உள்ளவர்களும் வர்த்தகர்களுங்கூட பெருவாரியாக வந்துள்ளனரென சரித்திரம் கூறுகின்றது. சிற்பிகள், கட்டிடக் கலைஞர்கள், இசைக் கலைஞர்கள் கூட அப்போது இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர். இக்காலகட்டத்திலேயே கட்டுக்கலை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம் கட்டப்பட்டதாகவும் அறியமுடிகின்றது.

சிலை பிறந்த கதை:

18ம் நூற்றாண்டு காலகட்டத்தில் கட்டுக்கலையில் குளம் ஒன்றும் அதன் அயலில் அரசமரமொன்றும் இருந்ததாம். இக் குளக்கரையில் சலவைத் தொழிலாளர்கள் துணிமணிகளைக் கும்மிக் கழுவி வந்தனராம். அப்போது இவர்கள் குளக்கரையிலுள்ள வட்டவடிவான கல்லொன்றையே சலவைக்கல்லாகப் பாவித்து வந்தனராம். அக்கால கட்டத்தில் தென்னிந்தியாவிலிருந்து ஆன்மீகப் பணிகளுக்காக வந்திருந்த குருசாமி அடிகளும் தமது குரு அருணாசலம் செட்டியாருடன் தங்கி இக் குளத்திலேயே நீராடுவது வழக்கமாம். ஒருநாள் குருசாமி அடிகள் நித்திரையில் இருக்கையில் நடு நிசியின்போது புதுமையான கனவொன்றைக் கண்டாராம். அடுத்த நாள் அதிகாலையில் தான் கண்ட கனவினை தம் குரு அருணாசலம் செட்டியாரிடம் கூறி அவரையும் கூட்டிக் கொண்டு அரசமரக் குளத்துக்குச் சென்று சலவைத் தொழிலாளர்கள் பாவித்த கல்லைப் புரட்டவும் அது அருள் மிகு ஸ்ரீ விநாயகர் சிலையாகக் காட்சியளிக்கவே பரவசமாகி மெய்மறந்து ஒரு கணம் ஆடாமல் அசையாமல் பிரமித்துப்போய் நின்றார்களாம். அப்பொழுது குளத்தில் குளிப்பதற்காக வருகை தந்தவர்களோடு குருசாமி அடிகளும் செட்டியாரும் கை தொழுது வணங்கினார்களாம்.

குளத்தருகே தோண்டி எடுக்கப்பட்ட இவ்வற்புத விநாயகர் சிலைக்கு குருசாமி அடிகளாரின் ஆலோசனையுடன் அருணாசலம் செட்டியார் தென்னிந்தியாவிலிருந்து சிறந்த சிற்பிகளையும் கட்டிடக் கலைஞர்களையும் வரவழைத்து ஸ்ரீ செல்வ விநாயகருக்கு திருக்கோயில் எழுப்பியதாக குறிப்பிடப் பட்டுள்ளது. பேரருளும் பெருமகிமையும் வாய்ந்த கட்டுக்கலை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தின் மூலஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கும் இவ்விநாயகர் சிலையின் மறு புறம் சலவைத் தொழிலாளர்களின் கடமை காரணமாகத் தோய்வுற்ற பகுதி பள்ளமாக இருப்பதை இன்றும் காணக்கூடியதாக இருக்கின்றது.

18ம் நூற்றாண்டு காலப்பகுதியில் இவ்வாலயம் ஒரு சிவன் ஆலயமாக இருந்ததாகவும் ஆய்வுகள் கூறுகின்றன. ஸ்ரீ சோமசுந்தரர், முருகன், வள்ளி, தெய்வானை, நவக்கிரகங்கள், ஸ்ரீ நடராஜப்பெருமான், ஸ்ரீ பத்திரகாளி, நடேஸ்வரர், சிவபெருமான், சிவலிங்கம் போன்ற பல்வேறு தெய்வங்கள் எழுந்தருளியிருக்கும் இவ்வாலயத்தின் ஒரு பகுதியில் குருசாமி அடிகளின் நினைவாலயம் ஒன்றும் கம்பீரமாகக் காட்சியளித்துக் கொண்டிருந்ததென்பதையும் தினந்தோறும் பூஜை நடைபெற்று வருவதையும் இன்றும் நாம் காணக்கூடியதாக இருக்கிறது.

கண்டி கட்டுக்கலை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தில் ஆண்டு தோறும் பங்குனி உத்தரத் திருவிழா இந்துக்களால் பத்து நாட்களுக்கு வெகுசிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. இவ்விழாவின் சிறப்பம்சம் 10 நாட்களும் விசேட பூஜைகளும் உள்வீதி, வெளிவீதி அதாவது பங்குனி உத்தரத் தினத்தன்று கண்டி மாநகர வீதிகளில் மின் விளக்குகளால் நன்கு அலங்கரிக்கப்பட்ட தேரில் நாதஸ்வரம், கரகம், காவடி, கிளாரிநட் போன்ற இசை முழங்க பக்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவசத்துடன் பக்தர்கள் புடைசூழ பஞ்சரத பவனி வருதல் ஆகும்.

ஸ்ரீ விநாயகப் பெருமான் நன்கு அலங்கரிக்கப்பட்ட தேரில் ஆரோகணித்து பல்லாயிரக் கணக்கான பக்தர்களுக்கு அருள் பாலித்து வருவது பேரருள் நிரம்பிய தெய்வாம்சக் காட்சியாகும். ஆனால் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேல் கோவில் நிர்வாகம் புனரமைப்புச் செய்வதாகச் சொல்லி வர்த்தகர்களிடம் பெருவாரியான பண வசூல் செய்து கடந்த 07 ஆண்டுகளுக்கு மேல் கும்பாபிஷேகம் செய்யப்படாமலும், தேர்த் திருவிழா, வீதி உலா வருவதையும் தடைசெய்திருக்கிறார்கள். இதனால் கண்டி வாழ் இந்துக்களினதும் ஏனைய பக்தகோடிகளினதும் வசைபாடல்களுக்கு உள்ளாகி இன்னும் திருவிழா பற்றியும் சிறப்புப் பூசைகள் நடைபெறாதிருப்பதும் கண்டி வாழ் இந்துக்களுக்கு ஒரு சாபக்கேடாகும்.

எந்த நேரத்தில் பிள்ளையார் தனது தெய்வசக்தியைப் பிரகாசிக்கச் செய்யப் போகிறார் என்பதை கோவில் நிர்வாகம் உணர்ந்து தனது செயற்பாடுகளை மனதிற் கொண்டு விரைவாக செயற்பட்டால் அனைவருக்கும் மிகச் சிறந்த வழியுமாகும். அதுமட்டுமல்லாமல் எவ்வளவு விரைவாக கோவிலைப் புனரமைத்து கும்பாபிஷேகம் செய்வதோடு, அனைத்து மக்களுக்கும் தேர்த்திருவிழா நகர் வீதி உலா வந்து அருள்பாலிக்கும் அரும் பெரும் காட்சியை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் தற்போதைய நிர்வாகப் பொறுப்பாளர்கள் ஆவன செய்ய வேண்டுமென்பது அனைவரது வேண்டுதலும் விருப்பமுமாகும்.

எழில்கொஞ்சும் கண்டிமாநகர் வாழ் இந்துக்களுக்கு ஒரு வேண்டுகோள்!

மத்திய மாகாண இந்து மாமன்றம் எல்லோருக்கும் ஒரு தாய் வீடாகும். இது ஒரு பொது சொத்தாகும். யாருக்கும் இதில் உரிமை கோர முடியாது. கண்டியில் சிறப்பாக இயங்கும் கண்டி தமிழ் வர்த்தக சங்கமும், கண்டி இந்து இளைஞர் மன்றமும் இணைந்து ஒரு செயற்குழு நிர்வாக கட்டமைப்பை அமைத்து சிறப்பாக எதிர்கால சந்ததியினருக்கு வழி அமைத்து கொடுக்க வேண்டியது மிக மிக கட்டாய தேவையாகும்.

என்றென்றும் நன்றிக்குரிய நல்லவர்கள்

'அகிலம்' ஆரம்பம் முதல் வெள்ளிவிழா சிறப்பு மலர் வெளியீடு வரை இந்நாட்டு கலை, இலக்கிய அறிவியல் பரப்பிலே பதித்த சுவடுகள் காலத்தால் மறக்க முடியாதவை என்பதற்கு நாள்தோறும் வந்து குவியும் அஞ்சல்கள் சான்று பகர்கின்றன. எழுத்துக்கள் மூலம் பங்களிப்புச் செய்த எழுத்தாளர்கள், பேராசிரியர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும்,

விளம்பரங்களால் அகிலத்தை அலங்கரித்த வர்த்தகப் பிரமுகர்கள். தொடர்ந்து 'அகிலம்' வெளிவர ஆயுள் சந்தா, வருடச் சந்தா வழங்கிய பெருமக்கள் கரிசனையுடன் அகிலத்தை விற்பனை செய்து உதவிய விற்பனை முகர்கள், நண்பர்கள் அன்பர்களுக்கும்,

வானொலி தொலைக்காட்சி, நாளேடுகள், வார இதழ்கள், சஞ்சிகைகளில், 'அகிலம்' குறித்த விமர்சனங்கள் செய்திகள் அவ்வப்போது ஒலிபரப்பட்டும், ஒளிபரப்பட்டும், பிரசுரிக்கப்பட்டும், வந்துள்ளன. அவற்றின் பொறுப்பாளர்களுக்கும், அபிமானிகளுக்கும், ஆதரவாளர்களுக்கும், எம் இதயம் மறவா

– ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகத்தின் அடையாளத்தை பிரதிபலிக்க பல்கலைக்கழகம் அவசியம்

பேராசிரியர் சோ. சந்திரசேகரன்

மலையக அடையாளத்தைப் பிரதிபலிக்கக் கூடிய தனியான பல்கலைக்கழகம் விரைவில் ஏற்படுத்தப்பட வேண்டும். இதன்மூலம் மலையகத்தை உயர்கல்விப் பாதைக்கு இட்டுச் செல்ல முடியும் என்று பேராசிரியர் சோ. சந்திரசேகரன் மற்றும் மலையகப் பல்கலைக் கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள். கல்விமான்களின் எண்ணக்கருத்தாகும்.

மலையக கல்வித்துறை முன்னரைக் காட்டிலும் இப்போது வளர்ச்சியடைந்து வருகின்றது. கல்விப் பெறுபேறுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இது மகிழ்ச்சிக்குரிய விடயமேயாகும். எனினும், மலையகத்தின் உயர்கல்வித் துறையை இன்னும் அதிகமாக வளர்த்தெடுக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. பல்கலைக்கழகங்களுக்கு செல்லும் மாணவர்களின் தொகையையும் வேகமாக அதிகரிக்கச் செய்தல் வேண்டும். நாட்டில் 15 தேசிய பல்கலைக்கழகங்கள் காணப்படுகின்றன. மலையகத்தில் 3 பல்கலைக்கழகங்கள் காணப்படுகின்றன. பேராதனை பல்கலைக்கழகம், சப்ரகமுவ பல்கலைக்கழகம், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் என்பன அவையாகும். மலையகத்தில் பல்கலைக்கழகங்கள் காணப்படுகின்ற போதிலும் மலையக அடையாளத்தைப் பிரதிபலிக்கக் கூடிய வகையில் பல்கலைக்கழகமொன்று இல்லாமை ஒரு பெரும் குறையாக உள்ளது. எனவே, மலையக அடையாளத்தை பிரதிபலிக்கக் கூடிய வகையில் தனியான பல்கலைக்கழகம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று நீண்ட காலமாகவே வலியுறுத்தல்கள் இடம்பெற்று வருகின்றன.

மலையகத்தைச் சேர்ந்த கல்வி இராஜாங்க அமைச்சர் வி. எஸ். இராதாகிருஷ்ணனின் அரசியல், சமூகப் பணிகளை கருத்தில் கொண்டு வெளிநாட்டு பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதி பட்டம் ஒன்றை வழங்கியுள்ளமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இது மலையகத்துக்கு கிடைத்த ஒரு கௌரவமாகும். மலையகத்தில் அரசியல், சமூகம், சமயம், இலக்கியப் பணி, கல்வி உள்ளிட்ட பல துறைகளில் கௌரவிக்கப்பட வேண்டிய பலர் உள்ளனர். எனினும், இலங்கையின் தேசிய பல்கலைக்கழகங்கள் அவர்களை கண்டு கொள்வதாகத் தெரியவில்லை. புறக்கணிப்பான நிலைமைகளே தொடர்ந்தவண்ணமாக உள்ளன. இந்நிலையை இனியும் நீடிக்கச் செய்யலாகாது. மலையக அடையாளத்தடன் கூடிய தனியான பல்கலைக்கழகம் ஒன்று உருவாக்கப்படுமிடத்து உயர்கல்வி அபிவிருத்திக்கு வித்திடப்படுவதோடு துறைசார்ந்தவர்களின் எழுச்சிக்கும் அது உந்துசக்தியாகும். அமைச்சர் மனோ கணேசன், இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் உள்ளிட்ட அரசியல்வாதிகளும் புத்திஜீவிகளும் தனியான பல்கலைக்கழகத்துக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர். விரைவில் இது சாத்தியமாக வேண்டும் என்று மனநிறைவுடனும் உறுதியுடனும் செயல்படவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியின் முடிவு நற்பண்புகள்

தேசபந்து தெ. ஈஸ்வரன்
ஈஸ்வரன் பிரதர்ஸ் எக்ஸ்போர்ட் பிரைவேட் லிமிட்டெட்
கொழும்பு

கல்வியின் அவசியத்தைப் பற்றி சொல்ல வேண்டியதேயில்லை. திருவள்ளுவர் சுருக்கமாகச் சொன்னார். கற்காதவர் முகத்திலே கண்களில்லை புண்கள் தான் இருக்கின்றன என்றார்.

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்
(அதிகாரம் கல்வி-குறள் 393)

கல்வியினால் நாம் பெறுவது அறிவு. அப்படியாயின் அறிவென்றால் என்ன? என்ற கேள்வி எழுகிறது. தெளிவாக திருவள்ளுவர் சொல்கிறார்

சென்ற இடத்தில் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு
(அதிகாரம் : அறிவுடமை - குறள் 422)

விளக்கம் :
மனத்தை சென்ற இடத்தில் செல்ல விடாமல் தீமையானதிலிருந்து நீக்கிக் காத்து நன்மையானதில் செல்லவிடுவதே அறிவாகும்.

கற்றவன் மனதில் தீமையான எண்ணங்கள் பிறக்கக்கூடாது. அவனுடைய நடத்தை சிறப்பானதாக அமைய வேண்டும். அவன் மற்றவர்களிடமிருந்து வேறுபட்டு தன்னைச் சிறப்பானவனாக இனங்காட்டிக் கொள்ள வேண்டும். கற்றவன் கட்டாயமாக ஒழுக்கத்தில் சிறந்து விளங்கவேண்டும்.

கற்பவர்கள் பரீட்சையில் சிறப்பு சித்தி எய்துவது மாத்திரம் ஒரு மாணவனது தன்மையை முழுமையாக எடுத்துக்காட்டாது. நீங்கள் ஒரு வேலைக்கு விண்ணப்பித்தால் உங்களை வேலைக்கு அமர்த்துபவர்கள் உங்களுடைய முழுமையான நடத்தை பற்றி விபரமறிய விரும்புவார்கள். அதனால் தான் நீங்கள் உங்கள் விண்ணப்பத்துடன் உங்கள் கல்வித் தகுதி பற்றிய சான்றிதழ்களை இணைத்திருந்தாலும் உங்களுடைய நடத்தை பற்றி சொல்லக்கூடிய இருவருடைய விலாசங்களை கேட்பார்கள். உங்களைப் பற்றிய விபரங்களுக்கு கல்வி நிறுவனங்கள் அளித்திருக்கும் சான்றிதழ்கள் போதாது என்ற காரணத்தினால் தான் உங்கள் உறவினரல்லாத இரு நபர்களின் வீலாசங்களைக் கேட்கிறார்கள். உங்களின் கல்வியைக் கொண்டு மாத்திரம் உங்களை எடைபோடுவதாக இல்லை. உங்களுடைய பழக்கவழக்கங்கள் என்ன? கடந்த காலத்தில் நீங்கள் எப்படி நடந்திருக்கிறீர்கள்? என்றெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டுமென்று உங்களை வேலைக்கு அமர்த்துபவர்கள் விரும்புகிறார்கள். இதிலிருந்து நீங்கள் முக்கியமாக தெரிந்துகொள்ள வேண்டியது கல்விச் சான்றிதழ்கள் மாத்திரம் உங்களை ஒரு முழு மனிதனாக படம்போட்டுக் காட்டாது. உங்களிடம் நற்பண்புகள் இருந்தால்தான் நீங்கள் வாழ்க்கையில் வெற்றியடைய முடியும் என்பதை தெளிவாக சுட்டிக்காட்டுகிறது.

நற்பண்புகள் எவை என்று பார்த்தால் எத்தனையோ இருந்தாலும் உங்களிடம் அன்பு, பொறுமை, வாய்மை, கோபமின்மை, மன்னிக்கும் மனப்பான்மை, அமைதி, இனிமையாகப் பேசுதல் என்பன ஒரு சில பண்புகளாகும். இவற்றை நாம் நினைத்த உடனேயே பழகிக்கொள்ள முடியாது. மேற்சொன்ன விழுமியங்களை சிறு வயதி லிருந்தே மனதிலிருத்த வேண்டும்.

அடுத்து இதை எப்படி செய்வது? அறநெறிப் பாடசாலைகளும் சத்திய சாயி, சின்மையா மிஷன் போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீக நிறுவனங்களும் நடத்துகின்ற வகுப்புக்களில் சேர்வது சாலச்சிறந்தது. இங்கே ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் வகுப்புக்கள் நம் மனதிலே நற்பண்புகளை நிலைநிறுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

நாங்கள் பிழையற கல்விகற்றிருக்கிறோம் என்பதை இந்நற்பண்புகள் உறுதிப்படுத்தும். சத்திய சாயிபாபா அவர்கள் இதை மிகவும் வலியுறுத்தி சொல்லியிருக்கிறார். இவ் வகுப்புக்களில் சேர்வதினால் மத ஒற்றுமை, இன ஒற்றுமை போன்ற முக்கியமான குணங்களும் மனதில் பதிவதற்கு ஏதுவாக இருக்கிறது.

உங்கள் கல்வியின் முடிவு நற்பண்புகளாக மலரட்டும்.

கல்வி	விளக்கவுரை
கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக.	கற்கத்தகுந்த நூல்களைக் குற்றமறக் கற்கவேண்டும். அவ்வாறு கற்ற பிறகு, கற்ற கல்விக்குத் தக்கவாறு நெறியில் நிற்க வேண்டும்
எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு.	எண் என்று சொல்லப்படுவன, எழுத்து என்று சொல்லப்படுவன ஆகிய இருவகைக் கலைகளையும் வாழும் மக்களுக்குக் கண்கள் என்று கூறுவர்.
கண்ணுடையவர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு புண் உடையா் கல்லா தவர்.	கண்ணுடையவர் என்று உயர்வாகக் கூறப்படுகின்றவர் கற்றவரே, கல்லாதவர் முகத்தில் இரண்டு புண் உடையவர் ஆவர்
உவப்பத் தலைக்கூடி உள்ளப்பிரிதல் அனைத்தே புலவர் தொழில்.	மகிழும் படியாக் கூடிப் பழகி (இனி இதுவரை எப்போது காண்போம் என்று) வருந்தி நினைக்கும் படியாகப் பிரிதல் புலவன் தொழிலாகும்.
உடையார் முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார் கடையரே கல்லா தவர்.	செல்வர்முன் வறியவர் நிற்பது போல் (கற்றவர் முன்) ஏங்கித் தாழ்ந்து நின்றும் கல்வி கற்றவரே உயர்ந்தவர் கல்லாதவர் இழிந்தவர்.
தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு.	மணலில் உள்ள கேணியில் தோண்டிய அளவிற்கு நீர் ஊறும் அதுபோல், மக்களுக்குக் கற்ற கல்வியின் அளவிற்கு அறிவு ஊறும்.
யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன் சாந்துணையுங் கல்லாதவாறு.	கற்றவனுக்குத் தன் நாடும் ஊரும் போலவே வேறு எதுவாயினும் நாடாகும், ஊராகும், ஆகையால் ஒருவன் சாகும் வரையில் கல்லாமல் காலங் கழிப்பது ஏன்?
ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப்புடைத்து.	ஒரு பிறப்பில் தான் கற்ற கல்வியானது அப் பிறப்பிற்கு மட்டும் அல்லாமல் ஒருவனுக்கு ஏழுபிறப்பிலும் உதவும் தன்மை உடையதாகும்.
தாமின் புறுவது உலகின் புறங்கண்டு காமுறுவர் கற்றறிந் தார்.	தாம் இன்புறுவதற்குக் காரணமான கல்வியால் உலகமும் இன்புறுவதைக் கண்டு, கற்றறிந்த அறிஞர் மேன் மேலும் (அக் கல்வியையே) விரும்புவர்.
கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு மாடல்ல மற்றை யவை.	ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும். கல்வி தவிர மற்றப்பொருள்கள் (அத்தகைய சிறப்புடைய) செல்வம் அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்பெற்ற கருங்கற் பாறையும் தேசபந்து ஈஸ்வரன் அவர்களின் சேவையும்

தகவல் : ந. லெப்ரீன்ராஜ் (உதவி ஆசிரியர் - தினக்குரல்)

நான்காயிரத்து எழுநூற்று ஐம்பது நாட்கள், பலருடைய கடின தியாக உழைப்பு, ஒரு சில மனிதர்களுடைய சமூக அக்கறை மற்றும் நாட்டுப் பற்றுடனும் பல போராட்டங்களுக்கு மத்தியிலும் இன்று கருங்கற் பாறையில் வானுயர கம்பீரமாக சமாதி நிலையில் அமர்ந்திருக்கிறார் புத்தர்.

குருணாகல் பிரதேசத்துக்கு அண்மையில், ரிதிகம ரம்பொடகல மொனறாகலையில் அமைந்துள்ள வித்தியாசாகர பிரிவென விகாரை அமைந்துள்ள சுற்றுவட்டாரத்திற்குள் கடந்த 13 வருடங்களாக செதுக்கப்பட்டு வந்த மிகப்பிரமாண்டமான கருங்கல் புத்தர் சிலையை சென்ற ஆண்டு ஜனாதிபதி மைதிரிபாலா சிறிசேன திறந்து வைத்தார்.

இச்சிலையை இந்தியாவின் சொர்ணம் சிற்ப கலைக்கூடத்தின் பிரபல சிற்பக் கலாமணி பத்மஸ்ரீ எம். முத்தையா ஸ்தபதியின் ஆலோசனையின் கீழ் அவரது குழுவினர் செதுக்கியுள்ளனர்.

இப்பிரமாண்ட கருங்கற் சமாதி புத்தர் சிலை ரம்பொடகல கருங்கற் பாறையில் உயிர்பெற 2001 ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானில் இடம்பெற்ற ஒரு சம்பவமே மூல காரணமாக இருந்தது. அதாவது 2001 இல் ஆப்கானிஸ்தானில் தலிபான்களால் பாமியன் புத்தர் சிலைகள் உடைக்கப்பட்டதை அறிந்த பௌத்த உலகம் அந்நேரத்தில் கொதித் தெழுந்திருந்தது. அந்த கொதிப்பு இக்கிராம மக்களையும் விட்டுவைக்கவில்லை. ஆத்திரமடைந்த ரம்பொடகல, மொனராகலை மக்கள் அங்குள்ள கட்டிடங்கள் சிலவற்றை தகர்க்க தீர்மானித்தபோது அதனை அறிந்த வித்தியா சாகர பிரிவெனா விகாரையின் தேரர் வணக்கத்துக்குரிய அமரமௌலி அக்கிராம மக்களை அழைத்து அவர்களை சமாதானப் படுத்தியதுடன் விகாரைக்கு அருகில் இருக்கும் பாறையைத் தகர்த்து ஒரு சிலையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேரரும் வர்த்தகரும் ரம்பொடை அனுமான் கோவிலுக்குச் சென்றவேளையில் அங்கு ஆஞ்சநேயர் கோவில் தலைவர் தொழில் அதிபர் தெ. ஈஸ்வரனை சந்திக்கும் வாய்ப்பு இவர்களுக்கு கிட்டியது. ஈஸ்வரனிடம் தேரர் தன்னுடைய முயற்சி பற்றி கூறியதும் தேரரின் முயற்சிக்கு தன்னால் முடிந்த அனைத்து உதவிகளையும் செய்வதாக வாக்குறுதியளித்ததுடன் அந்த வாக்கிற்கிணங்க இத்தனை வருடங்களும் தேரருடன் இணைந்து நின்று எதிர்காலச் சந்ததிக்கும் இந்த நாட்டுக்கும் ஒரு சிறந்த பொக்கிஷத்தை உருவாக்கிக் கொடுத்துள்ளார் ஈஸ்வரன்.

உருவாக்குவோம் என்று அவர்களுக்கு ஆறுதல் கூறி அனுப்பினார்.

அமரமௌலி தேரர் கூறிய வாக்கை வேதவாக்காகக் கருதிய அவ்வூர் மக்களில் ஒரு சிலர் முன்வந்து பணம் சேகரிக்கும் முயற்சியில் இறங்கினார்கள். ஆனால், இவர்கள் சேர்க்கும் பணம் இப்பாரிய பணிக்கு போதாது என்பதை உணர்ந்த தேரர், பல வழிகளில் உதவிகளைப் பெறும் முயற்சியில் இறங்கியதுடன், அவ்வூர் மக்களும் மும்முரமாக பணம் சேகரிக்கும் முயற்சியில் இறங்கினார்கள்.

இந்நிலையில் சிலையைச் செதுக்கும் பணி தொடர்பில் அக்கறையிருந்தும் அதனை செதுக்க யாரிடம் கொடுக்கலாம்? எவ்வளவு பணம் தேவைப்படும்? அந்தப் பணத்தினை - ஏனைய உதவிகளை எவ்வாறு பெற்றுக் கொள்வது? என்று சிந்தித்துக் கொண்டிருந்த தேரரிடம் வர்த்தகர் ஒருவர் சென்றிருந்த வேளையில் அவர் தன்னுடைய மனக் குமுறலை அந்த வர்த்தகரிடம் கொட்டிய பொழுது அவ் வர்த்தகர் தேரரிடம் ரம்பொடையில் அமைந்துள்ள அனுமான் கோயிலுக்குச் சென்றால் இது தொடர்பான உங்களுடைய கேள்விகளுக்கு விடை கிடைக்கும் என்று கூறி தேரரையும் அழைத்துக்கொண்டு ரம்பொடைக்குச் சென்றார். அங்குதான் இன்று மிகப் பிரமாண்டமாக காட்சிதரும் கருங்கற் புத்தர் சிலை உருவாவதற்கான விடை கிடைத்தது.

தேரரின் முயற்சியை அறிந்துகொண்ட ஈஸ்வரன் தேரரையும் அழைத்துக் கொண்டு இந்தியா சென்று ரம்பொடை அனுமான் சிலையை வடிவமைத்த இந்தியச் சிற்பி பத்மஸ்ரீ சிற்பக் கலாமணி எம். முத்தையா ஸ்தபதியை அறிமுகம் செய்து வைத்ததுடன் வேலைகளை உடனடியாக தொடங்கும் முகமாக சிற்பியை இலங்கைக்கு அழைத்து வந்து சிலை செதுக்கும் பாறையைக் காண்பித்து பணியைத் தொடங்கினார்.

அதற்கிணங்க 2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சிலை செதுக்கும் பணி 13 வருட கடும் உழைப்பின் பயனாக இன்று 67.5 அடி கருங்கற் சிலையாக உயிர் பெற்றிருக்கிறது.

கரடுமுரடாகவும், மரம் செடிகொடிகள் சூழ்ந்த பகுதியாகவும் காணப்பட்டிருந்த கற்பாறைப் பகுதியை துப்பரவு செய்யும் பணிகளில் அக்கிராம மக்கள் தங்களுடைய முழு நேரத்தையும் செலவழித்ததுடன் மிகவும் ஈடுபாட்டுடன் செயற்பட்டிருந்தனர். அதேபோன்று இன்று அப்பணி ஆரம்பிக்கப்பட்டு 13 வருடங்கள் கடந்திருந்தபோதிலும் சிற்பிகளுக்கும் தேரருக்கும் மிகவும் உதவியாக இருந்து வந்திருக்கிறார்கள். தங்களுடைய கிராமத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் போற்றும் படைப்பு உருவாகவேண்டுமென்பதில் இக் கிராம மக்கள் மிகவும் ஆர்வத்துடன் இருந்து வந்ததை அவதானிக்க முடிந்தது. அதனை தேரர் அமரமௌலியும உறுதி செய்கிறார்.

அத்துடன் இச்சிலையை செதுக்குவதற்காக இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த தொழிலாளர்கள் வருடக்கணக்கில் இங்கேயே தங்கியிருந்து தங்களுடைய சொந்த நாட்டில் செய்யும் பணி போன்று செய்து வந்திருக்கிறார்கள். இது அனைவரையும் ஆச்சரியத்திற் குள்ளாக்கியிருக்கிறது.

2002 ஆம் ஆண்டு இச்சிலை வடிவமைப்பதற்கு 2 கோடி 50 இலட்சம் ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்ட போதிலும் தொழிலாளர் கூலி அதிகரிப்பு மற்றும் கற்பாறையைச் சுற்றியுள்ள பகுதிகளை அழகுபடுத்தல் மற்றும் தியான மண்டபங் களை அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்ட தன் காரணத்தினால் அத்தொகை இன்று பல மடங்காக அதிகரித்திருக்கிறது.

வித்தியா சாகர பிரிவெனா விகாரைக்கு அண்மையில் அமைந்திருந்த கருங்கற் பாறையில் புத்தரின் சிலையை உருவாக்க வேண்டும் என்ற என்னுடையதும் இக்கிராம மக்களினதும் எண்ணம் பூர்த்தியாவதற்கு தெ. ஈஸ்வரன் என்ற மனித உள்ளம் கிடைக்காமல் இருந்திருந்தால் இந்தத் திட்டம் நிறைவேறியிருக்குமா என்ற கேள்வி என்மனதில் எப்பொழுதும் இருந்துவருகிறது.

ஈஸ்வரன் அவர்களை நான் சந்தித்தது கடவுளின் ஒரு கிருபை என்றே உணர்கிறேன். அவருடைய சேவையை இக்கிராம மக்கள் என்றும் மறக்கமாட்டார்கள் என்று தேரர் அமரமௌலி கூறினார்.

இன்று இச்சிலை உயிர்பெற்றிருப்பதற்குப் பின்னால் பலர் கடந்த 13 வருடகாலமாக அதற்கு உயிர் கொடுத்திருக்கிறார்கள். அவர்களில் தொழிலதிபர் தெ. ஈஸ்வரன் மிக முக்கியமானவர். அவருடன் அமைச்சர் கரு. ஜயசூரிய, காலஞ்சென்ற முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே ஆகியோ ரினது விடாமுயற்சியும் ஒத்துழைப்புமே முக்கிய காரணமாகும்.

அத்துடன் பல அரசியல்வாதிகள், நன்கொடையாளர்களும் இப்பொக்கிஷத்தை உருவாக்குவதற்கு தங்களாலான நிதி உதவிகளை வழங்கியிருக்கிறார்கள். அதில் முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, சந்திரிக்கா குமாரதுங்க மற்றும் முன்ன்ாள் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபமா ராவ் மற்றும் கிராம சேவை யாளர்கள், பிரதேச செயலாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் என பலர் நிதியுதவி வழங்கியிருக்கிறார்கள்.

2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பணி மூன்று வருடங்களாக சிலை செதுக்குவதற்கு ஒதுக்கப்பட்ட பகுதியைச் சூழவுள்ள பாறையின் ஏனைய பகுதிகளை அகற்றுவதற்கு செலவிடப்பட்டுள்ளது. இவை வெடிமருந்துகள் மூலம் அகற்றப்பட்டுள்ளன.

பாறையைக் குடைந்து சிலைகளைச் செதுக்குவது என்பது மிகவும் கஷ்டமான விடயம். ஆனாலும் இது எமக்கு மனத் திருப்தி தரும் பணி என்கிறார் இந்தியாவி லிருந்து வருகை தந்து கடந்த 11 வருட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MONARAGALA VIDYASAGARA PIRIVEN VIHARAYA
World's Tallest Granite Buddha Statue (67½ ft)

காலமாக இச்சிலை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுவரும் தேவராஜ் என்ற சிற்பி. அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

அமெரிக்கா, லண்டன், பர்மா என்று உலகின் பல நாடுகளில் நாம் சிலைகளை உருவாக்கி வருகிறோம். அந்த வகையில் இலங்கையில் ரம்பொடையில் உள்ள ஆஞ்சநேயர் சிலையை இந்தியாவில் உருவாக்கி இங்கு கொண்டுவந்திருந்தோம். அதன் பயனாக இலங்கையில் மிகப் பிரமாண்டமான புத்தர் சிலையை உருவாக்கும் பாக்கியம் எமக்கு கடந்த 13 வருடங்களுக்கு முன்னர் கிடைத்தது.

இன்று அப்பணி முடியும் தறுவாய்க்கு வந்திருக்கிறது. இந்த 13 வருடங்களும் எமது தாய் நாட்டில், சொந்த ஊரில் இருந்து வேலை செய்த உணர்வை இக் கிராம மக்களும் தேரர் வணக்கத்துக்குரிய அமர மௌலி அவர்களும் எமக்கு வழங்கியிருந்தார்கள் என்றார்.

இலங்கையில் பௌத்த மதம் வேரூன்றிய காலத்தின் பின் அம்மதத்தை வளர்த் தெடுப்பதற்கு அன்றைய மன்னர்கள் எவ்வளவு பாடுபட்டார்கள் என்பதை பறை சாற்று முகமாக அம்மன்னர்கள் நிர்மாணித்த விகாரைகள் மற்றும் புத்தபெருமானின் சிலைலகள் இன்றும் கம்பீரமாக எமது கண்களுக்கு காட்சி தரும் அதேவேளை, அவை இலங்கையில் பௌத்த வரலாற்றையும் கட்டிடக் கலைநுட்பங்களையும் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

இந்நிலையில் ரிதிகம மொனறாகலை விகாரையில் அமையப்பெற்றிருக்கும் சமாதி புத்தர்சிலை எதிர்காலச் சந்ததிக்கும் இந்நாட்டிற்கும் பௌத்த மதத்திற்கும் பெரும் பொக்கிஷமாகும். அதேவேளை, சுதந்திரத் திற்குப் பின்னரான இலங்கையில் வீழ்ச்சியுற் றிருந்த கலைப்படைப்பின் வெற்றிடத்தினை நிரப்பிய பெருமையையும் இது பெற்றுள்ளது.

நில மட்டத்திலிருந்து 72 அடியாகவும் புத்தருடைய பாதத்திலிருந்து 67 1/2 அடியாகவும் செதுக்கப்பட்டிருக்கும் இச்சிலை பணிக்காக 10 கோடி ரூபா வரையில் செலவிடப்பட்டிருக்கிறது.

வித்தியா சாகர பிரிவெனா விகாரையின் அமரமௌலி தேரரின் கனவிலும் தொழிலதிபர் தெ. ஈஸ்வரனின் உதவி, ஒத்தாசையுடனும் கொடையாளர்களின் உதவியுடனும் அக்கிராம மக்களின் உதவியுடனும் அனுபவம் வாய்ந்த இந்திய சிற்பக் கலைலஞர்களின் கலை வண்ணத்திலும் மொனராகல ரம்பொடகலவில் உயிர்பெற்றிருக்கும் மெய்சிலிர்க வைக்கும் இந்த மிகப் பிரமாண்டமான கருங்கற் சமாதி புத்தர் சிலை நாட்டின் பொக்கிஷமாகவும் எதிர்காலச் சந்ததியின் சொத்தாகவும் வரலாற்றில் இடம்பெறும் என்பதில் எவ்வித ஐயங்களும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ந்நன்றி அறிதல்

குறள்	விளக்கவுரை
செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்ற லரிது.	தான் ஓர் உதவியும் முன் செய்யாதிருக்கப் பிறன் தனக்குச் செய்த உதவிக்கு மண்ணுலகையும் விண்ணுலகையும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஈடு ஆக முடியாது.
காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது	உற்ற காலத்தில் ஒருவன் செய்த உதவி சிறிதளவாக இருந்தாலும், அதன் தன்மையை ஆராய்ந்தால் உலகத்தை விட மிகப் பெரிதாகும்.
பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின் நன்மை கடலிற் பெரிது	இன்ன பயன் கிடைக்கும் என்று ஆராயாமல் ஒருவன் செய்த உதவியின் அன்புடைமையை ஆராய்ந்தால், அதன் நன்மை கடலைவிடப் பெரிதாகும்.
தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக் கொள்வர் பயன்தெரி வார்.	ஒருவன் தினையளவாகிய உதவியைச் செய்த போதிலும் அதன் பயனை ஆராய்கின்றவர். அதனையே பனையளவாகக் கொண்டு போற்றுவர்.
உதவி வரைத்தன்று உதவி; உதவி செயப்பட்டார் சால்பின் வரைத்து	கைம்மாறாகச் செய்யும் உதவி முன்செய்த உதவியின் அளவை உடையது அன்று; உதவி செய்யப்பட்டவரின் பண்புக்கு ஏற்ற அளவை உடையதாகும்.
மறவற்க மாசற்றார் கேண்மை; துறவற்க துன்பத்துள் துப்பாயார் நட்பு	குற்றமற்றவரின் உறவை எப்போதும் மறத்தலாகாது; துன்பம் வந்த காலத்தில் உறுதுணையாய் உதவியவர்களின் நட்பை எப்போதும் விடலாகாது.
எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண் விழுமந் துடைத்தவர் நட்பு	தம்முடைய துன்பத்தைப் போக்கி உதவியவரின் நட்பைப் பல்வேறு வகையான பிறவியிலும் மறவாமல் போற்றுவர் பெரியோர்.
நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது அன்றே மறப்பது நன்று.	ஒருவர் முன்செய்த நன்மையை மறப்பது அறம் அன்று; அவர் செய்த தீமையைச் செய்த அப்பொழுதே மறந்து விடுவது அறம் ஆகும்.
கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த ஒன்றுநன்று உள்ளக் கெடும்.	முன் உதவி செய்தவர் பின்பு கொன்றாற் போன்ற துன்பத்தைச் செய்தாரானாலும், அவர் முன் செய்த ஒரு நன்மையை நினைத்தாலும் அந்தத் துன்பம் கெடும்.
எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு.	எந்த அறத்தை அழித்தவர்க்கும் தப்பிப் பிழைக்க வழி உண்டாகும்; ஒருவர் செய்த உதவியை மறந்து அழித்தவனுக்கு உய்வு இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய வம்சாவழி மலையகத் தமிழர்கள்

மாண்புமிகு P. P. தேவராஜ்
முன்னாள் இந்து கலாசார, இராஜாங்க அமைச்சர்.

"அகிலம்" சஞ்சிகை தனது கால்நூற்றாண்டு காலம் சிறப்பாக செயல்பட்டு வெள்ளி விழாக்காணும் ஒரு வரலாற்றுச் சாதனையைக் கருதி பவளவிழா ஆண்டில் தடம்பதிக்கும் ஆசிரியர் கலாபூஷணம் கரு. வேலு. இராமசாமிக்கு எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

நிலை மாற்றம் என்பது அசைவாற்றல் மூலம் நகரும் நன்மையை குறிப்பிடுகின்றது. உதாரணமாக நாம் தண்ணீரைச் சூடேற்றும் போது படிப்படியாக சூடு ஏறி அது இறுதியில் நீராவியாக மாறுகின்றது. இது நிலைமாற்றம் ஆகும். இதுபோல் தான் சமூக மாற்றங்களும் நிகழ்கின்றன. ஒரு நிலையி லிருந்து இன்னொரு நிலைக்கு சமூகத்தைச் சார்ந்தவர்கள் செல்கின்றார்கள் அல்லது முழு சமூகமே செல்கிறது.

தனி நபர்களோ குடும்பமோ அல்லது ஒரு குழுவோ இத்தகைய மாற்றங்களுக்கு ஆளாகின்றனர். கல்வி மூலமோ அல்லது செல்வம் காரணமாகவோ மக்கள் மேல் நோக்கி மாற்றமடையும்போது ஒரு சமூகத்திலே பல பிரிவுகள் உருவாகின்றன. இவ்வாறு நிகழும்போது உதாரணமாக ஒரு சாதாரண தொழிலாளி செல்வம் படைத்த வர்த்தகராக மாறுகிறார். அதேபோல் உயர் கல்வி பெற்று மேல் நோக்கிய நகர்வு ஏற்படுகிறது. சில சமயங்களில் உயர் அந்தஸ்தில் உள்ளவர்கள் வீழ்ச்சியடைந்து அவர்கள் தாழ்ந்த நிலைக்கும் தள்ளப்படுகின்றனர். இது சமூக மாற்றங்களின் ஒரு நியதியாகும்.

இருநூறு ஆண்டுகளுக்கு முன் பிரித்தானிய ஆட்சி ஏற்பட்ட பின்னர் புகையிரதப் பாதை அமைப்பதற்கோ அல்லது சிறியளவில் பாதைகள் செப்பனிடுவதற்கோ இந்தியாவிலிருந்து தொழிலாளர்கள் இங்கு வந்தனர். ஆனால் கோப்பித் தோட்டங்கள் ஆரம்பித்த பின்னரும் அதைத் தொடர்ந்து தேயிலை, றப்பர் தோட்டங்கள் என்று வந்தவுடனும் பெருமளவில் இந்தியத் தொழிலாளர்கள் இலங்கை வந்து காலப்போக்கில் அவர்கள் இங்கே குடியேறினார்கள். அவர்கள் தனியொரு சமூகமாக உருப்பெற்றனர். 1911 ஆம் ஆண்டு மக்கள் புள்ளிவிபரக் கணக்கெடுப்பின்போது இந்தப் பிரிவினர் இந்தியத் தமிழர் என்று அடையாளப்படுத்தப்பட்டனர். இலங்கையின் நான்கு பிரதான இனப் பிரிவினருள் ஒரு பிரிவினராக இன்று விளங்குகின்றார்கள்.

இலங்கையில் தோட்டங்களில் வேலை செய்வதற்காக வந்து குடியேறியவர்கள் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் அல்லது பெருந்தோட்டச் சமூகம் என்றுதான் பொதுவாக அடையாளப்படுத்துவது வழக்கமாகவிருந்தது. அவர்களுடைய வளர்ச்சியும் முன்னேற்றமும் தேங்கியேயிருந்தன. எத்தகைய கட்டுப்பாடுகள் இருந்தபோதிலும் மாற்றங்கள் நிகழ்வதைத்தடுக்க முடியாது. அவை தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. மாற்றங்களை யாராலும் நிறுத்த முடியாது. இந்தியத் தமிழர் மத்தியிலிருந்தும் தொழிலாளர்கள் மத்தியிலிருந்தும் இன்று உயர் வகுப்பினரும் படிப்படியாக தோன்றியுள்ளனர். எத்தனையோ தடைகள் இருந்தபோதிலும் தோட்டத்தொழில் தவிர இதர தொழில்களுக்கு மக்கள் மாற ஆரம்பித்து விட்டனர். இப்பொழுது நகர்வு துரிதமடைந்து வருவது அனைவரும் அறிந்த ஒரு விடயமாகும். இளைஞர்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுவதிகள் அதிக வருமானம் தரக்கூடிய தொழில்களை நாடிச்செல்கின்றனர். துரித முன்னேற்றம் கண்டு சாதனைகளைப் படைத்துக்கொண்டிருக்கின்றனர்.

இத்தகைய மாற்றங்களின் மூலம் இந்தியத்தமிழர் சமூகம் மீளமைப்புச் செய்யப்படுகின்றது. அதாவது இந்திய வம்சாவளித் தமிழர்களின் நிலைமாற்றம் இன்று நிகழ்ந்துவிட்டது. இந்தப் புதிய நிலையிலிருந்து புதிய கண்ணோட்டத்தோடு இந்திய வம்சாவளித் தமிழர்கள் வரையறை செய்யவேண்டிய காலம் இப்பொழுது வந்துவிட்டது.

பேரறிஞர்களும் சிந்தாந்த சிற்பிகளுமான கார்ல் மார்க்ஸ் (Karl Marks), பிறெட்ரிக் ஏங்கல்ஸ் (Fredrich Engels) ஆகியோர் சமூக நிலைமாற்றம் பற்றியும் புதிய பிரிவினர் தோன்றுவது பற்றியும் தங்கள் அடிப்படை சித்தாந்தங்களை வெளியிட்டிருக்கிறார்கள். சமூகங்களிலேயே புதிய பிரிவினர் தோன்றுவதும் முரண்பாடுகள்அதிகரிப்பதும் புரட்சிகள் ஏற்படுவது, புதிய சமூக அமைப்புகள் ஏற்படுவது பற்றி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த கருத்துக்களை முன்வைத்திருக்கிறார்கள்.

இந்தக் கண்ணோட்டத்திலிருந்து இந்திய வம்சாவளித் தமிழரின் நிலையை ஆராயும் போது பல உண்மைகள் நமக்குப் புலப்படுகின்றன.

இலங்கை சுதந்திரம் பெற்றவுடன் பிரஜாவுரிமை, வாக்குரிமைச் சட்டங்கள் மூலம் இந்திய வம்சாவளித் தமிழர்கள் பாரிய பாரபட்சங்களுக்கு ஆளாகினர். அரசியல் நீரோட்டத்திலிருந்தும் அபிவிருத்தி நீரோட்டத்திலிருந்தும் அவர்கள் நீண்டகாலம் ஒதுக்கப்பட்டார்கள். நாடற்றவர் என்ற நாமம் அவர்களுக்குச் சூட்டப்பட்டது. 1948 இல் இயற்றப்பட்ட பிரஜாவுரிமைச் சட்டம் அமுலாக்கல் முடிந்தவுடன் அவர்கள் நாடற்றவர்களாக்கப்பட்டார்கள்.

1964 இல் நாடற்றவர் தொகை 9,75,000 என கணக்கிடப்பட்டிருந்தது. ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தத்தின்அடிப்படையில் இப்பொழுது 3,80,00 பேரும்அவர்களுடைய சந்ததியினரும் இந்தியாவுக்கு சென்றுவிட்டனர். இலங்கை பிரஜாவுரிமை பெற்றுள்ளவர்களின் தொகை 5,95,000 ஆக உள்ளது. ஏற்கனவே இந்திய - பாகிஸ்தானிய வதிவோர் (பிரஜாவுரிமை) சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட 1,34,000 பேரையும் கணக்கில் எடுத்துக்கொண்டால் இது 7,29,000 (1964 புள்ளிவிபரக் கணக்குப்படி) ஆக உள்ளது. இவர்களையும் இவர்களுடைய சந்ததியினரையும் சேர்த்துக்கொண்டால் 2012 ஆம் ஆண்டில் இந்திய வம்சாவளியினரின் தொகை 12,39,300 ஆக இருக்கலாம். இத்தோடு இலங்கை வம்சாவளி பிரஜை சட்டத்தின் மூலம் (சட்டவாக்கம் 18, 1948) பதிவாகிய சில இந்திய வம்சாவளியினரையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஆனால் பல இந்திய வம்சாவளித் தமிழர், இலங்கைத் தமிழர் என்று தொகை தவறாக மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் கணிக்கப்பட்டிருப்பதால், கவனமாகச் செய்யப்பட்ட மதிப்பீட்டின்படி இந்திய வம்சாவளித் தமிழர் மொத்தம் 2016 இல் 16,00,000 பேருக்கு அதிகமாக உள்ளனர் என்று புள்ளியியல் நிபுணர்களால் கணக்கிடப் பட்டுள்ளது. இன்று இவர்கள் அனைவரும் இலங்கைப் பிரஜைகள்.

சமூக நிலைமாற்றம் ஏற்பட்டுவருவதால், உயர்தர வகுப்பினர், மத்திய தர வகுப்பினர், பல்வேறு திறன்களை உள்ளடக்கிய சேவையாளர்கள், பட்டதாரிகள், ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், வைத்திய கலாநிதிகள், சட்டத்தரணிகள், நீதிபதிகள் என்று ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துக் கொண்டு வருகின்றனர். ஒரு புதிய கண்ணோட்டத்திலிருந்து இந்திய வம்சாவளித் தமிழரை பார்க்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது.

இதர சமூகங்களைப் போலவே மலையகத் தமிழ் மக்கள் மத்தியிலே பல வர்க்கப் பிரிவுகள் ஏற்பட்டுள்ளன. இன்று மத்திய கிழக்கு நாடுகளில் மட்டுமல்லாது அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து. ஐரோப்பா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலே சிறிய அளவில் என்றாலும் பல மலையகத் தமிழர்கள் திறமைசாலிகளாக உயர் தொழில் புரிந்து வருகின்றனர். இந்தப் போக்கு மென்மேலும் அதிகரித்துக்கொண்டிருக்கும் என்பது தெளிவாகத் தெரிகிறது.

இத்தகைய முன்னேற்றங்கள் நடந்த போதிலும் பல்கலைக்கழக உயர் கல்விக்கு போதுமான மலையக மாணவர்கள் உள்வாங்கப்படுவதில்லை. மற்றும் அரச நிர்வாக சேவையில் போதுமானவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. வைத்திய சேவை மற்றும் உயர் உத்தியோகங்களிலும் மலையகத் தமிழர்களைக் காணவில்லை. மலையகத்துக்கு என்று ஒரு பல்கலைக்கழகம் இல்லை என்ற ஆதங்கமுண்டு. இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதே இன்று தலையாய பிரச்சினையாக உள்ளது.

பெருந்தோட்டங்களில் பாரிய அபி விருத்தியை மேற்கொள்வது அவசியமானதால் அதிக முதலீடுகள் இல்லாவிட்டால் இது நடைபெறாது என்று பொதுவாக உணரப்படுகிறது. நவீன முறைகளில் பன்முகப்படுத்தப்பட்ட முறையில் எப்படி அபிவிருத்தி செய்யலாம் என்பது மிகவும் ஆழ்ந்து கவனிக்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

ஒரு மக்கள் கூட்டம் ஒரு பிரதேசத்தில் மிகச் செறிவாக வாழ்ந்தாலும் சரி அல்லது வெவ்வேறு செறிவுடன் பல பிரதேசங்களில் வாழ்ந்தாலும் இனத்துவ அடையாளம் என்பது முன்னேற்றத்திற்கு அடிப்படையான ஒரு அம்சமாகும்.

இந்திய வம்சாவளித் தமிழர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு முக்கியமான அரசியல் பிரச்சினைகள் சகல மட்டங்களிலும் பிரதிநிதித்துவம், போதுமான அளவு கீழ் மட்டம் முதற்கொண்டு உயர் மட்டம் வரை அரச நிர்வாகத்தில் பங்கு, நீண்டகால பின்தங்கிய நிலையிலிருந்து துரிதமாக முன்னேற்றம் அடைவதற்கு விசேட அபிவிருத்தித் திட்டங்கள், குறிப்பாகக்கல்வி, தொழிற்பயிற்சி, வீடமைப்பு போன்றவற்றில் அதிக முதலீடு என்பவை பிரதான பிரச்சினைகளாகின்றன. பாராளுமன்றத்திலும் மத்திய நிர்வாகத்திலும் எந்த அளவுக்கு இடம்பெற வேண்டுமோ அதேபோல மாகாண நிர்வாகங்களிலும் உள்ளூராட்சி நிர்வாகங்களிலும் உரிய முறையில் பிரதிநிதித்துவம் பெற்றால்தான் அரசியல் நீரோட்டத்தில் இணைய முடியும். இதற்கு அடித்தளமாக அமையும் வகையில் இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கென ஒரு அபிவிருத்தி, கலாசார அமைப்பு உருவாக்கப் பட வேண்டியது அத்தியாவசியமாகும். இத்தகைய ஓர் அமைப்புக்கு பிரதேச ரீதியான கிளை அமைப்புகளும் இருப்பது அவசியமாகும்.

இத்தகைய அமைப்பின் மூலம் மலையகத்தில் பல்வேறு தோட்டங்களிலே காமன் கூத்து, அர்ச்சுனன் தவசு, பொன்ன சங்கர் என்ற பல்வேறு கூத்துக்களை வளர்க்க முடியும். மற்றும் சாஸ்திரிய, நாட்டுப்புறக் கலைகளை வளர்ப்பதற்கு இது பேருதவியாகவிருக்கும். ஆலயங்களை ஒட்டிய திருவிழாக்களும் மற்றும் கலைகளின் வெளிப்பாடுகளும் மலையகத்திற்கே உரிய ஒரு தனித்தன்மையோடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இது பாதுகாக்கப்பட வேண்டியதொன்றாகும்.

இவ்வாறு செறிந்தும் பரந்தும் வாழுகின்ற ஒரு சமூகத்திற்கு பல நாடுகளில் கலாசார அபிவிருத்தி அமைப்புகள் உள்ளன. இந்த ஆலோசனையை சர்வகட்சி மாநாட்டுக்கு சமர்ப்பித்தபோது இதற்கு ஏகமனதாக வரவேற்பு இருந்தது. மேலும் இந்திய வம்சாவளி மக்கள் மிகச் செறிவாக வாழுகின்ற நுவரெலியா, ஹற்றன் மாவட்டத்தில் அல்லது பதுளை போன்ற மாவட்டத்தில் பல்கலைக்கழகம் மற்றும் அபிவிருத்தி நிறுவனங்கள் அமைக்கப்படுமானால் அனைவருக்கும் பயனுள்ளதாக இருக்கும். நுவரெலியா போன்ற மாவட்டத்தில் இதர மாவட்டங்களில் உள்ள மலையகத் தமிழர்களுக்கு உதவும் வகையின் வசதி உள்ள பாடசாலைகளும் தொழில் நிறுவனங்களும் பயிற்சி நிலையங்கள் அமைக்க முடியும். பதுளை, கண்டி போன்ற மாவட்டங்களில் நுவரெலியா போன்று இல்லாவிட்டாலும் நிறுவன அமைப்புக்களை ஏற்படுத்த முடியும். இது பிரதேசம் சாராத ஒரு இனத்துவத்திற்கு தன்னம்பிக்கையை ஏற்படுத்தி பிற இன மக்களோடு நல்லுறவை வளர்க்கப் பெரிதும் பயனுள்ளதாக இருக்கும்.

வரலாறு முக்கியத்துவம் பெறுவது இயல்பேயாகும். வரலாற்றிலிருந்து பல பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம். விட்ட தவறுகளை நிவர்த்தி செய்யலாம். ஆனால் வருங்கால சாதனைகளே முக்கியமானவை என்பதைக் கருத்திற்கொள்ள வேண்டும். “நேற்றைய ஞாபகங்களிலிருந்து விடுபட்டால்தான் நாளைய வெற்றிகளை நோக்கி செல்ல முடியும். இன்று நீ செய்வதுதான், நாளைய வெற்றியை உறுதிப்படுத்தும்.” இது மகாத்தா காந்தியின் கூற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப் பெருவெளி

தியத்தலாவ எச். எப். ரிஸ்னா

கடல் போன்றநெஞ்சுக்குள்
அலையடிக்கும் நினைவுகள்
நினைவுகளைகறையானாய்
அரிக்கின்றதலைவிதிகள்!

தலைவிதியின் வழியினிலே
போகின்றபயணங்கள்..
பயணத்தின் நடுவினிலே
பயம் சூழும் தருணங்கள்!

தருணங்கள் கிடைக்குமென
நம்பியிருக்கும் பொழுதுகள்..
பொழுதுகள் விடியுமென
எதிர்பார்க்கும் நிமிடங்கள்!

நிமிடங்கள் நலன் பெறவே
நிதம் நிகழும் வேண்டுதல்கள்
வேண்டுதல்கள் பலித்திடலே
வேண்டிநிற்கும் யாசகங்கள்!

யாசகங்கள் தினம் தொடர்ந்தால்
துரத்திவிடும் காலங்கள்
காலத்தின் பெருவெளியில்
மனம் கொல்லும் வேதனைகள்!

வேதனைகள் இரக்கமின்றி
வாட்டுகின்றதுன்பங்கள்
துன்பங்கள் தொடர்ந்துவந்து
துளைத்துவிடும் பெருவலிகள்!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் உயர்கல்வியை மையப்படுத்துவதா? பரவலாக்குவதா? கொள்கைசார் விவாதம்.

வித்தியாநிதி மா. சே. மூக்கையா
பேராசிரியர் (ஓய்வுநிலை)

ஒரு நாட்டின் தேசிய மனித வள அபிவிருத்திக் கொள்கை தொடர்பில் தீர்மானம் செய்யும் தலைவர்களும் நிறுவனங்களும் அந்நாட்டின் எதிர்கால இன ஐக்கியம், சமூக உறவுகள், பாலின சமத்துவம், பொருளாதார அபிவிருத்தி என்பன தொடர்பில் தீர்க்க தரிசனமிக்க சிந்தனைகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்னும் தொலைநோக்கு மிக்க எதிர்பார்ப்புடன் எதுவித சமரசமும் செய்து கொள்ள முடியாது என்னும் சிந்தனையுடன் வாழ வேண்டிய ஒரு காலகட்டத்தில் தான் நாம் வாழ்ந்து வருகின்றோம். வளர்ச்சி யடைந்த சில நாடுகளிலும்கூட சமூக உறவுகளில் சில பிரிவினரிடையே பிளவுகளும் விரிசல்களும் காணப்படுகின்றன. ஆனால், வளர்ச்சி யடைந்து வரும் பல நாடுகளிலோ இவ்வாறான பிரச்சினைகள் மலிந்து காணப்படுவது ஒரு புறமிருக்க அவற்றை விரிவடையச் செய்வதாகவே பல சக்திகள் அதுவும் குறிப்பாக சமய பெறுமானங்கள், பொருளாதாரப் பிரச்சினைகள் தொடர்பில் தீர்மானம் செய்வதில் மேற்கொள்ளப்படும் பல்மட்ட செய்முறைகள் உட்பட அரசியல் நிலைவரங்களும் அவற்றை ஆசுவாசப் படுத்துவதற்கு மாறாக தூண்டிவிடும் வழியிலான ஒரு போக்கினைக் காட்டுவன வாகவே உள்ளமை கவலைக்குரியதாகும்.

இக்கட்டுரை பல்கலைக்கழகங்களின் அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீடு செய்யும் செய்முறைகளின் போது இலங்கையில் தீர்மானம் செய்யும் தரப்பினர் நாட்டின் இன ஐக்கியம் மற்றும் சமூக உறவுகளில் காணப்படும் கள நிலைமைகளை போதியளவுக்கு கவனத்திற் கொள்ளாதும் இயந்திர கதியில் மட்டுமே மனித உறவுகளை மதிப்பீடு செய்வதும், தனியே பொருளாதார ரீதியிலான செலவுகளினால் ஏற்படும் விளைவுகளை மாத்திரம் கவனத்திற் கொண்டும் செய்த தீர்மானங்களினால் விளைந்துள்ள சில பக்க விளைவுகளை எடுத்துக் கூறுவதனை பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது.

சிறுபான்மையினத்தவர்களது தேவைகள் புறக்கணிக்கப்பட்டமை இன்னுமோர் குறிப்பிடத் தக்க குறைபாடாகும்.

இன்றைக்கு சற்று ஏறக்குறைய ஒரு தசாப்தத்திற்கு முன்னர் பல்கலைக்கழக மட்டத்தில் தீர்மானம் செய்யும் ஒரு குழுவினரை தலைமை தாங்கும் பொறுப்புடன் ஏறத்தாள ஐந்து வருடங்கள் பணியாற்றியிருக்கின்றேன். அதில் எனது பதவிக் காலமானது இலங்கையின் இன முரண்பாடுகளின் வரலாற்றில் தொடர்பு கொண்ட ஆயுதப்போராட்ட தசாப்தத்தின் உச்ச கட்ட காலப்பகுதியின் முக்கிய சம்பவங்கள் பலவற்றை சந்தித்த காலப்பகுதி என்றால் அது மிகையாகாது. அப் பல்கலைக்கழகம் யுத்த அரங்கப்பகுதியிலேயே அமைந் திருந்தது என்பதும் தொடர்பான தகவலாகும். அதற்குப் பத்து வருடங்களுக்கு முன்னே வடமாகாண யுத்த களத்தின் விளிம்பில் அமைந்திருக்கும் வவுனியாவில் இதனை ஒத்ததும் ஆனால் சற்று ஆக்ரோஷம் குறைந்ததுமான சூழ்நிலையில் உயர் கல்விக்கான கல்லூரி ஒன்றில் பொறுப்பான நிர்வாக அதிகாரியாக பணியாற்றினேன்.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மையம் கொண்டிருந்த ஆயுதப் போராட்டம் தொடர்பில் பல் சாராரதும் குவியம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம் என்பவற்றின் மீது கணிசமான அளவிற்கு காணப்பட்டது என்னும் கருத்திலும் எனக்கு உடன்பாடுண்டு. இதற்குப் பிரதான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில காரணங்கள் நிலவின. இம்மாகாணங்களின் இளைய தலைமுறையினரிடையே நாட்டின் இன முரண் பாடுகளுக்கான காரண காரியங்களை கணிசமான அளவுக்கு பகுத்தாராய்ந்து பார்க்கவும் அவை தொடர்பில் உணர்வு பூர்வமாக சமூக சிந்தனையுடன் கடந்த கால தேசிய மற்றும் சர்வதேச வரலாற்று அனுபவங்களுடன் தமது உள்ளூர் பிரச்சினைகளுக்காக மாற்று விதிகள் மற்றும் சமூகத்திற்கும் நாட்டிற்குமான தமது கடமைகள் பற்றி சிந்தித்து பார்க்க ஒப்பளவில் கூடிய தகவல்களையும் கல்வியறிவையும் (முழுமையாக யாவரும் பெற்றிருக்காவிட்டால்) இம்மாணவ சமூகத்தில் ஒரு சாரரிடம் இருப்பதற்கான வாய்ப்பு உண்டென்பதாகும். அதுபோன்று உயர் கல்வி பெறுமதி ஆராய்ச்சி பயனுள்ள பயிற்சி ஆராய்ச்சிக்கூடம் ஆகிய வசதிகளும் அறிவு சார் விவாதங்கள் போன்றவற்றிற்கான அண்மைக்கால நூல்கள் இணையத்தொடர்பு வசதிகள் இன்னும் அவ்வாறான சான்றோர்களுடனான தேசிய சர்வதேச தொடர்புகள் உட்பட பல சாதகமான வாய்ப்புக்களைப் பெற்று கையாளும் ஆசிரியர் குழாம் அந்நிறுவனங்களில் காணப்படுகின் றமையும் இன்னுமோர் முக்கிய காரணமாகும்.

இவ்விரு சாராரும் சமூகத்தில் நிலவும் பின்தங்கிய நிலைவரங்களின் காரணமாக நிலவும் சமூக சுமைகளுக்குக் காரண காரியம் தேடும் பக்குவமிக்கவர்களாகவும் ஆர்வம் கொண்டவர்களாகவும் இருப்பர். எனவே, இவ்வாறானவர்களுடன் இயங்கும் நிறுவனங்கள் மீது சமூகம் குவியம் கொண்டிருப்பது வியப்பல்ல. அதுவும் பெரும் அரசியல் காரணங்களுக்கான சமூகப் பிரச்சினைகளைப் பற்றி மேம்பட்ட வகையில் சிந்திக்க வாய்ப்பு கொண்டவர்களால் அக்காலகட்டத்தில் பொருத்தமான முறையில் வழிமுறைகள் கொண்டுவரப்படலாம். மற்றும் தலைமைத்துவம் வழங்கலாம். எதிர்பார்ப்புக்கள் நிலவியதிலும் வியப்பேதும் இருக்க முடியாது.

பல்கலைக்கழகத்தின் நிதி பற்றாக்குறை :

கிழக்குப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப் பட்ட அதேகாலப் பகுதிகளில் (1980களில்) றுகுணு பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப் பட்டிருந்தது. ஆனால் 22 வருடங்களின் பின்னர் இரண்டு பல்கலைக்கழகங்களினதும் கல்விசார் உட்கட்டமைப்பு, ஆராய்ச்சிக்கான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நன்கு பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் உட்பட்ட பல வசதிகளை ஒன்றுடன் ஒன்றை ஒப்பிட்டு பார்த்தால் அது மலைக்கும் மடுவுக்குமிடையேயான வேறுபாடுகளுடன் இயங்குவதனையே காண முடிந்தது.

2015 ஆம் ஆண்டு ஜூலை மாத உலக பல்கலைக்கழகங்களின்மட்ட மதிப்பீட்டில் றுகுணு பல்கலைக்கழகமானது 4525 ஆவது இடத்தில் இருந்தபோது கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம் 11,265 ஆவது இடத்தில் இருந்துள்ளது என்பதிலிருந்து அவை யிரண்டினதும் இன்றைய வளர்ச்சி நிலைமையில் உள்ள வேறுபாடுகளை ஓரளவு இனங்காண முடிகிறது.

ஒரு பல்கலைக்கழகத்தின் மிக முக்கிய வசதிகளில் நூல்நிலைய வசதியும் ஒன்றாகும். அது கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பெயருக்கு ஒன்று இருந்தபோதிலும் நான்கு கற்கை பீடங்கள் மற்றும் 1500 முழுநேர மாணவர்களைக் கொண்ட பல்கலைக் கழகத்தில் கல்வித்தேவைகளை பூர்த்தி செய்வதாக அது இருக்கவில்லை. இது போன்ற மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் தங்குமிட வசதி முற்றாக போதாமை, விவசாய பீடத்தின் விலங்குப் பண்ணைகள் ஆராய்ச்சி, பயிர் வளர்ப்பு என்பவற்றுக்காக சிற்றூழியர்கள் பல நூற்றுக் கணக்கானவர்கள் தேவைப்பட்ட நிலையில் அத்தியாவசிய தேவைகளுக்காக மட்டுமே ஊழியர்கள் சிலர் நியமிக்கப்பட்டிருந்தனர். அத்தியாவசிய ஊழியர்கள் உதாரணமாக பண்ணை மந்தைகளுக்கு உணவளிப்பவர்கள், கன்று ஈனுபவற்றை பராமரித்தல், மாணவர்கள் விடுதிகளுக்கு நீரிறைத்து விநியோகம் செய்தல், பாதுகாப்பு காவலாளிகள் போன்றோர்களுக்கு வளாகத்திலேயே இருப்பிட வசதி வழங்கப்படுவது அத்தியவசியமாகாது. ஆனால் அவர்களை அவ்வாறு தங்க வைக்கவும் இருப்பிட வசதிகள் போதியளவில் இருக்கவில்லை. இவையெல்லாம் சிறு சிறு உதாரணங்கள். ஒரு மத்திய வித்தியாலயம் பாடசாலையை எடுத்து (வந்தாறுமூலை) அதனுடன் சில தற்காலிக குடில்களையும் விஸ்தரிப்புக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் செய்தே பல்கலைக்கழகமாக அப்போதுவரை இயங்கி வந்தது. ஒரு அரசாங்கம் நடாத்திய இசைக்கல்லூரியை பல்கலைக்கழக அந்தஸ்துடன் இணைத்து இயக்க வேண்டும் என்று கிழக்கு மாகாண சமூகத்தின் நிர்ப்பந்தம் காரணமாக சுவாமி விபுலானந்தர் இசைக்கல்லூரி கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப் பட்டபோதே கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு முதன் முதலாக ஒரு முறையான ஐநூறு பேர்வரை அமரக்கூடிய ஆனால் பலகுறைபாடுகளுடனான ஒரு மண்டபம் கிடைக்கப்பெற்றது. அதனை முறையாக பராமரிக்க போதிய நிதி கிழக்கு பல்கலைக்கழகத்திடம் இல்லாமை பெரும் சுமையாய் இருந்தது.

மேற்கூறிய பற்றாக்குறைகளைவிட கல்விசார் விஸ்தரிப்புக்கான அபிலாஷைகள் பலவும் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டன என்றும் கூறலாம்.

அப்பல்கலைக்கழகத்தின் மேலாண்மைக் குழு (கவுன்சில்) கல்வியாளர் குழு (செனட்) சமூகத்தின் அங்கீகாரம் ஆகியவற்றுடன் மருத்துவபீடம் ஒன்றை அமைப்பதற்கான அடிப்படை ஆய்வறிக்கைகள் தயார் நிலையிலிருந்தபோதும் அதனை நிறைவேற்ற பல்கலைக்கழக மானியங்கள் காலத்திற்கு காலம் பின்தள்ளிப்போடும் உபாயத்தைப் பின்பற்றி தாமதித்து வந்தது.

விவசாய பீடத்தினை சிறந்த முறையில் விஸ்தரித்து உடனடி பின்னணி நிலமான கிழக்கு மாகாண விவசாயிகளுக்கு பல சேவைகளை வழங்குவதற்கான ஆராய்ச்சி வசதிகளை மேம்படுத்த முன்வைக்கப்படும் கோரிக்கைகள் மழுங்கடிக்கப்பட்டே வந்தன. கிழக்கு மாகாணமானது அடிப்படையில் ஒரு விவசாய மாகாணமாகும். பயிர்ச்செய்கை, மந்தை வளர்ப்பு, மீன்பிடி என்பவற்றுக்கான இயற்கை பௌதீக வளங்கள் காணப்பட்டன. பெருமளவு காடுகள் (தேக்கு காட்டாக்கம் உட்பட) இராணுவ காரணங்களுக்காக அழிக்கப்பட்டிருந்தன. பரந்த காட்டு நிலப்பரப்பில் மீள் காட்டாக்கம் பற்றிய சிந்தனை காணப்பட்டதாகவோ எதுவித அறிகுறிகளும் காணப்படவில்லை.

வாழைச்சேனை காகித ஆலை ஒன்றே குறிப்பிடத்தக்க பெரியளவு வரும்படியாக்கத் தொழிலாயிருந்தது. கிடைக்கக்கூடிய சில மூலப்பொருட்களுடன் உரமாக வைக்கோல், புல் உட்பட்ட பலவற்றை பயன்படுத்தி ஆலையை விஸ்தரித்து இயக்க பல பேராசிரியர்கள், மாணவர்கள் ஆய்வு நடவடிக்கைகளில் ஊக்குவித்திருந்த போதிலும் அவை கல்விசார் பயிற்சியாக மட்டும் அரைகுறையாக முற்றுப்பெற்றன. நடைமுறைப் பயன்பாட்டிற்கு கொண்டு வரக்கூடிய ஆராய்ச்சி நடவடிக்கைகளாக விருத்தி செய்ய அவை ஊக்குவிக்கப்படக் கூடிய வகையில் போதிய வளங்கள் கிடைக்கவில்லை. இது போன்றே கடல் நீரேரி (லகூன்), மீன்பிடி, பயிர்ச்செய்கை, உற்பத்திகள், மரமுந்திரிகை உற்பத்தி, நெல் உற்பத்தி, ஆழ்கடல் மற்றும் கரையோர மீன்பிடி, பால்பண்ணைத் தொழில், ஆடு வளர்ப்பு உட்பட்ட பல தொழில்களுக்கும் உள்நாட்டுச் சந்தையில் நிலவிய கேள்வியை பயன்படுத்தி விவசாயிகள் வளமடைய தேவையான புதிய உற்பத்தி முறைகள், சந்தைப்படுத்தல் வசதிகள் போன்றவற்றை பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டிய தேவைகள் இருந்தும் அவை உதாசீனம் செய்யப்பட்டன. பேராதனைப் பல்கலைக்கழக விவசாய பீடத்தின் மூலமாக கண்ணொறுவை மற்றும் மகாஇல்லுப்பலம ஆகிய இடங்களில் தொடர்ந்து செய்து வரும் பல விவசாயத்துறைசார் உதவிகளுக்கான மனிதவளம் உட்பட்ட ஊக்குவிப்புக்கள் அவற்றின் விவசாய பின்னணி நிலங்களின் மேம்பாட்டிற்கான உந்து சக்தியாக காணப்படுவதனை இங்கே சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும். இது போன்றே இரசாயனவியல் துறைக்கான ஆய்வுகூடம் மற்றும் பௌதீகவியல் துறைக்கான ஆய்வு கூடங்களை நிர்மாணிக்க நிதி ஒதுக்கீடு செய்ய அங்கீகாரம் கிடைத்தும் ஏறத்தாள எட்டாண்டுகள் நடைமுறைப்படுத்துவது இழுத்தடிக்கப்பட்டது. அக்கால கட்டத்தில் கிழக்கு பல்கலைக்கழகம் தனது மாணவர்களது கல்விசார் மேம்பாட்டிற்காக அவர்களது எதிர்கால வளர்ச்சிக்கான விஸ்தரிப்புத்திட்டங்கள், அப் பல்கலைக்கழகம் அமையப்பெற்றிருந்த புவியியல் பிரதேசத்தின் பின்னணி, நிலம், அங்கு வாழும் மக்களது எதிர்கால வளர்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன குறித்து மேற்கொள்ள வேண்டிய கல்விசார் கலாசார மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான நவீன ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டிய பொறுப்புக்கள் அனைத்தும் நிதி மற்றும் ஏனைய வசதிகளை வழங்குவதில் நிலவிய தடைகளும் கட்டுப்பாடுகளும் காரணமாக மழுங்கடிக்கப் பட்டிருந்தன. ஏன் இவ்வாறான குறைபாடுகள் நிலவின என்பது பற்றிப் பார்க்க வேண்டும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC):

இலங்கையில் நடைமுறையில் உள்ள 15 பல்கலைக்கழகங்களும் அரசின் நிதி வழங்கலின் உதவியுடனேயே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மேற்பார்வையில் செயற்பட்டு வருகின்றன. பாடசாலை மட்டத்தில் க.பொ.த. (உ.த.) பரீட்சைக்கு விண்ணப்பித்த (2014 ஆம் ஆண்டு) ஏறத்தாழ 3 இலட்சம் பேரில் இரண்டரை இலட்சம் பேரே பரீட்சை எழுதி அதில் 1.55,447 பேர் (50 வீதம்) பல்கலைக்கழகக் கல்விக்கு அனுமதி பெறத் தேவையான குறைந்தபட்ச தகுதி பெற்றிருந்தனர். ஆயினும் அவர்களில் 20 முதல் 22 ஆயிரம் வரையில் தேர்ச்சி பெற்றவர்களே (15 வீதமானோர்) பல்கலைக் கழகம் சேர்வதற்கான அனுமதியைப் பெற்றுள்ளனர். இன்னும் 8 முதல் 10 ஆயிரம் வரையில் நிதி வசதி படைத்த குடும்பப் பின்னணியுடனான இளைஞர்கள் ஒன்றில் வெளிநாட்டுக் கல்வி அல்லது இலங்கையிலேயே உள்ள தனியார் துறையினால் வழங்கப்படும் கல்வி பயிற்சிகளில் இணைந்து கொள்கின்றனர். இதன் இறுதி விளைவாக உயர்கல்வியில் ஆர்வம் கொண்ட ஒரு இலட்சத்திற்கும் மேலான (1,22,000) இளைஞர்கள் உயர் கல்விக்கான வாய்ப்பேதுமின்றி விரக்கி நிலைக்குத் தள்ளப்படுவதில் வியப்படையத் தேவையில்லை.

இதனால் க.பொ.த. (சா.த.) கல்வியை முடித்துவிட்டு உயர்கல்வியை தொடர்ந்து மூன்று இலட்சம்பேர் வரை க.பொ.த. (உ.த.) பரீட்சை எழுத முன்வந்ததில் 10 பேருக்கு ஒருவராலேயே உயர்கல்வியை தொடர முடிந்திருக்க 2016 ஆம் ஆண்டளவில் ஏறத்தாள 2,50,000 பேர் ஒன்றில் ஏதோ ஒரு தொழிலை நாடிச்செல்லவேண்டிய நிர்ப்பந்த நிலைமையே ஏற்பட்டுள்ளது. அதிலும் உயர்கல்வி பெற தகுதி பெற்ற 1,55,447 பேரில் ஏறத்தாள (22,000 + 10,000) 32,000 பேரைத் தவிர்ந்த 1,23,000 இளைஞர்களின் நிலைமை பரிதாபகரமானது.

பல்கலைக் கழகங்களில் முழுமையாக செயற்படுவதற்கான தடைகள் :

அரச நிதியினையே நம்பி செயற்படும் இலங்கையின் அரச பல்கலைக்கழகங்களால் அரசினிடம் பெறும் நிதியுதவி போக எஞ்சிய பற்றாக்குறையை பல்கலைகழகங்களால் சுயமாக உழைக்க முடியாது. வெளிநாடு களில் குறிப்பாக வளர்ச்சி பெற்ற நாடுகளில் பல்கலைக்கழகங்கள் பல நாட்டின் தனியார்துறை நிறுவனங்களின் கூட்டுறவுடனும் மாணவர்களிடம் வசூலிக்கும் கட்டணங்களுடனும் சுயமாக செயற்பட்டு வருவது சில சமயங்களில் சுட்டிக்காட்டப்படுகின்றன. ஆனால், அந்நாடுகள் தாம் மக்களுக்கு நலன்புரி கொள்கையுடன் செயற்படுவதாக கூறிக்கொள்வதில்லை, அங்கே அனைத்து சேவைகளும் சந்தை நிலவரங்களுக்கு ஏற்ப சந்தை விலைப்பொறி முறையுடன் நிர்வகிக்கப்படுகின்றன.

அதற்கு உகந்ததாக அந்நாடுகளும் பல வளர்ச்சியுற்ற தொழில் நிறுவனங்களையும் அவற்றின் வளர்ச்சிக்காக புது புது ஆராய்ச்சிகளை காலத்திற்குக் காலம் மேற்கொள்ள வேண்டிய தேவைகளையும் கொண்டுள்ளன. அதனைவிட அந்நாடுகளில் தனிநபர் வருமானமும் பெரியளவில் காணப்படுகின்றது. உயர்கல்வி கற்றவர்களுக்கான தொழில் வாய்ப்புக்களும் பெரியளவில் காணப்படுகின்றன. ஆனால் இலங்கை இம்மூன்று நிலைவரங்களிலும் ஒப்பளவில் பெரிதும் பின்தங்கிய ஒரு நாடு. அதேவேளையில் இந்தியா போன்ற வளர்ச்சியடைதுவரும் நாடுகளிலும் தனியார்துறை சார்ந்த உயர் கல்வி நிறுவனங்களின் வளர்ச்சி பெரியளவில் காணப்படுகின்றமை சற்று மாறுபட்டதோர் நிலைவரமாகும். அது பற்றியும் கவனிக்க வேண்டிய தேவையுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவின் உயர்கல்வி நிறுவனங்களில் பல சர்வதேச தரங்களுடன் இயங்கும் அரசு நிதி வழங்கும் நிறுவனங்களாகும். உதாரணமாக ஐ.ஐ.டி. பிரதேச பொறியியல் கல்லூரிகள் மற்றும் ஜே.என்.யூ. என்னும் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் என்பன சர்வதேச தரமிக்கனவாக இருந்தன. அதேபோன்று பல தனியார் துறை பல்கலைக்கழகங்களும் இயங்கி தனியார் வர்த்தக-கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு ஆராய்ச்சி வசதிகள் வழங்கியும் இணை அனுசரணை வழங்கியும் வருவதோடு உள்ளூர் மற்றும் சர்வதேச கட்டணம் செலுத்தும் மாணவர்களை கற்பித்தும் வருகின்றன.

பொறியியல், மருத்துவ, தகவல் தொழில்நுட்ப கல்வி பயிற்சிகளில் சர்வதேச தர உயர்கல்வி நிறுவனங்கள் பல செயற்பட்டு வருகின்றன. அதேவேளையில் இளமாணிப் பட்டங்களை (Massification) பெருமளவுக்கு பொதுமக்கள் மயமாக்கும் கொள்கையின் அடிப்படையில் உயர்கல்வி கல்லூரி முறைகளின் கீழ் இந்தியா வழங்கி வருவது குறிப்பிடத்தக்க பிரதானக் கல்விக் கொள்கையாகும். இது அரச கல்லூரிகளில் மாத்திரமன்றி தனியார் துறையினராலும் பின்பற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் மத்திய தர வருமானப் பிரிவினராலும் மருத்துவம் தவிர்ந்த ஏனைய இளமாணி கற்கை நெறிகளை அவர்களது வருமானத்திற்கு உட்பட்ட வகையில் கல்லூரிகள் மூலமாகவே பெற்றுக்கொள்ளக் கூடிய ஏற்பாடுகள் உள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். ஆனால் இலங்கையில் இளமாணி கற்கை நெறிகளை தனியார் துறை கல்வி நிறுவனங்களின் மூலமாக மத்திய தர வர்க்கத்தினராலும் பெற்றுக்கொள்வது சாத்தியமாகவில்லை. இதற்கு கட்டணங்கள் மிக உயர்நிலையில் காணப்படுவதே பிரதான காரணம். இந்தியாவில் அரச மற்றும் தனியார் துறையினரால் 2013 ஆம் ஆண்டு 35,539 பட்டம் பெறுவதற்கான பயிற்சிக் கல்லூரிகள் இயங்கி 9 மில்லியன் பட்டதாரிகள் உருவாக்கப்பட்டுள்ளனர்.

அரசாங்கத்தின் நிதி நிலைமை :

அரசாங்கம் குறிப்பாக கடந்த மூன்று தசாப்தங்களாக தனது பாதுகாப்புச் செலவினங்களில் ஏற்பட்ட வானுயர்ந்த செலவினங்களால் சமூக நலன்புரி நடவடிக்கைகளுக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரிப்பதில் பெரிதும் இடையூறுகளைச் சந்தித்து வந்தது.

பல்கலைக்கழக ஆசிரியர்கள் உட்பட்ட பலர் இலங்கையின் கல்வித்துறையின் வளர்ச்சியில் காணப்பட்ட மந்த நிலையை சீர்திருத்தும் முயற்சிகளில் ஒ்ன்றாக கல்வித்துறை வளர்ச்சிக்காக நாட்டின் மொத்த வருவாயில் 6 சதவீத்தை ஒதுக்குமாறு பணி நிறுத்தம் உட்பட்ட பல கிளர்ச்சிகளை செய்து வந்தனர். யுத்தம் 2009 ம் ஆண்டில் முடிந்த பின்னரும் மழை குறைந்தும் தூவானம் நிலவியதனைப் போன்று பாதுகாப்புச் செலவினங்களில் எதுவித முன்னேற்றமும் ஏற்படாததோடு ஆட்சியாளர்கள் பொது நிதியை தவறாகவும் ஊழல்களுடனும் நிர்வகித்ததனால் கல்வித்துறை உட்பட்ட சமூக நலன்புரி தேவைகளுக்கு அரசாங்கத்தினால் போதிய நிதியை வழங்க முடியாதிருந்தது. ஆயினும் இப்போது புதிய அரசாங்கம் 6 சதவீதம் செலவழிக்க முன் வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். ஆனாலும் பணவீக்கம், கடந்த காலத்தில் நிறைவேறாது எஞ்சிக் கிடக்கும் குறைபாடுகளை நிவர்த்தி செய்தல் (Back lock) என்பவற்றால் இவ்வதிகரிப்பினாலும் பெரிய மாற்றங்கள் உடனடியாக ஏற்பட்டுவிடுமா என்பதனை பொறுத்திருந்தே பார்த்து முடிவுகளுக்கு வரமுடியும்.

அரசாங்கத்தின் குறுக்கு வழிகள் :

பல்கலைக்கழக கல்விக்கான மிதமிஞ்சிய கேள்வியினை பூர்த்தி செய்ய முடியாது போன அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசாங்கங்கள் தனியார் துறையின் பங்களிப்பை நாடுவதன் ஒரு குறுக்கு வழியாக பயன்படுத்துகிறதே தவிர அதனை நாட்டின் நன்மைக்காக பயன்படுத்துவதற்கு போதிய வகையில் ஆவனசெய்வதாக தெரியவில்லை. உயர்கல்வி நிலையங்களை சந்தைப் பொறிமுறைகள் மூலம் செயற்பட அனுமதி யளித்துள்ளது. உயர்கல்வி நிறுவனங்களை முறையாக கண்காணித்து கல்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரங்கள் பேண வழி செய்தல், கட்டணங்கள் மீதான கட்டுப்பாடுகள், ஆசிரியர்களது தரங்களைப் பேணுதல் என்பவற்றிற்கு போதிய முன்னுரிமைகளுடன் செயற்படுவதாகத் தெரியவில்லை. உயர்கல்விக்கான குறைந்த பட்ச தகுதி நிர்ணயத்தில் அளவுக்கு மிஞ்சிய நெகிழ்ச்சியான கட்டுப்பாடுகளுடன் மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். இதனால் உயர் கல்வி பட்டம் ஒன்றை பல குறுக்கு வழிகளில் பெற்றுக்கொள்ளவும் தனியார் துறை நிறுவனங்கள் வழி வகுப்பதாகவும் தமது முறையான கல்விப் பயிற்சியின் தகுதிகளை அது ஈற்றில் மழுங்கடித்து விடலாம் என்றும் அரச பல்கலைக்கழக மாணவர்களும் அவர்கள் சார்ந்த சில தரப்பினரும் ஆதங்கம் கொள்கின்றனர். காலத்திற்குக் காலம் இதனால் அவர்கள் தரப்பில் தனியார் துறை உயர்கல்வி நிறுவனங்களை தடை செய்யுமாறு கிளர்ச்சிகளும் செய்யப்படுகின்றன. எனவே, பொதுத்துறையினால் இலவசமாக உயர் கல்வியினை வழங்குவதற்கு இடையூறுகள் நிலவுவதனால் சுதந்திர காலத்தை அடுத்துவந்த காலப் பகுதியில் பின்பற்றப்பட்ட கல்விக் கொள்கையினை சில மாற்றங்களுக்கு உட்படுத்த வேண்டியது அவசியமாக உள்ளது.

பல்கலைக்கழகங்களில் அமைதியின்மை :

22 மில்லியன் மக்களுக்கு இன்று செயற்பட்டு வரும் 15 பல்கலைக்கழகங்களினால் உயர் கல்வி வழங்கப்பட்டு வருகின்றது. இவற்றில் ஏறத்தாழ 75,000 முதல் 90,000 வரையான முழு நேர மாணவர்கள் இளமாணி கற்கை நெறிகளைப் பின்பற்றி கற்று வருகின்றனர். ஏறத்தாழ 4,000 பல்கலைக்கழக ஆசிரியர்கள் இவர்களை பயிற்றுவித்து வருகின்றனர்.

இப் பல்கலைக்கழகங்களில் பல குறிப்பாக வடக்கு, கிழக்கு, தென் கிழக்கு மற்றும் தென் பகுதி பல்கலைக்கழகங்கள் மற்றும் ரஜரட்ட போன்றவை பெருமளவுக்கு பிரதேச பண்பினதாக உள்ளன. நாட்டில் கடந்த மூன்று தசாப்தங்களாக நிலவிய இன முரண்பாட்டு நிலைவரங்களால் இப்பல்கலைக் கழகங்களும் வெவ்வேறான காரணங்களால் பாதிப்புக்களை அவ்வப்போது பெற்று வந்துள்ளன. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மாணவர் அனுமதிக் கொள்கையும் அவ்வாறான பாதிப்புக்களுக்கு காரணமாயிருந்துள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழகம் தென் கிழக்கு மற்றும் வடக்கு பல்கலைக் கழகங்களின் வளங்களை முழுமையாக பயன்படுத்துவதாக எண்ணி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதிகளை வழங்கும்போது பிற மாவட்ட மாணவர்களையும் பெரியளவில் அனுமதித்து விடுகின்றது. பிற மாவட்டங்களிலிருந்து வரும் வேற்று மொழி சூழல் மற்றும் எதிர்பார்ப்புக்களுடனான இளைஞர்கள் அங்குள்ள சூழலுடன் இணைந்து செல்வதில் ஏற்படும் முரண்பாடுகள் காரணமாக பல்கலைக்கழகத்தை மூடும் மற்றும் பொலிஸார் தலையீடு என்ற அளவுக்கு நிலைவரங்கள் மாற்றம்பெற்ற சம்பவங்கள் பல வடமாகாண, கிழக்கு மாகாண பல்கலைக்கழகங்களில் இடம்பெற்றுக் கொண்டே வருகின்றன.

சில பீடங்களில் வெளி மாவட்ட பிற மொழி மாணவர்கள் குறிப்பாக பௌதீக விஞ்ஞான மற்றும் முகாமைத்துவ பீடங்களில் 50 வீதத்திற்கும் அதிகமாக காணப்படுகின்றன. இவர்களில் ஒரு சாரார் யதார்த்தங்களை ஏற்றுக்கொள்ள தயங்குவதாலும் இயல்பான சில சாதகமற்ற உணர்வுகள் மற்றும் எண்ணங்களின் விளைவாக முரண்பாடுகள் உருவாக்க தம்மையறியாது பங்காற்றி விலைபோய்விடுவதனால் பல்கலைக் கழகங்களில் ஏற்படும் கிளர்ச்சிகள் அப்பிரதேசத்திலும் பின்னர் தேசிய அரசியலிலும் விவாதங்களுக்கு வழிவகுத்து விடுகின்றன.

பல்கலைக்கழகங்களின் தரங்கள் அவற்றினால் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு வழங்கக் கூடிய வசதிகளின் அடிப்படையிலேயே குறிப்பாக பௌதீக வசதிகள், நூல் நிலையம், தகவல் தொழில்நுட்ப, கணினி வசதிகள், ஆய்வுகூட வசதிகள், பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், அவர்கள் செய்து வெளியிட்ட ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள், அவற்றின் தரத்திற்கான அங்கீகாரம், மாணவர்கள் உயர்கல்வி கற்க தேவையான பௌதீக வசதிகள் என்பவற்றின் நிலைமைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுத்தே நிர்ணயிக்கப் படுகின்றன. இவற்றின் அடிப்படையில் தான் தென்மாகாண ருகுணு பல்கலைக்கழகம் 4,525 ஆவது நிலையில் இருந்தபோது கிழக்குப் பல்கலைக்கழகம் 11,265 ஆவது நிலையில் தர நிர்ணயத்திற்கு ஆளாகியிருந்தது.

பல்கலைக் கழகங்களின் அனுமதிக் கொள்கை ஒரு சில இன முரண்பாடுகளுக்கு இட்டுச் சென்றிருக்க நாட்டின் பொருளாதார நிலைமை காரணமாகவும் 15 பல்கலைக் கழகங்களையும் சமாளிக்க முடியாத ஒரு நிலைவரத்தில் காணப்படுவதனால் உயர்கல்வி அபிலாஷை கொண்ட இன்னும் 1,20,000 இளைஞர்களுக்கும் உயர்கல்வி வசதிகளை அளிக்க முடியாத பெரும் குறைபாடும் நிலவுகிறது. எனவே இவை யாவற்றையும் சரிசெய்யவே முடியாதா? என்ற விரக்தி நிலைக்கு நாம் செல்ல வேண்டியதில்லை. மாறாக 1960 களில் திட்டமிடலில் சூமாச்சர் என்பவர் வெளியிட்ட சிறியவை அழகானவை என்னும் தத்துவத்தை பின்பற்றுவதால் ஓரளவுக்கு எமது பிரச்சினைகளை தீர்க்க முயற்சிக்கலாம் என நம்புகிறேன்.

சிறியவை அழகானவை (Small is Beautiful)

நகரத் திட்டமிடுபவர்களால் பாரிய உயரக் கட்டிடங்களை நிர்மாணிப்பதால் பல சூழலியல் தாக்கங்களை மனித இனம் எதிர்நோக்குவதாக கடந்த நூற்றாண்டின் மத்திய பகுதியின் பின்னர் (1960 களில்) குறிப்பாக பிரித்தானியாவில் சிந்திக்கப்பட்டது.

மாற்றுவழிகள் தீவிரமாக்கப்பட்டன. அதனால் பூங்கா நகரங்கள் (Garden Cities) மற்றும் நான்கு மாடிக் கட்டிடங்களுக்கு உட்பட்ட பௌதீக நிர்மாணங்கள் ஊக்குவிக்கப்பட்டன. தேவையில்லாத போக்குவரத்து இயக்கங்களை கட்டுப்படுத்தும் மற்றும் ஊக்குவிக்கும் வகையில் தொழில்களுக்கும் சேவைகளுக்கும் மக்கள் நகர மையம் மற்றும் ஏனைய பகுதிகளுக்கு பயணம் செய்வதனை மட்டுப் படுத்துவுதற்காக மக்களை அண்டிய பகுதிகளிலேயே தொழில்களையும் சேவைகளையும் உருவாக்கும் கொள்கைகள் அரசாங்கங் களினால் ஊக்குவிக்கப்பட்டன. இதே போன்று இலங்கையிலும் உயர் கல்வியை ஊக்குவிப்பதற்காக இளைஞர்கள் வாழும் பகுதிகளுக்கே அவற்றை வழங்கும் அடிப்படைக் கொள்கையை ஏற்று அதற்காக ஆவன செய்ய முன்வரவேண்டும்.

உயர்கல்வியை மக்களை நோக்கி கொண்டு செல்லல் :

முதல் பார்வையில் இது சாத்தியமானதா என்றே பலரும் எண்ணுவார்கள். சற்று ஆழமாக சிந்தித்து பார்த்தால் இது சாத்தியமானதே என்ற முடிவுக்கு வரலாம்.

பல்கலைக்கழகங்கள் நாடு முழுவதிலும் நிலவுவதாக இக்கருத்தைப் பற்றி சிந்திக்கக் கூடாது. உயர் கல்வி பெறும் வழிமுறை களை எளிமைப்படுத்துவதே இச்சிந்தையாகும். அத்துடன் உயர் கல்வியை பரவலாக்குதலும் இதன் நோக்கமாகும். அவை மாத்திரமன்றி பிரதேச அபிவிருத்தித் திட்டமிடலுக்கும் இது உகந்ததாகும். இலங்கையின் இனப்பிரச்சினை பற்றி ஆராய்ந்து பலர் அதற்கான பல காரணங்களினால் நாட்டின் பிரதேசங்க ளிடையே சமத்துவமின்மையை ஏற்படுத்தும் வகையிலான அபிவிருத்தி நடவடிக்கைகள் அமுலாக்கம் செய்யப்பட்டமையும் ஒரு காரணம் என்ற முடிவுக்கும் வந்துள்ளனர்.

இலங்கையில் உயர்கல்வி தொடர்பில் பிரதான கொள்கை மாற்றம் ஒன்று தேவைப்படுகிறது. இன்றைய பல்கலைக் கழகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள முழு நேர மாணவர்களில் 98 வீதமானோர் இளமாணிக் கற்கை நெறிகளுக்கே பதிவு செய்யப்பட்டுள்ளனர். இலங்கை அரசின் நிதி நிலைமைக்கு இது பெரும் சுமை என்பது மாத்திரமன்றி இதனால் நாட்டின் பல பகுதிகளிலும் பரந்து வாழும் மக்கள் இறுதியில் தமது உயர்கல்விக்காக 15 பல்கலைக்கழகங்களையும் நோக்கிச் செல்ல வேண்டியுள்ளது. இவற்றில் 1/3 பல்கலைக் கழகங்கள் கொழும்பு நகரிலேயே மையங் கொண்டுள்ளன. இதனால் நாட்டின் அபிவிருத்தி மற்றும் அதற்கான உட்கட்டமைப்பு வசதிகளுக்கான கேள்வியும் மேல்மாகாண பகுதிகளை நோக்கியே மையங் கொள்கின்றன. இவற்றின் பெருக்கல் விளைவுகள் நாட்டின் சில பகுதிகள் மட்டுமே மென்மேலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்து செல்ல கிராமிய மற்றும் நாட்டின் உள்நாட்டுப் பகுதிகள் தொடர்ந்தும் ஒப்பளவில் அபிவிருத்தியில் பின்தங்கியனவாக காணப்படுவதால் பிரதேசங்களிடையேயான ஏற்றத்தாழ்வுகளும் தொடர்வனவாக உள்ளன. எனவே உயர் கல்வி வசதிகளை வழங்க செய்யும் திட்டங்கள் நீண்ட கால நோக்கில் பிரதேசங்களிடையே சமத்துவ வளர்ச்சியை ஏற்படுத்தும் சிந்தனைகளை கொண்டதாக இருத்தலும் அவசியமாகிறது.

தற்போதைய நிலையில் மாவட்ட தலைநகரங்களை அண்டிய பகுதிகளில் மாவட்டம் ஒன்றிற்கு ஒரு கல்லூரிக்குக் குறையாத அளவுக்கு கல்லூரிகளை நாடு முழுவதும் அமைக்கும் ஒரு பத்தாண்டுத் திட்டம் சிறந்த வழிமுறையாக சிந்திக்கப்பட வேண்டும் என சிபாரிசு செய்யப்படுகின்றது. அதன் விளைவாக தற்போதுள்ள பல்கலைக்கழகங்களில் பெரும்பாலானவற்றை பட்ட மேற்படிப்பு ஆராய்ச்சித் தேவைகளுக்கான நிறுவனங்களாக பயன்படுத்துவதால் உயர் கல்வி மேம்படுவதற்கான வாய்ப்புக்கள் மேம்படுத்தப்படலாம். சம்பிரதாயமாகச் செய்யும் அவர் செய்ததை நாம் மாற்றிவிட வேண்டும் என்ற எண்ணம் ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு நாட்டின் எதிர்கால நலன் தொடர்பில் சிந்திப்பதனை விடுத்து நீண்டகால தீர்க்கதரிசனமிக்க பத்தாண்டு திட்டத்தினை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தயாரித்து பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெறுதல் அவசியமாகும். அதனை அடுத்தடுத்து வரும் அரசாங்கங்களும் பின்பற்றி செயற்படுத்துதலே நாட்டின் வளர்ச்சிக்கு நன்மை பயப்பதாக இருக்கும். இதற்காக நியமிக்கப்படும் திட்டமிடல் குழுவில் நாட்டின் முக்கியமான அனைத்து அரசியல் கட்சிகளினதும் பங்கேற்பு சமத்துவமான முறையிலும் அளவிலும் இடம்பெறுவதன் மூலமாக உருவாக்கப்படும் திட்டமானது நிலைத்து நிற்கக்கூடியதாக செயற்படவும் முடியும் என நம்பலாம்.

பிரதேசங்களின் சமமான வளர்ச்சி அதன் மூலமாக அவ்வப்பிரதேச மக்களது தேவைகளும் நலன்களும் பாதுகாக்கப்படுதல், நாட்டின் எதிர்காலம் மனித வளத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நீண்டகால நோக்கங்கள் உயர்கல்விக்காக இளைஞர்கள் மாகாணம் விட்டு மாகாணம் நோக்கி தற்காலிகமாக இடம்பெயர்தல் என்பவற்றை இயன்றளவுக்கு தவிர்த்தல். கொழும்பு, யாழ்ப்பாணம் போன்ற நகரங்களின் உயர் வாடகை மற்றும் செலவினங்களினால் மாணவர்களது வாழ்க்கைச் செலவு அர்த்தமற்ற வகையில் அதிகரித்தல் என்பனவற்றைக் கவனத்திற் கொண்டும் நாட்டின் இனரீதியான அரசியல் நிலைவரங்களை முறையாக கவனித்தும் தயாரிக்கக் கூடிய உயர் கல்விக்கான திட்டமிடலே இப்போதைய அத்தியாவசியத் தேவையாகும். அதே வேளையில் உயல்கல்விச் சேவையை வழங்க முன்வரும் தனியார்துறை சார் கல்லூரிகளை கவனத்தில் கொண்டதான தேசிய உயர்கல்விக் கொள்கை ஒன்றை நிபுணத்துவம் கொண்டவர்களுடனும் ஏனைய பங்குதாரர்களுடனும் முறையாக கலந்தாராய்ந்து நாட்டிற்கும் இளைய தலை முறையினருக்கும் பயன்படும் வகையில் ஒரு அர்த்தமுள்ள வகையில் உருவாக்குவதுடன் அது காலத்திறகுக் காலமும் தொடர்ச்சியாகவும் கண்காணிகப்படுவதுடன் தேவையான நிலைவரங்களை மட்டுப்படுத்தும் வகையில் திருத்தியமைக்கும் செயல்முறைகளும் இடம்பெறுவதாக அமைதல் வேண்டும்.

தேவையான கல்லூரிகளின் அளவு :

இன்றைய நிலவரத்தில் இலங்கையில் வருடாந்தம் ஒன்றரை இலட்சம் இளைஞர்களுக்கு உயர்கல்வி பெற வேண்டிய எதிர்பார்ப்பு உள்ளதாக அனுமானிக்கலாம். இந்தியாவில் 35,000 கல்லூரிகளால் 90 இலட்சம் பேர் பட்டம் பெறப் பயிற்றுவிப்பதனை உதாரணமாகக் கொண்டு பார்த்தால் இலங்கைக்கு ஏறத்தாள 200 கல்லூரிகள் தேவைப்படலாம். ஆயினும் இது அடுத்து வரும் 10 வருடங்களில் ஏற்படக்கூடிய குடித்தொகை பெருக்கம் மற்றும் உயர்கல்வி பற்றிய சமூகங்களின் கருத்துக்களில் ஏற்படக்கூடிய மாற்றங்களாலும் பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய மாற்றங்களாலும் உயர்கல்வி வசதிகளின் தேவைகளிலும் மாற்றங்கள் ஏற்படலாம். உயர்கல்வித் தேவைகளைப் பற்றிய மதிப்பீடும் அவ்வாறே கருத்து மாற்றங்களையும் கவனத்திற்கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்திற்குக் காலம் மாற்றங்களாகப் பற்றிக் கண்டறிந்ததாக இருக்க வேண்டியுள்ளது.

எனவே, இவை யாவற்றையும் கவனத்திற்கொண்டு பார்க்கும்போது உயர்க்ல்வியை மக்கள் மயமாக்கி இப்போதுள்ள மக்கள் தொகை உயர் கல்விக்கான கேள்வி என்பனவற்றின் அடிப்படையில் கல்லூரிச் சேவைகளின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் அவை நிர்ணயிக்கப்பட வேண்டியுள்ளது. ஆரம்பத்தில் மாவட்டத்திற்கு ஒரு கல்லூரியென ஆரம்பித்து பத்து வருடங்களில் அவை தேசிய மட்டத்தில் முழு நாட்டிலும் 200 கல்லூரிகள் வரை செயற்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்புடனான ஒரு நீண்ட கால நோக்கம் கொண்ட கொள்கையின் உருவாக்கம் தேவைப்படுகின்றது என்று நம்பலாம்.

உயர்கல்வியை பேரளவில் வளர்ப்பதன் நோக்கம் :

உலக நாடுகளின் உயர்கல்வி பற்றிப்பார்க்கும் போது அது இரண்டாம் நிலைக் கல்வியை பூர்த்தி செய்த பின்னர் தொடர்ந்து முறைசார் நிறுவனங்கள் மூலமாக உயர் கல்வியை பூர்த்தி செய்த ஒரு நிலை என்றும் அதனைப் புடைநிலைக் கல்வி (Teritary Education) என்றும் கூறலாம். இதனை உலக வங்கியின் குறிப்பான வரைவிலக்கணத்தின் படி பார்த்தால் அது பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகள், தொழில் நுட்ப பயிற்சி நிறுவனங்கள், சமூக கல்லூரிகள், தாதிமார் பாடசாலைகள், ஆராய்ச்சி கூடங்கள், முதன்மை நிலை மையங்கள் மற்றும் தொலைக்கல்வி நிலையங்களால் வழங்கப்படும் உயர் மட்ட கல்விப் பயிற்சி எனப்படுகின்றது. 25 முதல் 64 வயதான குடித்தொகையினரில் புடைநிலைக்கல்வியை பெற்றவர்களது வீதாசாரத்தை பொறுத்து 2014 ஆம் ஆண்டில் அபிவிருத்தி அடைந்த 15 நாடுகளில் நிலைமை பின்வருமாறு காணப்பட்டது:

தரம்		
1	கனடா	54 வீதம்
1	ரூசியா	54 வீதம்
3	இஸ்ரேல்	49 வீதம்
4	ஜப்பான்	48 வீதம்
5	லக்சம்பேர்க்	46 வீதம்
6	தென்கொரியா	45 வீதம்
7	ஐக்கிய அமெரிக்கா	44 வீதம்
8	நோர்வே	42 வீதம்
8	ஐக்கிய இராச்சியம்	42 வீதம்
8	பின்லாந்து	42 வீதம்
8	அவுஸ்திரேலியா	42 வீதம்
9	அயர்லாந்து	41 வீதம்
10	சுவிற்சர்லாந்து	40 வீதம்
11	சுவீடன்	39 வீதம்
12	சிங்கப்பூர்	38 வீதம்

புடைநிலைக் கல்வி மட்டத்தில் மேற்கூறியவாறு நன்கு வளர்ச்சியடைந்த நாடுகள் காணப்பட வளர்ச்சியடைந்து வரும் பெரும்பாலான நாடுகளில் அது பத்து வீதத்திற்கு குறைவாகவே காணப்படுகின்றது. இலங்கையின் நிலைவரமும் அத்தகையதே யாகும்.

இலங்கையில் உயர்கல்விக்காக 15 தேசிய பல்கலைக்கழகங்கள், அவற்றுடன் இணைந்த 7 பட்ட மேற்படிப்புக்கான நிறுவனங்கள், 9 உயர்கல்வி நிறுவனங்கள், மற்றும் 7 பட்டங்கள் வழங்கும் நிறுவனங்களும் நடைமுறையில் செயற்பட்டு வருகின்றன. ஆயினும் அவற்றால் இறுதியில் உயர் கல்விக்கு தகுதி பெறுபவர்களில் 16 - 18 வீதமானோரே உயர்கல்வி வாய்ப்பினைப் பெறுகின்றனர். இதனால் குடித்தொகையிலும 7 முதல் 10 வீதமானோரே இவ்வாறான உயர் கல்வியினை பெற்றவர்களாக (24 வயதுக்கு மேற்பட்டவர்களில்) காணப்படுகின்றனர்.

ஆயினும் ஒரு தரப்பினர் நாடு பொருளாதாரத்தில் வளர்ச்சியுற்று கல்வி கற்ற அனைவருக்கும் தகுந்த தொழில் வாய்ப்புக்களை தரக்கூடிய நிலையை அடையாத நிலையில் உயர் கல்வியை வழங்குவதால் என்ன பயன் என்ற கேள்வியை எழுப்புகின்றனர். அதில் உண்மை இல்லாமல் இல்லை. ஆனால், இது கோழியா முட்டையா முதலில் ஏற்படுவது என்பது போன்ற கேள்வியாகும். வளர்ச்சியடைந்த நாடுகள் பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்த பின்னர் தான் தமது மக்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்கல்விக்கு பயிற்றுவித்தனவா என்ற கேள்வியை பரிசீலிக்க வேண்டும். அனைத்து வளர்ச்சியடைந்த நாடுகளும் 19 ஆம் நூற்றாண்டு முதலாகவே தமது மக்களை விஞ்ஞானம் உட்பட அனைத்து தொழில்துறை சார் கல்வி பயிற்சிகளிலும் மேன்மையடைய ஊக்குவித்து வந்துள்ளன. தென்கிழக்கு மற்றும் தூரகிழக்கில் பொருளாதாரத்தில் வளர்ச்சியுற்றுள்ள ஜப்பான், தென்கொரியா, தாய்வான், கொங்கொங், சிங்கப்பூர் போன்றனவும் அனைத்து மட்ட கல்வி பொறுத்தும் பெரும் ஆர்வம் காட்டி வந்துள்ளதுடன் இன்று உலகளாவிய உயர்நிலையிலும் காணப்படுகின்றன.

ஆனாலும் உயர் கல்வியை ஊக்குவிக்கையில் கல்வி கற்பவர்களை நவீன பொருளாதார சந்தையின் எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்யக்கூடியவர்களாக கல்விப் பயிற்சியை பெறும் வகையில் ஊக்குவிப்பது முக்கியமான தேவையாகும். நவீன பொருளாதாரத்திற்கு கூடிய தொழில்நுட்ப முகாமைத்துவ தொடர்பாடல் போன்ற துறைகள் உட்பட பயிற்சிகள் முக்கிய மானவை என்பது யதார்த்தமாக இருப்பதால் அவற்றிற்கு கூடிய முக்கியத்துவம் வழங்கும் கல்வி முறை முக்கியமானதாகும். எனவே உயர் கல்வி என்பது நாட்டின் சமூக பொருளாதார சந்தை மற்றும் கலாசார நிலைவரங்களை கவனத்திற் கொண்ட வகையில் திட்டமிட்டதாக அமைய வேண்டும் என்ற கருத்திற்கு எதுவித மாற்றுக் கருத்துக்களும் இருக்க முடியாது.

மாவட்ட கல்லூரிகளும் தொழில் நுட்பக் கல்லூரிகளும் இவற்றை அடிப்படைக் கொள்கையாக கொண்டே ஸ்தாபித்து நடைமுறைப்படுத்த வேண்டியனவாக உள்ளன.

2015 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின்படி 10 ஆண்டுகள் பெற்ற பாடசாலைக் கல்வியின் பின்னர் உலக மட்டத்தில் சிங்கப்பூர், தென்கொரியா, தாய்வான், ஜப்பான் போன்ற நாடுகளே கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களில் மாணவர்களை உலக மட்டத்தில் உயர் தரத்தில் பயிற்றுவித்துள்ளதாக தெரிய வந்துள்ளது. இதற்காக 120 உலக நாடுகளில் 6 இலட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் இப்பாடங்களில் பரீட்சை எழுதியே தரப் படுத்தப்பட்டுள்ளனர். ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானிய பாடசாலை மாணவர்களும் கூட பத்து அல்லது பதினோராவது இடங்களையே பெற்றிருந்தனர். இதிலிருந்து இன்று உலகில் பெரும் அபிவிருத்தி கண்ட பாரம்பரிய செல்வந்த நாடுகளைவிட உலகின் புதிய பொருளாதார வேங்கைகள் என வர்ணிக்கப் படும் நாடுகளே கல்வியில் உயர் நிலையில் காணப்படுகின்றன என்ற விபரத்தை நாம் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும். இது நாடுகளின் வளர்ச்சிப் பாதையில் கல்வி எந்தளவுக்கு பங்காற்ற முடியும் என்பதற்கான குறிகாட்டியு மாகும். இன்னோர் வகையாக கூறுவதானால் நாடுகளின் சிறந்த அபிவிருத்திக்கு இளைய தலைமுறையினருக்கு சிறந்த கல்விப்பயிற்சி தேவை என்பதனை இப்பெறுபேறுகள் எமக்கு உணர்த்துவதாக உள்ளதாகவும் உள்ளன. அதே போன்று உயர் கல்வியினை சிறந்த முறையிலும் காலத்திற்கு ஏற்ற வகையிலும் வழங்குவதற்காக எமக்கு பொருத்தமான வழி முறைகளை பின்பற்றுவதனை இனிமேலும் தாமதப்படுத்தக்கூடாது.

- நாம் சத்தியத்தின் வழியில் நடப்பவர்கள், ஜனநாயகப் பண்புகளை மதிப்பவர்கள், அதனால் எந்தத்தடை போட்டாலும் எங்களிடம் அச்சமென்பதில்லை. வரலாறு முழுவதும் மற்றவர்களுக்கு உழைத்துக் கொடுத்துவிட உரிமையற்றவர்களாய் மட்டும் வாழ்வதை இனியும் சகித்துக் கொள்ளமாட்டோம்.
- என் உள்ளத்தாலும் உணர்வாலும் வாழ்வு முழுமையும் மலையக மக்களின் உரிமைப் போராட்டங்களில் ஒன்றிவிட்ட என்னை, விண்வெளியில் வீசியெறிந்தாலும் என் உணர்வுகளும் உறவுகளும் நமது மக்களையே வட்டமிடும் செயற்கைக் கோளாக மாறுவேனே அல்லாமல் செயலிழந்து போகமாட்டேன்.

– இர.சிவலிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மரபில் அழகியல் நோக்கு...

பேராசிரியர் சபா. ஜெயராசா

செய்யும் தொழில்களை அடியொற்றிய சிந்தனைகள் வளர்ச்சியடைந்தமைக்கு இணையாக அழகியற் செயற்பாடுகளும் சிந்தனைகளும் நீட்சி கொண்டு வந்துள்ளன. ''அழகை உணர்தல்'' என்பது வாழ்வின் இருப்போடு இணைந்த ஓர் உளவியற் செயல்முறையாக இருப்பதனால் அது வர்க்க சார்புடையதாகவுமுள்ளது.

தமிழர் வாழ்வில் அழகு என்பது பல முனைத் தொடர்புகளைக் கொண்டிருந்தமையால் அதனைக்குறிப்பதற்குப் பல சொற்கள் தோற்றம் பெற்றன. பிங்கல நிகண்டில் அழகு என்பதைக் குறிக்கும் பல சொற்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. (ப.270) எடுத்துக் காட்டு வருமாறு: ஏர், வனப்பு, எழில், கிராமம், காரிகை, மா, அம்மை, கவின், செழுமை, பந்தம், தேசிகம், நோக்கு, அணி, அணங்கு, யாணர், பாணி, மாதர், மாழை, சாயல், வகுப்பு, வண்ணம், வளம், பூ பொற்பு, சேடு, பொன், சித்திரம், பத்திரம், மாமை, தளிமம், மயம், மஞ்சு, மதன், பாங்கு. அம், சொக்கு, சுந்தரம், தோட்டி, ஒப்பு, அந்தம், ஒண்மை, விடங்கம், அமலம், குழரு, கோலம், வாமம், காந்தி, அலங்காரம், கொம்மை, மனோகரம் மற்றும் சாரு.

பிங்கல நிகண்டு, வரன் முறைக் கல்விச் செயல்முறையை அடியொற்றி எழுந்த நூல். அழகியல் பற்றிய சிந்தனைகள் வரன்முறைக் கல்வியில் இடம் பெற்றிருந்தமையை மேற்குறித்த நீண்ட சொற்பட்டியல் விளக்குகின்றது.

தொழில் முறைகளுக்கும் அழகு உணர்ச்சிக்குமிடையே காணப் பெற்ற இணைப்பையும் மேற்குறித்த சொற்கள் புலப்படுத்துகின்றன. எடுத்துக்காட்டாக ஏர் என்ற சொல் வேளாண் செழிப்பிலிருந்து அழகைக் குறிக்கும் எண்ணக்கருவாக நீட்சிகொண்டது. தொழில் செய்யும் கை, எழில் எனப்பட்டது. அதுவே அழகைக் குறிக்கும் சொல்லாகவும் நீட்சிகொண்டது. மேலும் 'கை' என்ற சொல் அழகைக் குறிக்கும் என்று ஆசிரிய நிகண்டிலே குறிப்பிடப்பட்டிருத்தல் தொழிலும் அழகு தொடர்பான கருத்தை மீளவலியுறுத்துகின்றது.

தொன்மையான வரன்முறை சார்ந்த கல்வியில், செய்யுள் அழகின் வடிவமாகக் கொள்ளப்பட்டது. மேலும், தொல்காப்பியப் பொருளதிகார செய்யுளியலிலே செய் யுளுக்கும் அழகுக்குமுள்ள தொடர்புகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன (பொருள் 537).

"செய்யுள் மொழியால் சீர்புனைந்தியாப்ப
அவ் வகைதானே அழகெனப்படுமே"

செய்யுள் வழியாகக் கையளிக்கப்படும் பொருள், மனவெழுச்சிக்கோலங்கள், உவமை, உருவகச் சித்திரிப்புக் கோலங்கள், இசை உள்ளீடு முதலியவற்றின் செழுங்கலவைச் சேர்க்கை (Blend) அழகை உருவாக்குகின்றது. வாய்மொழி மரபிலிருந்து தோற்றம் பெற்ற பாடல் கல்வி நிலையில் ஒழுங்கமைக்கப்பட்ட இலக்கண விதிகளின் ஏற்றம் பெற்றமை அழகும் ஒழுங்கமைப்பும் தொடர்பான பிறிதொரு செயற்பாடு.

நாட்டார் வழக்கில் உடலியக்கத் (psychomotor) தொழிற்பாடுகளுடன் கலைகள் இணைந்திருந்தன. கூத்தும், சிற்பங்கள் ஆக்குதலும், ஓவியங்கள் வரைதலும் என்றவாறான செயற்பாடுகள் அவற்றுக்குரிய சுட்டற்காட்டுக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொன்மையான வரன்முறைக் கல்வி வழக்கில் சொல் (Verbal) ஊடகத்தைக் கொண்ட அழகியல் ஆக்கமே மேலோங்கி யிருந்தது. அதனை அடிப்படையாகக் கொண்டு யாப்பும் வளர்ச்சியடையத் தொடங்கியது. அச்செயற்பாடுகள் அனைத்தும் வரன்முறை அறிவுடன் உறவாடும் மேட்டுக் குடியினருக்குரிய ''புலனெறி வழக்கு'' என்ற நிலையை எட்டியிருந்தன.

சமூக வளர்ச்சியோடும் வரன்முறையான கல்வி வளர்ச்சியோடும் ''செய்யுள்'' என்ற வடிவம் நீண்ட பொருளுரைக்கும் தொடர் வடிவமாக நீட்சிகொண்டது. அதன் தொடர்ச்சி யானது காவிய வடிவத்தை எட்டியது.

தமிழ்ச் சூழலில் வரன்முறைக்கல்வி நிலை பேறு கொண்டிருந்தமையை தொல்காப்பிய நூலாக்கம் தெளிவுபடுத்தியுள்ளது. மெய்ப்பாடுகளும் செய்யுள் நயப்பும் உள்ளிட்ட அழகியற் பண்புகளை விளக்கும் முதல் நூலாகவும் அது விளங்குகின்றது.

வரலாற்றுத் தொடர்ச்சியில் செய்யுள் என்ற நிலையிலிருந்து இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ் நிலைக்குரிய வளர்ச்சி நிகழத் தொடங்கியது. "முத்தமிழ்" என்ற கருத்து வடிவம் தமிழ் அழகியற் கல்வியில் நிகழ்ந்த அகன்ற ஏற்றத்தைக் குறிப்பிடுகின்றது. தமிழ்ச் சூழலில் மட்டுமன்றி வடமொழிச் சூழலிலும் மூவகை நோக்கு வளர்ச்சியடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. வடமொழியில் ரசபிரம வாதம், நாதப் பிரமவாதம், வஸ்து பிரமவாதம் முதலாம் அழகின் உருவாக்க முப்பொருள்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இயல் இசை நாடகம் என்ற முத்தமிழ் வடிவிலே தோற்றம் பெற்ற காவியமாக, சிலப்பதிகாரம் எழுதப்பட்டது. நீண்ட அழகியல் அனுபவக் கையளிப்பு காவியங்களுக்குரிய சிறப்புப் பரிமாணமாகின்றது.

நீண்ட காவிய அமைப்பில் அனைத்துச் சுவைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன. அச்சுவைகள் பாத்திர வளர்ச்சியோடும், பாத்திர இடைவினைகளோடும் இணைந்திருந்தன. சிலப்பதிகாரம் அந்தப் பண்புகள் அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு காவியம்.

வட மொழிக் கல்வி மரபில் காவிய அழகியலை உருவாக்குவதில் "ஔசித்யம்" ஒரு முக்கியமான பண்பாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. அதன் பொருள் "பொருத்தப்பாடு" அல்லது ''உற்றிணைப்பு'' என்பதாகும். சிலப்பதிகாரத்தில் கதைக்கேள் கதைமாந்தர், கதைமாந்தர்களின் இடைவினைகள் உரிய முறையில் உற்றிணைப்புச் செய்யப்பட் டிருக்கும் நிலை தமிழகத்து அழகியற் கல்வி வளர்ச்சியினையும் அழகியலாக்கச் செயற் பாட்டினையும் தெளிவுபடக் காட்டுகின்றது.

அழகியற் கல்வியும் அழகிய லாக்கங்களும் சமூக மாற்றங்களோடு இணைந்து மாறுதலடைந்து வந்துள்ள மையைக் காணமுடியும். வணிக சமு தாயத்துக்குரிய அழகியல் சிலப்பதிகாரத்தில் எழுகோலம் பெற்றுள்ளது. அரங்க அமைப்பு ஆடை அணிகலன்கள், பல்வகை ஆடல் முறைமை, ஆடுவோருக்குரிய வெகுமதி வரன்முறையான அரங்கேற்றம் முதலானவை வணிகப் பண்பாட்டுடன் இணைந்த அழகியற் செயற்பாடுகள்.

பக்தி நெறிக் காலத்தில் "இறைசார்ந்த அழகியல்'' என்ற பண்பு வளர்ச்சியடையத் தொடங்கியது. வாழ்க்கை இருளிலிருந்து தோற்றம் பெற்ற அன்பு இறைவனை நோக்கித் திருப்பப்படலாயிற்று. அன்பின் அடிப்படையாகவே "பக்தி" என்ற அனுபவம் மேலெழுந்துகொண்டது.

பக்தி நெறிக் காலத்தில் பக்தியும் பாடலும் மீயுணர்வும் இசையும் கலந்த இலக்கிய அழகியல் தோற்றம்பெற நாயன்மாரதும் ஆழ்வாரதும் பாடல்கள் பக்தி இலக்கிய அழகியலை ஆழ்ந்து வெளிப்படுத்தின.

தமிழகத்தில் நிகழத் தொடங்கிய சொத்துரிமை வளர்ச்சியும் தனியாள் நிலைப்பட்ட உணர்வுகளின் வெளிப்பாடும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. தனியாள் நிலைப்பட்ட உணர்வுகள் பக்தியெழுச்சியுடன் ஒன்றிணைந்தவேளை முன்னர் கண்டறியப்படாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்துவமான அழகியற் கோப்புடன் இணைந்த பாடல்கள் தோற்றம் பெற்றன. அவை கேட்டல், தனித்துப் பாடுதல், கூட்டாகப் பாடுதல் என்ற முப்பரிமாணங்களைக் கொண்டதாக எழுச்சி கொண்டன. இறை சார்ந்த பக்தி அழகியல் ஈடுபாட்டுக்கு அவை உறுவளம் செய்வதாக அமைந்தன.

பக்திச் செறிவும் இசைச் செறிவும் கவிதைக்குரிய அணிநலன்களும் இணைந்த நிலையில் "பாடப்படும் பாடல்களாக" அவை எழுச்சிகொண்டன.

நடப்பு வாழ்க்கையில் நிகழும் ஆளிடைத் தொடர்புகளையும் உறவுமுறைகளையும் இறை அனுபவத்துடன் தொடர்புபடுத்துதல் பக்தி அழகியலின் பிறிதொரு பரிமாணமாகக் காணப்பட்டது.

இறைவனைத் தந்தையாகவும் தம்மைப் புதல்வனாகவும் கொண்ட உறவுமுறை ஞானசம்பந்தரிடத்துக் காணப்பட்டது. இறைவனைத் தோழனாகக் கருதுதல் சுந்தரரது தேவாரங்களில் இடம்பெற்றது. மணிவாசகர் தம்மைத் தலைவியாகவும் இறைவனைத் தலைவனாகவும் கொண்டு திருக்கோவையாரை "மதுரபாவம்" மேலோங்கப் பாடினர். ஆண்டாளும் அதே நிலையிலே தனது இறையன்பை மேலும் தீவிரமாக வெளிப்படுத்தினார்.

பக்தி அழகியலின் பிறிதொரு சிறப்புப் பரிமாணம் முழுமையான உடற்கூற்றுத் துலங்கலுடன் (Total Physical Response) தொடர்புபட்டு நிற்றலாகும். வகைமாதிரிக்கு மணிவாசகரின் திருச்சதகப் பாடல் ஒன்றினைக் குறிப்பிடலாம்

"மெய்தான் அரும்பி விதிர் விதித்து
உன் விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக்
கண்ணீர் ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உனைப்
போற்றி சயசய போற்றி யென்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய்
என்னைக் கண்டு கொள்ளே"

அறிதல், உணர்த்தல், உடலியக்கம் ஆகியவற்றுடன் இணைந்ததாக பக்தி அழகியல் வளர்ச்சியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

பக்தி நெறிக்காலத்தில் தமிழகத்து வரன்முறைக் கல்வி நிலையங்களுள் கோயில்களும் மடங்களும் முக்கியத்தவம் பெறத் தொடங்கின. பக்தியும் வழிபாடும் கல்விச் செயல்முறையும் ஒன்றிணைந்து கொண்டன. அவற்றுக்கு அரச ஆதரவும் கிடைக்கப்பெற்றது. கல்விக் கையளிப்பில் "நிறுவனமயப்பாடு" என்பது அக்காலத்தில் மேலும் வலிமை கொண்டு மேலோங்கியது.

பக்தி அழகியல் தனித்து பாடல்களுடன் மட்டும் கட்டுப்பட்டிராது, பிரயோக அழகியலாகவும் மாற்றம் பெறத் தொடங்கியது. கோயிற் கட்டடக் கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, முதலாம் துறைகளில் பிரயோக நிலை மேலோங்கியது. இறைவனது ஆடல் என்ற மனக்காட்சிக்கு உருவம் கொடுக்கும் வகையில் ஆடல்வல்லானின் உருவங்கள் செதுக்கப்பட்டன.

நாயன்மாரதும் ஆழ்வாரதும் கருத்து நிலை வடிவங்களுக்குக் காட்சி வடிவங்கொடுத்து, தேவரடியார் ஆடல் உருவாக்கம் பெற்றது. அதுவே பிற்காலத்தில் பரதம் என்ற அடையாளத்தைப் பெற்றது.

பக்தி அழகியலையும் ஆடல் அழகியலையும் ஒன்றிணைக்கும் கல்விச் செயற்பாடுகளும் நிலைபேறு கொண்டன. திருமூலரது திருமந்திரப் பாடலில் (2725) அதன் வளர்ச்சியைத் தெளிவாகக் காணலாம்.

"ஆனந்தம் ஆடரங்கு ஆனந்தம் பாடல்கள்
ஆனந்தம் பல்லியம் ஆனந்தம் வாச்சியம்
ஆனந்தம் ஆக அகில சராசரம்
ஆனந்தம் ஆனந்தக் கூத்தனுக்கே"

இதுவே தேவரடியார் ஆடலில் இறைவணக்கப் பாடலாக அமைந்ததென்று சொல்லப்படுகின்றது. தேவரடியார் ஆடல் வடமொழி அடைப்புக்கள் கொண்டு செல்லப்பட்டவேளை (1930 ஆம் ஆண்டுக்குப் பின்) மேற்குறித்த திருமந்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடும் முறைமை கைவிடப்பட்டு "ஆங்கிலம் புவனம்...." என்று தொடங்கும் நந்திகேஸ்வரரின் அபிநய தர்ப்பணப் பாடல் அறிமுகம் செய்யப்பட்டது.

தமிழில் அழகியல் வடிவங்களின் ஆக்கத்தில் கிராமிய அல்லது நாட்டார் மூலகங்களின் இணைப்பு இடம் பெற்று வந்தமை ஒரு முக்கியமான நிகழ்ச்சி. பொதுவாக அனைத்துப் பண்பாடுகளினதும் அழகியற் செயற்பாடுகளில் இப் பண்பு நீண்டு விரவியுள்ளது. பழந்தமிழ் இலக்கியங்களில் மட்டுமன்றி பிற்கால இலக்கியங்களிலும் அப் பண்பு மேலும் விரிவாக உள் வாங்கப்பட்டது.

தமிழ் மரபில் அழகியற் கல்வி என்பது தனித்த ஒரு பாடமாக இடம் பெறவில்லை. இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழோடு இணைந்ததாகவே அழகியல் எண்ணக்கரு கையளிக்கப்பட்டு வந்தது.

மேலை நாடுகளிலும் கடந்த நூற்றாண்டிலேதான் "அழகியல்" என்பது தனித்த ஓர் அறிவுத் துறையாகவும் ஆய்வுத் துறையாகவும் மேலெழுச்சி கொண்டது. ஆயினும் வரலாற்றுக் காலங்களில் அழகு பற்றிய சிந்தனை நீள் பதிவு கொண்டு வளர்ந்து வந்தமை, மனிதருக்கும் கலைகளுக்குமுள்ள உறவின் வெளிப்பாடாக உள்ளது.

பக்தி

நம்மை நல்லவர்களாக, புத்திசாலிகளாக செய்வது ஆண்டவனிடம் வைக்கிற பக்திதான். சிறுவயதிலிருந்தே தெய்வத்தை கெட்டியாகப் பிடித்துக்கொள்ள வேண்டும். வயது ஏற ஏற ஆசைகள் வரும். ஆசைகளால் இடைஞ்சல்கள் வரும். அதனால் சிறுவயதிலேயே பக்தியுடன் இருக்க பழகிக் கொண்டால் பிரச்சனை வராது. தினமும் இரண்டு வேளை 5 நிமிடம் தெய்வத்தை தியானம் செய்ய வேண்டும். கோபம், பொறாமை போன்ற கெட்ட குணங்கள் நம்மை தாக்குகின்றபோது ஆண்டவனை பிடித்துக் கொள்ளுங்கள். அவர் உங்களை விழாமல் காப்பாற்றுவார்.

- காஞ்சி மகா பெரியவர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமை மறுப்பும் வறுமையும் பெருந்தோட்டத் தமிழ் மக்களைப் பற்றிய ஓர் ஆய்வு

எம். சின்னத்தம்பி பேராசிரியர் (ஓய்வுநிலை)

இலங்கை வாழ் இந்தியத்தமிழரில் பெரும்பாலானோர் (60% - 65% சத வீதமானோர்) இன்றும் பெருந்தோட்டங்களிலேயே வாழ்ந்து வருகின்றனர். எஞ்சியோர் நாட்டின் ஏனைய பிரதேசங்களில் சில இடங்களில் செறிவாகவும் வேறு சிலவற்றில் பரவலாகவும் காணப்படுகின்றனர். இவ்வாறு தோட்டங்களுக்கு வெளியே வாழ்வோரை பின்வரும் பிரிவுகளுக்குள் அடக்கலாம்: (1) பெரியதும் சிறியதுமான வர்த்தகர்கள்; (2) அரச, தனியார் துறைகளில் தொழில் புரிவோர்; (3) தொழில்சார் வல்லுனர்கள்; (4) அண்மைக் காலங்களில் தோட்டங்களை விட்டு வெளியேறி கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் சில்லறைக் கடைகள், சிற்றுண்டிச் சாலைகள், உல்லாசப் பயண விடுதிகள் என்பவற்றில் சிற்றூழியர்களாக வேலை செய்வோர்; (5) நகர சுத்திகரிப்பு, வீட்டு வேலையாட்கள் போன்ற கீழ்மட்டத் தொழில் புரிவோர்; (6) சுயதொழில்களில் ஈடுபட்டுள்ள சிலரையும் தனிப்பட்ட ஒரு பிரிவினராகக் கருதலாம். தோட்டங்களுக்கு வெளியே தொழில்புரியும் இவர்களைப் பற்றி நம்பகமான தரவுகள் மிக அரிதாகவே காணப்படுகின்றன. மேலும் தோட்டங்களை விட்டு வெளியேறிய பலர் தமது பெற்றோர் மற்றும் நெருங்கிய உறவினர்கள் வாழும் தோட்டங்களிலேயே தமது வாக்குரிமையை பதிவுசெய்து கொண்டுள்ளதால் அவர்களும் தோட்டப்புற மக்களாகவே கருதப்படுகின்றனர். இக்கட்டுரை யானது பெருந்தோட்டத் தமிழர்களைப் பற்றியே ஆராய்கின்றது.

தோட்டத் தமிழ் மக்களிடையே வறுமைநிலை:

இலங்கையில் வறுமையானது கிராமத் துறை சார்ந்த ஓர் பிரச்சனையாகவே கருதுப்படுகின்றது. வறிய மக்களில் 80% வீதமானோர் கிராமப் புறங்களிலேயே காணப்படுவது இதற்கான காரணமாகும். 1990 க்கும் 2002 க்குமிடையே வறுமை நிலையானது தேசிய மட்டத்தில் 22% வீதத்தால் வீழ்ச்சியடைந்தது. எனினும், இதே காலப் பகுதியில் பெருந்தோட்ட மக்களிடையே அது 46% வீதத்தால் அதிகரித்தமை கவனத்திற்கொள்ள வேண்டிய ஒரு விடயமாகும். அத்துடன் அவர்களிடையே வறிய குடும்பங்களின் எண்ணிக்கையும் 7.8 வீதத்தால் அதிகரித்தது. இலங்கையில் பெருந்தோட்ட மக்களே ஆகக்கூடிய வறுமை நிலையில் உள்ளனர். நாட்டில் வறுமை நிலையைக் குறைப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் அரச வறுமை ஒழிப்புத் திட்டமான சமுர்த்தித் திட்டத்தின் உதவியை இம்மக்களே கூடுதலாக பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும். ஆனால், பெருந்தோட்ட மக்களில் 7% வீதமானோர் மட்டுமே சமுர்த்தித் திட்டத்தின் உதவியை பெற்றுக் கொள்கின்றனர். நகர கிராமியத்துறைகளில் இது முறையே 10.2 வீதமாகவும் 32.2 வீதமாகவும் இருந்தது.

தனிமைப்படுத்தப்படலும் ஒதுக்கி வைக்கப் படுதலும் அதனால் ஏற்படும் வறுமையும்:

வறுமையை வரைவிலக்கணப்படுத்து வதற்கும் அதனை அளவிடுவதற்கும் பல்வேறு அணுகுமுறைகள் அது சம்பந்தமான ஆக்கங்களில் கூறப்பட்டுள்ளன. இவற்றுள் மிக அண்மைக்காலத்தில் பரவலாக பேசப்படும் ஒன்று அமார்த்தியா சென் என்ற இந்தியப் பொருளியலாளரின் ''சாதிக்கும் ஆற்றல்'' என்ற அணுகுமுறையாகும். ஒருவனிடமிருக்கும் சாதிக்கும் ஆற்றலே அவனது வறுமை நிலையை நிர்ணயிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கிய காரணியாகுமென இது கூறுகின்றது. சாதிக்கும் ஆற்றல் ஒருவனுக்கு இருக்குமாயின் அவன் தான் விரும்பிய வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் பல ஏற்படுகின்றன. அதாவது தனக்கு விருப்பமான வாழ்க்கை முறையொன்றைத் தெரிவு செய்யும் வாய்ப்பு அவனுக்கு கிடைக்கின்றது. அவ்வாறில்லாதோர் வறுமை நிலைக்கு தள்ளப்படுவதாக இது கூறுகின்றது. நல்ல போசாக்கைப் பெற்றுக்கொள்ளல், உடுப்பதற்கு போதுமானளவு ஆடைகளும் இருப்பிட வசதிகளும் இருத்தல், தவிர்க்கக்கூடிய மரணங்களைத் தவிர்த்தல், அறிவுள்ளவனாக இருத்தல், இனப்பெருக்க ஆற்றலிருத்தல், தனிமனித பாதுகாப்பு இருப்பதோடு, சமூக வாழ்க்கையில் சுதந்திரமாகவும் முனைப்புடனும் பங்குபற்றும் வாய்ப்பு இருத்தல் என்பவற்றை இது உள்ளடக்கும். ஒருவனுக்குத் தேவைப்படும ஆகக்குறைந்தளவிலாவது இவை கிடைக்காவிட்டால் அவன் வறுமை நிலைக்கு தள்ளப்படுவதாக இது கூறுகின்றது.

ஐக்கிய நாடுகள் தாபனத்தில் அண்மைக் கால அறிக்கையொன்று வறுமையைப் பின்வருமாறு வர்ணிக்கின்றது. வறுமையானது பல பரிமாணங்களைக் கொண்ட ஒன்றாகும். நிலைத்திருக்கக் கூடிய வாழ்க்கைத்தரங்களை உறுதி செய்வதற்கு போதுமான வருமானம், உற்பத்தித் திறன் கொண்ட சாதனங்கள் என்பன இல்லாத நிலை உட்பட பசியும் போசாக்கின்மையும் சுகயீனம், கல்வியையும் வேறு அடிப்படை சேவைகளையும் போதுமானளவு பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுதல், நோய்வாய்ப்படலும் அதனால் ஏற்படும் உயிரிழப்பும் வீடின்மை அல்லது போதுமான வீட்டு வசதியின்மை என்பவற்றோடு சமூக ரீதியாக பாரபட்சங்களுக் குட்படல், ஒதுக்கி வைக்கப்படல் என்பவற்றை அது குறிக்கும். பாரபட்சம் காட்டப்படல், ஒதுக்கி வைக்கப்படல் என்பன சமூக ரீதியான செயற்பாடுகளாகும். ஒரு சமூகத்தின் கணிசமான பகுதியினர் வசதியற்ற நிலைக்குத் தள்ளப்படல், சமூக வாழ்க்கையில் அவர்கள் பங்குபற்ற முடியாத நிலையை ஏற்படுத்தல் என்பன சமூக ஒதுக்கலைக் குறிக்கும்.

தோட்டப்புற மக்கள் இந்நாட்டில் கால்பதித்த நாள்தொட்டே இவற்றின் மோசமான தாக்கத்திற்கு உட்பட்டு வந்துள்ளனர் என்பது எல்லோரும் அறிந்த ஒரு விடயமாகும்.

1. ஆரம்பகாலந்தொட்டே அவர்கள் ஏனைய சமூகங்களிலிருந்து தனிமைப்படுத்தப்பட்ட தோடு, உள்ளூராட்சியில் பங்குபற்றுவதி னின்றும் ஒதுக்கி வைக்கப்பட்டனர். பெருந்தோட்டங்களின் தனியார் உடைமை, முகாமைத்துவ முறை என்பவற்றின் விளைவாகவே இது ஏற்பட்டது.

2. நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் அவர்களது குடியுரிமை பறிக்கப்பட்டதன் மூலம் இத் தனிமைப் படுத்தலுக்கு வலுவூட்டப்பட்டதோடு அது பூரணத்துவமும் பெற்றது.

3. அரச நிர்வாகம் பிரதேச மட்டங்களுக்கு பன்முகப்படுத்தப்பட்டுள்ள இன்றுங்கூட இம் மக்கள் உள்ளூராட்சியில் பங்கேற்க முடியாத நிலையும் அதன் நன்மைகளை அனுபவிக்க முடியாத நிலையும் காணப்படுகிறது. எனவே தான் சமூக வாழ்க்கையில் பங்குபற்றுவதி னின்றும் அவர்கள் ஒதுக்கப்பட்டுள்ளனர்.

இவ்வித ஒதுக்கலானது சமூக, பொருளாதார, கலாசார, அரசியல் மட்டங்களில் ஏற்படலாம். தோட்டப்புற மக்களைப் பொறுத்தவரை இந்த எல்லாத் துறைகளிலுமே அவர்கள் ஏதோ ஒரு வகையில் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளனர்.

1. தமது வாழ்க்கையை கொண்டு நடத்துவதற்குப் போதுமான வருமானத் தையோ மூலதனச் சாதனங்களையோ அவர்கள் பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

2. பல்வேறு காரணங்களால் ஊழியச் சந்தையில் இவர்கள் பங்குபற்ற முடியா திருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஒன்றில் அவர்களுக்கு அடிப்படைச் சேவைகள் இல்லாத நிலையோ அல்லது கிடைக்கும் அடிப்படைச் சேவைகள் தரங்குன்றியனவாக உள்ள நிலையோ காணப்படுகிறது.

4. பொதுச் சேவைகளின் நன்மைகள் போதியளவிற்கு அவர்களை சென்றடைவதில்லை.

5. அரசாங்கத் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்வதற்கு தேவையான அரசியல் ஆதரவு அவர்களுக்குக் கிடைப்பதில்லை. மேலும் இனம், பிறந்த இடம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு அவர்களுக்கெதிராக பாரபட்சம் காட்டப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

மேற்படிக் காரணங்களினால் நாட்டின் ஏனைய சமூகங்களோடு ஒப்பீட்டு ரீதியில் அவர்கள் பின்தங்கிய நிலையில் உள்ளனர். அண்மைக்காலங்களில் அவர்களது நிலையில ஓரளவு முன்னேற்றங்கள் ஏற்பட்டு வந்துள்ள போதும் பல துறைகளில் இன்னும் அவர்கள் பின்தங்கியே உள்ளனர். அதாவது ஏனைய சமூகங்களுக்கும் அவர்களுக்குமிடையே சமூக முன்னேற்றத்தில் பாரிய இடைவெளிகள் காணப்படுகின்றன.

தோட்ட மக்களின் சமூக, பொருளாதார நிலையை ஆராய்வதற்கென 1992 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு தனது அறிக்கையில் பின்வரும் விடயங்களில் இவ்வித இடைவெளிகள் காணப்படுவதை சுட்டிக்காட்டியது.

1. குடியுரிமை
2. தொழில் வாய்ப்புகள்
3. கல்வி
4. தொழில்பயிற்சி
5. வீட்டுவசதியும் சுகாதாரமும்
6. சுகநலன் பேணல்
7. மின்சார வசதி
8. தொடர்பாடல் வசதிகள்
9. சமூக. கலாசார மேம்பாடு
10. விளையாட்டு, பொழுதுபோக்கு உட்பட ஏனைய அடிப்படை வசதிகள்
11. தேசிய நீரோட்டத்தில் இணைவதற்கான வாய்ப்புக்கள்.

இவற்றுடன் காணிப் பங்கீட்டில் காட்டப்படும் பாரபட்சம், தனிநபர்களினதும் சமூகத்தினதும் பாதுகாப்பு என்பவற்றையும் இதில் நாம் சேர்த்துக் கொள்ளலாம்.

1977 ஆம் ஆண்டுதொட்டு பல்வேறு சந்தர்ப்பங்களில் இம்மக்கள் தாக்குதலுக் குள்ளாகி வந்துள்ளனர். இவ்வாறு தாக்கி யோருக்கெதிராக சட்ட நடவடிக்கைகள் பொதுவாக மேற்கொள்ளப்படுவதில்லை. இவ்வித தாக்குதல்கள் தென்பகுதி தோட்டங்களில் இன்றும் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

தேயிலைத் தோட்டங்களில் காலத்துக்குக் காலம் எல்லைக் காணிகள் சுவீகரிக்கப்பட்டு குடியேற்றங்கள் உருவாக்கப்படுகின்றன. இவற்றில் தோட்ட மக்களுக்கு காணித் துண்டுகள் வழங்கப்படுவதில்லை. மேலும் தோட்டக்காணிகளில் தோட்ட மக்களை அப்புறப்படுத்தி காணிகள் சுவீகரிக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் உண்டு. இவ்வித நடவடிக்கைகளும் அவர்களது வறுமை நிலமையினை மோசமடையச் செய்கின்றது.

தகவல், தொடர்பாடல் சார்ந்த தொழில்நுட்பப் புரட்சியினால் துரிதமாக மாறிக் கொண்டிருக்கும் இன்றைய உலகில் நாட்டின் ஏனைய சமூகங்கள் இவற்றின் நன்மைகளைப் பெற்று தாமும் வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றன. ஆனாலும் தோட்ட மக்களை இவை இன்னும் சென்றடையவில்லை. இன்றைய சமூக, பொருளாதார, அரசியல் செயற்பாடுகளின் கீழ் இவ்விடைவெளியைப் போக்குவதற்கு மிக நீண்டகாலம் தேவைப்படலாம். உதாரணமாக, கல்வியில் பின்தங்கி இருக்கும் தோட்ட மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பக் கல்வியிலாவது முன்னேற்றமடை வதற்கு சுமார் இரு தசாப்தங்கள் தேவைப்பட்டன. பாடசாலைகளுக்கு பிள்ளைகளைச் சேர்த்தல், ஆரம்பக் கல்வியை நிறைவுசெய்தல் என்பவற்றில் இன்று அவர்களிடையே கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இடைநிலைக் கல்வியிலும் மூன்றாம் நிலைக் கல்வியிலும் இந்த நிலையை அடைவதற்கு மேலும் பல தசாப்தங்கள் காத்திருக்க வேண்டியிருக்கும். இந்நிலையில் கருத்தடையில் மட்டுமே பெருந்தோட்ட சமூகம் ஏனைய சமூகங்களிலும் பார்க்க முன்னணியில் இருப்பது குறிப்பிடத் தக்கதாகும். இதன் விளைவுகளை இச்சமூகம் இன்னும் சில ஆண்டுகளில் உணரக்கூடியதாக விருக்கும்.

இந்த நிலைமைகளை மாற்றியமைப்ப தற்கு ஒரு சிறந்த வழி கல்வி, தொழில் வாய்ப்புக்கள் போன்றவற்றில் இவர்களுக்கு ஏதோ ஒரு விதத்தில் முன்னுரிமை அளிப்பதாகும். இம்மக்களின் சமூக மேம்பாட்டை துரிதப்படுத்துவதற்கு இதுவே சிறந்த வழியாகும். இதனை உறுதி செய்து கொள்வது மலையகத்து தலைமைகளின் தலையாய கடமையும் தவிர்க்க முடியாத பொறுப்புமாகும்.

நூலகம்

❊ அளவுப் போராட்டத்துக்கான படைக்கலங்கள் செய்யும் படைவீடு நூலகம்

– இங்கர் சாஸ்

❊ எனது நூலகமே எனக்குப் போதிய செல்வமாகும்.

– ஷேக்ஸ்பியர்

❊ நூலகங்கள் பண்டைய உலகின் சின்னங்கள் இக்கால உலகின் புகழ் கொடிகள்.

– வாய்ட்பெல்லா

❊ இக்காலத்தின் உண்மைப் பல்கலைக்கழகம் நூல்களின் தொகுதிதான்.

❊ நூலகமே ஒரு தனி உலகம் அதன் உள்சென்று வந்தால் அறிஞனாகலாம். கலைஞனாகலாம். கவிஞனாகலாம்.

– அபிப் முகம்மது ஜின்னா

❊ என் நூலகம் என் பணிக்கு அடிப்படை என்னுள்ளும் புறமும் இன்பமும் ஆறுதலும் தருவதாகும்.

– கிப்பன்

❊ நூல்கள் இல்லாத வீடு சாளரம் (ஜன்னல்) இல்லாத வீடு

– ஹோம்ஸ்மான்

❊ தோழனுக்காக கூடத் திறந்து கொள்ளாத சொற்கள் கருத்துக்கள் உனக்காகத் தெளிவாக விளக்கப்பட்டுக் காத்திருக்கின்றன.

– எமர்சன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகமயமாக்கமும் வளர்முக நாடுகளில் மனிதவள விருத்தியும்

வித்தியாநிதி சோ. சந்திரசேகரன்

பேராசிரியர் (ஓய்வுநிலை)

அரசகருமமொழி ஆணைக்குழுத் தலைவர்.

இன்று பொருளாதாரம், வர்த்தகம், கைத்தொழில், கலாசாரம் போன்ற விடயங்களை மட்டுமன்றி கல்வி, மனிதவள விருத்திக்கான கல்வி ஏற்பாடுகள் என்பவற்றைத் தெளிவுற விளங்கிக் கொள்ள உலகமயமாக்கம் பற்றிய கருத்தாக்கத்தை நாடவேண்டியுள்ளது. உலகமயமாக்கம் என்ற எண்ணக்கருவின் வரையறை பல முக்கிய விடயங்களை உள்ளடக்குகின்றது:

- உலகளாவிய ரீதியில் சமூகங்கள் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ளன.
- தூரப் பிரதேசங்களுக்கிடையிலான தொடர்புகளை ஏற்படுத்துகின்றன.
- பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்வதில் இன்று ஏற்பட்டு வரும் பிரதான மாற்றங்களைப் பொருளாதார உலகமயமாக்கம் குறிக்கின்றது.
- சர்வதேச தொழிற்பிரிவு முறையானது ஒன்றிணைக்கப்பட்டுள்ளதையும் இது குறிக்கும்.

தேசிய பொருளாதார முறைகள் இன்று தமது தேசியத் தன்மையை இழந்து பிராந்திய அமைப்புக்களுடன் இணைக்கப்பட்டு வருகின்றன. இவ்வொன்றிணைப்பை ஒன்றுபடுத்தவே தகவல் தொழிநுட்பக் கருவிகள் உதவுகின்றன. ஒருவர் செயற்கைக் கோள்களுக்கூடாகத் துரிதமாக, இலகுவாக முழு உலகுடன் தொடர்பு கொள்ள முடிவதுடன் பொருளுற்பத்தியின் பல்வேறு கட்டங்களை இணைத்து முழுப் பொருளையும் இலகுவாக உருவாக்க முடிகின்றது. அத்துடன், தொழில் வாய்ப்புக்களைப் பெறவும் உலகப் பொருளாதார முறையில் இணைந்து கொள்ளவும் இன்று ஆங்கில மொழி அவசியமாக உள்ளது. மேலை நாடுகளில் ''ஆங்கிலத்தையும் கணினியையும் கற்றுக்கொள்ளுங்கள்" என்னும் சுலோகம் பரவலாகப் பிரசாரம் செய்யப்பட்டு வருகின்றது.

இவ்வாறான உலகமயமாக்கம் விரிவான முன்னேற்றத்துக்கும் அபிவிருத்திக்கும் வழிவகுக்கும். கம்பெனிகளுக்கு விரிவான சந்தை வசதி கிடைப்பதால் அவை சிக்கனமாக இயங்கமுடியும். வறிய நாடுகள் செல்வந்த நாடுகளை விட வளர்ச்சியடைய முடியும். இக்கொள்கையின் வெற்றி நிச்சயம் என்பதை வலியுறுத்தும் உலகமயமாக்கக் கொள்கையின் ஆதரவாளர்கள் எதிர்காலத்தில் தேசிய அரசுகளின் முக்கியத்துவம் குறைந்து "உலகக் கிராமம்'' பெரு வளர்ச்சி பெற்று சந்தைப் பொருளாதாரம் பெருவளர்ச்சி பெற்று செல்வச்செழிப்பை ஏற்படுத்தும் என வலியுறுத்துவர். சுருங்கக் கூறுமிடத்து, பொருளாதார உலகமயமாக்கம் வர்த்தகத் தடைகளை நீக்கிப் பரந்த உலக சந்தையொன்றையும் தொழில் நிறுவனங்களுக் கிடையிலான போட்டியையும் ஏற்படுத்துவதால் உலகளாவிய ரீதியில் உற்பத்திப் பெருக்கம், நிறுவனச் சிக்கனம், வேலை வாய்ப்பு, வருமானம் என்பன ஏற்பட வாய்ப்புண்டு. இவ்வாதத்தின்படி வளர்முக நாடுகளின் வருமானம் செல்வந்த நாடுகளைவிட அதிகமாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருகும். உலகமயக்கோட்பாட்டைப் பின்பற்றினால் ஏற்படக்கூடிய நன்மைகள் பற்றி சித்தாந்தரீதியாகப் பலவாறு கூறப்பட்டாலும், இக்கொள்கை பற்றிய பல விமர்சனங்களும் கண்டனங்களும் உண்டு. இப்பகுதியில் உள்ள பெட்டிகளில் அவை தொகுத்து சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

மார்க்சிய ஆய்வாளர்கள் உலகமயமாக்கம் என்பது முதலாளித்துவத்தின் இறுதிக்கட்டம் என வர்ணிப்பர். லெனின் இப்போது இருந்தால் இந்நிலைமையை முதலாளித்துவத்தின் வளர்ச்சியாகவே கருதியிருப்பார். முதலாளித்துவம் சர்வதேச மயமாக்கப் பட்டுள்ளமையையே உலகமயமாக்கம் சுட்டுகின்றது என்பது அவருடைய கருத்தாக இருந்திருக்கும்.

உலகமயமாக்கத்தின் பல சீர்கேடுகளை அவதானிக்க முடியும். உதாரணமாக:

- இன்று 300 கோடி மக்களின் நாளாந்த வருமானம் 250 ரூபாவுக்கும் குறைவேயாகும்.
- 80 நாடுகளில் தனியாள் வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளது.
- 1990 தொடக்கம் 30 நாடுகளில் மக்களின் ஆயுட்காலம் குறைந்துள்ளது.
- இயற்கை வளங்கள் அபிவிருத்திக்குக் கண்மூடித்தனமாகப் பயன்படுத்தப் படுவதால் சுற்றாடல் சீரழிவு ஒரு முக்கிய பிரச்சினையாகி உள்ளது.
- தாராளமயக் கொள்கையால் வளர்முக நாடுகளுக்கு வந்துசேர்ந்த பல்தேசியக் கம்பெனிகள் சனநாயக அரசாங்கங்கள் மீது மேலாதிக்கம் செலுத்துகின்றன.

இன்று அனைத்துலக ரீதியாகப் பேசப் பட்டும் நடைமுறைப்படுத்தப்பட்டும் வரும் உலகமயமாக்கச் சிந்தனை, உலகநாடுகளின் கல்விமுறைகளிலும் மனிதவள விருத்திச் செயற்றிட்டங்களிலும் பல தாக்கங்களையும் மாற்றங்களையும் ஏற்படுத்தி வருகிறது. குறிப்பாக உலகமயமாக்கத்தின் முக்கிய அம்சங்களான சந்தைத் தத்துவம், தனியார் மயமாக்கல் என்பன கல்வித்துறையில் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன.

கல்விமுறைகளின் மரபுவழி நோக்கங்களை நோக்குமிடத்து, நவீன உலகமயமாக்கத்தின் அம்சங்கள் இன்றைய கல்வி முறையுடன் பொருந்தி வராதன போலத் தோன்றும்:

- காலங்காலமாகக் கல்வி முறைகள் உலகளாவிய ரீதியில் சமூகத்தின் பண்பாட்டையும் விழுமியங்களையும் தொடர்ந்து பேணி வந்தன.
- அவற்றை இளந்தலைமுறையினருக்கு உணர்த்தி, அவர்களைச் சமூகத்துடன் இசைந்து வாழச்செய்யவும் கல்வி நிறுவனங்கள் பயன்பட்டு வந்தன.
- ஜேர்மன் நாட்டுச் சமூகவியலாளரான Durkhim வலியுறுத்திக் கூறிய சமூகமய மாக்கம் இன்றும் கூட பாடசாலைக் கல்வியின் முக்கிய குறிக்கோளாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

இந்நிலையில் இன்று உலகமயமாக்கத் தின் விளைவாக தேசியக் கல்வி முறைகள் தமது தனித்துவ அம்சங்களை இழந்து உலகளாவிய கல்வி முறைகளை ஒத்த அம்சங்களைப் பெற்று வருகின்றன. தேசிய பாடசாலைகளில் காணப்பட்ட சுதேச அம்சங்கள் மங்கி வருகின்றன. கல்வியின் நோக்கங்கள், கொள்கைகள், கல்வித் துறையில் முதன்மையும் முன்னுரிமையும் பெறும் அம்சங்கள், முக்கியமாகப் பாட ஏற்பாட்டு அம்சங்கள் என்பன உலகளாவிய கல்வி முறைகளை ஒத்தனவாய் ஒரு சீர்த்தன்மையைப் பெற்று வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இதுவரை காலமும் கல்வி முறைகளில் ஏகபோக உரிமையைக் கொண்டிருந்த அரசாங்கங்கள் இன்று கல்வித்துறையிலிருந்து பின்வாங்கி வருகின்றன. பாடசாலைகளை தனியார் மயப்படுத்தும் செயற்பாடு மேலோங்கி வருகின்றது.

- அரசாங்கப் பாடசாலைகள் வர்த்தக, தொழில் நிறுவனங்கள் போன்று சந்தைக் கேள்விகளுக்கு - பெற்றோர்களின் கோரிக்கைகளுக்கு (Market Demands) ஏற்பத் தம்மை மாற்றி வருகின்றன.

- வர்த்தக நிறுவனங்கள் போன்று பாடசாலைகளும் நுகர்வோரைக் (பெற்றோர்களைக்) கவரும் முறையில் போட்டித் தத்துவத்தை ஏற்றுக்கொண்டுள்ளன.

ஒரு காலத்தில் பாடசாலைக் கல்வியின் முன்னேற்றங்கள் பற்றிய ஆய்வுகள் உள்நாட்டுப் பிரதேசங்கள் - மாகாணங்கள் - மாவட்டங்கள் என்பவற்றுக்கிடையிலான ஒப்பீட்டு ஆய்வுகளாக (Inter Country or Inter Ditrict) விளங்கின. ஆனால் இன்று உலக மயமாக்கத்தின் விளைவாக ஒரு நாட்டின் கல்வித் தராதரங்களை ஏனைய உலக நாடுகளின் கல்வித் தராதரங்களுடன் ஒப்பிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. உதாரணமாக, இலங்கையின் கல்வித் தராதரங்கள் இந்தியா, சிங்கப்பூர், தாய்லாந்து, மலேசியா முதலிய நாடுகளின் தராதரங்களை எட்டியுள்ளனவா என்று ஆராய வேண்டியுள்ளது. புதிய நூற்றாண்டில் உலக நாடுகளின் இளைஞர்கள் தேசிய தொழிற் சந்தையில் மட்டுமன்றி சர்வதேசிய தொழிற் சந்தையில் வேலைவாய்ப்புக்களுக்காகப் போட்டியிட வேண்டிய நிலையை உலகமயமாக்கம் உருவாக்கியுள்ளது. இதனால் மனிதவள விருத்திக்கான பாடசாலைக் கல்வியானது முதலில் பின்வரும் அம்சத்தில் கவனஞ் செலுத்த வேண்டியுள்ளது.

- மாணவர்கள் உலகப் பிரஜைகளாகும் வகையில் பாடசாலைக் கல்வி அமைதல் வேண்டும். தமது அயல் நாடுகள் பற்றிய அறிவை மேலும் பெருக்கிக் கொள்ள வேண்டும். தனது பிராந்தியத்தின் புவியியல், வரலாறு, அரசியல் பற்றியும் பிராந்திய மொழிகள் பற்றிய அறிவும் இதிலடங்கும்.

திறந்த பொருளாதாரக் கொள்கையும் அதன் விளைவாக வளர்முக நாடுகளுக்கு வந்து சேர்ந்துள்ள பன்னாட்டுக் கம்பெனிகளும் உள்நாட்டில் வளர்ச்சி பெற்றுள்ள தனியார்துறை நிறுவனங்களும் வேலை வாய்ப்புகளை உருவாக்கி இருப்பதும் உண்மையே!. ஆனால் வசதிகுறைந்த குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்களின் வேலை வாய்ப்புப் பிரச்சினை தீர்ந்தபாடில்லை. புதிய பொருளாதார ஒழுங்குமுறை வேண்டி நிற்கும் திறன்கள் அவர்களிடம் காணப்படவில்லை. சந்தைப் பொருளாதாரத்திற்குப் பொருத்தமான, தேவையான திறன்களை வழங்கும் முறையில் வளர்முக நாடுகளின் மனிதவள விருத்திக்கான கல்விமுறை மாற்றப்பட வேண்டிய அவசியம் உண்டு.

மரபுவழியான நூற்கல்வியானது தேவையான திறன்களை வழங்கித் தொழிற் தராதரங்களை மேம்படுத்தத் தவறிவிட்டது. கல்வி முறையானது இளைஞர்களுக்குப் பொதுக் கல்வியை வழங்குவதுடன் நின்றுவிடாது, அவர்களை மனிதவளமாக விருத்தி செய்ய வேண்டும் என்பது புதிய உலகமயமாக்கம் விதிக்கும் நிபந்தனையாகும்.

ஒரு நாட்டில் கிடைக்கப்பெறும் தரமான ஊழியர்களும் அவர்களுடைய தொழிற் தேர்ச்சியும் இரு வகையான முக்கியத்துவத்தைக் கொண்டவை:

1. ஊழியர் தராதரங்கள் (Labour Quality) கல்விமுறையின் வெளிநிலை வினைத்திறனை அதிகரிக்க உதவும். வெளிநிலை வினைத் திறன் (External Efficiency) என்பது கல்விகற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியேறுபவர்கள் பிரதான பொருளாதார நடவடிக்கைகளுடன் தம்மைப் பொருத்திக் கொள்வதைக் குறிக்கும். இன்றைய கல்வி முறையானது இவ்விடயத்தில் தோல்வி கண்டுவிட்டது.

2. சிறந்த ஊழியர் தராதரங்கள் வெளிநாட்டு மூலதனத்தைக் கவருவதற்கு அவசிய மானவை.

வளர்முக நாடுகள் "கல்வியும் மனிதவள விருத்தியும்" என்ற அம்சத்தைக் கருத்திற் கொள்ளவில்லை. திறந்த சந்தைப் பொருளாதாரம் வளர்முக நாடுகளின் ஊழியர்களைப் பயன்படுத்தி முதலீடுகளை ஊக்குவிப்பதுடன் வளர்முக நாடுகளுக்கு வெளியே உள்ள பொருளாதார முறை களுக்குத் தேவையான ஊழியர்களையும் வழங்கி உதவுகின்றது. இவ்வாறு குடியகலும் ஊழியர்கள் வளர்முக நாடு களுக்கு ஏராளமான வெளிநாட்டுச் செலாவணியைச் சம்பாதித்துக் கொடுக்கின்றனர். ஆயினும் குடியகன்று செல்லும் ஊழியர்களின் தொழிற் தேர்ச்சி மிகவும் குறைவானதே!. வளர்முக நாடுகள் மிகச் சாதாரணமான, மலிவான ஊழியர்களை வைத்துக் கொண்டே வெளிநாட்டு மூலதனத்தைக் கவர முயலுகின்றன.

வளர்ச்சியுறும் பொருளாதார முறைகளின் ஊழியர் தராதரங்கள் சிறப்பாக அமையுமானால் :

- ஊழியர்களுக்கு உயர்ந்த வேதனங்கள் கிட்டும்.
- கற்ற இளைஞர்களுக்குத் தொழில் வாய்ப்புக்கள் கிட்டும்.
- உயர் தொழில்நுட்பக் கம்பெனிகள் கவர்ந்திழுக்கப்படும்.
- பொருளாதார மாற்றமும் வளர்ச்சியும் இலகுபடுத்தப்படும்.

இலங்கையில் தனியார் துறை நிறுவனங்கள் இளைஞர்களிடம் எதிர்பார்க்கும் மனிதவளத் திறன்கள் (மென்திறன்கள்):

- ஆங்கில மொழித் தேர்ச்சி
- தகவல் தொழில்நுட்பத் தேர்ச்சி
- சிறந்த தொடர்பாடல் திறன்
- தலைமை தாங்கும் திறன்
- குழுவில் சுமுகமாகப் பணியாற்றும் திறன்
- பிரச்சினை தீர்க்கும் திறன்
- புத்தாக்கச் சிந்தனை
- இடர்களை எதிர்நோக்கும் ஆற்றல்
- புதிய கருத்துக்களை ஏற்கும் மனப்பாங்கு

ஆதாரம் : இலங்கைத் தனியார் துறையினரிடம் செய்யப்பட்ட ஆய்வுகள்.

க.பொ.த. சா.நி., உ.நி பரீட்சைகள் மனனம் செய்தல் போன்ற குறுகிய நோக்குகளை முக்கியத்துவப்படுத்துகின்றன. பிரச்சினை தீர்க்கும் திறன், இடமாற்றம் செய்யக்கூடிய திறன்கள் என்பவற்றை வலியுறுத்துவ தில்லை... பல்கலைக் கழகப் பட்டதாரிகள் வேலையில் அமர்த்தப்பட முடியாதவர்கள் ... கம்பெனிகளின் உயர் நிர்வாக பதவிகளில் இளைஞர்கள் பற்றாக்குறை உண்டு ... பல்கலைக் கழகப் பட்டதாரிகளிடம் உயர் தொழில்நுட்ப அறிவு உண்டு. ஆனால் அவற்றைப் பிரயோகிக்கும் ஆற்றல், பகுப்பாய்வுத் திறன், மனிதத் தொடர்புத் திறன் என்பன அவர்களிடம் இல்லை...

- பெந்தோட்டையில் நடைபெற்ற இலங்கை வர்த்தக சபை நடாத்திய கல்வி மகாநாட்டில் கூறப்பட்டவை.

வளர்முக நாடுகளின் பாடசாலைக் கல்வியும் பல்கலைக்கழகக் கல்வியும் மனிதவள விருத்தியை ஏற்படுத்தி புதிய உலகமயமாக்கச் சூழலுக்கு, குறிப்பாக தனியார் துறை, பல்தேசிய நிறுவனங்கள் வழங்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவை வாய்ப்புகளுக்குப் பொருத்தமான இளைஞர்களை உருவாக்கக் கருத்தில் கொள்ள வேண்டிய திறன்களைச் சுருக்கமாக நோக்குவோம்.

ஆங்கில மொழி :

புதிய பொருளாதார ஒழுங்கு முறையானது ஆங்கிலத்தின் உலகளாவிய தேவையை உறுதிப்படுத்தியுள்ளது. முன்னொரு போதும் இல்லாதவாறு சீனா, தென்கொரியா, தாய்லாந்து, இந்தோனேசியா, மொசாம்பிக், வியட்னாம் முதலிய நாடுகளில் ஆங்கிலம் கற்போர் தொகையும் கற்பிக்கும் நிலையங்களும் அதிகரித்துள்ளன. ஆங்கிலக் குடியேற்றங்களாக இருந்த இலங்கை போன்ற நாடுகளில் ஆங்கிலக் கல்விக்கு ஊக்க மளிக்கப்படவில்லை. சுய மொழிகள் போதனா மொழிகளாக்கப்பட்டு அதன் பயனாகப் பொதுக்கல்வியும் எழுத்தறிவும் மக்கள் மத்தியில் துரிதமாகப் பரவிற்று. ஆனால், இன்று ஆங்கிலம் ஒரு முக்கிய தேவையாகிவிட்ட நிலையில் இலங்கை போன்ற நாடுகள் பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றன. இன்று ஆங்கில மொழிக் கல்வியில் புதிதாக அக்கறை செலுத்தப் படுகின்றது. இலங்கை போன்ற நாடுகளில் நடைமுறைபற்ப்படுத்தப்படும் வறுமை ஒழிப்புத் திட்டங்களும் மனிதவள விருத்திக் கொள்கைகளும் ஆங்கிலக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டியுள்ளது. இலங்கையில் இத்துறையில் மேற் கொள்ளப்பட்டுள்ள புதிய முயற்சிகளாவன:

- சகல ஆசிரியர் கல்வி நிலையங்களில் ஆங்கில பாடத்தைச் சக ஆசிரியர் பயிலுனர்களும் பயில வேண்டும்.
- பாடசாலைகளில் தரம் 1 இலிருந்து ஆங்கில மொழி அறிமுகம் செய்யப் பட்டுள்ளது.
- க.பொ.த. உயர்தர வகுப்புக்களில் சகல மாணவர்களும் ஆங்கில மொழியைப் பயில வேண்டும்.
- க.பொ.த. உயர்தர வகுப்புக்களில் விஞ்ஞான பாடங்களை ஆங்கில மொழியில் கற்பிக்க அனுமதியுண்டு.
- பல்கலைக் கழக பட்டத்தில் ஆங்கில மொழிவழிப் பயிற்சி நெறிகளுக்கு ஊக்கம் வழங்கப்படுகின்றது.

தொழில்நுட்பம் :

தொழில்நுட்ப அறிவின் துரிதமான வளர்ச்சியின் காரணமாக, வழமையான எண்ணறிவு, எழுத்தறிவு என்பன எதிர் காலத்துக்குப் பொருத்தமற்றனவாகிவிட்டன. ஆயினும் வளர்முக நாடுகளின் அடிப்படைக் கல்வியில் தொழில்நுட்பக் கல்விக்கு எதுவித இடமும் அளிக்கப்படவில்லை. மேலை நாட்டுத் தொழில்நுட்பத்தை வளர்முக நாடுகளில் பரவச் செய்ய பாடசாலைக் கல்வியே துணையாக அமையும்.

தொழில்நுட்பத்தின் வளர்ச்சியானது தொடர்பாடலை இன்று பெரிதும் துரிதப்படுத்தி யுள்ளது. "பூகோளக் கிராமம் " என்னும் எண்ணக்கரு இன்று நடைமுறையில் சாத்தியமாகிவிட்டதென்றால் அதற்குத் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட துரிதமான மாற்றங்களே முக்கிய காரணம். எதிர்காலத்தில் மரபு வழிப் பரீட்சைகளில் உயர்சித்தி பெற்ற எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள்கூட தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அறிவைப் பெறாவிடில் அவர்களும் எழுத்தறிவற்றவர்களின் நிலைமையையே எதிர்நோக்க வேண்டிவரும். புதிய தகவல் மைய, அறிவுமைய உலகு வழங்கும் நன்மைகளை இவர்களால் பெற்றுக்கொள்ள முடியாது. வளர்முக நாடுகளில் உயர் வகுப்பினர் மட்டுமே நவீன தகவல் தொழில்நுட்ப அறிவைப் பெற்று வருகின்றனர். இன்றைய நிலையில் சகல பிள்ளைகளுக்கும் ஒன்பதாண்டுகளுக்குக் கட்டாய இலவசக் கல்வியை வழங்கச் சிரமப்படும் தென்னாசிய வளர்முக நாடுகள் தகவல் தொழில்நுட்பக் கல்வியை எவ்வாறு விரிவான முறையில் சாதாரண கிராமப்புற மக்களுக்கு வழங்க முடியும் என்பது ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கிய பிரச்சினையாகும். கிராமப்புறங்களில் மின்சார வசதிகள் அற்ற நிலையில் தகவல் தொழில்நுட்பக் கல்வியை வழங்குவதில் மேலும் சிரமங்கள் உண்டு. வளர்முக நாடுகளின் கல்விமுறைகள் இந்நவீன தொழில்நுட்ப மாற்றங்களைக் கருத்திற்கொண்டு புதிய மனிதவள விருத்திச் செயற்றிட்டங்களை வரையவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. புதிய தகவல் தொழில்நுட்பங்களால் வளர்முக நாடுகள் நன்மை பெற வேண்டுமாயின் அந்நாடுகள் மரபு வழியான எழுத்தறிவிற்குப் புதியதொரு வரைவிலக்கணத்தை உருவாக்கி அதில் பிரதான தகவல் தொழில்நுட்பதிறன்களை உள்ளடக்க வேண்டும். சாதாரண மக்களும் புதிய தகவல் சமூகத்தில் செயற்றிறன் மிக்க உறுப்பினர்களாக இம்முயற்சி உதவும்.

நவீன மாற்றங்கள் :

Informaton Superhighways எனப்படும் தகவல்துறை நெடும்பாதைகள் இன்றும் ஜப்பான், தென்கொரியா, இந்தோனேசியா, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இந்திய செயற்கைக் கிரகங்கள் புதிய தகவல் யுகத்தைத் தென்னாசியாவிற்குக் கொண்டுவர உள்ளன.

ஹொங்கொங்கின் மொட்டொரோலா 1995 ஆம் ஆண்டு கம்பியில்லா தரவு வலைத்தொகுதியை (Max) உருவாக்கி உள்ளது. இதனால் கைக்கு அடக்கமான கணினியினூடாக மின் அஞ்சலையும் (e-mail) தொலை நகலையும் (Fax) அனுப்ப முடியும்

எதிர்கால தொழில்நுட்பவியலானது "மக்களற்ற அலுவலகங்கள்", "அலுவலக மற்ற ஊழியர்கள்", "காகித ஆவணங்களற்ற அலுவலகங்கள்" என்பவற்றை உருவாக்க உள்ளன.

சிங்கப்பூரின் "மதிநுட்பதீவு" (Intelligent Island) ஒவ்வொரு இல்லத்திலும் நவீன தகவல் தொழில்நுட்பக் கருவிகளைப் (Fiber Optic Cable) பொருத்தி வருகிறது. தென் கொரியா 5800 கோடி அமெரிக்க டொலர் செலவில் நிர்மாணித்துவரும் பல்லூடகத் தொகுதி (Fiber Optic Multimedia Net Work) 2010 ஆம் ஆண்டில் அந்நாட்டை முழுமையான தகவல் சமூகமாக மாற்றி உள்ளது.

"பொருள் உற்பத்தியைப் பொறுத்த வரையில் மிகவும் சக்தி வாய்ந்த கருவியாக விளங்குவது அறிவாகும். அறிவைக் கொண்டே நாம் இயற்கையைக் கட்டியாண்டு எமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியும்"

- Alfred Marshall, 'Principles of Economics' (1920)

"அண்மைக் கால ஆய்வுகளின்படி, குறைந்த மற்றும் உயர்ந்த வருமானமுள்ள நாடுகளின் பொருளாதார முறைகளை நவீனமயப்படுத்துவதில் பண்ணை நிலத்தின் பொருளாதார முக்கியத்துவம் குறைந்துவிட்டது. அதற்குப் பதிலாக மனித மூலதனத்தின் - அறிவு. திறன்களின் - பொருளாதார முக்கியத்துவம் அதிகரித்துள்ளது"

"நிலவளத்துக்கு ஒரு வரம்பு உண்டு. எனவே அதிகரித்துச் செல்லும் உலக சனத்தொகைக்குத் தேவையான உணவைத் தொடர்ந்து உற்பத்தி செய்வது என்பது நிலத்தால் முடியாததொன்று". இவ்வாறான ஒரு கருத்து உண்டு. இதற்கு மாற்றாக உள்ள மற்றொரு கருத்து மனிதன் தனது அறிவாலும் விவேகத்தாலும் ஆற்றலாலும் (அதாவது பயிற்சி பெற்ற மனிதவளத்தால்) நிலத்திலும் மரபுவழி விவசாயத்திலும் தங்கி இருக்கும் நிலைமையைத் தவிர்த்துக்கொள்ள முடியும்."

-T.W. Schultz, 'The Economics of being poor, nobel lecture, 1979

பேராசிரியர் எழுதிய நூல்கள்:

1. இலங்கை இந்தியர் வரலாறு - 1989
2. கல்வியியல் கட்டுரைகள் - 1991
3. இலங்கையில் கல்வி வளர்ச்சி - 1992
4. கல்வியும் மனித மேம்பாடும் (கட்டுரைத் தொகுப்பு) - 1993
5. இலங்கையிற் கல்வி (கட்டுரைத் தொகுப்பு) - 1993
6. கல்வி வளர்ச்சி சிந்தனைகள் - 1995
7. இலங்கையில் கல்வி வளர்ச்சி (கட்டுரைத் தொகுப்பு) - 1992 - 1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. புதிய நூற்றாண்டுக்கான கல்வி - 1995
9. கல்விச் செயற்பாட்டில் புதிய செல் நெறிகள் - 1996
10. அபிவிருத்தியும் கல்வியும் - 1996
11. Education of disadvantaged communities in South Asia - 1997
12. கல்விச் சிந்தனையில் புதிய செல் நெறிகள் - 1999
13. உயர் கல்விச் சிந்தனையில் புதிய செல் நெறிகள் - 1999 - சு வித்தியானந்தன் நினைவுப் பேருரை.
14. மலையகக் கல்வி சில சிந்தனைகள் - 1999
15. கல்வித்திட்டமிடல் : கோட்பாடுகளும் புதிய வளர்ச்சியும் - 2000
16. New Trends in Education - 2000
17. இலங்கையில் தமிழர் கல்வி - 2002
18. அபிவிருத்தியும் கல்வியும் - 2004
19. கல்வி ஒரு பன்முக நோக்கு - 2004
20. கல்வித் திட்டமிடல்: (கோட்பாடுகளும் புதிய வளர்ச்சியும்) - 2006
21. கல்வியும் மனிதவள விருத்தியும் - 2006
22. Education Disadvantage in Sri Lanka - 2006
23. முகாமைத்துவ கொள்கைகள் ஒரு அறிமுகம் - 2008
24. அறிவுசார் பொருளாதாரமும் கல்வியும் - 2008
25. இலங்கையில் உயர்கல்வி: (பல்கலைக் கழகம்) கல்வியின் வளர்ச்சியும், பிரச்சினைகளும் - 2009
26. கல்வியியலும் நிகழ் பதிவுகளும்
27. Facets of Sri Lankan Education - 2009
28 கல்வியில் புதிய தடங்கள் - 2011
29. உலகளாவிய உயர் கல்வி முறையின் தற்காலிக செல்நெறிகளும் இலங்கையின் உயர் கல்வி முறைமையும் - 2012
30. உயர்கல்விச் சிந்தனையை வெகுஜன மயமாக்கல் - 2013
31. Angela Little உழைப்பால் கல்வியில் உயர்வோர் (மொழிபெயர்ப்பு)
32. சமகாலக் கல்விச் செல்நெறிகள் - 2016
33. கல்வியியல் நூல்களின் பட்டியல் - 2016
34. சமகாலக் கல்வி முறைகளின் பரிமாணங்கள் - 2017
35. உயர் கல்விச் சிந்தனையை வெகுஜன மயமாக்கல் - 2017.

தொடர்புகள் : 077 778 0860

அகிலம் வெள்ளி விழா மலருடன்

அகிலம்

- கல்வி
- கலை
- அறிவியல்
- விஞ்ஞானம்
- சமயம்
- மனையியல்

கலை இலக்கிய அறிவியல் சஞ்சிகை

இன்னும் பல்வேறு சுவையான அம்சங்களுடன் தொடர்ந்து வெளிவரவிருக்கின்றது.

தொடர்புகளுக்கு:
அகிலம் பப்ளிக்கேசன்ஸ்
இல.10 1/1, திம்பிரிகஸ்யாய பிளேஸ், கொழும்பு - 05
தொ. பே. இல. 0766987504, 0765490085

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைத்த கவிதை

வெலிகம ரிம்ஸா முஹம்மத்

அந்த சாலையில் தான்
தொலைத்துவிட்டேன்
என் கவிதையை!

இப்போதுகளில் அதை
கண்டுபிடிக்கவே முடியவில்லை..
கண்டுபிடிக்க வழியுமில்லாதபடி
நான் வெகுதூரம் வந்தாயிற்று
அந்த சாலையைவிட்டு!

மனசு கனக்கிறது
இதயம் வெடிக்கிறது
புதுக்கவிதை வாசத்தில்
நான் சிறகடிக்க நினைத்தாலும்
என்னை
கைவிடாதபடி பற்றியிருக்கிறது
மரபுக் கவிதை!

வியர்வையில்
தேடுகிறேன் உயர்வை..
பழைமையிலிருந்துகொண்டு
பார்க்கிறேன் புதுமையை..

ஏனெனில்
கனவுலகில் மிதக்கும்
கற்பனைக் கவிஞன் நான்!

உண்மையில்
அந்த சாலையில் தான்
தொலைத்துவிட்டேன்
என் கவிதையை..
யாராவது கண்டுபிடித்தால்
சொல்லிவிடுங்கள்!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் உள்ளூர்ப் பிரபுத்துவம் பற்றிய முதல் தமிழ்நூல் கரவை வேலன்கோவை பற்றிய ஒரு நோக்கு

பேராசிரியர் துரை. மனோகரன்

இலங்கையில் யாழ்ப்பாண அரசின் வீழ்ச்சியைத் தொடர்ந்து ஐரோப்பியரின் ஆட்சி ஏற்படத் தொடங்கியது. ஐரோப்பியரில் முதன்முதல் இலங்கையைக் கைப்பற்றி ஆண்டவர்கள் போர்த்துக்கேயர். அவர்களின் ஆட்சியைத் தொடர்ந்து ஒல்லாந்தர் ஆட்சிக்காலம் (கி. பி. 1658 - 1796) அமைந்தது. ஒல்லாந்தரால் புரொட்டஸ்தாந்து கிறிஸ்தவ மதம் இலங்கையில் அறிமுக மாகியது. போர்த்துக்கேயர் ஆட்சியைவிடவும் ஒல்லாந்தரின் ஆட்சியின் பிற்பகுதி நிர்வாகத் திறனிலும், சமயப் பொறையிலும், இலக்கியச் சுதந்திரத்திலும் சிறந்து விளங்கியது.

யாழ்ப்பாண மன்னர் காலத்தில் இடம்பெற்றிருந்த உள்ளூர்ப் பிரபுத்துவம் போர்த்துக்கேயர் காலத்தில் மங்கியிருந்த போதிலும் ஒல்லாந்தர் காலத்தில் மீண்டும் முக்கியத்துவம் பெறத்தொடங்கியது. புதிய அதிகாரப் பதவிகளைப் பெற்ற உள்ளூர்ப் பிரபுக்கள் தமது அந்தஸ்தை மேன்மேலும் உயர்த்திக் காட்டுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டனர். அந்தவகையில் தமது காலத்தில் புகழ்பெற்ற புலவர்களால் பாடப்படுவதை அவர்கள் பெருமையாகக் கருதினர்.

இலங்கையில் ஒல்லாந்தர் காலத்தில் புகழ்பெற்ற புலவராக விளங்கியவர் நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் (கி.பி. 1716 - 1780). இளம்வயதிலேயே கவிபாடும் ஆற்றல் மிக்கவராக அவர் விளங்கினார். இவர் கி. பி. 18ஆம் நூற்றாண்டில் புகழ்பெற்று விளங்கிய நல்லூர் வில்லவராய முதலியாரது மகன். இவரது பெயர் செயதுங்கமாப்பாண முதலியார் என்று கூறப்படுகின்றது. சிறுவயதிலேயே கவிபாடும் ஆற்றல் கைவரப்பெற்றமையால் சின்னத்தம்பிப் புலவர் என்னும் சிறப்புப் பெயர் ஏற்பட்டது என்று கருதப்படுகின்றது. கல்வளையந்தாதி, மறைசையந்தாதி, பறாளை விநாயகர் பள்ளு, கரவைவேலன் கோவை என்பன அவர் பாடிய நூல்களாகும்.

ஒல்லாந்தர் காலத்தில் உள்ளூர்ப் பிரபுக்களில் ஒருவராக விளங்கியவர், சேதுநிலையிட்ட மாப்பாண முதலியார் வேலாயுதபிள்ளை யாழ்ப்பாணத்தில் கரவெட்டி என்னும் ஊரைச் சேர்ந்தவர். அவர் கரவை வேலன் கோவையில் 'சேதுநிலையிட்ட மாப்பாணனீன்றருள் செல்வன்கலை யோதும் வரிசைக் கரவையில் வேலன்' (செய். 9) என்று வேலாயுதமுதலியாரின் தந்தையின் பெயரும் இவரின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளன. இவரது பெயர் வேலாயுதம். வேலாயுத உடையார் வேலாத்தை உடையார் எனவும் வழங்கப்பட்டன. அவர் பெரும் செல்வராகவும் தர்மசீலராகவும் விளங்கியவர் எனக் கூறப்படுகிறார். இவர் இளைஞராக இருந்த போது சேது இராமேஸ்வரம் சிதம்பரம் முதலிய தலங்களுக்கு யாத்திரை செய்தார் என்றும் சிலகாலம் இராமேஸ்வரத்தில் வாழ்ந்துவந்தார் என்றும் கூறப்படுகிறது. மலையாள தேசம் சென்று மாந்திரீக வித்தை கற்று வந்தார் என்றும் கருதப்படுகிறது. அவருக்குச் சிற்றம்பலம் என்னும் மகனும் ஏழு புத்திரிகளும் இருந்ததாகத் தெரிகின்றது. கரவைவேலன் கோவையில் 'தாரணி மெச்சிய சிற்றம்பலவனைத் தந்ததந்தை போரணி வாகைக் கரவையில் வேலன்' (செய். 11) என்று சின்னத்தம்பிப் புலவர் பாடுவதன் ஊடாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலாயுத முதலியாரின் மகனின் பெயரையும் பதிவு செய்துள்ளார். புத்திரிகளுக்கு ஏற்ற வரன்களைத் தேடித் திருமணம் செய்வித்து வேண்டிய சீர்சிறப்புக்கள் வழங்கி கரவெட்டியில் வாழவைத்தார் என்றும் கூறப்படுகின்றது. இவரது ஊரில் ஏழு மடங்கள் இவரால் நிறுவப்பட்டன. இவரிடம் சொந்தமாகத் திரைகடற்புரவி, சிங்காரப்புரவி என இரு கப்பல்கள் இருந்தன. இவரது பெயர் வேலாயுத உடையார் எனவும் வழங்கப்படினும் இவர் ஒல்லாந்தர் ஆட்சியில் உடையார் உத்தியோகம் பார்த்தவர் அல்லர் என்று கூறப்படுகிறது.

சேதுநிலையிட்ட மாப்பாண முதலியார் காலத்தில் இருமரபுந்துய்ய மாப்பாண முதலியார் என்னும் வேறு ஓர் உள்ளூர்ப் பிரபுவும் கரவெட்டியில் இருந்தார். இரு குடும்பத்தாருக்கும் இடையே பகைமை காணப்பட்டது. இருசாராரும் ஆளுக்காள் தீங்கிழைத்து வந்தனர். இதனால் எதிர்தரப்பு முதலியார் தமக்குப் புகழையும் மற்றவருக்கு இகழையும் ஏற்படுத்துமுகமாக நல்லூர் சின்னத்தம்பிப் புலவரைக் கொண்டு கவி பாடுவிக்க எண்ணினார். இதனை எப்படியோ அறிந்துகொண்ட சேதுநிலையிட்ட மாப்பாண முதலியார் அவரை முந்திக்கொண்டு சின்னத்தம்பிப் புலவர் கரவெட்டி வரும்வழியில் ஒரு பந்தல் அமைத்து பச்சைப்பட்டு விரித்து கட்டிலில் அவரை அமரச்செய்து உபசரித்தார். அதனால் மனமகிழ்ந்து சின்னத்தம்பிப் புலவர் கரவைவேலன் கோவையைப் பாடினார் என்று கூறப்படுகின்றது. இந்நூலின் பாட்டுடைத்தலைவரான வேலாயுத முதலியாரிடமே அவர்பற்றிக் கேட்டறிந்து. சின்னத்தம்பிப் புலவர் இக்கோவையைப் பாடினார் என்றும் சொல்லப்படுகின்றது. கரவை என்பது கரவெட்டி என்பதன் சுருக்கம். வேலன் என்பது வேலாயுத முதலியார் என்பதன் சுருக்கம்.

இதுவே உள்ளூர்ப் பிரபுத்துவம் தொடர்பாக இலங்கையில் பாடப்பட்ட முதல் தமிழ் நூலாகும். இந்நூல் பற்றிக் குறிப்பிடும் பேராசிரியர் கா. சிவத்தம்பி இந்நூல் "உள்ளூர்ப் பிரபுத்துவப் பரம்பரை பற்றித் தோன்றிய முதல் ஈழத்து நூலாகும். சமயச்சார்பற்ற, தேசிய நிலைநின்ற இலக்கியத்தின் கால்கோளாக இந்நூலினைக் கொள்ளல் வேண்டும்'' என்று கூறியுள்ளார். அதேவேளை இலங்கையின் முதல் கோவைப் பிரபந்தமாகவும் கரவைவேலன் கோவை விளங்குகிறது.

கரவைவேலன் கோவையைத் தொடர்ந்தே இலங்கையில் உள்ளூர்ப் பிரபுத்துவத்தைப் பாடும் மரபு வளர்ச்சிபெறத் தொடங்குவதைக் காணலாம். புகழ்பெற்ற புலவர்களால் தாம் பாடப்படுதல் அரசியல் ரீதியிலும் சமுதாய ரீதியிலும் தமது அந்தஸ்தை மேலும் அதிகரிக்கும் என்பதால் உள்ளூர்ப் பிரபுக்கள் அதனை மிகவும் விரும்பினர். இந்நூலின் ஒவ்வொரு செய்யுளுக்கும் வேலாயுத முதலியார் ஒவ்வொரு பவுண் பதித்த ஒவ்வொரு தேங்காயை வழங்கினார் எனக் கூறப்படுவதிலிருந்து புலவர்களால் பாடப் படுவதை எந்த அளவுக்கு உள்ளூர் பிரபுக்கள் விரும்பியிருந்தனர் என்பது தெளிவாகிறது.

பொதுவாகக் கோவைப் பிரபந்தம் 400 கலித்துறைச் செய்யுள்களைக் கொண்டு விளங்குவது வழக்கம். ஆயினும் ஆர்வமிகுதியால் போலும் சின்னத்தம்பிப் புலவர் கரவைவேலன் கோவையை 425 செய்யுள்களைக் கொண்டு பாடியுள்ளார். ஆயினும் காலப்போக்கில் இதில் 172 செய்யுள்கள் மறைந்துவிட்டன. வேலாயுத முதலியாரின் போட்டியாளராக விளங்கிய இன்னோர் உள்ளூர் பிரபுவான இருமரபுந்துய்ய மாப்பாண முதலியாரை இகழ்ந்து பாடப்பட்ட பாடல்களே தற்போது கிடைக்கவில்லை என்று கூறப்படுகின்றது.

இந்நூலில் முதலியாரின் பல்வேறு பெருமைகள் புலவரால் விதந்து பாடப்பட்டுள்ளன. வேலாயுத முதலியாரைத் தமிழ் ஆர்வலராகவும் கொடை வள்ளலாகவும் வீரனாகவும் தோற்ற அழகு கொண்டவராகவும் சித்திரித்துப் பாடியுள்ளார். சின்னத்தம்பிப் புலவர் தமது பாட்டுடைத் தலைவனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு சிறப்பிக்க முடியுமோ அவ்வளவு சிறப்பித்துப் பாடியுள்ளார். அவரைத் திருமாலாகவும் திருமாலின் அவதாரங்களான இராமனாகவும் கண்ணனாகவும் பெருமைப் படுத்திப் பாடியுள்ளார். அத்தோடு கர்ணனாக, அகத்தியனாக, நகுலனாக, மன்மதனாக எனப் பலவாறாகவும் அவரைச் சிறப்பித்துள்ளார்.

முதலியாரைத் திருமாலாகச் சிறப்பிக்கும் போது 'கய மேலன்று கூப்பிடுங்கைக் கயமே லருளவைத்த வேலன்' (செ.129) என்றும் 'விரி பாற்கடலிற் றெள்ளிய சீர்த்திக் கரவையில் வேலன்' (செ.38) எனவும் பாடியுள்ளதோடு 'மாலே யனைய கரவையில் வேலன்' எனத் திருமாலோடு உவமித்தும் கூறியுள்ளார். இராம - இராவண யுத்தத்தில் 'இன்றுபோய் போருக்கு நாளைவா' என்று கூறிய இராமனே வேலாயுத முதலியார் என்னும் பொருளில் 'பூவென்ற மாவிலங் கேசனை நாளைக்குப் போர்புரிய வாவென்ற வீரன் கரவையில் வேலன்'(செய.3) என்று புகழ்ந்து பாடியுள்ளார். இதுபோன்று வேறு சில இடங்களிலும் முதலியாரை இராமனாக உருவகித்துப் பாடியுள்ளார். எடுத்துக்காட்டாகப் பின்வருவனவற்றை நோக்கலாம். 'வனத்திற் புரியுங் கள்ளந் தருமானை யெய்த கரவையில் வேலன்'(செய்.77) 'மிதிலை வில்லைக் குழைத்த பெருமான் கரவையில் வேலன்'(செய்.108) 'வாலியும் நீள்சிலைச் சாலியுஞ் சாய வயங்குசிலை கோலிய வீரன் கரவையில் வேலன்' (செய்.293).

கண்ணனாக வேலாயுத முதலியாரைச் சிறப்பிக்கும்போது 'வெண்ணை வாரியுண்ண வுறிதாவுஞ் செங்கைக் கரவையில் வேலன்'(செய்.19) என்றும் 'விசயன் தேரூரு மாண்மைக் கரவையில் வேலன்' (செய். 53) என்றும் 'விறற் பாண்டவர்க்காய்த் தூ தே நடந்த கரவையில் வேலன் (செய். 206)' என்றும் 'மணி யாவழைக்கக் காம்பிசை யூதுங் கரவையில் வேலன்'(செய். 275) எனவும் அழகுறப் பாடியுள்ளார்.

வேலாயுத முதலியாரைப் பல்திறமைகள் கொண்ட ஒருவராக காட்ட முயற்சித்துள்ளார் சின்னத்தம்பிப் புலவர். அதில் ஒன்று முத் தமிழ் ஈடுபாடு கொண்ட ஒருவராகக் காட்ட முயற்சிப்பதாகும். அவ்வாறு அமைந்த சில பகுதிகள் பின்வருமாறு: 'முத்தமிழும் மங்காது தந்த கரவையில் வேலன்'(செய்.2). முத்தான வேகக் களியானை முத்தமி ழோர்க்குதவுங் கைத்தான மேகங் கரவையில் வேலன் (செய் 5). 'வண்டமிழ்நூற் பந்தத்தை யாயுங் கரவையில் வேலன்'(செய்.29)மொழிகண்ட முச்சங்க முத்தமிழ் நூலை முதுமதியால் வழிகண்ட நீதிக் கரவையில் வேலன் (செய்.60). 'தமிழ்நூ லினிக்குங் குணாகரன் வேலன்'(செய். 117). 'புலவர்தமிழ் தனையே விரும்புங் கரவையில் வேலன் (செய். 216). 'தமி ழியலாயு நாவன் கரவையில் வேலன்'(செய்.240) 'பெருந்தமிழ்க்கே யுருகும் விநோதன் கரவையில் வேலன்'(செய்.269) 'முத்தமிழ்நூல் வல்லான் கரவைப் பதிவாழும் வேலன்'(செய்.292) 'பண்ணிற் சிறந்த தமிழாயும் வேலன்'(செய்.311).

வேலாயுத முதலியார் தமிழ்ப் புலவர்களை நன்கு ஆதரித்து வேண்டியன வழங்கி உதவுபவர் என்பதை இந்நூலிலுள்ள பல செய்யுள்கள் எடுத்துக் காட்டுகின்றன பின்வருவன. அதற்கான சில எடுத்துக் காட்டுகள்: முத்தான வேகக் களியானை முத்தமி ழோர்க்குதவுங் கைத்தான மேகங் கரவையில் வேலன்'(செய். 5) 'பெரும்புலவர் மிடிபோக வந்த கரவையில் வேலன்'(செய்.27) 'முதுநாவலர்க்குச் சொன்னந் தருங்கைக் கரவையில் வேலன்'(செய்.34) 'அருந்தமிழ் வாணர்க் குவந்துமணி யொன்பது நல்குங் கரவையில் வேலன்'(செய்.166) 'கற்றோர் வாட்டம் தவிர்த்திடும் வேலன்'(செய்.168) 'பாவலர் மேகங் கரவையில் வேலன்'(செய்.187) 'தமிழ் நாவலர்க்கோர் கற்றா வனைய கரவையில் வேலன்'(செய்.209) 'பழங்கவி நாவலர் வெங்கலி தீர்ப்பைம் பொன்னையள்ளி வழங்கிய மேகங் கரவையில் வேலன்' (செய்.276) 'கற்றவர் நம்புங் கரவையில் வேலன்'(செய்.309) இவற்றோடு பாட்டுடைத்தலைவனின் கொடைச் சிறப்பை மேலும் பெருமைப்படுத்துமுகமாக உண்மைக்கு வாய்ந்த கரவையில் வேலன் உயர்ந்தகொடை வண்மைக் கரதலம் போற்பொழி கார்ப்புயல் வாழியவே'(செய். 425) என்று பாடி கரவைவேலன் கோவையை நிறைவு செய்துள்ளார் சின்னத்தம்பிப் புலவர்.

கரவைவேலன் கோவை பாட்டுடைத் தலைவனின் பெருமை பாராட்டும் நூலாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்திரமன்றி இலக்கியச்சுவை வாய்ந்த நூலாகவும் விளங்குவது அதன் சிறப்பம்சமாகும். அருமையான இலக்கியச்சுவை பொதிந்த செய்யுள்கள் இந்நூலகத்தே காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாகச் சில வற்றை நோக்கலாம்.

'பாடாம லோசை யடியாமற் செம்மணிப் பந்துகழங் காடாம லூசலு மாடாமற் பாங்கிய ராயத்தொடுங் கூடாம னின்றதென்' (செய்.7)

'மாசால மோமணி வாய்நோகு மோநும் மரபியலி னாசார மோவிர தத்தட யோ... பேசாதிருக்கும் வகையின்ன வாறென்று பேசிடுமே'(செய்.73)

'விதிக்கின்ற முத்தமி ழேழிசை யாவும் வியந்துணர்ந்தோ கதிக்கின்ற பூமிக் கனம்பரித் தோ ... மதிக்குஞ்செவ் வேலண்ண லேமெலிந் தாயுன் மலைப்புயமே' (செய் 40)

'ஒள்ளிய தாரகை போல்வளை யாயத்துள் ளேபுகுந்து வெள்ளிய மாமதி யாய்விளங் காய்' (செய்.38)

இவ்வாறு இலக்கியச்சுவை ததும்பும் பல இனிய செய்யுள்களைக் கொண்டதாகக் கரவைவேலன் கோவை விளங்குகிறது. திருக்குறள் சிலப்பதிகாரம் உட்படப் பழந்தமிழ் நூற்பயிற்சி மிக்கவராகச் சின்னத்தம்பிப் புலவர் இந்நூலின் மூலம் காட்சி தருகிறார். உவமை உருவகங்களைச் சிறப்பாகக் கையாளத் தெரிந்த புலவர் கணிசமான செய்யுள்களில் சிலேடை யணியையும் அழகாகப் பயன்படுத்தியுள்ளார்.

நல்லூர் சின்னத்தம்பிப் புலவரின் நூல்களில் இயன்றளவு எளிமை வாய்ந்ததாகவும் கரவைவேலன் கோவை விளங்குகிறது. இந்நூல் அவரின் கவியாற்றலையும் அழகியல் உணர்வையும் நன்கு புலப்படுத்துகின்றது. புலவரின் சிறந்த நூல்களுள் ஒன்றாகக் கரவைவேலன் கோவை விளங்குவதோடு இலங்கையின் குறிப்பிடத்தக்க இலக்கியங்களுள் ஒன்றாகவும் திகழ்கிறது.

உசாத்துணை நூல்கள்:

இரகுபரன்,க. (பதிப்பு 2005) நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் பிரபந்தங்கள், கொழும்பு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

கிருஷ்ணராசா,செ. (2002) இலங்கை வரலாறு பாகம் 11, திருநெல்வேலி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், வரலாற்றுத்துறை.

சிவத்தம்பி கார்த்திகேசு (1978) ஈழத்தில் தமிழ் இலக்கியம், சென்னை தமிழ்ப் புத்தகாலயம்.

சிவலிங்கராஜா, எஸ் (2009) ஈழத் தமிழ் இலக்கியச் செல்நெறி மூன்றாம் பதிப்பு, கொழும்பு - சென்னை குமரன் புத்தக இல்லம்.

நடராசா, க. செ. (2008) ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி, இரண்டாம் பதிப்பு, மீளச்சு. கொழும்பு - சென்னை குமரன் புத்தக இல்லம்

பூலோகசிங்கம். பொ. (1974) ஈழத்துத்தமிழ் இலக்கியம் (பதினெட்டாம் நூற்றாண்டு வரை) நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாடு நினைவுமலர், யாழ்ப்பாணம்.

மனோகரன் துரை (1997) இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சி. யாழ்ப்பாணம், கண்டி கலைவாணி புத்தக நிலையம்.

எல்லாக் கல்வி முறையிலும் மதக்கல்வி மிக முக்கியமான அம்சமாய் இருக்கவேண்டும். மதக்கல்வி என்பதில் என்னுடைய மதத்தைப் பற்றிய கல்வியையோ அல்லது எந்தத் தனிப்பட்ட ஒருவருடைய மதத்தைப் பற்றிய கல்வியையோ, அல்லது ஒரு கூட்டத்தினருடைய மதத்தைப்பற்றிய கல்வியையோ நான் குறிப்பிடவில்லை. மனித வாழ்க்கைக்கு என்றும் அடிப்படையாக இருந்துவரும் நிலையான ஆன்ம இயற்கை நியதிகளை மக்கள் அறியுமாறு எடுத்துச் சொல்ல வேண்டுமென்பதே என் கருத்து.

- சுவாமி விவேகானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக சமூக அபிவிருத்தியும் உயர்கல்வியும்

பேராசிரியர் தை. தனராஜ்
பீடாதிபதி, ஹொறைஸன் பல்கலைக்கழகம், மாலபே.

அறிமுகம்

மலையக வரலாற்றில் முதன்முறையாக 2017 ஆம் ஆண்டில் ஐந்நூற்றுக்கு மேற்பட்ட மலையக மாணவர்கள் அரசாங்க பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி பெற்றுள்ளனர். கடந்த ஐம்பது ஆண்டு காலப் பகுதியில் இலங்கையில் அரசாங்க பல்கலைக் கழகங்களின் தொகை பதினான்காக (இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தவிர்ந்த) அதிகரித்துள்ளதோடு மொத்த மாணவர் தொகை சுமார் ஐயாயிரத்திலிருந்து ஒரு இலட்சமாக அதிகரித்துள்ள போதிலும் மலையக மாணவர்களின் பல்கலைக்கழக சேர்வு வீதம் ஒரு வீதத்துக்கும் குறைவாகவே இருந்து வந்துள்ளது. இம்முறை தேசிய ரீதியாக 30,000 மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில் மலையக மாணவர்களின் பல்கலைக்கழக பங்குபற்றல் வீதம் சுமார் 1.6 வீதமாக அதிகரித்துள்ளது. இது மலையகக் கல்வியில் ஆர்வம் கொண்ட அனைவர்க்கும் மகிழ்ச்சி அளிக்கும் விடயமாகும். எனினும், மலையக மக்கள் இலங்கையின் சனத்தொகையில் சுமார் ஏழு வீதத்தினராவர் எனக் கொண்டால் பல்கலைக்கழகங்களில் மலையக மக்களுக்குரிய நியாயமான பங்கினை பெற்றுக்கொள்வதற்கு மலையகம் இன்னும் நீண்டதூரம் பயணிக்க வேண்டியுள்ளது என்பதை இலகுவில் புரிந்து கொள்ள முடியும்.

இக்கட்டுரையானது இந்த நீண்ட தூரத்தை எவ்வாறு குறைக்கலாம் என்பது தொடர்பாக சில முன்மொழிவுகளை முன்வைக்கிறது. இது தொடர்பாக பரந்துபட்ட ஒரு சமூகக் கருத்தாடலை ஏற்படுத்துவதே இக்கட்டுரை யாளரின் நோக்கமாகும்.

இலங்கையில் கல்வியின் கட்டமைப்பு

மலையகத்தில் உயர்கல்வியை மேம்படுத்த வேண்டுமெனில் முதலில் தேசிய ரீதியில் உயர்கல்வி எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இலங்கையில் உயர்கல்வி (Higher Education) எனும்போது அது பொதுவாகப் பல்கலைக் கல்வியை குறித்து நிற்கின்றது. மூன்றாம் நிலைக் கல்வி (Tertiary Education) என்னும்போது அது பொதுவாக உயர்கல்வியுடன் தொழில்சார் கல்வியும் (Professional Education) தொழில்நுட்பக் கல்வியும் (Technical Education) கொண்டுள்ளது.

இலங்கையில் 15 தேசிய பல்கலைக்கழகங்கள் உள்ளன. அவை பின்வருமாறு:

1. கொழும்பு பல்கலைக்கழகம்
2. பேராதனைப் பல்கலைக்கழகம்
3. ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
4. களணிப் பல்கலைக்கழகம்
5. மொறட்டுவை பல்கலைக்கழகம்
6. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
7. உருகுண பல்கலைக்கழகம்
8. கிழக்குப் பல்கலைக்கழகம்
9. தென் கிழக்கு பல்கலைக்கழகம்
10. ரஜரட்ட பல்கலைக்கழகம்
11. சப்ரகமுவ பல்கலைக்கழகம்
12. வயம்ப பல்கலைக்கழகம்
13. ஊவா வெல்லச பல்கலைக்கழகம்
14. கட்புல மற்றும் ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம்
15. இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

இவை தவிர கொழும்பு பல்கலைக் கழகத்தின் கீழ் ஸ்ரீ பாலி வளாகமும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கீழ் வவுனியா வளாகமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்குப் பல்கலைக் கழகத்தின் கீழ் திருமலை வளாகமும் இயங்குகின்றன. இவற்றுக்குப் புறம்பாக சில பல்கலைக்கழகங்களின் கீழ் சில விசேட நிறுவனங்களும் உள்ளன. அவை பின் வருமாறு:

- கொழும்பு பல்கலைக்கழகம்
  1. சுதேசிய மருத்துவ நிலையம்
  2. கணிணி கல்வி நிலையம் (UCSC)

- களணி பல்கலைக்கழகம்
  3. கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுள்வேத நிலையம்

- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
  4. இராமநாதன் நுண்கலைக் கல்லூரி

- கிழக்குப் பல்கலைக்கழகம்
  5. சுவாமி விபுலானந்தர் அழகியல் கற்கைகள் நிலையம்

மேற்படி பல்கலைக் கழகங்களும் அவற்றுடன் இணைந்த வளாகங்கள் மற்றும் நிறுவனங்களும் உயர்கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கை பல்கலைக் கழக மானியங்கள் குழு (UGC) வின் கட்டுப்பாட்டில் உள்ளன.

இவை தவிர குறிப்பிட்ட அமைச்சுகளின் கீழ் பின்வரும் உயர்கல்வி நிலையங்கள் இயங்குகின்றன:

1. இலங்கை பிக்குகள் பல்கலைக் கழகம்
2. இலங்கை பௌத்த, பாளி பல்கலைக் கழகம்
3. சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக் கழகம் (KDU)
4. இரத்மலானை தொழில்நுட்பவியல் பல் கலைக் கழகம் (UNIVOTEC)
5. சமுத்திர பல்கலைக் கழகம்
6. தேசிய கல்வி நிறுவகம்.

பல்கலைக் கழக அனுமதி :

இலங்கையில் பல்கலைக் கழக அனுமதி என்பது அதீத போட்டித் தன்மை நிறைந்த சிக்கலான விடயமாக உள்ளது. 1965 ஆம் ஆண்டு வரை க.பொ.த. உயர்தரத்தில் தகுதிபெற்ற சகல மாணவர்களுக்கும் பல்கலைக் கழக அனுமதி வழங்கப்பட்டது. இலவசக் கல்வி, தாய்மொழிக் கல்வி, மத்திய பாடசாலைகள் போன்றவற்றின் காரணமாக பல்கலைக் கழக அனுமதி கோரும் மாணவர் தொகை சடுதியாக அதிகரித்தமையினால் பல்கலைக் கழக தகைமை பெறும் சகலரையும் அரச பல்கலைக் கழகங்களுக்குள் உள்வாங்குவது சிரமமான விடயமாகியது. விஞ்ஞான கற்கை நெறிகளில் வடபகுதி மாணவர்கள் கொண்டிருந்த இன விகிதா சாரத்துக்கு மேற்பட்ட பங்குபற்றல் வீதம் தொடர்பாக எதிர்ப்புகள் முன்வைக்கப் பட்டதைத் தொடர்ந்து 1970 களில் பல்கலைக் கழக அனுமதியில் தரப்படுத்தல் முறை முன்வைக்கப்பட்டதும் அதன் அரசியல் விளைவுகள் பற்றியும் அனைவரும் அறிவர். பின்னர் இனரீதியான தரப்படுத்தல் முறை கைவிடப்பட்டு மாவட்டம், திறமை முதலிய அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதி முறை மாற்றப்பட்டதோடு தற்போது "இசற் புள்ளி" (Z Score) யும் பல்கலைக் கழக அனுமதியில் கையாளப்படுகிறது.

பின்வரும் அட்டவணை அரச பல்கலைக் கழகங்கள் மற்றும் அவற்றுடன் இணைந்த நிறுவனங்களில் உள்ள கற்கைத் துறை களையும் அவற்றிலுள்ள கற்கைநெறிகளின் எண்ணிக்கைகளையும் காட்டுகின்றது.

துறை Stream	**கற்கை நெறிகள் Programmes**
1. கலை	14
2. வர்த்தகம்	05
3. உயிரியல்	29
4. பௌதீகம்	11
5. பொறியியல் தொழில் நுட்பவியல்	08
6. உயிர் முறைமைகள் தொழில் நுட்பவியல்	08
7. தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியல்	06
8. துறைசார்	35
	116

மேற்படி அட்டவணையில் துறைசார் கற்கை நெறிகள் என்பது க. பொ. த. உயர்தரத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த துறையில் தகைமை பெறுபவர்களும் அனுமதி பெறக்கூடியதாக இருப்பதைக் குறிக்கிறது. உதாரணமாக, IT. Project Management, Translation Studies முதலிய கற்கை நெறிகளுக்கு கலை, வர்த்தகம், விஞ்ஞானம் என்னும் வேறுபாடின்றி பல்கலைக் கழக அனுமதி தகைமை கொண்ட எவரும் விண்ணப்பிக்க முடியும்.

மலையக மாணவர்களைப் பொறுத்த மட்டில் பொறியியல், மருத்துவம் முதலான துறைகளுக்கு விரல்விட்டு எண்ணக்கூடிய மாணவர்களே தெரிவுசெய்யப்படுகிறார்கள். பெரும்பாலானவர்கள் கலைத்துறை அல்லது வர்த்தகத் துறைகளுக்கே அனுமதி பெறுகிறார்கள். கலைத்துறைக்கான மாணவர் தெரிவு அகில இலங்கை திறமைமட்ட வரிசைநிலை அடிப்படையிலேயே மேற் கொள்ளப்படுகிறது என்பதை இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது மலையைகப் பாடசாலைகளில் எண்ணிக்கை மற்றும் உயர் கல்வித் தகைமை கொண்ட ஆசிரியர் பற்றாக்குறை நிலவியபோதும் அவர்கள் கலைத்துறைக்கு அனுமதி பெற அகில இலங்கை ரீதியில் போட்டியிடும் நிலை காணப்படுகிறது. எனவே, அரச பல்கலைக் கழகங்களில் காணப்படுகின்ற சுமார் 116 கற்கை நெறிகளில் பெரும்பாலானவற்றில் மலையக மாணவர்களின் எண்ணிக்கை பூச்சியம் தான் என்பதை நாம் அனைவரும் கருத்தில் கொள்ள வேண்டும்.

அரசுசாரா உயர் கல்வி நிலையங்கள் :

1977 இல் ஐக்கிய தேசியக் கட்சி அரசினால் அறிமுகம் செய்யப்பட்ட திறந்த பொருளாதார முறைமை இலங்கையில் அரசியல், பொருளாதார, சமூகரீதியில் பல தாக்கங்களை ஏற்படுத்தியது. ஆங்கில மொழி திரும்பவும் முக்கியத்துவம் பெற்றதோடு ஆங்கில மொழிப் பாடசாலைகள் கம்பனி சட்டத்தின் கீழ் தோற்றம் பெற்றன. இதன் தொடர்ச்சியாக ஆங்கில மொழி மூலமான உயர் கல்வி தேவையும் எழுந்தது. இன்று இலங்கையில் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில் பட்டங்களை வழங்கும் பெருந் தொகையான உயர் கல்வி நிலையங்கள் உள்ளன. இவற்றைக் கண்காணிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் உயர் கல்வி அமைச்சில் அரசுசாரா உயர்கல்வி நிலையங்கள் பிரிவு (Non-State Higher Education Institutes Division) என்னும் தனியான பிரிவு இயங்கி வருகிறது.

இப்பிரிவானது சில உயர் கல்வி நிலையங்களை தமது சொந்த பட்டங்களை வழங்குவதற்கு அனுமதித்துள்ளது. இவ்வாறு அனுமதி பெற்றுள்ள 16 உயர் கல்வி நிலையங்களும் அவற்றில் வழங்கப்படும் கற்கை நெறிகளின் எண்ணிக்கையும் கீழே தரப்படுகின்றன:

1. Institute of Surveying and Mapping - 01
2. Sri Lanka Institute of Information Technology - 28
3. Sri Lanka Institute of Development Agency - 02
4. National Institute of Social Development - 02
5. Acquinas College of Higher Studies-05
6. South Asian Institute of Technology and Medicine - 03
7. National School of Business Management - 17
8. Colombo Institute of Nautical Engineering Campus - 04
9. Sri Lanka International Buddhist Academy - 02
10. Institute of Chartered Accountants - 02
11. SANASA Campus - 03
12. Horizon Campus - 07
13. KAATSU International University - 08
14. Nagananda International Institue for Buddhist Studies - 05
15. SLT Campus Ltd. - 03
16. Sri Lanka Institute of Nanotechnology Ltd. - 01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி 16 உயர் கல்வி நிறுவனங்களும் சுமார் 90 கற்கை நெறிகளை நடத்தி வருகின்றன. இந்த வரிசையில் சேர்ந்து கொள்ள பல தனியார் உயர்கல்வி நிறுவனங்கள் உயர் கல்வி அமைச்சுக்கு விண்ணப்பித்த வண்ண முள்ளன. அரசு சாரா உயர் கல்வி நிறுவனங்கள் தொடர்பாக அரசியல் ரீதியான எதிர்ப்புகள் இருந்தபோதும் இலங்கையில் உயர் கல்வியில் அவற்றின் இருப்பு தவிர்க்க முடியாததாக உள்ளது. இன்று அரச பல்கலைக்கழகங்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் சுமார் 1,50,000 மாணவர்கள் தகைமை பெறுகின்றனர். இவர்களில் சுமார் 30,000 மாணவர்கள் மட்டுமே பல்கலைக்கழகம் செல்லும் அதிஷ்டத்தைப் பெறுகின்றனர். சுமார் 2 வீதத்தினர் மட்டும் வெளிநாட்டு பல்கலைக் கழகங்களுக்கு செல்கின்றனர். இந்நிலையில் எஞ்சியுள்ள சுமார் ஓர் இலட்சம் மாணவர்களது பல்கலைக்கழக கனவுபற்றி அரசு சாரா உயர்கல்வியை எதிர்ப்பவர்கள் சரியான முன்மொழிவுகளை பொது விவாதத் துக்கு முன்வைக்க வேண்டும். இன்றைய உயர் கல்விச் சூழ்நிலையில் ஒரு தேசிய உயர் கல்வி கொள்கை உருவாக்கத்துக்கு ஒரு பொதுக் கருத்தாடல் அவசியமானதாகும்.

இலங்கையில் பல்கலைக் கழகக் கல்வியானது அரசு சாரா உயர் கல்வித் துறையினரின் பங்களிப்புடன் விரிவு படுத்தப்பட்டுள்ள நிலையில் இந்த வாய்ப்புகள் அனைத்தையும் பற்றி உயர் கல்வி கோரும் மலையக மாணவர்கள் தெரிந்து வைத்துள் ளார்கள் எனக் கூறுவதற்கில்லை. எனினும் வரலாற்றில் முதன் முறையாக 500க்கு மேற்பட்ட மலையைக மாணவர்கள் இவ்வருடம் அரச பல்கலைக்கழகத்துக்கு செல்லவிருக்கின்ற நிலையில் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இருக்கக்கூடிய உயர் கல்வி வாய்ப்புக்களை தெரிந்து கொள்ளும் அவசியம் சீக்கிரமே ஏற்படக்கூடும்.

இந்த பின்னணியில் மலையக மாணவர் களின் பல்கலைக் கழக நுழைவு வீதத்தை அதிகரிப்பதோடு அரசு சார்ந்த பல்கலைக் கழகங்களுக்குப் புறம்பாக இருக்கக் கூடிய உயர் கல்வி வாய்ப்புகளை எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது பற்றியும் சில கருத்துக்கள் கீழே முன்வைக்கப் படுகின்றன.

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் புள்ளி விபரத் தகவல்கள் :

மலையக மக்கள் இந்நாட்டில் வாழும் ஏனைய தமிழ் மக்கள் தொகையினரின் ஒரு பிரிவினர் என்பது உண்மை எனினும் மலையக மக்கள் அரசியல், சமூக, பொருளாதார நிலைமைகளில் மிகவும் பின்தங்கிய ஒரு பிரிவினர் என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. புதிய அரசியல் யாப்பு உருவாக்க செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் வேளைகளில் இம்மக்களை தனியான தேசிய இனத்தினராக பிரகடனப்படுத்தும் முயற்சி களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனினும், பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு ஒவ்வொரு ஆண்டும் தயாரித்து வழங்கும் பல்கலைக்கழக அனுமதி தொடர்பான புள்ளி விபரங்களில் மலையக மாணவர்களின் தொகை தமிழ் மாணவர்கள் என்னும் பொது வகுதிக்குள் அடக்கப்படுகிறது. எனவே மலையக மக்களின் அனுமதித் தொகை வெளியில் தெரிய வருவதில்லை. நீண்டகாலமாக மலையக மாணவர்களின் அனுமதித் தொகையை தனியாக தருமாறு கோரப்பட்டுள்ள போதும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இக் கோரிக்கைக்கு செவி சாய்க்கவில்லை. இன்றைய சாதகமான அரசியல் சூழ்நிலையில் மலையகத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் உயர் கல்வி அமைச்சு ஊடாக மலையக மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி பற்றிய தனியான புள்ளி விபரங்களை ஆவணப்படுத்துமாறு கோருதல் வேண்டும். மலையக மாணவர்களின் அனுமதியை அதிகரிக்கும் செயற்பாடுகளுக்கு இது உறுதியான அடித்தளத்தை அமைக்கக்கூடும்.

2. பல்கலைக் கழக மாணவர்களுக்கு நிதி உதவி வழங்குதல்.

பொருளாதார ரீதியாக பின்தங்கிய ஒரு சமூகத்திலிருந்து பல்கலைக் கழக அனுமதி பெற்று தமது கல்வியைத் தொடரும் மாணவர்கள் மிகக் கடுமையான நிதிசார் கஷ்டங்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகம் கொடுக்கின்றனர். தமது கல்வியை தொடரமுடியாமல் பல மலையக மாணவர்கள் இடைநிலையில் கைவிட்டுச் சென்றுள்ள சந்தர்ப்பங்களும் உள்ளன. பல்கலைக்கழக அனுமதி கிடைத்த மாணவர்கள் பலர் ஆசிரியர் நியமனம் பெற்றுக்கொண்டு தமது பல்கலைக் கழக கல்வியை நிராகரித்த நிலைமைகளும் கடந்த காலங்களில் ஏற்பட்டுள்ளன.

பொருளாதார வசதி குறைந்த மாணவர்களுக்கு மகாபொல புலமைப் பரிசில் கிடைக்கின்றபோதும் இத்தொகை விடுதி வசதி இல்லாத பல்கலைக் கழகங்களில் பயிலும் மாணவர்களுக்குப் போதுமானதல்ல. கொழும்பு, யாழ்ப்பாண பல்கலைக் கழகங்களில் அனுமதி பெறும் மலையக மாணவர்கள் மிகவும் கடுமையான பொருளாதார கஷ்டங்களால் அவதியுறுகின்றனர்.

தற்போது கொழும்பில் இயங்கும் மலையக கல்வி அபிவிருத்தி மன்றம் பதுளையில் உள்ள சந்திரிக்கா குமாரநாயகம் அறக்கட்டளை மற்றும் இக்கட்டுரையாளன் செயலாளராக பணிபுரியும் நன்னம்பிக்கை கல்வி நிதியம் (Good Hope Education Fund) போன்றவை மலையக மாணவர்களுக்கு ஓரளவு நிதி உதவிகள் வழங்கி வருகின்றன. எனினும் இவ்வுதவிகள் பொருளாதார வசதி குறைந்த சகல பல்கலைக் கழக மலையக மாணவர்களுக்கும் கிடைப்பதில்லை. இவ்வாறான நிதி உதவிகளை பின்வரும் வழிகள் மூலம் விரிவுபடுத்த முடியும்:

அ. நிதி வளம் கொண்டோர் தமது பிரதேசங்களிலிருந்து பல்கலைக் கழகம் செல்கின்ற மாணவர்களுக்கு உதவுதல்.

ஆ. பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கங்கள் முதலியவை தமது பாடசாலைகளிலிருந்து பல்கலைக் கழகம் புகும் மாணவர்களுக்கு உதவுதல்.

இ. கோயில்கள் முதலிய சமய நிறுவன நிர்வாகங்கள், அறக் கட்டளை அமைப்புகள் ஆகியவை தமது பிரதேச மாணவர்களுக்கு உதவுதல்.

3. இலங்கையிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம்.

இலங்கையிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் ஏற்கெனவே தோட்டத் தொழிலாளர் அறக்கட்டளை மூலம் க.பொ.த. உயர்தர வகுப்புகள் மற்றும் பல்கலைக் கழக மாணவர்களுக்கு நிதி உதவிகளை வழங்கி வருகிறது. இவ்வுதவிகளை இன்னும் விரிவுபடுத்த முடியும். இதற்கு முதற்படியாக இந்த அறக்கட்டளையின் நிர்வாகக் குழு விரிவு படுத்தப்பட்டு மலையகத்தைச் சேர்ந்த கல்வியாளர்கள் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

இந்திய உயர் ஸ்தானிகராலயம் உயர் கல்வி அமைச்சு ஊடாக இந்தியப் பல்கலைக் கழகங்களில் பட்டப்படிப்பைத் தொடர பெருமளவு புலமைப் பரிசில்களை வழங்கி வருகிறது. தேசிய மட்டத்தில் நடத்தப்படும் இந்த போட்டித் தெரிவில் மலையக மாணவர்கள் பொதுவாக வெற்றியடைவதில்லை.

இந்திய உயர் ஸ்தானிகராலயம் மலையக மாணவர்களுக்கென தனியான ஒரு புலமைப் பரிசில் திட்டத்தை நிறுவவேண்டியது இன்றைய கால கட்டத்தில் மிகவும் அவசியமானது. இதற்கான நடவடிக்கைகளை மலையக அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மேற்கொள்ள வேண்டும்.

4. மலையகக் கல்விச் செயலகம்:

மலையக கல்வி மற்றும் உயர் கல்வி தொடர்பாக எண்ணிறைந்த பிரச்சினைகள் உள்ளன. இப் பிரச்சினைகளை அறிவுபூர்வமாக ஆய்வு செய்து அவற்றுக்கு தீர்வுகளை வழங்கக்கூடிய ஒரு பொதுவான அமைப்பு இன்று அவசரமாகத் தேவைப்படுகிறது. இந்நாட்டில் வாழும் ஏனைய சிறுபான்மை இனங்கள் இவ்வாறான அமைப்புகளை நிறுவி தமது சமூகத்தின் கல்வி விருத்தியை முன்னெடுத்து வருகின்றன என்பதை இங்கு மனங்கொள்வது நல்லது

மேற்படி செயலகம் பின்வரும் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. மலையகக் கல்வி, குறிப்பாக பல்கலைக் கழக சேர்வு தொடர்பான தகவல்களைப் பெற்று அவற்றை ஆவணப்படுத்தி பகிரங்கப்படுத்தல்.

ஆ. மலையக கல்விக்கு உதவக் கூடிய உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் பற்றிய ஒரு பதிவேட்டை தயாரித்தலும் தொடர்புகளை ஏறுபடுத்தலும்

இ. மலையகக் கல்வி தொடர்பான ஆய்வுகளை வழிப்படுத்தலும் அவற்றின் முடிவுகளைப் பகிரங்கப்படுத்தலும்

ஈ. மலையக கல்வி தொடர்பான ஒரு வருடாந்த மாநாட்டினை நடத்துவதோடு பல்வேறு உரித்தாளர்களையும் அதில் பங்குபெறச் செய்தலும் மாநாட்டின் செயற்பாடுகளை ஆவணப்படுத்தலும்.

5. உயர் கல்வி பற்றிய விழிப்புணர்வு :

மலையக சமூக விருத்திக்கு கல்வியின் அவசியம் பற்றி இங்கு விரித்துக்கூற வேண்டிய அவசியமில்லை. எனினும் இந்நாட்டில் உயர்கல்வி முறைமையில் மலையக சமூகத்தின் பங்குபற்றல் மிகவும் பரிதாபகரமான நிலையில் உள்ளது. மலையகத்தின் பெரும்பான்மை மக்கள் தோட்டத் தொழிலாளர்களாவர். எனவே, கல்வி மற்றும் உயர் கல்வியின் அவசியம் பற்றி அவர்கள் தெரிந்து வைத்திருக்கும் வாய்ப்புக்கள் மிகவும் குறைவாகும். ஆனால், இவ்விடயம் பற்றிய விழிப்புணர்வு தொழிலாளர் மத்தியில் மட்டுமல்லாது சமூகத்தின் சகல மட்டங்களிலும் உருவாக்கப்படல் வேண்டும். தமது பிரதேசங்களில் சமூக அமைப்புக்களை உருவாக்கி உயர் கல்வி தொடர்பான விழிப் புணர்வை ஏற்படுத்தல் மலையகக் கற்றறி வாளர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்களின் தார்மீகக் கடமையாகும்.

முடிவுரை :

அரச பல்கலைக் கழகங்களில் மலையக மாணவர்களின் பங்குபற்றல் வீதம் அதிகரித்து வருவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். எனினும், மலையகத்துக்குரிய சட்டரீதியான அனுமதி விகிதத்துக்கும் இன்றுள்ள அனுமதி விகிதத்துக்கும் பாரிய இடைவெளி காணப் படுகிறது. அரச பல்கலைக்கழகங்களில் மலையக மாணவர்களின் விகிதம் சுமார் 7 வீதம் அதிகரிக்கும் போது மட்டுமே மலையக மக்கள் தமக்குரிய உயர் கல்வி வாய்ப்புகளை தாம் பெற்றுக் கொண்டதாக மகிழ்ச்சி அடைய முடியும். அத்துடன் இந்த வாய்ப்புகள் கலைத்துறை மற்றும் வணிகத்துறை கற்கை நெறிகளில் மாத்திரமன்றி பல்கலைக் கழகங்களில் காணப்படுகின்ற சகல துறைகள் மற்றும் கற்கை நெறிகளிலும் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

இன்று ஏற்பட்டுள்ள உயர் கல்வி வளர்ச்சி மலையகத்தின் ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வியாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் சமூகப் பற்றுக்கொண்ட அரசியல் தலைவர்கள் ஆகியோரின் அர்ப்பணிப்பு மற்றும் கடும் உழைப்பினாலும் அரச உதவிகளினாலும் ஏற்பட்டது. இன்று மலையக மக்கள் ஒரு தேசிய இனமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிலையில் அவர்களது கல்வி வளர்ச்சி குறித்து சகல தரப்பினரும் ஆர்வம் காட்டுகின்றனர். இந்த சந்தர்ப்பத்தில் “சிடா” (SIDA) ஜீரீஇசற் (GTZ) முதலிய சர்வதேச தொண்டு நிறுவனங்கள் மலையகக் கல்விக்கு ஆற்றிய பெரும்பணிகளையும் நாம் மறந்துவிடலாகாது. இவ்வாறான நிறுவனங் களின் பணி மலையகத்துக்கு தொடர்ந்தும் தேவைப்படுகிறதென்பதும் முக்கியமானது.

மலையகத்துக்குச் சார்பாக இன்று ஏற்பட்டுள்ள சாதகமான அரசியல் சூழ்நிலைகளைப் பயன்படுத்திக்கொண்டு தமது குறுகிய பாகுபாடுகள், கட்சி பேதங்களைப் புறந்தள்ளி மலையகத்தின் சகல உரித் தாளர்களும் ஒரு பொதுவான வேலைத் திட்டத்தின் கீழ் ஒன்றுபட்டு உழைக்க முடியு மெனில் உயர் கல்வியில் தேசிய சராசரியினை மலையகம் சீக்கிரமே எட்டிவிட முடியும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்றியும் ஆமையும் உதாரணங்களாகிய கல்விக் கோட்பாடு

கலாநிதி தமிழ்மணி அகளங்கன்

அது ஒரு மாலைப்பொழுது. மூன்று வீதிகள் சந்திக்கும் முச்சந்தி. வயதான ஒருவர் உரத்த குரலில் ஏதோ சொல்கிறார். சிலர் அவரருகில் நின்று கேட்கிறார்கள். இப்படி கிராமங்களில் நடப்பது வழக்கம்.

மது போதையில் சிலர் சில தத்துவங் களை உதிர்த்து தமது அறிவைப் பறை சாற்றிக் கொள்வது கிராமங்களில் புதிய நிகழ்வல்ல. ஆனால் அன்று அந்த வயோதிபர் சொல்லிக் கொண்டிருந்த ஒரு தத்துவம் ஒரு கேள்வியாக அமைந்திருந்தது. சற்றுக் காது கொடுத்தேன்.

கிராமிய பேச்சு மொழியில் 'பண்டியத் திண்டவன் பரம ஞானி. ஆமயத் திண்டவன் அதவிட ஞானி' என்று சொல்லி அதன் பொருளை அங்கிருந்தவர்களிடம் கேட்டுக் கொண்டிருந்தார் அந்த முதியவர்.

'பண்டி' என்பது 'பன்றி' என்னும் மிருகத்தைக் குறித்த கிராமியப் பேச்சு வழக்குச் சொல் என்பதும் 'ஆம' என்பது 'ஆமை' என்னும் உயிரினத்தைக் குறித்த கிராமியப் பேச்சு வழக்குச் சொல் என்பதும் எனக்குத் தெரியும்.

'திண்டவன்' என்பது 'தின்றவன்' என்ற சொல்லின் கிராமிய வழக்கு என்பதும் எனக்கு விளங்கியது. ஆனால் 'திண்டவன்' என்ற சொல் 'தின்னுதல்' என்ற பொருளில் 'தின்றவன்' என்ற அர்த்தத்தில் சொல்லப் பட்டதாகத் தெரியவில்லை.

எவரும் அவர் கூறிய அந்த வாக்கியத்தின் பொருளைச் சொல்லவில்லை. அவரே ஒரு புன்சிரிப்பை உதிர்த்துவிட்டுத் தனது வித்துவத்தைக் காட்டினார்.

'தின்றவன்' என்றால் 'வென்றவன்' என்று கருத்து என்று முதலில் சொல்லிவிட்டு 'பண்டியை வென்றவன் பரமஞானி, ஆமயை வென்றவன் அதைவிட ஞானி' என்று முடித்துவிட்டு, 'இப்ப விளங்குதா?' என்று கேட்டார். அவரது பார்வை என்பக்கம் திரும்பியது. நான் ஒருவனே அங்கிருந்த படித்த இளைஞன் (அப்போது).

நான் பார்வையை மறுபக்கம் மாற்றிக் கொண்டு பேசாமல் நின்றேன். நல்ல வேளை அவர் என்னிடம் ஒன்றும் கேட்கவில்லை. அவரே பதில் சொன்னார்.

'பண்டி நிலத்தைத் தோண்டி அகழ்ந்து கிழங்குகளை எடுத்துத் தின்னும். அதுபோல நல்ல நூல்களை ஆராய்ந்து உட்பொருளை அகழ்ந்தெடுத்துக் கற்கவேண்டும். அப்படிக் கற்பவன் ஞானி ஆகிவிடுகிறான். பண்டியை விடவும் ஆழமாகத் தோண்டி கருத்துக்களை எடுத்துக் கற்பவன் பண்டியை வென்றவனாகிறான். அவனே பரம ஞானி' என்று விளக்கினார் அவர்.

ஞானம் கல்வியிலும் மேலானது என்பது எனக்குத் தெரியும். 'பண்டியத் திண்டவன் பரம ஞானி' என்பது பன்றியை வென்றவன் பரம ஞானி' என்ற கருத்தமைந்த வாக்கியம் என்பது புரிந்துவிட்டது. என்ன அற்புதமான வாக்கியம்.

'கல்லுதல்' என்றால் தோண்டுதல் என்று பொருள். 'மலையைக் கல்லி எலியைப் பிடித்த மாதிரி' என்ற பழமொழி கல்லுதல் என்பதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் தருகிறது. கொழுந்து 'கிள்ளி' எடுக்கப்படுவது கிழங்கு 'கல்லி' எடுக்கப்படுவது.

கல்வி என்ற சொல்லுக்கு 'தோண்டி அறிவு பெறல்' என்பது பொருள். இதைத் தான் ஆராய்ந்து பெறுவதே கல்வி என்றனர் அறிஞர்கள். ஆழ்ந்து அகழ்ந்து கற்றலே கல்வி 'பண்டி' மிகச் சிறந்த உவமானம் எவ்வளவு அற்புதமான ஒப்பீடு.

அடுத்தது 'ஆமயத் திண்டவன் அதவிட ஞானி' அதற்கும் அவரே பொருள் சொல்கிறார். 'ஆமை தனது வழியில மெதுவாகச் செல்லும். தனது பிரயாணத்துக்கு இடையூறாக ஏதாவது வந்துவிடுமா என்ற கவனத்தோடு நடந்து செல்லும். சிறு சத்தம் கேட்டாலும் உடனே நான்கு கால்களையும் தலையையும் தனது ஓட்டுக்குள் மறைத்துக்கொண்டு அசையாமல் நிற்கும். ஆபத்து விலகியபின் தனது பயணத்தைத் தொடரும். அதேபோல புற ஆரவாரங்களைக் கண்டு தனது ஐம்புலன் களையும்அடக்கிக்கொண்டு தன் வழியில் வாழ்பவன் ஞானி ஆகிவிடுகிறான்.

ஆமைக்குக் கால்கள் நான்கு, தலை ஒன்று எண்ணிக்கை ஐந்து. மனிதனுக்கு பொறிகள் ஐந்து. அதன் வழி புலன்கள் ஐந்து. ஐந்து புலன்களையும் தேவையற்ற விடயங்களில் செலுத்தாமல் அறிவின் வழியில் செலுத்தினால் அவன் ஞானி ஆகிவிடுகிறான். 'ஆமயத் திண்டவன்' அதாவது 'ஆமையை வென்றவன்' 'பண்டியைத் திண்டவனை' அதாவது 'பன்றியை வென்றவனைவிட' பெரிய ஞானி ஆகிவிடுகிறான் என்று அவர் மிக விளக்கமாக கருத்தைச் சொன்னார்.

ஆமையின் இந்த வகைச் செயற்பாட்டை உமாபதி சிவாச்சாரியார் தனது திருவருட்பயன் என்ற நூலில் மிக அருமையாகப் பின்வருமாறு சொல்லுகிறார்.

"புலன் அடக்கித் தம்முட புக்குறுவார் போதார்
தலம்நடக்கும் ஆமை தக".

தரையில் நடக்கின்ற ஆமை எமக்குக் கற்றுத்தந்த பாடம் எவ்வளவு அற்புதமானது என்பதை எண்ணிப் பார்த்தால் வியப்பாக இருக்கிறது அல்லவா! பன்றியையும் ஆமையையும் கற்றலுக்கும் கற்றபடி நிற்றலுக்கும் உவமைகளாக்கிய கிராமத்தவரை எப்படிப் பாராட்டுவதென்றே தெரியவில்லை.

திருவள்ளுவர் தனது திருக்குறளில் கற்றலையும் அதன்படி நிற்றலையும் வலியுறுத்தி அருமையாகப் பின்வருமாறு பாடுகிறார்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக".

"சென்ற இடத்தாற் செலவிடாது தீதுஓரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு".

சந்தேகம் இல்லாமல் தெளிவாகக் கற்க வேண்டும். கற்க வேண்டியவற்றைக் கற்றபின் அதற்கேற்ப வாழவேண்டும் என்பது முதலாவது குறளின் பொருள்.

மனதை அதன்போக்கில் செல்லவிடாது தீயவழிகளிலிருந்து விலக்கி நல்ல செயற்பாடுகளின் வழியில் செல்ல வைப்பதே கல்வியினால் கிடைக்கின்ற அறிவின் பயன்பாடாக இருக்க வேண்டும். இது இரண்டாவது குறளின் பொருள்.

பன்றியைப் போலக் கற்க வேண்டும். ஆமையைப் போல அதன்படி நிற்க வேண்டும் என்று சிந்தித்தால் அது பிழையாகுமா? இன்று கற்றலும் அதன்படி நிற்றலும் ஆகிய இரண்டு செயற்பாடுகளுமே செயலற்றனவாகிவிட்டன என்று சொல்லுமளவுக்கு வேதனைப் படுமளவுக்கு நிலைமை மாறிவிட்டது.

'ஒருவன் தான் கற்றவை யாவற்றையும் மறந்துபோன பின்பும் அவனிடம் எது எஞ்சி இருக்கின்றதோ அதுவே கல்வி' என்றான் ஒரு மேலைத்தேயக் கல்வியியலாளன். எனக்கு இந்தக் கருத்து மிகவும் பிடித்திருக்கிறது. இன்று கற்றவர்களிடம் எது எஞ்சி இருக்கிறது என்பது தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியும் சாதியும் :

கல்வியால் தான் சமூக மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்று இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்ப் புலவர்கள் பெரிதும் நம்பினார்கள். புறநானூறு என்ற இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க இலக்கிய நூலில் கல்வியால் சாதி ஏற்றத்தாழ்வைப் போக்கலாம் என்று பாண்டியன் ஆரியப் படை கடந்த நெடுஞ் செழியன் அருமையாகச் சொல்கிறான்.

"வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்
கீழப் பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே".

தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த அதாவது நாலாவது வருணத்தைச் சேர்ந்த சூத்திரன் ஒருவன் கற்பானாயின் முதல் வருணத்தைச் சேர்ந்த சாதியாகச் சொல்லப்பட்ட அந்தணனும் அவனுக்குக் கீழேதான் கருதப்படுவான் என்பது இதன் பொருள்.

அந்தணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற நாலு வகை வருணப் பாகுபாடு அக்காலத்தில் இருந்தது. கல்வியனால் பிறப்பின் மூலம் வரும் ஏற்றத்தாழ்வைப் போக்கலாம் என்ற கருத்து இரண்டாயிரம் ஆண்டுகள் பழைமையானது.

பிற்காலத்தில் பதினாறு பதினேழாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்திருக்கக் கூடியவராகக் கருதப்படும் அதிவீர ராம பாண்டியன் என்ற மன்னன் இதேபோன்ற இன்னொரு கருத்தை அருமையாக முன் வைத்தான்.

அவன் பாடிய வெற்றிவேற்கை என்று இன்று அழைக்கப்படும் நறுந்தொகை என்ற நூலில் பின்வருமாறு சொல்கிறான்:

"கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதர் ஆகும்மே".

கல்வி கற்காத ஒருவன் தான் உயர்ந்த சாதியில் பிறந்ததாகச் சொல்லி அதற்காகத் தன்னை யாவரும் மதிக்கவேண்டும் என்று நினைப்பது எப்படிப்பட்டது என்றால் நெல்லோடு கிடக்கும் உள்ளீடாகிய அரிசி இல்லாத பார்வைக்கு நெல் போலவே இருக்கும் பதர் (சப்பி) தன்னை நெல்லாகக் கருதவேண்டும் என்று நினைப்பதைப் போல் என்கிறான் மன்னன்.

குலப் பெருமை, சாதிப் பெருமை, வர்ணப் பெருமை எனச் சொல்லப்படுகின்ற யாவும் கல்வி இல்லாதவனுக்குச் சேராது என்பதை இதன் மூலம் சொல்கிறான் மன்னன். இன்றும் பலர் தாம் மதிக்கப்படத்தக்க தகுதியற்றவர் களாக இருந்தும் தமது பிறப்பின் மூலம் தாம் மதிக்கப்பட வேண்டுமென்று அடம்பிடிப்பது நிகழ்கின்றது.

வள்ளுவரும் கல்வியும் :

உலகப் பொதுமறை என்று போற்றப்படுகின்ற திருக்குறளில் கல்வி கல்லாமை, கேள்வி, அறிவுடைமை என பல அதிகாரங்களில் கல்வியின் பெருமை பேசப்பட்டுள்ளது.

ஒரு பிறவியிலே ஒருவன் கற்ற கல்வியானது அவனுக்கு ஏழு பிறப்புக்களிலும் உதவும் தன்மை படைத்தது என்கிறார் வள்ளுவப் பெருந்தகை.

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி
ஒருவற்கு எழுமையும் ஏமாப் புடைத்து"

இத்தகைய ஒரு கருத்தை உலகின் எந்த மேலைத் தேசக் கல்வியியலாளனும் சொல்லவில்லை. சொல்லவும் முடியாது. ஏனெனில் மேலைத் தேச சமயக் கோட்பாடுகள் மறுபிறப்பை ஏற்றுக் கொள்வதில்லை. இந்து, பௌத்தம் முதலான கீழைத்தேசச் சமயங்களே மறுபிறப்பை ஏற்றுக்கொள்கின்றன.

கல்வி பிறவிகள்தோறும் தொடர்ந்து வரும் என்றும் அந்தந்தப் பிறவிகளிலும் அது அவனைக் காப்பாற்றும் என்றும் சொன்ன கருத்து கல்வி என்பது புண்ணியம், பாவம் என்பவை ஒருவனது ஆன்மாவோடு தொடர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவது போல வரும் என்றவாறு அமைகிறது. எப்படியிருக்கிறது தமிழர்களின் கல்வி பற்றிய கருத்து. இரண்டாயிரம் ஆண்டுகள் பழைமை யான கருத்துக்கள் இவை.

கற்றவனுக்கு எந்த நாடும் அவனது சொந்த நாடாக ஆகிவிடும். எந்த ஊரும் அவனது சொந்த ஊராக ஆகிவிடும். அப்படியிருக்க ஒருவன் கற்காமலேயே தன் வாழ் நாள் முழுவதையும் வீணாக்கி இறந்து விடுகிறானே என்று வள்ளுவப் பெருந்தகை ஆச்சரியப்பட்டு வருந்துகிறார்.

"யாதானும் நாடாமால் ஊராமால்
என்னொருவன் சாந்துணையும்
கல்லாத வாறு".

ஔவையாரும் கல்வியும் :

கல்வி கற்றவன் எங்கு சென்றாலும் வாழ்ந்து கொள்வான் என்று ஔவையார் அரசனுக்கு எதிராக அந்தக் காலத்திலேயே கல்வியின் பெருமையைச் சொல்லி வைத்துள்ளார்.

மரத் தளபாடம் செய்கின்ற தச்சுத் தொழிலாளியின் தொழில் தெரிந்த ஒரு மகன் ஒரு கோடரியோடு காட்டுக்குள் புகுந்தால் அவன் பிழைத்துக் கொள்வான். அது போலவேதான் கல்வி கற்றவனும் எந்தத் திசைக்குச் சென்றாலும் அங்கே பிழைத்துக் கொள்வான்.

"மரம் கொல் தச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத் தற்றே
எத்திசை செலினும் அத்திசைச் சோறே".

என்று இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஔவையார் அருமையான உதாரணம் மூலம் விளக்கி யுள்ளார்.

தனக்குக் கிடைத்த அரிய நெல்லிக் கனியை அதை உண்டவர் நீண்டகாலம் ஆரோக்கியமாக வாழ்வார் என்று தெரிந்திருந்தும் அதிகமான் என்ற அரசன் அதைத் தான் உண்ணாமல் ஔவையாராகிய புலவர் வாழவேண்டும் என்று நினைத்து ஔவையாருக்குக் கொடுத்தான் என்ற செய்தி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் கல்விக்கும் கல்வி கற்றவருக்கும் கொடுத்த மதிப்பையும் கல்வியின் பயன் பாட்டையும் நன்கு விளக்குகின்றன.

சிறப்பும் வறுமையும் :

கவிச் சக்கரவர்த்தி கம்பன் 'மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்' என்றும் 'கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு' என்றும் மன்னனுக்கு முன்னாலேயே கூறியதாக பாடல் உண்டு.

ஒரு காலத்தில் கல்விகற்ற பலர் வறுமையாளர்களாக இருந்தனர். அவர்களில் பலர் வறுமையாளர்களாக மாறியதற்கு முக்கிய காரணம் அவர்களது இரக்க குணமே எனலாம்.

கல்வி அறிவின் மூலம் மக்களை நேசிக்கத் தொடங்கி தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்தாலும் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பியதாலும் தாம் உழைத்த செல்வங்களைச் செலவழித்து வறுமை யாளர்களாக ஆனார்கள். அதனால் கல்வி உள்ளவன் வீட்டில் செல்வம் தங்குவதில்லை என்று சொல்லி கல்வியைச் சிலர் புறக்கணித்தனர்.

இந்து சமயத்தவர் வேடிக்கையாக சமூக நடைமுறையோடு இதனை வித்தியாசமாக விளக்கினர். கல்விக்கு அதிபதியான சரஸ்வதி செல்வத்துக்கு அதிபதியான இலக்குமிக்கு மருமகள். மாமிக்கும் மருமகளுக்கும் ஒருபோதும் ஒத்துவராது. அதனால் கல்வி உள்ள வீட்டில் செல்வம் இருக்காது என்றனர். வீடுகளில் இலக்குமி படத்தை வைத்துப் பூசித்த இந்துக்கள் பலர் சரஸ்வதி படத்தை சாமி அறையில் வைப்பதில்லை.

படித்தவனுக்கு வறுமை வருவது கொடுமையானது. ஆனால் அதைவிடக் கொடுமையானது படிக்காதவனிடம் செல்வம் சேர்வது.

"நல்லார்கண் பட்ட வறுமையின்
இன்னாதே கல்லார்கண் பட்ட திரு".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[library stamp]

நல்லார் என்று வள்ளுவர் குறிப்பிடுவது கற்றவரை. எனவே கல்லார் நல்லார் இல்லை என்பது அவர் கருத்து.

தொழிற்கல்வி கற்காத அக்காலப் புலவர்கள் சிலர் வறுமையில் வாடியிருக்கிறார்கள். அரசர்களை நம்பி அவர்களைப் புகழ்ந்து அவர்களிடம் பொருள் பெற்று வாழ்ந்துள்ளனர். அப்படியிருந்தும் கூட கல்வியின் பெருமையை அக்காலக் கல்வியாளர்கள் புலவர்கள் புறக்கணிக்கவில்லை.

அதிவீர ராம பண்டியன் தனது 'வெற்றி வேற்கை' நூலில் கூறிய ஒரு கருத்து அற்புதமானது. கல்வி கற்பதால் பிச்சை எடுத்து வாழவேண்டி ஏற்பட்டாலும் கற்பது நல்லது என்று கல்வியை வலியுறுத்தி பின்வருமாறு பாடுகிறார்.

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"

'கற்றவனே மனிதன் கற்காதவன் விலங்கு', 'கற்றவனின் முகத்திலே இருப்பவைகள் தான் கண்கள் கற்காதவனது முகத்திலே இருப்பவைகள் புண்கள்' என்றெல்லாம் வள்ளுவப் பெருந்தகை சொல்லி வைத்துள்ளார்.

கற்றலும் நிற்றலும் :

'படிக்காதவன் தவறு செய்தால் மன்னிக்கலாம். படித்தவன் தவறு செய்தால் மன்னிக்க முடியாது' என்கிறார் மகாகவி பாரதியார். பாஞ்சாலி சபதத்தில் தருமன் நாட்டைப் பணயம் வைத்துச் சூதாடியதற் காகக் கோபப்பட்ட பாரதியார் தருமனை ஏசும்போது

"ஆயிரங்களான நீதி அவை உணர்ந்த தருமன் தேயம்வைத்து இழந்தான் சீசீ.. சிறியோர் செய்கை செய்தான்".

என்று அருவருப்படைகிறான். சிறியோர் செய்கை என்பது கல்லாதவர் செய்கை ஆகும். தருமன் ஆயிரக்கணக்கான நீதி நூல்களைக் கற்றவன், அப்படியிருந்தும் இப்படிச் செய்துவிட்டானே என்று ஆத்திரப்படுகிறார் அருவருப்படைகிறார்.

இன்று கல்வி என்பது பெரும்பாலும் தொழிற் கல்வியாகவே அமைந்துள்ளது. கற்றவன் வறுமைப் படுவதற்கோ, துன்பப் படுவதற்கோ சந்தர்ப்பம் இல்லை. கற்றவற்றை மறந்தவர்களும் கற்றபடி நடக்க மறுப்பவர்களுமே தான் துன்பப்படுகிறார்கள்

கல்வியே சமூகங்களிடையே பொதுக் கலாசாரத்தை ஏற்படுத்த வல்லது. கல்வியே சகிப்புத் தன்மையை வளர்க்க வல்லது. கல்வியே. சமயம் கடந்து, மொழி கடந்து, சாதி கடந்து, நாடு கடந்து மனித குலத்தை ஒற்றுமைப் படுத்த வல்லது. கல்வியே மனிதனை மனிதனாக வாழ வைக்க வல்லது.

இப்படித்தான் நாங்கள் நம்புகிறோம். ஆனால் இன்று கல்வி எமது எதிர் பார்ப்பை நிறைவு செய்யக்கூடியதாக உள்ளதா என்று ஆராய்ந்து பார்த்தால் அச்சமே மிஞ்சுகின்றது. கற்றவனே அதிகம் கெட்டவனாக இருக்கிறான். -மாணிக்கவாசகர்.

'கற்றாரை யான் வேண்டேன், கற்பனவும் இனி அமையும்' என்றும் 'கல்வி என்னும் பல்கடல் பிழைத்தும்' என்றும் கூறியது ஏனென்று இப்போதுதான் புரிகிறது. 'கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்' என்று யோகிகள் கதறும் அளவுக்கு கல்வி சீரழிந்து விட்டது.

கற்றவர்கள் கற்றபடி நிற்பதில்லை. வாழவேண்டிய வழிமுறையை இன்றைய கல்வி தரவில்லை. இப்போது பன்றியையும் ஆமையையும் நினைத்துப் பாருங்கள். குற்றம் கல்வியே இல்லை. எவற்றைக் கற்க வேண்டும், கற்பிக்க வேண்டும் என்ற திட்டங்கள் சரியாக இல்லை.

கல்வி ஆழ்ந்து அகன்று நுண்ணியதாக இருக்க வேண்டும். இறைவனை 'ஆழ்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகன்ற நுண்ணியனே' என்று மாணிக்கவாசகர் அழைத்துப் பாடுகிறார். வேலின் வடிவம் போல் கல்வி இருக்க வேண்டும். வேல் கீழே ஆழ்ந்து மேலே அகன்று பின் நுண்ணியதாகக் கூர்மை பொருந்தி இருக்கும். கல்வியும் இப்படித் தான் இருக்க வேண்டும் என்றனர் ஆன்றோர்.

இன்று படித்தவனது வீட்டில் பொருளாதாரம் எப்படி இருக்கிறது. வர்த்தகம் படித்தவன் வர்த்தகமா செய்கிறான். விவசாயம் படித்தவன் விவசாயமா செய்கிறான். விஞ்ஞானம் படித்தவன் என்ன கண்டுபிடிப்பைச் செய்திருக்கிறான். இப்படிப் பலவற்றைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

ஆராய்ந்து பொருத்தமானவற்றைக் கற்கவேண்டும். கற்பிக்க வேண்டும். தானும் வாழ்ந்து நாடும் வாழக்கூடிய அறிவையும் உணர்வையும் கல்வி வளர்க்கவேண்டும். எல்லோரையும் வாழவைக்கக்கூடிய கல்வியை துவேசமற்ற, பகைமையற்ற. போரற்ற, சந்தோசமான வாழ்வை மக்கள் யாவரும் வாழக்கூடிய கல்வியை கற்பித்து யாவரும் மனிதர்களாக வாழ வழி சமைக்கவேண்டும்.

கலாநிதி எழுதிய நூல்கள் :

1. "செல்", "வா" என்று ஆணையிடாய் - (அஞ்சலிக் கவிதை)
2. சேரர் வழியில் வீரர் காவியம் - (குறுங்காவியம்)
3. சமவெளி மலைகள் (அகளங்கன் - சு. முரளிதரன் கவிதைகள்)
4. வாலி (ஆய்வுநூல் - மூன்று பதிப்புகள்)
5. இலக்கியத் தேறல் (கட்டுரைகள்)
6. நளவெண்பா (கதை)
7. அன்றில் பறவைகள் (வானொலி நாடகங்கள்)
8. முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் (வரலாறு)
9. இலக்கியச் சிமில் (கட்டுரைகள் - இரு பதிப்புகள்)
10. தென்றலும் தெம்மாங்கும் (கவிதைகள்)
11. பன்னிரு திருமுறை அறிமுகம் (சமயம்)
12. மகாகவி பாரதியாரின் சுதந்திரக் கவிதைகள் (ஆய்வு)
13. இலக்கிய நாடகங்கள் (வானொலி நாடகங்கள்)
14. ஆத்திசூடி (விளக்கவுரை)
15. கொன்றைவேந்தன் (விளக்கவுரை)
16. அகளங்கன் கவிதைகள்
17. வாக்குண்டாம் (மூதுரை) விளக்கவுரை.
18. சிவ புராணம் (பொருளுரை)
19. செந்தமிழும் நாப்பழக்கம் (பேச்சுக்கள்)
20. நாமறிந்த நாவலர் (சிறு குறிப்புகள் - இருபதிப்புகள்)
21. நல்வழி (பொழிப்புரை - விளக்கவுரை)
22. இசைப்பாமாலை (வானொலி மெல்லிசைப் பாடல்கள்)
23. கவிஞர் சின்னாஹ்வின் இரட்டைக் காப்பியங்கள் - ஓர் ஆய்வு.
24. இலக்கியச் சரம் (கட்டுரைகள்)
25. வெற்றிவேற்கை (நறுந்தொகை) - உரை
26. கூவாத குயில்கள் (வானொலி மேடை நாடகங்கள்)
27. திருவெம்பாவை - உரை (சமயம்)
28. பாரதப் போரில் மீறல்கள் (கட்டுரை)
29. சிட்டிக் குருவிகள் (மழலைப் பாடல்கள்)
30. சின்னச்சிட்டுக்கள் (சிறுவர் பாடல்கள்)
31. நறுந்தமிழ் (கட்டுரைகள்)
32. பாரதியாரும் பாஞ்சாலி சபதமும் (ஆய்வு)
33. பத்தினித் தெய்வம் (நாட்டிய நாடகங்கள்)
34. வேரும் விழுதும் (கட்டுரைகள்)
35. கங்கையின் மைந்தன் (வானொலி மேடை நாடகங்கள்)
36. பந்து அடிப்போம் (சிறுவர் பாடல்கள்)
37. சிரிக்க விடுங்கள் (சிறுவர் பாடல்கள்)
38. சகல கலா வல்லி மாலை (உரை)
39. அலைக்குமிழ் (நாவல்)
40. சின்னஞ்சிறிய சிறகுகள் (குழந்தைப் பாடல்).
41. கம்பனில் நான் (கட்டுரைகள்)
42. முற்றத்துக் கரடி (சிறுகதைகள்)
43. தமிழ்த்தூது வண. பிதா. தனிநாயகம் அடிகளார்
44. வன்னிப் பிரதேச வயற்பண்பாடு (ஆய்வு)
45. ஞானப் பழம் (பாநாடகம்)
46. ஆணைகட்டிய அரியாத்தை (நாடகம்)
47. சிறுவர் சிந்தனைக் கதைகள் (2017)
48. சங்கமும் தமிழரும் (ஆய்வு-2018)

தொடர்பு : 077 960 6893

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில் அறிவியல் சிந்தனையின் வளர்ச்சிப் போக்குகள்

பேராசிரியர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்
பேராசிரியர் மொழித்துறை. மொழிகள்துறை, சமூக விஞ்ஞானங்கள் மொழிகள் பீடம்
சப்ரகமுவ பல்கலைக்கழகம், பெலிகுல்லோயா

தமிழில் அறிவியலின் பயன்பாடு வாசகர் சமூகச் சூழல் அடிப்படைகளில் இடம் பெறுகின்றன. கல்வியாளர் ஆய்வு, தொழில், பொதுவியல் நிலைகளில் அந்தந்த வாசகர்களின் தரத்திற்கேற்ப மொழியின் பயன்பாடு இடம்பெறுதல் வேண்டும். கல்வியாளர் நிலையில் துறைசார்புடைய கருத்தாக்கங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் பயன்பாடும், கல்வியாளர் அல்லாத தொழிலாளர் மற்றும் பொதுமக்களுக்கான பயன்பாட்டில் துறைசார்புடைய கருத்தாக்கங்கள், உரையாடல், வினாவிடை, பேட்டி, சிறுகதை, நாடகம் எனும் வடிவங் களைப் பெறின், தமிழில், அறிவியல்,பயன்பாடு அதிகப் புரிந் திறனையும் பரவலாக்கத்தையும் பெற இயலும். கலைச் சொல் பயன்பாட்டில் சற்றுக் கவனத்தை அதிகமாக்கித் தமிழில் அறிவியல் கலைச் சொல் பயன்பாட்டைப் பெறும் மொழிச்சொல்லிற்கு இணையான மூலமொழிச் சொல்லை அடைப்புக் குறிக்குள் பயன்படுத்தினால், கலைச் சொல் பரவலாக்கம் அடையும் என்பதில் ஐயமில்லை. தமிழில் அறிவியில் பயன்பாடும் மிகுந்து பரவலாக்க மடைந்து நிலைபேறடையும்.

உலகளாவிய அளவில் ஆங்கிலம் முதன்மை மொழியாகவும் இணைப்பு மொழியாகவும் (Second language) இருக்கிறது. ஆதலால் அறிவியல் கலைச் சொற்களானது ஒரே பெயரில் வழங்கப்படுகிறது. சான்றாகத் தமிழில் அறிவீயலைக் கற்பிக்கும் போது நாம் Oxygen எனும் ஆங்கில வார்த்தையைப் 'பிராணவாயு' என மொழிபெயர்க்கத் தேவையில்லை. 'ஆக்ஸிஜன்' என்று அதே உச்சரிப்பில் தமிழில் எழுதலாம்.

தாய்மொழியாகிய தமிழில் கல்விகற்று மொழிபெயர்ப்பிலும் கொஞ்சம் ஞானம் பெற்றால் நாளைய தமிழன் இந்த ஒரு பூமியில் இல்லை விண்ணில் ஒன்பது பூமியிலும் தனது அரசாட்சியை நிலைநிறுத்த முடியும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. அறிவியலைப் பற்றிய அறிவு இளமையில் சரியான அழுத்தமுடன் பதிய வேண்டும். எனவே அயல் நாடுகளில் பயன்படுத்துவது போன்று தரமான சிறந்த அறிவியல் ஓவியங்களைக் கொண்டு அதனைத்தமிழில் பேச்சுவழக்கில் விளக்கிக் கற்பிக்க வேண்டும். ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை இம் முறையைப் பயன்படுத்தலாம். மேலும் புத்தகத்தைக் கொண்டே கல்வியைப் போதிக்காமல், தாவரவியற் பூங்கா (Botanical Gardens), விலங்கியற் காட்சிச்சாலை (Zoo or Zoological Park), கோளரங்கங்கள் (Planatariam) போன்றவற்றைப் பள்ளிக் கல்விக்கேற்றவாறு அமைத்து ஒவ்வொன்றையும் நயமுடன் விளக்க வேண்டும். செடிகளைக் காட்டி அதன் பெயர்களைக் கூறி அதன் தன்மையைக் கூறவேண்டும். ஆரம்பக் கல்வியில் நூற்றுக்கு 75 வீத செய்முறைக் கல்வியும் 10 வீத புத்தகக் கல்வியும் கொண்டு அறிவியல் கற்பிக்க வேண்டும். அன்றாட வாழ்வில் பயன்படும் அறிவியலைப் பற்றிய அறிவைக் குழந்தைகளுக்குப் புகட்டவேண்டும்.

உயர்நிலைக் கல்வியில் 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை அனைத்து முக்கிய பாடங்களையும் தமிழ் மொழியிலேயே கற்க வேண்டும். அறிவியல் தமிழ் எனும் பாடத்தையும் மொழிபெயர்ப்புக் கல்வியையும் கட்டாயப் பாடமாக அறிமுகப்படுத்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல்நிலைக் கல்வியில் 11 ஆம் மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு அவர்கள் தேர்ந்தெடுக்கும் பாட வகையை (Groups) ஏற்றாற் போல மொழிபெயர்ப்புப் பாடமும் அறிவியல் தமிழ்ப் பாடமும் கட்டாயமாக்கப்பட வேண்டும்.

உயர்கல்வி என்று எடுத்துக்கொண்டால் கலை, அறிவியல், மருத்துவம், தொழில் நுட்பம், சமூக அறிவியல் எனக் காணப்படுகிறது. இவற்றில் பெரும்பாலான அனைத்துப் பிரிவுகளிலும் அறிவியல் கற்பிக்கப்படுகிறது. அறிவியல் தமிழ் எனும் பாடம் உயர்கல்வியில் ஒரு கட்டாயமாக இருந்து அவர்கள் கற்கும் படிப்பிற்கு ஏற்ற மொழிபெயர்ப்புக் கல்வியைத் தரவேண்டும்.

தற்போது காணப்படும் ஆராய்ச்சிப் படிப்பான M.Phil, Ph.D. D.Lit., M.S., M.Ch., DM போன்றவற்றில் தாம் முறைப்படி பெற்ற அறிவினைக் கொண்டு உலகளாவிய கல்வி நிறுவனங்களில் பயின்றால் அங்கே ஆங்கிலத்திலும் தமிழகத்தில் சிறப்புற ஆய்வை மேற்கொள்ள முடியும். தற்போதுள்ள ஆராய்ச்சிக் கல்விகள் மாணவர்களின் ஆய்வை அடிப்படையாகக் கொண்டவை. அவற்றில் தமிழை அறிவியல் முறைப்படி பயன்படுத்தும் முறையைக் கையாள வேண்டும்.

தற்போது அறிவியல் தமிழில் பல ஆய்வுகள் தேவைப்படுகின்றன. தமிழகத்தி லேயே குறிப்பிட்ட கல்வி நிறுவனங்களில் மட்டுமே அறிவியல் தமிழ் கற்பிக்கப்படுகிறது. சான்றாகத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம், சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இரண்டையும் கூறலாம். தஞ்சாவூரில் அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் மொழிபெயர்ப்புத் துறை ஆகிய துறைகள் தமிழுக்கு முன்னுரிமை வழங்கிச் செயல்படுகின்றன. அறிவியல் தமிழையும் தமிழ்வழி அறிவியல் கல்வியையும் வளர்க்க B.A. (Scientific Tamil), M.A. (Scientific Tamil) போன்றவற்றை தமிழக அரசும் இலங்கை அரசும் ஏனைய தமிழர் வாழ் பிரதேசத்து அரச கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் கற்பிக்க வழி செய்ய வேண்டும்.

உலகில் உள்ள எந்த மொழிகளுக்குமே இல்லாத ஒரு மாபெரும் மொழிச் செறிவு தமிழுக்கு மட்டுமே உண்டு. தமிழைக் கொண்டு அறிவியல் மட்டுமன்றி எந்தவொரு கல்வியையும் எளிமையாகக் கற்க முடியும். தமிழைக் கொண்டு கற்கும் கல்வி ஒருவனை வாழ்வில் மிக உயர்ந்த நிலையில் அமர்த்தும். அத்தகைய வல்லமை தமிழ் மொழிக்கு உண்டு. உலக பாரம்பரிய மிக்க ஒரு மொழியை நம் தாய் மொழியாகக் கொண்டு, அந்த மொழியைவிட்டு மற்ற மொழியிலே முக்கிய படிப்புகளைப் படித்து நம்மொழி வளர்ச்சியைத் தடைசெய்வது மாற்றப்பட வேண்டும். ஆங்கிலத்தை வெறுக்கவோ, ஒதுக்கவோ இல்லை. அது ஒரு பாடமாக இருக்கும். தமிழ் பயிற்று மொழியாக இருக்க வேண்டும் (Medium of subject is Tamil). தமிழுக்குச் செம்மொழி எனும் அரியணை காலம் தாழ்த்தி கிடைத்துள்ள இந்த நிலையையில் அதன் உண்மையான இடத்தை அறிவியல் கல்வியின் மூலம் பெற வேண்டும். அப்படிப் பெற்றால் தமிழும் தமிழனும் இப்பூகோளம் முழுமையும் தனது ஆட்சியை நிலை நிறுத்துவான்.

தமிழில் அறிவியல் மொழிபெயர்ப்பும் அறிவியல் பாடநூலாக்கமும் இன்று இன்றியமையாத கட்டாயத் தேவையாக மாறியுள்ளன. அறிவியல் செய்திகளை வெளியிடுவதில் மொழி ஒரு ஊடகமாக மட்டுமே பயன்படுகிறது. கருவியைச் செம்மையாகப் பயன்படுத்துவதன் வழி மட்டுமே நன்மையான விளைவுகளைப் பெற முடியும். அறிவியல் கல்வியை முறையாகப் பெறாத நாமும் மொழியும் இன்று உலக அரங்கில் தலை நிமிர்ந்து நிற்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அறிவியல் கருத்துக்களை உள்வாங்கித் தமிழில் அறிவியல் நூல்களை மொழிபெயர்ப்பு, இலக்கணப் பிழைகள் இன்றி உருவாக்க முனைய வேண்டும். ஆனால் பல அறிவியல் நூல்கள் குறிப்பாகப் பாட நூல்கள் ஆங்கில வழி நூல்களின் நேரடி மொழி பெயர்ப்பாக அமைந்துள்ளன. சொல்லுக்குச்சொல் மொழிபெயர்ப்பாக அமைவதால் மொழி பெயர்ப்பு மற்றும் இலக்கணப் பிழைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏராளமாக ஏற்படுகின்றன. இதனால் அறிவியல் செய்திகளை முழுமையாக வெளியிட முடியாத நிலை ஏற்படுகிறது. இவ்வகையில் தமிழ்வழி அறிவியல் நூல்களில் காணப்படும் மொழிபெயர்ப்பு மற்றும் இலக்கணப் பிழைகள் கண்டுபிடிக்கப்பட்டுத் திருத்தப்படவும் வேண்டும்.

1.1. மொழிபெயர்ப்புப் பிழைகள் :

அறிவியற் கருத்துக்கள் ஆங்கில வழிப்பாட நூல்களிலிருந்து தமிழ்வழிப்பாட நூல்களில் மொழி மாற்றம் செய்யும் போது மொழிபெயர்ப்பில் அமைந்த பிழைகள் பின்வருவனவாம்:

1. தவறான மொழிபெயர்ப்பு
2. நேரடி மொழிபெயர்ப்பு
3. தெளிவற்ற மொழிபெயர்ப்பு
4. சுருக்கமற்ற மொழிபெயர்ப்பு
5. சீர்மையற்ற மொழிபெயர்ப்பு
6. முழுமையற்ற மொழிபெயர்ப்பு

2. கலைச்சொல் பயன்பாடு :

மாணவர்களுக்குச் சீர்மையான கலைச் சொற்களின் துணையோடு அறிவியலைக் கற்பிக்கவேண்டியது தேவையான தொன்றாகும். கலைச் சொற்களின் வழியாகவே அறிவியலின் அடிப்படைக் கருத்துக்களை மாணவர்கள் புரிந்து கொள்கிறார்கள். இத்தகைய கலைச் சொற்களில் சீர்மையின்மை காணப்பட்டால் கற்றலில் தெளிவின்மையும் உயர்கல்வியில் பாதிப்பும் ஏற்பட்டுவிடும்.

ஆங்கிலம் போன்ற மொழிகளில் வெளியிடப்படுள்ள அறிவியல் பாட நூல்களில் தரப்படுத்தப்பட்ட (Standardiseds) கலைச் சொற்களே பயன்படுத்தப்படுகின்றன. இதனால் ஒரு பொருளுக்குப் பலசொற்கள் பயிலும் நிலை குறைந்து காணப்படுகிறது.

அறிவியல் பாடநூல்களில் பொது வழக்கில் நிலைத்துவிட்ட பல எளிமையான தமிழ்க் கலைச் சொற்களைப் பயன்படுத்தாமல் ஆங்கிலச் சொற்களை ஒலிபெயர்ப்புச் செய்து பயன்படுத்தியுள்ளனர். பாடநூலில் பயன்படுத்தப்பட்டுள்ள தமிழ்க் கலைச் சொற்களிடையிலும் பல முரண்பாடுகள் இருப்பதைக் காணலாம். இவ்வகைக் குறைகளைப் பாடநூல் எழுதுவோர் களைய வேண்டும். அறிவியல் தமிழ் பாடநூல்களில் காணப்படும் மொழி நடைச் சிக்கல்களுக்கு மூலகாரணம் ஆங்கிலவழிப் பாடநூல்களைப் பார்த்துத் தமிழ்வழிப் பாடநூல்கள் உருவாக்கப் படுவதேயாகும். ஒரு மொழியிலமைந்த அறிவியல் கருத்துகளை இன்னொரு மொழியில் மொழிமாற்றம் செய்யும் நிலை தவிர்க்கப்பட வேண்டும். அறிவியல் கருத்துகளை உள்வாங்கித் தமிழில் புதியதாகப் பாட நூல்களைப் படைக்க வேண்டும். பிறமொழிச் சொல்லும் பொருளும் கலந்த நிலையில் கலைச் சொற்களை உருவாக்கி அவற்றை வலிந்து அறிமுகப் படுத்துவதைத் தவிர்த்துச் செப்பமான கலைச் சொற்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

இயல்பான சிந்தனை, சிந்தித்ததை எழுதுவது, கற்பது எல்லாம் தமது தாய் மொழியில் தான் சிறந்து விளங்கும். அறிவியல் துறையில் மேம்பட்டு விளங்கும் அமெரிக்கா, ரஷ்யா, பிரான்சு, ஜெர்மனி, ஜப்பான் போன்ற நாடுகள் இதற்குச் சான்றாகும். அந்நாளில் அறிவியல், பொறியியல் பாடங்களைக் கற்பது, கற்பிப்பது எல்லாம் அவர்கள் தாய்மொழியில் தான். எண்ணத்தைச் சிறப்பாக வெளியிட ஏற்றமொழி தாய்மொழி தான் என்று மகாத்மா காந்தியடிகள், இரவீந்திரநாத்தாகூர் முதலியோர் கூறியுள்ளனர். திரு.வி.க. அவர்கள் மேலும் ஒருபடி சென்று பட்டப்படிப்பு வரையில் கட்டாயம் தாய்மொழியில் தான் கற்பிக்கப்பட வேண்டும் என்றார். தாய் மொழியில் கற்பிப்பதும் எளிது. மாணவர்கள் கேள்வி கேட்பதும், அதற்குப் பேராசிரியர்கள் விடை கூறுவதும் தாய்மொழியில் இருந்தால் மிகுந்த பயன் உண்டு. நேரம், உழைப்பு மிச்சம். இந்திய மொழிகளில் கலைச் சொல்லாக்கப் பணியினை முதலில் தொடங்கியது தமிழில்தான்.

இலங்கை அரசு அரச கரும மொழிகள் ஆணைக்குழு (Official Language Commission) என்ற நிறுவனம் முழுநேரத் தலைவரின் கீழ்ச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்பட்டு வருகிறது. பல கலைச் சொல் பட்டியல்களை வெளியிட்டுள்ளது. தமிழ் நாட்டில் தமிழ் வளர்ச்சிக் கழகம், தமிழ் நாட்டு பாடநூல் நிறுவனம் இத்துறையில் சிறந்து விளங்கி 900 நூல்களை வெளியிட்டன. பொறியீயல் கற்கும் மாணவர் தம் இறுதி ஆண்டுப் பாடத்திற்கான நூலொன்று புலவர் பழ. முருகேசன் M.E., Ph d யில் எழுதப்பட்டு, பாடநூல் நிறுவனத்தால் 1978 இல் வெளியிடப்பட்டது. தமிழில் பொறியியலைக் கற்பிக்க முடியுமா? என்ற கேள்விக்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே முடியும் என்று முன்னாள் இந்திய மத்திய அமைச்சர் மாண்புமிகு சி. சுப்பிரமணியம், பேராசிரியர் நா. வானமாமலை, நாவணன் முதலிய அறிஞர்கள் விடையளித்துள்ளனர். இதற்கு முதலாவதாகச் செய்ய வேண்டுவது கலைச் சொல்லாக்கம். இந்தவகையில் தமிழ்ப் பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழகம் வளர் தமிழ் மன்றம், தமிழ்நாடு மின்சார வாரியம் போன்ற நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட முறையில் கோவை ஜி. ஆர், தாமோதரன், மணவை முஸ்தபா, முனைவர் இரா. கணேசன், உலோ. செந்தமிழ்க்கோதை போன்றவர்களின் தொண்டும் பாராட்டுக்குரியன. அறிவியல் ஏடுகள் இப்பணியினைச் செய்துவருகின்றன.

பொறியியற் பாடத் துறையில் தற்போது 2 இலட்சம் சொற்களுக்கு மேலாகக் கலைச் சொல் பட்டியல் உள்ளது. இன்னும் 4 இலட்சம் சொற்களேனும் முதற்கட்டத் தேவையாகத் தொகுக்கப்பட வேண்டும். இதற்கு மலேசியா. சிங்கப்பூர், இலங்கை போன்ற பிறநாட்டுத் தமிழர்களுடன் நிறுவன ரீதியாகத் தொடர்பு கொண்டு, சொல் லாக்கத்தில் ஒருமை காணவேண்டும். புதுடில்லியில் உள்ள அறிவீயல் கலைநுட்பக் கலைச்சொல் குழுமம் உருவாகியுள்ள விதிமுறைகளைத் தழுவி அனைத்துலகத் தரப்படுத்தல் நிறுவனத்தின் (International Organization for Standardization - ISO) தொடர்பும் கொண்டு ஆக்கபூர்வமான பணிகளை மிக விரைந்து செய்ய வேண்டும். இந்தி மொழியில் 1961 இல் அறிவியல் 'தொழில்நுட்பக் கலைச்சொல் குழுமம்' (Committee for Scientific and Technical Terminology) என்ற நிறுவனம் உருவாக்கப் பட்டுள்ளது. 35 கலைச்சொல் அகராதிகள் (Scientific and Technical Glossaries). 52 கலைச் சொல் விளக்க அகராதிகள் (Scientific and Technical Definitional Dictionaries), 900 பாடநூல்கள் வெளியிடப் பட்டுள்ளன. இதேபோல் தமிழிலும் இத்தகைய முழுநேரத் தலைவரைக் கொண்ட ஒரு குழு இதற்காக அமையுமாயின் பணி விரைவில் முடியும்.

'அறிவியல்' என்னும் சொல்லைக் குறிக்கும் ஆங்கிலச் சொல் 'Science' இலத்தீன் மொழிச் சொல் 'Scientia' என்பதிலிருந்து பெறப்பட்டதாகும். இதற்கு அறிதல் என்பது பொருளாகும். அறிவியல் வளர்ச்சிக்கு அடிப்படை மனிதனின் மனதில் எழும் அறிவியல் சிந்தனையாகும். ஒருவனின் சீரிய கற்பனையினால் புதிய அறிவைப்பெற முடியும். கனவு கற்பனைக்கும், கற்பனை அறிவியல் அறிவுக்கும் வழிவகுக்கும். அறிவியலுக்கு மிக அவசியமானது அறிவியல் அறிஞர்களின் சிந்தனைதான் கற்பனைகள் மூலம் தான் சிந்தனை எழ முடியும் என அறிவியல் அறிஞர் ஹெர்மான் போண்டி (Hermmann Bondi) குறிப்பிடுகிறார்.

'வேதியியல்' (Physics) துறையிலே மீத்தேன் என்ற சொல்லிலிருந்து பெறப்படும் ஆல்கைல் தொகுதி 'மீத்தைல்' என்று இருப்பது பொருத்தமானதாகும். எனவே 'Methyl' என்ற ஆங்கிலச் சொல்லிற்குத் தமிழாக்கம் செய்யும்போது 'மெத்தில்' என ஒலிபெயர்ப்பாக எழுதாமல் 'மீத்தைல்' என்று எழுதுவது சரியானதாக அமையும். கரிம வேதியியல் தமிழ்வழிப் பாடநூல் உருவாக்கத்தின்போது பாடப்பகுதி முழுவதும் CH_2 என்ற தொகுதியை குறிப்பிட மீத்தைல் என்ற சொல்லைப் பயன்படுத்துவது மாணவர்களுக்கு மிகுந்த பயன் விளைவிக்கும். அறிவியல் பாடநூல்களை உருவாக்குவதிலும் அதற்குண்டான மொழியினைத் தேர்ந்தெடுப் பதிலும் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். (A Science Text Create in our select structure and select Language Style) பாடங்கள் இரண்டு நிலைகளில் அமைக்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பருமநிலை அமைப்பு (Macro Structure)
2. நுண்நிலை அமைப்பு (Micro Structure)

சொல் பயன்பாடுகள் தொடர் பயன்பாடுகள் (Words and Sentences Uses) பந்தி (Paragraph Form) அமைப்புகள் உரைக்கோவை (அ) கருத்தாடல் அமைப்புகள் போன்ற இவற்றைப் பரும நிலை அமைப்பாகக் கொள்ளலாம்.

அறிவியல் தமிழ் வளம் பெருக்கலில் மொழிபெயர்ப்பின் பங்கு:

பிறமொழிவழிக் கற்ற அறிஞர்களின் நிலையை உணர்த்துவதற்கு உதவும் இன்றைய நாகரிக வாழ்க்கையின் அடித் தளமாய் விளங்கும் அறிவியல் தொழில்நுட்ப அறிவு பொது மக்களிடையே பரவலாகவும், உணர்வு சார்ந்த பண்பாட்டுக் கூறாகவும் சென்றடைதல் ஒன்றுதான் தொழில் வளத்தினும் செல்வவளத்திலும் பிற நாடுகளுக்கு இணையாக நாம் வளர்வதற் குரிய வழி என்பதை அறிகிறோம். எனவே, நமது தாய்மொழியில் இல்லாத அறிவு வளத்தைத் தாய் மொழியில் பெருக்கு வதற்கான வழிகளை ஆய்ந்து கடைப்பிடிக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. விரைந்த முன்னேற்றத்திற்கு மொழி பெயர்ப்பையும் ஒரு வழியாக ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டத்தில் உள்ளோம். அறிவுத் துறைகளிலும் தாய் மொழியிலும் தேர்ச்சியும் ஈடுபாடும் கொண்ட அறிஞர்கள் பெருகும் போது மொழி பெயர்ப்புகளைவிட முதனூல்களே (வழி நூல்களே) மிகுதியாய் வரும் நிலையை எய்துவோம்.

மொழிபெயர்ப்புப் பணியைக்கூட, துறை யறிவும் மொழி அறிவும் போதிய அளவில் பெற்றிருந்தால் தான் திறம்படச் செய்ய இயலும். மொழி பெயர்ப்பு என்பது மூலக் கருத்துச் சிதையாமலும் குன்றாமலும் ஆற்றொழுக்கான இயல் நடையில் அமைந்தால் தான் படிபபவர்களுக்குத் தெளிவாய் உணர்த்த முடியும் என்பதுடன், படிப்பதற்கான ஆர்வத்தையும் தூண்ட இயலும். மாறாகச் சொல்லுக்குச் சொல் மொழிபெயர்க்கும் முயற்சிகளால் எதிர் மறையான விளைவுகளே கிடைக்கப் பெறுவதால், தமிழில் படிப்பதைவிட ஆங்கிலத்திலேயே படித்துவிடலாம் என்ற எண்ணத்தைப் பரவலாக்கியுள்ளது. எனவே மொழிபெயர்ப்புச் சிக்கல்கள் சிலவற்றை இங்கு நோக்குவோம்.

சிறப்புத் துறைகள் ஒவ்வொன்றும் எண்ணிறந்த கலைச் சொற்களைக் கொண்டுள்ளன. இயல்பான வழக்குச் சொற்களில் சில அறிவியல் துறைகளில் தனித்த பொருள் கொண்டு கலைச் சொற்களாய் விளங்குகின்றன. எனவே அறிவியல் மொழி பெயர்ப்பில் ஈடுபடுவோர் எதிர்கொள்ளும் முதல் சிக்கல் தகுந்த கலைச் சொற்களைத் தேடியோ உருவாக்கியோ பயன்படுத்த வேண்டிய நிலையாகும். ஓர் அறிவியலாளர் தேவையான கலைச் சொற்களைத் தாமே முயன்று உருவாக்கிக் கொண்டு எழுத்துப் பணியைத் தொடங்கக் கருதினால் பணி மிகவும் தடைப்படும். எனவே கலைச் சொற்களின் பொதுவான உருவாக்கம் முக்கியமான சிக்கலாய் விளங்குகிறது. இது குறித்து தீர்மானிப்பதும் அவசியம்.

அறிவியல் மொழிநடை :

நாம் எழுதும் மொழிநடை இயலோட்டமாக அமைவதற்கு உற்றவழி சொல்ல விரும்பும் கருத்தை முதலில் தெளிவாகச் சிந்தையில் உருவாக்கிக் கொண்டு பின்னர் அதை எழுத்துருவாக்க முனைதலாகும். ஒருவர் எழுதும் நடை கரடுமுரடாகவும் விளங்காமலும் இருக்குமெனில், அக்கருத்தில் எழுதியவருக்கே தெளிவில்லை என்பது புலனாகும். சிறந்த மொழிபெயர்ப்பைப் படிக்கும்போது அது முதன் முதலாகத் (தமிழ்) மொழியில் தான் எழுதப்பட்டது போன்ற உணர்வைத் தோற்று விக்க வேண்டும். இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாக வங்கமொழிப் பாடலான 'வந்தே மாதரம்' பாடலுக்குப் பாரதியாரின் மொழி பெயர்ப்புகளைக் கூறலாம்.

மூல ஆசிரியர் கூறிய கருத்துத் தெளிவுறுத்தல் முக்கியமேயென்று அவர் பயன்படுத்திய சொற்களின் மொழிபெயர்ப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியே இடம்பெற வேண்டுமென்பதில்லை. எடுத்துக்காட்டாக உமர்கலாம் பாடலில் ('A book of Verse') என்பதைக் கவிமணியவர்கள் 'கையில் கம்பன் கவியுண்டு' என மொழி பெயர்த்துள்ளார். மூல ஆசிரியரைப் பின்பற்றிக் 'கையில் கவிதை நூலுண்டு' என்று கூறி அதே ஓசை நயத்துடன் அமைந்திருக் கலாமே என்று குறை கூறுவதைவிட மூல ஆசிரியரின் அடிக்கருத்தை அழுத்தமாகப் பதிவு செய்திருப்பதை உணர்ந்து போற்ற வேண்டும்.

மொழிநடையில் இரண்டாவது சிக்கல் இயம்பு முறையால் எழுதுவதாகும். அறிவியலை ஆங்கிலத்தில் படிக்கும்போது பெரும்பாலும் நடையானது செயப்பாட்டு வினைச் சொற்றொடர்களால் அமைந்திருக்கக் காணலாம். ஆனால் அதை அப்படியே தரமுயலும்போது இயல்பாய் அமையாமல் நடை கடினமாய் அமைகிறது. எடுத்துக் காட்டாக 'புல் தரைமீது நடக்காமலிருக்குமாறு வேண்டப்படுகிறீர்கள்' என்று தான் எழுதப் பலருக்கு வருகிறதேயன்றி 'புல் தரைமீது நடவாதிருக்க வேண்டுகிறோம்' என எழுதலாமென்று உடனடியாய்த் தோன்றுவ தில்லை. எனவே எளிய நடையில் எழுது வதற்கான தேர்ச்சியைப் பெற்றால் தான் எளிய இனிய தமிழ் நடையில் எழுத இயலும்.

மூல நூலாசிரியர் கூற விரும்பும் கருத்தைச் சரியாகப் புரிந்துகொள்ளுதலே முக்கியமன்றி அவரது வாக்கியத்தில் உள்ள சொற்கள் ஒவ்வொன்றுக்கும் பொருள் தெரிந்திருத்தல் மட்டுமே போதாது. எடுத்துக் காட்டாக "Man and Superman" எனும் நாடகத்தில் ஒரு பாத்திரத்தின் கூறாக "Once of said with the foolish philosopher I think and therfore I am but it is the woman who taught me to say I am and therefore I think" என்று பெர்னார்டு ஷா எழுதிய வசனத்திலுள்ள சொற்கள் எவையுமே அருஞ் சொற்கள் அல்ல. ஆனால் ஐரோப்பிய மெய்யியலில் Idealism Materisalism என இருவேறு கருத்தோட்டங்களுக்கிடையே நடைபெற்ற கருத்துப் போராட்டத்தை அறிந்தவர்களே இதை முழுமையாய் உணர்ந்து மொழிபெயர்க்க இயலும். சுருங்கக் கூறின் ஆங்கில நூலையும் ஆங்கிலம் - தமிழ் 'அகர முதலியையும் மட்டுமே வைத்துக் கொண்டு ஒருவர் அறிவியலைக் கற்றுவிட முடியாது.

பகிர்ந்தளிப்பு, விரவல் ஆகிய இரண்டு பொருளிலும் Distribution எனும் சொல் பயன் படுத்தப்பட்டு வருகிறது. Movement Distribution. Stress Distribution என்பன இவற்றுக்கான எடுத்துக்காட்டுக்களாகும். எனவே சொல்லின் பொருளுடன் துறையறிவும் கொண்டு தான் சரியாக மொழிபெயர்க்க இயலும். அவ்வாறன்றிச் சொல்லுக்குச்சொல் பெயர்ப்பு முயற்சியால் விளையும் பிழை களுக்குச் சில எடுத்துக்கட்டுகளைக் காண்போம்.

Photo Elasticity ஒளிமீள்திறன் ஒளிமீன்மையியல்
Radio Activity வானொலி செயல்பாடு
Steady State அமைதியான நாடு

மொழியாக்கமும் கலைச்சொற்களும் :

மொழியாக்கம் செய்ய விரும்புவோர் எதிர்கொள்ளும் சிக்கல்களில் முதன்மை யானது சரியான கலைச்சொற்களாகும். நல்ல கலைச் சொற்கள் உரைநடையாக்க முயற்சிகளின் போது தான் கிடைக்கப் பெறுகின்றன என்பது பலரும் உணர்ந்த அனுபவ உண்மையாகும். ஆனால் ஒரு நூல் எழுதும் முயற்சியில் சில நூறு கலைச் சொற்களைத் திரட்டித் தரப்படுத்திப் பலரது பயன்பாட்டிற்கும் கிடைக்கச் செய்யவேண்டும். இத்தகைய முயற்சியில் பொதுமை வேண்டிச் சில சமரசங்களை ஏற்றுக் கொள்ளும் நிலை எய்தினாலன்றிப் படிப்பவர்களிடையே குழப்பம் தோற்றுவிப்பதைத் தவிர்க்கவியலாது. சொல்லப்போனால் தமிழ் மொழியில் அறிவியல் வளம் போதிய அளவில் பெருகாமைக்கு முக்கிய காரணம் இதுவெனலாம். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்கள் பதினான்கு இணைந்து பல கலைச் சொற் குழுக்களின் முயற்சியால் அண்மையில் இருநூறாயிரம் கலைச் சொற்களை உருவாக்கியளித்துள்ளன. இவற்றைச் செம்மைப்படுத்திப் பதிப்பித்து நூல்வடிவில் அளிக்கும் முயற்சி விரைவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளப்பட்டால் நூலாசிரியர்களின் பணி எளிதாகும் என நம்பலாம். கலைச் சொல்லாக்கம், நூலாக்கம், கட்டுரையாக்கம், ஆய்விதழ்கள் ஆகியனவெல்லாம் வரவேற்கப் பட்டும் ஆதரிக்கப்பட்டும் வருதலைக் காண்கின்றோம். ஆனால், இவையெல்லாம் அனைத்துத் துறைகளிலும் தாய்மொழியில் உயர்கல்வி எனும் இலக்கை அடிப்படையாய்க் கொண்டவையாய் அமையாவிடின் கானல் நீரை நோக்கிய ஓட்டமாய் அமைந்துவிடுமோ எனும் அச்சம் எழுகிறது. எனவே, தமிழ்வழி உயர்கல்விக்குத் தமிழ்மக்கள் தயாராக உள்ளனரா என்பதை உறுதியாக அறிந்துகொள்ள வேண்டிய கட்டத்தில் நாம் இன்று இருக்கின்றோம். இல்லையேல் கடைவிரித்தேன் கொள்வாரில்லை என்ற நிலையைத்தான் எதிர்கொள்ள நேரிடும்.

அறிவியல்துறை இன்று மிகமிக வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. புதுப்புதுக் கண்டுபிடிப்புக்கள் உலகில் பல்வேறு நாடுகளில் வெவ்வேறு தாய்மொழிகளைக் கொண்ட அறிவியல் அறிஞர்களால் தினம் தினம் கண்டுபிடிக்கப்படுகின்றன. மற்ற நாடுகள் அவற்றைத் தங்கள் மொழியில் மொழிபெயர்த்து அறிவியலை உடனுக்குடன் வளர்த்துக்கொள்ள ஆசைப்படுகின்றன. இதேபோன்ற பல்வேறு மொழியிலுள்ள அறிவியல் கருத்துக்கள் தமிழிலும் தொடர்ந்து மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன.

அறிவியல் தமிழாக்க முயற்சி சுமார் 175 ஆண்டு காலமாக நடைபெற்று வருகிறது. கல்வித் தமிழ் வளர தமிழ் நாட்டில் இரண்டு நிறுவனங்கள் தொடர்ந்து பணியாற்றி வருகின்றன. ஒன்று தமிழ் வளர்ச்சிக் கழகம் மற்றொன்று அரசின் சார்பில் செயல்படும் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம். இந் நிறுவனம் கல்வி தமிழாக்கப் பணியில் ஈடுபடுவோருக்குத் துணைபுரியும் வகையில் ஏறக்குறைய 18,000 துறைச் சொற்களைக் கொண்ட பதின்மூன்று சிறு தொகுப்புக்களை வெளியிட்டுள்ளது.

ஒரு நாட்டின் கல்வி வளர்ச்சியும் கல்விப் பயனும் அறிவியல் விழிப்புணர்வும் தொழில் முன்னேற்றமும் சிறக்க வேண்டுமென்றால் அந்நாட்டில் வழங்கப்படும் கல்வி அந்நாட்டு மொழியிலேயே அமைதல் வேண்டும் என்ற கருத்து உலக அளவில் ஒத்துக்கொள்ளப்பட்ட ஒன்று. ஆகவே அறிவியலை ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழியில் மொழி பெயர்க்கும் பணி முக்கியமானது

அறிவியல் மொழிபெயர்ப்பின் தேவை :

ஒரு சமுதாய வளர்ச்சிக்கு அறிவியல் வளர்ச்சி மிகவும் இன்றியமையாதது. மருத்துவ ரீதியாகப் பிறிதொரு நாட்டில் கடைப்பிடிக்கப்பட்டுவரும் நோய்த்தடுப்புகள் உடனடியாக நமது தாய்மொழியில் மொழிபெயர்க்கப்பட்டால் அந்தத் தொல்லை நோய்களைப் பரவ விடாமல் தடுத்து நிறுத்தலாம். ஒருமுறை செய்யப்பட்ட ஆய்வானது மீண்டும் நிகழாமல் இருக்க அறிவியல் மொழிபெயர்ப்புத் தேவைப்படுகிறது. இதனால் என்னென்ன ஆய்வுகள் நிகழ்கின்றன என்பதை அறியமுடிகிறது.

அறிவியல் மொழிபெயர்ப்பின் தேவை :

அறிவியல் மொழிபெயர்ப்பில் உள்ளதை உள்ளவாறு மொழிபெயர்க்க முடியும். அதில் கருத்து அல்லது செய்திமட்டும் முக்கியத்துவம் பெறுகிறது. இலக்கியத்தில் மொழிக்கு மட்டும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. மூலமொழியில் எவ்வாறு மொழிநடை உள்ளதோ அதைப்போல் குறிக்கோள் மொழியிலும் இருக்க வேண்டும். உணர்வுகள், உணர்ச்சிகள் போன்றவை அறிவியலில் இடம் பெறுவதில்லை. இலக்கியத்தில் உணர்ச்சிகள் அவ்வாறே இடம்பெறவேண்டும். அறிவியல் மொழி பெயர்ப்பில் மொழிபெயர்ப்பாளரின் கருத்தை வெளிப்படுத்த இயலாது. ஆனால் இலக்கிய மொழிபெயர்ப்பில் மொழிபெயர்ப்பாளனின் எண்ணங்கள், கருத்துக்கள் பல்வேறு இடங்களில் ஊடுருவ வாய்ப்புண்டு. அறிவியல் மொழிபெயர்ப்பாளன் மூன்று துறைகளில் திறன் பெற்றவராகக் காணப்படுகிறார்.

1. மூலமொழி - ஆங்கிலம்
2. குறிக்கோள் மொழி - தமிழ்
3. அறிவியல் மொழி - இயற்பால், வேதியியல், கணிதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிபெயர்ப்புக்களின் வகைகள் :

ஒலிபெயர்ப்பு, எழுத்துப் பெயர்வு, தழுவல் மொழிபெயர்ப்பு, நேரடி மொழிபெயர்ப்பு என நான்கு வகைப்படுத்துவர்.

ஒலிபெயர்ப்பு என்பது முழுமையற்ற மொழிபெயர்ப்பாகும். இவ்வகை மொழி பெயர்ப்பில் மூல மொழிச் சொற்கள் அதன் உச்சரிப்பின் அடிப்படையில் குறிக்கோள் மொழி எழுத்துக்களால் ஏற்கப்படுகின்றன. இங்கு மூலமொழிச் சொற்கள் அதன் உச்சரிப்பின் அடிப்படையில் மூலமொழி எழுத்துக்களால் பெயர்க்கப்படுவதால் அதனை ஒலிபெயர்ப்பு என்கின்றோம். எடுத்துக்காட்டாக Tsunami என்னும் மூலமொழிச் சொல்லைத் தமிழ்மொழியில் அதன் உச்சரிப்பின் அடிப்படையில் தமிழ் மொழி எழுத்துக்களால் சுனாமி என மொழிபெயர்க்கிறோம். இதுபோன்று தமிழ் மொழியில் பல்வேறு எடுத்துக்காட்டுக்கள் உள்ளன.

எடுத்துக்காட்டு:

ஆக்ஸிஜன்	Oxygen
சைக்கோலஜி	Psychology
குளோரின்	Chlorine
ஹைட்ரஜன்	Hydrogen

அறிவியல் மொழிபெயர்ப்பில் ஏற்படும் சிக்கல்கள் :

ஆங்கில மொழியில் உள்ள ஒரு அறிவியல் செய்தியை பிரெஞ்சு மொழியிலோ ரஷ்ய மொழியிலோ எளிதாக மொழிபெயர்த்து வழங்கலாம். ஏனெனில் இந்த மொழி பேசுகின்ற சமுதாயம் வளர்ச்சியடைந்து உள்ளது. அதுபோலவே அந்த மொழியும் வளர்ச்சியடைந்துள்ளது. ஆனால் ஆங்கில மொழியல் உள்ள அறிவியல் செய்திகளைத் தமிழ் மொழியில் மொழிபெயர்க்கும் போது எளிதாக அமைவதில்லை. இதற்குக் காரணம் ஆங்கில மொழி போன்று தமிழ்மொழி வளர்ச்சியடையாததே காரணமாகும். மேலும் இம்மொழிகளுக்குள் வேறுபாடு பெருமளவில் காணப்படுகிறது. எனவே மூல மொழியாகிய ஆங்கிலமொழிச் செய்திகளைக் குறிக்கோள் மொழியாகிய தமிழுக்கு மாற்றுவதில் மூன்று வகைச் சிக்கல்கள் தோன்றுகின்றன.

1. வாக்கியநிலையில் ஏற்படும் சிக்கல்கள்
2. சாதாரண நிலையில் ஏற்படும் சிக்கல்கள்
3. கலைச்சொற்கள் உருவாக்கத்தில் ஏற்படும்
   சிக்கல்கள்

ஆங்கில மொழியில் காணப்படும் வாக்கிய அமைப்பானது தமிழ்மொழி வாக்கிய அமைப்பினின்றும் வேறுபட்டுள்ளது. ஆங்கில மொழியில் உள்ள அறிவியல் செய்திகளைத் தமிழ்மொழிக்கு மாற்றும்போது தமிழ்மொழி அமைப்பிற்கு ஏற்றவாறு மாற்ற வேண்டும். இதனால் சொல்லுக்குச் சொல் என்ற நிலையில் மொழிபெயர்ப்பை மேற்கொள்ள முடியாது.

எடுத்துக்காட்டாக:

இராமன் பாடம் படித்தான்

Rama studied the lesson

என்னும் ஆங்கில வாக்கியத்தை இராமன் படித்தான் பாடத்தை என்று நாம் ஏற்க முடியாது. ஏனெனில் தமிழ் வாக்கிய அமைப்பு ஆங்கில வாக்கிய அமைப்போடு தொடர்பில்லை என்று தெரிகிறது. எனவே இவ்வாக்கியத்தை இராமன் பாடம் படித்தான் என்று மொழிபெயர்க்கும்போது இவ்வாக்கியம் வலுவற்றதாக அமைகிறது. இதற்குக் காரணம் ஆங்கில மொழிபெயர்ப்பு எழுவாய், பயனிலை, செய்ப்படுபொருள் அமைப்பைக் கொண்டது. ஆனால் தமிழ் வாக்கிய அமைப்பானது எழுவாய் செயப்படுபொருள் பயனிலை என்ற அமைப்பைக் கொண்ட தாகும். எனவே ஆங்கில மொழியிலுள்ள அறிவியல் செய்திகளை மூலமொழியிலிருந்து குறிக்கோள் மொழிக்கு மொழிபெயர்க்கும்போது அறிவியல் செய்தி நன்கு புரியாத நிலையில் வாக்கிய அமைப்புகள் தொடர்பின்றி மாறுவதைக் காணமுடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டு :

The protoplasm is differentiated into cytolamic area and mucliç area

நடுக்கருவப் பகுதி சைட்டோபிளாசப் பகுதி என்றும் புரோட்டோபிளாசப் பகுதி என்றும் பகுக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய வாக்கியங்கள் மூலமொழி வாக்கியங்களில் கருத்தமைப்பை முழுமையாகப் புரிந்துகொள்ளாததால் தமிழ் வாக்கிய அமைப்பில் மாற்றங்கள் தவறுதலாக ஏற்படுகின்றன.

ஒருமை பன்மை மயக்கம் :

மூலமொழி வாக்கியங்களில் (ஆங்கில மொழி) ஒருமை பன்மை மயக்கம் அதிகமாகக் காணப்படுகிறது. இதனால் பெரும் குழப்பம் ஏற்பட வாய்ப்புண்டு.

எடுத்துக்காட்டு :

"இப்புறச்சட்டகம் புறாவின் மேற்புறத்தில் இருந்து உருவானவையாகும்"

இவ்வாக்கியத்தில் உள்ள எழுவாய் ஒருமையில் உள்ளது. இவ்வாக்கியத்தின் இறுதியில் உள்ள உருவானவை என்னும் சொல் உருவானது என்ற ஒருமையில் சுட்டப்பெறவேண்டும்.

விரைவு கருதி அல்லது சொல் சுருக்கம் கருதிச் சில் சொற்களை இலக்கண வரம்பு மீறிப் பேசியும் எழுதியும் வருகிறோம். இத்தன்மை எதனால் தமிழ்மொழியில் நிலவிவருகிறது? இவ்வற்றால் சிலவிடங்களில் திணை, பால், எண், இடம், காலம், சொல், பொருள் போன்றவை மயங்கி நிற்கின்றன். இவற்றையே தமிழில் ஏற்படும் மொழி மயக்கமாக உற்று நோக்குவோம்.

ஆய்வாளர்கள் தெளிவாகப் பிற மொழிச் சொற்களை மொழிபெயர்ப்பின் மூலம் எடுத்தாளும் முறையைக் கைவிட்டுத் தமிழின் மரபும், தொன்மையும் பாதிக்கா வண்ணம் காலத்திற்கேற்ப கையாளுதல் வேண்டும்.

இன்று வளர்ந்துவரும் உலகம் அறிவியல் யுகமாகும். இந்த யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களிடையே காணப்படுவது அவர்தம் வாழ்க்கை கல்வி முறைகளில் அறிவியல் கருத்துகளும் கண்டுபிடிப்புகளும் மிகவும் இன்றியமையாத இடத்தைப் பிடித்துவிட்டன. இயற்தமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்று முத்தமிழோடு சேர்த்து அறிவியல் தமிழ் என நான்கு தமிழாக அறியப்படுகிறது.

பேராசிரியர் எழுதிய நூல்கள்:

1. சிவதத்துவ மலர் - 1996
2. சக்தி தத்துவ மலர் - 1996
3. நவநாதேஸ்வரம் - 1996
4. அறுபத்துநான்கு கலைகளும் கலையாக்கத் திறன்களும் - 2004
5. பக்தி மலர் - 2004
6. நயினை நாகபூசனி வரலாறும் வழிபாடும் - 2004
7. யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் பிரபந்த இலக்கியங்கள் - 2005
8. தமிழியல் ஆய்வுச் சோலை - 2006
9. கண்ணகி வழிபாடும் இராஜராஜேஸ்வரி வழிபாடும் - 2007
10. பவளவிழா மலர் "ஆசிரியமணி" ச. விநாயகரத்தினம் - 2012
11. முத்தமிழ் - 2013
12. நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன் - 2013
13. ஞானச்செல்வர் - 2013
14. தமிழின் ஆளுமைகள் - 2013
15. சுதேச மருத்துவம் பற்றிய இலங்கைத் தமிழ் நூல்கள் - 2013
16. கலையும் இலக்கியமும் - 2013
17. பக்தி அனுபவம் - 2013
18. பல்கலைக்கழக ஆய்வுகள் - 2013
19. திருக்கேதீச்சர தரிசனம் - 2014
20. அறிவொளி மாவை த. சண்முகசுந்தரம் (வாழ்வும் எழுத்துப் பணிகளும்)-2015

தொடர்புகளுக்கு : 071 445 3466

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கு மாகாணத்தில் வழங்கிவரும் கண்டி மன்னர்கள் பற்றிய வாய்மொழி இலக்கியங்கள்

பேராசிரியர் செ. யோகராசா

கண்டி இராச்சியத்தை ஆட்சிசெய்த நாயக்கர் வம்ச மன்னர்கள் காலத்தில் (கி.பி.17-19) அவர்களது மேலாதிக்கம் மட்டக்களப்பு, திருகோணமலை (இன்றைய அம்பாறை உட்பட) பிரதேசங்களில் நிலவிய சூழலில் அத்தகைய மன்னர்கள் சிலர் மீது வாய்மொழிப் பாடல்களும் கதைகளும் கதைப் பாடல்களும் பல எழுந்துள்ளன. இவற்றுள் சில அச்சேறியுமுள்ளன. இவை பற்றிப் பரவலாக அறியப்படவில்லை.

மேற்கூறிய வாய்மொழிப் பாடல்களுள் இராசசிங்கன் பள்ளு, நரேந்திரசிங்கன் பள்ளு, நரேந்திரசிங்கன் சிந்து முதலியன குறிப்பிடத் தக்கன.

'பள்ளு' என்றவுடன் எழுத்து இலக்கிய மரபு சார்ந்த சிற்றிலக்கிய வகையான 'கள்ளு' என்று வடிவமென்று நினைத்துவிடக் கூடாது. குறுகிய வடிவமான இப்பள்ளு ஏறத்தாழ 10 தொடக்கம் 20 வரையான பாடல்கள் கொண்டது. இராசசிங்கன் பள்ளு காப்புச் செய்யுளுடன் அவனது நகர உலா தொடர்பான 10 பாடல்கள் மட்டும் கொண்டுள்ளது.

"நித்தகல்யாண தேவேந்திரன்
நீதிபுரக்கு மகாராசன்
முத்துச் சிவிகை தனிலேறி
மோகனவீதி பவனி வந்தான்"

என்று ஆரம்பிக்கும் உலா மரபுவழிசார்ந்து அவனை புகழ்வதோடு மட்டுமன்றி வரலாற்றுக் குறிப்புகள் சிலவற்றையும் தருகின்றது. (உ-ம்) திசைமாரும் வன்னியரும் பவனியில் இடம் பெற்றமை, பீரங்கி வெடிக்கருவிகள் பவனியில் இடம் பெற்றமை, மட்டக்களப்பு, திருகோணமலைப் புலவர்கள் மன்னர் உலா பார்க்க கண்டிக்குச் செல்கின்றமை).

'நரேந்திரசிங்கன் பள்ளு'வில் இடம் பெற்றுள்ள வரலாற்றுக் குறிப்புகள் பலவாகும். இவ்விதத்தில் பின்வரும் பகுதி கவனத்திற் குரியது:

"கட்டளைகளிற்பரதன் வெட்டிவிடச் சுக்கிரீவன்
காமர் லீலையிற் கிருட்ணன் பூமிக்கதிபன்
சிட்டர் தொழுஞ்சூரிய வம்சன் அட்டாள தேசமாளுந்
தெய்வதம்பி ரானரேந்த்ர சிங்கபூபனே

சிங்களவர் சேனாபதி தென்னிலங்கை யாதிபதி
செகமன்னர் சோனாபதி செயபூபதி
பொங்குபுகழ்த் திருச்செந்தூர் வேலவற்குச் சிங்காசனம்
பொன்னுகம் வைத் தேயெருத்திற் பூட்டிவிட்டவன்

பூட்டியகல் யாணிபுரக் கோட்டையை யிடித்துமண்ணிற்
போட்டமத யானையுள்ள பொன்னினாடன்
காட்டியசெந் தமிழ்க்காக வீரராகவனுக்கன்று
கன்னல்வள நாடும் யானைக் கன்றுமீந்தவன்

வாசவனைச் சூழ்ந்திருக்கும் தேவர்போலு மந்தரத்தை
மன்னியேவ ளைந்திருக்கும் வாரைகள் போலும்
போசராச வேணரேந்த்ர பூபனும் வனைத்திருந்து
போற்று திசை மாரும்தம் வாழிதானே!"

மேற்கூறிய பாடல்கள் வெளிப்படுத்தும் முக்கிய வரலாற்றுத் தகவல்களாவன: (1) அட்டாளப் பிரதேசம் என்று மலைநாடு குறிக்கப்படுதல்; (2) கல்யாணபுரம் எனப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களனியிலுள்ள கோட்டையை அழித்த தகவலுடன் தொடர்புபடும் அரசன் இராசசிங்கன் (இது தொகுப்பாசிரியர் குறிப்பு); (3)'நுவர' என்பது சிங்களச் சொல் - 'நகரம்' என்பது பொருள்; (4) வெள்ளரசைப் பொற்கலத்தில் வேண்டி வைத்த தேவநம்பியதீசன் எனப் புகழப்படுவதனால் இவனது பௌத்த சமயப் பணி புகழப்படுதல்; (5) அரசனது தாய் தஞ்சாவூரைச் சேர்ந்தவளாதலினால் சோழ அரசர்களுடன் தொடர்படுத்தி இம் மன்னன் புகழப்படுதல்; (6) அரச பவனியில் திசைமார் (திசாவை) சென்றமை.

மேற்கூறிய பள்ளு முதலான பாடல்கள் தவிர, கோயில்களில் நடைபெறும் சடங்குப் பாடல்களிலும் வாழிப் பாடல்களிலே கண்டி மன்னர் புகழ் நினைவுகூரப்படுமளவிற்கு அவர்களது தொடர்பும் சமயப் பணிகளும் இருந்திருக்க வேண்டும். (எ-டு):

"சீர்வாழி புவிவாழி வேதமுறை வாழி
திருநீறு வாழி சிவ சமயநெறி வாழி
பார்வாழி கண்டி மகா ராசாதிராச
பார்த்தீபன் வாழிசெங்கோல் முறைமை
வாழி"

வாய்மொழிக் கதைகளும் பல வழக்கி லிருந்து வந்துள்ளன. திருக்கோயிலில் வசித்த பிராமணனொருவன் கண்டிய அரசனான நரேந்திரசிங்கனிடம் பரிசுபெற விரும்பி அங்கு சென்றபோது அரசவையிலுள்ள திசாவைகள் மன்னன் மீது கவி பாடும்படி பிராமணனைக் கேட்டதாகவும் கவி இயற்றும் பழக்கமில்லாத அவன் திருக்கோயில் சித்திர வேலாயுதப் பெருமானை வணங்கி அவரருளால் மன்னன் மீது பாடி பரிசில் பெற்று மீண்டானென்பதும் அவ்வாறான கதைகளு ளொன்று. (அச் சந்தர்ப்பத்தில் பாடப்பட்டதே முற்குறிப்பிட்ட 'நரேந்திரசிங்கன் பள்ளு'.)

வாய்மொழியாக வழங்கி அச்சேறியுள்ள கதைப் பாடல்களுள் கண்டி ராஜன் ஒப்பாரி, பூசணியாள் என்பவை குறிப்பிடத்தக்கவை. இரு கதைப் பாடல்களின் பாடல் வடிவமும் இசையும் வேறுபட்டிருப்பினும் உள்ளடக்கம் ஒன்றுதான். அது இதுதான்: கண்டி மன்னன் இராசசிங்கன் உலா சென்ற வேளையிலே, பூசணியாள் என்பவளைக் கண்டு மையல் கொள்கின்றான். அரசனின் மனைவி அவனது இறப்புப் பற்றியும் கண்டி அரசன் வீழ்ச்சி பற்றியுமான கனவு கண்டு அதனை அரசனிடம் கூறுகின்றாள். மந்திரி முதலானோரும் போதனை செய்கின்றனர். பூசணியால் கண்டி அழியுமென்றும் கூறுகின்றனர். அரசனோ பூசணியின் மாமனாகிய ஆலப் பிள்ளையை கடமை நிமித்தம் வெளியூரனுப்பிவிட்டு பூசனியை அடைய முயல, அவளோ கங்கையில் விழுந்து தற்கொலை செய்கின்றாள். அரசன் ஆலப்பிள்ளையின் மனைவி மங்கிலியத்தின் கையால் ஏழு பிள்ளைகளையும் உரலிற்போட்டு கொலை செய்விக்கின்றான். மங்கிலியத்தையும் தன் வாளால் வெட்டி விடுகின்றான். ஆலப்பிள்ளை ஆங்கிலேயரினுதவியுடன் அரசனைக் கொலை செய்விக்கின்றான். கண்டி ஆங்கிலேயர் வசமாகின்றது. ஆலப்பிள்ளையால் கேடு வருமென் றெண்ணிய ஆங்கிலேயர் சதிசெய்து கடற் பயணத்தின்போது அவனைக் கப்பற் சூத்திரத்தின் பொறியினால் இறக்கச் செய்கின்றனர்.

கிடைத்தற்கரிய 'கண்டிராஜன் ஒப்பாரி' ஏட்டிலிருந்து முக்கியமான ஒரு பகுதி கீழே தரப்படுகின்றது.

"கண்டியைப் பிடித்துத் தாரேநா நென்று சொல்லி / கைப்பிடியா இங்கிலீஷாரைக் கூட்டியிங்கு வருகையிலே / மக்கள் மனைவியெல்லாம் மாண்டு மடிந்த செய்தி காதிலே போட்டுக் கலக்க முற்றுத் தானழுதான் / மக்கள் மனைவியென்று மார்போடு தானறைந்து / மண்ணில் விழுந்து புரண்ட ழுதானாலப்பிள்ளை / அழாதேயடா நீ என்று இங்கிலீஷார் தானவனை / தேற்றி எடுத்தணைத்து வந்தார்க ளெல்லோரும் இங்கிலீஷார் தன்னையங் கிருத்தியந்த ஆலப்பிள்ளை / அடித்தான் தலைக் கதவை. அப்பாலே தான் திறக்க / ஏழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறையுடைத்து இருட்டறைக்குள்ளே புகுந்து / இழுத்து வந்தான் விக்ரமனை எழிலுள்ள ஆலப்பிள்ளை / குடுமிதனைப் பிடித்துக் குலுக்கி நெட்டி தான் வாங்கி / கள்ளப்பயலே என்று கன்னத்திலே யறைந்தான் / அறையோடு ராசனப்போ அரைச்சிவ னானானே / இவனைப் பிடியுமென்று இராசாவைமட்டடக்கி / இங்கிலீஷார் தான் பிடித்து இராசாவை மட்டடக்கி / வைத்தனரே காவலிலே வன்மையுள்ள இங்கிலீஷார / கண்டி பிடித்தான் கனதேசமும் பிடித்தான் / நகரு முழுதும் பிடித்தான் நம்நாடு தான் பிடித்தான் / கோட்டை பிடித்தான் கொத்தளமெல்லாம் பிடித்தான் / பூசணியாள் தானிருந்த பொன்னிறச்சாலைகளும் / ஏழு சிற்றுக் கோட்டையிலும் இனிதிருத்திப் பட்டாளம் / அணிவகுத்து வைத்தாரே ஆண்மையுள்ள இங்கிலீஷார் / இப்படி வந்த இங்கிலீஷார் இலங்கை முழுதும் பிடித்து ஆண்டிருக்கும் நாளையிலே ..."

'கண்டி ராஜன் ஒப்பாரி' 903 பாடலடிகள் கொண்டது; 'பூசணியாள்' 275 பாடலடிகள் கொண்டது.

மேற்கூறியவாறான வாய்மொழி இலக்கியங்கள் கண்டி மன்னர் மீது மட்டும் எழுந்திருக்கவில்லை. கண்டி மன்னருடன் தொடர்புபட்ட உள்ளூர் (கிழக்கு மாகாணப்) பிரித்தானிகள் மீதும் எழுந்துள்ளன. இவ்விதத்தில் திருகோணமலை சார்ந்த 'தம்பாபிள்ளை வசந்தன்' குறிப்பிடத்தக்கது (விரிவாக இவைபற்றிக் கூறப்படுவது தவிர்க்கப்பட்டுள்ளது). இப்பாடலூடாக தம்பாபிள்ளை 'கண்டி ராசர் மெச்சும் மன்னர்' என்ற நிலையிலிருந்துள்ளாரென்பது தெரிய வருகின்றது. 'கண்டி, செங்கடக மாநகர்' என்றும் அழைக்கப்பட்டுள்ளது.

இவ் ஆய்வுக்குரிய தலைப்புடன் நேரடியாகத் தொடர்புபடாவிடினும் மறை முகமாகத் தொடர்புபடுகின்ற இன்னொரு விடயம் பற்றியும் குறிப்பிட வேண்டும். அதாவது 'கண்டி அரசன்' என்ற பெயரிலான கூத்து வடக்கு, கிழக்கு உட்பட இலங்கையின் பல பிரதேசங்களிலும் நீண்ட காலமாக ஆடப்பட்டு வந்துள்ளது; இன்றும் ஆடப்படுகின்றன; இன்றும் பிரதிகள் எழுதப்படுகின்றன. இவற்றுள் கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தளவிலே திருகோணமலைப் புலவரான வே. அகிலேசபிள்ளை எழுதிய 'கண்டி நாடக'மே காலத்தால் முற்பட்டதாகும். (1887).

இறுதியாகக் குறிப்பிட வேண்டிய தொன்றுண்டு. அது, கண்டி மன்னர் பற்றிய இத்தகைய வாய்மொழி இலக்கியங்களும் கூத்துக்களும் பற்றிய அறிதலும் தேடலும் இலக்கிய ஆசிரியர்களுக்கு மட்டுமன்றி வரலாற்றாசிரியர்களுக்கும் வேண்டியன என்பதேயாம். இவ்விதத்தில் என்னை ஆட்கொள்ளும் துயரங்கள் இரண்டு. இவற்றின் முக்கியத்துவத்தை ஈழத்து இலக்கிய ஆர்வலருஞ்சரி, வரலாற்றார்வலரும் சரி அறியவில்லை என்பது ஒன்று. இவர்கள் இரு சாராருக்குமிடையே பரஸ்பர தொடர்பு ஏற்பட்டாலேயே இலக்கிய உலகமும் வரலாற்று உலகமும் பயன்பெறும் என்பது மற்றொன்று. அந்நாள் எந்நாளோ?

அன்பு ....

- இசைக்கு மொழி இல்லை என்பது போல, அன்பிற்கும் மொழி தேவையில்லை.

  - அன்னை தெரேசா

- மனிதன் குறையுடையவன் மட்டுமல்ல குறை காண்பவனும் ஆவான். பிறர் குறையைக் காண்பவன் அரை மனிதன். தன் குறையைக் காண்பவன் முழு மனிதன்

  - சாக்கிரடீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கச் செய்யுள்களும் தற்காலக் கவிதைகளும் ஒப்பீட்டாய்வு

திருமதி. எஸ். ஆர். தேவகுமாரி
மொழிகள் துறை, சப்ரகமுவ பல்கலைக்கழகம், பெலிகுல்லோயா

அறிமுகம் :

சங்க இலக்கியங்களின் காலவரையறை யானது சர்ச்சைக்குரியதாகவே இருந்து வந்துள்ளது. நீலகண்டசாஸ்திரிகள், வையாபுரிப்பிள்ளை, மு. வரதராஜனார் எனப் பலரிடத்தும் சங்ககாலக் காலவரையறை தொடர்பாகக் கருத்து முரண்பாடு நிலவி வந்துள்ளது. இதனால் கி.பி.600 களுக்குப் பிற்பட்டகால இலக்கியங்கள் தொடர்பாகத் தோன்றிய ஆய்வுகளைப் போலன்றி சங்க இலக்கியங்கள் தொடர்பான ஆய்வுகள் மந்த கதியிலேயே இடம் பெற்றுவந்துள்ளன. ஆனால், புகளூர்க் கல்வெட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு சங்ககாலமென்பது கி.மு. 200 இல் இருந்து கி. பி. 250 வரையுள்ள காலப்பகுதியாக வரையறை செய்யப்பட்டதன் பிறகு அவை தொடர்பான ஆய்வுகள் விரிவடையத் தொடங்கியுள்ளன. எனினும், ஒப்பீட்டு ரீதியான ஆய்வுகள் மிகக் குறைவாகவே இடம் பெற்றுள்ளன. இன்று, இலக்கியங்கள் புற்றீசல்கள் போல வெளிவந்த வண்ணமுள்ளன. ஆனால், அவை எவ்வளவு காலத்திற்கு வாழும் தன்மையுடையன என்பது தான் கேள்விக்குறி. சங்ககால இலக்கியங்க ளோவெனின் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவையாகும். அவற்றின் நீண்ட கால வாழ்விற்குரிய சிறப்புக் காரணங்கள் இருக்கத்தான் செய்கின்றன. அவை எவை என்ற வினாவும் எம்மத்தியில் விஸ்வரூபம் எடுக்கத்தான் செய்கிறது. அவ்வாறே தற்கால, புதுக் கவிதைகளைக் கற்கின்றபொழுது அவற்றிற் காணப்படுகின்ற நுட்பங்கள், உத்திமுறைகள் போன்றன தற்காலக் கவிஞர்களிடத்தில் காலச் சூழ்நிலைக்கேற்ப இயல்பாகத் தோன்றினவா அல்லது அவற்றின் மூலாதாரங்கள் வேறெங்கும் உள்ளனவா போன்ற வினாக்கள் எழுகின்றன. இவ்வினாக்களை அடியொற்றி மேல் நோக்கப்பட்ட சங்ககால இலக்கியங் களையும் தற்காலக் கவிதைகளையும் நுணுகிக் கற்கமுற்பட்டபொழுது, இவை இரண்டையும் ஒப்பிட்டாராய்வதன் மூலமே இப்பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளை எட்ட முடியும் என்ற உந்துதலே இவ் ஒப்பீட் டாய்வுக்கு வழிவகுத்ததெனலாம்.

சங்கச் செய்யுள்கள் :

தமிழ் இலக்கிய வரலாற்றில் காலத்தால் முற்பட்ட எமது கைகளுக்குக் கிடைக்கக் கூடிய இலக்கியங்களாக உள்ளவை சங்க இலக்கியங்களாகும். இற்றைக்கு 2000 ஆம் ஆண்டுகளுக்கு முற்பட்டவையாகக் கருதப் படும் இவை பதினெண் மேற்கணக்கு நூல்கள், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்கள் ஆகிய பெயர்களால் அழைக்கப்படுகின்றன. அகம், புறம் என்பவற்றையும் பாடுபொருளாகக் கொண்டுள்ளன. எட்டுத் தொகை நூல்கள் எவை என்பதை பின்வரும் வெண்பா அழகாகச் சித்திரிக்கின்றது.

> "நற்றினை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
> ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
> கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று
> இத்திறத்த எட்டுத் தொகை"[2]

அவற்றுள் அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை ஆகிய ஐந்தும் அகம் சார்ந்த நூல்களாகவும் புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகியன புறம் சார்ந்தவையாகவும் பரிபாடல் அகம், புறம் சார்ந்த நூலாகவும் உள்ளது. இதேபோன்று மேல்வரும் வெண்பாவானது பத்துப்பாட்டு நூல்களில் விபரங்களைத் தருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி - மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து"[3]

இவற்றுள் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபானாற்றுப்படை, பெரும்பானாற்றுப்படை, கூத்தராாற்றுப்படை, மதுரைக்காஞ்சி, குறிஞ்சிப்பாட்டு ஆகியவை புறம் சார்ந்தவையாகவும் முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை ஆகிய இரண்டும் அகம் சார்ந்தவையாகவும் நெடுநல்வாடை அகம் புறம் இரண்டுக்கும் பொதுவானதாகவும் காணப்படுகின்றது.

சங்க இலக்கியங்கள் அனைத்தும் செய்யுள்களால் ஆனவையே. தற்காலத்தைப் போல இலகுவாக எழுதி அச்சிற் பதிப்பிப்பதற்குரிய வசதிகள் அற்ற அக் காலத்தில் ஓலைச் சுவடிகளில் எழுத்தாணி கொண்டு மிகவும் சிரமப்பட்டே எழுதவேண்டி இருந்தமையினால் ஒரு விடயத்தை மிகச் சுருக்கமாக எழுதவேண்டிய தேவை இருந்தது. எனவே, அவர்கள் விரிந்ததொரு பொருளை சுருக்கமாகச் செய்யுள் வடிவில் சித்திரித்தனர். செய்யுள், பா, கவிதை, பாட்டு, வண்ணம், தூக்கு என்பன ஒருபொருட் சொற்களாகும். தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தவரையில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் வரைக்கும் செய்யுள் வடிவிலேயே இலக்கியங்கள் தோற்றம் பெற்றன. இதனால் செய்யுளும் இலக்கியமும் ஒத்த கருத்துச் சொற்களாகவே நோக்கப்பட்டன. இவை 'மரபு பா', 'மரபுக் கவிதை' என்றும் அழைக்கப்பட்டன. எனினும் தொன்மையான இலக்கிய வடிவமாகக் காணப்படும் இக்கவிதை வடிவமானது ஆரம்ப காலங்களில் பெரும்பாலும் செய்யுள் என்ற பெயராலேயே அழைக்கப்பட்டு வந்துள்ளது. யாப்பிலக்கண நூல்களில் கூறப்பட்டுள்ளவாறு எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகிய உறுப்புகள் சிதையாமல் எதுகை, மோனை அமையப் பெற்று, ஓசை நயம் சிறக்க உருவாக்கப்படுவதே செய்யுள்களாகும். சங்கச் செய்யுட்கள் பெரும்பாலும் மூன்றடி முதல் ஆயிரம் அடிவரையிலும் உள்ள வெண்பாக்களால் ஆனவையே. கலிப்பா, பரிபாட்டு, வஞ்சிப்பா என்பவற்றாலான செய்யுட்களும் மேற்கணக்கு நூல்களில் உள்ளன.

தற்கால கவிதை அல்லது புதுக்கவிதை :

ஆங்கிலேயர் வருகைக்குப் பின்பு குறிப்பாக 19ஆம் நூற்றாண்டிலிருந்தே மேலைத்தேயச் செல்வாக்கினால் தமிழில் உரைநடை செல்வாக்குப் பெறத் தொடங்கியது. இதனைத் தொடர்ந்து காலத்தின் தேவைக்கேற்பக் காலங்காலமாக வழங்கி வந்த கவிதை வடிவமானது தனது கட்டுப்பாடுகளிலிருந்து விடுபட்டும், நெகிழ்வுத் தன்மை அடைந்தும் காலத்திற்கேற்ற கவிதை வடிவங்களாக மாற்றமுறத் தொடங்கின. "காலவேகத்தில் கவிதைத் துறையில் இயல்பாக ஏற்பட்ட ஒரு பரிணாமம் இது. தமிழ்க் கவிதையில் மலர்ச்சியுற்ற இப் புதுமைக்கு 'புதுக்கவிதை' என்னும் பெயர் 1960 களில்தான் சேர்ந்தது. 'நியு பொயட்ரி' என்றும், 'மாடர்ன் பொயட்ரி' என்றும் ஆங்கிலத்தில் கூறப்படுவதை ஒட்டி, தமிழில் 'புதுக்கவிதை' என்ற பெயர் இம்முயற்சிக்கு இடப்பட்டது. ஆயினும், ஆரம்பத்தில் யாப்பு முறைகளுக்குக் கட்டுப்படாமல், கவிதை உணர்வுகளுக்குச் சுதந்திரமான எழுத்து உருவம் கொடுக்கும் இப்படைப்புமுயற்சி வசனக்கவிதை என்றே அழைக்கப்பட்டது. பின்னர், 'யாப்பில்லாக் கவிதை', 'இலகு கவிதை', 'கட்டில்லாக் கவிதை' (Free verse) போன்ற பெயர்களை இது அவ்வப்போது தாங்க நேரிட்டது."[4] மேலும், உரைக் கவிதைகள், உரைவிடுபா, நவகவிதை, சீர்திருத்தக் கவிதை, குறும்பா, புரட்சிக் கவிதை, பழகுதமிழ்க் கவிதை, மின்னற் கவிதை, மனமுணர் கவிதை எனப் பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டு வந்துள்ள மையினை அவதானிக்கலாம்.

20 ஆம் நூற்றாண்டிற் தோற்றம்பெற்று வளர்ச்சியடைந்து வரும் இக்கவிதை பற்றி பலரும் பல்வேறுவிதமான வரைவிலக்கணங் களைக் கொடுக்கின்றனர். அவ்வகையில் 'சொல் புதிது பொருள் புதிது சோதி மிக்க நவகவிதை"[5] என்று சிறந்ததொரு வரை விலக்கணத்தைக் கொடுக்கும் சுப்பிரமணிய பாரதியாரே இதன் விடிவெள்ளியாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகழ்கின்றார். மேலும், புதுக்கவிதை பற்றி 'இலக்கணச் செங்கோல், யாப்புச் சிம்மாசனம், எதுகை பல்லக்கு, மோனைத் தேர்கள், தனிமொழிச் சேவை, பண்டித பவனி, இவை எதுவும் இல்லாத ...... கருத்துக்கள் தம்மைத்தாமே ஆளக் கற்றுக் கொண்ட புதிய மக்களாட்சி முறையே, புதுக் கவிதை ....''[6] என்று மு. மேத்தா குறிப்பிட்டுள்ளமை நோக்கத்தக்கது. இன்றை தொழில்நுட்ப விருத்தி, அறிவியல் வளர்ச்சி போன்ற இன்னோரன்ன காரணங்களால் உலகம் ஒரு கிராமமாகிவிட்ட இவ்வேளையில், மக்களுடைய மனதைப் பாதிக்கின்ற விடயங்களும் மிகப் பல அதன்வழி உருவாகும் உணர்வுகளுக்கு உடனடி வடிகாலாய் அமைகின்றதொரு வடிவமே புதுக்கவிதையாகும். பல கட்டுப்பாடுகளோடு கூடிய மரபுக் கவிதைக்கு இத்தொழிலைச் சரிவரச் செய்யமுடியாதுள்ளது.

பிராய்டிசம் (Fraidism). மார்க்சிசம் போன்ற இயக்கங்களினதும், ஹைக்கூக் கவிதைகளின் தாக்கத்தோடும் வளர்ந்துவரும் இப்புதுக்கவிதையானது பாரதி காலம், பிச்ச மூர்த்தி காலம், மணிக்கொடிக் காலம், எழுத்துக்காலம், வானம்பாடிக் காலம் எனப் பல காலங்களுக் கூடாக வளர்ந்துவந்து தற்காலத்தில் கால்பதித்துள்ளது. பாரதியைத் தொடர்ந்து பிச்சமூர்த்தி, சி. சு. செல்லப்பா, கு. ப. ராஜகோபாலன், மேத்தா போன்றோர் இத்துறையின் குறிப்பிடத்தக்கவர்களாகத் திகழ்ந்ததோடு, தமக்குக் கீழ் புதிய பரம்பரையினரையும் உருவாக்கினர்.

ஒப்பீட்டாய்வு :

சங்க இலக்கியங்களையும் தற்காலக் கவிதைகளையும் ஒப்பிட்டாராயும் பொழுது இரண்டுக்குமிடையில் பல்வேறு விதமான ஒற்றுமை வேற்றுமைகளை அவதானிக்கலாம். ஆனால், இங்கு கால அளவு கருதிப் புதுக் கவிதைகளுக்கே உரிய பண்புகளாக அடையாளங் காணப்பட்டுள்ள சுருங்கச் சொல்லுதல், எதார்த்தத்தைப் பிரதிபலித்தல், படிமம், குறியீடு என்பவற்றின் பிரதிபலிப்பு, பேச்சோசைப் பாங்கு போன்றவற்றிற்கு அடிப்படைகளாக இருப்பவை சங்கச் செய்யுள்களே என்பதைத் தெளிவுபடுத்து வதாகவே இவ்வாய்வு அமைகின்றது.

அந்தந்தக் காலச் சூழ்நிலையை, மக்களின் வாழ்வியலை உள்ளது உள்ளபடி கூறுதல் நடப்பியலாகும். இது எதார்த்தவியல் (Realism), மீமெய்மையியல் (Sur-realism), இயங்கியல் (Dialectism), இருத்தலியில் (Existentialism), என நான்காக வகைப் படுத்தி நோக்கப்படுகின்றது. ஒரு கவிதைக்கு அணிகளால் வரும் அழகினைவிட, எதார்த்தம் சிறந்த அழகினைக் கொடுக்கின்றது எனலாம். புதுக்கவிதையின் பிரதான பண்பே எதார்த்தத்தைப் பிரதிபலித்தலாகும். புதுக் கவிதையின் தோற்றத்திற்குக்கூட அன்றாடம் உலகில் நிகழும் புதுமைகளை மரபுக் கவிதைகளின் மூலம் இயல்பாகப் பாட முடியாது என்ற காரணமும் ஒன்றுதான். 'கலைப் படைப்பின் தொடக்கப் புள்ளியாக எதார்த்தம் இருக்கிறது. ஆனால், அது கலைஞனின் மனோபாவம் இன்றிக் கலைப்படைப்பாவதில்லை.'[7] என்கிறார் கோ. கேசவன். ஈழத்துக் கவிஞரான மகாகவி உருத்திரமூர்த்தியின் மேல்வரும் கவிதை வரிகள் புதுக்கவிதையின் பாடுபொருள் பற்றி அழகாகச் சித்திரிக்கின்றன.

"இன்னவைதான் கவியெழுத
ஏற்றபொருள் என்றுபிறர்
சொன்னவற்றை நீர் - திரும்பிச்
சொல்லாதீர்! சோலை, கடல்
மின்னல், முகில், தென்றலினை
மறவுங்கள், மீந்திருக்கும்
இன்னல், உழைப்பு, ஏழ்மை, அன்பு,
என்பவற்றைப் பாடுங்கள்" [8]

"இன்றைய காலத் திருக்கும் மனிதர்கள்
இன்றைய காலத்திருக்கும் நோக்குகள்,
இன்றைய காலத் திழுப்புகள் எதிர்ப்புகள்,
இன்றைய காலத் திக்கட்டுகள்" [9]

இவை புதுக்கவிதையின் பாடுபொருளை நன்கு சித்தரிப்பதோடு, புதுக்கவிதைக்கு எதார்த்தம் எவ்வளவு முக்கியமானது என்பதையும் புலப்படுத்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல்வரும் கவிதைவரிகள் எவ்வளவுதான் நாகரிகம் முன்னேறி இருப்பினும், தொழில் நுட்பம் வளர்ச்சியடைந்திருப்பினும் சோற்றுக் காய் ஒரு கூட்டம் அலைமோதுவதை எந்தவித அலங்காரமுமின்றி எதார்த்தமாய் சித்தரிக்கின்றது.

"முகத்தில் வழிந்த
எச்சிலை துடைத்துவிட்டு
நாளைய சோற்றைக் குறியாய் வைத்து
நகரும் கும்பல்"[10]

இவ்வாறு பல்வேறு புதுக்கவிதைகளை உதாரணங்களாக நோக்கலாம். காலத்தின் தேவைகருதிய புதுக்கவிதையின் விஷேட பண்பாகவே நாம் இதனை எண்ணுகின்றோம். ஆனால், தமிழ் இலக்கியங்களை நுணுகிக் கற்கின்ற பொழுது, இன்று எமது கைகளிற் கிடைக்கின்ற மிகத் தொன்மையான சங்க இலக்கியங்களில் எடுத்துக் கொண்ட கருத்தைத் தெளிவாகவும், அலங்காரங் களைத் தவிர்த்தும், இயல்பு குன்றாமலும் சித்தரிக்கின்ற இப்பண்பு விரவிக் காணப்படு கின்றமையினை நன்கு அவதானிக்க முடிகின்றது. உதாரணமாகப் பின்வரும் பாடல் வரிகளை நோக்கலாம் :

"கையது வேலே காலன புனைகழல்
மெய்யது வியரே மிடற்றது பசும்புண்" [11]

இப்புறநானூற்றுப் பாடலடிகள் கையில் வேலும் காலில் கழலும், மெய்யில் வியர்வையும் என எந்தவிதமான அலங்காரங்களுமின்றி உண்மைத் தோற்றத்தைப் புலப்படுத்துகின்றது. அவ்வாறே,

"நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே
உண்டி முதற்றே யுணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே"[12]

என வரும் இன்னுமொரு புறநானூற்றுப் பாடலானது எக்காலத்திற்கும் பொருந்தும் மனித வாழ்நெறியை இயல்பாகச் சித்தரிக்கின்றது. இவ்வாறு பரிபாடல், கலித்தொகை, குறுந்தொகை, நெடுநல்வாடை போன்ற ஏனைய சங்கச் செய்யுள்களிலும் எதார்த்தச் சித்தரிப்பானது மிக இயல்பாக இடம் பெற்றுள்ளமையினை அவதானிக்கலாம். அக்காலச் சமூகத்தில் காதல், போர், வீரம், கொடை ஆகிய அம்சங்களே அன்றாட வாழ்வியல் எதார்த்தங்களாக இருந்துள்ளன. சங்கப்பாடல்கள் பல இவற்றை இயல்பாகச் சித்தரிக்கின்றமையினை அவதானிக்கலாம். இவ்வாறு சங்ககாலத்தில் அடியிடப்பட்ட எதார்த்தச் சித்தரிப்பே படிப்படியாக வளர்ச்சி யடைந்து இன்றைய புதுக்கவிதையில் முக்கிய இடத்தை பெற்றுள்ளது.

புதுக்கவிதைகள் பொதுவாக வடிவச் சுதந்திரம் கொண்டவையாக இருந்ததோடு வடிவச் சுருக்கத்தையும் அவாவின. புதுக் கவிதைகளை நாம் ஆய்வு செய்கிறபொழுது சிறந்த புதுக் கவிதைகளாக எமது மனதிற் பதிந்தவை தேர்ந்தெடுத்த சொற்களையும், சிந்தனை வீச்சிற்கேற்ற வடிவத்தையும், பொருட்செறிவு, ஓசைநயம் ஆகிய பண்புகளையும் கொண்டிருக்கின்றன. மரபுக் கவிதைகள் நீளச் சொன்ன செய்திகளை புதுக் கவியானது ஓரிருவரிகளில் பாடியது. யப்பானியக் ஹைக்கூக் கவிதைகளின் தாக்கம், பிறமொழிக் குறும்பாக்களின் தாக்கம் என்பவற்றைவிட, சங்க இலக்கியங்களில் கையாளப்பட்ட பொருட்செறிவு, சொற்சிக்கனம், குறுகிய வடிவம் என்பவையே புதுக் கவிதைகளின் வடிவச் சுருக்கதிற்குக் காரணம் எனலாம்.

"சிந்தனை வெளிப்பாடு எந்த முறையில் சொற்கோலம் கொள்கிறதோ, அதுவே அதன் வடிவம் என்று வடிவச் சுதந்திரம் தருபவன் புதுக்கவிஞன்".[13] யாப்பிலிருந்து விடுபடுகின்ற கவிதைகள் எல்லாம் வடிவக் கட்டுக்கோப்பு அற்றவை என்று கூறிவிட முடியாது. உணர்வு வெளியீட்டிற்கும் சிந்தனை வீச்சிற்கும் ஏற்றதானவொரு வடிவக் கட்டுக்கோப்பினைப் புதுக் கவிதையில் காணலாம். கவிஞனின் மனமுதிர்ச்சிக்கேற்பவே அவன் கவிதையில் கையாளும் பாடுபொருள் உள்ளது. பாடு பொருக்கேற்பவே கவிதையின் வடிவ நீட்சியும், வடிவச் சுருக்கமும் அமைகின்றன. நறுக்குத் தெறித்தாற் போல் மின்னலாய் மனதை நெருடுகின்ற குறுகிய வடிவக் கவிதைகள் கவிஞனின் மன முதிர்ச்சியையும் சிந்தனைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவையும் எமக்குப் புலப்படுத்துகின்றன. அணிநலன்கள் புடைசூழ எழுதப்பட்ட நீண்ட கவிதைகளில் ஏற்பட்ட சலிப்புத் தன்மையே குறுங்கவிதைகளுக்கு வித்திட்டது எனலாம். கருத்துக்கு மட்டுமே இடம் கொடுத்து, தேர்ந்தெடுத்த சொற்களைக் கொண்டு, அறிவுக்கும் புத்திக் கூர்மைக்கும் வேலை கொடுத்து ஆழமான கருத்தினை அலங்காரங்கள் இன்றி வெளிப்படுத்துகின்ற நுட்பம் சுருங்கிய வடிவத்தின் மூலம் புலப்படுகின்றது. இதுவே, குறுங்கவிதைப் படைப்பாளியின் நோக்கமாகவும் அமைகின்றது. இதன் மூலம் படைப்பாளியின் ஆழ்ந்த அறிவு, இலக்கிய புலமை, மதிநுட்பம், படைப்பாற்றல் போன்ற இன்னோரன்ன அம்சங்களை அவதானிக்கலாம். வடிவச் சுருக்கத்தை மேற்கொள்ளும் போது அங்கு குறியீடு, படிமம், புதிர் என்பன இன்றியமையாத இடத்தினைப் பெறுகின்றன. இவ்வாறான வடிவச் சுதந்திரத்தின் மூலம் உண்டான வடிவச் சுருக்கம் தற்கால புதுக் கவிதை களுக்கே உரியதாக இன்றியமையாத இடத்தினைப் பிடித்துள்ளன என்றுதான் நாம் எண்ணுகின்றோம். ஆனால், உண்மை அதுவல்ல. சங்க இலக்கியங்களிற் காணப்பட்ட சுருங்கச் சொல்லி விளங்க வைக்கின்ற தன்மை, குறுகியவடிவம், உள்ளுறை உவமம், இறைச்சிப்பொருள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு, மேலும் மெருகேற்றப்பட்டு உருவாக்கப் பட்டவையே புதுக்கவிதைகள் என்பது நாம் இவ்விலக்கியங்களை ஆராய்கின்றபொழுது புலனாகின்றது. மேல்வரும் புதுக்கவிதை யொன்றை உதாரணமாக நோக்கலாம்:

"அவன்
ஒரு
பட்டுவேட்டி பற்றிய
கனவில் இருந்த போது
கட்டியிருந்த கோவணமும்
களவாடப்பட்டது"[14]

இக் கவிதையானது சுதந்திரம் கிடைக்கு மென்ற அவாவில் இருந்த ஒருவனுக்கு இருந்த சுதந்திரமும் பறிபோன தன்மையினைப் புலப்படுத்துகின்றது. இவ்வாறான கவிதை களின் மூலம் கவிஞன் நேடியாகக் கூறமுடியாத விடயங்களை நாசுக்காகப் புலப்படுத்திவிடுகின்றான். இவ்வாறான தன்மையினைச் சங்கச் செய்யுள்களில் பல இடங்களில் காணலாம். சங்க இலக்கியங் களில் குறுகிய வடிவங் கொண்டவையாக ஐங்குறுநூற்றுப் பாடல்களைக் காணலாம். "முதலிரண்டு அடிகளில் காட்சியும், சூழலும், மூன்றாம் அடியில் மின்வெட்டுப் போல கூறவந்த கருத்தைப் புலப்படுத்துவனவாகவும் இவை அமைந்தன. நிலம், கரு, உரி ஆகியவற்றுள் ஒன்றை ஒரு தொடரிலும் கூறவரும் கருத்தை இறுதியிலும், படிமம் அல்லது குறியீட்டை ஓரடி அல்லது ஈரடிகளிலும் சுருக்கமாக உணர்த்தின".[15]

"சாத்த மரத்த பூழில் எழுபுகை
கூட்டுவிரை கமழும் நாடன்
அறவற் கெவனோ நமகல் வன்னாய்?"[16]

என்பது குறுகிய எல்லையாகிய மூன்றடிகளைக் கொண்ட ஆசிரியப் பாவாலான குறுந்தொகைப் பாடலாகும். இப் பாடலானது குறுகிய வடிவில் நேரடியாக ஒரு பொருளையும் சம்மந்தப்பட்டவர்க்கு விளங்கக் கூடிய மறைபொருளையும் கொண்டுள்ளதொரு வாமனச் செய்யுளாகும். அதாவது அன்னையே! சந்தன மரக் காட்டிடையே குறவர் வெட்டி எரிக்கும் அகிற் கட்டைகளி லிருந்து எழும் புகையானது, அச்சந்தன மணத்தோடும் சேர்ந்து கலந்து நாற்புறமும் நறுமணம் கமழ்ந்து கொண்டிருக்கும் நாடனாகிய தலைவன் அறவோனாவான். நாம் அவன் கேட்ட மகட் கொடையை ஏற்றலே நன்று என்ற இயல்பான பொருளைத் தருவதோடு, தலைவனும் தலைவியை மணந்து இல்லறம் நடத்துவானானால், அவர்களிருவரது உள்ளங் கலந்த இல்லறமானது அனைவராலும் போற்றிப் பாராட்டப்பெறும் என்ற மறைபொருளையும் தருகின்றது. இங்கு உள்ளுறை உவமம் உறைந்திருப்பதை அவதானிக்கலாம். மேலும்

"அவரோ வாரார் தான்வந் தன்றே
குயிற்பெடை யின்குரலகவ
வயிர்க்கேழ் ணுண்ணற னுடங்கும்
பொழுதே"[17]

என்பது போன்ற பல பாடல்கள் சொற்சுருக் கத்தைக் கொண்டனவாகக் குறுந்தொகையில் அவதானிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'படிமம்' என்ற சொல்லை முதன் முதலில் தமிழில் அறிமுகப்படுத்தியவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார். ஆங்கிலத்தில் "இமேஜ்" என்ற சொல்லே தமிழில் 'படிமம்' என்று அழைக்கப்படுகின்றது. இது 'போலிமை' என்ற பொருளைத் தருகின்றது. இமேஜ் என்பதற்கு ஆங்கிலத் தமிழ் பேரகராதியானது உருவம், படிமம், உருமாதிரி, ஒத்த வடிவம், கருத்தரு என விளக்கந்தருகின்றது.[18] "உணர்வின் அடிப்படையில் உருவம், காட்சி, நினைவு, கருத்து, அகத்தில் படிந்த புறப்பொருளின் தோற்றம், உவமை, உருவகம் போன்றனவே படிமங்களாக அமைகின்றன.[19] கவிதைகளில் உள்ள எல்லா உவமை உருவகங்களையுமே படிமம் என்பது குறிக்கின்றது என்பாரும் உளர், குறிப்பாகக் கவிஞனுடைய கவிதையைக் காட்சிப்படுத்துவதாகப் படிமம் உள்ளது. இதனையே "ஒரு வகையில் இவை மந்திரத் தன்மையுள்ள கண்ணாடிகள்; கருத்தைப் பிரதிபலிப்பது மட்டுமன்றி அதற்கு உயிரும் வடிவமும் தருகின்றன. உருவத்திற்கு உருவந்தருகின்றன."[20] என்னும் டேலூயிஸின் கூற்றுப் புலப்படுத்துகின்றது. "அடர்ந்த உருவகம், அதுவாகவே மாறிய உவமை, சொற்சித்திரம், இறுகிய சொற்சேர்க்கை, உணர்வுப் பதிவு, ஒன்றின் படப்பிடிப்பு, ஒன்றை இன்னொன்றோடு ஏதேனும் ஒரு சிறப்புத் தன்மையின் அடிப்படையில் பொருத்திக் காணல், பிரதிபலிப்பு என படிமத்திற்கு விளக்கம் கூறலாம்".[21] இப்படிமமானது மனப்படிமம், அணிப்படிமம், குறியீட்டுப் படிமம், காட்சிப்படிமம், கருத்துப்படிமம், அடைமொழிப் படிமம் எனப் பல்வேறு வகைப்படுகின்றது. ஒரு சில கவிதைகளை உதாரணங்களாக நோக்குவோம்.

> **"விடியும் தெருவில்**
> **விழுந்த மழையால்**
> **தெருவில் படியும்**
> **கண்ணாடிப்பாளம்"[22]**

இக்கவிதையில் கண்ணாடிப்பாளம் என்பது காட்சிப் படிமமாகக் காணப்படுகின்றது. மேல்வரும் கவிதையானது முற்றிலும் படிமத்தால் உருவாகியுள்ளது.

> **"முகிற்புற்று கக்கும்**
> **நெருப்புப் பாம்புகள்**
> **கறுப்பு உதட்டின்**
> **வெளிச்ச உளறல்**
> **இடிச்சொற்பொழிவின்**
> **சுருக்கெழுத்து"[23]**

மேலும், ஒன்றை இன்னொன்றாக நினைத்தல், அமைத்தல், உருவாக்கல், படித்தல் என்றும் படிமத்தை வரையறைப் படுத்துவர். மேகக் கூந்தல், நட்சத்திரப்பூ, துருப்பிடித்த இதயம் போன்றன புதுக் கவிஞர்களால் கையாளப்படும் இவ்வகைப் படிமங்களாகும். புதுக்கவிதையில் 'படிமம்' முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இப்படிமம் என்பதும் புதுக்கவிதைக்கேயுரிய பண்பாக இருக்கின்றது என்பதுதான் பெரும்பாலன வர்களின் எண்ணமாக உள்ளது. ஆனால், சங்கக் கவிதைகளை ஆராய்கின்ற பொழுது, சொற்சிக்கனம், பொருட்செறிவு, காட்சிப் படுத்தலாகியவை பொதுவான பண்புகளாகப் பிரதிபலிக்கப்படுகின்றன. சங்க இலக்கியங் களுக்கு இப்பண்புகள் பெரிதும் உவமை, உருவகம், உவமைப்போலி போன்றவற்றால் கிடைக்கின்றன. இது புதுக்கவிதையில் 'படிமம்' என்ற பெயரைப் பெறுகின்றது. மேலும், சங்க இலக்கியங்களில் காணப்படும் உள்ளுறை உவமம், இறைச்சிப் பொருள் என்பவற்றில் மன உணர்வுகளை நுட்பமாய் வெளிப்படுத்தும், காட்சிப்படுத்தும் படிமங்களை அவதானிக்கலாம். "கையும் காலும் தூக்கத் தூக்கும் ஆடிப்பாவை போல"[24] என வரும் குறுந்தொகைப் பாடல் அடியானது கையையும் காலையும் தூக்கத் தூக்கும் ஆடியில் தென்படும் பாவை போல தலைவியின் சொல்லுக்குக் கட்டுப்பட்டுத் தலைவன் செயற்படுவதாகப் பரத்தையி னுடைய கேலியை, உவமைவழிப்பட்ட காட்சிப் படிமமாக வெளிப்படுகின்றது. இவ்வாறு நோக்கும்பொழுது சங்க இலக்கியங்களில் உருவகம், உள்ளுறை உவமம் போன்ற வற்றால் காட்சிப்படுத்தப்பட்ட படிமம் புதுக்கவிதைகளின் நன்கு வளர்ச்சியடைந்த நிலையை எட்டியுள்ளது எனலாம்.

எழுத்து இதழின் ஆசிரியரான சி. சு. செல்லப்பாவே 'குறியீடு' என்ற கலைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லை உருவாக்கியவர். இது இலக்கியத் திற்குச் செறிவையும் கனதியையும் கொடுப்பதோடல்லாமல், ஒரு நிகழ்வையோ அல்லது சம்பவத்தையோ வலிமைப்படுத்துவ தாகவும், இலக்கியத்திற்கு நயத்தையும் அழகையும் கொடுப்பதாகவும் அமைகின்றது. ஒரு கருத்திற்குள் மறைமுகமாக உணர்த்தப்படும் இன்னொரு கருத்தாக அமைவதே குறியீடு என்பார் கூற்றும் நோக்கத்தக்கது. குறி, குறிப்பு ஆகிய இரண்டும் 'குறியீடு' என்ற முதிர் கலைச் சொல்லின் இளநிலை வடிவம் என்பர். ஆங்கிலத்தில் இதனைச் சிம்பொல் Symbol) என்று அழைப்பர். இது கவிதையில் ஒரு சொல்லாக, தொடராக இருக்கலாம். முழுக்கவிதையே ஒரு குறியீட்டாலானதாகவும் இருக்கலாம். நேரடியான குறியீடுகளே புதுக் கவிதைகளில் அதிகம்.

"பசும்புல் தரையில், பசு ஒன்று
அசைபோட்டு அமர்ந்திருக்க
பசித்து வந்த பன்றிக் கூட்டம்
நடுவில் நின்றது"[25]

என்ற கவிதையில் பசுவும் பன்றிக் கூட்டமும் முறையே நல்லவனுக்கும் கெட்டவர்களுக்கும் குறியீடுகளாக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு புதுக்கவிதையை ஆட்சி செய்யும் குறியீடுகள் தொடர்பாக ஆராய்கின்ற பொழுது சங்ககாலமே அவற்றிற்கு அடிப் படையாய் அமைவதை அவதானிக்கலாம். சங்கச் செய்யுட்களை நுணுகி ஆராயும் பொழுது திணைகள், பூக்கள், காலங்கள், கருப்பொருட்கள், மன்னர்களுடைய அடையாளங்கள் போன்றன குறியீடுகளாக இடம்பெறுகின்றன. சங்ககாலத்தில் இறைச்சியும் உள்ளுறையுமே குறியீடுகளாக தான் அமைகின்றமை அவதானிக்கத்தக்கது. ''வேங்கையும் ஒள்ளினர் விரிந்தன; நெடுவெண் திங்களும் ஊர்கொண் டன்றே"[26] என்பது அகநானூற்றுப் பாடலடிகள். இங்கு வேங்கைப்பூவும் திங்களும் முறையே அறுவடைக் காலத்தையும் இரவுப் பொழுதையும் புலப்படுத்தும் இறைச்சியால் அமைந்த குறியீடுகளாகும்.

பேச்சமைதியும் கவிதையில் இன்றி யமையாத இடத்தினைப் பெறுகின்றது. குறிப்பாகச் சொல்லப்போனால் பேச்சுமொழியே ஒரு இலக்கியத்திற்கு உயிரோட்டத்தை வழங்குகின்றது எனலாம். ஷேக்ஸ்பியரின் இலக்கியங்களுக்கு அவர் கையாண்ட அக்கால வழக்குச் சொற்களே உயி ரோட்டத்தையும் எளிமையினையும் வழங்கினவெனலாம். புதுக்கவிதையின் நோக்கங்களில் முக்கியமானதொன்றாகவே இந்தப் பேச்சமைதி காணப்படுகின்றது. "உணர்வுகளை உணரும் அதே சொற்கள் அல்லது ஒலிக்குறிப்புகளோடு எழுத்தில் உணர்த்துதலே புதுக்கவிதையின் நெறி. கவிதைக்கு உண்மையான சரியான சொற்களை இடல், மக்கள் நடுவே புழங்கும் சொற்களை அப்படியே படைப்பில் வார்த்தல் என்ற பண்புகளோடு தான் புதுக்கவிதைகளே படைக்கப்பட்டு வருகின்றன."[27] அறிவியல் வளர்ச்சி, உலகத்துடனான தொடர்புகள் விரிவடைந்தமை, பல்துறை அபிவிருத்தி என்பவற்றால் புதிய பல சொற்கள் அன்றாடம் பெருகிக் கொண்டேயிருக்கின்றன. எனவே, புதிய சொற்களைக் கவிதைகளிற் கொண்டு வரவேண்டிய தேவையை புதுக்கவிஞர்கள் நன்கு அறிவர். இதனாலேயே, புதுக் கவிதையின் உயிர்ப் பண்பாகப் பேச்சமைதி உள்ளது. ''அம்மா ஆபிஸ் போகிறாள், அப்பாவின் ஸ்கூட்டரின் பின்னே, ஊட்டிவிட ஆளில்லை. உடல்முழுக்கச் சோறாச்சு, மாலையில் திரும்பி வருவாள், ஆபீஸின் அலுப்பை ஊட்ட"[28] என்னும் கவிதையானது ஒரு பிள்ளையின் பேச்சாகவே அமைந் துள்ளது. சங்கச் செய்யுள்களை எடுத்துக் கொண்டால், ஒலிக்குறிப்பு, உரையாடல், பல்வேறு மாந்தர்களின் கூற்றுகள், பறவைகள் எழுப்பும் ஒலிகள் போன்றவை இயல்பாகவே இடம்பெற்றுள்ளமையினை அவதானிக்க முடிகின்றது. ''பார்ப்பன மகனே பார்ப்பன மகனே", "கேளாய் எல்ல தோழி" போன்ற சங்கச் செய்யுள் வரிகளை உதாரணங்களாக நோக்கலாம். இவ்வாறு புதுக்கவிதைகளுக் குரிய விசேட அம்சங்களாக நாம் அடையாளங் காணுகின்ற பல்வேறு அம்சங்களுக்கும் சங்கச் செய்யுள்களே அடிப்படைகளாக அமைவதை அவதானிக்க முடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு தொகுத்து நோக்குகின்ற பொழுது, விசேடமாக, சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல், சீரிய சொல்லாட்சி, வடிவக் கட்டுக்கோப்பு போன்ற இன்னோரன்ன அம்சங்களே சங்க இலக்கியங்களைக் காலத்தைக் கடந்து வாழவைத்துள்ளன என்பதையும், இவையே தற்காலக் கவிதைகளில் வடிவச் சுருக்கம்,, நடைப்பியல், படிமம், குறியீடு, பேச்சமைதி போன்ற நுட்பங்களாக வளர்ச்சியடைந்துள்ளன என்பதை அதாவது, இவை காலத்திற்கேற்ப புதிய பெயர்களைப் பெற்றுத் திகழ்கின்றனவே யன்றி முற்றிலும் புதிய விடயங்கள் அல்ல என்பதை விசேடமாகப் புலப்படுத்துகின்றதொரு ஆய்வாக இது அமைகின்றதெனலாம். மேலும், இலக்கிய வளர்ச்சிக்கு விமர்சனம் இன்றியமையாத ஒன்று. புதுக்கவிதைகள் தொடர்பான விமர்சனங்கள் மிகக் குறைவாகக் காணப்படும். இச்சந்தர்ப்பத்தில், அதனை ஊக்குவிக்கும் ஒன்றாக இவ்வாய்வு அமையு மென்பதில் ஐயமில்லை.

அடிக்குறிப்பு:

01. அம்மன்கிளி முருகதாஸ் (2016), சங்கக் கவிதையாக்கம் மரபும் மாற்றமும். ப.(அணிந்துரை) XV
02. அடைக்கலசாமி, எம். ஆர். (1999). தமிழ் இலக்கிய வரலாறு. ப. 34.
03. அடைக்கலசாமி, எம். ஆர், (1999), தமிழ் இலக்கய வரலாறு. ப. 61.
04. வல்லிக்கண்ணன், (2008), புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும். ப. 05
05. சுப்பிரமணியபாரதியார், சி. (1999) பாரதியார் கவிதைகள், ப. 241
06. தண்டாயுதம் இரா.ஓர் இலக்கிய ஆய்வு .125
07. கேசவன், கோ. இலக்கணவிமர்சனம் ஒரு மார்க்சியப் பார்வை ப.46
08. மஹாகவி கவிதைகள், பாடுங்கள் அத்தான். ப. 5
09. மஹாகவி கவிதைகள், பாடுங்கள் அத்தான் ப. 5
10. பிரம்மராஜன் வலி உணரும் மனிதர்கள் ப.21
11 கழக வெளியீடு (1964) புறநானூறு முதற்பாகம் ப.236
12. கழக வெளியீடு (1964) புறநானூறு முதற்பாகம் ப.236
13. பொன்மணி வைரமுத்து (2002) சங்க இலக்கியங்களில் புதுக்கவிதைக் கூறுகள் ப. 226
14. வைரமுத்து இன்னொரு தேசிய கீதம் ப. 107
15. பொன்மணி வைரமுத்து (2002) சங்க இலக்கியங்களில் புதுக்கவிதைக் கூறுகள் ப.132
16. புலியூர்கேசிகன் தெளிவுரை (2008) ஐங்குநூறு ப.26
17. புலியூர்கேசிகன் தெளிவுரை (2008) ஐங்குநூறு ப. 223
18. பொன்மணி வைரமுத்து (2002) சங்க இலக்கியங்களில் புதுக்கவிதைக் கூறுகள் ப. 298
19. பொன்மணி வைரமுத்து (2002) சங்க இலக்கியங்களில் புதுக்கவிதைக் கூறுகள் ப. 298
20. இராமலிங்கமூர்த்தி, வெ. இலக்கியத்தில் படிமம். ப. 01
21. பொன்மணி வைரமுத்து (2002) சங்க இலக்கியங்களில் புதுக்கவிதைக் கூறுகள் ப. 300
22. அப்துல் ரகுமான் பால்வீதி ப. 76
23. சக்திக்கனல் கனகாம்பரமும் டிசம்பர்ப் பூக்களும் ப.10.
24. தமிழ்ப் பல்கலைக்கழகம் (1994) குறுந்தொகை ப. 10.
25. ஐராவதம் மாலன் அசோகமித்திரன் கணையாழிக் கவிதைகள் ப.56
26. புலியூர்க் கேசிகன் (தெளிவுரை) (1999) அகநானூறு ப. 13.
27. பொன்மணி வைரமுத்து (2002) சங்க இலக்கியங்களில் புதுக்கவிதைக் கூறுகள் ப. 372
28. ராஜகோபால், கே. பசப்பல் கவிதைகள் ப. 18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக சமூகத்தை வலுப்படுத்துதல்

எம். வாமதேவன் B.A(Hons.), M.A., M.Phil.
ஆலோசகர், மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு
மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு

முகவுரை :

வலுப்படுத்தல் என்பது அடிப்படையில் உரித்துகளையும் செயலாற்றும் திறனையும் குறிக்கும். உலகப் புகழ்பெற்ற அபிவிருத்தி பொருளியலாளரான அமர்த்தியாசென் வலுப் படுத்தல் என்பது ஒரு தனிநபர் சமூகத்தில் மேற்கொள்ளக்கூடிய உரிமைகளும் சந்தர்ப்பங் களின் தொகுதி என வரைவிலக்கணப்படுத்தி யுள்ளார். செயல்திறன் என்பது சில குறிப்பிட்ட தொழிற்பாடுகளை மேற்கொள்ளக் கூடிய இயல்திறன் ஆகும். இந்த தனிமனிதன் குறித்த நோக்கு ஒரு சமூகத்தை பொறுத்த வரையில் பொருந்தக் கூடிய ஒன்றாகும். அத்தோடு ஓர் சமூகம் உரித்துக்களை கொண்டிருந்தாலும் அச்சமூகத்துக்கு செயல் திறன் இல்லையென்றால் அதனால் பலாபலன் களை பெற்றுக்கொள்ள முடியாது என வாதிக்க இடமுண்டு. இக்கருத்தோட்டமே இந்த கட்டுரையில் பாவிக்கப்பட்டுள்ளது.

மலையக சமூகம் பொதுவாக தேயிலை, றப்பர் தோட்டங்களில் வாழ்கின்ற வதிவிட தொழிலாளர்களையும் அவர்களுடைய தோட்டங்களிலும் பிற பகுதிகளிலும் வாழ்கின்ற அவர்களுடைய உறவினர்களையும் குறிக்கின்ற ஒன்றாகும். அவர்கள் குறிப்பிட்ட ஓர் அடையாளத்துடன் ஓர் சமூகமாக நிலைமாற்றம் பெற்றுள்ளனர். இலங்கையின் சனத்தொகையில் இவர்கள் 4.4.வீதமாக அமைந்திருப்பதோடு ஏறக்குறைய 10 இலட்சம் பேரை உள்ளடக்கியுள்ளனர். இவர்கள் 200 வருடங்களுக்கு முன்னர் தென்னிந்தியாவில் இருந்து கோப்பி, றப்பர் மற்றும் தேயிலை தோட்டங்களில் வேலை செய்வதற்காக இடம் பெயர்ந்த இந்திய வம்சாவழியினராவர்.

இவர்கள் பொருளாதார ரீதியாக தோட்டங் களிலே அடைபட்ட நிலையில் தனி அலகாக விளங்கினர். தோட்ட நிர்வாகம் எல்லா வசதிகளையும் அளித்து அவர்களை வதிவிட தொழிலாளர்களாக வைத்திருந்தமையினால் அவர்கள் மற்றவர்களில் தங்கியிருக்கும் நிலைமைக்கு தள்ளப்பட்டிருந்தனர். அரசியல் ரீதியாக இலங்கை சுதந்திரம் அடைந்ததோடு இவர்களுடைய குடியுரிமை பறிக்கப்பட்டதோடு வாக்குரிமையையும் இவர்கள் இழந்தனர். சமய அடிப்படையில் இவர்களில் பெரும்பாலானவர்கள் இந்து சமயத்தை சார்ந்தவர்களாக இருந்ததோடு சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் தனிமைப்படுத்தப்பட்ட காரணத்தினால் இவர்கள் தங்களது கலாச்சார பண்புகளையும் பாதுகாத்துக் கொள்ளக் கூடிய நிலை காணப்பட்டது.

பொருளாதார சமூக தனிமைப்படுத்தலோடு அரசியல் பங்குபற்றல் இல்லாத காரணத்தின் விளைவாக இந்த சமூகம் இந்த நாட்டின் ஏனைய சமூகங்கள் அல்லது துறைகள் பெற்றுக்கொண்ட அபிவிருத்தியின் பலாபலன்களை முழுமையாக பெற்றுக்கொள்ள முடியவில்லை. எனவே, இந்த சமூகமானது சமூக அபிவிருத்தி குறிகாட்டிகளை பொறுத்தவரையில் ஏனைய சமூகங்களோடு ஒப்படுகையில் ஒரு பின்னடைந்த நிலையை காணமுடிகிறது.

தற்போதைய நிலை

♦ **அரசாட்சி :**

தற்போது தனிமைப்படுத்தப்பட்ட நிலைமை யானது உடைக்கப்பட்டு தேசிய நீரோட்டத் தோடு இணைந்து செயற்படுகின்ற செயல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறை பல்வேறு தடைகளுடன் முன்னேற்றம் பெறுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அரசியல் ரீதியாக இச்சமூகத்திலிருந்து பாராளுமன்றத்தில் 9 பேர் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளனர். எனினும் இது மொத்த சனத்தொகையை பொறுத்தவரையில் போதுமானது என்று சொல்லுவதற்கில்லை. மத்திய ஊவா மற்றும் சப்ரகமுவ மாகாணங் களின் மாகாண சபைகளில் இவர்கள் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தாலும் அதுவும் போதியளவில் இல்லை. எனினும் தோட்ட மாவட்டங்களில் காணப்படுகின்ற பிரதேச சபைகளை பொறுத்தவரை சில மாவட்டங்களில் நுவரெலியா போன்றவற்றில், முழுமையான பிரதிநிதித்துவம் காணப்பட்டாலும் அவற்றின் செயற்பாடுகளை தோட்டங்களில் மேற்கொள்வதற்கு சட்டரீதியான தடைகள் காணப்பட்டன. தற்போது இச்சட்டரீதியான தடைகள் 1987ம் ஆண்டு பிரதேச சபை சட்டத்தின் 19வது மற்றும் 33வது சரத்துக்களில் திருத்தங்களை மேற்கொள்வதன் மூலம் அகற்றப்பட்டு அவைகள் வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட்டுள்ளன. 19வது சரத்தின்படி பிரதேச சபைகளின் செயற்பாடுகள் கிராமங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. தற்போதைய திருத்தத்தின் பிரகாரம் தோட்ட குடியிருப்புகளும் உள்வாங்கப்பட்டுள்ளன. 33வது சரத்தின்படி பிரதேச சபையின் நிதிகள் தோட்ட நிர்வாகத்தின் கோரிக்கையின் அடிப்படையிலேயே பயன்படுத்தக்கூடியதாக இருந்தது. தற்போதைய திருத்தத்தின்படி பிரதேச சபை ஒன்று ஒரு விசேட தீர்மானத்தை மேற்கொண்டு தோட்ட நிர்வாகத்தின் உடன்பாட்டோடு பிரதேச சபையின் நிதியை உபயோகிக்கக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. பிரதேச சபைகளை பொறுத்தவரை இன்னுமொரு முக்கிய அபிவிருத்தியானது நுவரெலியா மாவட்டத்தில் புதிதாக நான்கு பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டமையாகும். இதற்கு முன்னால் நுவரெலியா மற்றும் அம்பகமுவ பிரதேச சபைகள் ஒவ்வொன்றும் 2 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்களை பிரதி நிதித்துவப்படுத்துவதாக அமைந்திருந்தன. தற்போது இந்த இரண்டும் 6 ஆக அதிகரிக்கப்பட்டு மக்களுக்கு அதிக பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக இதுவரை காலம் பிரதிநிதித்துவத்தில் காணப்பட்ட குறைபாடுகள் நீக்கப்பட்டுள்ளது. இதையொட்டி இதே எண்ணிக்கையிலான பிரதேச செயலகங்களின் பிரிவுகளும் அதிகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலமாக தோட்டத்துறைகளுக்கு வழங்கப்படுகின்ற பொது சேவைகள் பயனுறுதி மிக்கதாக அமையும்.

♦ **சமூக அபிவிருத்தி :**

சமூக அபிவிருத்தியை பொறுத்தவரை இச்சமூகத்தின் பின்தங்கிய நிலைமையை ஒப்பீட்டுத் தரவுகள் துல்லியமாக எடுத்துக்காட்டுகின்றன. தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு தற்போது சமீபத்தில் வெளியிட்டுள்ள பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தில் (2017) பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. "சமூக அபிவிருத்தியை பொறுத்தவரையில் பெருந்தோட்ட சமூகமானது மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகிறது. குறிப்பாக வறுமை குறித்த குறிகாட்டிகள் தோட்டத்துறையில் 10.9 சதவீதமாகவும் நாட்டில் 6.7 சதவீதமாகவும் அமைந்துள்ளது. (2012 - 2013). இதே போலவே கல்வியைப் பெற்றுக்கொள்ளல், சுகாதாரம், போசாக்கு, வீடமைப்பு, பாதுகாப்பான குடி நீர் மற்றும் சுத்திகரிப்பு என்பவற்றிலும் இந்த பின்தங்கிய நிலை காணப்படுகின்றது. பெரும்பாலான தோட்டப்பகுதிகளில் வாழுகின்ற பெரும்பாலான தோட்ட தொழிலாளர்கள் தங்களுடைய வாழ்க்கையை தோட்ட தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு அர்ப்பணித்துள்ளதோடு தோட்டதுறையை அபிவிருத்தி செய்வதற்கும் அதன் மூலமாக முழு நாட்டினது அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கும் அர்ப்பணித்துள்ள்னர்".

மோசமான வீடமைப்பு நிலைமைகள் பிரதான பிரச்சினையாக நெடுங்காலமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஏனெனில், அவைகள் 150-200 சதுர அடிகளில் அமைக்கப்பட்ட வசதி குறைத்ததும் பிரத்தியேக நீர்வழங்கள் மற்றும் மலசலகூட வசதிகள் அற்றநிலையில் காணப்பட்டன. தற்போது இந்த நிலைமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகமாக திருத்தியமைக்கப்படுகின்றது. அரசாங்கத்தின் கொள்கை தீர்மானத்திற்கேற்ப 7 பேர்ச் காணியில் 550 சதுர அடியில் காணி உறுதியுடன் வீடுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இக்காணி உறுதியானது சுதந்திரமாக மாற்றக்கூடியதும் அடைமானம் வைக்கக்கூடியதும் ஆகும். எனவே, இந்த சமூகமானது ஒரு வீட்டை சொந்தமாக கொண்ட சமூகமாக நிலைமாற்றம் பெற்று வருகின்றது எனலாம்.

சுகாதார நிலைமைகளை பொறுத்தவரை பொது முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் (2017) பின்வருமாறு குறிப்பிடுகிறது. ‘‘தோட்ட சமுதாயமானது சுகாதார பராமரிப்பை பெற்றுக்கொள்வதை பொறுத்தவரையில் பின்தங்கிய நிலையிலும் போசாக்கு நிலையிலும் மிக குறைந்த நிலமையில் காணப்படுகிறது. தேசிய மட்டத்தோடு ஒப்பிடுகையில் சுகாதார குறிகாட்டிகள் மிகவும்குறைவான நிலையில் அமைந்துள்ளன. உதாரணமாக 2006 - 2007ல் சிசுமரண வீதமானது தேசிய மட்டத்தில் 1,000 உயிருடன் பிறந்த பிறப்புகளுக்கு 9.7 வீதமாகவும் தோட்டப்புறங்களில் 29 சதவீதமாகவும் காணப்பட்டுள்ளது. 2015 இல் 5 வயதிற்குட்பட்டவர்களிடமும் தாயாகக்கூடிய வயதுள்ள பெண்களிடமும் காணப்படும் போசாக்கின்மை நிலைமையானது தேசிய மட்டத்தில் 20 சதவீதமாகவும் தோட்டப் புறங்களில் 60 சதவீதமாகவும் காணப்பட்டது. அதைப்போலவே பிறப்பின்போது குறைவான நிறையுள்ள பிள்ளைகள் தேசிய மட்டத்தில் 16.6 சதவீதமாகவும் தோட்டப்புறங்களில் 31 சதவீதமாகவும் காணப்பட்டது. அதைப்போல 5 வயதிற்கு கீழ் உள்ள குறை வளர்ச்சி உள்ள பிள்ளைகள் தேசிய மட்டத்தில் 18 சதவீதமாகவும் தோட்டப்புறங்களில் 10.8 சதவீதமாகவும் காணப்படுகின்றது. ஒப்பீட்டுப் புள்ளிவிபரங்கள் 2006-2007 க்குரியனவாகும்.

இத்தகைய பின்தங்கிய நிலைமைக்கான காரணம் சுகாதார சேவை வழங்கல் தோட்ட நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்பட்டமையே ஆகும். 1990 களில் பிந்திய காலப்பகுதிகளில் தோட்ட சுகாதார முறைமையினை தேசிய முறைமையோடு ஒருங்கிணைக்கப்பட வேண்டுமென கொள்கை தீர்மானம் எடுக்கப்பட்டபோதும் இந்த தீர்மானம் இன்னும் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. கல்வி முறையை பொறுத்தவரை ஆரம்பம் மற்றும் இரண்டாம் தர கல்விகள் பள்ளிக் கூடங்களை பொறுத்தவரை தேசிய மற்றும் தோட்டத்துறைக்கும் இடையிலான வித்தியாசங்கள் முன்னேற்றகரமாக குறைந்து வருகின்றது. ஆனால் உயர் இரண்டாம் தரம் மற்றும் மூன்றாம் தர கல்வியை பொறுத்தவரை இடைவெளிகள் பரந்ததாக காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக பல்கலைக்கழக அனுமதியை பொறுத்தவரை இந்த சமூகத்தில் இருந்து தேசிய பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெறுகின்ற மொத்த மாணவர்களின் எண்ணிக்கையில் ஒரு சதவீதத்திற்கும் குறைவாகவே காணப்படுகிறது. 2017 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்ற 2,900 மாணவர்களில் தோட்டப் புறங்களைச் சேர்ந்த 94 பாடசாலைகளில் இருந்து 484 மாணவர்களே அனுமதி பெற்றுள்ளனர். இது மொத்த அனுமதியில் 1.66 சதவீதமாகும். இந்த வளர்ச்சியானது குறிப்பிடத்தக்கதாக அமைந்திருந்தாலும் சனத்தொகையை பொறுத்தவரையில் போதிய ஒன்றாக காணப்படவில்லை.

♦ **பெண்கள்**

இந்த சமூகத்தில் மிக பலவீனமான பகுதியினர் பெண்களாவர். தோட்டத்துறையில் பெண்கள் தொழிற்துறையில் பங்குபெறும் வீதம் இந்நாட்டிலேயே அதிகமாக இருப்பினும் இந்த வேலையின் குறைந்த தரம் குறைந்த கூலி என்பன காரணமாக இளம் தலைமுறையினரிடையே இங்கு வேலை செய்வதற்கான விருப்பம் குறைந்து செல்கிறது. இந்த போக்கானது கல்வியினுடைய பெருக்கத்தோடு அதிகரித்துச் செல்கிறது. தற்போது சமூகத்தில் வெளியான உலக வங்கியின் “வேலைகளுக்கு தயாராகுதல்” என்ற தலைப்பிலான ஆய்வறிக்கையின்படி “இவர்கள் குறைந்த திறமை, குறைந்த சம்பளம், தீர்மானம் செய்வதில் குறைந்த பங்களிப்பு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேற்றத்திற்கான குறைவான சந்தர்ப்பங்கள் எனபவற்றிற்கு உள்ளாகியுள்ளனர்''. பொது விவகாரங்களில் இவர்களுடைய பங்குபற்றுதல் தோட்டமட்டத்தில் காணப்படுகின்ற சமூகம் சார்ந்த அமைப்புக்களான கோயில் குழுக்கள் என்பவற்றிலும் கூட இவர்களின் பங்களிப்புகள் குறைவாகவே காணப்படுகிறது. உயர்ந்த மட்டங்களிலும் குறிப்பாக அம்பேகமுவ பிரதேச சபை மற்றும் மத்திய மாகாண சபை என்பவற்றில் ஒவ்வொரு உறுப்பினர் தவிர எந்த ஒரு பிரதேச சபையிலோ அல்லது மாகாண சபையிலோ பெண்களுக்கு எந்தவித பிரிநிதித்துவமும் கிடையாது. இந்த சமூகத்தை பிரதிநிதித் துவப்படுத்தும் பெண் பிரதிநிதிகள் இன்னும் பாராளுமன்றத்துக்குச் செல்லவில்லை.

♦ **தொழில்வாய்ப்புகள் :**

இளைஞர்களின் வேலைவாய்ப்புகளை பொறுத்தவரையில் பிரதானமான அம்சம் அவர்களிடையே காணப்படும் ஆர்வங்களுக்கும் தோட்டங்களிடையே காணப்படும் வேலைவாய்ப்புகளுக்கும் இடையே அதிகரித்துச் செல்லும் பொருந்தாத் தன்மையாகும். 1970ம் ஆண்டுகளில் தேசிய மட்டத்தில் இத்தகைய பொருந்தாத் தன்மை அவதானிக்கப்பட்டபோது கல்வித் தரம் குறைவான நிலையிலுள்ள தோட்டப்புறங்களில் இந்த இரண்டுக்கும் இடையே ஒரு பொருத்தத் தன்மை காணப்பட்டது. ஆனால் தற்போது இரண்டாம் தர கல்வியின் அதிகரிப்போடு அதிகமான இளைஞர்கள் சாதாரணதரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் சித்தியடைந்து வருகின்றனர். ஆனால் அவர்களுக்கு எவ்வித திறனும் இல்லாத காரணத்தினால் அவர்கள் நகர்ப்புறங்களில் காணப்படும் திறனற்ற தொழில்களுக்கு உள்வாங்கப்படுகின்றனர். இது தோட்டப்புறங்களில் காணப்படுகின்ற திறனற்ற தொழில்கள் நகர்ப்புறங்களை நோக்கிய படுகிடையான மாற்றமேயாகும். பொதுத்துறையில் இந்த சமூகம் போதியளவு பிரதிநிதித்துவப்படுத்தப்படவில்லை. கல்வித் துறையை தவிர ஏனைய அகில இலங்கை சேவைகளில் உயர் முகாமைத்துவ மட்டத்தில் இந்த சமூகத்தின் பங்குபற்றுதல் இல்லாமை காணப்படுகிறது. இலங்கையின் கல்வி நிர்வாக சேவையில் ஏறக்குறைய 40 பேர் காணப்பட ஏனைய சேவைகளில் இந்த எண்ணிக்கை மிகமிக குறைவானதாகும்.

பிரதான பிர்சினைகளும் சவால்களும்

♦ **தேயிலைத் தொழில் :**

தோட்டப்புறங்களிலிருந்து இளைஞர்களின் வெளியேற்றம் தேயிலை தொழில் உழைப்புக்கான பற்றாக்குறையை தோற்றுவித்துள்ளது. உழைப்பு செறிவான தேயிலை தொழிலுக்கு இதன் விளைவுகள் பாரதூர மானவை. உற்பத்தி செய்யக்கூடிய நிலங்கள் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகிறது. அத்தோடு அவைகள் நன்கு பராமரிக்கப்படாத காரணத்தினால் நிலத்தினுடைய உற்பத்தி திறன் குறைந்துள்ளது. இதனைப் போலவே தொழிலாளர் உற்பத்தி திறனிலும் அதிகரிப்பு காணப்படவில்லை. இதனால் மொத்த உற்பத்தி திறனுடைய குறைவு காரணமாக உற்பத்தி செலவு அதிகரித்து கூலி உயர்வுக் கோரிக்கை முன்வைக்கப்படும்போது தோட்டத் துறையில் அமைதியின்மை ஏற்படுவது சாதாரணமாகிவிட்டது.

♦ **ஒருங்கிணைதல் :**

அரசாங்க அமைப்பில் ஒருங்கிணைவு செயல்முறையானது உத்வேகம் பெற்றுள்ளது. பிரதேச சபைகள் தோட்டப்புறங்களில் உள்நுழைதல் அவற்றினுடைய எண்ணிக்கை அதிகரிப்பு, அத்தோடு பிரதேச செயலகங்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடிய வாய்ப்பு என்பவை தோட்ட நிர்வாகத்தை அரச நிறுவனங்களோடு நெருங்கி செயல்படுகின்ற தேவையை உருவாக்கியுள்ளது. கடந்த காலங்களில் தோட்ட நிர்வாகத்திற்கும் அரச நிறுவனங்களுக்கும் இடையே ஒருங்கிணைப் பானது குறைவாகவே காணப்பட்டது. இவை இரண்டுக்கும் இடையே உள்ள தொடர்புகள் அபிவிருத்தி அடைவதால் பயனுறு ஒருங் கிணைப்பு மிக முக்கியமான ஒன்றாகும்.

♦ **புதிய கிராமங்களின் உருவாக்கம் :**

மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட் டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி என்ற புதிய அமைச்சு உருவாக்கத்தின் காரணமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய கிராமங்களை உருவாக்குகின்ற கருத்தானது தற்போது நிதர்சனமாகி அல்லது நனவாகி வருகின்றது. புதிய கிராமங்களின் உருவாக்கத்திற்கு போதிய தேவையான நிலங்களை விடுவிப்பதும் வீடுகளுக்கு உரித்துக்களை உறுதிப்படுத்துவதும் முதற்தேவையாகும். புதிய கிராமங்களை உருவாக்கும் போது வீடமைப்பு தேவை களோடு உள்ளக பாதைகள் ஏனைய சமுதாய வசதிகள் என்பவற்றுக்காக நிலமும் தேவைப்படும். புதிய கிராமங்களுக்கான நிலங்களை வரையறுக்கும்போது இந்த தேவைகளும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இது தோட்ட நிர்வாகத்திற்கு பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடும்.

♦ **தொழில்வாய்ப்பு :**

கல்விகற்ற இளைஞர்களுக்கு பொருத்தமான வேலைவாய்ப்புகளை பெற்றுக்கொள்வது பெரிய பிரச்சினையாக உள்ளது. உதாரணமாக தற்போது திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில் ஏறக்குறைய 141 தோட்டப்புற தமிழ் பாடசாலைகளில் க.பொ.த. உயர்தர வகுப்புகள் காணப்படுகின்றன. வகுப்புகளிலும் 11,000 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். அவற்றில் 94 பாடசாலைகளிலிருந்து 3,000 க்கும் மேற்பட்ட மாணவர்கள் 2016 ம் ஆண்டு உயர்தர பரீட்சையில் தோற்றியுள்ளனர். அவர்களில் 2,000 பேர் பல்க்லைக்கழக அனுமதிக்கு தகுதியுள்ளவர்களாக கணிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் எவ்வாறாயினும் 484 பேர்களே பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ளனர். ஏனைய மாணவர்கள் தங்களுடைய உயர்தர கல்வியை தொடரவேண்டும் அல்லது தொழில்நுட்பக் கல்லூரிகளை நாடவேண்டும். இவை இல்லாதவிடத்து போதிய திறனில்லாத தொழில் ஒன்றையே நாடவேண்டி இருக்கும். தனியார் துறையில் உயர்ந்த சம்பளத்துடன் கூடிய வேலைகளை பெற்றுக்கொள்ள அவர்களுக்கு போதிய திறன்கள் இல்லை. எனவே, நகர்ப்புறங்களில் காணப்படும் திறனற்ற தொழில்களில் உள்வாங்கப்படுகின்றனர். இங்கு தேவைப்படுவது என்னவெனில் படுகிடையடான நகர்வு அன்றி செங்குத்தான நகர்வாகும்.

♦ **பெண்கள் :**

பெண்களை வலுப்படுத்தல் என்பது தற்போது பிரதேச சபைகளில் மற்றும் மாகாண சபைகளில் தேர்தல் திருத்தச் சட்டத்தின் காரணமாக பெண்களுக்கான பிரதிநிதித்துவம் மொத்தத்தில் 25 - 30 சதவீதம் கட்டாயமாக்கப்பட்டு முக்கியத்துவப்படுத்தப்படுகிறது. சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிகள் பொருத்தமான அபேட்சகர்களை தெரிவு செய்வதில் பிரச்சினைகளை எதிர்நோக்குவர். அரசியல் ஆர்வமின்மை, பொது செயற்பாடுகளில் மற்றும் தீர்மானம் எடுக்கும் செயற்பாடுகளில் பங்குபற்றாமை என்பவை காரணமாக அபேட்சகர்களின் தெரிவில் பிரச்சினை உருவாகும்.

♦ **உள்ளக வேறுபாடுகள் :**

துறைகளுக்கு இடையே வேறுபாடுகளுக்கு மேலதிகமாக தோட்டத்துறையை பொறுத்தவரை பிரதேசம், அளவு மற்றும் தோட்டங்களின் உரிமை என்பன குறித்த உள்ளக வேறுபாடுகள் காணப்படுகின்றன. நுவரெலியா மாவட்டத்தைப் பொறுத்தவரை போதியளவும் பதுளை மாவட்டத்தில் ஓரளவுக்கும் அரசியல் பிரதிநிதித்துவம் காரணமாக அந்தந்த மாவட்டங்களினுடைய அபிவிருத்தியின் கோரிக்கைகளை முன் வைப்பதற்கு ஒரு சிறப்பான நிலை உள்ளது. ஆனால், சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களில் மக்கள் கோரிக்கைகள் அரசியல் பிரதிநிதித்துவம் இன்மை காரணமாக முழுமையாக முன்வைக்கப்படவில்லை. தனியாருக்குச் சொந்தமான தோட்டங்களில் பிராந்திய தோட்ட கம்பனிகளோடு ஒப்பிடுகையில் இதே நிலைமை காணப்படுகின்றது. பெருந்தோட்டத்துறை கம்பனிகளோடு ஒப்பிடும்போது தனியாருக்கு சொந்தமான சிறிய தோட்டங்களிலும் இதே நிலைமை காணப்படுகின்றது. இதன் காரணமாக பெருந்தோட்டத்துறை பகுதிகளில் வீடமைப்பு உட்கட்டமைப்பு சுகாதாரம் குறித்து பாரிய உள்ளக இடைவெளிகள் காணப்படுகின்றன.

♦ **தெரிவுகள் :**

தேயிலை தொழிலை பொறுத்தவரையில் கவனிக்கப்பட்டுள்ள தெரிவானது வெளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருக்கு வழங்குகின்ற மாதிரியாகும். இந்த தெரிவினை பொறுத்தவரை தோட்டங்களுக்கு இடையே ஒருமித்த தன்மை காணப்பட வில்லை. சில கம்பனிகள் இந்த மாதிரியை பல்வேறு வடிவங்களில் நடைமுறைப் படுத்துவதாக தென்படுகின்றது. எவ்வாறாயினும் தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்பு செயற்பாட்டாளர்கள் இது குறித்து அதிக கரிசனங்களை வெளிப்படுத்தியுள்ளனர். தோட்ட முதலாளிமார் சங்கத்தினர் இந்த மாதிரியை சம்பள பிரச்சினையின் ஒரு மாற்றீடாக முன்வைத்துள்ளனர். இது குறித்து சம்பந்தப்பட்ட உரித்தாளர்களோ அதிகளவில் கலந்துரையாடல் செய்யப்பட்டு மக்களுக்கு ஏற்புடையதாகவும் சாத்தியமான மாதிரி குறித்து ஒருமித்த கருத்து உருவாக்கப்பட வேண்டும். ஏனைய தெரிவானது சிற்றுடமை யாளர்களை உருவாக்குவதாகும். குறிப்பிட்ட நிலத்தை குத்தகைக்கு விடுவதற்கு பதிலாக இந்த மாதிரி மூலமாக தொழிலாளர்களை நிலத்தை சொந்தமாகக் கொண்ட சிற்றுடைமையாளர்களாக மாற்றமுடியும். இறுதியில் அவர்கள் நிலத்திற்குச் சொந்தக்காரர்கள் ஆவார்கள். இந்த கருத்தானது 1980 களின் ஆரம்பத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. ஆனால், அரசியல் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் ஒரு உணர்வு பூர்வமான விடயம் என்பதால் இந்தக் கருத்தின் நடைமுறையாக்கம் பற்றி சிந்திக்கப்படவில்லை. 3ம் தர கல்வியைப் பொறுத்த வரையில் பல்கலைக் கழகத்திலும் தொழில் நுட்பக் கல்லூரியிலும் உள்நுழைவது அதிகரிக்கப்படவேண்டும். எண்ணிக்கை அடிப்படையில் பல்கலைக் கழக அனுமதியில் ஒரு அதிகரிப்பு காணப்பட்டாலும் அது 2 சதவீதத்திற்கு குறைவாகவே காணப்படுகின்றது. இந்த வீதமானது சனத்தொகை அடிப்படையில் 5 சதவீதமாக அமைய வேண்டும். தொழில்நுட்பக் கல்லூரிகளைப் பொறுத்தவரை இந்நிறுவனங்கள் மிகக் குறை வாகவே காணப்படுகின்றன. பல்கலைக்கழக கல்வியை போலல்லாது தொழில்நுட்பக் கல்வியை பெற்றுக்கொள்வது என்பது செலவுமிக்க ஒன்றாகும். போக்குவரத்து செலவிற்கு ஒரு மானியம் வழங்குதல் மூலமாக குறைந்த எண்ணிக்கையிலான நிறுவனங்களின் சேர்வினை அதிகரிப்பதற்கு உதவிசெய்யலாம். பெண்களை வலுப்படுத்தல் குறித்து அவர்களுக்கான தெளிவான அறிமுகப்படுத் தலும் மற்றும் அணிதிரட்டல் செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்த வேண்டும். அரசியல் கட்சிகள் தொழிற்சங்கங்கள் மற்றும் தோட்ட நிர்வாகங்கள் என்பவை உயர்பதவிகளை வழங்கவேண்டும். சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களில் விளிம்பு நிலையில் உள்ள தோட்டங்கள் மற்றும் தனியார் முதலாளிகளுக்குச் சொந்தமான சிறிய தோட்டங்கள் என்பவற்றுக்கு பொது சேவைகள் வழங்குதல் குறித்து ஆழ்ந்த கவனம் செலுத்தப்பட வேண்டும்.

♦ **முன்னோக்கிய வழி :**

குறுகிய காலத்தில் இந்த சமுதாயத்தை வலுப்படுத்துவதற்கு விசேட நடவடிக்கைகள் பல்கலைக்கழக அனுமதி மற்றும் பொதுச் சேவையில் வேலைவாய்ப்பு என்பவற்றில் எண்ணிக்கை அதிகரித்தல் அவசியமாகும். பல்கலைக் கழக அனுமதியில் சனத் தொகையில் 5 சதவீதமாக அதிகரிக்க நுவரெலியா மாவட்டத்தில் பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவுவது குறித்து கவனம் செலுத்தப் பட வேண்டும். உதாரணமாக ஒலுவில் பிரதேசத்தில் தென்கிழக்கு பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதியை சார்ந்தவர்கள் இப் பல்கலைக் கழகத்தில் அதிக அனுமதியை பெற்றார்கள். அதையொட்டியதாக கிழக்கு பல்கலைக் கழகத்தில் அந்த பிராந்திய மாணவர்களுக்கு அதிக வாய்ப்புக்கள் கிட்டின. அரச துறையில் உயர்தரத்திலான வேலைவாய்ப்புகளை அதிகரிப்பதற்கு விசேட நடவடிக்கைகள் கவனத்தில் மேற்கொள்ளப்படலாம். 1990களில் ஆரம்பத்தில் அன்றைய அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட இனத்துவ ஒதுக்கீட்டு அடிப்படையில் உயர்தர வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட்டமை காரணமாகவே மூவர் இலங்கை வெளிநாட்டு சேவையில் சேர்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டது. இலங்கை நிர்வாக சேவை போன்ற நாடுதழுவிய சேவைகளில் இந்த சமூகம் தீர்மானங்களை மேற்கொள்கின்ற உயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டத்தில் பங்கு பெறுவதற்கு இத்தகைய முறைமை பரிசீலிக்கப்படலாம்.

புதிய வீடுகள் நிர்மாணித்து அதற்கான உரிமை பத்திரத்தை வழங்குகின்ற முறைமையோடு இணைந்த ஒன்றாக புதிய கிராமங்களின் உருவாக்கத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். புதிய கிராமங்களின் அபிவிருத்தியை துரிதப்படுத்தும் முகமாக மலைநாட்டு பிராந்தியத்தில் புதிய கிராமங்களின் அபிவிருத்தி அதிகார சபை ஒன்று முன்மொழியப்பட்டு அமைச்சரவையின் அங்கீகாரத்தை எதிர்பார்த்து இருக்கின்றது. பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகள் அமைக்கப்படவிருக்கும் புதிய அதிகார சபையோடு இணைந்து செயற்பட்டு அதனை பயனுறுதி மிக்கதாக ஆக்குவதற்கு ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும்.

நீண்டகாலத்தில் வெளியாருக்கு வழங்குகின்ற முறைமையானது சாத்தியப்படக்கூடிய ஒன்றல்ல. அது சில கம்பனிகளிடம் இடைப்பட்ட காலத்தில் இருந்து சிற்றுடைமை யாளராக மாற்றம் பெறுவதற்குரிய மாறும் அமைப்பாகவே அமையமுடியும். கம்பனிகள் தற்போது வழங்குகின்ற குத்தகை நிலங்கள் சிற்றுடைமையாளராக மாற்றப்படவேண்டும். கம்பனிகள் மீள்வடிவமைக்கப்பட்டு அவை தேயிலையைப் பயிரிடுவதை கைவிட்டு தேயிலையைப்பதப்படுத்தலில் மாத்திரம் வரையறுக்கப்பட்டதாக மாற்றப்பட வேண்டும். இத்தகைய நடவடிக்கைகளும் நிகழ்ச்சித் திட்டங்களும் ஒருங்கிணைவு செயல்முறையை பலப்படுத்தி இந்த சமுதாயத்தை முழுமை யாக வலுப்படுததி இலங்கையினுடைய சமூக பொருளாதாரத்தின் முழுமையான வளர்ச்சிக்கு பங்களிப்பை வழங்கும்.

கற்றதனால் ஆய பயன்...

ஒரு மனிதன் உயிர் வாழ்வதற்கு உணவு. உடை, உறையுள் எப்படி முக்கியமோ அதே போன்று மனித வாழ்வின் அத்தியாவசிய தேவைகளுள் ஒன்று தான் கல்வி. கல்வியின்றி மனித இனமே உயிர்வாழ முடியாது. ஒருவன் தனது வாழ்வில் உச்சங்களைத் தொடவும் வெற்றிச் சிகரங்களை எட்டிப் பிடிக்கவும் ஏணிப்படிகளைத் தருவது கல்வி ஆகும்.

அது தனி மனித வாழ்வை ஒழுங்குபடுத்துகிறது. பொறுப்பு வாய்ந்த ஒரு பிரசையாகவும் சமூகத்தின் உயிர் துடிப்புள்ள ஒரு உறுப்பினராகவும் இருப்பதற்கு கல்வி உதவுகிறது. ஒருவன் தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என தெளிவாகவும் தர்க்க ரீதியாகவும் அறிந்துகொள்ள உதவுவது கல்வியாகும். நமது அறியாமையை நீக்கி அறிவைப் பெருக்க நமக்கு உதவியாக இருக்கின்ற கல்வியானது அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நால்வகைப் பயனையும் நமக்குத் தருகின்றது.

கல்வி சிறப்புடையது. கல்வி கற்றவனும் சிறப்புடையவர். மன்னவனுக்கு தனது தேசத்தில் மட்டுமே சிறப்பு உண்டு. ஆனால் கற்றவர்களுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு உண்டு. எனவே, ஒரு மன்னனை விடக் கற்றவர் சிறப்புடையவர். ஆகவே, எல்லாச் செல்வங்களையும் விட கல்விச் செல்வமே உயர்ந்தது. கற்றவர்களுக்கு கல்வியே அழகைக் கொடுக்கும். மாறாக அவர்கள் வேறு எதனாலும் தம்மை அலங்கரிக்க தேவையில்லை.

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே" என்றார் திருவள்ளுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய உலகை ஆளும் இணைய சாதனங்கள் - ஒரு பரந்த பார்வை-

கவிஞர். **எஸ். முரளீதரன்**

கல்விப் பணிப்பாளர் : சமாதானக் கல்விக்கும் நல்லிணக்கத்திற்குமான அலகு மற்றும் தமிழ் பாடசாலைகள் அபிவிருத்தி பிரிவு - கல்வி அமைச்சு

1. இணைய சாதனங்கள் என்றால் என்ன?

Internet of Things என்பதை இணைய சாதனங்கள் அல்லது இணைய பொருட்கள் என்று அழைக்கலாம். என்றாலும் IOT என சுருக்கமாக குறிக்கப்படும் இப்பதம் ஆனது நமது அன்றாட வாழ்வில் கணினிகள் என்று பொதுவாகக் கருதப்படாத பொருட்கள். ஆனால், வலையமைப்புத் தொடர்பு மற்றும் கணினியால் இயக்கப்படக்கூடிய ஆற்றல் கொண்ட பொருட்கள், உணர்வுகள் மற்றும் கணினி அல்லாத சாதனங்கள் என்பன மனிதத் தலையீடுகள் மிகக் குறைந்ததாக தரவுகளை உருவாக்கவும் பரிமாறவும் மற்றும் பயன்படுத்துவதாகவும் அமையும் சூழமைவே எனலாம். இதற்கென இன்னும் யாவராலும் ஏற்றுக்கொள்ளப்படும் தனித்த வரை விலக்கணம் இதுவரை முன்மொழியப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

1999ம் ஆண்டு விநியோக சங்கிலி (Supply Chain) முகாமைத்துவ பின்னணியில் Auto - ID Center ன் நிறைவேற்றுப் பணிப்பாளர் Kevin Ashton என்பவர் IOT எனும் பதத்தை உருவாக்கியவராக கருதப்படலாம். என்றாலும் அதே காலப்பகுதியில் IT Media Lab ல் இருந்த Neil Gershenteld இவ்வாறான விடயங்களை தனது நூலான When Things Start to Think (சாதனங்கள் சிந்திக்கத் தொடங்கினால்) என்பதில் இதுபற்றி பிரஸ்தாபித்துள்ளார்.

இணைய சாதனங்களானது இனங்காணல், உணருதல் மற்றும் அல்லது செயற்படத் தூண்டல் மற்றும் தொடர்பு கொள்ளல் ஆற்றல்களை தன்னகத்தே கொண்ட கருவிகளை பயனமர்த்துவதனூடாக இணையம் மற்றும் வலைத்தளத்தை பௌதிக உலகப் பொருட்களோடு தொடர்பை வகிக்கின்றது.

இந்தக் கருவிகள் அல்லது சாதனங்கள் Internet Protocol (IP) இணை அடிப்படை யாகக் கொண்ட தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பங்கள் வாயிலாக பிணைக்கப் படுவதோடு, அவை நம் அன்றாட வீட்டு உபகரணங்கள், வீதிகள் மற்றும் வாகனங்கள், பொது வசதிகள், தொழிற்சாலைகள், யுத்த களங்கள், சுற்றுச்சூழல் அது மட்டுமல்லாமல் நமது உடல் மீதும் கூட இணையத் தொடர்பை மேற்கொள்வதாக இருக்கும். அத்தகைய சாதனங்கள் பொதுவாக திறன் பொருட்கள் (Smart Objects) எனக் குறிப்பிடப்படுவதோடு அவற்றின் பிரயோகங்கள் திறன் சூழமைவுகளை (Smart Scenarios) சாத்தியமாக்குகின்றன.

இந்த திறன் பொருட்களின் ஆற்றல்களோடு தொடர்புபடக்கூடியதான மூன்று தூண்களால் இணைய சாதனங்கள் கட்டியெழுப்பப் பட்டுள்ளதாகச் சொல்லலாம். அவையாவன திறன் பொருட்களின் ஆற்றல்களான (1) இனங் காணத்தக்கவையாக (யாதேனு மொன்றை தானாக இனங்காணுதல்); (2) தொடர்புபடக் கூடியவையாக (யாதேனுமொன்று தொடர்பு கொள்ளல்); (3) இடைவினையுறுவதாக (யாதேனுமொன்று இடைவினையுறுதல்) என இருப்பதாகவும் இந்த ஆற்றல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்தனியாகவோ அல்லது ஒன்றிணைந்த தாகவோ ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட பொருட்களால் கட்டியெழுப்பப்படும் வலையமைப்புக்கள் அல்லது வலையமைப் பின் முடிவிட பயன்படுத்துனர் அல்லது அதன் ஏனைய வஸ்துக்களோடு உருவாக்குகின்றன.

இது ஒரு சிக்கலான எண்ணக்கருவாக அமைந்து பல்வேறு கட்டொழுங்குகளை குறுக்குவெட்டாக கொண்டுள்ளதோடு மற்றும் அது தொலைத்தொடர்பாடல் தொழிற்றுறை, பயன்பாட்டுக் கருவிகள் தயாரிப்பாளர்கள் Semantic web மற்றும் Informatics போன்ற பல சமூகங்களின் ஒன்றிணைந்த முயற்சிகளின் வெற்றியில் தங்கியுள்ளதாக இருக்கின்றது. இணைய சாதனங்களானது எங்கோ ஒரு மூலையில் அமர்ந்து வேலை நேரம் தவிர்ந்து பொழுதுபோக்குவோர் தொடக்கம் தொழில்நுட்ப ஜாம்பவான்கள் வரைக்குமானவர்களுக்கு புத்தாக்கம் புரிவதற்கான தளத்தை வழங்கக் கூடியதாக இருக்கின்றதெனலாம்.

சக்திமிக்க தரவு பகுப்பாய்வு ஆற்றல்க ளோடு இணைந்ததாக இணைய சாதனமாவது முற்றிலும் புதிய பரப்புகளில் பிரயோகங் களையும் சேவைகளையும் மேற்கொள்வதால் பாரிய அளவில் தொழில்நுட்ப, சமூக, பொருளாதார மற்றும் அரசியல் முக்கியத்துவ முனைப்புள்ளதாக கருதப்படுகின்றது. மக்களின் வேலை, வாழ்வு மற்றும் வகிபாகம் மேலும் அரசுகளின் கொள்கை ஆக்கங்கள் மற்றும் முடிவுகள் மேற்கொள்ளல் என்பவைகளில் நிலைமாற்றங்களை ஏற்படுத்துவதில் இணைய சாதனம் உறுதியாக உள்ளது. இணையத்திலும் பொருளாதாரத்திலும் இணையசாதன தாக்கங்கள் குறித்து எதிர்வு கூறல்கள் கவர்ச்சிகரமாக இருப்பதாகவும் 100 பில்லியன் அளவினர் இணைய சாதனங்கள் வழியாக இணைக்கப்படுவதால் 2025 ஆகும்போது உலகமய அளவில் பொருளாதார விளைவு 11 டிரிலியன் அமெரிக்க டொலராக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

2. இணைய சாதனங்களின் பிரயோகங்கள்:

நம்மைச் சூழ என்ன நடக்கின்றது என்பதை நாம் சரியாக அறிந்துகொள்ளுமாறான சுய விழிப்புணர்வு கொண்ட சூழலை உருவாக்கக்கூடியதாக இணைய சாதனங்கள் அமைகின்றன. தனிப்பட்ட சுகநலம் தொடக்கம் இல்லப் பாதுகாப்பு வரை, விவசாயத்திலிருந்து நகர போக்குவரத்து கட்டுப்பாடு வரை, பயன்பாடு அளவீடு தொடக்கம் சட்ட மேம்பாடு வரை, பொழுது போக்கு தொடக்கம் பொது பாதுகாப்பு வரை இணைய சாதனங்கள் பிரயோகங்கள் முன்வைக்கப்பட்டு அதிகளவில் ஆழமாக கலந்துரையாடப்பட வேண்டியிருக்கின்றது. இந்தப் பகுதியில் அவற்றில் முனைப்பான சிலவற்றை மாத்திரம் நோக்குவோம்.

வீட்டுக்கான செயற்களம் இணைய சாதனங்களை பிரத்தியேகமாக கையாளுகின்றது. போக்குவரத்து மற்றும் சமுதாய செயற்களங்கள் இணைய சாதனங்களை நிறுவன மட்டத்தில் பயன்படுத்துகின்றன. தேசியநிலை செயற்கள பிரயோக உபகரணங்கள், உட்கட்டமைப்பு, பாதுகாப்பு, பொதுவசதிகள் மற்றும் பொது சேவைகளை உள்ளடக்குகின்றன.

எந்தவொரு வகுப்பாக்கத்தை இணைய சாதன பிரயோகங்கள் தொடர்பில் எடுத்துக் கொண்டாலும் அங்கு குறிப்பிடத்தக்க மேற்பொருந்துகை பிரயோகங்களில் இருப்பதோடு தரவுகள் பயன்பாடு செயற்களங்களுக்கிடையில் காணப்படும். இணையமும் அகன்று பரவியுள்ள செல்லிட (Mobile) இணைப்பாக்கமும் தரவு பரிமாற்றத்தை மாறுபட்ட பிரயோகங்களுக் கிடையே பல்வேறு வியாபார - விவகார சந்தர்ப்பங்களை உருவாக்கக்கூடியதாக இருக்கின்றது. உதாரணமாக வீட்டு இணைய சாதனங்களை வீட்டுக்குள் மின்சார பாவனை தரவுகளை உருவாக்கி அதனை மின்சார வசதி வழங்கும் நிறுவனத்துக்கு கிடைக்கக் கூடியதாக அமைவதோடு அது தேசிய மட்ட பொதுவசதிகள் இணைய சாதன பிரயோகங்க ளோடு தொடர்புற்று வழங்கல் மற்றும் தேவை நிலவரத்தை இற்றைப்படுத்துகின்ற தாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.1 பிரத்தியேக மற்றும் வீட்டு இணைய சாதனங்கள்

குறித்த எண்ணிக்கையிலான சாத்தியமான இணைய சாதன பிரயோகங்கள் தொடர்பான எண்ணக்கருக்களும் அதன் பயனீடும் கீழே பட்டியலாக தரப்பட்டுள்ளது. குறித்த எண்ணிக்கையிலான மின்னியல் பொருள் உற்பத்தியாளர்களும் அதைப்போல அனைத்து செல்லிட சாதன தளங்களும் இத்தகைய பிரயோக வாய்ப்புக்களை செல்லிட தரவு தொடர்பாடல் தொழில்நுட்பங்களின் உதவியுடன் வழங்கக் கூடியனவாகவுள்ளன. என்றாலும் இவ்வகை சேவைகள் தொடர்பில் பொதுகளமும் தரங்களும் இன்னும் மேற்கிளம்ப வேண்டியுள்ளன.

- வீட்டு சுகநலன் பேணல், உடல் பரப்பு உணரிகளை பயன்படுத்தி உடற்றொழி யியல் கட்டளவுகளை துணிந்து அதனை ஸ்மார்ட் போன்கள் வாயிலாக சேகரித்து சுகாதார தகவல்களை இணைய சாதன முனைவிடத்தினூடாக எங்கெங்கும் காணப்படும் விதவிதமான சுகநலன் சேவைகளை வழங்கலாம்.
- இணைய சாதனங்கள் ஊடாக கண் காணித்து வீட்டிலுள்ள முதியவர்களின் நலம் பேணுவதோடு வீட்டுச் சூழலிலேயே வைத்து தேவை முன்கூட்டியே நடவடிக்கை மற்றும் சிகிச்சைகளை மேற்கொள்ளலாம்.
- வீட்டின் மின்சக்தியை சிறப்பாக முகாமைத்துவம் செய்வதற்கு வீட்டு மின் உபகரணங்களான மின்குமிழ்கள், வாயு சமநிலையாக்கி, மின்குளிரேற்றி போன்றவற்றைக் கட்டுப்படுத்தலாம்.
- பலவிதமான உணர்தரு பொறிமுறை களை இணைப்பதூடாக அழைப்பற்ற தலையீடுகளை கண்டுபிடிப்பதற்காக வீட்டுப் பாதுகாப்பு துறைசார்பாக இணைய சாதன பிரயோகம் வளர்ச்சியடைவதாக உள்ளது.

- தனியான சாதனமொன்று வீட்டில் இருந்தபடி தொடர்ந்தேர்ச்சியான 'பேஸ்புக்', 'டிவிட்டர்' போன்ற சமூக ஊடகங்களுக்கு அனுப்பியபடியிருக்கலாம். இது இணைய சாதனங்கள் காரணமாக சமூக வலை யமைப்பில ஒரு மைல்கல் மாறுதலாக அமைய முனைகின்றது.

2.2 நிறுவன இணைய சாதனங்கள்

நிறுவன இணைய சாதன பிரயோகங்கள் என்பதை பரந்துபட்ட ரீதியில் திறன் சூழலமைவுகள் (Smart Environments) என அழைக்கலாம். இது கட்டிடங்கள், உட்கட்டமைப்பு போக்குவரத்து, பொது வசதிகள் மற்றும் பொது சுற்றுச்சூழல் என்பவற்றை உள்ளடக்கி இருக்கலாம். உதாரணமாக மெல்போன் நகரத்தில் இனங்காணப்பட்ட சில பிரயோகங்கள் கீழே அட்டவணையில் (1) காட்டப்பட்டுள்ளன. இந்த பிரயோகங்கள் அதன் விளைவு பரப்புகளை அடிப்படையாகக் கொண்டு குழுமப்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன: :பிரசைகள் (சுகாதாரமும் நலனோம்பலும்), போக்குவரத்து (நகர்வு, உற்பத்தித்திறன், மாசடைதல்) மற்றும் முக்கியமான சமூக சேவைகள் நகரவாசிகளுக்கு உள்ளூராட்சி அரசாங்கத்தால் முகாமைத்துவம் செய்யப்பட்டு வழங்கப்படுகின்றன. இங்கும் கூட பிரயோகங்கள் பரஸ்பர நன்மைக்காக அவற்றிடையே தரவுகள் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன.

2. 3. பயன் நுகர்ச்சிக்கான இணையச் சாதனங்கள்

பயன் நுகர்ச்சிக்கான இணைய சாதன பிரயோகங்கள் சிறப்பான சேவை வழங்கலை இலக்காகக் கொண்டுள்ளது. உதாரணம்:- செலவும் லாபமும் சீராக அமைவதற்கான வள முகாமைத்துவ அணியினர் பிராந்திய அளவிலும் நாடளாவிய ரீதியிலும் இந்த பிரயோகங்கள் மிக விரிந்த வலையமைப்புக் களை நிறுவி பாரிய அமைப்பு நிறுவனங் களால் இயக்கப்படுவதை இலக்காகக் கொண்டுள்ளன. இந்த பயன் நுகர்ச்சி இணைய சாதன புலத்தில் மின்சார மற்றும் நீர் விநியோக முகாமைத்துவத்தில் ஈடுபடும் பிரயோகங்கள் உயர் முந்துரிமை பெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை (1) மெல்போன் நகரத்தினால் இனங்காணப்பட்ட பிரயோகங்கள்

பிரசைகள்	
சுகநலம்	சிகிச்சை முன்னுரிமை, நோயாளர் கண்காணிப்பு, ஆளணி கண்காணிப்பு, நோய் பரவல் மாதிரிகையும் கட்டுப்பாடும். நிகழ் நேர நிலவரமும் களத்திலுள்ள சிகிச்சையாளர்களுக்கு முன்கூட்டியே தகவல்களைப் பெற உதவுதலும் அல்லது தொற்று பரவும் கள நிலவரத்தில் கொள்கை தீர்மானம் எடுத்தலும்.
அவசரகால சேவைகள், பாதுகாப்பு	தொலைவு ஆளணி, கண்காணிப்பு (சுகாதாரம், இடம்), வள முகாமைத்துவமும் பகிர்வும், பொறுப்பாண்மை திட்டமிடல், கட்டிடங்களிலும் உட்கட்டமைப்புகளிலும் உணரிகளை பொருத்தி அவசரகால நிலைமைகளிலும் அனர்த்த காலத்திலும் முதலில் செயற்படுபவர்களுக்கு வழிகாட்டுதல்.
சனத்திரள் கட்டுப்பாடு	அவசரகால முகாமைத்துவத்தின்போது சனக்கூட்ட பாய்ச்சலை கண்காணித்தல், பொது மற்றும் சிறு சிறு வெளிகளை வினைத்திறனாக பயன்படுத்துதல், வர்த்தக வியாபார சூழல்களில் வேலைப்பாய்ச்சல்.
போக்குவரத்து	
போக்குவரத்து முகாமைத்துவம்	நிகழ் நேர போக்குவரத்து தகவல்கள் மற்றும் வீதிகளை உச்ச சிறப்பாக பயன்படுத்துவதனூடாக சாதுர்யமான போக்குவரத்து.
உட்கட்டமைப்பு கண்காணிப்பு	கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு ஆகியவற்றை கண்காணிக்க உணரிகளை உட்கட்டமைப்பில் பொருத்துதல், சம்பவ முகாமைத்துவம் அவசரகால தொடர்பான இணைப்பாக்கத்துக்கான விபத்துக் கண்காணிப்பு
சேவைகள்	
நீர்	நீர் தரம், கசிவு, பயன்பாடு, விநியோகம், விரைய முகாமை.
கட்டிட முகாமைத்துவம்	வெப்பநிலை, ஈரப்பதன் கட்டுப்பாடு, சக்திப்பாவனை முகாமைத்துவத்துக்காக செயற்பாட்டுக் கண்காணிப்பு- உஷ்ணமூட்டல், காற்றோட்டம் மற்றும் வாயு சமநிலையாக்கம். (AVAC)
சுற்றுச்சூழல்	வளி மாசடைதல், இரைச்சல், காண்காணிப்பு. நீர் வழிகள், தொழிற்றுறைக் கண்காணிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Smart Grid மற்றும் Smart metering என்பன சமகாலத்தில் உலகெங்கும் பரவலாகியுள்ள முக்கிய பயன் நுகர்ச்சி இணைய சாதன பிரயோகங்களாகும். இந்த பிரயோகங்களால் கிடைக்கும் பயனீடுகள் இரு படித்தானவை. முதலாவது, நுகர்வோரின் மின்சார பாவனை கோலத்தினை நவீனமயப்படுத்தி அவர்களின் சக்தி வினைத்திறனை அடைவதாகும். இரண்டாவது இதன்போது அவர்கள் மின்சாரத்தை வழங்கும் கம்பனிகளுக்கு அவைகள் grid க்குள் மின்சுமை சமநிலையைப் பேணி உயர்தரமான சேவை வழங்கலை உறுதிப்படுத்த உதவுகின்றார்கள்.

நீர் வலையமைப்பு கண்காணிப்பானது மற்றுமொரு பெறுமதியான இணைய சாதன சேவையாகும். முக்கிய இடங்களில் நீரின் தர சுட்டளவுகளை அளக்கும் உணரிகளை பொருத்துவதனூடாக குடிநீரின் தரவுறுதிப் பாட்டை நிச்சயித்துக்கொள்ளக் கூடியதாக உள்ளது. இது நீர் விநியோகங்களில் தொற்றுகள் ஏற்படுவதை தவிர்க்கவோ அல்லது முன்னெச்சரிக்கை வழங்கவோ உதவுவதாக இருக்கும். இதையொத்த தாகவே, விவசாயத் துறையொட்டியதான கண்காணிப்பு பிரயோகங்கள் முன்னோடி மட்டங்களில் வளர்ச்சியடைவனவாக இணையசாதன அமுலாக்க நடைமுறைகளில் காணப்படுகின்றன. இதனூடாக வழங்கப்படும் செயற்பாடுகளில் மண் ஈரப்பதன் கண்காணிப்பு, தன்னியக்க நீரூட்டமும் பசளை ஊட்டமும் என்பன சிலவாகும்.

3. இணைய சாதன சேவைகள்

இணைய சாதன சேவைகள் பிரயோகங் களுக்காக பெற்றுக்கொள்ளக் கூடியனவாக உள்ளன. அவ்வாறான சேவைகள் நான்கு வகுப்புகளாக வகைப்படுத்தப்பட்டு சுருக்கமாக கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

4. இணைய சாதனங்களின் சவால்கள் :

இணைய சாதனங்களின் ஆற்றல்கள், அனுகூலமான எதிர்வு கூறல்கள் மற்றும் கவர்ச்சிகரமான சூழலமைவுகள் குறித்து நோக்கினாலும், பல முக்கிய சவால்கள் அதன் முழுமையான ஆற்றல் பலாபலன் களை சாத்தியமாக்கிக் கொள்வதில் எதிர் கொள்ளப்பட வேண்டியுள்ளன.

சில முக்கிய சவால்கள் கீழே தரப்பட் டுள்ளன.

4.1 பாதுகாப்பும் தனியுரிமையும் :

மிக தீவிரமான இணையசாதன சவால்களாக பாதுகாப்பும் தனியுரிமையும் இனங்காணப்பட்டுள்ளன. உரிய முன்னெச்

சேவை வகுப்பு	விபரம்	உதாரணங்கள்
அடையாளம் தொடர்பான சேவைகள்	இவைகள் மிகவும் அடிப்படை (எளிய) வகையாகவும் ஏனைய வகை சேவைகளுக்கு பயன்படுத்துவனவாகவும் உள்ளவை	Real world objects எனும் நிகழ் உலக பொருட்களை பயன்படுத்த வேண்டிய ஒவ்வொரு பிரயோகங்களுக்கும் இந்த பொருட்களை இனங்காணுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவை வகுப்பு	விபரம்	உதாரணங்கள்
தகவல்களை ஒன்று சேர்க்கும் சேவைகள்	இவைகள் சுத்திகரிக்கப்படாத தரவுகளை (Raw data) சேகரித்து இணைய சாதன பிரயோகத்துக்காக நிரற்படுத்தி அறிக்கை இடுகின்றன.	■ ஸ்மார்ட் சுகநல சிகிச்சை தொகுதிகள் நோயளர்களினதும் அவர்களின் ஔடதங்களிலும் கண்காணிப்பு மற்றும் செயற்பாட்டாக்கிகள் பிணியாளர் கவனிப்பு, பணியாளர்கள், நோயாளரின் உடற்றொழிலியில் நிலைமைகள் தொடர்பான தரவுகளை சேகரித்து பகுத்து அவற்றை உரியவர்களுக்கு தேவையான செயல்பாட்டுக்காக முன்வைப்பார்கள்.
		■ வலுசக்தி வழங்குநரின் குறுக்கு சட்டங்களுக்கு (grids) லட்சக்கணக்கான மானிகளை (meters) இணைப்பதற்கு சில வலையமைப்புக்கள் இணைய சாதனத்தை பயன்படுத்துகின்றன. இந்த மானிகள் சக்தி நுகர்வை சேகரித்து பகுத்து கட்டுப்படுத்துவதோடு, தவறுகள் ஏற்படுவதைக் குறைத்து வினைத்திறனை மேம்படுத்துகின்றன.
இணைந்து செயற்படும் முன்னுணர்வு சேவைகள்	தகவல்களை ஒன்று சேர்க்கும் சேவைகளின் மேலாக இருந்து செயற்பட்டு பெற்றுக்கொண்ட தரவுகளை பயன்படுத்தி தீர்மானங்களை மேற்கொள்வதோடு அதற்கேற்ப வினையாற்றும்.	■ காலநிலை எதிர்வு கூறலுக்கு அமைய ஒரு திறன் வீடு (Smart house) தானியங்கி அடிப்படையில் யன்னல்களை மூடுதல். ■ திறன் கட்டிட தொகுதியானது அதன் சாதனங்களில் ஏதும் பழுதுகளை கண்டால் தானியங்கி அடிப்படையில் பராமரிப்பு தேவையை அறியத்தருதல். ■ தானாகவே ஓட்டிச் செல்லும் (Self drive) கார்கள் எதிர்கால ITS யின் உதாரணங்களாகும். ■ தொழிற்றுறை தானியங்கி அமைப்புக்கள் இயந்திரங்கள் பல ஒன்றிணைந்து உற்பத்தி செய்யும் பொருட்களை துரிதமாகவும் துல்லியமாகவும் தயாரித்தல். இணையசாதனமானது உற்பத்தி வரிசை செயற்பாடுகளை கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் பயன்படுத்தப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவை வகுப்பு	விபரம்	உதாரணங்கள்
பரவலான சேவைகள்	இவைகள் இணைந்து செயற்படும் முன்னுணர்வு சேவைகளை எவ்வேளையிலும் எங்கெங்கும் யாவர்க்கும் வழங்குவதை இலக்காக கொண்டுள்ளன.	இணையசாதன பிரயோகத்தின் இறுதி இலக்கு பரவலான சேவைகளை வழங்கும் மட்டத்தை அடைவதாகும். எவ்வாறெனினும் இன்னும் பல சவால்கள் எஞ்சியிருக்கின்றன. அவற்றுக்கு முகங்கொடுக்க வேண்டும். ■ ஒரு திறன் நகரம் (Smart city) ஒன்றில் பரவலான சேவைகளின் பிரயோகத்தைக் காணலாம். இது நகரில் வாழ்க்கை தரத்தை பல்வேறு வழிகளில் மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டுள்ளது. பல்வேறு அமைப்புக்கள் ஸ்மார்ட் தொழில்நுட்பங்களை பயன்படுத்துபவைகள் தேவையான சேவைகளை வழங்குவதற்காக ஒன்றோடு ஒன்று இணைக்கப்படுகின்றன. (சுகாதாரம், பொது வசதிகள், போக்குவரத்து, அரசாங்கம், கட்டிடங்கள் மற்றும் இல்லங்கள்).

சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளா விடின் எமது உபகரணங்கைள Hackers (கணினி தரவுகளை திரிபு செய்பவர்கள்) ஆதிக்கம் செய்ய பௌதிக web வழிவகுக்கும். இணைய சாதன பாவனைக்காக தற்போதுள்ள web குறித்து காணப்படும் மரபு சார்ந்த மற்றும் சிறப்பாக உருவாக்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் போதுமானதா இல்லையா அல்லது பொருத்தமானதா என்பது குறித்து தெளிவு இல்லை.

எதிர்பாராத விதமாக தகவல்கள் தொடர்பாடல் இடையீடு செய்யும்போது சமூகத்துக்கு அச்சுறுத்தல் ஏற்படும் நிலை ஏற்படும். உதாரணமாக இல்லத்தின் சக்தி நுகர்வு தொடர்பான தகவல் ஊடாக வீட்டில் வரும் யாரும் இல்லாத சந்தர்ப்பத்தை குறித்து தகவலை பெறக்கூடியதாக இருப்பதோடு அத்தகவலையொட்டி வீட்டிலுள்ள உபகரணங்களின் தேவையற்ற செயற்பாடுகளை நிறுத்தவதற்கு சந்தர்ப்பம் கிடைப்பதோடு திருடர்களுக்கு வீட்டுக்குள் நுழைவதற்கும் வாய்ப்பளிப்பதாக இருக்கும். எனவே, இணைய சாதனங்கள் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் தகவல்கள் அனுமதி பெறாதவர்களின் கவனத்தில் செல்வதை தடுப்பது கட்டாயமானதாகும். தனிநபர் ஒருவர் தானறியாமலே அவரிடம் இருக்கும் அல்லது அவரருகே இருக்கும் உபகரணங்கள் மூலம் தகவல்களை சேர்த்து அவரின் போக்குவரத்து மற்றும் செயற்பாடுகள் குறித்து அறிந்து கொள்வதற்கு வழிவகைகள் ஏற்படும்.

தெரிந்துகொண்டு பயன்படுத்துபவர்க்கு பயன்பாடாக இருக்கும் இணைய சாதனங் களின் பண்புகள் அத்தகைய முறைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளன என அறியாது பயன்படுத்துபவரின் அந்தரங்கம் குறித்து பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. அதே போல உரிய தகவல்களை சேகரித்துக்கொண்ட விதம் மற்றும் பயன்படுத்தும் விதம் குறித்து அவரால் எவ்வித செல்வாக்கும் செலுத்த முடியாத நிலை ஏற்படும்.

4.2 ஒழுங்காக்கமும் சட்ட ஏற்பாடும் :

சட்ட மற்றும் கண்காணிப்பு விடயங்களில் இணைய சாதனங்கள் தொடர்பில் பரந்த சவால்களும் பிரச்சினைகள் பலவும் உள்ளன. சிலவேளைகள் இதனூடாக புதிய சட்ட மற்றும் கண்காணிப்பு நிலவரங்களை உருவாக்குவதற்கும் இந்த உபகரணங்கள் உருவாக முன்னர் காணப்படாத மனித உரிமை பிரச்சினைகள் தோன்றக்கூடும். உதாரணமாக இணையசாதன உபகரணங்கள் மூலம் குறித்த ஒரு அதிகார எல்லை பிரதேசத்தில் சேர்க்கப்பட்ட தகவல்கள் சேமித்து வைத்தல் அல்லது நிரற்படுத்தல் வேறொரு அதிகார எல்லை பிரதேசத்தில் நடைபெற முடியும். இந்த கருவிகள் இணைய தளத்தை பாவித்து அதிகார எல்லை பிரதேசத்தூடாக தொடர்பாடலுக்கு உட்படும்போது எத்தகைய தொழிநுட்ப வழி தடையும் இன்றி நிகழும் தரவுகளுக்கிடையில் தனிப்பட்ட அல்லது பகிரப்பட்ட அல்லது தரவுகளில் உரிமம் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் அவை தனிப்பட்டதாக அல்லது சர்ச்சைக்குரியதாக இருப்பின் அவ்விடயம் தொடர்பில் மிகக் கவனமெடுத்தல் அவசியமாகும்.

எனவே, இந்த நூற்றாண்டு மனிதர்களாக அல்லது மாணவர்க்ளாக இருப்பவர்கள் இணைய சாதனங்கள் குறித்த தெளிவுடையோராக மட்டுமே இருந்தால் தான் வாழ்க்கையில் வெற்றிபெறுபவர்களாக இருப்பார்கள் எனக் கூறமுடியும்.

நல்வாழ்வுக்குரிய 10 நெறிகள்

1. காலையில் எழுந்தவுடன் கடவுளை நினைத்துப் பிரார்த்தனை செய்க!
2. எல்லோருக்கும் இனியவராக, நல்லவராக இருக்க முயலுக!
3. மனத்தாலும் பிறருக்கு தீங்கு நினையாதே!
4. பிறர் பசியைப் போக்க முடிந்தளவு உதவுக!
5. உணவு உண்ணுமுன் மற்றவர்க்கோ, பறவைகளுக்கோ பிறவற்றுக்கோ சிறிது உணவளித்து விட்டுச் சாப்பிடுக!
6. இறைவனுடைய திருப்பெயரை உச்சரித்தவாறே உறங்குக!
7. தீயவைகளை எண்ணாமலும், பேசாமலும், கேட்காமலும், பாராமலும், இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும்!
8. பெரியோர்களை வணங்கி, அவர் கூறும் அறிவுரைகளை கேட்க வேண்டும்!
9. அடுத்தவர்களை அன்பாக நேசிக்கவும்!
10. உறங்கு முன் அன்றாட நன்மை தீமைகளை எண்ணிப் பார்த்து, தீமைகளை குறைக்க முயற்சிக்க வேண்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்மொழியின் சிறப்புணர்ந்து பெருமிதம் கொள்வோம்

தமிழ்

த. மனோகரன்

உதவிச் செயலாளர் (தொழில் உறவுகள்)

தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு

உலகளாவிய ரீதியில் ஆண்டு தோறும் பல்வேறு விடயங்களை நினைவு கூருமுக மாகக் குறிப்பிட்ட தினங்கள் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளன. அவை தொடர்பில் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டு தினத்தின் நோக்கின் மேன்மை வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது. அந்த வகையில் ஆண்டு தோறும் பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி தாய்மொழித் தினம் நினைவு கூரப்படுகின்றது.

மனித குலத்தின் உயிர் மூச்சாக விளங்குவது மொழியே. மொழியின்றேல் ஏனைய உயிரினங்களுக்கும் மனித குலத் திற்கும் வேறுபாடு காணமுடியாது. அதனால் தான் மொழியின்றேல் மூச்சில்லை, பேச் சில்லை என்று கூறப்படுகின்றது.

மனிதனின் சிந்தனைக்கு மொழி அவசியம். சிந்திக்கும் ஆற்றலுக்கு மொழி எவ்வளவு அவசியமோ அதேபோல சிந்தித்துத் தன் கருத்தை மற்றையோருக்கு வெளிப்படுத்தவும் மொழியே வழி செய்கின்றது. மதங்களின் தத்துவங்களைப் புரிந்து கொள்வதற்கும் அறிவியல் சார் அனைத்தையும் அறிந்து புரிந்துகொள்வதற்கும் மொழியே துணை செய்கிறது. மொழியின்றேல் மதங்களின் தத்துவங்களை அறிந்துகொள்ள மார்க்கமு மில்லை. அதனால் மனித குலத்தின் நாகரீக வாழ்வுக்கு மொழியே அடிப்படையானது.

எனவே மொழியின்றேல் சிந்தனையு மில்லை, சமூகத் தொடர்புகளும் இல்லை. விலங்குகளை ஒத்த நிலையில் உண்டு, உறங்கி, இனப்பெருக்கம் செய்து வாழும் வாழ்வேயமையும்.

உலகளாவிய ரீதியில் மொழியின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதைப் பேண வேண்டிய கடப்பாட்டை வலியுறுத்தி உணர்த்தும் சிறப்புமிகு தினமாக இந்த தினத்தை நோக்க வேண்டும். நாகரீகமடைந்த சமூகத்தை அளவிடும் அளவுகோலாக அச்சமூகத்தின் சிந்தனையை வளப்படுத்திய. வளப்படுத்தி வரும் தாய்மொழி விளங்கு கின்றது. பெருமை சேர்க்கின்றது.

இந்நிலையே நாம் யார்? நமது சிறப்பு என்ன? என்பவற்றை எடைபோட நமது தாய்மொழியான தமிழ்மொழி வழிவகுத் துள்ளது. நமது இனத்தின் பெருமைக்கு சான்று பகர்கின்றது. ஆம் உலகமொழிகளிலே இன்று வழக்கிலுள்ள மொழிகளிலே மூத்த மொழியான தமிழ்மொழி நமது தாய்மொழியென்ற பெருமை நமக்குண்டு.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து முன் தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடி என்று வெறும் பெருமை பேசி பெருமையடைவதை விடுத்து யதார்த்த ரீதியில் நமது மொழியின் பெருமையென்ன? இருப்பென்ன? வளமென்ன? சிறப்பென்ன? என்பதைத் தெளிவாகக் கண்டறிந்து, உணர்ந்து வெளிப்படுத்த வேண்டும். அதுவே, நமக்கு நமது இனத்திற்கு, நமது தாய்மொழிக்கு பெருமை தரும்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவ தெங்கும் காணோம்" என்று பாரதியார் பாடினார் என்று கூறிக்கொண் டிருப்பதால் பயனில்லை. அந்த இனிமை, பெருமை பாரறியத் திறந்து விடவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்தோர் உணர வழிவகை செய்யப்படல் வேண்டும். நமது தாய்மொழியைப் பற்றி நாம் தெளிவாக உணர்ந்து புரிந்துகொண்டால் 'தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா" என்ற கூற்றை மெய்ப்பித்த பேற்றின் உரித்தாளிகளாவோம்.

திராவிட மொழிக் குடும்பத்தின் தாய்மொழி தமிழ் என்று தனது ஆய்வின் மூலம் வெளிப்படுத்தியவர் மேலைத் தேசத்தைச் சேர்ந்த மொழி ஆய்வாளர் கால்ட்வெல் பாதிரியார். அவரின் ஆய்வின்படி கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு ஆகிய மொழிகள் தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவை என்று வெளிப்படுத்தியுள்ளார். இந்திய நாட்டிலிருந்து மொழிகளை ஆய்வு செய்த அறிஞர் பெருமகன் நமது இலங்கைத் தீவில் வழக்கிலுள்ள சிங்கள மொழியை பற்றி ஆராயாமல் விட்டது துரதிஷ்டமே எனலாம்.

சிங்கள மொழி உள்வாங்கியுள்ள தமிழ்ச் சொற்கள் ஏராளம். அவற்றை முறைப்படி ஆய்வு செய்தால் சிங்கள மொழியின் மூலமொழி அதாவது தாய்மொழி தமிழ் என்ற முடிவுக்கு வர பலசான்றுகள் உள்ளன. ஆய்வு செய்யத்தான் எவரும் முன்வருவதில்லை. அரசும் செய்யாது. அறிஞர்களும் செய்யமாட்டார்கள்.

எது எவ்வாறாயிருப்பினும் நமது தாய்மொழி தமிழ் என்று பெருமைப்படப் பல்வேறு ஆதாரங்கள் நமக்குண்டு. உலகின் பழம்பெரும் மூத்த மொழிகள் ஆறில் தமிழ்மொழியும் ஒன்று. அவற்றில் சமஸ்கிருதம், இலத்தீன் போன்ற மொழிகள் வழக்கிழந்த நிலையில், தளர்வின்றி நிலைபெற்று நிற்கும் மொழியாகத் தமிழ்மொழி விளங்குகின்றது.

மொழியியல் ஆய்வாளரும் பேராசிரியரு மான அலெக்ஸ் கொலிர் (Alex Coller) உலகில் மூத்த மொழி தமிழ் என்பதைத் தனது ஆய்வின் மூலம் கண்டறிந்து வெளிப்படுத்தியுள்ளார். 1995 ஆம் ஆண்டில் அமெரிக்கப் பல்கலைக்கழக மொழியியல் பற்றிய ஆய்வின்போது மாணவ, மாணவியர் மத்தியிலே தனது இந்த ஆய்வின் முடிவைப் பகிரங்கப்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மொழி ஆய்வாளர்களின் கணிப்பின்படி வழக்கிலுள்ள உலக மொழிகளில் அதிக சொற்களைக் கொண்ட மொழியாக முதலிடம் வகிப்பது தமிழ்மொழியாகும். நம் தமிழ்மொழி சர்வதேச மொழியெனப்படும் ஆங்கிலத்தைச் சொற்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இரண்டாமிடத்தில் நிறுத்தியுள்ளது என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இன்று உலக நாடுகள் அறுபத்தி நான்கில் பேசப்படும் மொழியாகக் கணிக்கப்பட்டுள்ள தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் உலகின் ஐந்து கண்டங் களிலும் வாழ்கின்றனர்.

தெற்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகளில் மூன்றுக்கு மேற்பட்ட நாடுகளில் பயன்பாட்டி லுள்ள மொழி என்ற பெருமை தமிழ்மொழிக் குண்டு. இலங்கை, இந்தியா, மியன்மார், தாய்லாந்து, மலேசியா, சிங்கப்பூர், ஹொங்ஹொங், கம்போடியா, இந்தோனேசியா என்று நாடுகள் விரிவடைகின்றன. அதற் கப்பால் பிஜி, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா என்ற கிழக்குப் பக்கமாக நீளும் அதேவேளை மேற்கே மொறிசியஸ், தென்னாபிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகள், பிரான்ஸ், இங்கிலாந்து, ஜேர்மனி, டென்மார்க், சுவீடன், நோர்வே, சுவிட்சர்லாந்து, ஒல்லாந்து, இத்தாலி, கனடா, ஐக்கிய அமெரிக்கா, பிரிட்டிஷ், கயானா என்று உலகளாவிய ரீதியில் தமிழ்மொழியைத் தாய்மொழியாக் கொண்டவர்கள் வாழும் நாடுகளின் பட்டியல் பரந்து விரிகின்றது.

பிரித்தானியரின் ஆட்சிக்குப் பின்பே இலங்கையின் வெளிநாட்டுத் தொடர்பு மொழியாக ஆங்கிலம் வழக்கில் வந்தது. அதற்கு முற்பட்ட காலத்தில் இலங்கையின் வெளிநாட்டுத் தொடர்பு மொழியாகத் தமிழ்மொழியே இருந்துள்ளது. அதற்கான ஆதாரமுமுள்ளது. சிங்கள மொழி கருக்கட்டாத காலத்திலே அதாவது 2500 ஆண்டுகளுக்கு முன் தமிழ் வழங்கிய பாண்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டிலிருந்து தமிழ் பெண்களை வரவழைத்து விஜயனும் அவனது தோழர்களும் மணம் செய்து கொண்டதாகக் கூறப்படுகின்றது.

தமிழ் வழக்கிலிருந்த பாண்டிய நாட்டி லிருந்து இளவரசியையும், பெண்களையும் அழைத்துவரத் தூதனுப்பிய மொழி எதுவா யிருக்கும்? அலசி ஆராயும்போது அந்நாளில் அதாவது ஆங்கிலேயர் இந்நாட்டின் ஆட்சியி லமரும் வரை இலங்கையின் வெளிநாட்டுத் தொடர்பு மொழி தமிழ்மொழியாகவேயிருந்தது என்பதை ஐயமின்றி செப்பிட முடியும்.

தமிழ்மொழிக்குரிய மற்றுமொரு பெருமை உலகிலேயுள்ள மொழிகளில் மதச்சார்பற்ற மொழியென்பதுமாகும். உலகிலுள்ள முக்கிய சகல சமயங்களது தத்துவங்கயையும் உள் வாங்கி இலக்கியமாக வெளிப்படுத்தியுள்ள ஒரே மொழி நமது தாய்மொழியான தமிழ்மொழியே. இந்து, பௌத்தம், சமணம், இஸ்லாம், கத்தோலிக்கம், கிறிஸ்தவம் என்று சகல தத்துவங்களும் தமிழ்மொழியால் உள்வாங்கப்பட்டு இலக்கியங்களாக வெளிப் படுத்தப்படுகின்றது. இந்தச் சிறப்பு உலகின் வேறெந்த மொழிக்குமில்லை எனலாம்.

சமயம் சாரா அறக்கருத்துக்கள் நிரம்பிய பெட்டகமாகவும் தமிழ்மொழி பெருமை பெறுகின்றது. உலகம் போற்றும் திருக்குறள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நன்னெறி என்று பட்டியல் நீளுகின்றது. அறமொழி, அறிவியல் மொழி, பக்தி மொழி, செம்மொழி, செந்தமிழ் மொழி, முத்தமிழ் மொழி என்று எத்தனையோ அடைமொழிகளால் அழைக்கப்படும் நமது தாய்மொழியை அதன் பண்டைய இருப்பை, வரலாற்றை, பெருமையை, வளத்தை, சிறப்பை உலகளாவிய ரீதியில் நினைவிற் கொள்ளப்படும் தாய்மொழித் தினத்திலே நாமும் நமது தமிழ் மொழியை நினைவிற் கொண்டு உவகையும் பெருமையுறவேண்டும்.

உலகிலேயுள்ள நூற்றுக்கணக்கான மொழிகள் பட்டியலிலே, தாய்மொழியில் உரிமையாளர் பட்டியலிலே தமிழர்கள் பதின்நான்காம் இடத்தில் தரப்படுத்தப் பட்டுள்ளமையும் பெருமிதத்திற்குரியது. நமது சிந்தனைக்கு, உரைக்கு, செவிமடுத்தலுக்கு, எழுத்துக்கு, பார்வைக்கு உரித்தான நமது தாய்மொழியான தமிழைப் போற்றுவது நமது கடமை. அத்துடன் நமது அன்றாடக் கடமைகளுக்கு உரித்துடைய மொழியாகத் தமிழ்மொழியைப் பயன்படுத்தி அதனை வளப்படுத்தி, வலுவூட்ட வேண்டிய பொறுப்பும் நமக்குண்டு. தமிழ் வாழ்ந்தால் தமிழர் நம் தலை நிமிரும். தமிழ் மொழியின் பெருமை, வளம், பழைமை, சிறப்பு அனைத்துமே தமிழர்களாகிய நம்மை பெருமிதப்படுத்தும், அழகுபடுத்தும் அணிகலன்களாகும். தமிழ் வாழ நாம் வாழ்வோம், சீர்பெறுவோம், சிறப்படைவோம்.

அன்னை

உலகத்தவர் வகிக்கும் அந்தஸ்துகளுள் தாய் ஒருத்தியின் அந்தஸ்தே தலை சிறந்தது. சுயநலப் பற்றற்ற நிலையில் தாய் ஒருத்தி இருக்கின்றாள். சுய நலத்தை நீக்க வேண்டும் என்ற கோட்பாட்டைத் தாய் ஒருத்தியிடமிருந்தே மற்றவர்கள் கற்றுக்கொள்ள முடியும். கடவுளின் அன்பிற்கு அடுத்த படியில் இருக்கிறது தாயின் அன்பு. ஆதலால் தாயின் அன்புமூலமே கடவுள் அன்பை நாம் ஓரளவு அறிந்து கொள்ளமுடியும். ஏனைய அன்புகளெல்லாம் தாயின் அன்பிற்கு நிகராகாது.

– சித்ருபானந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியக் குழந்தைகள்

குறிஞ்சி கவிமழை புசல்லாவை இஸ்மாலிஹா

பச்சைத் தோட்டத்தில்
பட்டுத் தெறிக்கின்ற
உச்சந் தலையதில்
உரசித் தகிக்கின்ற

நதிகளில் மலைகளில்
நகர்ந்து திரிகின்ற
மதிக்கு ஒளி தந்து
மனிதர் வியக்கின்ற

எங்கள் சூரியனும்
எழுந்து விட்டான்
தங்க விடியலைத்
தந்து விட்டான்

சமையல் அறையதின்
சன்னல் திறந்து
சுமையின்றி காற்றை
சுகமாய் முகர்ந்து

அழகிய மின் அடுப்பில்
அரிசி உலை வைத்து
வழக்கமாய்ப் பட்ட
துன்பம் தொலைத்து

இயந்திர பொறி தட்டி
அரைத்து பால் எடுத்து
பயன் தரும் நீரை
பக்குவமாய்க் காய்ச்சி

சலவை இயந்திரத்தில்
சுலபமாய் துணி துவைத்து
உலவும் காற்றிற்கொரு
மின் விசிறி அமைத்து

குளிரூட்டும் சாதனத்தில்
காய்கறிகள் பழங்கள்
களிப்பாக பருகிடவே
கனிகளதன் சாறு

குளியலறை வீட்டிற்குள்
குளித்து உடை உடுத்தி
பளிச்சிடும் தோற்றத்தில்
பார்வதியும் நிற்பாள்

முச்சக்கர வண்டி ஒன்று
முற்றத்தில் நிற்க
அச்சமின்றி பயணிப்பாள்
அவளது தேவைக்காய்

பல்கலைக் கழகத்தில்
படிக்கிறார் பிள்ளைகளும்
நல்ல கல்வி அவர் பெறவே
நாளும் உழைத்திட்டாள்.

சிக்கனமாய் வாழ்ந்:து
சீர் பலதை பெற்றுள்ளாள்
எக்கணமும் உறுதியுடன்
இரவாமல் வாழ்கின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசி மகள் கமலி
கருப்பு அழகிதான்
சடை நீண்டு தொங்கிடவே
சித்திரம் போல் இருப்பாள்

ஆசிரியை தொழிலுக்காய்
அவளும் விண்ணப்பித்து
வாசிப்பில் பொழுது தனை
வகையாகக் கழித்திடுவாள்

ஊர் வம்பும் பேசாது
எங்கும் சுற்றித் திரியாது
சார்ந்திருப்பாள் நல்லோரை
சரியான தாய் வளர்ப்பால்

கணவன் கதிர்வேலு
கடையில் வேலை செய்து
பணத்தை பார்வதிக்கு
பக்குவமாய் கொடுத்திடுவான்

மாடு ஆடுடனே
மரஞ்செடி பல வளர்த்து
வீடு ஒன்றை கட்டியங்கு
விருந்தோம்பல் செய்திடுவான்

மின்சார விளக்கொளியில்
மின்னும் வீடெல்லாம்
பண்பாடும் வானொலியும்
பார்க்கலாம் கணினியையும்

பாரிய மலையேறி
பச்சைத்தளிர் கிள்ளி
காரிருள் சூழ்ந்திடவே
கருகி நின்ற காலம் மாறி

சூரியக் குழந்தைகளாய்
சுந்தரத் தமிழ் பேசி
பாரிய மாற்றமதை
பாரினில் காண்போம் இனி.

எழுதுங்கள்...

எழுத்தாளர்களிடமிருந்தும் வாசகர்களிடமிருந்தும் கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், விகடத் துணுக்குகள், குறு நாவல்கள், வரலாற்றுத் தகவல்கள், மருத்துவம், ஆன்மீகம் எதிர்பார்க்கப்படுகின்றன. தழுவல்களாகவோ முன்னர் பிரசுரமானவையாகவோ இருப்பின் பிரசுரிக்கப்படமாட்டாது. தாளின் ஒரே பக்கத்தில் எழுதுவதோடு ஆக்கங்களின் பிரதிகளை கைவசம் வைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மாதர் அரங்கு, மாணவர் அரங்குப் பகுதிகளை "அகிலம்" ஆரம்பித்து இருக்கின்றது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். குறுக்கொழுத்துப் போட்டிக் கேள்விப் பதில்கள் அனைத்தும் அடுத்துவரும் இதழ்களில் இடம்பெறும்.

நீங்களும் ஒரு சந்தாதாரராகி "அகிலம்" வளர்ச்சிக்கு உறுதுணையாக இருங்கள்!

– சந்தா விபரம் –

(மாத இதழாக வெளிவரும் போது)

தனிப்பிரதி – ரூ. 100.00
ஆண்டுச்சந்தா – ரூ. 1,000.00
(தபால் செலவு உட்பட)

அனுப்ப வேண்டிய முகவரி :
கலாபூஷணம்
கே. வி. இராமசாமி ஜே.பி
ஆசிரியர் "அகிலம்"
10 1/1, Thimbirigashyaya Place,
Colombo - 05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகம்மது சமீம்

ஒரு முற்போக்கு இலக்கிய முன்னோடி

லெனின் மதிவானம்

பிரதி ஆணையாளர் : கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

முகம்மது சமீம் (1932 - 2013) இலங்கை முற்போக்கு எழுத்தாளர்களுள் முக்கியமான கணிப்புக்குரிய ஒருவர். அவர் விமர்சகர், கல்வியியலாளர், செயற்பாட்டாளர் எனப் பன்முக ஆளுமைகளைக் கொண்டவர். சமீம் முற்போக்கு இலக்கியத்தின் தலைமகன்களாக விளங்கிய பேராசிரியர்கள் க. கைலாசபதி, கா. சிவத்தம்பி ஆகியோருடன் இணைந்து முற்போக்கு அணியில் இயங்கியவர். இலங்கை முற்போக்கு இலக்கிய வரலாற்றிலே விரல்விட்டு எண்ணக்கூடிய புருஷர்களிலொருவரான சமீம் மறைந்து இரு வருட நிறைவை எதிர்நோக்கியிருக்கின்ற இவ்வேளையில் அவர் பற்றிய அறிமுகங்கள், விமர்சனங்கள், மதிப்பீடுகள், நினைவுக் குறிப்புகள் அவசியமானவையாகின்றன. இவ்வாறானதோர் சூழலில் முற்போக்குக் கலை இலக்கிய மன்றத்தினர் பற்றி வெளியிட்ட 'முற்போக்கு இலக்கியவாதி முகம்மது சமீம்' என்ற நூல் சமீம் பற்றிய தேடலுக்கான பல தகவல்களைத் தருகின்றது. நுணுக்க விவரங்களின் முக்கியத்துவத்தை இந்நூல் வெளிப்படுத்தியிருக்கின்றது. இந்நிலையில் சமீம் பொறுத்து இனி வெளிவருகின்ற எழுத்துக்கள் முற்கூறிய ஆதாரங்களையும் வாய்ப்பு நலன்களையும் ஆதாரமாகக்கொண்டு அவர் பற்றிய பன்முக ஆய்வொன்று வெளிக்கொணர முயல்வதே அறிவுக்குகந்த நடவடிக்கையாகும். அதற்கான அறிமுகத்தை வழங்க முயல்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

சமீம் பதுளையில் ஒரு மத்தியதர வர்க்க பின்னணியில் தோன்றியவர். இவர்களின் மூதாதையர்கள் தென்னிந்தியாவில் கீழக்கரை என்ற பிரதேசத்திலிருந்து வந்தவர்கள். இவரது தந்தை பெயர் ஜனாப் அகமதுபிள்ளை. இவர் புகையிரத பாதைகளில் வேலை செய்த ஆங்கிலேயரிடம் பொறியியல் தொழில் கற்று ஒப்பந்த வேலைகள் (Contracts) செய்தவர். பதுளையில் அமைந்திருக்கும் பெரும்பாலான முக்கியத்துவம் வாய்ந்த கட்டிடங்கள் இவரது கை வண்ணத்தினால் செய்யப்பட்டவை என தமது தந்தை குறித்து சமீம் நினைவுகூருவார். இவரது தாய் மட்டக்களப்பைச் சேர்ந்தவர் என்பதையும் அறிய முடிகின்றது. அவர் பெயர் ஜனாபா நாச்சியார் உம்மா. அவரும் பதுளையில் புடவை வர்த்தகத் தொழிலில் ஈடுபட்டிருந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவ ராகவே இருந்து வந்துள்ளார்.

இவர் தனது ஆரம்ப கல்வியை பதுளை சரஸ்வதி வித்தியாசாலையிலே (இப்போது இப்பாடசாலை சரஸ்வ்தி தேசிய மத்திய கல்லூரி என்று அழைக்கப்படுகின்றது) பெற்றார். அதன் பின் தமது இடைநிலைக் கல்வியை பதுளை தர்மதூதக் கல்லூரியில் பெற்றார். 1950 ம் ஆண்டு நடைபெற்ற எஸ். எஸ். சி. பரீட்சையில் விசேட சித்தியடைந்து லண்டன் சர்வ கலாசாலைக்கு சேர்வதற்கு தகுதி பெற்றார். பின் புலமைப் பரிசில் பெற்று கொழும்பு சாகிராக் கல்லூரியில் கற்றார். பின் பேராதனை பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத் துறையில் சிறப்புப் பட்டம் பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பின் அவர் சாகிராக் கல்லூரியில் ஆசிரியராக சேர்ந்து பின்னர் அக் கல்லூரியின் அதிபராக பதவி உயர்வுபெற்றார். அடுத்து வந்த காலங்களில் அவர் கல்வி அதிகாரியாகவும், பிரதான கல்வி அதிகாரியாகவும், முதலாந்தர கல்விப்பணிப்பாளராகவும் வெவ்வேறு பிரதேசங்களில் கடமையாற்றி யுள்ளார். தமது ஓய்வுக்கு உரிய காலத்திற்கு முன்னரே ஓய்வுபெற்ற அவர் சவுதி அரேபியாவில் தனியார் பாடசாலையொன்றில் பணிப்பாளராக கடமையாற்றியிருக்கின்றார். நாடு திரும்பிய பின்னரும் தமது அனுபவங்களைப் பாடமாகக் கொண்டு தனியார் பாடசாலையொன்றினை உருவாக்கி செயற்பட்டுள்ளார். இவர் கல்வித் துறையில் பணியாற்றிய காலங்களில் அவரால் ஆற்றப் பட்ட முக்கிய பங்களிப்புகள், செயற்பாடுகள் பற்றிக் குறித்துக்காட்ட வேண்டியதும் அவசியமானதாகும்.

சாகிராக் கல்லூரியில் ஆசிரியராக, உப அதிபராக, அதிபராக கடமையாற்றிய காலங்களில் பல முற்போக்கு இலக்கிய நண்பர்களுடன் தொடர்பு கொண்டிருந்த அவர் அக்கருத்துக்களை மாணவர் மத்தியில் முன்னெடுத்துச் செல்வதிலும் முக்கிய கரிசனை காட்டியிருந்தார் என்பதை பலர் பதிவாக்கியுள்ளனர். அத்துடன் அக்கல்லூரியின் கல்வி வளர்ச்சிக்கும் முக்கிய பங்காற்றி யிருக்கின்றார். இவ்வாறான சந்தர்ப்பத்தில் குறிப்பாக 1961 ம் ஆண்டு அவர் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு உள்வாங்கப்பட்டதுடன் பின் பல நண்பர்களின் ஆலோசனைக் கிணங்கவும், குறிப்பாக மூதூரில் முதல்வராகவும் தகவல் ஒலிபரப்பு பிரதி அமைச்சருமான அப்துல் மஜீத் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க மூதூர் பகுதிக்கு சேவையாற்ற அழைக்கப்பட்டிருக்கின்றார் என்பதை அறிய முடிகின்றது. கல்வி, கலை, கலாசார ரீதியாக மிகவும் பின்னடைந்திருந்த இப் பிரதேசத்தில் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுத்திருக்கின்றார். இக்காலச் சூழலில்தான் பல புதிய பாடசாலைகள் தோற்றம் பெற்றன. கட்டிட அபிவிருத்திகள், பௌதிக வளங்கள் என்பன அதிகரிக்கப்பட்டன. அத்துடன் 'முற்போக்கு வாலிபர் மன்றம்' என்றொரு அமைப்பை உருவாக்கி கிண்ணியா, மூதூர், தோப்பூர் போன்ற பிரதேசங்களில் கலை இலக்கியம் சார்ந்த வளர்ச்சி ஏற்படக் காரணமாக அமைந்தார் என மஹ்ரூப் கரீம் (முற்போக்கு இலக்கிய முன்னோடி முகமது சமீம் 2009, இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம். ப. 34) பதிவாக்கியிருக்கின்றார். சமீம் 1969 ஆம் ஆண்டு பிரதம கல்வி அதிகாரியாக கிழக்கு மாகாணத்திற்கு தெரிவு செய்யப்பட்டார். இவர் இங்கு கடமையாற்றிய காலங்களில் (1970 - 1974) பல பாடசாலை களை தரமுயர்த்தவும் செயற்பட்டிருக்கின்றார். காத்தான்குடி அல்ஹிரா ம. வி., காங்கேயனோடை ம. வி., மகிழடித்தீவு கிரான் ம. வி. முதலிய பாடசாலைகளைக் குறிப்பிடுவர். கிழக்கு மாகாணத்தில் சாதி முரண்பாடுகள் பிரதான முரண்பாடுகளாக இல்லாவிடினும் அதன் தாக்கங்களையும் ஒடுக்குமுறைகளையும் அங்கும் காணக் கூடியதாகவே இருந்து வந்துள்ளது. இந்நிலையில் தாழ்த்தப்பட்ட மக்கள் தொடர்பில் அவர் மேற்கொண்ட கல்விசார் செயற்பாடுகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவைகளாகும். பேராசிரியர் சி. மௌனகுருவின் ஆலோசனையுடன் குருமண்வெளி, பங்குடாவெளி, சந்திவெளி, படுவான்கரை பிரதேசங்களிலும் ஏனைய பிரதேசங்களிலும் பல புதிய பாடசாலைகள் தோன்றுவதற்கு துணையாக நின்றுள்ளார் என்பதை மஹ்ரூப் கரீம் மேலும் நினைவுகூறுவார். அவ்வாறே காலிப் பிரதேசத்திற்கும் (1975) சென்று சேவையாற்றியிருக்கின்றார். மிக குறுகிய காலத்தில் அப்பிரதேசம் சார்ந்த பெரும்பான்மையான சிங்கள மக்களின் கல்வி வளர்ச்சியிலும் சிறுபான்மையினரான தமிழ் முஸ்லிம் மக்களினதும் கல்வி வளர்ச்சிக்காகவும் செயற்பட்டுள்ளதை ஏ. இக்பால் போன்ற இலக்கிய நண்பர்கள் நினைவுகூறுவர். கிழக்கு மாகாணத்தில் அவர் ஆற்றிய பணிகளுடன் ஒப்பிடுகின்ற போது காலிப்பகுதியில் அவர் ஆற்றிய பங்களிப்பு குறைவாகவே காணப்படுகின்றது என்றே கூற வேண்டும். அன்றைய அரசியல் சூழ்நிலை அதற்கு காரணமாக அமைந்திருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1978 ஆம் ஆண்டளவில் அகில இலங்கை கல்விப் பணிப்பாளராக பதவியுயர்த்தப்பட்ட பின்னர் கல்வி அமைச்சில் முஸ்லிம் பிரிவை உருவாக்க முயன்றுள்ளார். அவ்வாறு உருவாக்கப்பட்ட முஸ்லிம் பிரிவிலும் முதலாவது பணிப்பாளர் நாயகமாக பொறுப்பேற்று செயற்பட்டிருக்கின்றார். அவரது முயற்சியால் இலங்கையில் 539 ஆக இருந்த முஸ்லிம் பாடசாலைகள் 759 ஆக அதிகரித்தது என்பதை அறிய முடிகின்றது (மே. கு. நூ. ப. 36). 1989 இல் சவூதி அரேபியாவிற்கு சென்றபோது இன்டர்நெஷனல் இஸ்லாமிக் அக்டமியில் (International Islamic Academy) பணிப்பாளராக கடமையாற்றி 1990இல் இலங்கைக்கு திரும்புகின்றார். பின் ஹரோ இன்டர்நெஷனல் ஆங்கிலக் கல்லூரியை ஆரம்பித்து தான் இறக்கும்வரை செயற்பட்டு வந்தார். கல்வித் துறையில் செயற்படுகின்ற காலத்தில் தாம் மேற்கொண்ட தொழிலை ஏதோ ஊதியம் பெறும் ஒரு விடயமாக மட்டும் கருதாமல் மிக நிதானத்துடனும் பொறுப்புணர்வுடனும் செயற்பட்டு வந்துள்ளதையும்தனது கடினமான உழைப்பின் ஊடாகவே பல பதவி உயர்வுகளையும பெற்றிருக்கின்றார் என்பதையும் அறிய முடிகின்றது. அதே சமயம், தான் பல பிரதேசங்களில் பணிபுரிந்த காலங்களில் அப்பிரதேசத்தில் நடைபெறும் பண்பாட்டு இலக்கியக் கூட்டங்களில் ஆர்வத்துடன் பங்கு பற்றி தமது பங்களிப்பை வழங்கியுள்ளார் என்பதை அவருடன் பழகிய இலக்கிய நண்பர்கள் இன்றும் நினைவுகூருவர்.

வரலாற்றுத் துறையில் புலமைத்துவம் பெற்றிருந்த சமீம் இலக்கிய பண்பாட்டுத் துறையிலே அதிகம் ஆர்வம் காட்டி வந்தார். தர்மதூதக் கல்லூரியில் "தர்மதூதன்" என்ற சஞ்சிகைக்கு ஆசிரியராக இருந்ததுடன் முகுந்தன் என்ற பெயரில் பல சிறுகதை களையும் எழுதியுள்ளதாக அறிய முடிகிறது. இவையெல்லாம் இளமைக்காலத்து இலக்கிய முயற்சிகளாகவே காணப்படுகின்றன என சமீம் அவர்களே கூறக் கேட்டிருக்கின்றேன். காலப்போக்கில் பேராசிரியர்கள் க. கைலாசபதி, கா. சிவத்தம்பி, கவிஞர் சில்லையூர் செல்வராசன், திரு. இர. சிவலிங்கம், திரு. என். கே. ரகுநாதன், திரு. செ. கணேசலிங்கன், திரு. நீரவை பொன்னையன், திரு. எஸ். எம். கார்மேகம், கவிஞர் எம். ஸீ. எம். சுபைர், மருதூர்க்கனி, ஹனிபா, திரு. காவலூர் இராசதுரை, ஜனாப் எச். எம். பி. முகைதீன், கவிஞர் புரட்சிக் கமால், ஸாலீஹ், பிரேம்ஜி, அ. ஸ. அப்துஸ்ஸமது, இளங்கீரன் சுபைர். டொமினிக் ஜீவா, பதுளை "அகிலம்" கே.வி.இராமசாமி, அண்ணல் சாலி, கவிஞர் ஏ. இக்பால் இன்னும் இது போன்ற நண்பர்களுடன் ஏற்பட்ட தொடர்புகளும் அவர்களுடன் இணைந்து கருத்தாடல்களும் அவரது கருத்துக்களை செழுமைப்படுத்த உதவியிருக்கின்றன. இத்தகைய சூழலே இவரை இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை (இ.மு.எ.ச.) நோக்கி ஆக்கிரமித்திருந்தது.

இ.மு.எ.ச. இலங்கையின் இலக்கிய வளர்ச்சியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி யிருக்கின்றது. தேசிய இலக்கியம், மண் வாசனை இலக்கியம் என்பனவற்றுக்கான போராட்டத்தை கோட்பாட்டடிப்படையில் முன்னெடுத்தனர். பொது மக்கள் சார்ந்த இலக்கியக் கோட்பாட்டை வலியுறுத்திய இவர்கள் நமது பண்பாட்டுச் சூழலுக்கான கோட்பாட்டுருவாக்கத்தையும் செய்தனர். மக்களுடன் இணங்கி செயற்பட்டதுடன் மக்களின் சுக துக்கங்களில் பங்கேற்று அம்மக்களின் நல்வாழ்வுக்காக இலக்கியம் படைத்தனர். முற்போக்கு இயக்கத்தை சார்ந்த பலர் இலக்கியக்காரர்களாக மட்டு மன்றி அரசியல் களத்திலும் செயற்பட்டவர்களாக காணப்பட்டனர். இ.மு.எ.ச. முன்னோடிகளாக கே. கணேஷ், கே. ராமநாதன் (தேசாபிமானி ஆசிரியர்), அ. ந. கந்தசாமி, எம். பி. பாரதி போன்றோர் செயற்பட்டுள்ளனர். தொடர்ந்து பிரேம்ஜி, க. கைலாசபதி, கா. சிவத்தம்பி, செ. கணேசலிங்கம், ஏச். எம். பி. மொஹிதீன், என். கே. ரகுநாதன், டானியல், சுபைர் இளங்கீரன், சில்லையூர் செல்வராசன், காவலூர் இராசதுரை, எஸ். அகஸ்தியர் முதலானோர் இரண்டாவது கட்டத்தில் இணைந்து செயற்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களைத் தொடர்ந்து செ. யோகநாதன், யோ. பெனடிக்பாலன், செ. கதிர்காமநாதன், திக்குவலை கமால், எம்.. ஏ. நு∴மான், சாருமதி, மு. கனகராஜன் போன்றோர் செயற்பட்டுள்ளனர். குறிப்பாக ஐம்பதுகளிலிருந்து இவ்வியக்கத்தில் செயற்பட்ட சமீம் ஸ்தாபனம் சார்ந்த முக்கியமான செயற்பாடுகள் இரண்டை பதிவாக்க வேண்டியது காலத்தின் தேவையாகும். இ.மு.எ. சங்கத்தின் தலைமைக்குழு உறுப்பினராக செயற்பட்டு வந்தவர்களிலொருவரான சமீம் இ. மு. எ. ச. நடாத்திய பாரதி நூற்றாண்டு விழா, சோமசுந்தரப் புலவர் விழா, நாவலர் விழா போன்ற நிகழ்வுகளை ஒழுங்கமைப்பதிலும் அதனை வெற்றிகரமாக நடாத்துவதிலும் பங்களிப்பை நல்கியுள்ளார் என நீரவை பொன்னையன் நினைவுகூருவார் (மே.கு.நூ. ப.121).

அவ்வாறே இந்தியாவிலிருந்து வந்து குவிந்து கொண்டிருந்த வணிக இலக்கிய படைப்புகளுக்கு இலங்கை களமாக இருக்க முடியாது என்ற வகையில் அதன் இறக்குமதிக்கு எதிராக குரல் கொடுத்த இ.மு.எ.ச. எழுத்தாளர்களில் சமீம் முக்கியமானவர். அப்போது இலங்கைக்கு வருகை தந்திருந்த தமிழக எழுத்தாளர். பகிரதன் "இலங்கை எழுத்தாளர்கள் தமிழக எழுத்தாளரைவிட பத்து ஆண்டுகள் பின் தங்கியுள்ளனர்'' எனக் குறிப்பிட்டார். அதே சமகாலத்தில் இலங்கைக்கு வந்திருந்த கி.வா. ஜெகநாதன் அவர்களும் இலங்கை எழுத்தாளர்களின் கதைகளுக்கு அடிக்குறிப்பு வேண்டும் எனக் குறிப்பிட்டார். இலக்கியத்தில் உள்ளடக்கத்தைவிட அழகியலே முதன்மையானது என்ற நிலைப்பாட்டில் நின்று இலக்கியத்தை சமூக யதார்த்தத்திலிருந்து பிரித்துப் பார்க்க முனைந்ததன் வெளிப் பாடாகவே அவரது கூற்று அமைந்திருந்தது. அதற்கு எதிரான தத்துவப் போராட்டத்தை முற்போக்கு அணியினர் மிக பலமாகவே முன்வைத்தனர். அவர்களில் சமீமின் பங்கு குறித்துக்காட்டத் தக்கதொன்றாகும். காலப்போக்கில் இ. மு. எ. ச. சித்தாந்த ரீதியிலும் இயக்க ரீதியிலும் சிதைவடைந்து இயங்க முடியாமல் முடங்கியபோது சமீமும் அவருடன் கருத் தொற்றுமை கொண்டிருந்த தோழர்கள் சிலரும் ஒன்றிணைந்து இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம் என்றதொரு அமைப்பை உருவாக்கி செயற்பட்டனர். அவர் இறக்கும் வரை இவ்வமைப்பின் உறுப்பினராக இருந்தார் என்பதும் மனங்கொள்ளத்தக்கது.

சமீமின் முக்கிய பங்களிப்புகளில் ஒன்றாக குறிப்பிட வேண்டியது அவர் சாஹித்திய மண்டலத்தில் உறுப்பினராக இருந்த காலத்தில் பழமைவாதிகளுக்கும் பிற்போக்கு வாதிகளுக்கும் எதிராக நடத்திய போராட்ட மாகும். மக்கள் இலக்கியத்தை இழிசனர் வழக்கு என புறக்கணித்த பழமைவாதிக ளிடையே மக்கள் இலக்கியத்திற்கான சாஹித்திய அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காக சமீம் தீவிரமாக செயற் பட்டவர். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சாஹித்திய விழாவில் அழைப்பிதழ் இல்லாமலே கலந்துகொண்டதுடன் முற்போக்கு இலக்கிய கர்த்தாக்கள் சார்ந்து பல கேள்விகளை முன்வைத்திருக்கின்றார் என்பதை முற்போக்காளர் பலர் நன்றியுடன் நினைவுகூருவர். யாவற்றுக்கும் மேலாக பழமைவாதிகளும் பிற்போக்காளர்களும் முற்போக்கு இலக்கியத்தை நிராகரித்து கூட்டத்தை நடாத்த முற்பட்டபோது அவர்களுக்கு எதிராக கூழ் முட்டை அடிக்கும் சம்பவமும் இந்நிகழ்வில் தான் இடம்பெற்றது. முற்போக்கு இலக்கிய வரலாற்றில் பிற்போக்காளர்களுக்கு அவர்களின் மொழியில் பதிலடி கொடுத்த முற்போக்காளர்களின் பங்கும் பணியும் பொன்னெழுத்துக்களால் பதிய வேண்டியவை. காலப்போக்கில் முற்போக்காளர் சிலரில் ஏற்பட்ட தடுமாற்றங்கள், சிதைவுகள் இந்த செயலுக்காக மன்னிப்புக் கோர வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார்கள். அவர்கள் பரிதாபத்திற்குரியவர்கள். சமீம் இறுதிவரை இது குறித்த தெளிவான நிலைப்பாட்டினையே கொண்டிருந்தார். இழிசனர் வழக்கென ஒதுக்கிய மக்கள் இலக்கியம் மகுடமேற வைத்த சம்பவம் இச்சந்தர்ப்பத்தில் தான் நடந்தது. அதற்கு கதாநாயகன் எம். சமீம் அவர்கள் தான் என்பதால் முற்போக்கு இலக்கியத்தின் முடிசூடா மன்னராகின்றார் என கவிஞர் ஏ. இக்பால் குறிப்பிடுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்போக்கு சிந்தனையாளராகிய இவர் தமிழ் இலக்கியத்தில் மிகுந்த ஈடுபாடுள்ளவ ராக இருந்தது போன்று வரலாற்றுத் துறையிலும் ஆர்வம் கொண்டவராக இருந்திருக்கின்றார். தமிழிலும் ஆங்கிலத்திலும் பல நூல்களை எழுதியுள்ளார். அவரது இஸ்லாமிய கலாசாரம், இலங்கை முஸ்லிம்களின் திருமண சம்பிரதாயங்கள் Problems of a Minority Community, Marriage Customs of the Muslims of Sri Lanka போன்ற நூல்கள் வெளிவந்த போதும் ஒரு சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகள் (நான்கு பாகங்களாக வெளிவந்த அரசியல், சமூக வரலாற்று நூல் (1997-1998) என்ற நூலே அவரது முக்கியத்துவம் வாய்ந்த படைப்பாக கூறப்படுகின்றது. இந்நூலுக்கு இலங்கை சாஹித்திய மண்டலப் பரிசு வழங்கப்பட்டது. தமிழ் நாட்டில் நடைபெற்ற அகில உலக இஸ்லாமியத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் தமிழ்நாட்டு கல்வியமைச்சரினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். விமர்சனக் கட்டுரைகள் (2005), எனது இலக்கியத் தேடல் (2006), கைலாசபதி, சில்லையூர் செல்வராசன் விமர்சன நோக்கு (2007) ஆகிய மூன்று நூல்களிலும் உள்ள கட்டுரைகள் இவரது பல்துறைக் கண்ணோட்டத்தையும் அணுகுமுறைகளையும் காட்டுகின்றது.

ஒரு புறம்பான பேரினவாதம் முஸ்லிம் மக்களை எதிரியாக பார்த்ததுடன் கேவல மானதோர் அரசியலின் பின்னணியில் மோசமான இன வன்முறைகளை தோற்றுவித் திருந்தன. முஸ்லிம் மக்கள் ஒரு தேசிய இனம் என்பதையும் அவர்களுக்கென சுய நிர்ணய உரிமை உண்டு என்பதையும் மறுத்து அவர்களின் வாழ்வை சிதைப்பதாகவே அவ் வரசியல் முன்னெடுப்புகள் அமைந்திருந்தன என்பதை அவரது ஒரு சிறுபான்மை சமூகத் தின் பிரச்சினைகள் என்ற நூல் எடுத்துக் காட்டுகின்றது. இவ்விடத்தில் பிறிதொரு விடயம் குறித்தும் சிந்தித்தல் காலத்தின் தேவையாகும். முஸ்லிம் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைக்கான முன்னெடுப்புக் களானது குறுகிய இனவாதமாகவோ அல்லது ஏனைய சமூகங்களுக்கு எதிரானதாகவோ (சந்தர்ப்பவாத அரசியல் அதனையே செய்ய முனைகிறது) முன்னெடுக்கப்படாமல் இலங்கையில் ஏனைய அடக்கப்பட்ட மக்களின் அரசியல் முன்னெடுப்புகளுடன் இணைக்கப்படல் வேண்டும் என்பது காலத்தின் தேவையாகும். இந்தப் புள்ளியிலிருந்தே தேசிய சிறுபான்மை இனங்களின் அரசியல் புறப்பாடு செல்ல வேண்டியுள்ளது. சமீமின் ஆய்வினைப் பொறுத்தமட்டில் பேரினவாதம் எந்தளவு மக்கள் விரோதமாக செயற்பட்ட அதே சமயம் முஸ்லிம் இனவாதம் மக்கள் விரோத நிலைப்பாட்டினைக் கொண்டிருந்தது என்பதனையும் எடுத்துக் காட்டியமை அவரது தன்முனைப்பற்ற நாகரீகத்தை எடுத்துக் காட்டுகின்றது. இது குறித்து திரு. இர. சிவலிங்கம் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

"அரசியல் தலைவர்கள் எவ்வாறு இன உறவுகளைப் பாதித்துள்ளார்கள். ஒரு நாட்டின் வரலாற்றுப் போக்கையே நிர்ணயித் துள்ளார்கள் என்பதையும் உதாரணங்களோடு நிறுவியுள்ளார். அரசியல் தலைவர்கள் மட்டுமல்ல எழுத்தாளர்களும் இலக்கியவாதி களும் மதத் தலைவர்களும் எவ்வாறு மக்களின் உணர்வுகளைத் தாம் விரும்பிய வழியில் தட்டி எழுப்பி சமுதாய அலங்கோலங்களை ஏற்படுத்துகின்றனர் என்பதை இலங்கையின் தற்கால வரலாற்று நிகழ்வுகளை ஆதாரமாக வைத்து நிலைநாட்டியுள்ளார்" (இர. சிவலிங்கம் 1998, ஒரு சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகள் என்ற நூலின் முன்னுரையில்).

அதே சமயம் இந்நாட்டில் குமிழிட்டு மேற்கிளம்பிய இன வன்முறையின் புதிய பரிமாணங்கள் அதனடியாக தோன்றிய தமிழ் தேசிய இயக்கம், அவை தரிசித்திருந்த பாஸீச வழிமுறைகள், மேற்கொண்ட வன்முறைகள், மனிதவுரிமை மீறல்கள் யாவும் முஸ்லீம் மக்களின் வாழ்வை பல்வேறு விதங்களில் தாக்கியிருந்தன. இந்த வாழ்க்கை அலைக்கழிப்புகளினூடே மனிதர்கள், அவர்கள் எங்கு வாழ்ந்து கொண்டிருந்தாலும் அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய இலங்கையின் நசிவுத் தரும் வடகிழக்கு சூழலில் வாழ்ந்துகொண்டிருந்தாலும் அச்சிதைவுக்கு எதிரான அச்சமூகங்களிலே இருக்கக்கூடிய ஆத்மார்த்த சிந்தனைகளை எப்படியாக வெளிப்படுத்திருந்தார்கள் என்பதை யெல்லாம் இந்நூல் எந்தளவு தொடுகின்றது என்பது சுவாரசியமானதோர் வினா தான்.

ஒரு புறம்பான சிங்கள பெருந்தேசிய வாதமும் மறுபுறமான குறுந்தமிழ் தேசியமும் முஸ்லீம் மக்களை எதிரியாக பார்த்ததுடன் கேவலமானதோர் அரசியலின் பின்னணியில் மோசமான இன வன்முறைகளை தோற்றுவித் திருந்தன. முஸ்லீம் மக்கள் ஒரு தேசிய இனம் என்பதையும் அவர்களுக்கென சுய நிர்ணய உரிமை உண்டு என்பதையும் மறுத்து அவர்களின் வாழ்வை சிதைப்பதாகவே அவ் அரசியல் முன்னெடுப்புக்கள் அமைந்திருந்தன. இவ்வாறான சூழலில் தென்பகுதி முஸ்லிம் மக்கள் பற்றி சிந்தித்த சமீம் தன் காலத்தில் முனைப்புற்றிருந்த வட பகுதி முஸ்லிம்களுக்கு எதிராக தமிழ் பாஸீச சக்திகள் மேற்கொண்ட வன்முறைகள் குறித்து கவனிக்க தவறிவிட்டமை துரதிஷ்டவசமான தொன்றாகும். அவ்வாறே கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக முஸ்லீம் தீவிரவாதத்தை முன்னெடுத்த ஜிஹாத் இயக்கம் குறித்த விமர்சனங்களையும் அவர் முன்வைக்கத் தவறியிருக்கின்றார் என்பது அவரது எழுத்துக்கள் மீதான விமர்சனமாகும். சமீம் அவரது பார்வைகளும் நோக்குகளும் முஸ்லீம் அடிப்படைவாதத்திற்கு முரணானது என்ற போதிலும் அவர் தமது ஆய்வு நூலில் அதனை பிரித்துப் பார்க்கத் தவறுவதாகவே படுகின்றது. கிழக்கு மாகாண முஸ்லிம் பற்றி தமது எழுத்துக்களில் பதிவு செய்திருந்தாலும் அவர் அரேபிய முஸ்லிம் அடிப்படை நிலை நின்றே நோக்க முற்பட்டமை அவரது பார்வையின் பலவீனமாக வெளிப்பட்டது எனலாம். இன்று இஸ்லாம் கலாசார்ம் குறித்து காத்திரமான ஆய்வுகளை முன்னெடுத்து வரும் ஏ. பி. எம். இத்திரீஸ், சமீம் போன்று மார்கிஸ்ட்டாக இல்லாத போதிலும் இஸ்லாத்தை பொதுமக்களின் நலனுடன் இணைத்துப் பார்ப்பதில் முக்கியமான ஆய்வுகளை முன் வைத்துள்ளார் என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது. இவ்விடயம் பரந்து விரிந்து ஒப்பியல் நோக்கில் ஆய்வு செய்யப்பட வேண்டியதோர் விடயமாகும். இவ்விடம் அதற்கு ஏற்றதல்ல.

அவ்வாறே நூலாசிரியர் ஒரு தேசிய நாளிதழில் எழுதிய கட்டுரைகளே இங்கு நூலாக தொகுக்கப்பட்டுள்ளது. ஒரு கட்டுரையின் பரிமாணமும் தாக்கமும் வேறுபட்டவையாகும். கட்டுரைகளை நூலாக்குவதில் இந்தக் குறைபாடு இருக்கவே செய்யும். இந்தக் குறையை நீக்கினால் இந்த நூலின் தரம் மேலும் பொலிவுறும் (சிவலிங்கம் இர. மே.கு.நூ.).

பொது மக்கள் சார்ந்து ஒரு கலாசார பண்பாட்டு மாற்றத்தை ஏற்படுத்த முனைவது ஜனநாயகத்திற்கு தேவையாகும். அத்தகைய பண்பாட்டு மாற்றத்தை நடைமுறையில் நிகழ்த்துபவர்களான மக்களுக்காக மக்கள் பங்கேற்கக்கூடிய வெளிகளை உருவாக்குவது முற்போக்கு சமூக செயற்பாட்டாளர்களின் கடமையாகும். ஒரு பொது நோக்கத்திற்காக இயங்கத் தயாராகவுள்ளவர்கள் அனைவரையும் சந்திக்கும் வெளிகளை உருவாக்குவதன் மூலம் ஆங்காங்கே சிதறிக்கிடக்கும் நிலையை மாற்றி ஒற்றுமையை வலுப்படுத்த முடியும் என்பதை வரலாறு நிரூபித்திருக்கின்றது. மனிதாபிமானமுள்ள ஒற்றுமை நிறைந்த ஒரு சமுதாயத்தை உருவாக்க முனைகின்ற போராட்டத்தில் சமீம் போன்ற பண்பாட்டு செயற்பாட்டாளர்களின் வாழ்வும் வளமும் எமக்கு ஆதர்சனமாக அமைந்திருக்கின்றது என்பதில் இருநிலைப்பட்ட கருத்துகளுக்கு இடமில்லை.

முகமது சமீம் வாழ்க்கை பற்றியும் அவரது சமூக பங்களிப்பு பற்றியும் ஒரு சில வார்த்தைகளே இவை. எனினும் அவர் காலமும் வாழ்க்கையும் பங்களிப்பும் இன்னும் சரியான முறையில் ஆராய வேண்டியிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியனாக எனது அனுபவங்கள்...

கே. எஸ். சிவகுமாரன்

அதிபர், ஆங்கில ஆசிரியர், திறனாய்வாளர்

அனைத்துலக பாடசாலைகளில் உயர் வகுப்புகளில் ஆங்கிலம், ஆங்கில இலக்கியம் ஆகிய பாடங்களைப் போதித்து, மாணவ மாணவியரை வழிநடத்திய அனுபவம் பெற்றிருப்பதனால், மாணவர்கள் தமது தேடல் முயற்சிகளுக்கு எவ்வாறு உதவலாம் என்பது பற்றிய சில முயற்சிகளை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதற்கு முன் என்னைப் பற்றிய சில விபரங்களைத் தெரிவித்தால் தான் எனது ஆலோசனைகள் நம்பக்கூடியதாக அமையும்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலம், தமிழ், மேலைத்தேயப் பண்பாடு ஆகிய பாடங்களை, வெளிவாரியாகப் படித்து, கலைமாணிப் பட்டம் பெற்றேன். இப்பொழுது, வெளிவாரியாக சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆங்கிலம், ஆங்கில இலக்கியத்தில் முதுமாணிப் பட்டம் பெற்றிருக்கிறேன். எனவே, எனது கல்வித் தகைமைகள் எனது போதனா முறைக்குப் பலமூட்டுகின்றன.

பள்ளிக்கூட ஆசிரியனாக நான் விசேட பயிற்சி பெறாதபோதிலும் இதழியல், தொடர்பியல், பேச்சுவன்மை, எழுத்துவன்மை போன்ற தகைமையை பெற்றிருப்பதனாலும், நான் ஒரு திறனாய்வாளனாக இருப்பதனாலும், அண்மைக்கால இலக்கியங்களில் நன்கு பரிச்சயம் உடையவனாக இருந்ததனாலும் என்னை சர்வதேச பாடசாலைகளில் ஆங்கில இலக்கிய ஆசிரியனாக நிர்வாகத்தினர் அழைப்பு விடுத்தனர்.

முதலிலே, மாலைதீவிலுள்ள மாலே என்ற தலைநகரிலே உள்ள மஜிதியா பாடசாலையில், லண்டன் பல்கலைக்கழகப் பரீட்சை களுக்கான ஆங்கிலப் பாடத்திட்டத்திற்கிணங்க ஆங்கிலம் / ஆங்கில இலக்கியத்தைப் போதிக்கும்படி, அப்பாடசாலை அதிபராக விளங்கிய இலங்கையரான மறைந்த கல்விமான் திரு. எஸ். ஜே. சாமுவேல் அவர்கள் என்னை நியமித்தார். அங்கு எட்டாம் வகுப்பு மாணவர்களுக்குப் பொறுப்பான வகுப்பு ஆசிரியராகவும், மற்றைய வகுப்புக்களுக்கு ஆங்கில ஆசிரியனாகவும் பணி புரிந்தேன். இரண்டு வருடகால ஒப்பந்தம் முடிவடைந்த பின் நாடு திரும்பினேன். இது 1990களின் பிற்பகுதியில் இடம்பெற்றது.

எனது போதனா முறை திருப்திகரமாக நடந்ததைக் கேள்வியுற்ற மற்றொரு பாடசாலை அதிபரான, இலங்கையர் திரு. சோமபந்து கொடிகார ஓமான் தலைநகரான மஸ்கட்டில் உள்ள ஸ்ரீ லங்கன் ஸ்கூலில் ஆசிரியராக வரும்படி தொலைபேசி மூலம் அழைப்பு விடுத்தார். அதனை ஏற்று நான் 1998 - 2000 காலப் பகுதியில் அங்கு பல இன மாணவர்களுக்கு ஆங்கில இலக்கிய ஆசிரியராகவும், மொழித்துறை (ஆங்கிலம், சிங்களம், தமிழ், உருது) தலைவராகவும் இயங்கி வந்தேன்.

ஆண்களும் பெண்களுமாக பாகிஸ்தான், லெபனான், இந்தியா, இலங்கை மாணவர்கள் அப்பாடசாலையில் பயின்று வந்தனர். நான்காம் வகுப்பு முதல் 13ஆம் வகுப்புவரை அப்பாடசாலையில் நான் ஆங்கிலத்தையும் ஆங்கில இலக்கியத்தையும் பயிற்றுவித்து வந்தேன்.

லண்டன் பொதுத் தராதரப் பரீட்சையில் எட்டு விஞ்ஞானப் பிரிவு மாணவர்கள் ஆங்கில இலக்கியத்தைப் பாடமாகப் பயின்றனர். அவர்கள் இலக்கியம் பற்றி ஒன்றுமே தெரியாதவர்களாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தமையால், அவர்களை, வழமையான போதனா முறையின்றி, தொடர்பாடல் மூலம் அவர்களை சிந்திக்க வைத்து, திறனாய்வு நோக்கில் இலக்கியங்களைச் சுவைக்கும் விதத்தில் பாடங்களை போதித்து, வழிகாட்டி வந்தேன். பரீட்சையில் அவர்கள் அனைவரும் A விசேடசித்தி பெற்றனர் என்பது எனது பிரபல்யத்தை மேலும் உயர்த்தின.

இலங்கையிலும் அலித்தியா, கொழும்பு தெற்கு உயர்மட்ட சர்வதேச பாடசாலைகளிலும் ராஜகிரியவிலுள்ள கேட்வே சர்வதேச பாடசாலையிலும் பயிற்றுவித்த அனுபவம் உண்டு.

இவற்றைத் தொடர்ந்து அமெரிக்கா ஒஹையோ மாநிலத்திலுள்ள சின்சினாட்டி நகரிலுள்ள ஹைஸ்கூல்களில் விடுவிப்பு ஆசிரியனாகவும் ஆங்கிலம் உட்பட சகல பாடங்களுக்கும் ஆசிரியனாகவும் பணி புரிந்தேன். அங்கும் இரண்டு வருடங்கள் ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டு நாடு திரும்பினேன்.

மேற்கண்டவை ஆசிரியனாக நான் தொழில் பார்த்த அனுபவங்களாகும்.

இனி மாணவர்கள் குறிப்பாக 9ஆம் வகுப்பு மாணவர்கள் முதல் பல்கலைக்கழக புகுமுக வகுப்புகள் வரை பயிலும் மாணவர்கள் தமது இலக்கியப் பாடங்களில் புலமைபெற பின்பற்ற வேண்டிய ஆலோசனைகளை மிகச் சுருக்க மாகத் தருகின்றேன்.

முதலில், இலக்கிய மாணவர்கள் தமது பாடங்களைப் பள்ளிக்கூடத்தில் பயிலும் அதேவேளையில், பாடத்திட்டங்களுக்கு வெளியேயும் நிறைய வாசிக்க வேண்டும். எப்படியென்றால், நமது நாட்டில் வெளியாகும் ஆங்கில, தமிழ், சிங்கள புதினப் பத்திரிகைகளில் வெளியாகும் நாளிதழ்களையும் வார இதழ்களையும் விருப்புடன் வாசிக்கப் பழக வேண்டும். அப்பத்திரிகைகளில் இலக்கியப் பக்கங்கள் நிறைய வருகின்றன.

உதாரணமாக, ஆங்கிலத்தில் டெயிலி நியூஸ், சண்டே ஒப்சேவர், தி ஐலண்ட, சண்டே டைம்ஸ், நேஷன், சண்டே லீடர், டெயிலி மிறர் போன்றவை இலக்கிய நடப்புகள், கட்டுரைகள், மதிப்புரைகள் போன்றவற்றை வெளியிடுகின்றன. இவற்றை வாசிப்பதன் மூலம் பொதுவான இலக்கியப் போக்கு களையும் நூல்களையும் எழுத்தாளர்களையும் நன்கு அறிந்து வைத்திருப்பது பெரிதும் உதவும். பிள்ளை அறிவு பலமாக இருந்தால், பாடப் புத்தகங்களை எளிதில் புரிந்து நல்ல விடைகளை பரீட்சைகளில் எழுதமுடியும்.

இப் பத்திரிகைகளை பொது நூலகங் களுக்குச் சென்று வாசிக்கலாம்.

தமிழிலும், தினக்குரல் வார வெளியீடு, தினகரன் வாரமஞ்சரி, விரகேசரி ஞாயிறு வெளியீடு, வீரகேசரி சங்கமம் பகுதி ஆகியவற்றில் நிறைய இலக்கியம் சம்பந்தமான விடயங்கள் வருகின்றன.

இவற்றைவிட தமிழில், மல்லிகை போன்ற பழைய சஞ்சிகையையும் அகிலம், ஞானம், ஜீவநதி, மகுடம் ஆகியவற்றையும் பருவகால ஏடுகளையும் அடிக்கடி வாசித்துப் பயன் பெறலாம். வாரத்தில் ஒரு நாள் அல்லது இரண்டு நாட்கள் பத்திரிகை, சஞ்சிகைகள் படிப்பதற்கு நேரத்தை ஒதுக்கலாம். நூல் நிலையங்களில் நல்ல நூல்களைத் தேர்ந்தெடுத்து வாசிக்க, நூல்நிலைய உத்தியோகத்தர்கள் உதவுவார்கள்.

நூலகம், விக்கிப்பிடியா போன்ற மின்னியக்க இணையத்தளங்களிலும் கூகுள் போன்ற தேடல் இயந்திரங்கள் மூலமும் வேண்டிய தகவல்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

இவைதவிர, இலக்கியக் கூட்டங்கள், புத்தக வெளியீடுகள் போன்றவற்றிற்குச் சென்று எழுத்தாளர்களைச் சந்தித்து விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். கொழும்புத் தமிழ் சங்கத்தில் பிரமாண்டமான நூலகம் இருக்கிறது. அங்கு இலக்கியம் சம்பந்தமான அரிய நூல்கள் இருக்கின்றன. சஞ்சிகைகளும் உள்ளன. அடிக்கடி அங்கு சென்று நீங்கள் பயனடையலாம்.

வாசிப்பு என்பது சுவையான ஓர் அனுபவம். உங்கள் மூளை சலிப்படைந்த வேளையில், மூளையின் மூலம் சுகம்பெற நல்லவற்றை வாசிக்கப் பழகிக் கொள்ளுங்கள். வெற்றி உங்களதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமைப் பித்தன்

- ஒரு நோக்கு -

இணுவையூர் - கலாபூஷணம் ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன்

தமிழ்ச் சிறுகதை உலகில் அழியாத புகழையும் தனிப்பெரும் ஸ்தானத்தையும் பெற்றுள்ள அமரர் புதுமைப்பித்தனது வாழ்க்கை பற்றியும் அன்னாரது படைப்புகள் பற்றியும் சற்று ஆராய்வதே இச் சிறுகட்டுரையின் நோக்கமாகும்.

உண்மையைச் சொன்னால் புதுமைப்பித்தனது வாழ்க்கை தமிழ் எழுத்தாளர் ஒருவரின் சோக நாடகம்; உயிருள்ள எழுத்தாளர்களுக்கு ஓர் எச்சரிக்கை.

பி. ஏ. பட்டம் பெற்ற நிலப்பதிவு தாசில்தாராக இருந்த சொக்கலிங்கம்பிள்ளைக்கும் பர்வதத்தம்மாள் என்பவருக்கும் பிறந்தவர்தான் புதுமைப்பித்தன். தமிழ்நாட்டுச் சம்பிரதாயப்படி புதுமைப்பித்தனுக்கு அவரது தாத்தா விருத்தாசலம்பிள்ளையின் பெயரிடப்பட்டது. அன்னார் பிறந்த திகதி. 25.04.1906. புதுமைப்பித்தனுக்கு ஒரே ஒரு தங்கை. தங்கை பெயர் ருக்மணி என்ற செல்லத்தம்மாள்.

புதுமைப்பித்தனுக்கு எட்டு வயதானபோது அதாவது 1914ம் ஆண்டு அவரது தாயார் பர்வதத்தம்மாள் காலமானார். எனவே, புதுமைப்பித்தனுக்கு தாயாரின் பரிபூரணமான அன்பைப் பெறும் பாக்கியம் கிட்டவில்லை. இந்த துர்ப்பாக்கியத்தை புதுமைப்பித்தன் தாம் சாகும்வரையிலும் மறக்கவில்லை.

புதுமைப்பித்தனின் பள்ளிப்படிப்பு திருநெல்வேலி கிறிஸ்தவர் சபையைச் சேர்ந்த அர்ச். யோவான் ஸ்தாபனக் கல்விக் கூடத்தில் நடைபெற்றது. கல்வி வேம்பாய்க் கசந்தது. பள்ளிப்படிப்பில் கவனமில்லாத காரணத்தினால் புதுமைப்பித்தனால் கல்லூரிப் படிப்பையும் சீக்கிரம் முடிக்க முடியவில்லை.

கல்லூரி நாட்களில் நாள் ஒன்றுக்கு குறைந்த பட்சம் ஒரு துப்பறியும் நாவலாவது படித்து முடிப்பவராக இருந்தார். மேலும் தமது அறை நண்பர்களுடன் சேர்ந்து அருகிலுள்ள தென்னந் தோப்புகளுக்கு சென்று திருட்டுத்தனமாக இளநீர் வெட்டிக்குடிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

இளநீர்களை வெட்டிக்குடித்தவுடன் இந்த இளைஞர் குழாம் நேராக அறைக்குத் திரும்புவதில்லை. அப்படிச் செல்வது தரும விரோதம் என்பவர் புதுமைப்பித்தன். 'தின்றதும் குடித்ததும் சமிபாடு அடைய வேண்டாமா?' என்பார் புதுமைப்பித்தன். தென்னந் தோப்பிலிருந்து தாமிரபரணி ஆற்றங்கரைக்கோ அல்லது மாந்தோப்புச் சுடுகாட்டுப் பிரதேசத்திற்கோ புதுமைப்பித்தன் தலைமையில் நண்பர் குழாம் செல்லும். அங்கு புதுமைப்பித்தனின் 'உபதேசம்' நடைபெறும்; அல்லது 'திருப்பள்ளி' இடம்பெறும்.

புதுமைப்பித்தனின் இளமைக் காலம் இப்படித்தான் கழிந்தது. இந்த 'அருமையான' அனுபவத்தின் சாயலைத்தான் நாங்கள் அவரது "சாயங்கால மயக்கம்" என்ற கதையில் காண்கிறோம்.

இவ்வாறாக நாவல் படிப்பு, ஞானோபதேசம், இளநீர்த்திருட்டு, சுடுகாட்டு நித்திரை இத்தியாதி காரணிகளினால் புதுமைப்பித்தனின் கல்லூரிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பு உரிய காலத்தைக் கடந்து உத்தரவாத காலமும் இல்லாமல் நீள ஆரம்பித்தது. ஒருமாதிரி 1931ம் ஆண்டு அதாவது தமது 25வது: வயதில் அவர் தமது கல்லூரிப் படிப்பிலிருந்து விடுதலையானார். பி. ஏ. என்ற பட்டம் அவரது பெயருக்குப் பின்னால் வந்து வேண்டாவெறுப்பாக ஒட்டிக் கொண்டது.

புதுமைப்பித்தனது தந்தை சொக்கலிங்கம் பிள்ளையின் குடும்பத்தவர் பரம்பரை பரம்பரையாக அரச உத்தியோகத்தில் இருந்து வந்தவர்கள். எனவே, தந்தையார் புதுமைப் பித்தனுக்கும் அரச உத்தியோகம் வாங்கிக் கொடுக்க தன்னாலியன்ற முயற்சிகளை மேற்கொண்டார். ஆனால், மகனது வயது காரணமாக தந்தையின் முயற்சி பலிக்கவில்லை. இது புதுமைப்பித்தனுக்கு மகிழ்ச்சியையே தந்தது. அவரது உள்ளம் கவிதையையும் கதையையுமே நாடியது.

எனினும், தந்தையோ சளைக்கவில்லை. மகனைச் சட்டப்படிப்புக்கு அனுப்பி வக்கிலாக்கிவிட வேண்டும் எனக் கங்கணம் கட்டினார். மகனுக்கு கல்யாண வயதும் ஆகிவிட்டதால் பெண் கொடுக்கும் சம்பந்தி மாப்பிள்ளையை சட்டப்பரீட்சைக்குப் படிக்க வைக்கவேண்டும் என்ற நிபந்தனையுடன் பெண் தேடத் தொடங்கினார். அப்போது திருவனந்தபுரத்தில் சட்டக்கல்லூரி இருந்ததால் அங்கேயே பெண் பார்த்தார், கண்டும்பிடித்தார்.

திருவானந்தபுரத்தில் சுப்பிரமணிய பிள்ளையின் மகள் கமலாம்பாளுக்கும் எமது கதாநாயகனுக்கும் 31.07.1931 இல் திருமணம் நடந்தேறியது. ஆனால், தந்தை சொக்கலிங்கம் பிள்ளையின் எண்ணம் ஈடேறவில்லை. மாறாக புதுமைப்பித்தன் நண்பர்களுடன் இலக்கியச் சர்ச்சைகளிலும் எழுதுவதிலும் ஈடுபட்டு வந்தார். இது தந்தைக்கும் தந்தை மறுதாரம் புரிந்துகொண்ட சித்திக்கும் பிடிக்கவில்லை. தகராறுகள் ஆரம்பித்தன. மேலும் சித்திக்கும் மருமகளுக்கும் சண்டைகள் ஆரம்பித்தன.

ஒரு நாள் எங்கே போவதென்று தெரியாமலே தமது மனைவியுடன் வீட்டை விட்டு வெளியேறினார் புதுமைப்பித்தன். தமது வீட்டிலிருந்து இரண்டு மைல் தூரத்திலுள்ள தனது சித்தப்பா சுப்பிரமணியபிள்ளை வீட்டில் போய் நின்றனர் தம்பதிகள். தொழில் ஏதும் இல்லாமல் எத்தனை நாட்களுக்குத் தான் பிறிதொருவர் வீட்டில் தங்கியிருக்க முடியும்? எனவே அங்கிருந்து புறப்பட்டு மனைவியின் ஊரான திருவனந்தபுரத்துக்குச் சென்றனர். அங்கும் 'வேலையில்லா மாப்பிள்ளைக்கு' வரவேற்பில்லை. எனவே மனைவியை அவரது பெற்றோர் வீட்டில் விட்டுவிட்டு வேலை கிடைத்தவுடன் அழைத்துக் கொள்வதாகக் கூறிவிட்டு சென்னைக்கு வந்தார்.

வீட்டைவிட்டு வெளியேறி எண்ணற்ற துன்பங்களை அனுபவித்தபோதிலும் புதுமைப் பித்தனின் இலக்கிய தாகமும் இலட்சிய வேட்கையும் சற்றும் அடங்கவில்லை. மாறாக கூடிக்கொண்டே போயிற்று.

அப்போது சென்னையிலிருந்து வெளிவந்த பத்திரிகைகளில் மூன்று குறிப்பிடத்தக்கவை:

1. காந்தி - ஆசிரியர் டி. எஸ் சொக்கலிங்கம்.
2. சுதந்திரச்சங்கு - ஆசிரியர் சங்கு சுப்பிரமணியம்
3. மணிக்கொடி - ஆசிரியர் கே. சீனிவாசன்.

அப்போது 'காந்தி' பத்திரிகையில் "கண்டதும் காதல் - மெய்யா? பொய்யா?" என்ற தலைப்பில் 'அந்தக் காலத்துப்புதிய விழிப்பைப்'' பற்றிய ருசிகரமான விவாதம் ஆரம்பமாகி இருந்தது.

புதுமைப்பித்தன் இந்த விவாதத்தின் மூலமாக இலக்கியக் களத்தில் காலடி எடுத்து வைத்தார். ''குலோப்ஜான் காதல்'' என்ற தலைப்பில் "கண்டதும் காதல்" விவகாரத்தைக் கிண்டல் செய்து அருமையாக எழுதி அனுப்பினார். அந்தக் கட்டுரை காந்தியில் வெளிவந்து இரசிகர்களின் வரவேற்பைப் பெற்றது. இக்கட்டுரையின் மூலம் தான் காந்தி ஆசிரியர் டி. எஸ். சொக்கலிங்கத்திற்கும் புதுமைப்பித்தனுக்கும் தொடர்பு ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மணிக்கொடி' ஆணை ஆசிரியர் வ. ரா. வும் புதுமைப்பித்தனைப் பாராட்டி கடிதமொன்றினை எழுதியிருந்தார்.

காந்தியில் எழுதியதைத் தொடர்ந்து புதுமைப்பித்தன் மணிக்கொடியிலும் கதைகள் எழுத ஆரம்பித்தார். அம்மாளு என்ற கதாபாத்திரத்தை அறிமுகப்படுத்தி ''பொன்னகரம்'' என்ற சிறுகதை, தொழில் யுவதிக்கான, ''கவந்தனும் காமுகனும்'' என்ற சிறுகதை, சொந்த மனைவியிடமே விபசாரம் புரிந்துவிட்டுப் போன கோழைப்பிறவி சீமாவின் ''ஆண்சிங்கம்'' கதை போன்ற கதைகள் மணிக்கொடியில் வெளிவந்தன. கதைகள் வெளிவந்த காலத்திலேயே புதுமைப்பித்தன் இலக்கிய உலகில் ஒரு விவாதப் பிரச்சனையாகிவிட்டார். சிலர் அவரது படைப்புகளைக் கண்டு மிரண்டு நடுங்கினார்கள். மற்றும் சிலரோ அவரது கதைகளின் அசாதாரணக் கோலம், அக்னி வேகம், புதியகோணம் முதலியவற்றைக் கண்டு பாராட்டினார்கள்.

எனினும், மணிக்கொடியும் காந்தியும் புதுமைப்பித்தனின் விடயதானங்களைப் பிரசுரித்தனவேயொழிய அவரை வேலைக்கு அமர்த்திக்கொள்ள சக்தியற்றிருந்தன. ஆனால், புதுமைப்பித்தனுக்கோ சென்னைக்கு வந்துதான் தீரவேண்டுமென்றிருந்தது. வந்தும்சேர்ந்தார். வ.ரா.வாலும் சொக்கலிங் கத்தாலும் ஊர்தேடி வந்த புதுமைப்பித்தனை உதறித்தள்ளவும் முடியாது உதவி செய்யவும் இயலாது, நண்பர்களுக்கு தர்மசங்கடமான நிலைமை. ஆனால் ஒருவருமே இதைப்பற்றிக் கவலைப்பட வில்லை. பகிர்ந்துண்டால் பசியாறும் என்ற சமதர்மக் கொள்கை அவர்களது நடைமுறையாயிருந்த போதிலும் பகிர்ந்து கொள்வதற்கோ பசியைத்தவிர வேறு எதுவும் அவர்களிடமிருக்கவில்லை.

மணிக்கொடியில் சம்பளமில்லாமல் இலக்கிய சேவை செய்தாலும் வயிற்றுப் பசிக்கு ஏதாவது செய்தாகவேண்டுமே! அச்சமயம் காரைக்குடியில் ராய சொக்கலிங்கம் என்பவர் ''ஊழியன்'' பத்திரிகையை நடாத்தினார். அந்தப் பத்திரிகையின் உதவி ஆசிரியராக சம்பளத்தோடு வேலைசெய்ய புதுமைப்பித்தனுக்குச் சந்தர்ப்பம் கிட்டியது.

'ஊழியன்' பத்திரிகையில் அப்போது சமூக சீர்திருத்தக் கருத்துக்களும் ராய சொக்கலிங்கத்தின் அம்மானை, ஊசல் பாடல்களும் சில கதை, கட்டுரைகளும்தான் வெளிவந்து கொண்டிருந்தன. எம்மவர் ஊழியனில் உதவி ஆசிரியராகக் கடமையாற்றிய வேளை அவரின் 'அகல்யை', 'தேக்கங் கன்றுகள்', 'தெரு விளக்கு' போன்ற கதைகள் ஊழியனில் வெளிவந்தன.

புதுமைப்பித்தன் சென்னையில் தங்கியிருந்த வேளை ஒரு சுவாரசியமான சம்பவம். சென்னைக்கு காந்திஜி வந்திருந்தார். தியாகராய நகரில் ஒரு எழுத்தாளர் கூட்டம்; அந்தக் கூட்டத்திற்குப் புதுமைப்பித்தனுக்கும் அழைப்பிதழ் வந்திருந்தது. பட்ஜுகள் வழங்கப்பட்டன. ஆனால் தமிழ் எழுத்தாளர்கள், நிறைந்திருந்த அந்தக் கூட்டத்தில் வழங்கப்பட்ட பட்ஜுக்களோ ஹிந்தி பட்ஜுகள். புதுமைப்பித்தனுக்கோ ஹிந்தி தெரியாது. எனினும் ஹிந்தி எழுத்து எப்படியிருக்கும் என்று தெரியும். அவர் வேண்டுமென்றே அந்த பட்ஜை தலைகீழாகக் குத்திக்கொண்டார். யாராவது கேட்டால் ''தெரியாத மொழி பட்ஜை எப்படிக் குத்தினாலும் ஒன்றுதான்'' என்று சூடாகச் சொன்னார். மேலும் சிலருக்கு என்னப்பா பாஷை இது? எழுத்துக்கள் எல்லாம் தலைகீழாக வௌவால் மாதிரி தொங்கிக்கொண்டு இருக்கிறது. அதனால் தான் நான் நேராகத் திருப்பிக் குத்திக் கொண்டேன்'' என்று குத்தலாக சொன்னார்.

புதுமைப்பித்தன் பல்வேறு புனைப் பெயர்களிலும் கதைகள், மொழிபெயர்ப்பு, விமர்சனம். பாடல், அரசியல் கட்டுரைகள், சினிமாவசனம், ஓரிரு நாடகங்கள் எழுதியுள்ளார். அன்னார் சுமார் நூறு கதைகளும் நூறு மொழிபெயர்ப்புக் கதைகளும் அத்துடன் பத்துப்பதினைந்து பாடல்கள், பல விமர்சனங்கள், நூற்றுக்குட்பட்ட கட்டுரைகள் மூன்று சினிமா வசனங்கள் எழுதியுள்ளார். அவர் 30.06.1948

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று காலமானபின்னர் தான் அமரரின் பல படைப்புக்கள் நூலுருவில் வெளிவந்தன.

மணிக்கொடியை விலைக்கு வாங்கிய நவயுகப் பிரசுராலயம் ''புதுமைப்பித்தன் கதைகள்'' நூலை வெளியிட்டது. புதுமைப்பித்தனின் படைப்புகளில் முதன்முதல் நூல்வடிவு பெற்றது இந்தத் தொகுதிதான். தமிழ்நாட்டின் சரித்திரத்திலேயே ஆசிரியர் பெயரையே நூலின் தலைப்பாகக் கொண்டு வெளியிடும் பாக்கியத்தையும் துணிச்சலையும் பெற்ற முதல் கதாசிரியரும் புதுமைப்பித்தன் தான்.

இந்நூலின் வெற்றியைத் தொடர்ந்து நவயுகப் பிரசுராலயத்தினர் புதுமைப்பித்தனின் 'உலகத்துச் சிறுகதைகள்', 'நாசகாரக் கும்பல்', 'பக்தகுசேலா', 'ஆறு கதைகள்', 'பேஸிஸ்ட் ஜடாமுனி', 'கப்சிப்தர்பார்' முதலிய நூல் களையெல்லாம் வெளியிட்டு வெற்றி கண்டனர்.

திருநெல்வேலியில் 1933ம் ஆண்டு தந்தையிடம் ஏற்பட்ட கசப்பினால் வீட்டைவிட்டு வெளியேறிய புதுமைப்பித்தன் பத்திரிகைத் தொழிலையே இலட்சியமாகக் கொண்டார். அதே புதுமைப்பித்தன் இடைப்பட்ட பதினொரு வருடத்தில் தமது இலட்சியமான பத்திரிகைத் தொழிலைவிட்டு விட்டு சினிமாத்துறையில் புகுவது என்று முடிவு கட்டினார். பணக்காரனாக வேண்டு மென்றோ, சொத்துச் சேர்க்க வேண்டு மென்றோ அவர் சினிமாத்துறையைத் தெரிவு செய்யவில்லை. ஒரு நேரச் சோற்றுக்காவது வாழ்ந்தாக வேண்டும் என்பதால் தான் சினிமாவுக்கு வசனம் எழுதச் சென்றார். ஆனால் அதுவே அவருக்கு எமனாக வாய்த்தது.

புதுமைப்பித்தன் சென்னையிலிருந்த போது அவருக்கு இருமல் அவ்வளவாக இருந்ததில்லை. இருமல் வந்தாலும் அவர் அதைப் பெரிதுபடுத்தாமல் கைமருந்து செய்து சமாளித்து வந்தார்.

ஆனால் தியாகராஜ பாகவதரின் சொந்தப் படமான "ராஜமுத்தி" க்குக் கதை வசனம் எழுத புனா நகருக்குச் சென்ற போது அந்த இருமல் காசநோய் என உறுதிப் படுத்தப்பட்டது.

புதுமைப்பித்தனுக்கு குழந்தைகள் என்றால் மிகுந்த ஈடுபாடு. அவரது தலைக் குழந்தை இறந்துபோன சமயத்தில் ஊருக்குக் கூடப்போக முடியாத நிலை. அத்தனை பணக்கஷ்டம். அதனால் மனக்கஷ்டப்பட்டார்.

புதுமைப்பித்தனின் ஒரே சொத்தான மகள் தினகரி 1946ம் ஆண்டு சித்திரை வருடப்பிறப்பன்று பிறந்தாள். அந்தச் சமயத்தில்தான் அவர் சினிமாத் துறையில் பிரவேசித்திருந்தார். 'மகள் பிறந்திருக்கிறாள்' என்ற தந்தி கிடைத்ததும் புதுமைப்பித்தன் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தார். ஏராளமான விளையாட்டுப் பொருட்கள், பரிசுச் சாமான்களுடன் குழந்தையை பார்க்க மாமியார் வீட்டுக்கு, திருவானந்தபுரத்துக்கு வந்துசேர்ந்தார் - காச நோயுடன்தான் வந்தார்.

புதுமைப்பித்தன் நினைத்த மாதிரியே தினகரி தான் அவரது கடைசிக் குழந்தையாக ஏன் ஒரே வாரிசாக நிலைத்துவிட்டாள். அவரைப் பிடித்த காச நோய் தினகரி பிறந்த இரண்டாவது வருடத்திலேயே அவரைக் கொண்டுபோய்விட்டது.

புதுமைப்பித்தனின் கதைகள் ஒவ்வொன்றும் ஒரு பிரச்சினையைப் பற்றியதாகவே இருக்கும். அவரது கதைகள் பொழுது போக்குக்கான கதைகள் அல்ல. புதுமைப் பித்தன் வாழ்க்கையின் குரூர வசீகரங்களைக் கண்டு ஒப்பாரி வைக்கவில்லை; அவற்றைக் கண்டு சிரிக்கும்படி நம்மைப்பழக்கினார். சமூகத்தைப்பார்த்து அவர் கேள்விக் குறிகளை அடுக்கினார். ஆனால் அவற்றுக்கு அவரால் விடைகாண முடியவில்லை.

எனினும் புதுமைப்பித்தன் தமிழ் இலக்கியத்திலேயே ஒரு வைரம் பாய்ந்த யதார்த்தவாதியாக திகழ்ந்தார்; என்றும் திகழ்வார் என்பது உறுதி!.

வாழ்க புதுமைப்பித்தன் புகழ்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்மட்டும் தெய்வமன்று மண்ணும் அஃதே!

கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்

உலகம் மயங்கும் ஒரு மாலைப்பொழுது
இயற்கையில் மனமொன்றி,
தன்னை மறந்து தனித்திருக்கின்றார்,
மஹாகவி பாரதியார்.
காக்கைச் சிறகு, பார்க்கும் மரம், கேட்கும் ஒலி
அனைத்திலும் கண்ணனை அருவமாய்க்கண்டு,
அகமகிழ்ந்து நிற்கிறது அவர் உள்ளம்.
ஒன்றாய், வேறாய், உடனாய் உலகோடு கலந்து நின்று,
உலகை இயக்கும் இறையின் கருணையை எண்ணி,
விம்மித் தணிகிறது அவர் நெஞ்சம்.
உலகே தெய்வமாய், தெய்வமே உலகாய்த் தரிசனப்பட,
தன்னை மறந்து தனியனாகிறார்.
மண்ணில் இறை தோன்ற,
அவர் கண்ணில் நீராறு.
தீக்குள் வைக்கும் விரலிலும்,
இறையைத் தீண்டும் இன்ப உணர்வு.
உலகைக் கடந்த உயர்நிலையில் அவர் உள்ளம்.

0 0 0

அனுபூதி நிலைக்கு அருகாமையில் அவர் செல்லும்போது,
சீடன் ஒருவனின் குரல்,
மஹாகவியை இம்மண்ணிற்கு இழுக்கிறது.
'ஐயனே! ஓர் ஐயம்'
வளைந்து தொழுது வாய்பொத்திப் பணிந்து நிற்கும்,
மாணவனின் பணிவு மகிழ்வைத் தர,
கண்களால் அவனைக் கனிவிக்கிறார்.
குருவினது கண்களின் அறிவுக் கூர்மை,
மாணவனை மயங்கச் செய்கிறது.
தன்னையறியாமல் அவன் தாள்கள்,
இன்னும் இரண்டடி பின்செல்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவின் கண் நோக்கமுடியாது அவர் கால் நோக்குகிறான்.
பார்வையிலேயே பாதபூஜை முடிகிறது.
மாணவனின் செயல்கள் மஹாகவியை மகிழ்விக்க,
அவருள்ளத்தில் உற்சாகம்.
ஓங்கும் குரலெடுத்து,
கேளப்பாசீடனே! என,
கேள்விக்காம் அனுமதியினை அளிக்கின்றார்.

0 0 0

ஆசிரியர் அனுமதி கிடைத்ததில் அகமகிழ்ந்த,
அவ் அறிவுச்சீடன்,
மனம், மொழி, மெய்களில் பணிவு காட்டி
பேசத் தொடங்குகிறான்.
'இறையைத் தொழ ஏங்குகிறது நெஞ்சம்,
எங்கு தொழல் வேண்டும்? இயம்புக!' என்கிறான்.
வினாத் தொடுத்த பின்,
மலையாய் நிற்கும் அம்மஹாகவிமுன்,
சிலையாய் அடங்கிச் செவி திறந்து,
அறிவாகுதி பெற ஆயத்தமாய் நிற்கிறான்.
சீடனின் வினாவைச் சிந்தையேற்று,
பதிலுரைக்க விழைகிறார் பாரதியார்.

0 0 0

ஆயிரம் கோயில்கள் சூழ இருக்கவும்,
அது நோக்காது,
'ஆண்டவனை எங்கு தொழட்டும்?' எனக் கேட்கும்,
மாணவன்மேல் அவருக்கு மதிப்புண்டாகிறது.
கடவுளைக் கற்சிலையாய் மட்டும் காணவிழையாத,
மடமையிலா மாணவனின் மதிக்கூர்மை புரிகிறது.
தக்கபடி பதிலுரைத்து அவன் தாகம் தீர்க்க,
மக்கள் கவிஞர் மனங்கொள்கிறார்.
மாணவனின் மாண்புறு கேள்வியில்,
மஹாகவியின் சிந்தனைக் குதிரை சிறகடித்துப் பறக்கிறது
வந்தனை செய்யும் வழியென்ன?
மாணவனின் கேள்வியால்,
கிளர்கிறது அவர் அறிவு.

0 0 0

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகைத் தோற்றுவித்தவன் இறைவன்
எல்லா மதத்தாரும் ஏற்கும் கருத்திது.
சர, அசரம் அனைத்தும் அச்சக்தியின் படைப்பே!
தோற்றுவித்தவன் இறைவன்.
தோன்றியது உலகம்,
இக்கருத்தேற்றுச் சிந்திக்கத் தலைப்படுகிறார் பாரதியார்.
உலகை நோக்கி உன்னிப்பாய் அவதானிக்க,
ஓர் ஒப்பற்ற உண்மை அவருக்குப் புலப்படுகிறது.
மகனில் தந்தையின் சாயல்,
குட்டியில் விலங்கின் சாயல்,
குஞ்சில் பறவையின் சாயல்,
கன்றில் மரத்தின் சாயல்,
கவிதையில் புலவனின் சாயல்.
படைக்கப்பட்ட அனைத்திலும் படைத்தவனின் சாயல் தெரிய,
இயற்கையின் ஏற்றம் புரிகிறது.
மஹாகவியின் மனத்துள் ஓர் ஒளிக்கீற்று.
அங்ஙனமாயின்,
படைக்கப்பட்ட உலகின் அனைத்துப் பொருள்களிலும்,
அதனைப் படைத்தவனின் சாயல் பதிந்திருத்தல்
வேண்டுமன்றோ!
அ·து உண்மையாயின்,
உலகெல்லாம் கலந்திருக்கும் அவ்வுயர் இறையை,
காணும் பொருளனைத்திலும் காணுதல் கூடுமே.
காணும் கண்ணிருந்தால்,
கடவுளைக் கல்லிலும் காணலாம், முள்ளிலும் காணலாம்.
காடு, நெடுவானம், கடலெல்லாம் காணலாம்.
நீண்டு எரியும் நெருப்பிலும் காணலாம்.
பூச்சி, பறவை, புழு, விலங்கு அத்தனையும்,
ஆச்சரியம் விழைவிக்கும் ஆண்டவனின் வடிவமென,
கண்டு வணங்கிக் களிப்புறலாம்.
உண்மை வெளிப்பட உவந்த மஹாகவி,
மாணவனை நோக்கி மனந்திறந்து பேசுகிறார்.

0 0 0

எல்லா உயிரும் இறையே! எனும் உண்மை,
சொல்லால் உரைக்கச் சோதிமிகு அறிவதனால்,
வல்ல மொழி தேடி வாய்திறந்து பாடுகிறார்.
கேளப்பா சீடனே! கழுதையொன்றைக்
கீழான பன்றியினைத் தேளைக்கண்டு
தாளைப்பார்த்(து) இருகரமும் சிர(ம்) மேற் கூப்பி
சங்கர சங்கர என்று பணிதல் வேண்டும்.
பதில் கேட்டுப் பரவசப்படுகிறது சீடனின் மனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், குருவின் முகத்திலோ குழப்பம்
தானுரைத்த பதிலில் பிழைகண்டு,
பதறுகிறது பாரதியார் நெஞ்சம்.
காணும் பொருளனைத்தும் கடவுளே!
எங்கும் இறைத்தரிசனம் எய்தலாம்!
சொல்ல வந்த பதிலின் சாரமிது.
பொருளுக்கு மாறான கருத்தோடு சொற்கள் விழுந்துவிட,
துவழ்கிறார் மஹாகவி.
எல்லாம் இறையெனின்,
பன்றிக்கும், தேளுக்கும் அடைமொழியாய்,
'கீழான' எனும் சொல் அமைந்தது குற்றமன்றோ!
மற்றவர் அழுக்கைச் சுமந்து,
தூய்மை செய்ய உதவுவது கழுதை,
மற்றவர்அழுக்கை உண்டு மகிழ்வது பன்றி
மற்றவரை விடத்தால் வருத்தி மகிழ்வது தேள்,
கழுதையின் செயலில் தியாகம்.
பன்றி, தேள்களின் செயல்களில் கீழ்மை.
செயல் வேறுபாடுகளால்,
கழுதையில் மதிப்பும்
பன்றி, தேள்களில்
வெறுப்பும் உண்டாக
கழுதையை வேறுபடுத்தி,
பன்றிக்கும், தேளுக்கும்.
'கீழான' எனும் அடையை கொடுத்துவிடுகிறது அவர் அறிவு.
இது முதற் குற்றம்.

0 0 0

இறையோ, குணம், குறி கடந்த பொருள்.
ஒரு நாமம், ஓர் உருவம் அற்ற பொருள்.
எவ்வடிவத்துள் கண்டு தொழினும்,
அவ்வடிவேயாய் நின்று அருளும் பொருள்
பெயர் கடந்த அப்பொருளை,
வைதீக வாழ்வில் ஊறிய பாரதியின் அறிவு,
'சங்கர, சங்கர' எனக் குறிகாட்டிப் பேசிவிடுகிறது.
இ∴து இரண்டாவது குற்றம்.

0 0 0

ஒன்றேயான பொருளைப் பிரித்த குற்றம்.
ஒன்றுமிலாப் பெயரை உரைத்த குற்றம்.
இரண்டு வரிக்குள் இரண்டு குற்றங்கள் எழுந்துவிட,
நாணுகிறது கவிஞர் நெஞ்சம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவனின் அறிவை மயக்கும் பதிலினை,
தானறிந்தும் சொல்லுதல் தவறென்று உணர்கிறார்.
சீடனை நோக்கி,
கீழான பொருளும் அவ் இறையே எனும் உண்மையை,
மீள உரைக்க மீண்டும் மொழிகிறார்.

கேளப்பா சீடனே! கழுதையொன்றைக்
கீழான பன்றியினைத் தேளைக் கண்டு
தாளைப்பார்த் (து) இருகரமும் சிர(ம்) மேற் கூப்பி
சங்கர சங்கர என்று பணிதல் வேண்டும்.
கூளத்தை, மலத்தினையும் வணங்கல் வேண்டும்.

0 0 0

மலத்தினையும் இறையென்று உரைக்கும்,
ஆசிரியன் மாண்பு கண்டு,
சிலையாகிப் போன சீடன்,
ஞானகுருவின் நன்நெஞ்சின் நயத்தினை,
மோனத்தால் வணங்கி முறுவலித்து நிற்கின்றான்.
மஹாகவி நெஞ்சமோ மயங்குகிறது மீண்டும்.
பதிலில் மனம்பொருந்தாப் பரிதவிப்பு,
மீண்டும் அவர் பார்வையில்.
குப்பையும், மலமுங்கூடக் கடவுளே!
கூளமும், மலமும் கீழ்மையின் குறியீடுகள்.
அவற்றுள்ளும் இறைவன் இருக்கிறான் என்றதில்,
பாதி உண்மையே பதிந்தது.
எல்லாம் இறையென்றது உண்மையெனின்,
தாழ்ந்தவையைத் தனித்து வரிசைப்படுத்தியது தவறன்றோ!
கூளமும், பொன்னுமென்றோ,
அன்னமும், மலமுமென்றோ,
உரைக்க முடியாமல் போனதன் உண்மையென்ன?
மஹாகவியின் மனத்துள் குழப்பம்.
தாழ்வு, உயர்வு எனும் தரப்படுத்தல்,
தம்மையறியாமல் தம் மனத்துள் பதிந்த,
உண்மை புரிகிறது.
எல்லாம் இறையெனின்,
வேறுபடுத்தி உரைத்தல் வீணன்றோ!
மாணவன் மனத்தை,
மயக்கும் இப்பதில் பாதித்தால்,
எங்கும் இறையைக் காணும் தகுதி,
அவனுட் தங்காது என உணர்ந்து,
தயங்கித் தெளிகின்றார்.
மீண்டும் ஒருதரம் மேன்மையாய்ப் பதிலுரைக்க,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டித் தெளிவாய் விளம்புகிறார்.
காணும் பொருளனைத்தும் கடவுளெனப் பதிலுரைத்து,
ஊனம் தவிர்த்து உண்மைதனைக் காட்டுகிறார்.

கேளப்பா சீடனே! கழுதையொன்றைக்
கீழான பன்றியினைத் தேளைக்கண்டு
தாளைப்பார்த்(து) இருகரமும் சிர(ம்) மேற் கூப்பி
சங்கர சங்கர என்று பணிதல் வேண்டும்.
கூளத்தை, மலத்தினையும் வணங்கல் வேண்டும்
கூடிநின்ற பொருளனைத்தின் கூட்டம் தெய்வம்.

0 0 0

அறிவே வடிவான ஆசிரியனை,
மாணவனின் கண்கள் மயங்கி நோக்குகின்றன.
ஒரு கேள்விக்கு மூன்று பதில்கள்.
ஒருமைப்படாத பதில்களால் உள்ளம் குழம்புகிறது.
வாக்கின் நோக்கமறியாது வாடுகிறான் அவன்.
மாணவனின் மயக்கம் உணர்கிறார் மஹாகவி.
தன் வார்த்தையின் மயக்கம்,
மாணவனின் அறிவின் மயக்கமாகும் ஆபத்துணர்ந்து,
தெளிவுபட மீண்டும் பதிலுரைக்க, சிந்தை கொள்கிறார்.
நீளத் தானுரைத்த நெடும்பதிலில் தன்னுடைய,
ஆழம் குறைந்த அவலம் தெரிகிறது.
மாணவனின் மனதை மயக்காது ஒரு வரியில்,
வானொத்த கடவுளை வணங்கும் இடம் காட்ட,
தேனொத்த கவியில் தெளிவாய்ப் பதிலமைத்து,
மீள அதையுரைத்து மேன்மையுறச் செய்கின்றார்.

கேளப்பா சீடனே! கழுதையொன்றைக்
கீழான பன்றியினைத் தேளைக்கண்டு
தாளைப்பார்(து) இருகரமும் சிர(ம்) மேற் கூப்பி
சங்கர சங்கர என்று பணிதல் வேண்டும்
கூளத்தை, மலத்தினையும் வணங்கல் வேண்டும்.
கூடி நின்ற பொருளனைத்தின் கூட்டம் தெய்வம்
மீளத்தான் இதைத் தெளிவாய் விரித்துச் சொல்வேன்.

0 0 0

முன் மூன்றுவரிகளில் சொன்ன பதில்களை,
விரித்துரைக்கப்போவதாய்,
நான்காம் வரியின் அரையடி நவில்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் பலபால்டகளாய் விரியுமோ?
நம் மனத்துள் ஐயம்
என்ன ஆச்சரியம்!
பாதியடியில் பதில் முடிந்து விடுகிறது.
மூன்றடிக் கருத்தை முழுமையாய் விரித்துரைக்க,
பாதியடியில் பதில் வந்து விழுகிறது.
சுருக்கியன்றோ சொல்லியிருக்கின்றார்.
விரித்துச் சொல்வதாய் விளம்பியது சரியா?
ஆராய நம்முடைய அகமெல்லாம் மகிழ்ச்சி,
வினா நீளலாம்.
பதில் நீளலாமா?
சிந்தை தெளிந்தால்,
செறிந்து பதில் பிறக்கும்
சொல் விரியப் பொருள் சுருங்கிற்று.
பொருள் விரியச் சொல் சுருங்கிற்று.
சுருங்கிய சொல்லுள் விரிந்த பொருளையே,
விரித்து சொல்வதாய் விளம்பினார் போலும்!

0 0 0

வீறுடைய கவிவேந்தர் விரித்துரைத்த பொருளென்ன?
அப்பொருளில் அவர் நமக்கு அளித்த தெளிவென்ன?
அண்ணாந்து பார்த்து ஆண்டவனைத் தொழுவோர்க்கு,
மண்பார்த்து இறை வணங்கும் மாண்புரைக்க முயல்கின்றார்.
விண்மட்டும் கடவுளென விளம்பும் அறியார்க்கு,
மண்ணும் கடவுளெனும் மகிமையுரைக்கின்றார்.
தாள் பணிந்து நிற்பாரைத் தாம் உதறி, தம்மைவிட,
மேலுள்ளோர் பின்சென்று மேன்மையுற முயல்வோர்க்கு,
வேதமென நற்செய்தி விளம்ப முயல்கின்றார்,
தாழ்ந்தோரை உதறித் தாமுயர, மேலோரின்,
தாள் பணிந்து நிற்பதுவே தரணியதன் இயல்பானால்,
எல்லோர்க்கும் மேலே இருக்கின்ற இறையதுவும்,
மேல் நோக்குதல் அன்றி மேதினியை நோக்கிடுமோ?
மக்கள் கவியின் மனத்துள் பெருங் கேள்வி,
கீழுள்ளோர்தமை அன்பால் கெழுமையுடன் நாம் நோக்க,
மேலுள்ள இறை விழியும் மேன்மையுற நமையெல்லாம்
தான்நோக்கி அருள் செய்யும்
தரணியது மேன்மையுறும்.
உண்மை உணர உவக்கிறது கவிநெஞ்சம்.

0 0 0

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மேன்மை நிகழ்தற்கு, இறைதன்னை உலகெல்லாம்
ஒன்றாகக் காணும் உயர்வே வழியாகும்..
சிந்தை தெளிய, தெளிவாய்ப் பதில் பிறக்க,
வந்து விழுகிறது வளமிக்க வார்த்தை பல.
ஓங்கும் கருத்தை உயர்வு சிதையாமல்,
பாங்காய் உரைத்துப் பாட்டை முடிக்கின்றார்.
விண் மட்டும் தெய்வம் என, வீணே நினையாது,
மண்ணும் கடவுள் எனும் மகிமை புரிந்திடுவாய்!
உண்மை முழுமைபட உரைத்து முடிக்கின்றார்.
பதில் தெளிந்த பரவசத்தில் பணிகின்றான் அச்சீடன்.
அவன் மூலம் அறிவுணர்ந்து ஆனந்தம் கொள்கின்றோம்
எங்கும் இறையே! எதிலும் இறை என்னும்,
மங்காப்பெருங் கருத்து மனதுள் பதிகிறது.
ஓங்கும் பெருங்கவிதை உளத்துள் பதிவாக,
பாங்காய் உலகெங்கும் பரமன் தெரிகின்றான்.
நீங்காது எங்கும் நிறைந்திருக்கும் அப்பொருளை
மண் அதிலும் கண்டு மகிழ்கிறது நம்நெஞ்சம்.

கேளப்பா சீடனே! கழுதையொன்றைக்
கீழான பன்றியினைத் தேளைக்கண்டு
தாளைப்பார்த்(து) இருகரமும் சிர(ம்) மேற் கூப்பி
சங்கர சங்கர என்று பணிதல் வேண்டும்.
கூளத்தை, மலத்தினையும் வணங்கல் வேண்டும்
கூடி நின்ற பொருளனைத்தின் கூட்டம் தெய்வம்
மீளத்தான் இதைத் தெளிவாய் விரித்துச் சொல்வேன்
விண்மட்டும் தெய்வமன்று மண்ணும் அஃதே.!

வாழ்க்கையில் எப்போதும்,
சமாதானத்தையும்
சகிப்புத்தன்மையையும்
நமது லட்சியமாக கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாமே தர வேண்டும் எங்களுக்கும்...

காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன்
துணைத் தலைவர் - கொழும்புத் தமிழ்ச் சங்கம்

இந்தியரின் வம்சவழி என்றிட்டாலும்
இம்மண்ணின் சொந்தம் நாம், உரிமை எல்லாம்
வந்தடைய வேண்டுமதில் ஏற்றத் தாழ்வு
வாராது சமமாகப் பெறுதல் வேண்டும்
எந்திரம்போல் எம் முன்னோர் உழைத்த பேறே
இம்மண்ணில் தேயிலையும் றப்பர் போன்ற
விந்தைமிகு விளைபொருட்கள் வருவாய் கூட்டும்
வரலாற்றில் பேருன்றிப் போனோர் நாமே.

உதிரத்தை வியர்வையினை உடலந் தன்னை
ஒன்றாக மண்செழிக்க உயிரைத் தானும்
விதிவசத்தால் அளித்தவரெம் முன்னோர் இன்றும்
வழங்குவது நாம்தானே சந்ததிப்பேர்
எதிர்காலம் எனவாகும் என்றே சற்றும்
எண்ணிடவும் வேண்டாவோ இதுகால் மட்டும்
கதிஈதென்[று] இருந்தோம்நம் கடமை தன்னைக்
கருத்தினிலே கொண்டெமது உரிமை கொள்வோம்.

கற்கின்ற உரிமையெமக் குண்டு கல்வி
கற்கத்தான் நாதியில்லை கல்விக் கூடம்
அற்பசொற்ப வசதிகளோ ளுண்டு வேண்டும்
அத்தனையும் பிறர்போல எமக்கும் வேண்டும்
கற்றறிந்த எம[து] அரசப் பிரபலங்கள்
கற்றறிந்தே எமதினமும் மேன்மை கொள்ள
முற்றுமுள்ள அத்தனையும் பெற்றளித்தல்
முக்கியதாம் பொறுப்பாகும் முயலதல் வேண்டும்
பல்கலைக் கழகமொன்று மலையகத்தோர்
பல்கலையுங் கற்றறியத் தனித்தே வேண்டும்
கல்லாதார் மலையகத்தில் இல்லை என்னும்
காலமொன்று விரைவினிலே தோன்ற வேண்டும்
சொல்லுக்குள் பலங்கற்றோர் சொல்லுக் காகும்
சபைமுதன்மை கொள்வதும் கற்றோர் தானே
இல்லாமை இல்லாது போக வேண்டின்
எழுத்தறிவின் துணையின்றி வேறொன் றில்லை.

ஜின்னாஹ் ஷரிபுத்தீனின் வெளிவந்த நூல்கள்

1. முத்துநகை 1989
2. பாலையில் வசந்தம் 1989
3. மஹ்ஜபீன் காவியம் 1992
4. புனித பூமியிலே காவியம் 1998
5. பனிமலையின் பூபாளம்1995
6. கருகாத பசுமை (புதினம்) 2000

7-8. ஜின்னாஹ்வின் இரு குறுங் காவியங்கள் 2001 (பிரளயம் கண்ட பிதா - தாய்க்கென வாழ்ந்த தனயன்)

9. கடலில் மிதக்கும் மாடிவீடு 2002 (சிறுவர் பாடல்)
10. அகப்பட்ட கள்வன் 2003 (சிறுவர் படக்கதை)
11. பெற்றமனம் 2003 (சிறுகதைத் தொகுப்பு)
12. எங்கள் உலகம் 2003 (சிறுவர் பாடல்கள்)
13. பண்டார வன்னியன் காவியம் 2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித வாழ்க்கையில் 18 படிகள்

திருமதி குமாரசாமி, கொழும்பு

1ம் படி தாய்

பாவங்கள் இருவகைப்படும். பிள்ளை இல்லை என்பது பெரிய விடயம். இப்பிறப்பில் எல்லா துன்பங்களையும் அனுபவிப்பர். இறந்த பின்பு நேராக இறைவன் பாதம் சென்று அமைதி அடைவர். வாழ்க்கையில் ஒரு தாய் சிறப்பானவள்.

2ம் படி தந்தை

கோள் சாரம் அவர் எப்படியான அறிவாளி என்று சொல்லி விடும் நல்ல தந்தை கர்ம வினைகளின் கைகளில் தங்கியுள்ளது. யாருக்கும் நல்லது செய்தால் நல்லது நடக்கும்.

3ம் படி நெல்

நல்ல தாய் தந்தையுடன் கர்ம வினைப்படி பிறப்பு நடக்கின்றது. நாலு பேர் வந்தால் உணவு கொடுக்கும் தகுதி பட்டினி இல்லை.

4 ம் படி அறிவு

ஞாபக சக்திக்கு வல்லாரை. பிரம்ம முகூர்த்தத்தில் கண் விழித்து உச்சி வெயில் படாமல் பார்த்துக் கொள்ளும் திறமை தலைமுழ்கி 16 விடயங்களையும் தத்தம் பண்ண வேண்டும். நாம் எதை செய்கிறேமோ அது நம்முடன் திரும்ப வரும். நம் பிள்ளைக்கு கல்வி வரவில்லை என்றால் எப்போதோ நாம் செய்த கல்வி தடை சுழற்சி முறையில் நம் பிள்ளைகளிடம் வந்து சேரும்.

18 படிகளையும் கடந்தவன் முழுமனிதன் ஆகின்றான். குழந்தை இல்லை என்றால் குழந்தையை தத்து எடுத்து வளர்த்தால் பிள்ளை தோஷம் நிவர்த்தியாகும்.

5ம் படி அழகு

கூன், குருடு, செவிடு இல்லாமல் பிறப்பது நல்ல நிறம், உயரம் அழகிய முக அமைப்பு.

6ம் படி கல்வி

இறப்புக்குப் பின் கூட வருவது கல்வி. கர்ம வினைதான் கல்வி ஞானத்தை தருவது.

7ம் படி விவேகம்

விவேகம் உடையவன் வாழ்வில் ஏழு படிகளையும் கடந்தவன். இங்கிதம் தெரிந்தவன்.

8ம் படி இளமை

ஆரோக்கியமான இளமை பெரும் பாக்கியம். சிறந்த மேதையாகவும் வெற்றியாளனாகவும் உலகம் போற்றும் அறிவு ஞானத்துடன் இளமையில் ஏற்படும் நட்பு, கல்வி அம்சங்கள், உற்சாகம், உடல் வலிமை, ஆரோக்கியம், அழகிய இளமை கிடைப்பது பெரிய பர்க்கியம்.

9ம் படி துணிவு

துணிவு இருந்தால் எதையும் தாங்கிக் கொள்ள முடியும். எந்த முடிவுகளையும் எடுக்க துணிவு தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10ம் படி பெருமை

அழகிய கூந்தல், அளவான அவ்யவங்கள், சரியான உயரம், நல்ல நிறம், ஞாபக சக்தி, மலச்சிக்கல் இன்மை, சீரான சுவாசம், சரியான வியர்வைப் பெருக்கு.

11ம் படி - நோயின்மை

பல பாவங்கள் நோயாக மாறி கணக்கு தீர்க்கின்றன. பாவத்துக்கும் நோய்க்கும் நிறைய ஒற்றுமையுண்டு. ஆரோக்கியமான அடித் தளத்துக்கு கர்ம வினைதான் காரணம்.

12ம் படி வலிமை

இனி பிறவி இல்லை என்று இருப்பவர்கட்கு இந்த ஜென்மத்தில் எல்லா துன்பங்களையும் அனுபவிப்பார். இது விதி. இறந்த பின்பு இறைவனிடம் செல்லும் பாக்கியம். எனவே இவர்கள் வாரிசுகள் இல்லாத வாழ்க்கை வாழ்வர்.

13ம் படி வெற்றி

வெற்றி என்பது அதிஷ்டத்துக்குட்பட்டது. அதை அடைய காரணம் உண்டு. சிலருக்கு எப்போதும் எதிலும் வெற்றி கிடைத்துக் கொண்டே இருக்கும்.

14ம் படி செல்வம் தங்கம்

தீ பட்டு ஒளி தருவது தங்கம். செல்வம், தங்கம் அடைய விதி சரியாக இருக்க வேண்டும். தரித்திரம் ஓடி விடும்.

15ம் படி புகழ்

புகழ் இறந்த பின்பும் தொடரும். செல்வம் சென்றுவிடும். புகழ் நிலைத்து நிற்கும்.

16ம் படி நல்லூழ் கர்மா

விதி அமைப்பு நல்ல வினைதான். நம் கணக்கில் இல்லாவிட்டால் எந்தப் பேறும் நம்மிடம் தங்காமல் போய்விடும். நல்ல கணவன், மனைவி, மக்கள் செல்வம் கிடைக்க நல்விதைதான் காரணம்.

17ம் படி நீண்ட ஆயுள்

வாழ்க்கைச் சுற்று 60 வயதைக் கடக்க வேணும். வாழ்வின் சிறப்புக்கு சாட்சியாக பேரன், பேத்திகளைக் காணும் பாக்கியம் கிடைக்கும். நீண்ட ஆயுளுடன் வாழ்ந்தால் அறிய முடியும்.

18ம் படி வாரிசு

பேறுகளில் இது 14 வது படி. ஆனால் படிகளில் 16 படி நல்லூழ் தொடங்கின்றபேறு நன்மை என்பது பேறுகளில் சிறந்தது. வம்சம் சிறக்க வாரிசு தான் பிரதானம். வயதான காலத்தில் நம்மை வைத்து காப்பாற்ற வேண்டியவர்கள் மக்களே. வாரிசு இருந்தும் சிலபேர் தனிமைபடுத்தப்பட்டுள்ளார்கள். இதுவும் கர்மாவிற்கு உட்பட்டது.

படி என்பது பணிவு, படிப்பு, முயற்சி மூன்றும் சேர்ந்தது தான் படி.

நீங்கள் விதைத்து இருந்தால் நாளை நீங்கள் அறுவடைக்கு தயாரக இருக்க வேண்டும். குற்றம் புரிந்து இருந்தால் அவமானத்துக்கு தயாராக இருக்க வேண்டும். இதையே வேதாந்தம் கூறுகின்றது.

எண்ணங்களை மாற்றுங்கள் உங்கள் வாழ்க்கையில் மாற்றம் வரும்.

- பணத்தை இழந்தால் குறைந்த நஷ்டம் நேரத்தை இழந்தால் எல்லாமே நஷ்டம்

  - அல்போன்ஸ்

- நீ இறக்கும்போது உனக்காக அழக்கூடியவர்களை உனது உயிருள்ளபோதே நீ தேடிக்கொள்

  - ஸ்டோனியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய வித்தகர்

கோகிலா மகேந்திரன்

யாழ்ப்பாண மாவட்டம் வலி வடக்குப் பிரதேசத்தின் தெல்லிப்பழை தென் மேற்குப் பகுதியில் அமைந்த, வாழையும், கமுகும், வெற்றிலையும், பலாவும் நிறைந்த அழகிய சிறு கிராமம் விழிசிட்டி. அங்கு வாழ்ந்த திரு. செல்லையா சிவசுப்பிரமணியம் அவர்கள் தமிழாசிரியர், பண்ணிசையாளர், புராண படலம், இசைநாடகம் செய்பவர். நீண்டகாலம் தெல்லிப்பளை சைவப்பிரகாச வித்தியா சாலையின் அதிபராகப் பணிபுரிந்தவர். வெள்ளை வாத்தியார் என்றும் புது வாத்தியார் என்றும் பிரதேச மக்களால் அன்புடன் அழைக்கப்பட்டார் அவரது துணைவியார் செல்லமுத்து அதிகம் படிக்காதவராயினும் கிராம மக்கள் அனைவருடனும் மிகுந்த அன்புடன் பழகுபவர். அவர்களது பிரச்சினைகளைத் தனிப்படக் கேட்டு தனக்குத் தெரிந்த வகையில் தீர்வு செல்லும் பழக்கமுடையவர். சிவசுப்பிரமணியம் செல்லமுத்து தம்பதியினருக்கு 1950.11.17இல் ஒரே மகளாகப் பிறந்தவர் கோகிலா.

கிராமத்துப் பாடசாலையாகிய விழிசிட்டி சிவஞான வித்தியாசாலையில் (இப்போது இது பன்னாலை சேர். கனகசபை வித்தியாசாலை என வழங்கப்படுகிறது) ஆரம்பக் கல்வியைத் தொடங்கி இடைநிலை மற்றும் உயர் கல்வியைத் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் பயின்றார் கோகிலா. பெற்றோருடன் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி ஆசிரியர்கள் இவரது ஆளுமையில் பெரும் செல்வாக்குச் செலுத்தினர். அப்போதைய கல்லூரி அதிபர் தெ.த.ஜெயரத்தினம் அவர்களிடம் ஆங்கிலமும், கவிஞர் சே. கதிரேசர்பிள்ளை அவர்களிடம் தமிழும், திரு. ச. பொ. கனகசபாபதி அவர்களிடம் விலங்கியலும் கற்கக் கிடைத்தது தனது பேறு என்று கோகிலா மகேந்திரன் கருதுகிறார். சிறுகதை, கவிதை, நாடகம், விளையாட்டு, பேச்சு, விவாதம், தலைமைத்துவம் என்று வாழ்வுக்கு அவசியமான பல பகுதிகளிலும் இவர் சிறப்படையத் தேவையான உரத்தைப் போட்டது மகாஜனக் கல்லூரி. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் மதுரை பண்டிதர் க. சச்சிதானந்தன் அவர்களிடம் தமிழும் உளவியலும் கற்க முடிந்ததும் ஒரு பாக்கியம் என்று இவர் கூறுவார்.

1974 இல் விஞ்ஞான ஆசிரியராக நியமனம் பெற்ற இவர் 1989 இல் அதிபர் தரப் பரீட்சையில் சித்தி பெற்று அதிபரானார். 1999 முதல் வலிகாமம் கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பணி புரிந்தார். இடையில் விஞ்ஞான பாட சேவைக்கால ஆலோசகர், ஆசிரியர் பயிற்சி வருகை விரிவுரையாளர், பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கியலும் பாடத்துக்கான வருகை விரிவுரையாளர் என்று பல முகம் கொண்டார். இடையில் உளவளத்துறைப் பயிற்சி முடித்து உளவளத்துறையாளர் ஆனார். அனர்த்த காலத்தில் வடக்குக் கிழக்கில் 150க்கும் மேற்பட்ட ஆசிரியத் துணையாளர்களைப் பயிற்றுவிக்கும் திட்டத்தில் இணைப்பாளராகவும் பிரதம விரிவுரையாளராகவும் இருந்து சிறப்பாகத் தொழிற்பட்டார்.

ஓய்வு பெற்றுக் கொழும்பில் வசித்த காலத்தில் உள வைத்திய நிபுணர் எஸ் சிவதாஸ் அவர்களின் உதவியுடன் உளவளத் துணை நிலையம் ஒன்றில் உளவளத்துணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கினார். பெரும் அனர்த்தம் நாட்டில் நிகழ்ந்து கொண்டிருந்த ஒரு காலப் பகுதியில் இந்தப் பணி பலரது மனங்களைச் சாந்தப் படுத்த உதவியது.

பின்னர் அவுஸ்திரேலியா சென்று சிட்னி மாநகரில் தமிழ்ப் பாடசாலைகள் இரண்டில் தமிழ் ஆசிரியராகவும், அரச பாடசாலைகள் இரண்டில் ஆங்கில மொழிமூலம் இந்து சமயம் கற்பிக்கும் ஆசிரியராகவும். வயதானவர்களுக்கு உளவளத்துணை வழங்குபவராகவும் பணிபுரிந்தார்.

திரும்பவும் நாடு திரும்பி தனியார் பாடசாலை ஒன்றில் விஞ்ஞானமும் ஆங்கிலமும் கற்பித்தார். இப்போது வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் தமிழ் மொழிமூலக் கற்கைகள் நிறுவனத்தில் உளசமூகவள நிலையத்தில் ஆலோசகராகப் பணி புரிகிறார்.

இவர் பிறந்த விழிசிட்டிக் கிராமத்தில் பலர் சைவ உணவுக்காரர். மென்மையான கலை உள்ளம் படைத்தவர்கள். தேவாரங் களைப் பண்ணோடு இசைப்பதில் புகழ் பெற்றவர்கள். இவரது உறவினர்கள் பலர் புகழ் பெற்ற மரபுப் பண்டிதர்கள் (பண்டிதர் சி. கதிரிப்பிள்ளை). இவரது தந்தையார் திரு. செ. சிவசுப்பிரமணியம் பண்டிதர் சி. கதிரிப்பிள்ளையின் மாணவர். இத்தகைய பின்னணியில் கோகிலா சிறு பிள்ளையாக இருக்கும்போதே நாள்தோறும் கிணற்றடியில் குளிக்கும்போது திருக்குறள் பாடம் நடக்கும். துலா மிதித்து இறைக்கும்போது தந்தையாரும் சிறிய தந்தையாரும் பாடும் தேவாரங்களும், இசை நாடகப் பாடல்களும், இலக்கியப் பாடல்களும் கோகிலாவின் காதில் இயல்பாக விழும். இந்தப் பாரம்பரியச் செல்வாக்கு இவரது மொழி சார்ந்த நுண்மதியில் செல்வாக்குச் செலுத்தியிருக்கலாம். கோகிலா எட்டு வயதாக இருக்கும்போது திருக்குறள் போட்டி ஒன்றில் மிகச் சிறு வயதில் அதிக குறள் மனனம் செய்தமைக்கான விசேட பரிசுபெற்று இவரது படம் வீரகேசரி பத்திரிகையில் வெளிவந்தது. மகாஜனக் கல்லூரியில் கவிஞர் செ. கதிரேசர்பிள்ளையின் தயாரிப்பில் இவர் நடித்த இரு நாடகங்கள் தேசிய மட்ட முதற்பரிசை வென்றன. இவ்வாறான இளம் பராயத்து அனுபவங்கள் இவருக்கு நல்ல தூண்டிகளாக அமைந்தன.

படைப்புகள்:

இவர் க. பொ. த. சாதாரண தரம் படிக்கும்போதே "மலர்களைப் போல் தங்கை" என்ற குறுநாவலை எழுதினார். ஆயினும் அது நண்பிகளும் ஆசிரியர்களும் வாசித்த தோடு சரி. பிரசுரத்திற்கு அனுப்பப்படவில்லை.

குயில் என்ற சஞ்சிகையில் 1972 இல் பிரசுரமான "அன்பிற்கு முன்னால்" என்ற சிறுகதையே இவரது அச்சில் வந்த முதல் படைப்பு. இன்றுவரை இவர் ஏறத்தாழ எண்பது சிறுகதைகள் எழுதியுள்ளார். கவிதைகள், நாவல்கள், நாடகங்கள், உருவகவிகள், விஞ்ஞானக் கதைகள், உளவியல் கட்டுரைகள் எனப் பல்வேறு தடங்களில் கால் பதித்து வெற்றி கண்டவர்.

இதுவரை வெளிவந்த நூல்கள்:

சிறுகதைத் தொகுதிகள்

1. மனித சொரூபங்கள் - 1982
2. முரண்பாடுகளின் அறுவடை - 1983
3. அறிமுக விழா - 1984 (புலோலியூர் ஆ. இரத்தினவேலோனின் சிறுகதைகளும் சிறுகதை விமர்சனங்களும் சேர்ந்து வெளிவந்தது)
4. பிரசவங்கள் - 1986
5. வாழ்வு ஒரு வலைப்பந்தாட்டம் - 1997.
6. முகங்களும் மூடிகளும் - 2003
7. மனதைக் கழுவும் மகாசமர்த்தர்கள் - தொகுப்பாசிரியர் - 2008
8. வரிக்குயில் - சிறுகதையும் விமர்சனமும் - 2016.

நாவல்கள்

1. துயிலும் ஒருநாள் கலையும் - 1986
2. தூவானம் கவனம் - 1989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடக நூல்கள்

1. குயில்கள் - 2001
   இரண்டாம் பதிப்பு - 2005
2. கிரேக்கத்தின் தொல்சீர் அரங்கு - 1997
3. அரங்கக் கலையில் ஐம்பதாண்டு - 2003

விஞ்ஞானப் புனைகதை

1. விஞ்ஞானக் கதைகள் - 2000
   திருத்திய இரண்டாம் பதிப்பு - 2017

தனிமனித ஆளுமை

1. தங்கத் தலைவி - (கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி பற்றியது)
2. விழிமுத்து - (தாயார் பற்றியது) - 1999
3. விழிசைச் சிவம் (தந்தையார் பற்றியது) 2009
4. கனகசபைக்குச் சென்ற கனகசபை - பதிப்பாசிரியர்

உளவியல்

1. சிறுவர் உளநலம் (Child Mental Health) - தமிழிலும் ஆங்கிலத்திலும் - பதிப்பாசிரியரில் ஒருவர் - 2002
   (மறுபதிப்பு 2005 - ஆங்கில சிங்கள மொழியாக்கம் - 2003 - மூன்றாம் பதிப்பு 2017)
2. மகிழ்வுடன் வாழ்தல் - பதிப்பாசிரியரில் ஒருவர் - 2003
3. சின்னச் சின்னப் பிள்ளைகள் - பதிப்பாசிரியரில் ஒருவர் - 2005
4. உள்ளக்கமலம் - பதிப்பாசிரியர் - 2006
5. முற்றத்தில் சிந்திய முத்துக்கள் -பதிப்பாசிரியர் 2006
6. சுனாமியில் சிதறிய சித்திரங்கள் - பதிப்பாசிரியர் 2006
7. எங்கே நிம்மதி - 2000
8. மனச்சோர்வு - 2006
9. மனமெனும் தோணி - 2008
10. உள்ளம் பெருங்கோவில் - 2009
11. உள்ளத்துள் உறைதல் - 2011

பெண்ணிய உளவியல்

1. நேர் கொண்ட பாவை - 2015

புனைவு இலக்கியம்

1. புலச் சிதறல் நெஞ்சம் - 2013

பாராட்டுக்கள், பரிசுகள், விருதுகள்

1. இந்து சமய தமிழ் கலாசார இராஜாங்க அமைச்சின் சாகித்திய விருது - பிரசுரங்கள் (சிறுகதைத் தொகுதி)-1986
2. இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சாகித்திய விருது - வாழ்வு ஒரு வலைப் பந்தாட்டம் (சிறுகதைத் தொகுதி) - 1997

இலக்கியத் துறையில் சர்வதேச மட்டப் பரிசு

1. நோர்வே தமிழ்ச் சங்கம் நடத்திய சிறுகதைப் போட்டி - 1986

மாகாணப் பரிசு

1. வடகிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் இலக்கிய நூற் பரிசு - வாழ்வு ஒரு வலைப்பந்தாட்டம் - 1997
2. வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பரிசு - மனம் எனும் தோணி உளவியல் நூல் - 2008

வேறு பரிசுகள்

1. இலங்கைப் பல்கலைக்கழகம் பேராதனைத் தமிழ்ச் சங்கம் வழங்கிய சிறந்த நடிகைக்குரிய விருது - 1973
2. சுடர் சஞ்சிகைப் பரிசு - 1979
3. சுடர் சஞ்சிகைப் பரிசு - 1980
4. நீர்ப்பாசனத் திணைக்களம் நடத்திய சிறுகதைப் போட்டிப்பரிசு - 1985
5. இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் நடாத்திய சிறுகதை, கவிதைப் போட்டிப் பரிசு - 1982
6. தாரகை நடாத்திய சிறுகதைப் போட்டிப் பரிசு - 1984
7. முரசொலி நடாத்திய குறுநாவல் போட்டிப் பரிசு - 1987
8. தகவம் சிறுகதைப் பரிசு - 1987
9. யாழ். இலக்கிய வட்டம் நடாத்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைப் பாடல் தொகுப்புப் போட்டிப் பரிசு - 1989

10. மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சித் திணைக்களம் - இலக்கிய வித்தகர் பட்டம் பெற்றமைக்கான பாராட்டும் பரிசும் - 1991

11. மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் கௌரவம் - 1994

12. தெல்லிப்பளைக் கோட்டம் நடாத்திய சர்வதேச ஆசிரியர் தினப் போட்டியில் கவிதைப் போட்டிப் பரிசு - 1997

13. குயில்கள் நாடகத் தொகுதிக்கு இலக்கியப் பேரவைச் சான்றிதழ் - 2000

14. தகவம் - நாலாம் காலாண்டுச் சிறப்புப் பரிசு - 2007

15. இலக்கியப் பேரவைச் சான்றிதழ் - முகங்களும் மூடிகளும் - 2008
மனம் எனும் தோணி - 2009

16. கொடகே தேசிய விருது - 2009

17. கொழும்பு தமிழ்ச் சங்கம் பெண்கள்தின மாண்புறு மகளிர் கௌரவம் - 2016

18. இரா. உதயணன் இலக்கிய விருது - நேர்கொண்டபாவை - 2016

19. தகவம் - மூத்த எழுத்தாளர் கௌரவம்- 2014

கௌரவப் பட்டங்கள்

1. இலக்கிய வித்தகர், கலைச்சுடர், சமூக திலகம், கலைப் பிரவாகம்.

அறிவே உயர்வு தரும்

- உலகில் மக்கள் செய்யும் பிழைகளுக்கெல்லாம் தலையாய பிழை அறிவு நூல்களைக் கற்காமல் இருப்பதே ஆகும். ஆனால், நல்ல நூல்களை வாசிப்பதை அன்றாடப் பணியாக்கிக் கொள்ளுங்கள்.

- மனிதனை உயர்த்துவது பணமன்று; பதவியன்று; குலமன்று; பருமன் அன்று; உயரம் அன்று; அறிவு ஒன்றுதான் மனிதனை உயர்த்த வல்லது.

- ஆண்டவனுக்கு பணக்காரன், இல்லாதவன் என்ற பேதங்கள் சிறிதும் கிடையாது. இறைவனின் சன்னதியில் அனைவரும் சமம் என்ற உணர்வோடு வழிபாடு செய்யுங்கள்.

- குடும்பத்தில் உள்ளவர்கள் அனைவரும் தினமும் ஒன்றுகூடி, காலை அல்லது மாலை நேரத்தில் வழிபாடு செய்வதால் குடும்பத்தில் அமைதியும், அருளும் தழைக்கும்.

- இனிமையான சொற்களைப் பேசுபவர்களுக்கு உலகில் எந்தத் துன்பமும் இல்லை. எமவாதனை உண்டாகாது. அவர் இருக்கும் இடத்தில் அருள் துலங்கும்.

- நாம் எந்தப் பாவத்தைச் செய்தாலும் தெய்வத்திடம் மன்னிப்பு பெற்று விடலாம். ஆனால், நன்றி மறந்த பாவத்தை தெய்வம் ஒருபோதும் மன்னிக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோசக்தியெனும் சங்கல்பசக்தி

சிவநெறிச்செல்வன் பெ. சிவகுமார் (SLPSI)
அகில இலங்கை சமாதான நீதவான்
அதிபர் - இந்து சிரேஷ்ட கல்லூரி, கண்டி.

மனோ சக்தி பற்றி ஆங்கிலத்திலும் தமிழிலும் எத்தனையோ புத்தகங்கள் வெளியாகி இருக்கின்றன. மனதின் சக்தியை மனோசக்தி என்று அழைக்கின்றோம். மனம் என்பது என்ன என்று இதுவரையில் எவரும் கண்டுபிடித்துச் சொல்லவில்லை. பொதுவாக உடலின் ஆற்றல் என்றும் மனதின் ஆற்றல் என்றும் தனித்தனியாக நாம் பிரித்துப் பேசினாலும் ஒன்றுக்கொன்று நெருக்கமான தொடர்புடையவை என்பது நிரூபிக்கப்பட்டு விட்ட உண்மையாகும்.

குறிப்பாக மனதின் பாதிப்பு உடல் இயக்கத்தில் பலமாற்றங்களை ஏற்படுத் துகிறது. பயம் ஏற்படுகின்றபோது இதயம் வேகமாகத் துடிக்கிறது. உடல் வியர்த்துப் போகிறது. உடம்பில் வேறு எத்தனையோ மாற்றங்கள் ஏற்படுகின்றன. மனம் சந்தோஷ மாக இருக்கும்போது உடல் புதிய பலம் பெற்றுவிட்டதைப் போல உணருகிறோம். ஒரு நாய் நம்மைத் துரத்திக் கொண்டு வரும்போது வழக்கமாக ஓடும் வேகத்தைவிட அதிக வேகத்துடன் நம்மால் ஓட முடிகிறது. இவ்வாறு மனம் பாதிக்கப்படுகின்றபோது உடலின் சக்தி கூடுவது உண்டு, குறைவதும் உண்டு. எனவே, மனதுக்கு உடலின் மீது உள்ள ஆதிக்கத்தை எவரும் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது.

நோய்களைக் குணப்படுத்துவதில் மனோதத்துவ முறை இப்போது பெரிதும் கையாளப்படுகின்றது. நோய் குணமாகா விட்டாலும் நோய் குணமாகிறது என்கிற நம்பிக்கையினை நோயாளிகளிடம் ஏற்படுத்துகின்றபோது நோய் குறையத் தொடங்குவதை மருத்துவர்கள் அனுபவ பூர்வமாக உணர்ந்திருக்கிறார்கள். ஒரு மருந்தை வெறும் மருந்து என்று சாப்பிடுவதை விட அது நிச்சயம் நோயை குணப்படுத்தும் என்கிற நம்பிக்கையுடன் சாப்பிடுகிறபோது நோய் விரைந்து குணமாவதாக ஆராய்ச்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. நம்பிக்கை என்பதே அடிப்படை விடயமாகிறது. நம்பிக்கை முற்றிலும் மனதைப் பொறுத்தது என்று சொல்ல வேண்டியதில்லை.

மனதின் இந்த ஆற்றல் பல்வேறு விதங் களில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. நாம் நடந்து செல்வதை ஒருவர் உற்று கவனிக்கிறார் எனத் தெரிந்தவுடன் நம்முடைய நடையில் மாற்றம் அல்லது தடுமாற்றம் ஏற்படுகின்றது. நாம் பேசுதில் மற்றவர்கள் தவறு கண்டுபிடித்து விடுவார்களோ என்று எண்ணிய உடனே, பேச்சில் தவறுகள் ஏற்பட ஆரம்பிக்கின்றன. இதுபோன்ற நிகழ்ச்சிகள் சாதாரணமாக நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. நாம் நாமாக இருப்பது கடினமான விடயம் போல் தோன்றுகிறது. அதாவது பல்லாயிரம் ஆண்டுகளாக ஏற்பட்டுவரும் பழக்க வழக்கத்தின் காரணமாக மனித இனத்திடம் இப்படியொரு மனப்பான்மை ஏற்பட்டிருக்கிறது. மற்றவர்கள் கவனிக்கின்றபோது ஏற்படுகின்ற இந்த குழப்பத்துக்கு பொதுவாக மனித நினைவு உணர்வில் பாரம்பரியமாக ஏற்பட்டு விட்ட பாதிப்புதான் காரணம் என்று மனோதத்துவ ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றார்கள். பாரம்பரியமான பழக்க வழக்கங்கள் மனித மனத்தை சுதந்திரமாகச் செயல்படாமல் கட்டுப்படுத்திவிட்டது என்கிற ஒரு கருத்தும் நிலவுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் கட்டுப்பாடுகளிலிருந்து விடுபட தியானம் ஒரு வழியாகக் கருதப்படுகின்றது. உண்மையும் இதுதான். ஒவ்வொரு மனிதனின் மனமும் ஏதாவது அனுபவங்களிலும் பந்தங்களிலும் ஆசைகளிலும் கட்டுப்பட்டு விடுகிறது. இதனை ஒவ்வொருவரும் தேவைக்கேற்ப மாற்றி அமைத்துக்கொள்ள முடியும்.

நம்முடைய சித்தர்களும் ஞானிகளும் யோகிகளும் மனக் கட்டுப்பாட்டில் வல்லவர்களாக இருந்தார்கள். நீரின் மேல் நடந்தும் காட்டினார்கள். இருதய துடிப்பை சிறிது நேரம் நிறுத்திக் காட்டினார்கள். உயிரை உடலைவிட்டு பிரித்துக் காட்டி னார்கள். நோய்களைப் பார்வையால் குணப்படுத்தினார்கள். தியான நிலையில் அமர்ந்துகொண்டே பூமியில் இருந்து உயரக் கிளம்பி சாதனைகள் புரிந்தார்கள். ஒருவர் ஒரே சமயத்தில் இரண்டு இடங்களில் இருக்கும் அற்புதத்தை நிகழ்த்திக் காட்டினார்கள். இவை அனைத்தும் எமது கற்பனைக்குக்கூட எட்டாத அற்புதங்களாகும். நமது அறிவிற்கு மீறிய பௌதீக விதிகளுக்கு மீறிய செயல்களாகும். மனக் கட்டுப்பாட்டின் மூலம் இம்மாதிரியான அற்புதங்களை நிகழ்த்த முடியும் என அவர்கள் நிரூபித்தார்கள்.

மனத்தைக் கட்டுப்படுத்தி ஒருமுகப்படுத்தப் பழகிக் கொண்டால் அதுவே ஒரு மகத்தான சக்தியாகிவிடுகின்றது. அனைவரும் அறிந்த சத்திய சாயிபாபா அவர்கள் சிறுவயதில் பல அற்புதங்களை நிகழ்த்தியபோது அவரறிந்த ஒரு யோகியர் அற்புதங்கள் நிகழ்த்தி உனது சக்தியை வீணாக்குவதிலும் பார்க்க உலக நன்மைக்காக உன் சக்தியை பயன் படுத்துவாயாக என்று கூறினாராம். அதுவே, பல கல்வி நிறுவனங்கள், வைத்தியசாலைகள் இலவசமாக பயன்படுத்த ஆரம்பமானது. மனோசக்தியால் அற்புதங்கள் நிகழ்த்த முடியும் என்பது முக்கியமில்லை. வாழ்க்கை மீது வெற்றி காண்பதற்கு அதை எப்படிப் பயன்படுத்துவது என்பது தான் முக்கியம். மனோசக்தியின் வலிமை எப்படிப்பட்டது என்பதைப் புரிந்துகொள்வதற்கு எழுதப்பட்ட அற்புதங்கள் சாட்சியங்களாகக் கருதலாம்.

இதில் கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்று உண்டு. நம் ஒவ்வொருவரிடமும் மனோ சக்தி இருக்கின்றது. இதன் முழுப்பலனையும் பெறுவதற்கு நாம் தவறிவிடுகின்றோம். எந்த ஒரு காரியத்தையும் எவராலும் சாதிக்க முடியும். நாம் செய்ய வேண்டியதெல்லாம் அந்தக் காரியத்தில் நமது மனோசக்தியை முழுமையாகத் திருப்புவதே ஆகும்.

வாழ்க்கையில் பல காரியங்களைச் செய்கிறோம். சில காரியங்களை கடமைக் காகச் செய்ய வேண்டியுள்ளது. இன்னும் சில காரியங்களை வேறு வழியில்லை என்பதற்காகச் செய்கின்றோம். நிர்ப்பந்தத்திற் காகச் சில காரியங்களைச் செய்கின்றோம். மனதை முழுமையாக செலுத்தி, ஆத்மார்த்த மாக செய்கின்ற காரியங்கள் மிகக் குறைவு. இதனால் உழைப்பின் முழுப்பலனும் நமக்குக் கிடைக்காமல் போய்விடுவதுடன் மன உளைச்சலுக்கும் சிந்தை மயக்கத்திற்கும் ஆளாகின்றோம்.

நமது எண்ணங்களின்படியே எல்லாக் காரியங்களும் எப்போது நடக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. எந்த ஒரு செயலும் அதனால் ஏற்படும் வெற்றியும் நம்மைப் பொறுத்தமட்டும் அமைவது இல்லை. அதனால் எதைச் செய்தாலும் எதிர்ப்புக் களையும் தடைகளையும் எதிர்பார்த்துத்தான் செய்யவேண்டும். அவை நேர்கின்றபோது சோர்வுக்கு இடம் கொடுக்காமல் இருக்க மன ஒருநிலை சக்தி தேவைப்படுகின்றது. இதனை சங்கல்பசக்தி என்றுகூட கூறலாம். இந்த சக்தி நம்மிடம் இயற்கையாக அமைந்திருக்காது. நீண்ட நெடுநாள் பயிற்சியின் மூலமாகத்தான் இதைப் பெறமுடியும்.

மனோசக்தி பொதுவாக எல்லோரிடமும் காணப்படுகின்ற ஒன்று என்றாலும் குழந்தைப் பராயம் முதல் ஏற்படுகின்ற பல்வேறு மனப் பதிவுகளால் மனோசக்தி நாம் விரும்புகின்ற திசையில் செயல்பட முடியாத நிலையைப் பெற்றுவிடுகின்றது. இந்த மனப்பதிவுகளை மாற்றுவதற்கு ஆக்கபூர்வ சிந்தனைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். ஆனால் குழந்தைப் பருவத்தில் பாதகமான ஆழ்மனப் பதிவுகள் எதிர்காலத்தில் மனோசக்திகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலம்பெற்றுவிடுகின்ற போது ஆக்கபூர்வமான சிந்தனைக்கான வாய்ப்பு குறைந்துவிடுகின்றது. இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் நம்முடைய சங்கல்ப சக்தியைப் பயன்படுத்தாமல் வெற்றிகாண முடியாது.

அடிப்படையில் மனம் நமக்குக் கட்டுப் பட்டதுதான். எனினும் அனுபவங்கள் ஏற்படுத்தியுள்ள ஆழ்மனப் பதிவுகளால் அது நம்மை இயக்கத் தொடங்குகிறது. அது செல்கின்ற திசையிலிருந்து அதை மாற்றி நாம் விரும்புகின்ற திசைக்கு அதைத் திருப்ப சங்கல்பசக்தி தேவையாக இருக்கின்றது.

பழக்கத்தாலும் அதிர்ச்சியாலும் வேறு பல காரணங்களாலும் ஏற்படுகின்ற ஆழ்மனப் பதிவுகள் அவ்வளவு சுலபத்தில் நம்மை விட்டு நீங்குவது இல்லை. நாம் மேற்கொள் கின்ற எத்தனையோ முயற்சிகளுக்கு அவை தடையாகிவிடுகின்றன. இந்தத் தடைகளோடு தான் நாம் வாழ வேண்டும் என்கிற அவசிய மில்லை. இவற்றை அப்புறப்படுத்தி வெற்றிகர மான வாழ்க்கையினை நம்மால் அமைத்துக் கொள்ள முடியும்.

தாழ்வு மனப்பான்மை, தன்னம்பிக்கை இல்லாமை, செய்யும் தொழில் திருப்தியின்மை, கிடைக்கின்றதை ஏற்றுக்கொண்டு வாழத் தெரியாமை போன்ற எதிர்மறை குணங்களுக்கு ஆழ்மனப் பதிவுகளே காரணமாக இருக்கின்றன. சங்கல்பசக்தியின் மூலமாகத்தான் இவற்றை அகற்ற முடியும். எங்களுக்கு இருக்கின்ற இந்த குறைபாடுகளை வெல்ல முடியும் என்கின்ற மன உறுதி எங்களுக்குள் ஏற்பட வேண்டும். தேனீர் குடித்தால் தான் வேலை செய்ய முடியும் என்ற நிலை இருந்தால், தேனீர் அருந்தாமல் வேலை செய்து பாருங்கள், பாட்டுக் கேட்டுக் கொண்டு படித்தால் தான் மனதில் பதியும் என்றால், அதனை நிறுத்திவிட்டுப் படியுங்கள், நீரைக் கண்டு பயம் ஏற்பட்டால், தைரியமாக படகுச் சவாரி செய்யுங்கள், மற்றவருக்கு முடியாது என்று ஒதுக்கப்பட்ட காரியங்களை வலிந்து ஏற்றுக்கொண்டு முடித்துக்காட்டுங்கள். இம்மாதிரி வலிந்து நீங்கள் செயற்பட்டால் வாழ்க்கைக்குத் தடையாக உள்ள அச்சங்களும் பழக்கங்களும் நம்மனதைவிட்டுத் தானாகவே நீங்கிவிடும். இவ்வாறு வலிந்து செயல்படுவதற்கு சங்கல்பசக்தி (Will Power) தேவைப்படுகிறது.

சிலர் தனிமையில் இருக்க பயப்படு வார்கள். இன்னும் சிலர் மேடைகளில் பேசவும் தமது திறமையை மற்றவர்கள் முன்பாக வெளிப்படுத்தவும் பயப்படுவார்கள். வேறு சிலர் கூட்டத்தைக் கண்டாலே பயம். இவ்வாறு மனிதர்கள் எத்தனையோ வகை பயங்களால் ஆட்டிப்படைக்கப்படுகிறார்கள். தாழ்வு மனப்பான்மை உள்ளவர்கள் எதிலும் பங்குபெறாமல் ஒதுங்கியே இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் எதைக் கண்டு அஞ்சுகிறார்களோ அதைத் துணிந்து செய்வதற்குப் பழகவேண்டும். இது முதலில் கடினமாகத்தான் இருக்கும். மனோசக்தியைப் பயன்படுத்தி வலிந்து இம்மாதிரி விடயங்களில் இவர்கள் ஈடுபடவேண்டும்.

மனோசக்தி எங்களுக்குச் சொந்தமான சக்தி. பல்வேறு பாதகமான அனுபவங்களால் அந்த ஆழ்மனச்சக்தி பாதிப்புக்குள்ளாகியிருக்கலாம். அதனை எம்மால் சரி செய்ய முடியும். மனோசக்தி என்பது காந்தசக்தி. அந்த காந்த சக்தியை நாங்கள் விரும்புகின்ற திசைகளில் எங்களால் இயக்க முடியும். படகு வழிதவறி செல்லும்போது துடுப்பின் உதவியினால் அதை சரியான பாதைக்குத் திருப்புவதைப் போல தவறான ஆழ்மனப் பதிவுகளால் திசைமாறிச் செல்லும் எங்கள் வாழ்க்கையை சங்கல்பசக்தி (Will Power) என்கின்ற துடுப்பைக்கொண்டு சரியான பாதைக்கு திருப்ப முடியும். சங்கல்ப சக்தி என்பது ஆண்டவனால் மனிதனுக்கு கொடுக்கப்பட்ட துடுப்பாகும் என்பதனை மறந்துவிடாதீர்கள். நீங்கள் மேற்கொள்கிற சங்கல்பப்படி உங்கள் மனதை உங்களால் வழிநடத்த முடியும். மனம் எங்களுக்குக் கிடைத்துள்ள ஒரு மகத்தான சாதனம். அதன் சக்தி எல்லையில்லாதது. அதை எங்கள் கட்டுப்பட்டில் வைத்திருக்கும்போது வேண்டியபோது பயன்படுத்த முடியும். முன்னேற்றத் திசையில் அதைச் செலுத்த முடியும். மனம் உறுதிப்பட்டுவிட்டால் ஆகாதது ஒன்றுமில்லை. ஆதலால் மனதை ஒரு நிலைப்படுத்தி சங்கல்பசக்தியை உள்வாங்கும் பயிற்சிகளை மேற்கொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுநீருடன் வலியின்றி இரத்தம் வெளியேறுவது ஆபத்தானது

டாக்டர் ச. முருகானந்தன்

சிறுநீருடன் இரத்தம் கலந்து வெளியேறுதல் பரவலாக உள்ள பிரச்சனை. எனினும் இதன் அளவு குறைவாக இருக்கும் போது இது தெரிவதில்லை. சிறுநீருடன் அதிக இரத்தம் வெளியேறும் போது இது அவதானிக்கப்பட்டாலும் கூச்சம் தொடர்பாக உடனே பலர் இதற்கான வைத்திய ஆலோசனையை நாடுவதில்லை. இது சில வேளைகளில் ஆபத்தான நிலைக்கு இட்டுச்செல்வதுண்டு. வயிற்று வலி, சல எரிவு, சலம் போவதில் சிரமம் இவற்றோடு இணைந்து இரத்தம் வெளியேறுவதை விட வலி, வேதனையின்றி இரத்தம் வெளியேறுதல் ஆபத்தானது.

சலத்துடன் இரத்தம் வெளியேறுவதற்கான காரணம்.

1. வலியுடன் வெளியேறுவது:

(அ) சிறுநீரக கற்கள் சிறுநீரகத்திலிருந்து சிறுநீர்ப்பாதை வழியே கீழிறங்கல்

(ஆ) சிறுநீர்ப் பாதையில் காயங்கள்

(இ) சிறுநீரகத்தில் காயங்கள் - பின்புறமாக நாரியில் அடிபடும்போதும் சிறுநீரகத்தில் காயம் ஏற்பட்டு சிறுநீருடன் இரத்தம் வெளியேறலாம்.

(ஈ) சிறுநீர்த்தொற்று - இதன்போதும் சிறிதளவு இரத்தம் கலந்து சிறுநீர் வெளியேறுவதுண்டு.

2. வலியின்றி வெளியேறுவதற்கான காரணம்

(அ) சிறுநீரக புற்றுநோய்

(ஆ) புறஸ்ரேற் புற்றுநோய்

(இ) சிறுநீர் கழிவகற்று தொகுதியில் ஏதாவது ஒரு இடத்தில் புற்றுநோய்க் கட்டி

(ஈ) சிறுநீர் கழிவகற்று தொகுதியில் ஏதாவது கட்டிகள் (Benign Tumours)

சிறுநீரக தொகுதி கற்கள்

உடலிலுள்ள முக்கியமான பணிகளில் ஒன்றான கழிவகற்றலை, கழிவகற்று தொகுதியே மேற்கொள்கின்றது. இதன் பிரதான உறுப்பு சிறுநீரகமாகும் (Kidney). மனித உடலில் வயிற்றின்கீழ் பின்புறமாக நாரியை அண்மித்த இருபுறமாகவும் இரண்டு சிறுநீரகங்கள் இருக்கின்றன. உடலில் நிகழ்கின்ற பல்வேறு தொழிற்பாடுகளின்போது வெளியாகும் கழிவுகளையும், உடலுறுப்புகளினதும், குருதியினதும் புதுப்பித்தலின் போது தோன்றும் கழிவுகளையும் வெளியேற்றாவிட்டால் உடலில் அவை தேங்கி ஆபத்துகளை ஏற்படுத்தும். எனவே, சிறுநீரகத்தின் தொழிற்பாடு முக்கியமானது.



இவ்வாறு கழிவகற்றப்படும் போது சில உப்புக்கள் படிந்து மெதுமெதுவாக கற்கள் தோன்றுவதுண்டு. காலப்போக்கில் இவை வளர்ந்து சிறுநீரக கற்களாக உருவெடுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன. குறிப்பாக கல்சியம் ஒக்சலேற் யூரிக் அமிலம் கற்களாக உருவாவதுண்டு. இவை உடைந்து கூரான பகுதிகள் சிறு நீரகத்திலோ, சிறுநீர்ப் பாதையிலே காயங்களை ஏற்படுத்தும்போது சலத்துடன் இரத்தம் வெளியேறலாம். இதே வேளை தாங்கமுடியாத வயிற்றுவலியும் ஏற்படலாம். சலக்கற்கள் ஒடுங்கிய சலப்பாதையை அடைக்கும்போது சலம் போவது சிரமமாவ துடன் சலத்தொற்றும் ஏற்படலாம். (Urinary Tract Infection). நவீன மருத்துவத்தில் இவற்றிற்கு சிகிச்சை உண்டு.

புரஸ்ரெற் வீக்கம்

ஆண்களின் சலம் வெளியேறும் பாதையில் புரஸ்ரேட் சுரப்பிகள் இருக்கின்றன. வயதான ஆண்களுக்கு இது வீங்கும் சாத்தியம் உண்டு. எனினும் இவை பெரும் பாலும் புற்றுநோயாவதில்லை. இவர்களில் பத்து வீதமானவர்களுக்கு புரஸ்ரெட் புற்றுநோய் ஏற்படும் சாத்தியமுண்டு. மலவாசலூடாக வைத்தியர் விரல்விட்டு பரிசோதித்து வீங்கியிருப்பின் அறியமுடியும். இவ்வாறு வீங்கியிருப்பவர்களில் பெரும் பாலோருக்கு புற்றுநோய் ஏற்படாதபோதிலும் இவ்வீக்கம் புற்றுநோயா என்பதை அறிந்து விரைந்து சிகிச்சையளிப்பது அவசியமாகும்.

P. S. A. குருதிப் பரிசோதனை மூலம் புரஸ்ரெட் வீக்கத்தை கண்டறிய முடியும். புற்றுநோயா என்பதை நவீன உபகரணங்கள் மூலம் கண்டறிய முடியும். இவர்களுக்கும் சலத்துடன் இரத்தம் வெளியேறுவதுண்டு. எனினும் இவர்களுக்கு வலி வேதனை இருப்பதில்லை. சலம் போவதில் சிரமம் இருக்கும். நேரத்துடன் கண்டறிந்தால் சிகிச்சை மூலம் பூரணமாக சுகம்பெற முடியும்.

காயங்கள் (Injuries)

ஓடியாடி விளையாடும் சிறுவர்களின் சிறு நீர்த்தொகுதியில் காயங்கள் ஏற்படுவதுண்டு. இவ்வாறனவர்களுக்கும் வலியுடன் இரத்தம் வெளியேறும். சில சிறுவர்கள் தமது ஆண்குறியில் முன்புறமாகவுள்ள தோலை பின்னோக்கி முன்னோக்கி நகர்த்தும் போதும் காயம் ஏற்பட்டு இரத்தம் வெளியேறுவதுண்டு. சிறுவர்களுக்கு சிறுநீர்க்கற்கள், புரஸ்ரெற் வீக்கம் என்பன ஏற்படுவதில்லை என்பதால் காயம் பட்டிருக்கிறதா என்பதை கண்டறிய



வேண்டும். விழுந்த, அடிபட்ட சம்பவங்கள் ஏற்பட்டதா என்பதையும் கேட்டு அறிந்து பரிசோதிக்க வேண்டும். சிறுநீருடன் குருதி வெளியேறுவதை தாமதமின்றி வைத்திய ஆலோசனையைப் பெறுவதன் மூலம் பல பிரச்சினைகளுக்கு சிகிச்சை மூலம் தீர்வு காணலாம்.

எழுதிய நூல்கள்:

- மீன் குஞ்சுகள்
- தரை மீன்கள்
- இது எங்கள் தேசம்
- இனிவானம் வசப்படும்
- ஒரு மணமகளைத் தேடி
- நாம் பிறந்த மண்
- அவர்கள் துணிந்து விட்டார்கள்
- ஃபீனிக்ஸ் பறவைகளாய் எழுவோம்
- உனது அருமை அறியாமல் போனேனே அம்மா
- கோடை மழை

குறுநாவல் / நாவல்

- இது ஓர் அழகிய நிலாக்காலம்
- நெருப்பாறு

கவிதை

- நீ நடந்த பாதையிலே
- துளிர்த்தெழும் புதுச்செடிகள்

கட்டுரை

- நாளை நமதே

மருத்துவம்

- எயிட்ஸ் இல்லாத உலகம்
- அம்மாவாகப் போகும் நீங்கள் அறிந்திருக்க வேண்டியவை
- உங்கள் குழந்தைகள் நலமாக வாழ
- தலையாய நோய்களும் தவிர்க்கும் முறைகளும்
- தொல்லை தரும் தொற்றா நோய்கள்.

தொடர்பு : டாக்டர் ச. முருகானந்தன்
071 817 4377

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் முதல் வெற்றிகரமான இருதய மாற்றுச் சிகிச்சை

வைத்தியக்குழு விசேட வைத்திய நிபுணர்

குமாரதாசன் ஞானகாந்தன்

எம். கோகிலேஸ்வரி ராமகுமார்

பிரதி அதிபர் - பெண்கள் உயர்தர பாடசாலை, கண்டி.

உயிரினங்களின் நல்வாழ்க்கையின் மூச்சு இருதயமாகும். அதனியக்கம் நிற்கும்போது உயிர் உடலிலிருந்து பிரிந்துவிடும். உயிருள்ள உயிருக்கு பிரதானம் துடிப்புள்ள இருதயமாகும். இது யாவரும் அறிந்தது. இத்தகைய துடிக்கின்ற ஓர் இருதயத்தைப் பிரித்தெடுத்து கவனமாய் மற்றொருவருக்கு இடமாற்றம் செய்து உயிரூட்டிய பெருமை இலங்கையில் முதன்முறையாக கண்டி போதனா வைத்தியசாலையில் நிகழ்ந்தது.

அன்று 2017.07.07 ஆம் நாள் இரவு ஏழு மணி, கண்டி போதனா வைத்தியசாலை மிகவும் வெற்றிகரமான இருதய மாற்றுச் சத்திர சிகிச்சையினை நிறைவேற்றியது. 1967.12.03 ஆம் திகதி தென்னாபிரிக்காவில் இருதய சத்திர சிகிச்சை நிபுணர் வைத்தியர் கிறிஷ்டியன் நீத்லிங் பேனாட் (Christiaan Neethling Burnard) என்பவரால் முதன்முறையாக இருதய சத்திரசிகிச்சை நிகழ்த்தப்பட்டது. ஐம்பது வருடகாலத்தின் பின் இலங்கையில் இத்தகைய நிகழ்வு நடைபெற்றது மாபெரும் வெற்றியாகும். அதனிலும் துறைசார் வல்லுனர்களின் பற்றாக்குறை, நவீன சிகிச்சை சாதனங்களின் குறைபாடு, சட்டரீதியான சவால்கள், தமது உறுப்புகளை வழங்குவதில் கொடையாளிக்கும் குடும்பத்தவருக்கும் உள்ள சிக்கல்கள் என்பனவற்றை பெரும் சவால்களாக எதிர்கொண்டபோதிலும் இத்தகைய இருதய சத்திரசிகிச்சை வெற்றிகரமாக நிகழ்த்தப்பட்டது பெருஞ்சாதனையாகும்.

மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் மூளை மரணமெய்திய இளைஞன் 24 வயது நிரம்பிய பிரதீப் சம்பத் என்பவரது இருதயம் “காடியோ மயோபதி” இருதய நோயினால் பீடிக்கப்பட்டு இருதய மாற்று தேவையுள்ள A+ குருதி வகை சார்ந்த அநுராதபுரத்தைச் சேர்ந்த ஒரு குழந்தையின் தாயான 37 வயது நிரம்பிய புஷ்பா குமாரி என்பவருக்கு இடமாற்றப்பட்டு உயிர்கொடுத்த பெருமை கண்டி இருதய வைத்திய சத்திர சிகிச்சை வைத்தியர்களைச் சாரும். மூளை இறந்தபின் உடலில் இயங்கிக் கொண்டிருந்த இருதயம் இன்னும் சில மணிநேரத்தில் யாருக்கும் பயனற்றுப்போகும் என்ற நிலையிலிருந்து விடுபட்டு அவ்விருதயத்தை மற்றுமொரு வருக்கு பொருத்தி அவரை உயிர் வாழ வைப்பதென்பது மகா புண்ணிய காரியம். தனது மகனின் அவயவங்கள் சிறுநீரகம், ஈரல், இருதயம் என்பன மற்றவரை வாழ வைக்கிறதே என்ற பெருநோக்கோடு பிரதீப் சம்பத்தின் பெற்றோர் இதற்கு சம்மதித்தனர். இவர்கள் ஊடகங்களுக்கு அளித்த பேட்டியில் “நாம் மகனை இழக்கப்போகின்றோம் என்பது பெருந்துன்பம் எனினும் மறுபிறவியை விசுவாசிக்கும் பௌத்தர்களாகிய நாம் இப்புண்ணிய செயற்பாட்டினூடே எமது மகன் அடுத்த பிறவியிலாவது நீண்ட ஆயுளுடன் வாழ வேண்டுமென பிரார்த்திக்கிறோம். அதற்கு இந்த புண்ணிய கருமம் உதவட்டும்” என கண்ணீர் மல்க கூறியமை எம்மை மெய்சிலிர்க்கச் செய்தது. பெருங்கல்வியறிவு குறைந்த கிராமவாசியான இப்பெற்றோரது இத்தகைய தியாக உணர்வு நமக்கெல்லாம் ஒரு பாடமாக அமைந்தது.

பெற்றோரின் முழுச் சம்மதத்துடன் இவ்விருதய சத்திர சிகிச்சை பெருவெற்றியாக 2017.07.07 இரவு 07 மணிக்கு நிறைவேறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞனின் உடலிலிருந்து இருதயத்தை விசேட வைத்திய நிபுணர் சுனில் அபேவிக்ரம பிரித்தெடுத்துத்தர அதனை மிகவும் பக்குவமாக இருதயம் பாதிக்கப்பட்ட பெண்ணின் உடம்பில் பொருத்தும் பெரும் பணியினை விசேட வைத்திய நிபுணர் திருவாளர் குமாரதாசன் ஞானகாந்தன் ஆற்றினார். இவருடன் வைத்திய நிபுணர் திருவாளர் முதித்த லங்சகாரவும் இணைந்து கொண்டார். இதில் மயக்க மருந்து ஏற்றல் வைத்தியர்களான ஜெகதி பெரேரா, அருணி ஜெயசேகர, பிரியந்த திசாநாயக்க ஆகியோரும் மற்றும் திருமதி சுனேத்திரா இருகல் பண்டார, ரொஷான் பரணகம ஆகிய வைத்திய நிபுணர்களும் கலந்துகொண்டனர். சகல சிகிச்சை முறைகளும் சர்வதேச இருதயம் மற்றும் நுரையீரல் மாற்று சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்கான சங்கத்தின் முக்கியமான அறிவுறுத்தல் கூற்றுக்களுக் கிணங்கவும் சங்க வழிகாட்டல் முறைமை களுக்கமையவுமே இடம்பெற்றன. இத்தகைய ஒரு கூட்டு முயற்சிக்குள் பிரதான பங்கேற்ற ஒருவராக நம்நாட்டு தமிழர் ஒருவர் இருப்பது தமிழருக்கு பெருமைப்படத்தக்க ஒன்று. சூரியனும் சந்திரனும் சும்மா இருக்கையில் விளக்கு விளம்பரம் கேட்கும் இக்கால கட்டத்தில் மிகவும் எளிமையாய் மிகவும் அமைதியாய் தாம் அடைந்த இவ்வெற்றியைக் கூட ஆடம்பரமில்லாது அடக்கமாய் அனுபவித்து மகிழும் ஓர் அறிவு பொக்கிஷம் தான் கண்டி போதனா வைத்திய சாலையின் இருதய மாற்று சத்திர சிகிச்சை சிறப்பு நிபுணர் குமாரதாசன் ஞானகாந்தன் அவர்கள்.

இந்த இருதய மாற்று சத்திர சிகிச்சையில் பிரதான பங்கேற்ற இருதய சத்திர சிகிச்சை சிறப்பு வைத்திய நிபுணர் திருவாளர் குமாரதாசன் ஞானகாந்தன் எமது மாணவ பரம்பரையினருக்கு ஒரு பின்பற்றத்தக்க பாத்திரம் (Role Model). அறிவுபூர்வமானவரை வழிகாட்டிகளாக ஆக்கிக்கொள்ள விளங்காத இளைஞர் சமூகத்திற்கு இப்படியானவர்களை வெளிக்காட்டித்தருவது ஊடகங்களின் பிரதான கடமையாக உள்ளது. அந்த வகையில் பிரசித்தமே விரும்பாத திருவாளர் ஞானகாந்தனின் பெரியளவு விருப்பமில்லாத போதும் இன்றைய நாட்டின் தேவைகருதியும் எமது சமூகத்திற்கு விழிப்புணர்வூட்ட வேண்டியதின் அவசியம் கருதியும் அவர் பற்றி கூற விளைகிறோம்.

''மகன் தந்தைக்காற்றும் உதவி இவன்தந்தை எந்நோற்றான் கொல் எனுஞ் சொல்'' என்ற வள்ளுவர் வாக்கிற்கு இன்று உலக வலைதளங்களெல்லாம் பெருமைப் பட்டுக் கொள்ளும் ஒருவராக இலங்கையர் மட்டுமன்றி சர்வதேசமும் இன்று முக நூல்களில் அவர்செய்த சாதனையை தாம் செய்தது போன்ற பாவனையில் பங்கேற்று மகிழ்ந்து கொண்டிருக்கின்றது.

இவரது தந்தை காலஞ்சென்ற முருகேசு குமாரதாசன். முன்னைநாள் கூட்டுறவு ஆணையாளர். எனவே, இலங்கை முழுவதும் தமது சேவைக்காக சென்றதால் அவரது பிள்ளைகளும் குடும்பமும் அவரோடு சென்று, சென்ற இடத்தில் கல்வி பயின்றனர். தாயார் சரஸ்வதி குமாரதாசன் சிறந்த இல்லத்தரசி. ஒரு தமக்கையார். அவர் தற்போது அவுஸ்திரேலியாவில் வாழ்கிறார். தம்பி ஒருவர் கொழும்பில் சிறுநீரக சத்திர சிகிச்சை நிபுணராக சேவைசெய்கிறார். தந்தையார் இடமாற்றம் பெற்று செல்வதால் திருவாளர் ஞானகாந்தனின் கல்வி பல்வேறு இடங்களில் அமைந்தது. இவரது முன்பள்ளிக் கல்வி மன்னார் புனித சேவியர் பாடசாலையிலும் ஆரம்பக் கல்வி (1 - 4 வரை) மட்டக்களப்பு மெதடிஸ்ட் கல்லூரியிலும் 5 - 13 வரையிலான இடைநிலை - உயர் கல்வி யாழ் மத்திய கல்லூரியிலும் கிடைக்கப் பெற்றது. கடுமையான யுத்த காலத்தில் தமது உயர்கல்வியை யாழ்நகரில் மேற்கொண்ட இவரது கல்வி கற்றலுக்கான சவால்கள் அப்போது நிறையவே காணப்பட்டன. இவர்களது வீடு நீர்வேலியில் இருந்தது. அங்கிருந்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு வருவதானது போக்குவரத்து தடைகளால் துவிச்சக்கர வண்டி பாவனையே. மின்சாரம் இல்லாத காலப் பகுதி. பாதுகாப்புப் படையினருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dr. Anil Abeywickrama

Dr. K. Gnanakanthan

Muditha Lansakara



Dr. Jagathi Perera

Dr. Aruni Jayasekera

Dr. Priyantha Dissanayake

Dr. Sunethra Irugalbandara

Dr. Roshan Paranamana

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராளிகளுக்கும் இடையிலான யுத்த பூமியில் இளைஞனான ஞானகாந்தனது கற்றலுக்கான சவால்கள் அதிகம். அதில் வெற்றிகண்ட இவர் வகுப்பிலும் உயர்தரத்திலும் முதல் மாணவனாகவே திகழ்ந்தார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் மருத்துவப் படிப்பை மேற்கொண்ட இவர் முதல் வகுப்பில் சித்திபெற்றார். பட்டப் பின்படிப்பில் சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சைகளில் பங்கேற்றார். இலங்கையின் முதலாவது சிறுநீரக சத்திர சிகிச்சையை செய்த பேராசிரியர் ஏ. எச். செரீப்டீன், பேராசிரியர் எம். எச். ஷெரீப் ஆகியோருடன் இவர் கடமையாற்றினார். பட்டப் பின் படிப்புக்காக இங்கிலாந்தில் ஒக்ஷ்போர்ட் பல்கலைக் கழகத்தின் ஜோன் ரெட்சிலியே மருத்துவமனையிலும் இங்கிலாந்தின் கிரேட் செபன் ஸ்ரீட் வைத்திய மனையிலும் சேவையாற்றி சிறந்த சத்திர சிகிச்சை அனுபவங்களைப் பெற்றார். இங்கு இருதய சத்திர சிகிச்சைகளில் பங்கேற்று பல அனுபவங்களையும் பெற்றார். இவ்வாறான இளவயதிலே இவர் பெற்றுக்கொண்ட அனுபவக் கல்வியின் பிரதிபலனே இன்று இத்தகைய சாதனையை இலங்கையில் நிகழ்த்த ஒத்துழைத்தது.

இதனைவிட இவர் தற்போது இரு பெண்பிள்ளைகளின் தந்தையாவார். அந்தவகையில் இவ்வகை மாபெரும் பொறுப்புக்களுடன் வைத்தியசாலையிலேயே நீண்டநேரம் செலவிடும் இத்தகைய மனிதருக்கு பின்னணியாகத் திகழ்பவர் இவரது மனைவி பகீரதி ஞானகாந்தனாவார். ஒவ்வொரு உயர்ந்த சாதனையாளர்களின் பின்புலத்தில் பெண் ஒருவர் இருப்பார் என்பது பொது வழக்கு. அதற்கேற்ப வைத்தியரது வேலைப்பளு நிறைந்த மக்கள் சேவையே தன் நோக்கமாகக் கருதிய இருதய வஸ்துவுக்கு வலுகொடுக்கும் அவ் இறைபணியை செவ்வனே நிம்மதியாய் இயற்ற வீட்டில் பக்க பலம் தேவை. அத்தகைய உந்துசக்தியாய் திகழ்பவர் வைத்தியரது பாரியார் பகீரதி ஞானகாந்தனாவார். இவரும் ஒரு விஞ்ஞான முதுநிலை பட்டதாரி. தமது தொழில்துறைகளை கைவிட்டுவிட்டு தமது கணவரதும் இரு பிள்ளைகளதும் கடமைகளில் மிகவும் சிரத்தையுடன் செயற்படுபவர். தம் கணவரைப் போலவே இவரும் மிகவும் எளிமையான நடைமுறைகளை பழக்கப் படுத்திக் கொண்டவர். கிருத்திகா, சக்திகா என்ற இரு பெண்பிள்ளைகளின் பள்ளி வேலைகள் மேலதிக சகல செயற்பாடுகளிலும் தனது கணவரதும் வீட்டினதும் அனைத்து வேலைகளிலும் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி செயற்படுவது வைத்தியருக்குக் கிடைத்த மற்றுமோர் வெற்றி. இத்தகைய உதவிகள் இல்லாதுபோனால் அவரது பளுநிறைந்த வைத்திய கடமையை செவ்வனே இயற்ற முடியாது போகும். இதுவும் இன்றைய படித்த பெண்பிள்ளைகளுக்கு ஒரு நல்ல உதாரணமாகும்.

இலங்கையின் முதல் இருதய மாற்று சத்திர சிகிச்சை நிகழ்ந்தவுடன் நடைபெற்ற செய்தியாளர் மகாநாட்டில் வைத்திய குழுவின் தலைவர் சிறப்பு வைத்திய நிபுணர் அனில் அபேவிக்ரம அவர்கள் தமக்கு நல்ல வைத்தியக்குழு வாய்த்ததென்றும் இவ்வெற்றிக்கு பின்னணியாய் இருந்த வைத்திய நிபுணர் கு. ஞானகாந்தன் மிகச் சிறந்த (ஹொந்த தக்ஷ வைத்தியவரயெக்) வைத்தியர் எனவும் இவரை புகழ்ந்துரைத்தது தமிழராகிய எமக்கு மிகப் பெருமிதமாய் இருந்தது. வைத்தியர் ஞானகாந்தன் அவர்கள் பணி மென்மேலும் சிறக்க “அகிலம்” அறிவியல் சஞ்சிகையினூடாக அகம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

3

முக்கனி	- மா, பலா, வாழை	மும்மலங்கள்	- ஆணவம், கன்மம், மாயை
முத்தமிழ்	- இயல், இசை, நாடகம்	மும்மூர்த்திகள்	- சிவன், பிரம்மா, விஷ்ணு
முத்தொழில்	- படைத்தல், காத்தல், அழித்தல்	முக்குற்றங்கள்	- காமம், வெகுளி, மயக்கம்
முப்பொறி	- மனம், வாக்கு, காயம்	முக்கடுகம்	- சுக்கு, மிளகு, திப்பிலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைநாடும் சூழலும்

Dr. S. Paskaranathan MBBS, DCH, DFM
Family Physician
Kandy

எமது சூழலானது காற்று, நீர், மண் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இவை மாசுபடுவதனால் அங்கு வாழும் தாவரங்களும் விலங்குகளும் மனிதர்களும் பல்வேறு வகையான பாதிப்புக்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

சூழல் மாசடையும் முறைகளாவன:

1. காற்று எவ்வாறு மாசடைகிறது என்பதை ஆராய்வோம்.

வெவ்வேறு வகையான இரசாயனப் பொருட்களும் தூசியும் வளிமண்டலத்துடன் கலப்பதன் மூலம் காற்று மாசடைகிறது.

அ) போக்குவரத்து வாகனங்கள் (உ-ம்) கார், பஸ், புகையிரதம் (கரிக்கோச்சி) மூலம் வெளியேற்றப்படும் புகை வளியில் கலக்கப்படுகிறது.

ஆ) தொழிற்சாலைகளிலும் வீடுகளிலும் வியாபார ஸ்தாபனங்களிலும் பாவிக்கப்பட்ட பிளாஸ்டிக் பெட்டிகள், போத்தல்கள், றப்பர் பொருட்கள், டயர்கள் ஆகியவற்றை எரிப்பதனால் அதில் வெளிப்படும் இரசாயனப் பொருட்களும் புகையும் வளியில் கலக்கின்றன.

இ) காடுகளை வெட்டி எரிப்பதனால் வெளியேறும் புகையும் வளிமண்டலத்தில் கலக்கிறது.

ஈ) பெரிய தொழிற்சாலையில் இருந்தும் மிகவும் கூடுதலான புகையும் இரசாயனப் பொருட்களும் வெளியேறி காற்றில் கலக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ) வீட்டினுள் சிகரெட், பீடி புகைப்பதன் மூலமும் நுளம்புச் சுருள் எரிப்பதன் மூலமும் வெளியேறும் புகையும் நச்சு வாயுவையும் வீட்டிலுள்ள அனைவரும் சுவாசிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

இவ்வாறு தொழிற்சாலைகளிலிருந்தும் வாகனங்களிலிருந்தும் வெளியேற்றப்படும் புகையில் காபன் மொனொக்சைட், நைட்ரஜன் ஒக்சைட், குளோரோ புளோரோ ஒக்சைட், கந்தக ஈரொக்சைட் ஆகிய நச்சு வாயுக்கள் காணப்படுகிறது. அவை காற்றில் கலக்கப்படுகிறது. இவற்றை மனிதர்களும் விலங்குகளும் சுவாசிப்பதால் பல்வேறு வகையான பாதிப்புக்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். அத்தோடு தாவரங்களும் பாதிக்கப்படுகின்றன.

மனிதர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை நோக்கினால் :

1. சுவாச நோய்கள் ஏற்படுவதற்கு முக்கிய காரணமாக அமைவது சூழல் மாசுபடுதலாகும்.

   அ) இதன் காரணமாக சுவாசக்குழாயில் அழர்ச்சி ஏற்பட்டு மூச்சு நோய் (Bronchial Asthma) உண்டாகிறது.

   ஆ) தூசிகளின் ஒவ்வாமை காரணமாக மூக்கழர்ச்சி (Rhinitis) ஏற்படலாம்

2. வளியிலுள்ள மாசுக்களினால் சுவாசத் தொற்று நோய் (Pneumonia) ஏற்படலாம். இதன் காரணமாக நெஞ்சு வலி, இருதய நோய் ஏற்பட வாய்ப்புள்ளது.

3. வளியிலுள்ள இரசாயனக் கழிவுகளை மனிதர்கள் சுவாசிப்பதால் புற்றுநோய் ஏற்படலாம் எனவும் கண்டுபிடித்துள்ளார்கள்.

நமது நாடு கடலினால் சூழப்பட்டுள்ளது என்பது யாவரும் அறிவோம். கடற்கரையை அண்மித்த பகுதியில் இயற்கையான காற்றோட்டம் காரணமாக வளிமண்டலத்துடன் நேரடியாகவே தொடர்பு உள்ளது. அதனால் சுத்தமான காற்று நிலத்தின் மேற்பரப்பை அடைவதற்கு வாய்ப்பு உள்ளது. ஆனால் மலையகத்தைப் பொறுத்தளவில் சில கிராமங்களும் நகரங்களும் மலைகளால் சூழப்பட்டு இருப்பதனால் வளிமண்டலத்துடனான காற்றோட்டம் மட்டுப்படுத்தப்படுகிறது. அத்தோடு அந்தப் பகுதியில் வாழும் மக்கள் மாசடைந்த காற்றையே சுவாசிக்க வேண்டி ஏற்படுகிறது. இதன் மூலம் அதிகமானவர்களுக்கு சுவாசநோய் ஏற்படுவதற்கு காரணமாகிறது.

2. நீர் மாசடைதல் எவ்வாறு என்பதை பார்ப்போம்:

அ) தொழிற்சாலைகளிலிருந்தும் வியாபார ஸ்தாபனங்களிலிருந்தும் வெளியேறும் கழிவுப்பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள் ஆறுகளையும் நீர்த்தேக்கங்களையும் சென்றடைவதனால் நீர் அசுத்தமடைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) உணவகங்களிலிருந்தும் வாகனங்கள் கழுவுமிடம் கராஜ் ஆகிய இடங்களிலிருந்தும் கழிவாகச் செல்லும் பொருட்களும் நீர்த்தேக்கங்களை சென்றடைகிறது.



இ) வேளாண்மை, பயிர்ப் பண்ணைகளில் பாவிக்கப்படும் இரசாயனப் பசளை வகைகள், கிருமி நாசினிகள் வாய்க்கால் மூலம் நீரோடைகளை அடைகிறது.

ஈ) சிலரின் வேண்டாத செயல்களினாலும் முறையற்ற கழிவறைப் பாவனையாலும் மலசல கூட கழிவுகள் வடிகான்களில் விடப்படுகின்றன. விசேடமாக மழைநேரங்களில் நகர்ப்புறங்களிலும் சேரிகளிலும் இவை நடைபெறுகிறது. அதனால் நீர் அசுத்தமாவதோடு நோய்க் கிருமிகளும் கலக்கப்படுகிறது.

உ) காற்றில் காணப்படும் இரசாயன வாயுக்களும் மாசுக்களும் மழை பெய்யும்போது மழைநீருடன் கலந்து நிலத்தை அடைந்தபின் ஆறு குளங்களை சென்றடைகிறது,



ஊ) விலங்குகளான ஆடு, மாடு, யானைகளை நீரோடைகளிலும் ஆறுகளிலும் கழுவுவதால் நீர் அசுத்தமடைகிளது.

மேற்கூறிய யாவும் நீரில் கலப்பதனால் நீரின் தன்மை பாதிக்கப்படுவதோடு நீரில் வாழும் மீன்கள், உயிரினங்கள் பாதிக்கப்படுகின்றன. அத்தோடு நீரைப் பாவிக்கும் மனிதர்களும் நோய்வாய்ப்படுகின்றனர்.

3. மண் மாசடைவதற்கான காரணிகளை ஆராய்ந்தால்:

அ) தற்காலத்தில் வேளாண்மை, மரக்கறிப் பயிர்கள், தேயிலைச் செய்கை ஆகியவற்றிற்கு பாவிக்கப்படும் செயற்கைப் பசளைகள், பூச்சி நாசினிகள், களை கொல்லிகள் ஆகியவற்றின் பாவனை மூலம் அவை மண்ணினுள் கலக்கப்படுவதனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணின் தரம் பாதிக்கபடுவதோடு மண்ணில் வாழும் உயிரினங்களும் பாதிப்புக்குள்ளாகின்றன.

ஆ) தொழிற்சாலைகளிலிருந்து அகற்றப் படும் கழிவுகள் மண்ணுடன் சேர்வதாலும், பிளாஸ்டிக் பொருட்களை எரிப்பதோடு மண்ணுள் புதைப்பதனால் மண்ணின் தன்மை மாறுபடுகிறது.

இவ்வாறான செயற்பாடுகளினால் மண் செழிப்பற்றதாவதோடு தாவரங்கள் வளருவதற்கு ஏற்பற்றதாகிறது. இது உணவுச் சங்கிலியில் உள்ள மற்ற உயிரினங்களையும் பாதிக்கிறது.

மேற்குறிப்பிட்ட கருத்துக்களை மனத்திற் கொண்டு நோயற்ற வாழ்வே குறைவற்ற



செல்வம் என்பதற்கமைய அவைகளை திருத்தி வாழ்வதற்கு பழகிக் கொள்வோமானால் நோய் நொடிகளை தவிர்த்துக் கொள்ளலாம்.

சுத்தமான காற்றை சுவாசிப்போம். சுத்தமான நீரை ஆகாரத்தை உட்கொண்டு சுகமாக வாழ்வோம்.

LIFE



" LIFE IS AN OPPORTUNITY, BENEFIT FROM IT.

LIFE IS BEAUTY, ADMIRE IT.
LIFE IS BLESS, TASTE IT.
LIFE IS DREAM, REALIZE IT.
LIFE IS CHALLENGE, MEET IT.
LIFE IS A DUTY, COMPLETE IT.
LIFE IS A GAME, PLAY IT.
LIFE IS PROMISE, FULFIL IT.
LIFE IS SORROW, OVER COME IT.
LIFE IS A SONG, SING IT.
LIFE IS A TRAGEDY, CONFRONT IT.
LIFE IS AN ADVENTURE, DARE IT.
LIFE IS LUCK, MAKE IT.

LIFE IS TOO PRECIOUS, DO NOT DESTROY IT.
LIFE IS LIFE, FIGHT FOR IT

(MOTHER - TERESA)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையான நட்பு எது?...

கலாபூஷணம் வயலற் சரோஜா
B.Com. Dip.in.Ed. M.Com. (Hon.)

நட்பு என்றால் என்ன? நட்பு என்பது இரண்டு உள்ளங்களுக்கிடையிலான முரண்பாடற்ற தூய உறவு, அன்பின் பிணைப்பு நட்பு எனலாம். இத்தூய நட்பு, தனிப்பட்ட நபர்களுக்கு இடையில் மட்டுமல்ல, பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் விரிந்து செல்லலாம். சகோதரர்களுக் கிடையில் வளரலாம். ஏன் கணவன் மனைவிக் கிடையிலும் ஒரு அன்புப்பாலமாக அமையலாம்.

நட்பிற்கும் காதலுக்கும் பெரிதாக ஒன்றும் இடைவெளியில்லை. நட்பிற்குள் காமம் இருக்காது. காதலுக்குள் நிச்சயம் காமம் இருக்கும். இந்த உலகத்தில் விலைமதிக்க முடியாத ஒன்று உண்டென்றால் அது நட்பு மட்டும்தான். இந்த நட்பின் ஆரம்பமே மனந்தான்.

"மனித மனத்தில் இருந்தே எல்லா நன்மை தீமைகளும் ஊற்றெடுத்துப் பாய்வதாக" சித்தர்கள் கூறுகின்றார்கள்.

நட்பிற்கு இலக்கியம் கூட பல்வேறு இலக்கணங்களைக் கூறுகிறது. (நாலடியார் - 213 ல் பாடுகிறார்.)

யானை அனையவர் நட்பு ஓரீ இ நாய் அனையார்
கேண்மை கெழீ இக் கொளல்வேண்டும் - யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்,
மெய்யதா வால்குழைக்கும் நாம் எறிந்தவேல்.

நட்பை இரண்டாகப் பிரிக்க முடியுமாம்
ஒன்று யானையின் குணம்போன்ற நட்பு
இரண்டு நாயின் குணம் போன்ற நட்பு

யானை அறிந்தறிந்தும் பழகிய பாகனையே கொல்லும் அளவிற்கு நன்றியுணர்வற்றது! ஆகையால் நம்பத் தகாதது. யானைக்கு எவ்வளவு நெருங்கிப் பழகி நன்மை செய்தாலும் ஒரு குற்றம் நேர்ந்தால் அதைப்பெரிதாகப் பாராட்டி பழிவாங்கியே தீருமாம். அதே போன்றது சிலரது நட்பு.

நாய் நன்றி மறவாதது. சில நாட்கள் தீனியிட்டுக் காத்தவர்! தன்மேல் 'வேலை' எறிந்து புண்படுத்தியபோதிலும் அந்தவேல் உடலைத் தைத்துள்ள நிலையிலும் அவரைக் கண்டு வால் குழைக்கும் அளவிற்கு நன்றி யுணர்வு மிகுந்தது. யானையின் நட்பு தீயது. நாயின் நட்பே மேலானது. நாயின் நட்பு போன்ற நட்பிற்கு உதாரணமாக சிலப்பதிகாரத் தில் கண்ணகியைக் கூறலாம். சிறிது காலமேனும் தனக்கு அன்பு செலுத்திய கோவலன் வேறு ஒரு பெண்ணுடன் நட்புறவு கொண்டு சொத்துக்களையெல்லாம் இழந்து நிர்க்கதியாக வந்தபோதும் வெறுத்தொதுக்காது தனது விலைமதிப்புள்ள சிலம்பைக் களற்றிக் கொடுக்கிறாள் விற்பதற்கு. ஆனால், பொற்கொல்லனின் சூழ்ச்சியால் கோவலன் 'கள்வன்' எனக் குற்றம் சாட்டப்பட்டு கொல்லப் படுகிறான். இதை அறிந்த கண்ணகி, சீற்றங்கொண்டு மன்னர்முன் நீதி கேட்டதுமட்டு மன்றி பூம்புகாரையே தீக்கிரையாக்கி விடுகிறாள். இது தீமை செய்தாலும் நன்மைபயக்கும் நாயின் நட்பிற்கு ஒப்பானது. இதைத் தான் திருவள்ளுவரும்:

கொன்றன்ன இன்னா செயினும் அவர் செய்த
ஒன்று நன்று உள்ளக் கெடும்.

திருக்குறள் - 109

ஒருவர் கொல்வது போன்ற தீங்கிளைத்த போதிலும் அவர்செய்த நன்மை ஒன்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்து அவர் செய்த தீமையை மறந்து விடுவது. அதேவேளை பழைய அன்பு நீங்காது வாழ்வார் நட்பிற்கு இன்றி அமையாதது நன்றியுணர்வொன்றேயாகும்.

காதலில் நட்பைவிட மிகையாகவுள்ளது, உடற்கூறு பற்றி இயற்கையில் அமைந்துள்ள, பிணைப்பு ஒன்றே காதலில் மிகுதியாக வுள்ளது. இது தவிர காதலுக்கும் நட்பிற்கும் வேறுபாடு கிடையாது. நட்பிற்காக தன் உயிரையே தியாகம் செய்வது போன்ற உயரிய பண்பு எதுவுமே கிடையாது. இவ்வாறான உயரிய பண்பு யேசுநாதரிடம் காணப்பட்டது. வள்ளுவர் கூறுவார்:

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

(788வது குறள்)

நண்பனுக்கு தீமைநேரும் போது உடனே சென்று அந்தத்துயரை நீக்கும்படி உதவி செய்தலே நட்பாம்.

ஆனால், சரித்திரங்களில், இதிகாசங்களில் நாம் யானை போன்ற தீயநண்பர்களையும் இனங்காண முடிகிறது. அன்றொருநாள் தீராதநோயாற் பீடிக்கப்பட்டு யேசுவின் தயைநாடி வந்தவன் தான் "யூதாஸ்கரியோத்" என்பவன். யேசு அவன் நோயைக் குணமாக்கி விடுதலை அளிக்கிறார். அன்று முதல் அவரது சீடனாகி அவரது நட்பிற்குப் பாத்திரமாகியவன் முப்பது வெள்ளிக்காசுக்காக யூதர்களுக்கு யேசுவை முத்தமிட்டு காட்டிக் கொடுக்கிறான். அப்போது யேசு அவனைப் பார்த்து "நண்பா! முத்தமிட்டா காட்டிக் கொடுக்கிறாய்?" என்று கேட்கிறார். இவ்வாறு நன்மைகளைப் பெற்றுவிட்டு கூடயிருந்தே குழிபறிக்கும் நட்புக்கள் எத்தனை?.... எத்தனை ?... எல்லாமே மண் வெறியால் விளைந்த விளைவுகள் தான்.

அந்த வெள்ளிக் காசால் வாங்கப்பட்ட பூமி "இரத்தத்தின் நிலம்" என்று அழைக்கப் படுகிறது. யுதாஸ்கரியோத்தின் மனச்சாட்சி அவனை உறுத்தியதால் தற்கொலை செய்துகொண்டான்.

தீயநட்பிற்கு இன்னுமோர் சிறந்த உதாரணம்: ரோமாபுரியின் பேரரசன் உலகின் மாவீரன் என வர்ணிக்கப்பட்டவர் ஜூலியசீசர். உலகமே வியந்து நோக்கிய அந்த மாமனிதரின் மரணம் உலகிற்கே ஓர் பாடமாக அமைந்தது. எதிரிகளைப் பூண்டோடு அழித்த மாவீரன். தன்னைவெல்ல எதிரிகளே இல்லை என்ற நிலையை ஏற்படுத்தியவன்.

ஆனால், நண்பர்கள் ஒன்றிணைந்து அவரைக் கொலை செய்யத் திட்டம் தீட்டி சூட்சுமமாக மிக மிக நெருக்கமான நண்பன் ப்ரூடஸ்சைத் தூதுவிட்டு சீசரின் மனதைமாற்றி சீசரது வலதுகரத்தைப் பாசமாகப்பற்றி அரச அவைக்கு அழைத்துவந்தான் 'ப்ரூடஸ்'.

சீசரின் உற்றநண்பனே அவனுக்கு மரணக் குழி வெட்டினான். நண்பர்கள் உற்சாகமாகக் கரகோஷத்துடன் வரவேற்றவர்கள், எதிரிகள் தாங்கள் மறைத்து வைத்திருந்த பிச்சுவாக் கத்திகளால் சரமாரியாகக் குத்தினார்கள், 'காசியஸ்' சீசரின் முதுகிற்குத்த, அவரது அன்பிற்கும், நம்பிக்கைக்கும் பாத்திரமான 'புருட்டஸ்' அவரது இடுப்பிற் குத்தினான்.

ப்புருட்டஸ் குத்தியபோது 'சீசர்' கூறிய வார்த்தைகள் "புருட்டஸ் நீயுமா?" இறுதியில் சீசர் முப்பத்தைந்து கத்திக்குத்துகளுடன் குடைசாய்ந்தார்.

இராமாயணத்தில் கைகேயின் நட்பு இராமரைக் காடாள வைத்தது. அனுமனின் நட்பு வெற்றியுடன் சீதையையும் மீட்டுத் தந்தது.

மஹாபாரதத்தில் கர்ணன் நண்பன் துரியோதனனுக்காக உயிரையே கொடுத்தான். இராமாயணத்தில் இராவணனுக்காக கும்பகர்ணன் உயிரையே ஈந்தான்.

காதல் கண்மூடித்தனமானது. ஆனால் கண்ணைத் திறப்பது கல்யாணந்தான். "Love is blind but Marriage is real eye opener"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்துகொள்ள ....

1. தங்கள் நாட்டின் முதலாவது ஜனாதிபதியின் பெயரை தலை நகரத்திற்குச் சூட்டியநாடு
"அமெரிக்கா - வாஷிங்டன்"

2. இரண்டு தேசியக் கொடிகளுள்ள நாடு
"ஆப்கானிஸ்தான்"

3. வருடந்தோறும் புதிய ஜனாதிபதியைத் தெரிவுசெய்யும் நாடு
"சுவிற்சர்லாந்து"

4. திருமணமத்தின்போது தேசிய கீதம் பாடப்படும் நாடு
"நைஜிரியா"

5. எதிர்க் கட்சிகள் இல்லாத பாராளுமன்றம்
"சிங்கப்பூர்"

6. 188 நாடுகளின் தேசிய கீதங்களைப் பாடி சாதனை படைத்தவர்
"மைக்கல் சாகர் (சுவீஸ்)"

7. 4 முறை அமெரிக்க ஜனாதிபதியாக வரப்பேறுபெற்றவர்
"தியோடர் ரூஸ்வெல்ட்"

8. ரூபாய் நோட்டில் விநாயகர் உருவம் பதித்த நாடு
"இந்தோனேசியா"

9. தேசிய கொடி இல்லாத நாடு
"மஸிடோனியா"

10. தேசிய கொடியை முதல் முதலில் அறிமுகம் செய்தநாடு
"டென்மார்க் (1219)"

11. வெறும் இசையை மட்டும் தேசிய கீதமாகக்கொண்ட நாடு
"பஹ்ரைன்"

12. உலகின் முதற் குடியரசு நாடு
"ஸ்பர்டா"

13. உலகின் மிகச்சிறிய தேசிய கீதத்தைக் கொண்ட நாடு
"ஜப்பான்"

14. உலகில் மிக நீண்ட தேசிய கீதத்தைக் கொண்ட நாடு
"கிரேக்கம்"

திருக்கோயில் வழிபாடு ....

தொகுப்பு : வயலற் சரோஜா

- இறைவன் உறையும் இடம் கோயில். அது மிகவும் தூய்மையாகவும் புனிதமாகவும் இருக்க வேண்டும்.
- நாம் கோயிலுக்குச் செல்லும்போது நீராடி, தோய்த்து உலர்ந்த ஆடை அணிந்து செல்ல வேண்டும்.
- கோயிலுக்கு வெறுங்கைகளோடு செல்லலாகாது. தேங்காய், பழம், பாக்கு வெற்றிலை, கற்பூரம், பூக்கள், பூமாலை முதலியவற்றைக் கொண்டு செல்லல் இன்றியமையாதது.
- கோயிலை அண்மித்ததும் முதலிற் கோபுரத்தை வணங்க வேண்டும்.
- அதன் பின்னர் கை, கால் கழுவிச் சுத்தமாக ஆலயத்திற்குள் செல்லல் வேண்டும்.
- ஆலயத்திற்கு உள்ளே சென்று முதலில் விநாயகரை வணங்க வேண்டும்.
- ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும் பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்ய வேண்டும்.
- பூசையின்போது பஞ்ச புராணங்கள் ஓதுதல் வேண்டும். பஞ்சபுராணம் பாடும் அமைப்பு முறை:

1 வது தேவாரம்
2 வது திருவாசகம்
3 வது திருவிசைப்பா
4 வது திருப்பல்லாண்டு
5 வது பெரியபுராணம் பாடி முடித்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பூசைகள் நிறைவுற்றதும் விபூதி, தீர்த்தம், சந்தனம், குங்குமம், பூக்கள் முதலிய பிரசாதப் பொருட்கள் வழங்கப்படும். அப்புனிதப் பொருட்களை வழங்கும்போது, இடதுகைமீது வலதுகையை வைத்து வாங்குதல் வேண்டும்.

- வழிபாட்டின் நிறைவின் போது சண்டேசுவரப் பெருமானை மும்முறை கைகளைத் தட்டித் தரிசனப் பலனைத் தருமாறு வேண்டுதல் முறையாகும்.

- திருமாலின் பத்து அவதாரங்கள்:
  - மச்சாவதாரம்
  - கூர்மாவதாரம்
  - வராகவதாரம்
  - நரசிம்மாவதாரம்
  - வாமனாவதாரம்
  - பரசுராமவதாரம்
  - இராமாவதாரம்
  - பலராமாவதாரம்
  - கல்கி அவதாரம்

- விநாயகரின் பஞ்சபூதத் தொடர்புடைய இருக்கைகள்:
  1. அரசமரம் - ஆகாயம்
  2. வதராயணமரம் - வாயு
  3. வன்னிமரம் - தேயு (அக்கினி)
  4. நெல்லிமரம் - அப்பு (நீர்)
  5. ஆலமரம் - பிருதிவி (மண்) என்பனவாகும்.

- விநாயகருக்கு உகந்த பத்திரங்கள் இலைகள்:
  1. முல்லைப்பத்திரம்
  2. வில்வம் பத்திரம்
  3. இலந்தை இலை
  4. வன்னி இலை
  5. கண்டங்கத்தரி இலை
  6. எருக்கலை
  7. விஷ்ணுகிரந்தி இலை
  8. தேவதாரு இலை
  9. அரசு இலை
  10. தாழை இலை
  11. கரிசிலாங்கண்ணி இலை
  12. ஊமத்தை இலை
  13. வெள்ளறுகம்புல் வேருடன்
  14. நாயுருவி பத்திரம்
  15. அரளி இலை
  16. மருதை இலை
  17. மாதுளை இலை
  18. மருவு பத்திரம்
  19. ஜாதி மல்லிகை இலை
  20. அகத்திக் கீரை முதலியவையாகும்.

* அர்த்தமற்ற பல செயல்களை விட, அர்த்தமுள்ள ஒரு செயல் போதுமானது. கனவுகளோடு வாழுங்கள். கனவுகள் இல்லாத வாழ்க்கை சிறகுகள் இல்லாத பறவைக்குச் சமன்.

* நீ சுமக்கின்ற நம்பிக்கை நீ கீழே விழும்போது உன்னைச் சுமக்கும்.

- அப்துல் கலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபுக் கவிதை

நா. பார்த்தீபன்
சிரேஷ்ட விரிவுரையாளர், வவுனியா கல்வியியற் கல்லூரி

“கவிதை உலகமே தனி உலகம். அறிவு அனைத்தையும் தன்னுள்ளே கொண்டது கவிதை உலகம். உலக அறிவின் மையமும் வெளிவட்டமும் கவிதைக் காந்தந்தான். ஓசை நயத்திலே இசை வெள்ளத்திலே உலகமே லயித்துக் கிடக்கும்” என்று கவிஞர் ஷெல்லி கூறினார்.

உள்ளத்தோடு தொடர்புபட்ட கவிதையே ஒரு மொழியினுடைய உச்சப் பயன்பாடு என்று கூறலாம். இத்தகைய உச்சப் பயன்பாடாகிய கவிதை உணர்வை அடிப்படையாகக் கொண்டது. இந்த உணர்வை வெளிப்படுத்துவதிலே தான் கவிஞரின் திறமை தங்கியுள்ளது. சில சம்பவங்களை வார்த்தைகளால் சொல்லிவிட முடியும். ஆனால் சில உணர்வுகளை வெளிப்படுத்த கவிதையால் தான் முடியும்.

கண்டதை விண்டு தைப்பது கவிதை என்பர். ஹௌஸ்மன் கவிதைக்கு பின்வரு மாறு விளக்கமளிக்கிறார். “கருத்து கவிதைக்குப் பிரதானம் அன்று; உணர்ச்சிப் பிரவாகத்திலேயே கவிதை பிறக்கிறது. உணர்ச்சி ததும்பும் பாடல்களில் உண்மைக் கவிதைகளிடம் புரிகின்றது. பொருள், விளக்கம் முதலியன அறிவுத்துறை சார்ந்தவை. கவிதைக்கு உயிர்நாடி உணர்ச்சி. கவிதை சொல்லப்படும் பொருளன்று, சொல்லும் முறையேயாகும். கவிதை உடலியல் சம்பந்தமானது.நல்ல கவிதையை உடலில் ஏற்படும் சிலிர்ப்பைக் கொண்டு உணரலாம்”.

இந்நிலையில் கவிதையை மரபு, நவீனம், புதுசு போன்ற பிரிவுகளுக்குள் அடக்கிப் பார்ப்பதை விடுத்து அதன் உயிரான உணர்ச்சி இருக்கின்றதா எனப் பார்ப்பதே சாலப் பொருந்தும். இருப்பினும் தமிழுக்கு இரண்டாயிரம் ஆண்டு கவிதை மரபு ஒன்றுண்டு. இதனை மனங்கொள்ளும்போது மரபுக்கவிதை பற்றிப் பார்ப்பது அவசியமல்லவா!

இலக்கணச் செங்கோல் / யாப்புச் சிம்மாசனம் / எதுகைப் பல்லக்கு / மோனைத் தேர்கள் / தனிமொழிச் சேனை / பண்டித பவனி.. ஆகிய மரபுத் தளையிலிருந்து விடுபட்டு இன்று புதுக்கவிதை, சொற்கோலம், உரைவீச்சு, உரைப்பா, விடுதலைப்பா, பேச்சு நிலைப்பா, வசன கவிதை போன்ற வடிவங்களையும் பெயர்களையும் பெற்ற போதும் இவற்றுக்கெல்லாம் தாயாக, மூலமாக இருந்தது மரபுக் கவிதை தான் என்பதை மறப்பதும் மறுப்பதும் இலக்கிய ஈடுபாடு கொண்டவர்களுக்கு பொருத்தமற்றது.

மரபானது கைவிடப்படும்போது நவீனம் உருவாகின்றது. ‘Modern’ என்பதற்கு ஆங்கில அகராதி வழிவரும் தமிழ்க் கருத்தானது தற்காலத்திய அல்லது சமீப காலம் சார்ந்த என்றே காணப்படுகிறது.

சடங்கு, சம்பிரதாயங்கள் மனிதனுக்கு இருப்பது போலவே இலக்கியத்துக்கும் காலத்துக்கு காலம் சில மரபு முறைகள் இருந்து வருகின்றன. இதுவே இலக்கிய மரபு. இது கவிதைக்கும் பொருந்தும்.

இம் மரபானது தனி ஒருவரால் உருவாக்கப்பட்டதல்ல. தனி மனிதர்களால் உருவாக்கப்பட்டதே. இம்மரபு காலத்துக்குக் காலம் இத்தனி மனிதர்களால் நெகிழ்த்தப் பட்டு வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கபிலர் முதலான சங்கப் புலவர்களது மரபிலிருந்து வள்ளுவர் மாறுகின்றார். வள்ளுவரிலிருந்து இளங்கோவும் இளங்கோவிலிருந்து கம்பனும் கம்பனிலிருந்து பாரதியும் மரபு மாற்றம் செய்திருக்கிறார்கள்.

மரபானது சாதனை படைத்த இலக்கிய வாதிகளைப் பின்பற்றியவர்கள் பின்பற்றுகின்ற போது ஏற்படுவது. கம்பன் புதுமை செய்தவன் தான். ஆனாலும் அவனைப் பின்தொடர்ந்து வந்தவர்கள் பின்பற்றுகின்றபோது அதுவே மரபு ஆகிவிட்டது. இது ஒரு தொடர் நிகழ்வாகவும் காணப்படுகிறது.

இருப்பினும் நவீன கவிதையின் பிதா மகன் என்ற பெருமையைப் பாரதி தட்டிக் கொள்கிறான். இதற்கு யாப்புப் பிடியிலிருந்து நெகிழ்ச்சி பெற்று சுவை புதிது, பொருள் புதிது. வளம் புதிது, சொல் புதிது, சோதிமிக்க நவ கவிதை என்று புதிய கோஷத்தை வைத்ததே காரணமாகின்றது.

பாரதி உள்ளத்தெழுந்த உணர்வுகளை,. கனவுகளை, கற்பனைகளை, சமுதாய அவலங்களை மரபு முற்றிலும கெடாத வகையிலே எளிமையானதும் புதுமை யானதுமான ஒரு யாப்பிலே வெளிப்படுத்திய கவிதைகளே நவீன கவிதைகள். ஆயினும் மரபுக்குள் நின்றே புதுமை செய்தவன் என்பது முக்கியம்.

காலந்தோறும் செய்யுள் மாறுகின்றது. அப்படி மாறுவதன் வாயிலாகவே அது தன்னைப் புதுப்பித்துக் கொள்கிறது.

அகவலும் வஞ்சியும் சிறப்புப் பெற்ற ஒரு காலம் தமிழ் மரபில் இருந்தது. பின் அவை வழக்கிழக்க வெண்பா மேற்கிளம்புகின்றது. கால மாற்றத்தால் காப்பியப் புலவர்கள் விருத்துப்பாவில் கவிபாடத் தொடங்கினார்கள்.

புகழேந்தி வெண்பாவிலும் கம்பன் விருத்தப்பாவிலும் மிகத்தேர்ந்த புலவர்க ளாயினர். பாரதி சிந்துவுக்குத் தந்தை யானான். மகாகவி உருத்திரமூர்த்தி குறும் பாவினைக் கொண்டு வந்தார்.

"குறிப்பிட்ட ஒரு வடிவம் காலத்தினால் அங்கீகரிக்கப்பட்டால் தான் அது அந்தக்குறிப் பிட்ட காலத்தின் வெளிப்பாடாக இருக்க முடியும்" என்ற பேராசிரியர் வானமாமலையின் கருத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டும்

இனி மரபுக் கவிதை தொடர்பாகப் பார்ப்போம். பண்டைத் தமிழ் இலக்கியங்கள் யாவும் செய்யுள்களாகவே அமைக்கப் பெற்றுள்ளன. பண்டைய புலவர்கள் தம் உள்ளத்துள் எழுந்த உணர்வுகளை செய்யுளாக வெளிப்படுத்துவதற்கு அகவல், வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா, விருத்தப்பா போன்ற செய்யுள் வடிவங்களைப் பயன்படுத்தினர்.

பண்டைத் தமிழ் இலக்கண ஆசிரியர்களும் செய்யுள் வடிவங்களுக்கு அமைத்த யாப்பிலக்கண விதிகள் அக்காலப் புலவர்களால் மரபு வழுவாது செய்யுள் அமைத்திட வழிகாட்டின.

பண்டைத் தமிழ்ச் செய்யுள்கள் சிறந்தவை யாக காலத்தால் அழியாது விளங்க அவற்றின் எளிமை, இனிமை, கம்பீரம் ஆகிய மூன்று விடயங்கள் காரணமாய் இருந்தன.

இது, பொருள் இலகுவாய் அறியத் தக்கதாக இருத்தல், இனிய சொற்களால் கொடுக்கப் பெறல், நுழைந்து நோக்கு வோருக்கு நுட்பமான பொருள் உடையதா யிருத்தல் ஆகிய மூன்று இலட்சணங்களைக் கொண்டிருந்ததே காரணமெனலாம்.

சொல்லிலும் பொருளிலும் சுவை படல் இன்பம் என்றும் சொற் சுவை, பொருட் சுவை என்று அணி இலக்கண நூல் கூறுகின்றது.

சொற்சுவையானது சொற்கள் நயம்பட அமைந்து சுவை பயப்பது ஆகும். மோனை, எதுகை, சிலேடை, யமகம், நீரோட்டம், சொற்பின் வருநிலை முதலியனவே சொற் சுவையைக் கூட்டும் அம்சங்களாகும்.

உவமை, உருவகம், வேற்றுப் பொருள் வைப்பு, தற்குறிப்பேற்றம், பிறிது நவிற்சி, ஒட்டு, பழிப்பது போல் புகழ்தல், புகழ்வது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல் பழித்தல் முதலிய அணிகளாலும் நகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை, சாந்தம் முதலிய மெய்ப்பாடுகளாலும் இன்பம் ஊட்டுவதே பொருட்சுவை ஆகும்.

அகம், புறம் ஆகிய துறைகளைப் பற்றியதாக அன்பின் ஐந்திணிக்கான நெறிகளை அடிப்படையாகக் கொண்டு அவை ஆக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

தெளிந்த நடையும் குளிர்ந்த நீரோட்டமும் கொண்டதாக இருக்க வேண்டும். கம்பன், “சிறந்த கவிதையானது புவியோர் விரும்பி அணியும் அணிகளைப் போல் அழகுடைய தாகவும் உயர்ந்த கருத்தினைத் தந்து உலகோர் புலனுணர்வுகளுக்கு இன்பமளிப்பதாகவும் இருக்க வேண்டும்'' என குறிப்பிட் டுள்ளான். இவையெல்லாம் நிறையப் பெற்றதே சான்றோர் கவிதை என்றும் அது கோதாவரி நதிக்கு ஒப்பானது என்றும் கூறுகின்றான்.

கவிதையின் தோற்றத்தை ஆராய்ந்த அறிஞர்கள் உணர்ச்சியிலிருந்தே கவிதை பிறக்கின்றதெனக் கூறியுள்ளனர். படிப் போரை உணர்ச்சிவசப்படுத்தாதவற்றை கவிதையென அவர்கள் கூறவில்லை. கற்ற மாத்திரத்தில் ஒருவருக்கு உணர்ச்சியூட்ட வல்லதே சிறந்த கவிதையாகும்.

கவிதையின் சொற்சுவை, பொருட்சுவை என்பவற்றை நயப்பது எப்படி? ஒரு செய்யுளின் நயம் அதைப் படிப்போரது கல்வி யறிவின் அளவாக அமையலாம். ஒருவருக்குத் தோன்றும் நயம் மற்றவருக்குத் தோன்றாது போகலாம். ஒருவருக்கு இன்பத்தைக் கொடுத்து மற்றவருக்கு அப்படியில்லாது போகலாம்.

கவிதை பலமுறை திரும்பத் திரும்ப படித்துப் பார்க்கும்போது தான் அதில் காணப்படும் சொற்சுவை, பொருட்சுவை என்பவற்றை உணர்ந்து கொள்ளலாம். இதற்கு உங்களது ஆர்வம், ஆற்றல் என்பன முக்கியம்.

கவிதையிலே முதலில் கவர்வது சொற்சுவை. அதாவது எதுகை, மோனை தரும் ஓசை நயம். இதனாற்றான் ஓசை நயம், சந்தம் என்பவற்றை வெளிப்படுத்தும் எதுகை, மோனை என்பவையே கவிதைக்கு உயிர் என்றார்கள். ஓசையின் வழிச் செல்வதே பாட்டு. பாட்டில், பா என்பதற்கு பரந்துபட்ட ஓசை எனப் பொருள்.

வெறும் ஓசை கவிதையாகுமா? பின்வரும் பாடலைப் பாருங்கள்:

“அண்ண னானவன் தம்பிக்கு மூத்தவன்
திண்ணையானது தெருவில் உயர்ந்தது
கண்ண னானவன் கண் இரண்டுள்ளவன்
வெண்ணெ யானது பாலில் விளைவதே”.

ஓசைக்காக எதுகை, மோனை போட்டெழு தினால் மட்டும் போதாது. பொருட்சுவை அவசியம் காணப்பட வேண்டும்.

இரண்டும் உள்ள பின்வரும் பாடலைப் பாருங்கள். இது சூர்ப்பனகை இராம இலக்குமணனின் பர்ணசாலைக்கு நடந்து வருவதைக் காட்டுகின்றது:

“பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவமனுங்க
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடியளாகி
அஞ்சொலிள மஞ்சையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென, வஞ்சமகள் வந்தாள்”

இவ்வாறு மரபுக் கவிதைகள் சொற்சுவை, பொருட்சுவையோடு பாடப்பட்டிருந்தன. காலந்தோறும் மாற்றங்களைக் கண்டபோதும் காலத்தையும் வென்று நிற்பதையும் நாம் காணலாம்.

கவிதையின் மொழி, உருவம், கற்பனை என்பன இந்தப் பெண் ஏற்கும் திருமணத் தாலியின் மூன்று முடிச்சுக்களைப் போல உறுதிப்படுத்தும் ஒன்றின் மும்முனை முத்தாய்ப்புக்களைப் போல வித்து, விளைவு, பயன் என்னும் மூன்றாக விளங்குகின்றன என்று கவிஞர் கண்ணதாசன் குறிப்பிடுகிறார்.

பல மரபுக் கவிதைகளை காலத்துக்கேற்ற திரை இசைப் பாடலகளாக்கி தொடர்ந்தும் மரபுக் கவிதைகளைப் பேச வைத்தவர் இவர். மரபுக் கவிதைகளின் ஆயுட்காலம் அதிகம் என்றே கூறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாம்பாட்டிச் சித்தர் பாடிய மரபுப் பாட்டு திரையிசைப் பாடலாகவும் வந்து பிரபல்ய மானதை அறிவோம்.

நாதர்முடி மேலிருக்கும் நாகபாம்பே
நச்சுப்பையை வைத்திருக்கும் நல்லபாம்பே
பாதலத்திற் குடிபுகும் பைகொள்பாம்பே
பாடிப்பாடி நின்றுவிளை யாடுபாம்பே.

இவ்வாறு மரபுக் கவிதைகள் இன்று நிலைப்பதற்கு அவை திரை இசைப் பாடல் களாக வந்ததும் முக்கிய காரணமெனலாம்.

மரபுக் கவிதைகளுள்ளும் சில கற்பனைச் சிறப்பற்ற ஆயினும் கவிதையெனக் கூறப்படும் நிலையையும் பார்க்கிறோம்.

"பாக்காவது கமுகம் பழம் பருப்பாவது துவரை
மேற்காவது கிழக்கே நின்று
பார்த்தால் அது தெரியும்
நாற்காதமும் முக்காதமும்
நடந்தால் ஏழுகாதம்
நாக்கால் உண்மை சொன்னேன் இனிரட்சிப்
பாயோ பட்சிப்பாயோ"

மேற்காட்டிய மரபுக் கவிதைகளினால் தான் புதுமைப்பித்தன் "அண்ணாந்து கொட்டாவி விட்டதெல்லாம் கூறுதமிழ் பாட்டாச்சே முட்டாளே இன்னமுமா பாட்டு?" என்று கேட்கிறார்.

இருப்பினும் பாரதியைப் பற்றி கவிஞர் முருகையன் பாடிய கவிதையில் "சாதாரணமான சம்பவங்கள் கூடத் தத்துவத்தை ஆதாரமாக்கி அமைந்து கிடத்தல் அதிசயந்தான்" என்று கூறுகிறார். பாரதி. கம்பன், இளங்கோ.. என்ற கவிஞர்கள் பாடிய பல பாடல்கள் இன்றும் நிலைத்திருப் பதை எவரும் மறுப்பதற்கில்லை.

இந்த வகையில் ஒரு சில மரபுக் கவிதைகள் ஓசை நயமோ, பொருட் சிறப்போ, கற்பனை வளமோ இல்லாத போதும் ஒப்பீட்டு ரீதியில் இன்றுள்ள நவீன, புதுக்கவிதை களோடு ஒப்பிடுமிடத்து இந்தத் தரமின்மை இன்று மிக அதிகமே.

மரபுக் கவிதைகள் முன்னர் குறிப்பிட்டது போல செய்யுள் இலக்கண விதிகளுக்குள் நின்று படைக்கப்பட்டன. இன்றும் மரபுக் கவிதை எழுதுபவர்கள் இவற்றை கவனத்தில் கொள்கிறார்கள். ஆனால் மரபை உடைத்து நவீன கவிதையில் நுழைந்தவர்கள் மரபும் தெரியாமல் நவீனத்துவமும் தெரியாமல் எழுதிக் குவித்து கவிஞர்களாகப் பார்க்கின்றனர். இது கவிதைக்குப் பெரும் குந்தகமாகப் போகின்றது.

சிலர் மரபுக் கவிஞர்களாகவும் மரபுடன் இணக்கம் காணும் புதுக்கவிதையாளராகவும் திகழ்கிறார்கள். பல கவிஞர்கள் மரபுக் கவிதையும் இல்லாமல் மரபுக் கவிதையின் இயல்புகள் விதிகளைத் தெரியாமலும் புதுக் கவிதை எழுதிக் குவிக்கிறார்கள்

கருத்துக்கள் தம்மைத் தாமே ஆளக் கற்றுக் கொண்ட புதிய மக்களாட்சி முறையே புதுக்கவிதைகள், நவீன கவிதைகள் எனக் குறிப்பிடும் இன்றைய பல கவிஞர்கள் எழுதுவதெல்லாம் கவிதை தானா? என்று கேட்கத் தோன்றுகிறது. புதுக் கவிதையை எழுதுங்கள். ஆயினும் செய்யுள் இலக் கணங்களைக் கற்றுக் கொள்ளுங்கள். அப்போது தான் உங்கள் கவிதைகள் நின்று நிலைக்கும். இல்லையேல் மழைக்குத் தோன்றும் புற்றீசல் போல் வந்தவுடன் மாயமாய் மறைந்து போய்விடும் என்பதை மனதிற்கொள்ளுங்கள்.

உசாத்துணைகள்:

க. கைலாசபதி
- இலக்கியமும் திறனாய்வும்

ரா. பி. சேதுப்பிள்ளை
- தமிழ்க் கவிதைக் களஞ்சியம்

பொ. கமலரூபன்
- எண்பதுகளுக்குப் பின் ஈழத்துப் புதுக் கவிதை

வி. என். எஸ். உதயசந்திரன்
- கலைக் குரல்கள்

ம. மதுசூதனன்
- தமிழ்ப் புதுக்கவிதைகளும் மெய்யியற் சிந்தனைகளும்

வ. பொன்மணி
- இலக்கிய விமர்சனச் சிந்தனைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டங்களுக்குட்பட்ட பிரஜாவுரிமையும் இந்திய வம்சாவளி ஆள்பதிவு திணைக்களமும் நீக்கப்பட வேண்டும்

(யாப்பு சீர்திருத்தத்துக்கான தனிநபர் பிரேரணை)

கலாபூஷணம் மு. சிவலிங்கம்
எழுத்தாளர், முன்னாள் ம. ம. மு. செயலாளர் நாயகம்

புதிய அரசியல் யாப்பு திருத்தத்துக்கான தனிநபர் பிரேரணையாக முன் வைக்கப்பட்ட எனது பத்து பிரேரணைகள் பற்றி இக்கட்டுரை விளக்கமளிக்கிறது.

01. அரசியலமைப்பின் பிரகடனத்துக்கப்பால் 1948 முதல் 2009 வரையில் அமுலில் இருக்கும் பதினொரு வகை பிரஜா உரிமைச் சட்டங்கள் நீக்கப்படல் வேண்டும்.

இப் பிரேரணை பற்றிய விளக்கமாவது: 1948ம் ஆண்டு 18ம் இலக்கப் பிரஜா உரிமைச் சட்டம், மலையகத் தமிழரின் குடியுரிமையைப் பறித்தது. 1946ம் ஆண்டு சோல்பரி ஆணைக்குழு தயாரித்த அறிக்கையும் இச்சட்டத்தினால் நிராகரிக்கப்பட்டது. இச் சட்டத்தால் இந்திய வம்சாவளி தமிழர்கள் நாடற்றவராகினர். இதன் பின்னர் 1949ம் ஆண்டு 48ம் இலக்க இலங்கை பாராளுமன்ற தேர்தல் திருத்தச் சட்டம் உருவாக்கப்பட்டு குடியுரிமையை இழந்தவர்களுக்கு வாக்குரிமை வழங்கும் உரிமையும் மறுக்கப்பட்டது.

1949 ம் ஆண்டு மூன்றாம் இலக்க இந்திய - பாகிஸ்தானியர் குடியிருப்பாளர் (பிரஜா உரிமை) சட்டம் இயற்றப்பட்டு, அடைப்புக் குறிக்குள்ளே "பிரஜா உரிமை" என்று குறிப்பிடப்பட்டது. இச் சட்டத்தின்படி நாட்டின் குடிகளாகவன்றி (Citizen) குடியிருப்பாளராக (Resident) இம் மக்கள் கணிக்கப்பட்டனர். 1964 ம் ஆண்டு ஒக்டோபர் 3ம் திகதி உருவாக்கப்பட்ட சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தப்படி 5,25,000 பேர் இந்தியாவுக்குச் செல்ல வேண்டுமெனவும், 3,00,000 பேருக்கு இலங்கை குடியுரிமை வழங்கப்படுமெனவும் மிகுதி 1,50,000 பேர் பிறகு யோசிக்கப்படுவார்கள் என்ற சட்டம் ஒப்பந்தமாக உருவாகியது. அன்று 9,75,000 பேர் இந்திய வம்சாவளி மக்களின் குடிசனத் தொகை என்று கணக்கிட்டிருந்தார்கள்.

1967ம் ஆண்டில் 14ம் இலக்க இலங்கை-இந்திய உடன்படிக்கை அமுல்படுத்தும் சட்டம் உருவாகியது. இச் சட்டத்துக்கிணங்க 4 லட்சம் பேர் இந்தியாவுக்கு விண்ணப்பித்தனர்.

1971 ம் ஆண்டின் 43 ம் இலக்க இலங்கை-இந்திய அமுல் படுத்தும் ஒப்பந்தம் திருத்தச் சட்டப்படி 7 பேர் இந்தியா செல்லும்போது 4 பேருக்கு இலங்கை குடியுரிமை வழங்கப்படும் என்ற சட்டம் செயல்பட்டது. 1974 முதல் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தப்படி மீதப்பட்ட 1,50,000 பேரில், 75,000 பேர் இந்தியாவுக்கும் 75,000 பேர் இலங்கைக்கும் பதிவாக்கப்படும் என சட்டம் பிறப்பித்தது.

இந்தச் சட்டங்களுக்குப் பின்னர் 1988ம் ஆண்டு 39ம் இலக்க சத்தியக் கடதாசி மூலம் பிரஜாவுரிமை வழங்கும் சட்டம் உருவாக்கப்பட்டது. அதன் பின்னர் 2003ம் ஆண்டின் 35ம் இலக்க இந்திய வம்சாவளியினரான ஆட்களுக்கு பிரஜா உரிமை வழங்கும் சட்டமும் உருவாகியது. பின்னர் 2009ம் ஆண்டின் 6ம் இலக்க இந்திய வம்சாவளியினரான ஆட்களுக்கு பிரஜா உரிமை வழங்கல் (திருத்தச்) சட்டமும், 2009ம் ஆண்டின் 5ம் இலக்க நாடற்ற ஆட்களுக்கு விஷேசத் திருத்தச் சட்டமும் என பிரஜா உரிமை சட்டங்கள் முற்றுப்பெற்றன. இந்தச் சட்டங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்தும் இன்று வரை அழிக்கப்படவில்லை. அவை நீறு பூத்த நெருப்பாக உயிரோடுதான் இருக்கின்றன..!

இன்றைய நல்லாட்சியின் சமாதானச் சூழலில் 1948 ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட பிரஜா உரிமை சட்டம் முதல் 2009 ம் ஆண்டு வரையிலான உருவாக்கப்பட்ட சட்டங்கள் அனைத்தையும் அழித்துவிட்டு, இம் மக்கள் யாப்பு பிரகடனத்துக்கமைய இலங்கைக் குடிகளாவர் என்று பிரகடனப்படுத்த வேண்டும். அதுவுமன்றி 21 ம் நூற்றாண்டிலும் குடியுரிமை அற்ற மக்களாக சட்டத்துக்குட்பட்ட குடியுரிமையுள்ள மக்களாக அடையாளப் படுத்துவது சர்வதேச ரீதியில் வெட்கமானதும், ஐ. நா. சாசனத்துக்கு எதிரான மனித உரிமை மீறல் செயல் எனவும் குரல் எழுப்பப்படலாம்.

02. அரசியலமைப்பின் பிரஜா உரிமை பிரகடனத்தில் "பிரஜா உரிமைச் சட்டத்துக் கிணங்க பதிவு செய்யப்பட்ட பிரஜைகள்" என்ற பதம் நீக்கப்பட்டு, அனைத்து மக்களும் "வம்சாவளி பிரஜைகள்" (Citizen by descent) என்ற பதத்துக்குள்ளேயே உள்ளடக்கப்பட வேண்டும்.

யாப்பிலிருக்கும் இந்தப் பிரகடனம் பதிவுப் பிரஜை என்ற சட்டத்துக்குள்ளாக்கப் பட்டிருக்கும் பிரஜைகளுக்கு ஒரு ஆறுதல் வசனத்தையும் குறிப்பிட்டுள்ளது! அதாவது, பதிவு பிரஜைகளுக்கும் வம்சாவளி பிரஜைகளுக்கும் எதுவித வேறுபாடுகளும் கிடையாது என குறிப்பிடுகின்றது. அப்படியாயின் ஏன் இந்த இரண்டு விதமான பிரஜைகள் அந்தஸ்தை அடையாளப்படுத்த வேண்டும் என்பது பதிவுப் பிரஜைகளின் கேள்வியாகும். 1949 ம் ஆண்டு 3 ம் இலக்க இந்திய - பாகிஸ்தானிய வதிவிட சட்டத்தின் போது, பதிவு செய்யப்பட்டவர்கள் மட்டுமே பதிவுப் பிரஜைகள் ஆவர். அவர்களது வழித் தோன்றல்கள் பரம்பரை பரம்பரையாக பதிவுப் பிரஜைகளாக இருப்பர் என எதுவும் இந்தச் சட்டம் சொல்லவில்லை. ஆகவே இந்த சட்டம் அமுலில் இருக்கும் வரை புதிய தலை முறைகளும் பதிவுப் பிரஜைகளாக கணிக்கப்பட வேண்டியிருக்கும் என்ற சட்டம் தொடர்ந்து தேவையா என்பதும் இம்மக்களின் கேள்வியாகும். இச் சட்டங்கள் புதிய யாப்பு சீர் திருத்தத்தில் நீக்கப்பட்டுவிட்டால் இக் கேள்விகள் அவசியப்படாதுபோகும்.

03. நடைமுறையிலிருக்கும் "இந்திய வம்சாவளி ஆள் பதிவுத் திணைக்களம்" (Department of Registration of People of Indian Origin) பதம் நீக்கப்படல் வேண்டும் "இந்திய வம்சாவளி ஆள் பதிவுத் திணைக்கள ஆணையாளர்" (Commissioner of Department of Registration of People of Indian Origin) பதவியும் நீக்கப்படல் வேண்டும்.

இந்த திணைக்களத்துக்கும் திணைக்கள ஆணையாளருக்கும் உட்பட்டிருக்கும் குடிமக்கள் நேரடியான நாட்டின் பிரஜைகளாக அல்லாமல், இரண்டாந்தர நிலைக்குள்ளாக்கப்பட்டவர்களாக, திணைக்கள பிரஜைகளாக, திணைக்கள ஆணையாளருக் குட்பட்ட பிரஜைகளாக இருக்கும் பட்சத்தில் இவர்களது குடியுரிமையை எப்படி அந்தஸ்து படுத்துவது ? எப்படி அடையாளப் படுத்துவது? என்பதும் இந்திய வம்சாவளி ஆள் பதிவுத் திணைக்களத்துக்குட்பட்ட பிரஜைகளின் இன்னுமொரு சட்டக் கேள்வியாகும். புதிய யாப்பு சீர்திருத்தத்தில் இப்படியொரு திணைக்களம் தேவையா என்பது மனித உரிமைக்கான இன்னுமொரு கேள்வியாகும்.

04. எமது தேசிய அடையாளம் "மலையகத் தமிழர்" என்று தேசிய இனப் பதிவேட்டில் பதிதல் வேண்டும். எங்களை நாட்டிலிருந்து அந்நியப்படுத்தும் "இந்தியத் தமிழர்" அல்லது "இந்திய வம்சாவளியினர்" என்ற அடை மொழிப் பதம் முற்றாக நீக்கப்படல் வேண்டும்.

இலங்கை வாழ் இந்திய வம்சாவளித் தமிழர்கள் தங்களை மலையகத் தமிழர் என்று தங்களுக்குள்ளேயே வழமைப்படுத்திக் கொண்டார்களே தவிர அதை தேசிய இன அடையாளமாக யாப்பில் பதிவு செய்து கொள்வதற்கு இன்று வரை எந்தவொரு மலையகக் கட்சியும் சட்டத்தை நோக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. பாராளுமன்றத்தில் பேசியதாகவும் இல்லை. இதே வேளை இம் மக்கள் தங்களை இலங்கைத் தமிழர் என்று அடையாளப் படுத்திக் கொள்வதில் தயக்கம் காட்டிக் கொள்வதும் கேள்விக்குரிய விவகாரமாகவும் இருக்கின்றது.

05. மலையகத் தமிழரின் குளறுபடியான குடிசனத் தொகை புள்ளி விபரம் (1981 - 2011) மீள் பரிசீலனை செய்யப்பட்டு ஆள் பதிவு திணைக்கள பதிவேட்டில் உறுதி செய்தல் வேண்டும்.

இந்த மக்களின் தேசிய அடையாளம் தளம்பல் நிலையில் இருப்பதால், இந்தியத் தமிழர் என்றும், இலங்கைத் தமிழர் என்றும் குடிசனத் தொகை பதிவேட்டில் பதியப் பட்டுள்ளனர். இறுதியாக எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி 8 லட்சத்து 22 ஆயிரம் பேர்களே பதிவாக்கப்பட்டுள்ளனர். இது முற்றிலும் பிழையான கணக்கெடுப்பாகும். ஆகவே, இந்த நிலை கருதி, புதிய யாப்பு சீர்திருத்தத்தில் இந்த மக்கள் மலையகத் தமிழர் அலலது இலங்கைத் தமிழர் என்ற தேசிய அடையாளத்தை பதிவு செய்து கொள்ளல்வேண்டும். அல்லாவிடில், உலக சனத் தொகைக் கணிப்பீட்டில்கூட இந்த மக்களின் உண்மையான அடையாளம் உள்வாங்கப்படாமல் போகும்.

06. மலையகத் தமிழர்கள் தங்கள் தேசிய இருப்பை நிலை நிறுத்திக் கொள்வதற்கு சுய விவசாயத்துக்கான நிலவுடமையாளராகக் காணி உரிமையை, காணி சீர்திருத்தச் சட்டத்துக்குள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

பெருந்தோட்ட மக்கள் நிலவுரிமையற்று, தோட்ட நிர்வாகத்துக்குச் சொந்தமான தொடர்முகாம் வசிப்பிடங்களில் வாழ்வதால், கிராம மக்களாக அரசினால் அங்கீகரிக்கப்பட வில்லை. அவர்களின் வாழ்விடம் கிராமமய மாக்கப்படவில்லை. காலணித்துவ ஆட்சியிலிருந்து இன்றுவரை பெருந்தோட்டத் துறை (Plantation Sector) என்று ஒரு நாட்டுக்குள்ளேயே ஒதுக்கி வைக்கப்பட் டிருக்கும் சமூகப் பிரிவினராக தனிமைப் படுத்தப்பட்டிருப்பதால், அவர்கள் உள்ளூராட்சி நிர்வாகத்துக்குள் உள்வாங்கப்படவில்லை. அரசின் பொது நிர்வாக நிதி அந்த மக்களுக்கு மறுக்கப்பட்டிருக்கின்றது. இதன் காரணமாக சுற்றுச் சூழல், உட்கட்டமைப்பு அபிவிருத்திகள், தேசிய நீரோட்ட உறவு எல்லாமே துண்டிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இந்த மக்களுக்கு பண்ணை விவசாயம் என்னும் சுய தொழில் வாழ்க்கையில் ஏனைய மக்களைப் போன்று வாழ்வதற்கு அரச காணி வழங்கப்படல் வேண்டும். "வீடமைப்பு எனும் ஏழு பேர்ச்சஸ் வசிப்பிட நில திட்டம்" என்ற ஒரு பாரதூரமான பிழையான வீடமைப்புத் திட்டம் நிராகரிக்கப்பட வேண்டும். புதிய யாப்பு சீர்திருத்தத்தில் நிலத்துடன் வாழும் கிராமத்தவர் என்ற கலாசாரத்துக்குள் மலையக மக்கள் உள்வாங்கப்பட்டு, பெருந்தோட்ட முறை ஒழிக்கப்படல் வேண்டும்.

07. காலணித்துவ பிரித்தானிய ஆட்சிக் காலமான 1823 ம் ஆண்டு கோப்பிக் காலத்திலிருந்து 2017 ம் ஆண்டு தேயிலைக் காலம் வரை மனித உரிமை சாசனத்துக்கு முரணான வகையில் உழைப்புக்கேற்ற நீதியான சம்பளம் மறுக்கப்பட்டு வருவதன் காரணமாக, பெருந்தோட்ட மக்கள் பொருளாதார நிலையில் பாதிக்கப்பட்டு, போஷாக்கின்மையால் தேசிய ரீதியில் பொதுவான மரண வீதத்திலும், சிசு, கர்ப்பிணி மரண வீதத்திலும், ஊமை, குருடு, செவிடு, முடம் எனும் வலது குறைந்தோரின் (மாற்றுத் திறனாளிகளின்) பிறப்பு வீதத்திலும் தேசிய மட்டத்தைவிட விகிதாசார உயர்வு காணப்படுவதால், இந்த சமூகத்தின் விசேஷ கவனிப்புக்காக அரசியல் திட்டம் உருவாக்கப் பட வேண்டும்.

அரசாங்கத் தொழிலாளர்களை பாது காக்கும் தொழிற் சட்டங்கள் பெருந்தோட்ட மக்களுக்கும் உரித்தாகும்படி சட்டமாக்கப்பட வேண்டும். அவர்களும் அரச ஊழியர்களாக அங்கீகரிக்கப்படல் வேண்டும். அவர்களுக் குரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயமான சம்பளத்தை அரச ஊழியருக்குப் போன்று வழங்குதல் வேண்டும். அவர்களின் உழைப்புக்கேற்ற சம்பளத்தை அரசே நிர்ணயிக்க வேண்டும். பொருளா தாரத்தால் வீழ்த்தப்பட்டிருக்கும் இந்த மக்களின் சமூக வாழ்க்கையை, தொழில் சட்டங்களாலேயே சீரமைக்க முடியும். ஆகவே, அரச தொழிற் சட்டங்கள் புதிய யாப்பு சீர்திருத்தத்தில் பெருந்தோட்ட தொழிலாளருக்கும் சமமாகக் கிடைக்க செயல்பட வேண்டும். அரச ஊழியர்களுக்கு சுமத்தப்படாத கணக்கு வேலை முறை (Task Work) நீக்கப்படல் வேண்டும். இன்று அரச சிற்றூழியர்கள்கூட மாதச் சம்பளமாக 25 ஆயிரத்துக்கு மேல் பெறுகின்றபோது, தோட்டத் தொழிலாளர் தினக் கூலியாக 500 முதல் 600 ரூபாய் வரை சம்பளம் பெறுவது அரசியல் பாகுபாடு (Political discrimination) என்றும் மனித உரிமை மீறல் செயல் என்றும் அரசை விரல் நீட்ட முடியும்.

இக் கணக்கு வேலை முறை நீக்கப்படும் வரை பெருந்தோட்டத் தொழிலாளர் இன்றைய கணக்கு வேலையான 8 லீட்டர் ரப்பர்பால் சேகரிப்பதும் 15 கிலோ கொழுந்து சேகரிப்பதமான இந்த வேலை முடிவடையும் பட்சத்தில் அவர்கள் அன்றைய பணி முடிந்ததாக கணிக்கப்பட வேண்டும். அதுவன்றி கணக்கு வேலை முடிந்தும் 8 மணி நேர வேலை என்று அவர்களை வேலைத் தளத்தில் ஒடுக்கி வைப்பது தொழிற் சட்டத்துக்கு முரணானது என்பதை நிர்வாகம் ஏற்றுக்கொள்ள வேண்டும். காரணம் கணக்கு வேலை என்பது எட்டு மணி நேர வேலை என்பதுடன் சம்பந்தப்பட்டதல்ல என்று தொழிற் சட்டம் தெளிவு படுத்த வேண்டும். புதிய யாப்பு சீர்திருத்தத் திட்டத்தில் பெருந்தோட்டத்தில் அமுலில் இருக்கும் பிரித்தானிய நிர்வாக முறை மாற்றப்பட வேண்டிய தொழிற்சட்டத்தை உருவாக்க வேண்டும்.

08. உள்ளூராட்சியின் பொது அபிவிருத்திப் பணம் கிராம மக்களுக்கு மட்டுமே என்று வரையறுக்கப்பட்டிருக்கும். 1987ம் ஆண்டு 5ம் இலக்க 33 வது உறுப்புரை கொண்ட பிரதேச சபை சட்டம் நீக்கப்பட்டு, பெருந்தோட்ட மக்கள் வாழும் பிரதேசங்களும் உள்ளூராட்சிக்குள் உள்வாங்கப்படல் வேண்டும். தோட்டங்கள் கிராமங்களாக மாற்றுவதற்கு இந்தச் சட்டம் புதிய யாப்பில் திருத்தப்பட வேண்டும்.

09. வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மட்டும் "அரசகரும நிர்வாக மொழியாக தமிழ் மொழி இருக்கும்" என்ற பதம் நீக்கப்பட்டு, மலையகத் தமிழர், முஸ்லிம் மக்கள் வாழும் பிரதேசங்கள் யாவிலும் அல்லது நாடளாவிய ரீதியிலும் தமிழ் மொழி நிர்வாக மொழியாக இருத்தல் வேண்டும். தமிழருக்குரிய பிறப்புச் சான்றிதழ் தமிழ் மொழியில் இருத்தல் வேண்டும.

10. மலையகத் தமிழரின் குடிசனத் தொகைக்கேற்ப பிரதேச செயலகங்களும் கிராம சேவகர் பிரிவுகளும் நாட்டின் ஏனைய பகுதிகளைப் போன்று உருவாக்கப்படல் வேண்டும்.

கொடுங்கோன்மையின் பிடியிலிருந்தும், வறுமையின் வாயினின்றும் எல்லா உழைப்பாளிகளையும் பாதுகாக்கவேண்டும். இந்த இலட்சியங்களுக்காகப் போராடும் மன்றத்தை எந்த அதிகாரமும், அடக்கு முறையும், பலாத்காரமும் அடக்கி ஒடுக்கி விட முடியாது.

- லெனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கைலாசபதியும் விமர்சன பின்னணியும்

இரா. நித்தியானந்தன் B.A. (Hon.) M. Phil.

பேராசிரியர் கைலாசபதி எழுதத் தொடங்கிய காலப் பகுதிகளில் இடம்பெற்ற சமூக மாற்றங்களும் நிகழ்வுகளும் சில முக்கியமான பரிமாணங்களைக் கொண்டவைகளாக இருந்து வந்துள்ளன. 50 இன் பின் இலங்கை, தமிழ் நாடு என்பவற்றில் திரண்டு வந்த ஒட்டு மொத்தமான மாற்றங்களுக்கு அவை இணையானவை. ஈ. வெ. ரா. பெரியார் தோற்றுவித்த தமிழர் திராவிட வாதம் அப்போதுதான் தி. மு. க. வாக எழுச்சி பெற்றிருந்தது. இந்திய தேசியத்துவமும் மார்க்சியவாதமும் ஓரளவு பின்னடைவு பெற்றிருந்தன. தமிழர்களின் மேலாண்மை பேசப்பட்டது. வடமொழிக்கும் தமிழ்மொழிக்குமிடையிலான பேதங்கள் பிராமண்ய எதிர்ப்பு இயக்கமாக தோற்றம் பெற்றிருந்தன. மறைமலையடிகள் போன்றோர் தூய தமிழ் வாதத்தை முன்வைத்திருந்தபோது மீனாட்சி சுந்தரனார் போன்றோர் சைவத்துக்கும் தமிழுக்கும் இடையே ஒருமைப்பாட்டைக் காணும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். இக் காலகட்டத்தில் இலங்கையிலும் இதனை யொத்த ஒரு போக்கு காணப்பட்டது. பௌத்த தேசியவாதத்தின் எழுச்சியும், தனிச் சிங்கள மொழிவாதமும் சமநிலைப்பட்டிருந்தன. இந்நிலையில் அவற்றுக்கு சமாந்திரமாக தமிழர் தேசியவாதம் ஓரளவு முன்னிலை பெற்றிருந்தது. 50 தசாப்தத்தில் இலங்கையில் இடதுசாரிகள் ஓரளவு முன்னிலை பெற்றுக் காணப்பட்டனர். சர்வதேச சமூகத்திலும் பல்வேறு மாற்றங்கள் இடம்பெற்றிருந்தன. சீனப் புரட்சியும் ஸ்டாலினிய மேலாதிக்கமும் ஓரளவு சர்வதேசமயப்படுத்தப்பட்டிருந்தது. இக்கால இட வர்த்தமானம் என்பவற்றை உள்வாங்கிக் கொண்ட ஒருவராக கைலாசபதி ஒரு படைப்பாளி என்ற தளத்திலிருந்து விமர்சன தளம் நோக்கி மாற்றமுறுகிறார்.

1956ம் ஆண்டு காலப் பகுதி ஈழத்து இலக்கியத்தில் தேசியம் என்ற குரல் ஒலிக்கத் தொடங்கியது. தமிழ் நாட்டிலும் இலங்கை யிலும் இலக்கியத்தில் மார்க்சிய கருத்துக்கள் பரவத் தொடங்கியிருந்தன. மேற்குறித்த காலப் பின்னணியில் கைலாசபதி தமிழ் இலக்கியத்தை கிரேக்க இலக்கியத்தோடு ஒப்பிட்டு பார்க்கத் தொடங்கினார். அவரின் "வீர யுகக்காலம்" ஒரு சமுதாயத்தின் வரலாற்றுப் பின்னணியில் வைத்து எழுதப் பட்டது. இவரின் இவ்வாய்வு பெருமையுடன் பேசப்பட்ட தமிழர் மேன்னிலை வாதத்தை ஓரளவு தகர்த்தெறிந்தது. கிரேக்கர்களின் மத்தியில் காணப்பட்ட நம்பிக்கைகளுடன் தமிழரின் நம்பிக்கை ஒப்பிடத்தக்கது என்கின்றார். இது தமிழரின் திராவிட வாதத்தை விமர்சிக்கின்றது. எந்தவொரு கலாச்சாரமும் இன்னொரு கலாச்சாரத்தி லிருந்து முற்றாகப் பிரிந்திருப்பதல்ல என்பதை இவ்வாய்வு தெளிவாகக் காட்டியது. இவ்வாறு உலகளாவிய இலக்கியத்தின் ஒப்பீட்டு ஆய்வில் தம்மை ஒன்றிணைத்துக் கொண்ட கைலாசபதி இலங்கையின் தேசிய இலக்கியம் தொடர்பாக தமது கருத்துப் பரிமாணங்களை கோட்பாட்டு அடிப்படையில் முன்வைக்கின்றார்.

எனவே, ஈழத் தமிழர் வரலாறு, வாழ்க்கை, கலை, கலாச்சாரம் என்பவற்றை காதல், மொழி, மதம் போன்ற கூறுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்றார்.

இலக்கியம் என்பது சமுதாயத்தின் மேல் கட்டுமானத்தை பிரதிபலிக்கின்ற ஒன்றேயென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலமாக்கஸ் கருதினார். இதனைப் பிற்கால மார்க்சிய இலக்கியவாதிகள் சோசலிஸ யதார்த்தவாதம், ஸ்தானோவிஸம் என்றும் அழைத்தனர். இதன் அர்த்தம் இலக்கியத்தை சமூக பொருளாதார அடித்தளமே நிர்ணயம் செய்கின்றதென்று இவர்கள் வாதிடுவர். இன்னுமொரு பிரிவினர் இலக்கியத்தை காரண காரிய தொடர்பின் சிக்கல் நிறைந்த தன்மை என வெளிக்காட்டுவர். கைலாசபதி இவர்களின் முன்னைய பிரிவினைச் சேர்ந்தவர். இலக்கியம் பற்றி விளக்குவதற்கும் மனிதனைப் பற்றிய சகல இயற்பண்புகளும் அறிவியற் பூர்வமாக அணுகப்பட வேண்டும் என்றும் இது மனித அனுபவத்தினதும் உணர்வினதும் வெளிப்பாடாக இருக்கும் வரையிலேயே அது இலக்கியம் என கருதப்படும் என கைலாசபதி கருதினார்.

மேற்கூறப்பட்ட இக் கோட்பாடு மக்கள் இலக்கியமாக அங்கீகாரம் பெற்றபோது ஸ்தூலமான இலக்கியத்தின் தன்மை, மொழியாட்சி, ஆளுமை, உள்ளடக்கம் என்பன கூட கோட்பாட்டு வரையறை செய்ய முயற்சிக்கப்பட்டன. அப்போது எது இலக்கியம் என்ற ஆழமான விசாரணை முற்போக்கு இலக்கியவாதிகள் மத்தியில் இடம் பெற ஆரம்பித்தன. இப்போக்கினை ஆரம்பித்து வைத்தவர்களாக பேராசிரியர் கைலாசபதியையும் வானமாமலையையும் குறிப்பிடுவதே பொருத்தமானதாகும். இதன் பின் 2 பிரிவினர் இலக்கிய முற்போக்குப் படைப்பாக்கத்துக்குள் அடையாளம் காணப்பட்டனர். ஒரு பிரிவினர் கோட்பாட்டு அடிப்படைகளை உள்வாங்கிக் கொண்டு, படைப்பிலக்கியத்தில் ஈடுபட்டவர்கள். மற்றப் பிரிவினர் படைக்கப்பட்ட இலக்கியங்களை (எதுவாக இருந்தபோதிலும்) அதனைக் கோட்பாட்டு தளத்தில் நோக்கி துலங்கிக் கொள்ள வந்தவர்கள். இங்கு கூறப்பட்ட 2 வது தளத்திலேயே கைலாசபதி ஆரம்பித்து வைத்த விமர்சன தளம் வளர்ச்சி பெற்றது. எழுத்தாளனுக்கு ஒரு கோட்பாட்டுத் தளம் அவசியம் என வலியுறுத்தும் அதேசமயம் இலக்கியம் என்பது ஒரு சமுதாயத்தின் பிரதிநிதித்துவம் என்ற வகையில் இலக்கியத்துக்கும் சித்தாந்தத்துக்கும் இடையே எவ்வாறான தொடர்பினை ஏற்படுத்தலாம் என்றும் கைலாசபதி விளக்கமளிக்க முற்பட்டார். எனவே, இங்கு இலக்கியத்தை சமூக யதார்த்தத்துடன் ஆராயும் மரபு ஒன்று தோற்றம் பெற்றது.

ஆனால், கைலாசபதி வெறுமனே சமூக யதார்த்தவாதத்தை தமது இலக்கிய விமர்சனத்துக்கு அடிப்படையாகக் கொள்ளவில்லை. சமூகவியல் அடிப்படையில் மார்க்கிஸிய தளத்தில் மனித உறவுகள் தொடர்பான சமூக விஞ்ஞானமாகத் திகழும் அரசியல், பொருளாதார, கலை, கலாச்சார, மானிடவியல், வரலாறு என்பவற்றோடு தொடர்பு படுத்தி ஒரு சமூகவியல் ஆய்வாகவே தமது விமர்சனத்தை நடாத்துகிறார். ஆனால், கைலாசபதியின் விமர்சனமானது பெருமளவு மார்க்சியத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட ஒன்றாக காணப்படுகிறது. சமூகத்தின் உற்பத்தியில் ஒன்றாக இலக்கியத்தைக் கருதி அதனை வரலாற்றுப் பின்னணியில் வைத்து ஆராயும் ஒரு மரபு இவரிடம் காணப்படுகின்றது. இவரே இலக்கிய சிந்தனையில் "உருவம் அல்லது உள்ளடக்கமா பிரதானமானது" என்ற அர்த்தமற்ற வீண் வீவாதத்தில் அமிழ்ந்து போகாமல் வரலாற்றுப் பார்வை, வர்க்க ஆய்வு, அழகியல் அக்கறை ஆகியவற்றை ஒருங்கிணைத்து இலக்கியங்களை விமர்சிப்பது சமூகவியல் ஆய்வு என்கிறார் (இலக்கிய சிந்தனைகள் - 22)

இவ்வாறான ஆய்வு வெறும் சிந்தனைகளாக அன்றி திட்டவட்டமான செயல்களிலிருந்து உதிக்கும் போதே வலிமையும் வனப்பும் பெறுகின்றது என்று இவர் வலியுறுத்துகின்றார். இதனடிப்படையிலேயே இலக்கியம் என்பது உலகை மாற்றுவதற்கு மட்டுமன்றி அதன் நேச சக்திகளுக்கும் உழைக்கும் வர்க்கத்திற்கும் ஓயாது பயன்படுத்தப்படும் ஆயுதமாக விளங்குதல் வேண்டுமென கூறுகின்றார்.

முன் சொன்னது போல கைலாசபதி தமது விமர்சனத்தின்போது சோசலிஸ யதார்த்த வாதத்தை மையமாக வைத்தே தமது இலக்கிய ஆய்வினை அலசுகின்றார். உண்மையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிணாம ரீதியாக கண்டு கொள்ளக்கூடிய அல்லது ஊகித்துக் கொள்ளக்கூடிய வரலாற்று பூர்வமான புரட்சிகரமான மாற்றங்களை கணிப்பில் எடுத்துக் கொள்ளும் மிகவும் முற்போக்கான ஒரு வகை இலக்கிய இயக்கம் இங்கு காணப் பட்டது. இவருடைய ஆய்வு வலியுறுத்தல்கள் எல்லாம் தனிமனித முக்கியத்துவம், வர்க்கப் போராட்டம் என்ற கூறுகளையே வலியுறுத் தியது. மாறுகின்ற சமுதாயத்தைப் பற்றியும் அதன் மாறுகின்ற விதம் பற்றியும் எடுத்துக் கூறாத இலக்கிய வாதிகளை கைலாசபதி தமது ஆய்வில் ஓரளவு விலக்கி வைத் துள்ளார். இந்த வகையில் கைலாசபதி இலக்கிய திறனாய்வில் 2 அம்சங்களை சிறப்புடன் காணலாம் என பூ. சி. கணேசன் அவர்கள் கூறுகின்றார்.

1) பொதுமுறை ஆய்வு
2) தன்னுணர்ச்சி ஆய்வு

“பொதுமுறையில் கவிஞன் பெருமளவுக்குத் தன்னை மறைத்துக் கொண்டு அனைவருக்கும் ஏற்புடையதான பொருளை சிறப்புடன் கூற முற்படுகின்றான்”

“தன்னுணர்ச்சியில் தன்முனைப்புடன் பிறர் கருத்தைப் பற்றி அக்கறையின்றி பொருளை தன்னுணர்ச்சியில் வெளிப்படுத்துகின்றான்.”

இதற்காக ஏன் புதுக்கவிதையை கைலாசபதி புறமொதுக்கினார் என்ற கேள்வியை எழுப்பி பூ. சி கணேஸ் அத்தேடு நிறுத்திக் கொள்கின்றார். கைலாசபதியின் திறனாய்வு மிகவும் தெளிவாக இயக்கவியல் கோட்பாட்டினை தழுவிச் செல்கிறது. சங்க காலம், பக்தி இலக்கிய காலம், காவிய காலம், நவீன இலக்கியங்கள் எல்லாவற்றையும் வர்க்கக் கண் கொண்டு அடையாளம் கண்டுகொண்ட இவர் முரணறு தர்க்கவாதத்தின் அடிப்படையில் ஒரு சமூகத்தின் உற்பத்தி உறவுகளின் உட்கட்டுமானங்களின் அசைவு, முரண்பாடுகள், போராட்டங்கள், எதிர்வினைகள் என்பவற்றை தெளிவாக இனங்காட்டுகின்றார். எனவே, இவரின் சமகால விமர்சகரான க.நா.சு. வுடன் முரண்பட்டு தமது விமர்சனத்தை ஒரு புதிய போக்கில் காட்டுவார். ரசனைமுறை திறனாய்வு, அழகியல் திறனாய்வு, பண்டித திறனாய்வு (இலக்கியமும் திறனாய்வும் - பக்கம் 51) என்ற பூர்ஷுவா இலக்கிய விமர்சனங்களிலிருந்து விளங்கி எஸ். வையாபுரிபிள்ளை, திரிகூடசுந்தரம்பிள்ளை, சிதம்பர ரகுநாதன், வள்ளிக்கண்ணன், ஆர். கே. கண்ணன், சிவசங்கரன், வானமாமலை, சிவத்தம்பி, முருகையன் ஆகியோர் தமக்கும் விமர்சன அணுகுமுறைகள் வேறாக இருந்த போதிலும் தாம் ஒரே இயக்கமாக இயங்கிய தாக பெருமளவு சோஸலிச யதார்த்த வாதத்தைப் பின்பற்றி இலக்கியதத்தை ஆராய்ந்ததாக கைலாசபதி கூறுகின்றார். (பு.சி.க. 88).

இயக்கவியல் என்பது புற உலகின் செயற்பாடானது இயற்கையின் விதிகளுக்கு ஒப்ப ஒன்றிலொன்று சார்ந்து நடைபெறுகின்ற நிகழ்ச்சியாக கருதப்படுகின்றது. இது புற உலகுக்கும் மனிதனுக்கும் இடையில் பரஸ்பர உறவின் பரிமாற்றம் என்று எங்களால் கருதப்படாமல் இயற்கைக்குள் நடக்கும் ஓர் இயக்கமாகவே பார்க்கப்பட்டது. இதுவே மார்க்ஸிய இலக்கியவாதிகளில் தாக்கத்தை ஏற்படுத்தின. கைலாசபதி ஒரு சந்தர்ப்பத்தில் நவீன ஆய்வுகள் அனைத்தும் விஞ்ஞான இயக்கவியலை ஆதாரமாகக் கொண்ட தென்றும் அதை நமக்கேற்றவாறு மாற்றவும், அமைக்கவும் விஞ்ஞானம் முயல்கின்ற தென்றும் எனவே இயற்கையையும் சமூகத்தையும் மாற்ற விரும்புபவர்கள் அம்முயற்சிக்கு முன்தேவையாக அவற்றின் இயக்க விதிகளை தெரிந்துகொள்வது அவசியம் என சொல்கின்றார்.

இங்கு புறவயமான விதிகளைக் கண்டு சமூகத்தை மாற்ற வேண்டுமென்ற நிலைப்பாடு ஏற்கப்படுகின்றது. இவ்விடத்தில் முருகையன் கூறுகின்ற கைலாசபதியின் தொடர்பியல் வாதம் (பண்முக ஆய்வு - பக்.26). எம் கவனத்திற்கு வருகின்றது. இதனை தமிழவன் அனுபவ நேர்காட்சி வாதம் என கூறுகின்றார். இவ்வாறு பார்க்கின்றபோது கைலாசபதியின் அணுகுமுறையானது நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பு மாறும் காலத்தில் அதிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதித்த கருத்துப்படிவங்களும் கோட்பாடுகளும் மதிப்பிழக்கின்றன. காவியத்தின் நிலைகுலைவிற்கும் இதுவே காரணம் என்கின்றார். எனவே மேற்கூறிய கூற்றின்படி, சிந்தனையானது சமுதாய அமைப்பிலிருந்து தோன்றுகின்றதென்றும் சிந்தனையிலிருந்து சமுதாயம் தோன்றுகின்றதென்ற கூற்றை இவர் ஒப்பவில்லை. இங்கு எந்த சமூகம் சிந்தனை வளர்ச்சிக்கு காரணமாக இருந்தது என்பதை கைலாசபதி திட்டவட்டமாக கூறவில்லை என்றும் இதன்மூலம் சமூகம் நேரடியாக இலக்கியத்தை பாதிக்கின்றதென்ற கொள்கை மீறப்படுகின்றதென்றும் தமிழவன் குறை காண்கின்றார் (பக். 34). தமிழ் நாவல் இலக்கியத்தைப் பொறுத்தவரை சமூகத்துக்கும் நாவலுக்கும் இடையிலான தொடர்பு பற்றிய கைலாசபதியின் ஆய்வு மிகத் திட்டவட்டமானதென்றும் கவிதை என்று வந்தால் ஏனோ சமூக தொடர்பு விடப்படுகின்றதென்றும் பூ. சி கணேஷனுடைய கருத்தை தமிழவன் ஆதரிக்கின்றார்.

தமிழவனைப் பொறுத்தவரை கைலாசபதியின் விமர்சனப் பார்வை எம்பிரிசம் (Empirism) (அனுபவ நேர்காட்சி வாதம்) விஞ்ஞானத்தைச் சார்ந்தது. இது மேற்கத்தைய மார்க்சிய அணுகுமுறை என்றும் குறிப்பாக பழைய பிரிட்டிஷ் மரபுரீதியான அணுகுமுறை என்றும் இவர் கூறுவார். ஆனால், கைலாசபதியின் மீது ஓர் அரசியல் பார்வையை நாம் செலுத்துவோமானால் மார்க்சியம் தொடர்பாக எந்தவிதமான வரையறையை வைத்திருந்தார் என்பது தெரியவில்லை. ஆனால் இலக்கிய ஆய்வுக்கு இவர் காட்டுகின்ற மேற்கோள்கள் மூலம் இவர் சோசலிச யதார்த்தவாதத்தைப் பின்பற்றினார் என்பது தெரிகின்றது. பிற்காலத்தில் கிடைக்கப்பெற்ற அதாவது 79 க்குப்பின் எழுதப்பட்ட கைலாசபதியின் "சர்வதேச அரசியல் நிகழ்வுகள்" என்ற நூலில் இருந்து சோவியத் யூனியனின் ஏகாதிபத்திய மேலாதிக்கவாதத்தை கைலாசபதி முற்றாக எதிர்ப்பதையும் சீனச்சார்வு சித்தாந்த வரையறைக்கு ஓரளவு முக்கியத்துவம் கொடுத்திருப்பது தெரிகிறது. ஆனால் செந்தில்வேல் கைலாசபதியின் பன்முகப் பார்வை என்ற நூலில் கைலாசபதி கம்யூனிஸ்ட் கட்சியில் மறைகரமாக விளங்கினார் என கூறுவது இடைக்காலத்து கைலாசபதியின் மார்க்சிய சித்தாந்த வரையறைக்குள் மாற்றமொன்று ஏற்பட்டிருப்பதாக தெரிகிறது. ஆனால், அதனை துல்லியமாக இலக்கிய விமர்சனத்துக்குள் இனங்கண்டுகொள்ள முடியாதிருப்பது அவருடைய விமர்சனப் பார்வையின் மீது எதிர்க்கணை தொடுக்கின்றவர்கள் கூறுகின்ற குறைபாடாகும்.

ஞானி கைலாசபதியின் நேர்காட்சிவாதம் பற்றி கூறும்போது மார்க்சிய ஸ்டாலினிய முறைக்கு உதவும் வகையில் இக்கோட்பாடு விளங்குகின்றதென கூறுகின்றார். ஆனால், அதற்கு மறுவிளக்கமொன்றை ஞானி தெளிவாக முன்வைக்கவில்லை. இங்கு தெளிவாகக் காண்கின்ற விடயம் என்னவெனில் மேல்கட்டுமானத்திலுள்ள அரசியல் பொருளாதாரம், பண்பாடு மெய்யியல் என்பவற்றோடு ஒத்து அசைவியக்கம் கொண்டிருப்பதே இலக்கியம் என்பதும் சமூகத்தின் அடித்தளமே மேல்கட்டுமானத்தை தீர்மானிக்கின்றதென்பதிலும் கைலாசபதி மிகவும் கராராக இருக்கின்றார். ஆனால் லெனின் கூறிய வர்க்கப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் கட்சி இலக்கியத்தை நெறிப்படுத்த இயலும் என்பதை இவர் கூறவில்லை. இதற்கு இலங்கையில் மாத்திரமல்லாமல் சர்வதேச ரீதியிலும் கூட கம்யூனிஷ்ட் கட்சிகளின் சந்தர்ப்பவாத போக்கு இவ்வாறு கைலாசபதியின் பார்வையில் கட்சி இலக்கியத்தை தவிர்த் திருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது. எந்தவொரு இலக்கியத் திறனாய்வும் வர்க்க நலனைப் பற்றியே பேசும். அதற்குப் புறம்பாக மொழி நடை, உருவம் என்றெல்லாம் பேசிக்கொண்டே போகலாம். க. நா. சு. ம் சி. சு. செல்லப்பாவும் இந்த வகையில் உருவவியல்வாதிகளாகக் காணப்பட்டன ரென்று தமிழவன் கூறுகின்றார். சி.சு.செல்லப்பா அதனையும் கடந்து ஒரு ஆன்மீக வாதியாக திகழ்ந்தார். தமிழவனை பொறுத்த வரை கைலாசபதியை நிலைகளில் அடயாளம் காண்கின்றார். ஒரு வகையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்ஸிய திறனாய்வாளராகவும் மறுபுறம் கல்வியியல் திறனாய்வாளராகவும் அடையாளப்படுத்துகிறார். கல்வியியல் திறனாய்வாளராக அடையாளப்படுத்துவதற்கு கவிதை நயம், இலக்கிய திறனாய்வு என்ற நூல்கள் எடுத்துக்காட்டப்படுகின்றன. கைலாசபதியின் இலக்கிய திறனாய்வை பொறுத்தவரை சமூகத்தின் பிரதான பொருளாதார கருத்து வடிவங்களை இலக்கியத்தில் வெளிப்படுத்துவதோடு அதனை இலக்கியமாகவும் உருவாக்கிக் காட்டுகின்றார். சமூகத்தின் பொருளாதார விதிகள் இலக்கியத்திலும் செயல்படும் விதிகளாக இருக்க வேண்டும் என இவர் எண்ணுகின்றார். இதற்கு காரணம் இலக்கி யத்துக்கென்று தனியான விதிகள் இருக்க முடியாது என்பதேயாகும்.

கைலாசபதி தமது திறனாய்வில் தான் கற்றுத் தேர்ந்த சகல அம்சங்களுக்கும் ஒரு விவரணப் பார்வையை வைத்திருந்தார் என்பது தெளிவாகிறது. எனவே, க. நா. சு. போன்றோரை ஒற்றைப் பொருள் தேடுபவராக காண்கின்ற தமிழவன் கைலாசபதியின் இலக்கிய பார்வை பன்முகப் பார்வை என்று கூறுகின்றார். அதாவது, இப்பன்முகப் பார்வையில் அழகியல் கோட்பாட்டையும் யாந்திரிக மரபுவாத அழகியலையும் வெற்றிகரமாக எதிர்ப்பதற்கு அவரது விரிந்த பார்வை பயன்படுத்தப்பட்டதென பேராசிரியர் சிவசேகரம் கைலாசபதி பன்முக ஆய்வில் குறிப்பிடுகிறார். இதன் காரணமாக ஆறுமுக நாவலரின் பங்களிப்பை கைலாசபதி மதிப்பீடு செய்ததன் தொடர்பாக அவரோடு முரண்படுபவர்கள் அவர் அதை கண்டுகொண்ட வர்க்கத் தன்மையினை தெளிவாகக் கண்டு கொள்ளவில்லை என்பது இங்கு கூட்டிக் காட்டுதல் பொருந்தும்.

காலணித்துவ காலத்தின் காலனித்துவ வாதிகளின் சமயச்சார்பு, சமய மறுமலர்ச்சி இடம்பெற காரணமாகியது. ஓர் அடிமைப்பட்ட நிலையிலிருந்து விடுபட வேண்டுமென்பதற்காக அதனைவிட முற்போக்கான ஓர் நிலையினை அச்சமூகம் பெற முயல்வது அச் சமூகத்தின் இயற் பண்பாகும். இவ்வாறான நிலை யொன்றுக்கு தூண்டுகோலாக ஆறுமுக நாவலர் விளங்கினார். இந்நிலையினை அக்கால வரலாற்றுச் சூழலை அடிப்படையாகக் கொண்டு கைலாசபதி ஆராய்கிறார். இந்த அடிப்படையில் நாவலரிடம் காணப்பட்ட ஏகாதிபத்திய காலணித்துவ எதிர்ப்புவாதம் இவ்விடத்தில் முக்கியத்தவம் பெறுகிறது. ஒரு நிலமானிய காலணித்துவ காலகட்டத்திலிருந்து ஒரு சமூகம் விடுதலையை நாடிச்செல்லும்போது அங்கு எவ்வாறு ஜனநாயக கோட்பாடு செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதை கைலாசபதி நாவலர் மூலமாக கருதுகிறார்.

புதுக்கவிதை தொடர்பாக கைலாசபதியின் பார்வை என்றும் குறை கூறப்படுகின்றது. மேற்கத்தைய உலகில் தோன்றிய சூழலில் மார்க்சியவாதிகள் மத்தியில் புதுக்கவிதையை ஏற்கும் போக்கு இன்று நிலவுகின்றது. தன்னுணர்ச்சிவாதம் காரணமாக ஆரம்பத்தில் புதுக்கவிதை போக்கினை மார்க்சியவாதிகள் எதிர்த்தனர். கைலாசபதியும் அவ்வாறே பொருள், உணர்ச்சி தொனி முதலியவற்றில் புதுக்கவிதையாளர்கள் தன்னுணர்ச்சி பண்பினையே முதன்மைபடுத்துகின்றனர் என்று கைலாசபதி கூறுகின்றார், அந்த நம்பிக்கை, அந்நியபாடு, பாலியல் விரக்தி, மனோ விகாரம், போலி மேதாவித்தனம், வக்கரித்த அழகியல் நோக்கு, வரலாற்று உணர்வின்மை முதலிய வற்றால் பாதிக்கப்பட்ட இலக்கிய அலை என புதுக்கவிதையை இவர் கண்டிக்கிறார். ஆனால், வானம்பாடி இதழில் வருகின்ற் கவிதைகளை இவர் ஏற்றுக்கொள்கின்றார் என தெரிகிறது. Dr. G. ஜோன் சாமுவேல் முதலாளித்துவ சமுதாய படைப்புக்களில் இழையோடுகின்ற சோக உணர்வுகளும் நம்பிக்கை வறட்சியும் வரப்போகின்ற சமதர்ம சமுதாய இலக்கியங்களுக்கு அடித்தளமாக இருப்பதாக சுட்டிக்காட்டுகின்றன. இந்த அடிப்படையில் தன்னுணர்ச்சி கவிதைகள் தான் அக்கவிதை வர்க்கச்சார்புடையன வாக்குவதற்கு வழிகாட்டியது. காதலைப் பாடியவன் அது நிறைவுபடாதபோது அதில் தன் வர்க்கச் சார்பினை காண்கின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. மார்க்ஸ் தமிழில் மார்க்சிய இலக்கிய விமர்சனம் வானமாமலை, நெல்லை ஆய்வுக்குழு, கைலாசபதி, சிவத்தம்பி ஆகியோருடன் தொடங்குகின்றதென்று கூறுகின்றார். தாராளவாதம் மனிதாபிமான பின்னணியிலிருந்து சற்று விலகி கராரான ஆய்வு முறையியலை இவர்கள் பின்பற்றினார்கள் என மார்க்ஸ் கூறுகின்றார். மார்க்சியத்துக்குள் என்றென்றும் தீர்த்துவிடப் பட்டதாக உரிமை கொண்டாடப்பட்ட பல கேள்விகள் இன்று மீண்டும் முளைத்துள்ளன என்றும் 100 பூக்கள் மலரட்டும் என்ற முழக்கத்தை முன்வைத்த மாவோயிஸ்ட்டுக் கள், ஸ்டாலினை ஏற்றுக் கொள்பவர்கள் மறுப்பவர்கள் சகலராலும் ஏற்றுக்கொள்ளப் பட்ட ஸ்தானோவியப் பார்வை இன்று ஆட்டம் கண்டுள்ளதாக கூறும் அ. மார்க்ஸ் கைலாசபதியின் சோசலிஸ யதார்த்த வாதத்தை மறுபரிசீலனைக்குட்படுத்த வேண்டும் என்று கூறுகின்றார்.

தமிழ் மார்க்சிய விமர்சன சூழலைப் பொறுத்தமட்டில் இது சுயவிமர்சன தசாப்தம் என்றும் இதில் அ. மார்க்ஸ், நு.்.மான், சிவத்தம்பி போன்றோர் இடம்பெறுகின்றனர் என்று கூறுகின்றார். கலைகளில் வர்க்கச் சார்பை ஏற்றுக்கொள்ளும் நு.்.மான் எல்லா வகைக் கலைகளிலும் ஏதோ ஒரு வகையான பிரசாரமும் சார்பு தன்மையும் இருக்கின்ற தென்பது உண்மையல்ல என்று நு.்.மான் கூறுவதாகக் கூறும் மார்க்ஸ் விமர்சன யதார்த்தவாதம் சோசலிஸ யதார்த்தவாதம் என்றெல்லாம் விமர்சனத்துக்கு முத்திரை குத்துவதை மறுப்பதை ஏற்றுக்கொள்வதாகக் கூறுகின்றார். எனவே இவர்களின் கருத்துப்படி இவற்றை எல்லாம் தாண்டி இலக்கிய விமர்சனம் தேவை என்பதே இவர்களின் வலியுறுத்தல்களாகும். இவ்வாறு புதிய விமர்சனமொன்றை தேடும் இவர்கள் அதற்கான சரியான அரசியல் தளம், விமர்சன நோக்கு என்பவற்றை திட்டவட்டமாக கூறாது இருக்கின்றமை பேராசிரியர் விம்சாட்டின் கூற்றை மேற்கோள் காட்டி கைலாசபதி கூறிய உள்நோக்கம் போலி நியாயத்தையே மீண்டும் எம் நினைவுக்கு கொண்டு வருகிறது.

நெஞ்சில் நிறைந்த மனிதம் ....



"இந்தியாவின் தலை சிறந்த விஞ்ஞானி...
தொழில்நுட்ப வல்லுநர்...
மிகப் பெரிய பொருளாளர் ...
இந்தியாவின் பதினோராவது குடியரசுத் தலைவர் ...
இந்திய ஏவு கணை நாயகன் ...
இந்திய விஞ்ஞான வளர்ச்சியின் தந்தை ...
சிறந்த ஆசிரியர் ... சிறந்த பேச்சாளர் ...
பாரத நாட்டின் பெறுமதியைக் கூட்டிய மா மேதை..."

பாரத நாட்டின் புகழ் பெற்ற இராமேஸ்வரம் என்ற கிராமத்தில் பிறந்த ஒரு படகோட்டியின் மகன். எல்லோர் மனதில் என்றும் நிலைத்திருக்கும் ஒரு அறிவொளி. பிறந்த மண்ணுக்கும் பெற்றோருக்கும் என்றும் நினைவில் நீங்காத பெயரை தேடித் தந்த ஒரு மாமேதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களின் கல்வி அபிவிருத்தியில் பலரது பங்களிப்பு அவசியமானதாக உள்ளது இதில் பெற்றோர்களின் பங்களிப்பு மிகப்பெரியது

மொழிவரதன் – C. மகாலிங்கம்

பிள்ளைகளுக்கான ஊடக மொழி அல்லது தாய் மொழி பற்றிய சிந்தனை தெளிவின்மை இன்றும் உள்ளது. தத்தமது குழந்தைகளின் கற்றலுக்கான மொழி தொடர்பாக பெற்றோர் சரியான தீர்மானத்தினை மேற்கொள்ளல் வேண்டும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் எவ்வாறான மொழியை பின்பற்றல் வேண்டும் என்பது பற்றி அதிகம் கூறத் தேவையில்லை.

தாய் மொழி அத்துடன் இந்நாட்டின் அரச மொழி மற்றது சர்வதேச தொடர்பாடல் மொழி என மூன்றினையுமே கற்க பெற்றோர்கள் வழிகாட்டல் வேண்டும்

பிள்ளைகள் அனைவரும் சமமானவர்கள் அல்ல. அவர்கள் தனித்தனி தன்மைகளை கொண்டவர்கள் ஆவர். அவர்கள் சராசரியான குழந்தைகளாகவும், மீள்திறன் உடையோர் களாகவும், வளர்ச்சி குன்றியவர்களாகவும் இருக்கலாம். எனவே ஒருவரோடு ஒருவரை பெற்றோர் ஒப்பிடல் இயலாது - கூடாது.

பெற்றோர்கள் எப்படி உள்ளார்கள்?

பெற்றோர்களின் பழக்கவழக்கம், நடத்தை பிள்ளைகளின் செயற்பாடுகளில் ஆதிக்கம் செலுத்தும் என்பது ஒரு யதார்த்தமாகும். உங்களை உங்கள் பிள்ளைகள் ஏற்றுக்கொள் கின்றனரா என்பது மிக முக்கியமானதாகும்.

பெருந்தோட்டங்களில் உள்ள பாடசாலை களில் பெற்றோர்கள் எவ்வாறு உள்ளார்கள் என்பது சிந்திக்கப்படல் வேண்டும். சில வேளைகளில் பிள்ளைகள் ஏன் தத்தமது பெற்றோர்களை குறிப்பிட்டுக் கூறத் தயங்குகின்றார்கள்.

குடிப்பழக்கம், பொருத்தமற்ற நடத்தை காரணமாகவும் இவ்வாறு பிள்ளைகள் நடந்து கொள்வார்கள் எனின் பிழையில்லை.

நல்ல கல்வியை பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு வழங்க உதவ வேண்டும். அடிப்படையான அறிவை அவர்கள் பெறல் வேண்டும். ஆரம்பத்திலேயே அவர்களுக்கு சரியான கல்வியை வழங்க ஆவன செய்ய வேண்டியது பெற்றோர்களின் கடமையாகும்.

பிள்ளைகளின் உணர்வுகளை புரிந்து கொள்ளல் வேண்டும். அவர்களின் வயது. தேவை, ஆசை, எண்ணங்கள் பற்றி சற்று சிந்தித்தல் வேண்டும்.

தத்தமது பிள்ளைகளின் ஒத்த வயது (Peer Group) கூட்டத்தினரை பற்றிய தெளிவு, விளக்கம், பெற்றோர்களுக்கு அவசியம் தேவையாகும். பிள்ளைகள் தத்தமது வயதோடு ஒத்த கூட்டத்தினரின் செயற்பாடுகளுடனேயே கலந்து இருப்பர்.

இவர்களைப் பற்றி தேடிப்பார்த்து பிழையான விடயங்களில் குழந்தைகள் ஈடுபடும் போது அது பற்றிய விளக்கத்தையும் அளித்தல் வேண்டும்.

இவ்விடத்தில் பெற்றோரின் கல்வி அறிவு முக்கியமானதாகும். மலையக பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் பெரும்பாலும் பெற்றோர்கள் தோட்டத் தொழிலாளர்களே. எனவே, இவ்விடத்தில் பெற்றோர்கள் ஆசிரியர்களின் வழிகாட்டல் களுக்கும் செயற்பாடுகளுக்கும் உறுதுணை யாக இருத்தல் வேண்டும்.

பிள்ளைகளுடன் நெருங்கிப் பழகி அன்பை வெளிப்படுத்தல் வேண்டும். பெண் பிள்ளைகளின் பிரச்சினைகளை அவர்களின் தேவைகளை தாய்மார் கவனித்தல் வேண்டும். இதே போன்றே தகப்பன்மார். மகன்மாரது விடயங்களை கவனிப்பதுடன் பரஸ்பரம் அன்பான முறையில் அணுகிட முயலல் வேண்டும்.

எந்த விடயத்திற்கும் சோம்பல்படாது பங்குபற்றல் பெற்றோர்களின் கடமையாகும். அவர்களுக்கு உதவவும் அவர்களின் உணர்வுகளை மதிக்கவும், பாராட்டவும் பெற்றோர் அறிந்திருத்தல் வேண்டும்.

எதிர்க்கணிய (Negative thinking) சிந்தனையை விடுத்து நேர்க்கணிய சிந்த னையை (Positive thinking) எவ்வேளையிலும் பெற்றோர்கள் எடுத்தல் வேண்டும்.

பாடசாலை பிள்ளைகளின் எல்லா விடயங்களுக்கும் அனுமதி வழங்காது தேவையான, பொருத்தமான செயற்பாடுகளுக்கு மாத்திரம் அனுமதி வழங்குவதுடன் ஒரு வரையறையுடனான செயற்பாட்டு முறைமையை எல்லா விடயங்களிலும் பின்பற்றல் நலம்.

குழந்தைகளுக்கு நல்ல உணவை வழங்க வேண்டியது பெற்றோர்களின் கடமையாகும்.

நிறைவுணவை தெரிவு செய்து வழங்குதல் வேண்டும். சூழலில் கிடைக்கும் உணவு வகைகளில் சத்துள்ள உணவு எது என்பது பற்றிய தெளிவு பெற்றோர்களுக்கு தேவையாகும்.

மலையக பிரதேசங்களில் நல்ல உணவு வகைகள் உள்ளன. மரக்கறி, கீரை, பழங்கள், கிழங்குகள் என பலவகை உணவுகள் உள்ளன. ஆனால், எம்மக்களின் உணவு முறையில் காணப்படும் குறைபாடு காரணமாக அவை புறக்கணிக்கப்படுகின்றன. சிறு வயதிலிருந்தே இவ்வகையான உணவுகளை நல்ல சுவையாக சமைத்து வழங்க பெற்றோர் தம்மைத் தயார்படுத்திக் கொள்ளல் வேண்டும். "இறைச்சி, மீன் போன்ற உணவுகள் மிக விலைகூடிய" உணவு வகைகளாக மலையகப் பகுதிகளில் உள்ளதை நாம் விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

வெற்றியடைய இயலாத நோக்கங் களையும் இலட்சியங்களையும் நீங்கள் உங்கள் பிள்ளைகள் மீது திணிக்காதீர்கள். உங்கள் பிள்ளை எதை விரும்புகின்றதோ அது சரியானது (பிழையானதில்லை எனில்) அதனைப் பற்றி சிந்தித்து அதனை அவர்கள் அடைய உதவுங்கள். பிள்ளையின் கல்வி நோக்கம் பிழையானது எனின் அதனை சுமுகமாக எடுத்துக் கூறுங்கள்.

மலையக பிரதேசத்தை பொறுத்த வரையில் இவைகளை அடைய பெற்றோர்களும் சில தியாகங்களைச் செய்ய வேண்டியவராக உள்ளனர் என்பதை உணரல் வேண்டும்.

இன்று பல பெற்றோர்கள் இதனை உணர்ந்து வருவது நம்பிக்கை தருகின்றது. என்றாலும் மேலும் விழிப்புணர்வு ஊட்ட வேண்டியது அதிபர், ஆசிரியர், சமூக செயற்பாட்டாளர்கள், அரசியலாளர்கள், படைப்பாளிகள் அனைவரினதும் கடப்பாடாகும்.

- இறையருளைப் பெறுவதற்கு ஆதாரம் அன்பு தான். மனதில் அன்பு ஊற்றெடுக்க வேண்டுமானால், எல்லா உயிர்களையும் நேசிப்பது ஒன்று தான் வழியாகும்.
- அன்னதானம் செய்பவர்களை கடவுளின் அம்சம் என்று சொல்ல வேண்டும். பசி புத்தியை தடுமாறச் செய்யும் பசி என்னும் தீயை அன்னத்தால் அணைக்க வேண்டும். அன்னமிடுபவர்கள் பெருங்கருணையாளர்கள் என்றால் மிகையில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுருகன் தடுத்தாட்கொண்ட சித்தர் திராய்மடுச் சடையப்பர் சுவாமிகள்

கவிஞர், கலாபூஷணம் கா. சிவலிங்கம்

நமது ஈழத்திருநாட்டில் அவதரித்து வாழ்ந்த யோகர் சுவாமிகள், சித்தானைக் குட்டிச் சுவாமிகள் முதலான சித்தர்களின் வரிசையிலே சடையப்பர் சுவாமிகளும் ஒருவராகத் திகழ்கின்றார். இவர் வங்கக் கடலுடன் மட்டக்களப்பு வாவி சங்கமிக்கும் முகத்துவாரத்திற்கண்மையிலுள்ள மட்டிக்களி என்னும் கிராமத்தில் பட்டங்கட்டி தம்பியப்பா அமராவதி தம்பதியினருக்கு அருந்தவப் புதல்வராக 1909 ஆம் ஆண்டு ஆடி மாதம் 13 ஆம் திகதி அவதரித்தார்.

நல்லதம்பி என்னும் இயற்பெயர் கொண்ட இவ்வவதார புருஷரின் வாழ்க்கை வரலாறு, இல்லறம், துறவறம் என்னும் இரு பாகங்களைக் கொண்டதாய் அமைந்துள்ளது. முதலில் இவரது இல்லற வாழ்க்கையை நோக்குவோம். இவர் தமது பாலப் பருவத்திலே தாய், தந்தையரை இழந்த காரணத்தால் உறவினர் ஒருவரின் ஆதரவில் தான் வாழவேண்டி ஏற்பட்டது.. வறுமை காரணமாக இவர் சிறுவயதிலேயே தொழில் செய்து உழைக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கும் உள்ளானார். இதனால் பாடசாலைக் கல்வியை மூன்றாம் தரத்திற்கு மேல் தொடர முடியாத துர்ப்பாக்கியத்திற்கும் ஆளானார். காளைப் பருவம் எய்தியதும் செல்வன் நல்லதம்பி அவர்கட்கு செல்வி மாரிமுத்து என்பவரைத் திருமணஞ் செய்து வைத்தனர்.

புதுமணத் தம்பதிகள் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து கொண்டிருந்தபோதுதான் சோதனை குறுக்கிட்டது. தொழிலின் நிமித்தம் வேறு நண்பர்களுடன் திருகோணமலைக்குச் செல்ல வேண்டிய சந்தர்ப்பம் இவருக்கு உண்டானது. அவ்வாறே திருகோணமலைக்குச் சென்று அங்கே துறைமுகத்தில் பிரித்தானியரின் கீழ் தொழில் புரிந்து கொண்டிருந்தபோது 1942 ஆம் ஆண்டு இரண்டாம் உலக மகா யுத்தம் ஆரம்பமானது. திருகோணமலைத் துறை முகத்திலும் குண்டுகள் வீழ்ந்தன. தொழிலாளர்கள் எல்லோரும் செய்வதறியாது திகைத்து நின்றனர். அல்லோலகல்லோலப்பட்டு உயிரைக் காப்பாற்றும் நோக்கோடு தத்தம் சொந்த ஊர்களுக்குச் செல்ல ஆயத்தமாகினர். நல்லதம்பியுடன் வந்தவர்கள் எல்லோரும் ஓரிடத்திற் கூடினர். ஆனால் நல்லதம்பியை மாத்திரம் அவ்விடத்திற் காணவில்லை. தேடிப் பார்ப்பதற்கும் இயலாத சூழ்நிலையுடன் அவகாசமும் இல்லை. அதனால் அவர் குண்டு வீச்சில் உயிரிழந்துவிட்டதாகக் கருதி அவசர அவசரமாக தத்தமது மூட்டை முடிச்சுகளுடன் அங்கிருந்து வெளியேறி மட்டக்களப்பை வந்தடைந்தனர். நல்லதம்பி யின் குடும்பத்தினரிடமும் நடந்த விடயத்தைக் கூறியதும் மனைவி மாரிமுத்து உட்பட அனைவரும் கதறி அழுதனர். மிகவும் துயரமடைந்தனர்.

மனைவி மாரிமுத்து ஒரு இளம் பெண்ணானதால் பெற்றோர் அவளுக்கு வேறொருவரைத் திருமணம் செய்து வைத்தனர். வெள்ளைக் காரரின் விடுதியில் வேலை செய்துகொண்டிருந்ததால் குண்டு வீச்சிலிருந்து தப்பிய நல்லதம்பி சில மாதங்களின் பின் தமது இல்லத்திற்குத் திரும்பினார். அங்கே தமது மனைவி வேறொருவருடன் இருப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார். மரணமடைந்தவர் என்று கருதப்பட்ட அவர் திடீரென வந்து நின்றதும் அனைவரும் ஆச்சரியம் அடைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் நல்லதம்பியிடம் நடந்த விடயங்களைக் கூறியதும் அவற்றைச் செவிமடுத்த அவர் உணர்ச்சிவசப்படாமல் அமைதியாக இருந்து சிறிதுநேரம் சிந்தித்தார். அறிவுக்கு வேலை கொடுத்தார். முருகன் தன்னைத் தடுத்தாட்கொண்டு விட்டதாக உணர்ந்தார். தமது பெயரிலிருந்த சகல சொத்துக்களையும் எழுதிப் புதுமணத் தம்பதியினரிடம் கையளித்துவிட்டு முருகனே துணை என்று நம்பியவராய் துறவறத்தில் காலடி எடுத்து வைத்தார். இது அவரது வாழ்க்கையில் ஏற்பட்ட ஒரு திருப்பு முனையாகும்.

இனி அவரது துறவற வாழ்க்கையை உற்று நோக்குவோம். ஊரில் இருக்க விரும்பாத நல்லதம்பி அவர்கள் எந்தச் சொத்துக்கும் உரிமையற்றவராய் வெறுங் கைகளுடன் தன்னந்தனியனாய் 1950 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 13 ஆம் திகதி தமது 41 ஆவது வயதில் அவரது சொந்த ஊரான மட்டக்களியிலிருந்து புறப்பட்டு வடக்கே கிட்டத்தட்ட 02 கிலோமீற்றர் தொலைவிலுள்ள முல்லையும் (காடுசார்ந்த இடம்) நெய்தலும் (கடல்சார்ந்த இடம்) ஒன்றையொன்று சந்திக்கின்ற ஒரு இடத்தில் தமது துறவு வாழ்க்கையை ஆரம்பித்தார். அந்த இடத்தின் ஒரு பகுதியை வெட்டி வெளியாக்கித் துப்பரவு செய்து அங்கு நின்ற ஒரு வேப்பமரத்தடியில் ஒரு முருகன் படத்தையும் வைத்து வழிபட்டார். அதனருகில் தனக்கென்று கம்பு தடிகளாலும் ஓலைக் கிடுகுகளினாலும் ஒரு குடிசையையும் அமைத்து முருகன் ஒருவனே துணை என்று நம்பி அந்த அடர்ந்த காட்டில் அச்சமெதுவு மின்றி தன்னந்தனியனாய் ஒரு துறவியாய் வாழத் தொடங்கினார். இங்கு ஒரு நீரோடையுடன் சேர்ந்திருந்த ஒரு மடுவை அண்டிய பகுதிகளில் திராய் என்னும் உணவுப் பூண்டுகள் செழித்து வளர்ந்து காணப்பட்டன. அதனால் இந்த இடத்திற்குத் திராய்மடு என்ற பெயரையும் அவரே சூட்டினார்.

சிறுவயதிலிருந்தே முருகப் பெருமானிடத்தில் பக்திகொண்டிருந்த இவருக்கு இப்போது தீவிர பற்றுதல் ஏற்பட்டது. இதன் காரணமாகவோ என்னவோ இவ்வவதார புருஷருக்கு முருகனருளால் செஞ்சடை தலையிற் தோன்றியது. அந்தச் செஞ்சடை சிறுசிறு புரிகளாக வளர்ந்து 13 அடி நீளத்தையும் தாண்டியது. இதனால் இவரை மக்கள் சடையப்பர் சுவாமிகள் என்று அழைக்கலாயினர். சாமியாரின் வாடி என்று அழைக்கப்பட்ட இவரது வசிப்பிடம் ஆச்சிரமம் என்றும் வணக்கத்தலம், ஆலயம் என்றும் மக்களால் அழைக்கப்பட்டன. ஆலயத்திற்கு வரும் அடியார்கள் பொங்கல் படைத்து பூசைசெய்து முருகனை வழிபடலாயினர். சடையப்பர் சுவாமிகளின் பாதங்களையும் தொட்டு வணங்கிச் செல்லத் தவறுவதில்லை.

இவரது துறவித் தோற்றத்தையும் இவ்விடத்திற் குறிப்பிட்டாக வேண்டும். வெள்ளைவேட்டியை மடித்து ஒழுங்கில்லாமல் இடுப்பில் சுற்றிச் சொருகி இருப்பார். முகம், கை, கால், மேனியெங்கும் திருநீறு அணிந்திருப்பார். ஒரு உருத்திராக்கக் காயை நூலில் கோர்த்து கழுத்தில் கட்டியிருப்பார். அவரது நீண்ட சடையை ஒவ்வொரு புரியாக எடுத்து தலையில் சுற்றிக் கட்டியிருப்பார். ஆச்சிரமத்தைவிட்டு வெளியே செல்லும்போது ஒரு சால்வைத் துண்டால் போர்த்தியிருப்பார். அனைவரையும் கவரும் கள்ளங்கபடமற்ற கலகலவென்ற சிரிப்பு அவருடன் கூடப் பிறந்தது. எப்பொழுதும் முகம் மலர்ந்து காணப்படும். திராய் மடுவிலிருந்து ஊருக்குச் செல்லும்போது ஒரு முடக்குத் தடியைத் தோளில் கொழுவியிருப்பார். சுவாமிகள் பொதுவான உயரமும் மெலிந்த உருவமும் இளம் கருநிறமுங் கொண்டவர். சிறிய மீசையும் சிறிய தாடியும் முகத்தில் காணப்படும்.

காட்டிலுள்ள விறகு, கம்புத்தடி, பனை மட்டை ஆகியவற்றையும் பிரம்பினால் தன்னால் பின்னப்பட்ட, தான் பின்னிய பிரம்புக்கூடை வகைகள், தொட்டில்கள் முதலானவற்றையும் விற்பதைத் தமது வாழ்வாதாரமாகக் கொண்ட இவர் வயது முதிர்வின் காரணமாக அத்தொழில்களைக் கைவிட்டுப் பொதுமக்களின் உதவியை நாடினார். பொதுமக்களும் மனப்பூர்வமாகத் தம்மாலான உதவிகளை வழங்கினார்கள். இதனால் இவரதும் ஆலயத்தினதும் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு வாழ்க்கை நடத்திய சுவாமிகளுக்கு ஆலயத்தைக் கல்லினால் நிர்மாணிக்க வேண்டும் என்ற எண்ணம் உதய மாகியது. பொதுமக்களைத் தமது ஆச்சிரமத் திற்கழைத்துத் தமது விருப்பத்தை வெளியிட்டார். பொதுமக்களும் அதற்கு உடன்பட்டு அவர்களின் பூரண சம்மதத்துடனும் பங்களிப்புடனும் ஆலயம் கட்டி முடிக்கப்பட்டு அவரது விருப்பப்படி "அமிர்தகழி" மாமாங்கேஸ்வரர் ஆலயப் பிரதம குருவினால் 1987 ஆம் ஆண்டு ஆடி மாதம் 06 ஆந் திகதி கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. அந்தப் பெருந் திருப்தியுடன் இருந்த சடையப்பர் சுவாமிகள் கொடுநோயின்வாய்ப்பட்டு 1992 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 24 ஆந் திகதி மகாசமாதியிடைந்தார். அவரது பரிசுத்த ஆன்மா முருகப் பெருமானிடம் சென்ற டைந்தது. அவரது சமாதி அவரது விருப்பத்திற்கிணங்க அவர் வழக்கமாகத் துயிலும் இடத்திலேயே அழகாக அமைக்கப் பட்டுப் பூசையும் நடத்தப்படுகிறது. ஒரு சாதாரண குடிமகனாக இருந்த நல்லதம்பி அவர்கள் இவ்வாறு வணக்கத்திற்குரிய சடையப்பர் சுவாமிகளாய் ஆனது முருகப்பெருமானின் பேரருளாலே அன்றி வேறொன்றாலுமல்ல.

சடையப்பர் சுவாமிகள் நிகழ்த்திக்காட்டிய அற்புதங்களிற் சிலவற்றைச் சுருக்கமாக இங்கு குறிப்பிடத்தான் வேண்டும். ஒரு கற்பூரக் கட்டியை 45 நிமிடங்கள் எரியச் செய்தமை; கொதித்த கோப்பியை இறக்கி வைத்ததும் குளிரச் செய்தமை! பேசாத பிள்ளையைப் பேசவைத்தமை; ஒருவருக்கு வந்து சேரவேண்டிய பணத்தை கூறிய உடனேயே வரவைத்தமை; வெறும் பாத்திரத்தில் அரிசியை வரவைத்தமை; 02 நபர்களுக்குரிய உணவை 05 நபர்களுக்குப் போதுமான தாகச் செய்தமை; குறிப்பிட்ட பூசைக்குரிய உபயகாரர் எதிர்பாராமல் வரத்தவறியதால் வேறொருவர் மூலம் அன்றைய பூசையை நடத்திக் காட்டியமை ஆகியவற்றை அற்புதங் களாகக் கூறலாம். இவற்றுடன் அவருடைய தீர்க்கதரிசன எதிர்வுகூறல்கள் நிஜமாகப் பலித்தன. கங்கையினால் அழிவு ஏற்படும் என்று கூறினார். அது சுனாமியாகி நாட்டை அழித்தது. திராய்மடு இப்போது காடுதான். ஆனால் ஒரு காலம் சனநடமாட்டமுள்ள நகரமாகும் என்றார். அவரின் அருள்மொழி பலித்தது. இப்போது சகல வசதிகளும் கொண்ட ஒரு நகரமாக விளங்குவதை யாவரும் கண்கூடாகக் காணலாம். அத்தோடு பனை மட்டைக்கட்டைத் தோளில் ஏற்றி வைத்ததும் அதிசயமாகப் பேசப்பட்ட விடயமாகும். இப்படிப்பட்ட பெருந்துறவி, மெய்ஞ்ஞானி, சித்தர், தீர்க்கதரிசி மட்டக்களப்பில் அவதரித்து மகாசமாதி யடைந்தமை மட்டு மாநகருக்குப் பெருமை என்றால் மிகையாகாது.

மகாத்மா காந்தி அடிகள்

- மாணவருக்கு உண்மையான பாடப்புத்தகம் ஆசிரியரே. ஆசிரியர் தாம் படித்துத் தெரிந்து கொண்டவைகளையெல்லாம் தன்னுடைய சொந்த நடையில் சொல்லிக் கொடுக்கவேண்டும். சாதாரண வாய்மொழியாகச் சொல்பவற்றை வெகு எளிதாக மாணவர்களால் திரும்பச் சொல்ல முடியும்
- கோழையாக இருக்கும் ஓர் ஆசிரியர் தம்மிடம் படிக்கும் மாணவர்களை வீரர்களாக்கி விடமுடியாது. மாணவர்களை அடிப்பதுபோன்ற தண்டனையே கூடாது. அவனிக்காற்றே படக்கூடாது என்று குழந்தைகளைப் பத்திரமாக மூடி வைத்து வளர்த்து விடுவதால் அவர்களைத் தீமைகள் பற்றாமல் விடுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்களுக்கும் காலம் வரும்"

மாற்று மலையகம் படைப்போம்

- கவிதையாக்கம் -

குழந்தைவேல் ஞானவள்ளி

அந்நியன் கண்ட அகதிகளாய்
அடி வைத்த நாள் முதலாய்
முகவரி அற்று
முகம் தன்னை மறைத்து
உடல் வருந்த உழைத்து
முகத்திரை கிழித்து
மீண்டெழுந்தோம்
எமக்கோர் உரிமை கோரி.

முள்ளந் தண்டுடைந்து
முதுகெலும்பானோம்
முட்கள் மீது பாய் விரித்து
சுக துக்கம் மறந்தோம்
கட்டை விரல் தேய
மையிட்டும் - வீட்டை
கட்டியாள வழியில்லை
கவலை கொண்டு விழவில்லை
மீண்டெழுந்தோம்
எமக்கோர் உரிமை கோரி.

பிள்ளை சுமை பெருஞ்சுமையாம்
எமக்கு ஏனோ
தெரியவில்லை
"ஏணி படிக்கட்டுக்களில
ஏறி இறங்கி பழகிப் போச்சு"
எட்டு மணிக்கு நிரை பிடிச்சி
பதினெட்டுக் கிலோ தேடினாலும்
வீட்டுப் பெட்டி
நிறையுதில்லை
நித்தம் வறுமை போராட்டம்
மாயவில்லை
மீண்டெழுந்தோம்
எமக்கோர் உரிமை கோரி.

பணக்கார பார்வையில்
லயன் குடிசையாச்சி
அதிகார போர்வையில் - அது
மாட்டு கொட்டிலாச்சி

பத்துக்கு பத்தடி
பத்து பேர் ஆனாலும்
பத்திரமாம் தானிருந்தோம்
பத்து தலைமுறையானாலும்
மாண்டு மடியவில்லை
மீண்டெழுந்தோம்
எமக்கோர் உரிமை கோரி

கைரேகை கொண்டு
எதிர்காலம் கணிப்பர்
ரேகைகளே கைகளான
எங்களது விதியை
கணிக்க யாராலும்
முடியவில்லை
விதியை நம்பி - மதி
கெட்ட காலம் மாறிபோச்சு
இன்று - மீண்டெழுந்தோம்
எமக்கோர் உரிமை கோரி

ஒப்புதலுக்காய் ஒப்பந்தமாம்
ஓட்டுக்காக சம்மந்தமாம்
காலங்கள் கடந்து போச்சு
கதை பேசி நேரம் வீணா போச்சி
கை கட்டி நின்ற காலம்
காணாமல் போயாச்சி
பாரையாள எம்மவரும்
பட்டம் பெற்று வந்தாச்சி - தாமதமில்லை
மீண்டெழுந்தோம எமக்கோர் உரிமை கோரி.

மீண்டெழுந்த எம்மை மீளழிக்க முடியாது
ஒரு நொடி நின்று
எம்மை திரும்பி பாருங்கள்
குனிந்து அல்ல நிமிர்ந்து
மாற்று மலையகத்திற்காய்
மீண்டெழுந்தோம்
எமக்கோர் உரிமை கோரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்து மதங்களும் நேசிக்கும் அழியாத சொத்து ......

கலாபூஷணம் மாத்தளை ராஜ்சிவா சிவலிங்கம்

"தோன்றாத் துணையாய் துதிப்போர் துயர் களைந்து துலங்கிட வைக்கும் தும்பிக்கை நாதனாம்" கட்டுக்கலை ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயத்தின் அருள்பெற்று அபூர்வமாக அமையப்பெற்ற "அகிலம்" எனும் கலை, இலக்கிய பணியாற்றும் இல்லத்தின் சிறப்பு அகிலமே அறிந்த விடயமாகும்.

"யாதும் ஊரே! யாவரும் கேளீர்" என்ற சங்க மொழிக்கமைவாக 25 ஆண்டுகளாக இன்றுவரை வடிவம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற கலை, இலக்கிய, அறிவியலுடன் கால் நூற்றாண்டாக கண்டி மாநகரில் வெளிவந்து கொண்டிருக்கின்ற அகிலம் சஞ்சிகையின் ஆசிரியர் கலாபூஷணம் K. V. இராமசாமி அவர்களது சேவையை பாராட்டியே ஆக வேண்டும்.

இவ்வுலகில் அழியாத சொத்தாக திகழ்வதுதான் கல்வி, உலகத்தில் அனைத்து மதங்களும் கல்வியை நேசிப்பதோடு, கல்விக்கு முதலிடம் கொடுத்து கல்வியைச் சிறப்பித்து எடுத்துக்கூறி நிற்பதைக் காணலாம். உலகில் எம்மதமாக இருந்தாலும் அனைவருக்கும் கல்வி என்பது ஒன்றே, ஆகவே, இப்படிப்பட்ட மேன்மைமிக்க கல்வியோடு அறிவுசார்ந்த திட்டங்களை மாணவர்கள் மத்தியில் புகுத்தி அறிவு வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து வரும் அகிலம் சஞ்சிகை ஆசிரியர் கலாபூஷணம் K.V. இராமசாமியின் வழிகாட்டல் சிறப்பானதாகும்.

இலங்கை வாழ் மாணவர்களின் உள்ளங்களில் பொதிந்து கிடக்கும் திறன்களை ஆக்கங்களாக வெளிக்கொணரவும் பண்பாட்டு அம்சங்களின் களஞ்சியமாக அமையும் இலக்கிய வளர்ச்சியினை புதிய தலைமுறையினருக்கு கையளிக்கும் நோக்குடனும் இக் கலை, இலக்கிய சஞ்சிகையான அகிலம் முன்னுதாரணமாக திகழ்வது பெருமைக்குரிய விடயமாகும்.

மலையக வாழ் மாணவர்களின் உள்ளங்களில் பொதிந்து கிடக்கும் திறமைகளை ஆக்கங்களாக வெளிக்கொண்டு வருவதோடு பண்பாட்டு அம்சங்களின் களஞ்சியமாக அமையும் இலக்கிய வளர்ச்சியினை புதிய தலைமுறையினருக்கு உந்து சக்தியாக "அகிலம்" சஞ்சிகை அமையப் பெற்றிருக்கிறது.

தற்போதைய காலகட்டத்தில் மாணவர்களிடையே வாசிப்பு திறன் முற்றாகவே அழிந்து போகும் இக்காலப் பகுதியில், இந் நிலையை மாற்றியமைக்க அவர்களிடம் இலக்கியம் கற்கும் ஆர்வத்தை, போட்டிகள் நடாத்தி தூண்டுவதன் மூலம் மாணவர்களினது மனதை பக்குவப்படுத்த ஆவன செய்ய முடியும்.

இவற்றில் ஏற்ற இறக்கங்களை மாணவர்களின் உள்ளத்தில் பதிவதோடு, இலக்கியங்களின் பண்புகளை ஆராய்ந்து காணும்போது இலக்கிய நயப்பு இயல்பாகவே அவர்களுக்கு ஏற்பட்டுவிடும். இதன் மூலம் சிந்தனை, கற்பனை, ஆர்வம், செயற்றிறன் போன்றவை விரிவடைவதால் பல்துறைகளிலும் தங்களது திறமைகளைக் காட்ட வழி ஏற்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக சமுதாயத்தினுடைய அறிவு வளர்ச்சி பெறுவதற்கும், அறிவுக் கண்களைத் திறப்பதற்கும், மாணவ சமுதாயத்திற்கு போட்டிப் பரீட்சைகள் நடாத்தி சிந்தனை வளர்ச்சியை பெருக்கி எவ்விடத்திலும், எவர் முன்னிலையிலும், முகம் கொடுக்கக்கூடிய ஆற்றலை ஏற்படுத்தி கொடுக்கிறது. நல்ல ஒழுக்கத்தை உருவாக்குகிறது. விரிந்த அறிவு வளர்ச்சியை தருகிறது. தன்னம்பிக்கையை கொடுக்கிறது. தனது சொந்தக் காலில் நிற்க உத்வேகத்தை கொடுக்கிறது. இவைகள் தான் ஒரு மாணவன் கற்றுக் கொள்ளும் உண்மையான கல்விக்கு அர்த்தமாகும்.

இந்த வகையில் சுமார் 25 வருட காலமாக பல பணிகளையும், கல்விசார் கலை, இலக்கிய உள்ளங்களை இனங்காட்டி வருவதோடு, "அகிலம்" அறிவியல் சஞ்சிகையின் ஆசிரியர் கலாபூஷணம் K.V. இராமசாமி அவர்கள் தனது அகிலம் சஞ்சிகையோடு கலை இலக்கியப் பணியை சிறப்பாக நடாத்தி வருவதுடன் 25 ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு அகிலமெங்கும் சுடர்விட்டு பிரகாசிக்கும் அகிலம் சஞ்சிகை யினது வெள்ளி விழாவும், பவளவிழா ஆண்டில் தடம்பதிக்கும் சேவாஜோதி லக்கிலேண்ட் தொழிலதிபர் எஸ். முத்தையா அவர்களதும், கலாபூஷணம் K.V. இராமசாமியினதும் பவ்ளவிழாவும் மிகச் சிறப்பாகவும் மிக விமர்சையாகவும் நடைபெற எல்லாம் வல்ல அம்பிகையின் துணைகொண்டு எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

வெற்றிபெற வேண்டுமானால்...

- தாழ்வு மனப்பான்மையை நீக்குதல்
- எப்பொழுதும் உற்சாகமாக உழைத்தல்.
- நம் செயலை நேசித்தல்
- குறிக்கோளை மனதில் ஆழமாகப் பதிவு செய்தல்.
- திறமைகளை மேலும் மேலும் வளர்த்துக் கொள்ளுதல்.
- தோல்வியைக் கண்டு துவளாமல் விடாமுயற்சி செய்தல்.
- நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுத்தல்.
- நம்மால் முடியும் என்று நம்புதல்
- நேர்மைக்குப் பலன் கிடைக்கும் ஆனால் நெடுநாள் காத்திருக்க வேண்டும்.
- வாய்ச்சொற்களைக் குறையுங்கள். அதற்காக வேண்டுக. வாய்மையைக் குறைத்து விடாதீர்கள்.
- கோழையாக வாழ்வதைக் காட்டிலும் போராடிச் சாவது எவ்வளவோ மேல்.
- நீங்கள் எதைச் செய்தாலும் சரி, உலகத்திற்கும் உள்ளத்திற்கும் உண்மையாகவே நடந்து கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய உலகில் இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள்.....!

தேசாபிமானி திருமதி ஏ. யூ. எல். எஸ். அரபா
ஆசிரியை - கண்டி பதியுதீன் மஹ்மூத் மகளிர் கல்லூரி

காலத்தின் கண்ணாடியாகக் கருதப்படுவது இலக்கியம். கலாசார பண்பாட்டு பாரம்பரியங் களை எடுத்துக்காட்டுவதில் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வடிவங்கள் பெரும் பங்காற்றியுள்ளன.

இன்றைய இளம் சந்ததியினருக்கு, அவை எட்டாக் கனியாகவும் இலைமறை காய்களா கவும் இருப்பது கசப்பான உண்மையாகும்.

இஸ்லாமிய கலாசார பண்பாடு சிதை வுறாத வண்ணம் பல முஸ்லீம் புலவர்கள், இஸ்லாமிய இலக்கியங்கள் பலவற்றை படைத்துள்ளனர்.

உமறுப் புலவரின் சீறாப் புராணம் உன்னத இஸ்லாமியத் தமிழ் காப்பியமாக கருதப்படுகின்றது. இத்தோடு. இப்ராஹிம் நபி (அலை) அவர்களை பாட்டுடைத் தலைவராகக் கொண்டு, 'திருமணிமாலை' என்ற காப்பியமும், நபி சுலைமான் (அலை) அவர்களை பாட்டுடைத் தலைவராகக் கொண்டு 'இராஜநாயகம்' என்ற காப்பியமும் எழுந்துள்ளன.

இராஜநாயகம், குதுபுநாயகம், ஏர்வாடி செய்யது இப்ராஹிம் வலி என்ற மூன்று காப்பியங்களையும் தீன்பாட்டு விளக்கம், அலிபாதுஷா நாடகம் என்பவற்றையும எழுதியவர் வண்ணக்களஞ்சியப் புலவர் என வர்ணிக்கப்பட்ட ஹமீது இப்ராஹிம் செய்யது புலவராவார்.

புலவர் நாயகம், புதுகுஷ்ஷாம் முதலான காப்பியங்களை இயற்றியவர் குலாம் காதிறு நாவலர், 'தீரன் திப்புசுல்தான் காவியம்', 'மஹ்ஜபீன் காவியம்' என்பவற்றை எழுதியுள்ள ஈழத்து காப்பியக்கோ ஜின்னா ஷெரிபுதீனும் குறிப்பிடக்கூடியவர்.

தமிழ் இலக்கிய செல்வங்களை தோற்று வித்த முஸ்லிம் புலவர்கள், முஸ்லிம்களுக்கே உரிய பிரபந்தமாக 'படைப்போர்' என்ற பிரபந்தத்தை படைத்துள்ளனர். இஸ்லாமிய வரலாற்றில் நடைபெற்ற போர்களைப்பற்றிய வர்ணனைகளை மாத்திரம் கொண்ட இப் பிரபந்த வகை ஆங்கிலத்தில் (War Bullad) என்பதற்கு சமமான சிறப்பியல்புகளைக் கொண்டது என்று பேராசிரியர் ம. மு. உவைஸ் அவர்கள் கூறியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

முனாஜாத், கிஸ்ஸா, மஸ்அலா, நாமா, மாலை, மௌலூத், கலம்பகம், ஊஞ்சல்பாட்டு, கும்மி, நாட்டார்பாடல், பைத்து, ஆசாரக் கோவை, மணிமொழிக்குறள், வெண்பா, புராணம், தூது, நபிநாயகமான்மியம், தலை பாத்திஹா முதலான பிரபந்த வகைகள் இஸ்லாமிய தமிழ் இலக்கியங்களாக முஸ்லிம் புலவர்களால் படைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் பிள்ளைத்தமிழ், ஆற்றுப்படை, அந்தாதி, கலம்பகம், அம்மானை, ஏசல், கீர்த்தனை, சிந்து, திருப்புகழ், தாலாட்டு முதலான பிரபந்தங்களும் நாவல், சிறுகதை, கவிதை, பாடல், நொண்டி நாடகம் என்ற இலக்கிய வடிவங்களும் முஸ்லிம் புலவர் களாலும் ஆசிரியர்களாலும் இயற்றப்பட்டு தமிழ் இலக்கியத்துக்கு அணிசேர்த்துள்ளன.

கிஸ்ஸா என்ற பிரபந்தமானது. இஸ்லாமிய வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்தவர்களது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கைச் சம்பவங்களை செய்யுளிலும் உரையிலும் இயற்றிக் கூறுவதாகும்.

மேலும் பிறைப்பாட்டு. சீனடி, சிலம்படி, களிகம்பு, கோலாட்டம் என்பன இஸ்லாமிய கலைவடிவங்களாகக் காட்டப்பட்டுள்ளன.

மாலை இலக்கியமானது, பெண்களுக்கு அறிவுரை கூறும் 'பெண்புத்திமாலை' யில் இவ்வாறு அமைகிறது:

"அந்தி சாயும் வேளையிலே மயிலே - நீ
தலைவாசலில் தலை இழுக்காதே குயிலே நீ"

பத்மொலை முஹியித்தீன் ஆண்டகை புகழ் முஹியித்தீன்மாலை, அண்ணல் நபி (ஸல்) அவர்களது விண்ணுலக யாத்திரையைக் கருவாகக் கொண்டு எழுதப்பட்ட 'மிஹ்ராஜ் மாலை' இதனை எழுதியவர் ஆலிம் புலவர்.

முஹம்மது நபியை பாட்டுடைத் தலைவராகக் கொண்டு எழுதப்பட்ட சீறாப்புராணம் உமறுப் புலவரால் எழுதப்பட்டதாகும். இஸ்லாமியத் தமிழ் காப்பியம் என்ற பெருமைக்கும் உரியது.

சீறாப்புராணத்தில் உமறுப் புலவர் விட்ட இடத்திலிருந்து எகிப்து நாட்டு மன்னனுக்கு நிருபம் அனுப்பிய வரலாற்றை அஹமது மரைக்கார் புலவர் 'சின்ன சீறா' வாக பாடியுள்ளார்.

'வடித்த வெண்சுதை தீற்றிய மாடநீண் மறுகும்
படித்த நூற்கலை பயிலறச் சாலையு நோக்கித்
தொடுத்த மாலைகணாற்றிய சுருங்கையின் கதவ
மடைத்திடாமணி மண்டபங் குறிகியாண் டடைந்தார்.

பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தம் இதில் இறைநேசர் முஹியித்தீன் அப்துல் காதிர் ஜிலானி அவர்கள் மீது மதுரை அப்துல் காதிர் புலவர் பாடியது. காப்புப் பருவத்தில் பாட்டுடை தலைவரான குழந்தையை காக்க தெய்வங் களை வேண்டுவதுண்டு. இங்கு புலவர் தாம்பாடும் தமிழை காக்குமாறு பாடுகிறார்.

'மென் சிரசின் வைத்தபூம் பாதவப்துல்காதி
றினிய தமிழைக் காப்பவே

என்றும் அம்புலிப் பருவத்தில் குழந்தையோடு விளையாட சந்திரனை அழைப்பதில்

'அலையாடு கடல் சூழ்ந்த புவிகாக்கு நதரோ
டம்புவீ யாடவாவே
எனவும் பாடுகிறார்.

செய்யது அப்துல் காதிர் நெய்ன ஆலிம் புலவரால் இயற்றப்பட்ட புதுகுஷ்ஷாம் செய்யுள் நடை காப்பியம் சிரியாவை வெற்றி கொண்டது பற்றி இயற்றப்பட்டதாகும். ஆயிரத்துக்கும் அதிகமான செய்யுட்கள் காணப்படுகின்றன.

இனி மணிமொழிக் குறள்களும் வெண்பாவும் இதனை இயற்றியவர் மதுரை மரைக்கார் புலவர். குறள் -

'மூத்த முதுகுரவர் வாய்ந்துங் கதியிழந்தோன்
ஏற்றம் இழக்க விழிந்து'
'தப்பற நாவைத் தடுத்திலையேல் வெந்நகரகிற்
குப்புற வீழ்த்தி விடும்'

வெண்பா :

மூப்பைக்கருதி முதியோர்க்கு சங்கை செய்யும்
வாய்ப்பை பெறும் இளைஞன் வாழ்நாளில்
மூப்பையவன்
எய்துங்காற் சங்கைசெயற்(கு) இன்னொருவன்
றன்னையிறை
செய்திங்கே வைப்பான் தெரிந்து

அப்துல் காதிறுப் புலவர் இயற்றிய 'இரசூல் சதகம்'. இதில் பாலை மணலில் கிணறு தோண்டலாம் தோண்டியே பருகநீர் பெற்றுவிடலாம்.

ஏலாது மாற்றநய வஞ்சகஞ் செய்திடும்
இயல்கொண்ட மக்கடம்மை

எனப் பாடியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்துல் மஜீதுப் புலவர் பாடியுள்ள ஆசாரக் கோவையில்,

கல்வி தன்னிலுங் கைப்பொரு டன்னிலுங்
கல்வி யேயதி கச்சிறப் புள்ளதாம்.

என்று பல்வேறு தலைப்புகளில் பாடியுள்ளார்.

நாமே என்ற பாரசீக சொல்லின் திரிபாக 'நாமா', வரலாறு சொல்வதாகும். மி'ராஜ்நாமா, சகராத்து நாமா, நூர் நாமா என்பவற்றை குறிப்பிடலாம்.

கிஸ்ஸா - கதை வரலாறு என்பதாகும். (கஸல்) என்ற பாரசீக திரிபாகும். ஸைதூன் கிஸ்ஸா, யூசுப நபி கிஸ்ஸா என்பவற்றை குறிப்பிடலாம்

மசாலா, மஸ்அலா, நூறு மசாலா, கேள்வி பதில் என்பதாகும்.

முனாஜாத் வாழ்த்திப்பாடுவதாகும். ம'ரிபத்துதாலாட்டு, சுகானந்த கும்மி, சீராகீர்த்தனை, நாகூர்சிந்:து, திருத்தூதர் திருப்புகழ், குணங்குடி மஸ்தான் ஞானப்பாடல், திருமக்கா பள்ளு, மெஞ்ஞானத்தூது, நபி அவதார அம்மானை, பாத்திமா நாயகி பிள்ளைத் தமிழ், மக்கா கலம்பகம், புலவறாற்றுப் படை, காசிம் உலா என்பவற்றைக் குறிப்பிடலாம்.

அசன்பே சரித்திரம் நாவல் படைத்ததோடு முஸ்லிம் நேசன் பத்திரிகை எழுதிய அறிஞர் சித்தி லெப்பை, தமிழில் முதல் நாவல் எழுதிய பெண் எழுத்தாளர், நாகூரைச் சேர்ந்த சித்தி ஜுனைதா. இவர் 3ம் தரம் மட்டும் படித்து 'கடமையா காதலா' நாவலை எழுதி பதிப்பாசிரியையாகவும் கடமை புரிந்தார்.

இவ்வாறு இஸ்லாமிய தமிழ் இலக்கியத்துக்கு வித்திட்ட இஸ்லாமியர்கள் பலர். தமிழ் இலக்கியத்துக்கு அணிசேர்த்த இஸ்லாமிய இலக்கியங்கள் பல என்று கண்டோம்.

"இஸ்லாம் எங்கள் நெறி
இன்பத்தமிழ் எங்கள் மொழி"

* **யாருக்கு தன்னிடம் நம்பிக்கை இல்லையோ அவனே நாத்திகன்.**
* **உன்னால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும் நினைக்காதே. அப்படி நினைப்பது ஆன்மீகத்திற்கு முற்றிலும் முரண்பட்டது.**
* **மனிதனுக்குள் ஏற்கனவே மறைந்திருக்கும் பரிபூரணத் தன்மையை வெளிப் படுத்துவதுதான் கல்வி.**
* **எல்லாம் அறிந்தவனுமில்லை. ஏதும் அறியாதவனும் இல்லை.**
* **லட்சியத்திற்காக உன் உயிரையும் அர்ப்பணிக்கக் கூடியவனாக இருந்தால்தான் நீ ஒரு தலைவனாக இருக்க முடியும்.**

- சித்ருபானந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்துதவாரோ மனிதப் பண்புள்ளோர்கள்?

கீழ்கரவை கி. குலசேகரன்

ஓய்வுநிலை பிரதேச முகாமையாளர், இலங்கை வங்கி, அப்புத்தளை

மலைஏறி உழைப்போரின் மனப்பாரம் குறைந்திடுமா?
மகிழ்ந்தவரும் வாழ்கின்ற நிலைமை உருவாகிடுமா?
மலைபோலத் துயர்வந்து மோதும் நிலை மாறிடுமா?
மங்களங்கள் அவர்களது வாழ்விலும் பொங்கிடுமா?

இருநூறு ஆண்டுகட்கும் மேலாய் இந்நாட்டினிலே,
இருள் சூழ்ந்த வாழ்வினையே வாழ்ந்தார் 'லயன்'களிலே!
வருந்தி உழைத்துமென்ன? வாழ்வில் முன்னேற்றமின்றி,
வாழ்கின்றார் ஏழ்மையிலே! வற்றாத் துயருடனே!

எட்டடி அறைகட்குள்ளே எப்படித்தான் வாழ்வதென்று
எண்ணி அன்று பார்த்தாரா? ஏய்த்துப் பிழைத்தவர்கள்!
திட்டமிட்டு அவர் உழைப்பை தினமும் சுரண்டிடுவோர்,
தேசத்துக் குழைத்தோரை நேசிக்க நினைத்தாரா?

அடிப்படை வசதிகளோ இன்றிப் பலர் வாழ்கின்றார்!
அடுத்தவர் போல் வாழவழி இல்லாது தாழ்கின்றார்!
படிப்படியாய் இவர் வாழ்வில் உயர்ந்திடவே நினைத்தாலும்
பார்த்து மனம் பொறுக்காது பரிகாசம் செய்கின்றார்!

கொட்டுகின்ற பனிக்குளிரில் கொழுந்தெடுக்கச் சென்றிடுவார்!
கூடையோடு சிலர் வயிற்றில் குழந்தையையும் சுமந்திடுவார்!
கிட்டவந்து அவர்க்குதவாக் கெட்டவர்கள் மத்தியிலே
கீழ்மக்களாய் அவர்கள் வாழ்கின்றார் விரக்தியிலே!

சொந்தமென்று வீடு, காணி இன்னமுமே பலர்க்கில்லை!
சுதந்திரமாய் வாழுகின்ற நிலைமைகளும் இவர்க்கில்லை!
இந்த நிலை மாறிடவோ இவர்க்குதவ யாருமில்லை!
இருக்கின்றவரை இவர்களே இன்பநிலை என்பதில்லை!

இயற்கை அதன் சீற்றமும் இவர்கள் மீதே! மண்மேடு
இடிந்து விழுவதும் இவர்கள் மேலே! என்றும்
பயத்தினிலே வாழ்கின்றார் எமது மக்கள்! இவரைப்
பார்த்துதவாரோ மனிதப் பண்புள்ளோர்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிபெயர்ப்புக் கலை

செல்வி எம். எம். பி. நதா
மொழிபெயர்ப்புக் கற்கைகள், யாழ்ப்பாண பல்கலைக் கழகம்

மொழிபெயர்ப்பு என்பது ஒரு தனிக்கலை. அதனைப் பற்றி விளக்குவது என்பது அதனிலும் பார்க்க அரியகலை. இதனை யாருக்கும் சொல்லிக்கொடுத்து வரவழைக்க முடியாது. வெகு எளிதில் மொழிபெயர்க்கும் ஆற்றல் வாய்ந்தவர்கள்கூட, மொழிபெயர்ப்பு கைவர தொல்லைகள் பலவற்றை ஆரம்பத்தில் அடைந்தே இருப்பார்கள் என்பது வெள்ளிடை மலை.

ஒரே மொழியை தாய்மொழியாகக் கொண்ட இருவர் உரையாடும்போது ஒருவரது கருத்தை அடுத்தவர் சரியாக புரிந்து கொள்ளாமல் இடர்படுவதுண்டு. 'நீங்க இப்படிச் சொன்னதை நான் இப்படி நினச்சிட்டேன்' என்று வருந்துவது முண்டு. இது போல ஒருவரது பேச்சின் கருத்தை மற்றொருவர் எழுதும் போது சொற்கள் தடம்மாறி பொருள் தலைகீழாகிப் போவது முண்டு. தாய்மொழியிலே நிலமை இவ்வாறென்றால், வேறுவேறு மொழிகளாக இருந்துவிட்டால் கருத்தை சரியாக உணர்ந்து கொண்டு மொழியின் தன்மைக்கு ஏற்ற முறையில் அந்த கருத்தை சுவை கெடாமல் கொடுப்பதென்பது 'பகீரதப் பிரயத்தனம்'.

நாம் மொழிபெயர்க்கும்போது, நாம் விரும்பியவாறு சொல்லாட்சி செய்ய முடியாது. மூலநூலினை அடியொற்றியே சொல்லுரைக்க வேண்டும். சற்றுத்தவறினாலும் மொழிபெயர்ப்பில் தவறு ஏற்பட்டுவிடும்.

காலத்துக்குக் காலம் நாட்டுக்கு நாடு மொழிக்கு மொழி கருத்துக்கள் மொழி பெயர்க்கப்பட்டு வளர்ந்து வருகின்றன. கருத்தாளலில் நடைபெறும் இம்மொழிபெயர்ப்பு மொழியளவில் காட்சிதருவதே மொழி பெயர்ப்புக் கலையாகும்.

மொழிபெயர்ப்புக் கலை தொன்மையானது என்பதை தொல்காப்பியர் விளக்குமிடத்து, 'தொகுத்தல், விரித்தல், தொகைவிரி, மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்தலோடு அனைமரபினவே' (தொல்-பொருள் நூ 645)

வடமொழியில் பனுவலை மொழிபெயர்த்து தமிழ்மொழியால் செய்தல் என இளம்பூரணர் விளக்குகிறார். ஏனெனில், அவர் காலத்தில் வடமொழி நூல்களே மொழிபெயர்க்கப்பட்டன.

தமிழ் மொழியை வளப்படுத்த எண்ணிய மகாகவி பாரதியார் பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும் என்றும் 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும். மறைவாக நமக்குள்ளே பழங்கதை கள் சொல்வதிலோர் மகிமை இல்லை. திறமையான புலமைகளில் வெளிநாட்டார் அதை வணங்கச் செய்தல் வேண்டும்.' என்றும் பாடியுள்ளமை மொழி பெயர்ப்பின் அவசியத்தை வலியுறுத்துகின்றது.

வடமொழி வான்மீகி இராமாயணத்தை கம்பன் கம்பராமாயணமாக தமிழில் மொழி பெயர்த்துள்ளமையும் குறிப்பிடலாம்.

"எல்லா மொழி ஆறுகளும் சங்கமமாகும் மகா சமுத்திரமாக என் மொழி இருக்கட்டும்" என்றார் மலையாளக் கவிஞர் வள்ளத்தோன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறமொழி அறிவு மொழிபெயர்ப்பாளனுக்கு இன்றியமையாததொன்றாகும்.... உலக இலக்கியங்கள் பலவற்றை நாம் மொழி பெயர்ப்பினூடாகவே கற்கின்றோம்.

இன்றைய காலகட்டத்தில் விளையாட்டு, அரசியல், சட்டம், சம்பிரதாயம், இலக்கியம், வைத்தியம், கல்வி, சமூக கலாசார பண்பாடு அனைத்து விடயங்களிலும் பன்மொழி அவசியம். அவற்றுக்கு மொழிபெயர்ப்புக்கலை அவசியமாகின்றது.

மொழிபெயர்ப்பாளன், மூலமொழி, பெயர்க்கும் மொழி இரண்டிலும் பாண்டித்தியம் பெற்றிருக்க வேண்டும். மொழிபெயர்ப்பாளன் வாசகருக்கும் மூல நூலாசிரியருக்கும் பாலம் போன்றவன். ஒவ்வொரு மொழிக்குமுள்ள தனித்தன்மை, சொல்நுணுக்கம், சொற்றொடர் அமைப்பு, கருத்தோட்டம், பண்பாடு, இயல்பு, பேச்சுமொழி, வட்டாரமொழி என்பவற்றில் கவனமாக இருந்து செயற்பட வேண்டும்.

நாம் ஒரு மொழிபெயர்ப்பை படித்துக் கொண்டிருக்கிறோம் என்ற எண்ணம் தோன்றாத வகையில் மொழி பெயர்ப்பை செய்ய வேண்டும். ஒரு சொல்லுக்கு பல பொருள் இருக்கும் சொல்லாட்சிக்கு ஏற்ப சிலேடையும், நையாண்டியும் தொனிக்கலாம். அவற்றை அறிந்து மொழிபெயர்ப்பதே ஒரு கலையாகும்.

மொழிபெயர்ப்புக்கு மாற்றுக் கருவியாக வேறொன்றும் இவ்வுலகில் இல்லை. எனவே, மொழிபெயர்ப்புக் கலையைப் போற்றி வளர்ப்பது அவசியமாகும்.

மேலும் மொழிபெயர்ப்பாளன் தனது விருப்பம் போல மொழிபெயர்த்து எழுதுவதும், இல்லாத பொல்லாத விடயங்களை சேர்த்தும், சில விடயங்களை ஒதுக்குவதும், கூட்டிக் குறைப்பதும் கூடாது.

சிறந்த மொழிபெயர்ப்புக்கு மூன்று அடிப்படைத் தகைமைகள் உள்ளன. ஒரு நூலினைமொழிபெயர்ப்பு செய்யும்போது:

1. மூல நூலின் கருத்துக்களை முழுமை யாகக் கொண்ட எழுத்துருவாக அதன் மொழிபெயர்ப்பு அமைய வேண்டும்.

2. எழுத்து நடையும், கருத்துக்களை முன்வைக்கும் போக்கும், மூல நூலில் எந்த முறையில் அமைந்துள்ளனவோ அந்த முறையிலேயே அதன் மொழி பெயர்ப்பும் அமைய வேண்டும்.

3. மூல நூலின் எல்லா விடயங்களும் உள்ளது உள்ளபடி அதன் மொழிபெயர்ப் பில் அமைய வேண்டும்.

இம்மூன்று தன்மைகளை உள்ளடக்கிய மொழிபெயர்ப்பு அமைவது முழுமையாக முடியாதுவிடினும், மூலம் கெடாத வகையில் மொழிபெயர்ப்பில் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

எனவே மொழிபெயர்ப்புக் கலையை வளர்த்தெடுப்பதில் பங்குகொண்டு பணி யாற்றுவோமாக!

- அருட்செல்வம் செல்வத்துட் செல்வம்
- அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ் ?
- அறிவு அற்றம் காக்கும் கருவி.
- பணியுமாம் என்றும் பெருமை.
- பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்.
- உள்ளுவது எல்லாம் உயர்வு உள்ளல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனுடைய ஆளுமை பற்றிய சிந்தனையில் சிக்மண்ட் புறொய்டின் வகிபங்கு

திரவியநாதன் திலீபன்
முதுதத்துவமாணி ஆய்வு மாணவன்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

உளவியலானது மனிதன் குறித்தான ஆய்வின் மூலம் பல்வேறுபட்ட எண்ணக் கருக்கள் பற்றி ஆராய்ந்து பல புதிய உண்மைகளை வெளிக்கொணர்ந்து வருகின்றது. இதில் ஆளுமை பற்றிய எண்ணக்கருவும் ஒன்றாகும். உளவியலில் நடத்தைகளுக்கான காரணத்தை கண்டறியும நோக்கில் ஆளுமை என்ற எண்ணக்கரு செல்வாக்குச் செலுத்துகிறது. அதாவது மனிதனின் செயற்பாடுகள், நடவடிக்கைகள் போன்றவற்றைக்கொண்டு உள்ளத்தைக் கட்டமைத்து அவை பற்றி விளக்கமளிப்பதற்கு (ஆளுமை) மிகவும் பயன்பாடுடையதாக விளங்குகிறது. மனித வாழ்க்கையில் சாதாரணமாக ஒருவரைப் பற்றி உரையாடும் போது அவர் சிறந்த ஆளுமை உடையவர் என்கின்றோம். இங்கு ஆளுமை என்றால் என்ன? என்பது பற்றிய வரைவிலக்கணத்தை நோக்கும்போது, பொதுவாக **ஆளுமை என்பது மனிதனது நடத்தைகளையும் அவனது குண இயல்புகளையும் குறிப்பதாக அமைகின்றது** சாதாரணமாக கருத்தின் ஒருவரது உயரம், குணாதிசயம், செயல்கள், எண்ணங்கள், உடலமைப்பு, நடை, உடை, பாவனை போன்றவற்றைக் கொண்டு ஒருவரை ஆளுமை உடையவர் என்கின்றோம்.

மனிதனுடைய வாழ்வில் எதிர்ப்படும் நலைமைகளில் தனக்கே உரித்தான முறையில் ஒவ்வொரு மனிதனும் செயற்படு வதை நாம் பார்க்கின்றோம். இவ்வாறான செயற்பாட்டு முறைகள் அவனது ஆளுமை யின் தன்மையினை வெளிப்படுத்துகின்றன. ஆளுமை என்பதனைச் சுருக்கமாக "ஒருவரை தனித்துவமானவராக ஆக்கும் எண்ணங்கள், உணர்வுகள், நடத்தைகள் என்பவற்றினுடைய தொகுப்பாகும்" எனக் குறிப்பிடப்படுவதுமுண்டு (எஸ். சந்தானம், 2005-526 கல்வியில் மனவியல்).

ஆளுமை என்ற சொற்பதத்தினை ஆங்கிலத்தில் Personality என்பர். இச்சொல் Persona எனும் இலத்தின் அடியிலிருந்து தோற்றம் பெற்றது. இதன் பொருள் "முகமூடி" என்பதாகும். அதாவது, நடிகன் தான் ஏற்றிருக்கும் பாத்திரத்தின் இயல்பிற்கேற்ப தனது உண்மையான உருவத்தினை மறைப் பதற்காக அணிந்திருப்பதைக் குறிக்கின்றது. இதன் பண்டைய பொருள் ஒருவனது பண்பைக் குறிக்கும் வெளித்தோற்றமாகும். தற்காலத்தில் இச்சொல் விரிவான பொருளைப் பெற்று ஒரு மனிதனின் சீரான, தனிப்பட்ட நடத்தை முறையைக் (Unique Pattern of Behavior) குறிப்பதாயிற்று. வரலாற்று அடிப்படையில் ஆளுமை என்பது ஒருவர் **பூணும் வேடம், அவரின் வகிபங்கு** என்பதனைக் குறித்து நிற்கின்றது.

ஆளுமை பற்றிய உளவியலாளர்களின் வரைவிலக்கணங்கள்:

உளவியல் வரலாற்றில் காலத்திற்குக் காலம் தோற்றம்பெற்ற பல உளவியலாளர்கள் ஆளுமை தொடர்பாகப் பல: வேறுபட்ட விளக்கங்களை அளித்து தெளிவுபடுத்தி யுள்ளனர். அவற்றுள் சில கீழ்வருமாறு:

சிறில்பேட் எனும் அறிஞர் "ஆளுமை என்பது ஏதோ ஒரு சந்தர்ப்ப சூழ்நிலையில் அவர் துலங்கும்போது வெளிப்படுத்தும் உடல், உளச் செயற்பாடுகளின் ஒழுங்கமைப்பாகும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்.எஸ்.மன் என்பவர் "தனிப்பட்டவர்களிடம் காணப்படும் அமைப்புக்களதும், நடத்தை கோட்பாடுகளினதும் விருப்பு, ஆற்றல், திறமைகள், உளச்சார்பு என்பவற்றின்மிகச் ச்க்தியுள்ள பண்புகளின் ஒன்றிணைப்பாகும்."

ஆல்பேட் எனும் அறிஞர் "ஆளுமை என்பது மனித வாழ்க்கையில் எதிர்ப்படும் நிலைமைகளில் தனக்கே உரித்தான முறையில் ஒவ்வொரு மனிதனும் செயற்படுவதைக் காண்கின்றோம். இத்தகைய செயற்பாடு முறைகள் அவனது ஆளுமையின் தன்மையை வெளிக்காட்டுகின்றது."

கால்யுங் எனும் உள மருத்துவர் மனித ஆளுமை என்பது தனிமனிதனுக்கும் கூட்டு நனவிலிக்குமுள்ள இயைபுச் செயலின் வெளிப்பாடாகும். அத்தோடு **"பிறருடன் ஏற்படுத்தும் தொடர்புகளில் ஆளுமை என்பது நபருக்கு நபர் வேறுபடுகின்றது"** **எனவும் குறிப்பிட்டார் (தி. கு. இரவிச்சந்திரன், 2007:394 சிக்மண்ட் புரொய்ட் உளப்பகுப்பாய்வு அறிவியல்).** இதனடிப்படையிலேயே அவர் மனித ஆளுமையை பின்வருமாறு வகைப்படுத்தி விளக்கியிருந்தார்.

அகமுகி (Introverts)
கதைப்பது குறைவு
கூச்சப்படுதல்
தனியாக பணியாற்ற விருப்பம்
கவலைப்படுதல்
புறமுகி Extrovets)
கலகலகப்பாகக் கதைத்தல்
கூச்சப்படாமை
பிறருடன் செயலாற்ற விருப்பம்
கவலையின்மை

கேலன் எனும் அறிஞர் நான்குவகை மனப்பான்மைகளை வருணித்துள்ளார். அவை, சிடுமூஞ்சி மனப்பான்மை, அழுமூஞ்சி மனப்பான்மை, சிரிமுக மனப்பான்மை, தூங்குமூஞ்சி மனப்பான்மை என்பனவாகும்.

சிக்மன்ட் புரொய்டின் ஆளுமை குறித்த சிந்தனை:

உளவியல் வரலாற்றில் புரட்சிகரமான மாற்றத்தினை ஏற்படுத்தியவர்களுள் சிக்மன்ட புரொய்ட் குறிப்பிடத்தக்கவராவார். உளப்பகுப் பாய்வு. ஆளுமை பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொண்டு பல புதிய சிந்தனைகளை வெளிக்கொணர்ந்தவராவார். மனித மனத்தின் செயற்பாடுகளையும் மனதைப் பிடிக்கும் நோய்களையும் கண்டு உணரும் முறையினை உளப்பகுப்பாய்வு கோட்பாட்டினூடாகத் தெளிவுபடுத்தியதோடு மனித மனம் பற்றிய கருத்தினை அடிப்படையாகக் கொண்டு ஆளுமை பற்றிய எண்ணக்கருவைத் தெளிவாக விளக்கியிருந்தார். அதாவது ஒருவரின் உள்ளம் எப்படி அமைகின்றதோ அதன்படியே அவரின் ஆளுமையும் அமைந்திருக்கும் என்ற கருத்தினை அடிப்படையாகக் கொண்டு ஆளுமைக் கோட்பாட்டை வீவரிக்கிறார். புரொய்ட் மனிதனுடைய ஆளுமையை பின்வருமாறு மூன்றாகப் பிரித்து விளக்கினார்:

- ID உள்ளார்ந்த உந்தல்
- EGO அகம்
- SUPER EGO அதியகம் என்பதாகும்

ID (உள்ளார்ந்த உந்தல்)

ஆளுமையின் அடித்தளம் இட் என்பதாகும். இட் எனும் சொல்லிற்கு தனி மனிதனின் தூண்டல் உணர்வுகள் என்று பொருள்படும். தன்னை அறியாமலேயே உணர்ச்சி வசப்படுவதைச் சுட்டும். மனித ஆளுமையின் வலிமை மிக்க பகுதியாக இது விளங்குகிறது. இதிலிருந்து தான் அகம், அதியகம் வேறுபட்ட நிலைகளில் வளர்ந்து செல்கின்றது. இட் அடிப்படையில் நனவிலி சார்ந்தது. இதனை இன்பம் காணும் தத்துவம் (The Pleasure Principle) என்பர். குறிப்பாக குழந்தைப் பருவத்தில் இவ்வின்பம் காணும் தத்துவத்தின் ஆதிக்கம் அதிகமாகவே காணப்படுகிறது என்பது புரொய்டின் கருத்தாகும். (The ID is the only component of personality that is present from birth. This aspect of personality

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

is entirely unconscious and includes of the instinctive and primitive behaviours. According to Sigmund Freud, the ID is the source of all psychic energy, making it the primary component of personality).

இட் உடனடியாக் கீழ்த்தர மகிழ்ச்சி பெறுதலை நோக்கமாகக் கொண்டு விளங்குகிறது. இந்நிலையின் சக்திகள் முழுமையாக நனவிலி நிலைப்படுபவை. இட் என்பது ஒருவருக்குப் பிறப்பிலேயே கிடைக்கும் ஒது நிலைமையாகும். இது நனவிலியை ஒத்ததாக இருப்பதனால் அதன் தன்மை மனதில் இருப்பதனை உணர்வதில்லை. சாதாரண உரையாடலில் உனக்கு ஆணவம், திமிர் பிடித்துவிட்டது எனக் கூறுவதும் இட்டின் வெளிப்பாடேயாகும். இதனையே கீழைத்தேய தத்துவங்கள் குறிப்பாகச் சித்தாந்த தத்துவம் மும்மலங்களினூடாகத் தெளிவுபடுததி யிருந்தது. பொதுவாக ஆணவம் என்பது மனிதன் பிறக்கும்போது கூடவே பிறக்கின்றது என்பது சித்தாந்தத்தின் முடிந்த முடிவாகும்.

மேலும் நீதி, நேர்மை, நியாயம் என்பவற்றை ஏற்காது உடனடித் தேவைகளை நிறைவேற்றும் இட் மனிதனது உடலில் காணப்படும் கவர்ச்சி, பகை போன்றவற்றை உள்ளடக்கியதாக விளங்குகிறது. புரொய்ட் இட்டினை லிபிடோ என்றும் கூறுகிறார். (தி.கு. இரவிச்சந்திரன், 2007:309 சிக்மன்ட் புரொய்ட் உளப்பகுப்பாய்பு அறிவியல்). அதாவது குழந்தைப் பருவத்தில் ஒவ்வொரு கட்டத்திலும் மாறுதலுக்குட்பட்டு அந்தந்தக் கட்டத்திற்கு ஏற்ப லிபிடோ வெளிப்படுகிறது எனக் குறிப்பிட்டார். இதனையே லிபிடோ வளர்ச்சி என்றார் புரொய்ட்.

மேற்படி லிபிடோ வளர்ச்சியினையே அவர் உளப்பாலியில் வளர்ச்சி என்றும் கூறுகிறார். இதனடிப்படையிலேயே குழந்தையின் பாலியல் வளர்ச்சிக் கட்டங்களை வாய்வழி இன்பம் (வாய்வழி மூலம் இன்பத்தைப் பெற்றுக் கொள்ளுதலைக் குறிக்கின்றது. தாயின் மார்பைச் சூப்புதல், விரல் சூப்புதல், பொருட்களை வாயில் போட்டு கடித்து நொறுக்குதல் இதன் பாற்படும்). குதவழி இன்பம் (இப்பருவத்தில் குழந்தை மலம், சலம் கழிப்பதன் மூலம் இன்பத்தைப் பெற்றுக் கொள்கின்றது. மாறாக பிள்ளைகளுக்கு கழிப்பதை ஒழுங்குகளைக் கடைப்பிடிக்க பெற்றோர் கட்டளையிடுவார்களானால் குழந்தையின் இன்பம் தடைப்படும்). இலிங்கவழி இன்பம் (பாலியல் உறுப்புக்களை கையாளுவதன் மூலம் இன்பத்தை பெற்றுக்கொள்ளுகிறது). மறைபருவ காலம் (இப்பருவத்தில் பிள்ளை தமது பாலியல் உறுப்புக்களை மறைத்துக்கொள்கிறது). பாலியல் வளர்ச்சி நிலை (எதிர்பாலரிடையே முதிர்ச்சி நிலைப்பட்ட விருப்புக்களை, ஆசைகளை, காதலை வெளிப்படுத்துகின்ற பருவமாக விளங்குகிறது) எனப் பிரித்து விளக்கினார்.

EGO (அகம்)

இட்டிற்கு அடுத்த நிலையாக அகம் காணப்படுகின்றது. அகமானது திட்டமிட்டு பிரச்சினைகளைக் கட்டுப்படுததும் பண்பு களைக் கொண்டது. அதாவது உடல் வேட்கைக்கும் சமுதாய கட்டுப்பாட்டுக்கு மிடையில் சமாதானப்படுத்தி வைப்பதுதான் இதன் வேலையாகும். புத்திசாலித்தனம், ஒழுங்கு போன்ற தன்மைகளைக் கொண்டதாக அகம் விளங்குகின்றது.

மேலும் இட்டினது உள்ளீடுகளைக் கொண்டிருக்கும் அகம், இட்டினது செயற் பாடுகளைப் புற உலகிற்கு பொருந்தக்கூடிய அளவில் உருவாக்க முற்படும். இட்டினது தீவிரத் தன்மையை மிதப்படுத்தவும் முயலும். இட்டானது மகிழ்ச்சியைக் குறியாகக் கொண்டிருக்கையில் அகம் யதார்த்த் குறித்த கவனத்தைச் செலுத்துகின்றது. இட் ஒன்றைச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு தொழிற்படும். எடுத்துக்காட்டாக, குறிப்பிட்ட நபருக்கு மலமோ அல்லது சலமோ கழிக்க வேண்டிய நிலையேற்படின் அதனை எவ்விடத்திலாவது தமது ஆசையை பூர்த்தி செய்ய முற்படும். ஆனால் அகம் அவ் வாறல்லாது அதனை ஒழுக்கமான முறையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படுத்த முற்படும். இதனால் இது மெய்மைத் தத்துவம் எனப்படும். (Demmos Coon, 2005:388 Psychology A Journey). இதன் பிரதான பங்கு மிகத்தீவிரமான பங்களிப்பையும் ஏற்றுக்கொள்ள முடியாத தூண்டல்களின் போக்கையும் மிகப்படுத்தும்.

(The Ego is the component of personality that is responsible for the dealing with reality. According to Freud the Ego develops from the ID and ensures that impulses of the ID can be expressed in a manner acceptable in the real world).

அகமானது இட்டிற்கும் அதியகத்திற்கும் இடையே பொறுப்பான அலுவலராக செயற்படுகின்றது. இது மனிதனைத் தண்டனையிலிருந்து தப்ப வைத்துக் கொள்கின்றது. எனவேதான் அகம் நிறைவேற்று அதிகாரியாகச் செயற்படுகின்றது. எந்தெந்த நேரத்திற்கு எது தேவையென்பதையும் அறிந்து செயற்படுகின்றது.

SUPER EGO (அதியகம்)

ஆளுமையின் மூன்றாவது கூறு இதுவாகும். குறிப்பாக அதியகம் ஒழுக்க நியமங்களின் உறைவிடமாகச் சித்திரிக்கப் படுகின்றது. சமூக இலட்சியங்களது பிரதி நிதியாக இது காணப்படுகின்றது. இதனை மனச்சாட்சி என்றும் கூறுவர். அதியகம் ஏறத்தாள 6 வயதிலிருந்து எழத் தொடங்குகிறது.

அதியகம் பற்றிய சிந்தனையானது பெற்றோர், ஆசிரியர், சமூகம், அறநூல்கள் போன்றவற்றின் வழியாகப் பெற்றுக்கொண்ட ஒழுக்க ஆதாரங்களினது உறைவிடமாகக் காணப்படுகின்றது. சமூக இலட்சியத்துக்கு இசைவாக சரி பிழையை உணர்ந்து நடக்கும் ஆளுமையின் கூறு இதுவாகும். மனித நடத்தையைச் சீர்தூக்கிப் பார்க்கும் நீதிபதி போல் இது விளங்குகின்றது. அதாவது மனச்சாட்சியினூடாகச் சட்டதிட்டங்களைப் பேணி நடத்தையைக் கட்டுப்படுத்துகின்றது.

(That last component of personality to develop is the Super Ego. The Super Ego is the aspect of personality that holds all of our internalized moral standards and ideals that we acquire from both parents and society our sense of right and wrong. The Super Ego provides guidelines for making judgements).

அதியகம் பாரம்பரிய விழுமியங்களின் பிரதிநிதியாகச் செயற்படுகின்றது. அதிகளவு முன்நனவு மனம் சார்ந்தது. நான் செய்வது அவசியம் அல்லது செய்ய வேண்டும் என்ற வகையில் சிந்தித்துச் செயற்படுகின்றது. இட் எனக்கு வேண்டும் என்ற வகையிலும் அகம் என்னால் முடியும் என்ற வகையிலும் செயற்படும். அத்துடன் இட்டானது திருப்தியை நோக்கமாகக் கொண்டு நல்ல விடயங்களைப் புறக்கணிக்கும். ஆனால் அதியகம் ஒழுக்கமாக வாழவைக்கும். இதுபற்றி எரிக் பெர்ன் என்பவர் குறிப்பிடுகையில் "இட் குழந்தைத் தன்மைக்கும அகம் பெற்றோரது நிலைமைக்கும் அதியகம் முதிர்ச்சி பெற்ற ஒருவனின் தன்மைக்கும் ஒப்பானதாகும் என்கின்றார் " (எஸ். சந்தானம் 2005 : 535 கல்வியில் மனவியல்). எனவேதான், மனிதன் தனது வாழ்க்கையில் எது 'சரி, எது பிழை என்பதைச் 'சரியாக இனங்கண்டு செயற்படுவதற்கான நிலைமையை அதியகம் வழியமைத்துக் கொடுக்கிறது எனலாம்.

புரொய்ட் மேற்குறிப்பிட்டவாறு ஆளுமை பற்றிய எண்ணக் கருவினை வகைப்படுத்தித் தெளிவுபடுத்தியிருந்தபோதிலும் ஒரு மனிதனின் ஆளுமையை அறிந்துகொள்வதற்கு அவனது உணர்வுகள், மனப் பாங்குகள் போன்றவற்றை சரியான முறையில் விளங்கிக்கொள்ள வேண்டும் எனவும் கூறினார். இத்தகைய அவரின் சிந்தனையானது உளவியல் வரலாற்றில் புரட்சியான மாற்றத்தினை ஏற்படுத்தியதோடு சராசரி மனிதனுடைய ஆளுமையிலிருந்து நோயாளியின் ஆளுமை வரைபுரிந்து கொள்ளவும் அடிப்படையாக விளங்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்தோட்டத் துறையினர் எதிர்கொள்ளும் சவால்கள் ....

செல்வி விஜயராஜ் விஜயதர்ஷினி
தெமோதர

1830 களில் தென்னிந்தியாவின் சென்னை மாகாணத்தில் கிராமப் புறங்களில் நிலவிய சனத்தொகை அதிகரிப்பு, அடிக்கடி ஏற்பட்டுவந்த உணவுப் பஞ்சம், மற்றும் கடுமையான வரட்சி, ஆங்கிலேய ஆட்சியி னரால் நடைமுறைப்படுத்தப்பட்டு இருந்த வரி வசூலிப்பு போன்ற காரணிகள் உட்பட ஏனைய சமூகப் பிரச்சினைகளாலும் பெரும்பாலான மக்கள் பிழைப்புத் தேடி தமிழகத்தை விட்டு பர்மா, மலாயா, இலங்கை மற்றும் ஆபிரிக்க நாடுகள் உட்பட 43 நாடுகளுக்கு புலம் பெயர்ந்தனர்.

இலங்கையிலும் ஆங்கிலேயர்களே ஆட்சி புரிந்த காரணத்தால் தேயிலை, கோப்பி மற்றும் இறப்பர் பயிர்ச் செய்கைக்கு தேவையான அதிகளவிலான தொழிலாளர்களை தமிழகத்திலிருந்து அழைத்து வருவது ஆட்சியாளரின் நோக்கமாக இருந்தது. அக்காலகட்டத்தில் தென் இந்தியாவில் சாதி பாகுபாடு காரணமாக குறிப்பாக நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் காணப்பட்டார்கள். இவர்கள் அங்கு காணப்பட்ட நிலவுடமையாளர்களின் நிலங்களில் பயிர்செய்து வந்தார்கள். எனவே, இவ்வாறான நிலை கொண்ட இவர்களை இலகுவாக கவர்ந்து இலங்கைக்கு அழைத்து வரலாம் என்பது பிரித்தானிய பெருந்தோட்ட முதலீட்டாளர்களுக்கு இலகுவாக அமைந்தது.

பிழைப்புக்காக இவர்கள் வரவழைக்கப்பட வேண்டும் என்பதற்கு போலி பிரசாரங்களும் செய்யப்பட்டன:

''தமிழகத்தில் பஞ்சத்தில் அடிபட்ட மக்களின் பஞ்சம் தீரவேண்டுமானால் சிலோனுக்கு வேலைக்குப் போகலாம் வாருங்கள். நீங்கள் எங்களுடன் வந்தால் சிலோனில் உங்களுக்கு தேயிலைத் தோட்டத்தில் மாத சம்பளமும் தங்குவதற்கு வீடுகள் மற்றும் மருத்துவ வசதிகள் அளிக்கப்படும் என்றும் உங்களை சிலோனுக்கு அழைத்துச் செல்வதற்கான பயண செலவுகள் கூட வெள்ளைக்கார தோட்ட துரைமார் நிர்வாகமே ஏற்றுக் கொள்ளும்'' என்றெல்லாம் ஆசைகாட்டி முகவர்கள் தமிழகத்தில் பிரசாரம் செய்தனர். ஏற்கனவே தென்னிந்தியாவில் இருந்து தனிநபர்களாக வந்து தோட்டங்களில் பணியாற்றிய அனுபவமிக்கவர்கள் கங்காணிகள் என்ற பெயருடன் ஆள் திரட்டுவதற்காக தோட்ட நிர்வாகிகளால் தெரிவு செய்யப்பட்டு சென்னை மாகாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இக்கங்காணிமார்கள் பொய்யான பிரசாரங்களை செய்து எம்மவர்களை அழைத்து வந்துள்ளனர்.

பெருந்தோட்டங்களுக்கு அழைத்துவரப் பட்ட தொழிலாளர்கள் பல இன்னல்களை எதிர்நோக்கினர். மன்னாரிலிருந்து இவர்கள் காடுகளுக்கிடையே கால்நடையாகவே அழைத்து வரப்பட்டனர். இந்த வழிநடையின் போது பட்டினியாலும், வழிநடை களைப்பாலும், கொடிய நோய்களாலும், கொடிய விஷப் பிராணிகள் தீண்டியதாலும் பலர் இறந்தும் போனார்கள்.

இவ்வாறு வரவழைக்கப்பட்ட தொழிலாளர் கள் பிழைப்புக்காக வந்தவர்கள் தானே என்று ஏளனம் செய்தலாகாது. இவர்கள் நன்றாக உழைக்கககூடியவர்களாகவும், இசை, நடனம், நாடகம், கூத்து போன்ற கலைகளை கற்றவர் களாகவும், விழாக்களை முன்னெடுத்து நடத்தும் தலைமைத்துவம் வாய்ந்தவர்களாகவும் காணப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனை திறமைவாய்ந்த இவர்கள் முடக்கப்பட்டதன் காரணம் இவர்களின் வறுமை நிலையும் ஆங்கிலேயரின் ஆதிக்கமுமேயாகும். அத்தனை தடைகளின் பின்பும் இவர்கள் இவர்களின் கலை, கலாசாரம், பண்பாடு, பாரம்பரியம் என்பவை களை மறந்துவிடவில்லை. அதனை இன்றும் நடைமுறைப்படுத்துகின்றனர். எனினும் பெருந்தோட்ட தமிழர் என்ற வகையில் நாம் இன்னும் பல சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. இவர்கள் இன்றும் எதிர்நோக்கும் சவால்களாவன: கல்வி, காணி. வீடு, சுகாதாரம், போக்குவரத்து, பொருளாதாரம் என்பவைகளைக் குறிப்பிடலாம்.

கல்வி :

கல்வியின் தேவைப்பாடும் அதன் முக்கியத்துவமும் கடந்த தசாப்தங்களில் உணரப்பட்டும் அதன் தாக்க வீச்சு அதிகரித்த போக்கினையும் எமது சமூகத்தில் காண்பது ஓர் முன் நகர்வு ஆகும். இருப்பினும் இலங்கை தேசிய கல்வி வரலாற்றினையும்

பெருந்தோட்டக் கல்வியின் வாய்ப்பினையும் நோக்குவோமாயின் அது பல்வேறுபட்ட மாறுபாடுகளைக் கொண்டதும், பல பாரபட்சமான அணுகுமுறைகளையும் கல்விக்கான வாய்ப்புகளையும் பௌதீக வளம், ஆளணி, மாணவர் உள்ளீர்ப்பு போன்றவற்றில் நீண்டதொரு இடைவெளியைக் கொண்டதாக அமைந்திருப்பதை மறுப்பதற்கில்லை.

தேசிய கல்வி இலக்காக இலங்கையர் 90 வீதத்திற்கு மேலானோர் எழுத்தறிவு பெற்றிருப்பதும், இதனை மேலும் உயர்வாக பேணுவதற்குத் தடையாக உள்ள துறையாக எமது பெருந்தோட்டத்துறை விளங்குகின்றது. இலவச கல்வியின் அறிமுகத்தால் இவ்விலக்குகள் அடையப்பட்டது என்றபோதும் எமது சமூகத்தில் இவ்வகையான வசதி களைக் கொண்ட ஒரு மத்திய மகா வித்தியாலயம்கூட ஆரம்பிக்கப்படாமையும் பெருந்தோட்டத்துறை சார்ந்த மாணவர்கள் இவ்வகையான வாய்ப்பை இழப்பது வரலாற்றுத் தவறாகும். குறிப்பாக பசறைப் பகுதியில் இயங்கிய இருமொழிப் பாடசாலை இந்நிலையில் தனிமொழிப் பாடசாலையாக மாற்றப்பட்டதும் அங்கு கல்வி பயின்ற தமிழ்மொழி மூல மாணவர்கள் பிரிக்கப்பட்டு பிறிதொரு பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே, கல்வியில் சமவாய்ப்பு என்ற கோட்பாடு எந்தளவில் செயலுருவம் பெற்றது என்பது ஆய்வுக்குரியது. இது போலவே பதுளை மாவட்டத்தில் அமைந்துள்ள பல பாடசாலைகளில் இருந்து தமிழ்மொழிமூலப் பிரிவுகள் படிப்படியாக மூடப்பட்டதும் அதன் இறுதி அம்சமாக 1983 இல் இடம்பெற்ற இன வன்முறையின் பின் முழுமையாக தமிழ் மொழிப் பிரிவுகள் மூடப்பட்டமையும் வரலாறு மறவாத உண்மைகளாகும்.

கல்வி சீர்திருத்தம் என்பது ஒரு சுழற்சியான நிகழ்வாகும். இது காலத்தின் கட்டாயமானதுமாகும். இதற்கு தொழில் நுட்பத்தின் வளர்ச்சியையும் பூளோகமய மாதல், தகவல் தொழில்நுட்பத்தின் புரட்சி, செய்தித் தொடர்பாடலில் எற்பட்ட வளர்ச்சி, விண்வெளி ஆய்வுத்துறையின் பரிணாமம் போன்றவற்றை குறிப்பிடலாம். இன்று பெருந்தோட்ட துறையின் பங்களிப்பு இவ்வளர்ச்சி மட்டத்தில் இல்லையென கூறிவிட முடியாது என்றபோதும், இவர்கள் காலத்திற்கேற்ற கல்வியை தொடர நகர்புறம் நோக்கியே நகர்கின்றனர். இவ்வாய்ப்புகள் சமநிலையின்மை எம் மலையக மாணவர்கள் எதிர்நோக்கும் இன்னல்களில் ஒன்றாகும்.

கல்வியியற் கல்லூரிகளுக்கும் பல்கலைக் கழகங்களுக்கும் இலங்கை மாணவர்கள் உள்வாங்கப்படுகின்றார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. பொதுவான கணிப்பில் பட்டதாரிகளின் எண்ணிக்கை அதிகமாகக் கொண்ட நாடுகளின் சராசரி பிரஜையொருவர் கல்வியில் பெற்ற உயர் தகைமையாக 5ம் 8ம் தரங்களை அடையாளப்படுத்தும்போது, இது இலங்கையில் 9ம் தரத்தைக் காட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கின்றது. இருப்பினும் இலங்கையிலுள்ள பதினான்கு தேசிய பல்கலைக்கழகங்களிலும், ஒரு திறந்த பல்கலைக்கழகத்திலும் கல்வி பயிலும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 65,000 ஆகும். எனினும் இலங்கையின் சனத்தொகையில் 7 வீதமாகவுள்ள இந்திய வம்சாவளி தமிழர்களின் பிள்ளைகள் ஏறத்தாழ 4,000 பேராவது உயர்கல்வி பெறல் வேண்டும். இருப்பினும் இத்தொகையானது ஏறத்தாழ 300 தொடக்கம் 500 ஆகவே உள்ளது. இது எமது மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்பினை வெளிச்சமிட்டுக் காட்டுவதாக உள்ளது. அதுபோலவே சராசரி பெருந்தோட்டத் துறையைச் சார்ந்த தனிநபர் ஒருவரின் உயர்ந்த கல்வித் தகைமை ஏறத்தாழ 5ம் வகுப்பிற்குக் குறைவானதாகும். அத்துடன் இந்நிலை பெண்களின் கல்வியுடன் ஒப்பிடும்போது இன்னும் குறைவான நிலையிலேயே இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, கல்வியில் சமவாய்ப்பு, எல்லோருக்கும் கல்வி, வாழ்நாள் நீடித்த கல்வி போன்ற எண்ணக்கருக்களும் இது தொடர்பான வேலைத்திட்டங்களும் எமது சமூகத்திற்கு எவ்வளவு தூரம் எட்டியுள்ளது என்பதை ஆராய்தல் வேண்டும்.

பொருளாதாரம் :

உழைக்கும் வர்க்கத்தினருக்கு பொருளாதார நெருக்கடி இன்றியமையாத ஒன்றே:

''தொழிலுக்காகப் பறிக்கின்றோம் தேயிலை, தொழிலில்லை என்றால் எம் வீட்டில் கொதிக்காது உலை, தினமும் உயர்ந்து கொண்டே போகுது பொருட்களின் விலை, அதனால் இருக்குது ஏழை என்ற நிலை, நம் உதிரத்தை உறிஞ்சி முதலாளிமார் புரிகின்றார் எங்களை கொலை, இறைவனே இந்த நவீன யுகத்திலாவது நிமிராதா எங்கள் தலை'' என ஒரு ஏழை சிறுவன் கவி வடித்துள்ளான். இது வெறும் கவி வரிகள் மட்டுமல்ல பெருந்தோட்ட மக்களின் பொருளாதார நிலை என குறிப்பிடலாம்.

இந்நிலைக்கு இவர்கள் தள்ளப்பட்டமைக்கு இனறியமையாதது இவர்களின் சம்பளக்குறைபாடு ஆகும். சாதாரண வெளிப்புறங்களில் வேலைசெய்பவர்கள்கூட நாளாந்தம் 1,000 ரூபாவுக்கு மேலாக உழைப்பு கூலி பெறுகின்றனர். ஆயினும், இலங்கைக்கு பெரும் வருமானத்தை ஈட்டி தருகின்ற பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையான தேயிலையில் தன் வாழ்நாளை கழிக்கின்ற உழைக்கும் வர்க்கம் பெறுகின்ற சம்பளம் நாளாந்தம் 600 ரூபாவேயாகும். இவர்களின் வாழ்வாதார செலவுகளை காட்டிலும் குறைவான சம்பளத்தையே இத்தொழிலாளர்கள் பெறுகின்றார்கள் என்பதில் எந்த ஐயமுமில்லை.

இதன் மத்தியில் செயற்படும் பிழைப்புவாத சந்தர்ப்பவாத தொழிற்சங்கங்கள் இவர்களை கூறுபோட்டுக் கொண்டுள்ளது. இதனை ஜேர்மன் நாட்டு தத்துவஞானி கார்ல் மாக்ஸ் இவ்வாறு குறிப்பிடுகின்றார்:

"சம்பளத்தை முடிந்தளவு ஆகக் குறைவாக வழங்குவதற்கு தொழில் வழங்குனர்கள் முயற்சிக்கும் போது தொழிற்சங்கம் தோன்றுவது தவிர்க்க முடியாது."

தேயிலையை வளர்த்து உயர் உற்பத்தியாக மாற்றுவதற்கு மலையக தொழிலாளர்கள் காடுகளை அழித்து ஒரு நாடாக மாற்றினார்கள். ஆனபோதும் உயரத்தில் வசிப்பிடத்தை உருவாக்கிக் கொண்ட எமது மலையக சமூகம் இன்னும் வளரவில்லை என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றேயாகும்.

மலையக தொழிலாளர்க்கென சொந்த நிலங்கள், வீடுகள், வயல் வெளிகள் என எவையுமே இவர்களிடம் இல்லை. வாழும் போதிலும் இறந்த சடலத்தை புதைப்பதற்கும் கூட இன்று நிலமற்று காணப்படுகின்றனர். எல்ல பிரதேசத்தைச் சேர்ந்த நகவிலை கீழ்ப் பிரிவை சேர்ந்த மக்கள் புதைப்பதற்காக தொழில் வழங்குனர்கள் ஒதுக்கித்தந்த இடத்தையும் தனியார் நிலத்தை அருகில் கொண்டவர்களும், சிங்கள சமுதாயமும் அவ்விடத்தை பிடித்து வீடமைத்துக் கொண்டனர். இதனால் தேயிலைக்கே உரமாகிய மனிதனுக்கு புதைப்பதற்கு 6 அடி நிலம் கூட இல்லை என்பது வேதனைக்குரிய விடயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை தேசிய விநாயகம்பிள்ளை அன்றே பாடியுள்ளார்:

''பாடுபடுபவர்க்கே இந்த பாரிடம் சொந்தமையா காடு திருத்தி நல்ல நாடு காண்பதவரல்லவோ''

தென்னிந்தியாவில் இருந்து இலங்கைக்கு பெருந்தோட்டத்துறையினர் உடமைகளோ அல்லது உரிமைகளோ அற்றவர்களாக வந்த போதும் தென்னிந்தியாவில் தாங்கள் வாழ்ந்திருந்தால் தனது ஊர் என்ற அடையாளத்தையும் உடமைகளையும் காப்பாற்றி வைத்திருந்திருக்கக் கூடும் என்ற ஏக்கம் இவர்கள் மத்தியில் காணப்பட்டது. இதனை:

"ஊரான ஊரிழந்தேன்
ஒத்தபனை தோப்பிழந்தேன்
பேரான கண்டியில்
பெத்த தாயை நான் மறந்தேன்''

என்ற பாடலடி உணர்த்துகின்றது.

மேலும் பொருளாதாரத்தை நோக்குகையில் கல்வி கற்ற சமூகத்தினர் பெரும்பாலும் வேலைவாய்ப்பின்றி வருமான நிலையில பின்னடைவாகவே காணப்படுகின்றனர். கௌரவ நிலையும, புதுமையும், தொழிநுட்பங்களும் கொண்டமைந்த தொழில் வாய்ப்புகளை எதிர்பார்க்கின்றார்கள். அவ்வாறான தொழிற்பேட்டைகள் மலையகத்தில் அமைக்கப்படாத வரையில் வேலைவாய்ப்பு பிரச்சனைகளும் பொருளாதார நெருக்கடிகளையும் சந்தித்தே ஆகவேண்டும்.

உள்நாட்டில் போதியளவு வருமானம் இல்லாததால் பெருந்தோட்ட தொழிலாளர்களில் பெரும்பாலானோர் வெளிநாடுகளுக்கு சென்று உழைக்கின்றனர். அங்கு உழைத்து அனுப்புகின்ற பணத்தை வீட்டில் ஆண் வர்க்கத்தினர் குடித்து அழிக்கின்றனர். இதை அவர்கள் விதியென விட்டுவிட இயலாது. ஏனெனில் கிராமத்திற்கு பார்(மது) கட்டப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்துவரப்படுகின்றது. இந்நிலைக்கு இவ்வாறான அபிவிருத்தி என்ற பெயரில் மலையகத்தின் பொருளாதாரத்தை மட்டுமன்றி மலையகத்தின் வாழ்வாதாரத்தையும் சீரழிக்கும் ஓர் அவல நிலையாகும்.

சுகாதாரம் :

மலையக மக்கள் எதிர்கொள்கின்ற பாரிய பிரச்சினைகளில் சுகாதாரமும் ஒன்றாகும். லயன் காம்புராக்களில் வாழும் மக்கள் நெருக்கமாக வாழ்கின்றனர். இதனால் வீடுகளுக்கிடையே காணப்படுகின்ற வடிகால் அமைப்புகளில் தண்ணீர் முறையாக சென்றடைய வசதி குறைவாகவே காணப்படுகின்றதால் நீர் தேங்கி நிற்கும் நிலையில் நோய்வாய் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றது.

மலையக மக்கள் செறிவாக வாழ்ந்த போதும் வைத்தியசாலைகள் அரிதாகவே காணப்படுகின்றது. முக்கியமாக மாகாணத்துக்கு ஒன்றோ இரண்டோ வைத்தியசாலைகள் இருக்கும் நிலையில் டெங்கு, மலேரியா, கால்ரா போன்ற நோய்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் வைத்தியசாலையில் இடப்பற்றாக்குறையும், வைத்தியர் பற்றாக் குறையும் காணப்படுகின்றன.

இவற்றோடு மலையக பிரதேசங்களில் திடீரென ஏற்படும் நோய்களுக்கான சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்வதற்கு வைத்தியசாலையை நாடும்பொழுது நீண்ட தூரம் பயணிக்க வேண்டி ஏற்படுமாயின் நோயாளி இறக்கவும் நேரிடகின்றது. இதனை நாம் அன்றாடம் அவதானிக்கின்றோம்.

குடிநீருடன் கழிவுநீர் கலப்பதாலும் மலையகம் நோய்க்குள்ளாகியுள்ள நிலை ஏற்பட்டுள்ளது. இவற்றோடு தொழிற்சாலைகளின் கழிவு மற்றும் புகை என்பவை மேலும் மேலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன எனலாம்.

எனவே, கிராமத்துக்கு ஒரு வைத்திய சாலை அமைக்கப்படுமேயானால் இந்நிலையிலிருந்து மலையகம் காப்பற்றப்பட வாய்ப்புகள் கிட்டும் என்பதில் எந்த ஐயப்பாடுமில்லை எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குவரத்து :

கால் நடையாக அழைத்துவரப்பட்ட பெருந்தோட்டத் துறையினரே இன்றும் காணப்படுகின்ற ரயில் பாதை, போக்குவரத்து பாதைகள் என்பன உருவாவதற்கு காரணமாக அமைந்திருந்தனர். எனினும் இன்று பல போக்குவரத்துப் பிரச்சினைகளை சந்திக்கின்றனர்.

எனவே, மலையகத்தின் மாற்றத்திற்கு கல்வியை மேலோங்கச் செய்வதும் பொருளாதாரத்தையும் மேன்மைப்படுத்த வேண்டும். போக்குவரத்து வசதிகள் கிராம புறங்களுக்கும் கொண்டுவரப்பட வேண்டும்.

மேலும், மலையகத் தமிழ்தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை தரம் உயர்வடைய வேண்டும். மலையகம் கல்வியியல் தன்னிறைவு காணவேண்டும் என்பதே எங்களது எதிர்பார்ப்பும் அவாவுமாகும்.

"என்று தணியும் எங்கள் சுதந்திரதாகம்
என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்"

பெண்

- கணவனுக்கு உலகமெல்லாம் வீடு. ஆனால் பெண்ணுக்கு வீடுதான் உலகம்.
  - தாகூர்

- பெண் என்பவள் மலரைப் போன்றவள். பலவீனமானவள். எனவே அவளை அன்புடன் நேசியுங்கள்
  - பிளேட்டோ

- சகிப்புத்தன்மையால் வலிமை மிகுந்தவர் பெண்.

- வாழ்க்கை என்ற கடலைக் கடப்பதற்கு பெண் என்ற படகோ, கப்பலோ அவசியம் தேவை
  - காந்தியடிகள்

- பெண்களின் பங்களிப்பு இல்லாமல் புதியதோர் உலகத்தை உருவாக்க முடியாது. பெண்கள் பங்குபற்றாத அரசியல், அரசியலே அல்ல.
  - அருந்ததி ராய்

- பெண்ணின் துணிவு பணிவதில் இருக்காது. மௌனமே பெண்ணுக்குப் புகழைத் தேடிக் கொடுக்கிறது.
  - பிளேட்டோ

- மதப்பற்றில்லாத பெண்கள் நறுமணமில்லா மலரைக் போன்றவர்கள். *- வறீன்*

- நற்குணமுள்ள பெண்களைவிட வேறு எல்லோரும் உலகில் சிறந்தவர்களல்லர்.
  - ஷேக்ஸ்பியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணே நீ பெருமை கொள்

ரோசாணி சிங்கராசா
வவுனியா

பார் போற்றும் பேரன்பின் ஊற்றருவி
பெண்ணே - காலம் முழுவதும்
உனை போற்றும் நான் உன்னருகில்
பெண்ணே! நீ பெருமை கொள்.

ஆடி அடங்கும் பூமியினை தன்
கரம் நீட்டி காக்கும் பூமித்தாயவள்
காக்கும் பொறுமை உனக்குள்ளும்
உண்டு பெண்ணே! பெருமை கொள்.

அவனின்றி ஓர் அணுவும் அசையாதாயினும்
பெண்ணே நீயின்றி இந்த
அகிலம் அசையாது அறிவாயோ
பெண்ணே! நீ பெருமை கொள்.

அன்புக்கு இலக்கணமே பெண்ணாவாள்
என்பதற்கு எடுத்துக் காட்டாம் அவள்
தனக்கென்றொரு பிள்ளை இல்லாமல்
உலகோர் எல்லோரும் அன்னை என
அழைத்த அன்னை தெரேசாவை
உன் மனம் மறந்ததுவா? பெண்ணே!

பூமியை முழுவதுமாய் அளக்காமல்
அன்று விண்வரை கல்பனாசெளலாவின்
பாதம் தடம் பதித்ததை அறியாயோ?
பெண்ணே!

பல்துலக்கும் தூரிகை கொண்டு
விண்வெளி ஓடத்தையே சுத்தப்படுத்திய
சுனித்தா வில்லியமும் ஒரு பெண்ணே
அந்தவகையில் பெருமை கொள் நீ!

பெண்மையில் மென்மை கொண்டு
நெஞ்சில் வீரம் கொண்டு அன்று
யான்சிராணி முதல் மாக்ரட்தட்சர், இந்திரா
காந்தி கடந்து அம்மா ஜெயலலிதா வரை
இந்த மண்சுமந்த வீரப்பெண்மணிகள்
என்பதை அறிவாயா?

பட்டி தொட்டி எங்கும் தமிழ் பாட்டிசைத்து
ஐ. நா. வரை சென்று தமிழிசைத்த
எம். எஸ். சுப்புலட்சுமி புகழ் உன் செவி
எட்டவில்லையா?
இல்லை - நம் நாட்டில் மலர்ந்த ஓர் பூ
இமயம் தொட்டு வந்த செய்திதான்
அறியவில்லையா?

தசரதசக்கரவர்த்தி தேரச்சு முறிகையிலே
தன் கட்டைவிரல் கொடுத்து காத்த
கைகேயி பெண்ணே என்பதை நினைத்து
பெருமை கொள் நீ!

அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு
இவற்றால் மட்டுமே நீ
ஆணிலிருந்து வேறுபட்டவளே அன்றி
இப் பார் தன்னில் எதனிலிருந்தும்
தாழ்ந்தவளல்ல
அந்த வகையில் பெருமை கொள் நீ!

வயதேற மாங்கல்யம் ஏற்றுக்கொண்டாய்
தாரம் அதற்கு தகுதியளித்தாய்
மழலைகள் பெற்றுக் கொண்டாய் - இறுதியில்
நாற்சுவர் மூலைக்குள் சிறைகொண்டாயோ-நீ
இதற்குத் தான் இப்புவியில் பிறப்பெடுத்தாயா?
பெண்ணே! சற்றே யோசி.

பெண்ணே! உலகம் விரிந்து கிடக்கிறது
உனக்காக - காற்றை அடைத்து வைப்பது
சாத்தியமல்ல - சாதிக்க பிறந்த உனக்கு
தடை போடுபவர் எவருமல்ல - பெண்ணே!
நீ பெருமை கொள் - இப் புவியில்
பெண்ணாய் பிறந்ததற்கு.

உன் பெருமைகள் எழுதிக் களைத்த
என் ஆறாம் விரலுக்கு விடுமுறை
கொடுத்து காத்திருக்கின்றேன் - தொடரும்
என் கவியரங்கில் பெண் பெருமைகள் மீண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லிணக்க அடிப்படையில் "கச்சதீவு திருவிழா" அனுபவக் கண்ணோட்டம்

யாழ். தர்மினி பத்மநாதன் - M.A, M.Phil

யாழ்ப்பாணக் குடாநாட்டின் தீவுக் கூட்டங்களில் தென்மேற்காக 65 கி.மீ. தூரத்தில் இந்தியா இராமேஸ்வரத்திற்கு 16. கி.மீ. தூரத்தில் ஆழமான கடலின் நடுவில் அமைந்துள்ளது கச்சதீவு. 285 ஏக்கர் பரப்பைக் கொண்டது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த "சீனிக்குப்பன் படையாச்சி" என்பவர் இத்தீவில் புனித அந்தோனியார் சிற்றாலயத்தை கட்டியுள்ளார். இந்த ஆலயத்திற்கு இலங்கையில் இருந்தும் பக்தர்கள் சென்று வருவதனால் இரு நாட்டு மக்களும் சங்கமிக்கும் தீவாக கச்சதீவு விளங்கி வருகின்றது.

1964 இல் இலங்கை பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும் இந்திய பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியும் செய்துகொண்ட ஒப்பந்தத்தினால் கச்சதீவு இலங்கைக்குச் சொந்தமானது. ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்திய மீனவர்கள் தீவில் தங்கிச் செல்வதற்கும் வலை உலர வைப்பதற்கும் ஆலயத் திருவிழாவிற்கு சென்று வருவதற்கும் அனுமதி கிடைத்தது.

1983 ஆம் ஆண்டுவரை ஆலயத்திருப் பலிச் சடங்குகளை இந்தியா தங்கச்சிமடம் றோமன் கத்தோலிக்க பங்குத் தந்தையர்கள் செய்து வந்தனர். இதில் இலங்கை குருக்களும் பங்கேற்றனர். நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக 2001 ஆம் ஆண்டுவரை திருவிழா நடைபெறவில்லை. 2002 இல் இருந்து யாழ் மறை மாவட்ட பங்குத் தந்தையர்களால் நடாத்தப்பட்டு வருகின்றது. இந்தியக் குருக்களும பங்கேற்றனர். இப்போதும் இரு நாட்டவர்களும் சந்திக்கும் மையமாக விளங்குகின்றது.

மிக ஆழமான கடற்பகுதியாலேயே பயணிக்க வேண்டும் என்பதால் அந்தப் பயணத்தைப் பலரும் தவிர்ப்பதுண்டு. இந்தியப் பொருட்களின் பண்டமாற்று பிரபல்யமாக இத்தீவில் இருப்பதனால் அதிக நாட்டமுள்ளவர்கள் சென்று வர முனைப்புக் காட்டினர்.

கச்சதீவு இலங்கைக்கு சொந்தமான பின்னர் நாளடைவில் இலங்கை கடற்படையின் ஆளுமையே முனைப்புப்பெற்று வருகின்றது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் நடுவில் கச்சதீவு உள்ளது என்றும் அதற்கு பெண்கள் செல்வது பாதுகாப்பு இல்லை என்றும் அது பயம் நிறைந்த இடம் எனப் பலரும் கூறி வருவதனைக் கடந்த சில வருடங்களாக கேள்வியுற்று வந்தேன். ஆயினும், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் நடுவில் என்றதும் எப்போதும் பார்க்க வேண்டும் என்ற ஆவல் எனக்கு. எல்லையற்ற அலை மோதலுடன் 2013, 2014 களில் முயற்சி செய்தேன். தெரிந்தவகையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரும் கூட்டிக் கொண்டு செல்லும் நிலை இல்லை. சாதாரணமான பயணங்கள் என்றால் யாரையும் நான் எதிர்பார்க்கப் போவதுமில்லை. ஆனால் கடல் பயணம் வருடத்தில் ஒரு தடவை மட்டும் அமையும் பயணம் என்பதால் முன்பின் யோசனைகளின்றி பயணிக்க முடியாது என்பது திட்டவட்டமாக இருந்தது. 2015 ஜூலை வீரகேசரியில் வடமாகாணத்திற்கான உதவி ஆசிரியராக பொறுப்பேற்றதும் 2016 இற்கான கச்சதீவுக்கான பதிவுகளை யாழ் மாவட்ட செயலகம் மேற்கொண்டது. பத்திரிகைகளில் செய்திகளும் வெளியாகி இருந்தன. கச்சதீவு அந்தோனியார் ஆலயத் திருவிழா செல்ல விரும்புவோர் மாவட்ட செலயகத்துடன் தொடர்பு கொண்டு பெயர்களைப் பதிவு செய்யும்படியும் குறிப்பிட்டிருந்தது. மேலும் கட்டணமாக பணம் அறவிடப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அத்துடன் கச்சதீவு செல்வோர் கட்டாயம் தடுப்பூசி ஏற்ற வேண்டும் என்றும் செய்திகள் வெளியாகின. அந்த வகையில் கச்சதீவுக்கான ஆர்வம் மேலோங்க மாவட்ட செயலகம் ஊடாக பதிவை மேற்கொள்ளலாம் என முடிவு செய்தபோது, ஊடகவியலாளர்களுக்கு விசேட பதிவு உண்டு என தெரிவிக்கப்பட்டது. அதன்படி தயாராகும்போது 2016 இல் செல்ல முடியவில்லை. இதுவே, 2017 இல் பயணத்தில் தீவிரம் ஆனது. கச்சதீவு செல்லும் ஊடகவியலாளர்களைப் பதிவு செய்யும்படி மாவட்ட செயலாளர் ஊடாக அலுவலகத்திற்கு தகவல் அனுப்பப்பட்டது. அதன் பிரகாரம் குறிப்பிட்ட இலக்கத்திற்கு பதிவை மேற் கொண்டதுடன் கச்சதீவு பற்றிய நிலவரங்களை நண்பர்களுடன் பகிர்ந்து கொண்டேன்.

நண்பன் விருஷன், நண்பன் நியூட்டன் ஆகியோரின் உற்சாகமான பதில்களுடன் பயமின்றிப் பயணத்தை தீர்மானித்தேன். கச்சதீவு செல்ல நாலு மணித்தியாலம் ஆகும். கடல் கொந்தளிக்கும். படகு பிரளும், காத்து பிரட்டும் என்றெல்லாம் கூறிய சிலர் கச்சதீவில் சிறிய அந்தோனியார் கோவில் மட்டும்தான் இருக்கு. ஒன்றிரண்டு தென்னை மரம், வெறும் பற்றைக்காடு தான். அந்தப் பற்றைக் காட்டுக்குள் பொம்பிளைப் பிள்ளைகளிண்ட உடுப்புகள், செருப்புகள் எலும்புக்கூடு கண்டெடுத்தாங்கள் என்று பேப்பரில் பார்த்தனான். அது பொம்பிளையள் போறதுக்கு பயமான இடம் எனக் கூறி செல்லவிடாமல் பயம் காட்டி தடுத்தும் கொண்டனர்

மீன்பிடி வள்ளங்களில் போவினம். அதில போறதுக்கு பழக்கம் இல்லாதவை போறது கஷ்டம். கச்சதீவு போய்வரும் வரை சீவன் போயிடும் என்றவர்களுக்கு மத்தியில் எல்லாவற்றையும் கடந்து அந்த பண்பாட்டு திருவிழாவை தரிசிக்க வேண்டும் என்பதிலேயே தீவிரமானேன். அந்த தற்துணிவே என்னை எப்போதும் பலப்படுத்திக் கொள்ளும்.

2017.03.11 அன்று பிற்பகல் 2 மணிக்கு குறிக்கட்டுவானில் ஆயத்தமாகும்படியும் பிற்பகல் 2.30 மணிக்கு கடற்படையின் படகில் ஊடகவியலாளர்கள் செல்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. அந்த நேரம் மாவட்ட செயலகத்தின் தகவல் தொடர்பாளர் பிரஷாந்தியை நேரில் தெரிந்திருக்கவில்லை. குறித்த நாள் காலையில் அலுவலகம் சென்றுவிட்டு மதிய வேளையுடன் குறிக்கட்டுவான் நோக்கி பயணித்தேன். கச்சதீவுக்கான விஷேட பஸ் சேவை பிற்பகல் 2.00 மணியுடன் நிறைவு பெறுவதாக யாழ் பேருந்து நிலையத்தில் இருந்து அறிவிப்பு செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. இ.போ.ச. பஸ்ஸில் கச்சதீவு விசேட சேவை எனப் பெயரிடப்பட்டிருந்தது. அவசரமாக பஸ்ஸில் ஏறிய எல்லோரும் கச்சதீவுப் பயணிகளாக இருந்தனர்.

குறிக்கட்டுவான் கடற்பிரதேசம் மக்களால் நிரம்பி வழிந்தது. சுட்டெரிக்கும் கடல் வெயில் வாட்டி எடுத்தது. ஊடகவியலாளர்களின் பெயர் விபரங்கள் கடற்படையினரிடம் பதிவு செய்யப்பட்டு இருந்தமையினால் எமது பெயர்கள் மீள் பரிசீலனை செய்யப்பட்டது. அதில் இருந்து 2.30 மணிக்கு ஊடகவியலாளர் களுக்கான விசேட சேவை இடம்பெறுவதாக அறிவிக்கப்பட்டபோதும் 5.00 மணிவரை வெயிலில் காத்திருக்க வேண்டியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுப் பயணிகளுக்கான சேவையில் குறைவின்றிய நிலையில் பயணிகள் சேவை இடம்பெற்றுக் கொண்டிருந்தது. அனைத்துப் பயணிகளையும் அழைத்துச் செல்வதாகவும் கடற்கரையில் முட்டிமோதாமல் பாதுகாப்பாக பயணத்தை மேற்கொள்ளும்படியும் அறிவிப்பு செய்யப்பட்டுவந்தது. அந்த இடைவெளியில் சரியாக 5.00 மணிக்கு ஊடகவியலாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு கடற்படையினரின் விசேட படகில் 15 பேர் வீதம் ஏற்றப்பட்டு பயணத்தை மேற் கொண்டோம். எமது படகில் உட்புறம் பெண் ஊடகவியலாளர்களும் வெளிப்புறம் ஆண் ஊடகவியலாளர்களும் அமர்த்தப்பட்டனர். "குருவி போர்ட்" என சிறப்புப் பெயரால் அழைக்கப்படும் கடற்படைப் படகின் வேகம் மனசெல்லாம் குளுகுளுத்தது. அள்ளி எறியும் கடல் நீரின் வேகத்தில் கடல் நுரைகளைக் கக்கிக்கொண்டிருந்தது. வெளியில் நின்று இயற்கையில் அழகை இரசிக்க ஆசை. மனம் துடித்தபோதும் பாதுகாப்பு கருதி கடற்படை எவரையும் படகில் வெளிப்புறம் அனுமதிக்கவில்லை. படகைச் சுற்றி கடற்படையினர் பலத்த பாதுகாப்பில் நின்றனர். கடல் கொந்தளிக்கும் போதெல்லாம் படகைப் பிடித்தவாறு சற்றும் சளைக்காமல் நீரில் முழுகிக் கொண்டனர். இடையிடையே கடற்படை சிப்பாய் ஒருவர் படகின் உள்ளேவரும் தண்ணீரை வெளியில் அகற்றிக் கொண்டிருந்தார்.

படகில் ஏறியது முதல் மனசெல்லாம் மகிழ்வும் குதூகலமும் நிறைந்திருந்தது. படகு வேகங்கொண்டு அலைகளினூடே அங்கும் இங்கும் சரிந்து நிமிர்ந்தது. அந்த வேகம் தலைச்சுற்றையும் சத்தியையும் ஏற்படுத்த தொடங்கியது. பனடோல், விக்ஸ் என்பன கைப்பையினுள் இருந்தமையினால் அவற்றின் உதவிகளுடன் நிலமையைக் கட்டுப்படுத்த முடிந்தது. ஆயினும் நீண்ட நேரம் படகில் இருப்பதும் பயம்தந்தது. வெளியில் இரசித்துக் கொண்டிருந்தாலும் மனம் நெருக்கடி குறையும். அதுவும் இல்லை. ஆனால் நண்பன் பிரதீபனின் தொலைபேசி அழைப்பும் தொடர்பாடலுடனான பலமும் கச்சதீவைச் சென்றடையும்வரை பலத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தது. கடற்பரப்பில் பாதம் பதித்த சில நிமிடத்தில் தொலை பேசியும் பற்றி சார்ஜ் இல்லாமல் போனது மிகுந்த ஏமாற்றம் தந்தது.

இடையிலே தூரத்தில் ஓர் தீவு பனை மரங்களும் டவர் கோபுரமும் கண்ணுக் கெட்டிய தூரம் வரை தெரிந்தது. அது "நெடுந்தீவு" என அறிமுகம் கிடைத்தது. பயணம் தொடர்ந்தது. தூரத்தில் சின்னச் சின்னத் தலைகள் தெரிய, இலங்கைக் கொடிகள் காற்றில் அசைய அந்தோனியார் ஆலயம் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு மின்னியது. கடற்கரையில் ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் என்று அவரவர் தங்கள் சுதந்திரத்துடன் குளித்துக் கொண்டிருந்தனர். கடற்கரையுடன் கடற்படைப் படகுகள் சிலவும் நங்கூரமிட்டு இருந்தன. கடலில் தூரத்தே பல படகுகள் ஆங்காங்கே மக்கள் கூட்டத்துடன் மிதந்து வந்து கொண்டிருந்தன. கரையில் பிளாஸ்டிக் பாலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்காலிகமாக அமைக்கப்பட்டு அதனூடாகவே மக்கள் தரையிறக்கப்பட்டுக் கொண்டிருந்தனர். இலங்கைக் கொடிகள் பலவும் கச்சதீவைச் சுற்றிப் பறந்துகொண்டிருந்தன.

"வழமையில் இந்தியக் கொடியும் சேர்த்து தான் கட்டுவதுண்டு. ஆனால் இந்தமுறை இலங்கை கொடி மட்டும் தான் கட்டப்பட் டுள்ளது'' என்றாள் இரண்டு மூன்று தடவைகள் சென்றுவந்த ஊடக நண்பி. கரையில் "இந்தியப் பயணிகளுக்கு'', "இலங்கைப் பயணிகளுக்கு'' என இடப் பக்கமாகவும் வலப்பக்கமாகவும் விளம்பரப் பதாகைகளும் நாட்டப்பட்டிருந்தன. சகல பயணிகளுக்கான வரவேற்புப் பீடமாகவும் பதிவு செய்யும் பீடமாகவும் அவை அமைக்கப்பட்டிருந்தன.

பத்திரிகையாளர் என்ற வகையில் எமக்கான பதிவுகளை மேற்கொண்டு எமக்கான அடையாள அட்டையினை கடற்படையினரிடம் பெற்றுக்கொண்டோம். மின்மினி வெளிச்சங்களினால் ஆலயம் ஒளிபெறத்தொடங்கியது

சிலுவைப் பாடலுடன் மரத்தினாலான பெரிய சிலுவையை சுமந்தபடி மக்கள் வழிபாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

சிலுவைப் பாதை தொடங்கியதும் நாம் எமக்கான தங்குமிடம் நோக்கிச் சென்றோம். ஆலய வளாகம் மட்டுமன்றி புல்பூண்டு, பற்றைகளை தமக்கான தேவைகளுடன் துப்பரவு செய்து இருப்பிடமாக்கிக் கொண்டனர் பக்தர்கள். பற்றைகளின் நடுவில் எந்தவித பாதுகாப்பு உத்தரவாதமும் இன்றிய நிலையில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை தங்கிக்கொண்டனர்.

வடலிப் பற்றைகளின் நடுவில் அமைந் திருந்த ஒரு குடும்பத்தை நோக்கி "பற்றைக் குள் இருக்கிறீங்க பூச்சி பூரான் இருக்காதா? பயமில்லையா?'' என்றேன்.

"அந்தோனியாரின் நம்பிக்கை. பாதுகாப்பாய் எம்மைப் பார்ப்பார்'' என்றனர். அந்த நம்பிக்கையே பலரையும் பயமின்றி இத் தீவிற்கு அழைத்துள்ளதென்பதனை உணர முடிந்தது. ஆலயத்தைச் சுற்றியுள்ள அனைத்து இடங்களும் கடற்படையினரால் துப்பரவு செய்யப்பட்டும் இருந்தது. பொலிஸ் பெண்கள் பிரிவு, ஆண்கள் பிரிவு, கடற்படையினரின் மருத்துவ பிரிவு என்பனவும் தனித்தனியாக அமைக்கப்பட்டிருந்தன. தவிர புதிதாக மக்களுக்கும் கடற்படையினருக்கும் என தனித்தனி மலசல கூடங்களும் புதிதாக கட்டப்பட்டு இருந்தன. உணவு, குடிநீர் வசதிகளும் மக்களுக்கு ஒழுங்குபடுத்தப் பட்டிருந்தன. குடிநீர் பெரிய பவுசர்கள் மூலம் ஆலயத்தின் பல்வேறு இடங்களிலும் ஒழுங்கு செய்யப்பட்டு இருந்தாலும் மேலதிகமாக போத்தல்களில் அடைக்கப்பட்ட குடிநீரும் விநியோகம் செய்யப்பட்டது.

வடமாகாண, தென்மாகாண ஊடக வியலாளர்களுக்கான தங்குமிடங்களும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததுடன் நீதவான், யாழ், இந்திய துணைத் தூதுவர் ஆகியோருக்கும் தனித் தனியாக தங்குமிடம் ஒதுக்கப்பட்டிருந்தது. விஷேட விருந்தினர்களுக்கான உணவுகளும் மிகப் பிரமாண்ட மாக ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. இரவு உணவுகளாக நூடில்ஸ், சோறு, புரியாணி, இறால், மாசிச்சம்பல், கிரிபத், கோழிப் பிரட்டல், உருளைக்கிழங்கு பிரட்டல், வாழைப்பழம் எனப் பல உணவு வகைகளை கடற்படையினர் மிகுந்த கரிசனையுடன் பரிமாறிக் கொண்டனர். கடற்படைச் சிப்பாய்கள் தொடக்கம் அதிகாரிகள், தளபதிகள் வரை அந்த விழாவை மிகுந்த அக்கறையாக, பாதுகாப்புடன் நடைமுறைப்படுத்திக் கொண்டனர். அடுத்த நாள் காலையில் தேநீர், இடியப்பம், பாண், கிரிபத், சம்பல், வாழைப்பழம், மாசிச்சம்பல் என திட்டமிடப்பட்டிருந்தன. உணவுக்கான நேரம் தாமதிக்கும் போதெல்லாம் அனைவரையும் உண்ண வைப்பதில் தங்கள் கடமையில் சிறப்பாக ஈடுபட்டனர்.

கச்சதீவில் ஓரிரு தென்னை மட்டுமே உண்டு, மீதி பற்றைக்காடு என கூறிய நண்பர்களின் கதைகள் நினைவுக்கு வந்தது. கச்சதீவுக்குச் சென்றவர்களாலேயே கச்ச தீவின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பு தொடர்பில் குறிப்பிடத் தெரிய வில்லை என்றே எண்ணத் தோன்றியது. காடு களும் பற்றைகளும் நிறைந்துதான், எப்படிச் சுற்றிப் பார்த்தாலும் எல்லாப் பக்கமும் கடலைக் காண முடியும். அதே நேரம் குறிப் பிட்ட சில பகுதிகள் கடற்படையினரால் சுத்தம் செய்யப்பட்டிருந்தது. அத்துடன் கடற்படை முகாம் ஒன்றும் அமைந்துள்ளது. மிக அழகாகவும் சுத்தமாகவும் அந்த வளாகம் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. பார்க்கும் இடமெல்லாம் உயர்ந்த பனைகள் கூட்டம் கூட்டமாக சிலுசிலுத்துப்போய் சிரித்துக் கொண்டன. தவிர இன்னும் இன்னும் பலன் தரும் பல வகை மரங்களையும் நாம் காணும் பாக்கியம் கிடைத்தது. அந்தோனியார் ஆலயத்தில் இடைவிடாத பூசைகள் இடம் பெற்றன. தொடர்வழிபாட்டில் மக்கள் ஈடுபட்டனர். ஆதி அந்தோனியார் ஆலயம் சிறியதாக காட்சியளித்தது. அது மீனவர் களைப் பாதுகாக்கும் உயிர்ப்புடன் மிளிர்வ தாக நம்பிக்கை தெரிவித்தனர். 2017 இல் இலங்கை கடற்படையினரால் புதிய ஆலயம் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. அதில் இவ்வருடம் முதன்முதலாக திருப்பலிப் பூசைகள் இடம்பெற்றன. வெளி மண்டபத்திலும் பூசைகள் இடம்பெற்றன.

அருட்தந்தை ஒருவர் மக்களின் நேர்த்திக் கடன்களை ஒலிபரப்பி மூலம் வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்.

“ஜேர்மனியில் வசிக்கும் சசிதரன் தனக்கு நிரந்தர விசா கிடைக்க வேண்டும்” என அந்தோனியாரை வேண்டிக் கொள்கின்றார். இவரது வேண்டுதல்கள் நிறைவேற நாமும் பிரார்த்திப்போமாக என அந்த வேண்டுதல் பகிரப்பட்டது.

ஏன் அப்படிக் கூறுகின்றனர் என்பது எனது புதிய அனுபவம். முதல் அனுபவம். இது தொடர்பில் வினாவியபோது அவர்கள் நேரில் வரமாட்டார்கள். நேரில் வரமுடியாது இருப்பவர்கள் கோவிலுக்கு செல்பவர்களிடம் சொல்லி காசும் கொடுத்துவிடுவார்கள். நேர்த்தி என்பதனால் கட்டாயம் செய்வார்கள். ஒரு வேண்டுதலுக்கு 100 ரூபாய் பணம் கொடுக்க வேண்டும் என்றார் ஓர் பெண்மணி. இச்செயலில் நம்பிக்கை என்பதற்கு அப்பால் நிறைய கேள்விகள் எனக்குள். ஒருபோதும் அவர்களின் நம்பிக்கையை நாம் மறுதலிக்க முடியாதே எனப் புரிந்து கொண்டேன். மேலும்; “கர்ப்பிணிப் பெண்ணுக்கு சுகப் பிரசவம் கிடைக்கவும்”, “காணாமல் போனவர் மீண்டு வரவும்”, “புற்றுநோய் சுகம் வரவும்”, “திருமணம் வெற்றி பெறவும்”, “உயர்தரம் சித்தி பெறவும்”, “பல்கலைக்கழக கல்வி கிடைக்கவும்”, “தொழில் கிடைக்கவும்”, “காதல் கைகூடவும்” என்று ஒவ்வொருவரினதும் வேண்டுதல்கள் அவர்களது பெயர்களின் பெயராலும் வசிக்கும் நாட்டையும் குறிப்பிட்டு நாள் முழுவதும் ஒலிபரப்பப்பட்டுக் கொண்டிருந்தன.

இரவிரவாக ஆலயம் நோக்கிப் பல படகுகள் குவிந்த வண்ணம் இருந்தன. 5,000 க்கும் மேற்பட்ட மக்கள் பங்கு கொண்டனர். தனியே தமிழ் மக்கள் மட்டுமல்ல தென்னிலங்கை சிங்கள மக்களும் வழிபாட்டில் கலந்து கொண்டனர்.

மன்னார், பள்ளிக்குடா, தலைமன்னார், பேசாலை, வங்காலை, குருநகர், பாசையூர், புத்தளம் என்று வடக்கின் கரையோரக் கிராமங்கள் யாவும் தமது சொந்தப் படகுகளிலும் வாடகைப் படகுகளிலும் ஆலயத்தை வந்தடைந்தனர். இந்திய மீனவர்கள் சிலர் இலங்கை கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்தியப் பக்தர்கள் கச்சதீவுப் பயணத்தினை நிராகரித்துக் கொண்டனர். அவர்கள் பங்குபற்றாதமை இலங்கைத் தமிழ் மக்களை மனரீதியாக பெரிதும் பாதித்தது. இலங்கையில் இருந்து இடம் பெயர்ந்து அகதி அந்தஸ்துடன் இந்தியாவில் தஞ்சம் அடைந்துள்ள பலரை தமது உறவுகளை வருடத்தில் ஒரு தடவை சந்திக்கும் கேந்திர நிலையமாக கச்சதீவு உள்ளமையினால் 3 மணி நேர பயணத்தில் விசா அனுமதி, பணவசதி எதுவுமின்றி மனம் நிறைந்து சந்திக்கும் இடமாக கச்சதீவை முக்கியப்படுத்திக் கொள்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுசாதனப் பொருட்கள், புடவைகள், சில்வர் பாத்திரங்கள், வெள்ளிப் பொருட்கள் என கலை, கலாசார ரீதியில் பல்வேறு பொருட்கள் இந்திய உறவுகளின் ஊடாகவும் தேயிலை, அங்கர் பால்மா, ராணி சவுக்காரம், பனம் உற்பத்திகள் என பல்வேறு பொருட்களும் இலங்கை மக்கள் ஊடாகவும் பண்டமாற்று செய்யப்படும் வணிக ஸ்தலமாகவும் கச்சதீவு உள்ளதாக அறிய முடிந்தது. ஆயினும் அந்த உறவுகள் இம்முறை உறவுகள் வருகை தராமை பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்திருந்தது. இது குறித்து அடம்பனைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் குறிப்பிடுகையில்: "கச்சதீவு பெருநாள் வருகுது எண்டதும் எங்களுக்கு மனசெல்லாம் சந்தோசம். இந்தியாவில இருக்கிற எங்கட உறவுகளைப் பார்க்க ஆசை. எங்களுக்கு சாமான்கள் வரும். விற்கிறதுக்கும் வரும். நாங்களும் எங்கட நாட்டு சாமான்களை குடுத்து விடுவம். மீனவர் கொலை செய்யப்பட்டதால் மீனவ சங்கம் கச்சதீவு வருவதில்லை என முடிவு செய்திட்டு. அதைமீறி யாரும் வர ஏலாது. நேரில் பார்க்க ஆசைதான். போனில் மட்டும் கதைச்சிட்டு ஆறுதல் சொல்லிட்டு இருக்கிறம்'' என்றார்.

"நாங்கள் அடிக்கடி வந்து போனதில நிறைய பேர் சொந்தங்களாகிட்டினம். எங்களைப் பார்க்க வரல்லை என்டதும் அவைக்கு சரியான கவலை."

இவ்வாறு ஒவ்வொரு மக்களிடமும் அன்பும் எதிர்பார்ப்பும் ஆசையும் மேலோங்கி இருந்தது. கோவிலுக்கு வருபவர்கள் இறைவனின் அற்புதத்தினால் அழைக்கப்பட்டவர்கள் என்றார் ஓர் வயதான அம்மா.

ஆலயத்தைச் சுற்றி நிறங்களிலான மின்மினி விளக்குகளும் கடல் மீன்களினால் அலங்காரப்படுத்தப்பட்ட அலங்காரங்களும் கடற்படையினரின் கலைத்துவத்தை வெளிப் படுத்துவனவாக அமைந்திருந்தன. மீன், கணவாய் என்று பலவும் றெஜிபோம் அலங்காரங்களினால் அழகுபடுத்தப்பட்டு அரங்கியல் உணர்வுகளுடன் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

குடும்பம் குடும்பமாக வருகைதந்த தென்னிலங்கை மக்களுக்கும் விசேட வசதிகள் கடற்படையினரால் ஒழுங்குபடுத்தப் பட்டிருந்தன. கடற்படையினரின் முழுமையான ஒத்துழைப்பிற்கும் மேலாக தமது நல்லிணக்க மன நிலையை வெளிப்படுத்தும் வகையில் மக்களுடன் மக்களாக தங்கிக் கொண்டனர். ஊழியனாக, சேவையாளனாக, அதிகாரியாக என பல்வேறு பரிமாணங்களில் இயங்கிக் கொண்டிருந்தனர். பரஸ்பரம் கருத்துப் பரிமாற்றங்களை தமக்குத் தெரிந்த வகையில் பரிமாறிக் கொண்டனர். சிங்கள மொழியைப் பயன்படுத்த முடியாத போதும் சிரிப்புமொழிகளை பயன்படுத்திக் கொண்டனர். மேலும் தென்னிலங்கையைச் சேர்ந்த தமிழ் சிங்கள, முஸ்லீம் ஊடகவியலாளர்களும் பங்கு கொண்டனர்.

பூகோள வரலாற்றிலும் அரசியல் வரலாற்றிலும் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த கச்சதீவு அந்தோனியார் ஆலய திருவிழா பண்பாட்டியல் ரீதியில் மக்கள் ஒன்று கூடவும் தங்கள் உணர்வுகளை சொந்தங்களை பரிமாறவும் கூடிய ஒரு இடமாகவும் உள்ளது. ஏனைய ஆலயத் திருவிழாக்களில் கலை, இசைச் செயற்பாடுகளையும் நாம் கண்டு தரிசிக்க முடியும். ஆனால் இங்கு அதற்கான அரசியல் கள சாத்தியப்பாடுகள் இன்மையினை அவதானிக்க முடிந்தது.

மக்கள் அங்கு வாழ்கின்ற எந்தவொரு வசதிப்பாடுகளும் இல்லாத ஓர் தீவாக கச்சதீவு இருப்பதனால் ஒருநாள் திருப்பலிப் பூசைக்கான ஆயத்தங்களுடன் மட்டுமே அங்கு செல்ல முடிகின்றது. இந்திய இலங்கை உறவுகளிடையே பரஸ்பர பகிர்வுக்குரிய களமாக விளங்குவதனால் ஆத்ம திருப்தியையும் இத்திருவிழாக் களம் கொடுக்கின்றது.

அந்த வகையில் கச்சதீவு திருவிழா வருடத்தில் ஒரு முறையில் மனப் பீதிகளை நிறைத்துக்கொண்ட பயணமாயினும் அழகியலுடன் அனுபவங்களுடனும் உறவுகளுடனும் சேர்ந்து மகிழ்ந்து பகிர்ந்து திரும்புதல் என்பதும் வரம் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திர இலங்கையில் மலையக மக்களின் சமூக குடியுரிமை: சில அவதானிப்புகள்

கலாநிதி இரா. ரமேஷ்
அரசியல்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

அறிமுகம்

1980களின் இறுதிப்பகுதியில் இருந்து மலையக மக்கள் படிப்படியாக சட்ட ரீதியாக பிரஜாவுரிமையினை அல்லது குடியுரிமையினைப் பெற்றுக்கொண்டபோதும், அதன் உண்மையான பயன்களை முழுமையாக அனுபவிக்க முடியாதவர்களாகவே வாழ்ந்து வருகின்றனர். அதற்கு அம்மக்களின் சமூக பொருளாதார நிலை பெரிதும் சான்றாகக் காணப்படுகின்றன. நாட்டின் ஏனைய சமூகங்களின் சமூக அபிவிருத்தி மற்றும் பொருளாதார நிலைமைகளுடன் ஒப்பிடும் போது இதனை நன்கு விளங்கிக்கொள்ள முடியும். கல்வி, சுகாதாரம், வீட்டுரிமை, காணியுரிமை, அரச தொழில் வாய்ப்பு, உட்கட்டமைப்பு வசதிகள் என்பன இம்மக்கள் தொடர்ந்தும் எதிர்கொள்ளும் பிரச்சினைகளாகும். 1980களில் இருந்து மலையக அரசியல் கட்சிகள் மாறி மாறி வந்த அரசாங்கங்கள் ஆட்சியமைப்பதற்கு பங்களிப்பு செய்துள்ளன. ஆயினும், அதன் மூலம் மேற்கூறிய பிரச்சினைகளில் பெரியளவிலான மாற்றங்கள் ஏற்படவில்லை என்பது பல ஆய்வாளர்களின் வாதமாகும். ஆட்சி முறைக்கட்டமைப்பு பெருந்தோட்டங்களை நோக்கி விஸ்த்தரிக்கப்படாமை, அதில் காட்டப்படும் தொடர்ச்சியான பாகுபாடு, பொதுச் சேவை வழங்களில் புறக்கனிப்பு மற்றும் மட்டுப்பாடுகள் என்பன மலையக மக்களின் சமூக குடியுரிமையினை அல்லது சமூக உரிமைகளை பெரிதும் பாதித்துள்ளன என்பது பொதுவான வாதமாகக் காணப்படுகின்றது. சமூக குடியுரிமை அல்லது சமூக உரிமைகள் என்பது அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற பொது சேவைகளை குறித்து நிற்கின்றன – அவை கல்வி, சுகாதாரம், தொழில் வாய்ப்பு, வீடு, சமூக பாதுகாப்பு போன்ற பல சேவைகளை குறித்து நிற்கின்றன. அந்தவகையில் இக்கட்டுரையானது மலையக மக்கள் சுதந்திர இலங்கையில் எந்தளவுக்கு சமூக உரிமைகளை அனுபவிக்கின்றார்கள் என்பது தொடர்பாக சுருக்கமாக ஆராய்கின்றது.

பொது நிர்வாக சேவைகளைப் பெற்றுக் கொள்வது ஒரு சமூக பிரஜாவுரிமையாகவும் (social citizenship rights) அடிப்படை மனித உரிமைகளில் ஒன்றாகவும் அங்கிகரிக்கப் பட்டுள்ளது. காரணம் பொது நிர்வாக சேவைகள் மனித நல்வாழ்வு (subjective human well-being), அபிவிருத்தி மற்றும் சமூக உரிமைகளுடன் நேரடித் தொடர்புக் கொண்டிருப்பதனாலாகும். சிறுபான்மை மக்கள் அல்லது ஒடுக்கப்பட்ட மக்கள் சட்ட ரீதியான குடியுரிமையினைப் பெற்றுக்கொண்டாலும், அவர்கள் குடியுரிமையின் முழுமையான பயன்களை அனுபவிப்பதில்லை –அதற்கு மலையக மக்கள் சான்றாகும். விசேடாக, சமூக குடியுரிமையினை அனுவிப்பதில் சட்ட, கொள்கை மற்றும் நிறுவன ரதீயான கட்டுப்பாடுகள், கொள்கைகளை நடைமுறைப் படுத்துவதில் பாகுபாடுகள், கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களின் மற்றும் அதிகாரிகளின் பாகுபாடான செயற்பாடுகள் இதில் பெரிதும் பங்களிப்பு செழுத்தும் காரணிகளாகக் காணப்படுகின்றன. ஒரு மனிதன் சமூகப் பிரஜா உரிமையினை அனுபவிக்கும் பொழுதே ஏனைய சிவில், அரசியல், கலாசார உரிமைகளை அனுபவிக்க முடியும் எனவும் அதற்கான கொள்கைத்திறனை (capability) பெறமுடியும் எனவும் பொதுவில் வாதிடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக மக்களும் சமூக பிரஜாவுரிமையும் :

மலையக மக்கள் படிப்படியாக சட்ட ரீதியான பிரஜாவுரிமையினை பெற்றுக் கொண்டுள்ளப்போதும் அது அவர்களின் சமூக நிலையை, சமூக உரிமைகளை, மானிட நல்வாழ்வினை மேம்படுத்தவில்லை. சட்ட பிரஜாவுரிமை இம்மக்களுக்கு ஒரு வகையான முழுமையற்ற அல்லது ஆகக் குறைந்த உத்தரவாதத்தினை (minimum quarantee) மாத்திரமே வழங்கியது. இதனடிப்படையில் பார்க்கும்போது, பெருந்தோட்ட மக்கள் சமூக அபிவிருத்தியில் பின்னடைந்திருப்பதற்கு அவர்கள் சமூகப் பிரஜா உரிமையினை அனுபவிப்பதில் காணப்படுகின்ற பல்மட்டக் கட்டுபாடுகள் பெரிதும் பங்களிப்பு செய்கின்றன என வாதிடலாம். இதன் விளைவாக சிவில், அரசியல் மற்றும் கலாசார உரிமைகளையும் பூரணமாக அனுபவிக்க முடியாதுள்ளனர். மேற்கூறிய வாதமானது சமூக பிரஜாவுரிமைக்கும் ஏனைய சிவில், அரசியல், கலாசார உரிமைகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதனை வெளிக்காட்டுகின்றது. மேலும் அரச நிறுவனங்களின் மூலம் காட்டப்படும் தொடர்ச்சியான பாகுபாடு, புறக்கணிப்பு, அரச நிர்வாக சேவை மறுக்கப்படல் ஆகியன மலையக மக்கள் மத்தியில் பொருளாதாரம் சாராத வறுமையினை (Non-Economic form of Poverty) ஏற்படுத்தியிருப்பதுடன், அவர்களின் சமூக மூலதனத்தையும் (social capital) பெரியவில் மட்டுப்படுத்தியுள்ளது அல்லது இல்லாது செய்துள்ளது எனலாம். சமூக மூலதனம் பிரஜைகள் தமது சிவில் ஆற்றல்களை, பண்புகளை வளர்க்க, ஆட்சிமுறை செயன்முறையில் செயலூக் கத்துடன் பங்கேற்க பெரிதும் அவசியம் ஆகும். அதனடிப்படையில் பார்க்கும் போது மலையக மக்கள் மீதான சட்ட ரீதியான புறக்கணிப்புகள் மற்றும் ஆட்சி முறைக்கட்டமைப்புகளில் இருந்து அவர்கள் ஓரங்கட்டப்பட்டமையானது அவர்களின் சமூக மூலதனத்தை இல்லாது செய்துள்ளது என வாதிடலாம். இதனால் சட்ட பிரஜாவுரிமைக் கிடைத்தப்பின்னரும் அவர்களால் சட்ட ரீதியாக உரித்துடைய அரச சேவைகளைக்கூட பெறுவதில் பல கட்டுபாடுகள் காணப்படுகின்றன. ஆயினும், நிறுவன, சட்ட மற்றும் கொள்கை ரீதியாக தடைகள் மற்றும் கட்டுப்பாடுகள் முழுமையாக நீக்கப்படாததால் சமூக பிரஜாவரிமையின் நிலை தொடர்ந்தும் ஆபத்தான நிலையிலயேக் காணப்படுகின்றது எனலாம். இதன் காரணமாக இந்த நாட்டின் ஏனைய சமூகங்கள் அரச பொது நிதியின், வரி வருமானத்தின் மூலம் அனுபவிக்கும் சேம நலன்களை அனுபவிக்க முடியாத நிலையில் காணப்டுகின்றனர்.

உண்மையில், பொதுத்துறை நிர்வாகம், அதன் சேவைகள் சமூக குடியுரிமையின் பலன்களை பிரஜைகள் அனுபவிப்பதற்கான பரந்த சட்டகத்தை வழங்குகின்றது. மேலும் அது சமூக நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு பொது சேவைகளை வழங்குகின்றது. குறிப்பாக பொது நிர்வாகமானது பிரஜைகளின் தேவைகளுக்கு அல்லது கோரிக்கைகளுக்கு வினைத்திறன் மிக்க வகையிலும், பொருப்புடனும் சேவை வழங்குவதனை குறித்து நிற்கின்றது. இங்கு சமத்துவம், பாகுபாடின்மை, பக்கசார்பின்மை, நேர்மைத்தன்மை, நியாயமான முறையில் நிர்வாக ஒழுங்கு விதிகளை கையாளுதல் மற்றும் யாவரையும் உள்வாங்கிச் செயற்படுதல் ஆகியன அடிப்படைத் தத்துவங்களாக பின்பற்றப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றன. ஆயினும், நடைமுறையில் அரச நிறுவனங்களும் அதிகாரிகளும் தமதுப் பணிப் பொருப்புகளை நிறைவேற்றும் போது தனிப்பட்ட விருப்பங்கள், இன, மத, மொழி, பிரதேசம், அரசியல், சாதி போன்ற விடயங்களுக்கு முன்னுரிமை வழங்க வருவதனால் அவர்கள் மேறகூறிய அடிப்படைத் தத்துவங்களை அலட்சியம் செய்யும் நிலையினை நாளாந்த நிர்வாக செய்றபாடுளில் இருந்து அவதானிக்க முடிகின்றது. இது முடிவில் பல் மட்ட பாகுபாடுகள், விசேட கவனிப்புகள், ஊழல் போன்ற பல விரும்பதகாத விளைவுகளை ஏற்படுத்திவிடுகின்றது.

விசேடமாக, சுதந்திரத்திற்கு பீன்னர் மாறி மாறி பதவிக்கு வந்த அரசாங்கங்கள் பொதுச் சேவை வழங்குவதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளன என்பது மறுப்பதற்கில்லை. இதற்கு பல அரசியல் காரணங்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டன. ஆயினும், அவற்றின் தரம், அளவு, சமவாய்ப்புகள், சமமாக அணுகுதல் ஆகிய விடயங்கள் தொடர்பாக பல விமர்சனங்கள் காணப்படுகின்றன. அதில் இனத்துவக் காரணிகள், கட்சி அரசியல் அல்லது தேர்தல் அரசியல், நிறுவன ரீதியான காரணிகளும் செல்வாக்கு செழுத்தியுள்ளன. இது பாகுபாடுகள், ஒதுக்கள்கல், சமத்துவமின்மை, நேர்மையின்மை, ஊலழ், பக்கச்சார்பு, அதிகார துஸ்பிரயோகம் போன்ற விளைவுகளை ஏற்படுத்தின. இது மறுபுறமாக அரசாங்கம் மற்றும் அரச நிறுவனங்கள் மீதான பிரஜைகளின் நம்பிக்கையினை இழக்கச் செய்ததுள்ளது – குறிப்பாக, பெருந்தோட்ட மக்கள் மத்தியில். அரச நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகள் நியாயமாகவும், நேர்மையாகவும், பக்கச்சார்பின்றியும், எத்தகைய பேதங்களும் இன்றி அனைவரையும் சமமாக கவனிக்கும் போதே பிரஜைகள் அவற்றின் மீது நம்பிக்கை வைப்பர். ஆட்சி முறையொன்றின் வெற்றிக்கு, அரசக் கொள்கைளின் வெற்றிக்கு பிரஜைகளின் நம்பிக்கை பெரிதும் அவசியமாகும்.

அரசின் நிர்வாக நிறுவனங்களை மக்களுக்கு அண்மித்தவகையில் தாபித்து, அதன் மூலம் பொதுச்சேவையினை இலகுப்படுத்தல், அவற்றை மக்களிடம் கொண்டு செல்லள் போன்ற நடைமுறைகள் இலங்கையில் நீண்ட காலமாக காணப்பட்டு வருகின்றன. உதாரணமாக, கச்சேரி முறை, பிரதேச செயலகம், கிராமிய சபை, பட்டின சபை, நகர சபை, மாநகர சபைகள் ஆகியவற்றினைக் குறிப்பிடலாம். இதன் மூலம் மிக இலகுவாக கிராமிய மக்களுக்கு அரசாங்க சேவைகளையும், அபிவிருத்திசார் தேவைகளையும் அடையும் வாய்ப்பு கிட்டியது. 1990 களுக்குப் பின்னர் மக்களுக்கு மிகவும் அண்மித்தவகையில் புதிதாக பிரதேச செயலகங்கள், சபைகள் கிராம சேவகர் பிரிவுகள் என்பன உருவாக்கப்பட்டன. இந்நிறுவனங்கள் பொது நிர்வாக சேவைகளை பெரிதும் இலகுபடுத்தியதுடன், அவை மக்கள் மைய நிறுவனங்களாக செயற்பட ஆரம்பித்தன. ஆயினும், இத்தகைய நிர்வாக விஸ்த்தறிப்புக்கள், நிர்வாகப் பரவலாக்கம் மலையக மக்களின் சமூக பிரஜாவுரிமையினை மேம்படுத்துவதில் பெரியளவிலான தாக்கத்தினை ஏற்படுத்தவில்லை எனலாம். அரசியல் மற்றும் நிர்வாக விருப்பமின்மை இதில் பெரியளவிலான தாக்கத்தினை ஏற்படுத்தியது.

நாட்டின் மொத்த சனத்தொகையில் இந்திய வம்சாவழியினரின் விகிதாசாரம் 5.0% ஆகும். இதில் 0.5%னர் மாத்திரமே அரச தொழில் துறையில் அங்கம் வகிக்கின்றனர். மத்திய அரசாங்கத்திலும் மற்றும் மாகாண மட்டத்திலும் முகாமைத்துவ உதவியாளர்களாகவும், இலிகிதர்களாகவும், சிற்றூழியர்களாகவும், அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகவும் குறிப்பிட்ட எண்ணிக்கையினர் பனியாற்றுகின்றனர். ஆயினும், ஒரு மொழி ஆதிக்கம் (monolingual domination) கொண்ட நிறுவனக் கட்டமைக்குள் இருந்துக் கொண்டு இவர்கள் தாம் சார்ந்த சமூகத்துக்கு சேவை செய்வதில் பல நிர்வாக மற்றும் அரசியல் ரீதியான சவால்களுக்கு முகம்கொடுத்து வருவதனை இக்கட்டுரையாசிரியர் அண்மையில் மேற்கொண்ட ஆய்வொன்றின் மூலம் அடையாளம் காண முடிந்தது. மேலும், போதியளவில் அதிகாரம் இல்லாத கீழ் நிலைப் பதவிகளில் காணப்படுவதனால் பொதுச் சேவை வழங்களை பெரியளவில் மேம்படுத்த முடியவில்லை.

பெருந்தோட்டப் பகுதிகளில் அரச சேவைக்கான தேவைப்பாடு

இன்று பெருந்தோட்டப் பகுதிகளுக்கு பொது நிர்வாக நிறுவனங்களின் தலையீடு மற்றும் சேவைகள் காலத்தின் தேவையாக உள்ளது. இன்று பெருந்தோட்டக் கைத்தொழில் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளது. அதற்கு பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன். தொழிலாளர் பற்றாக்குறை, போதிய சம்பளமின்மை, சர்வதேச சந்தையில் தேயிலை விற்பனையில் அதிகரித்த போட்டி, தொழில் கௌரவம், இலங்கைத் தேயிலையின் தரவீழ்ச்சி, இலங்கைத் தேயிலையை கொள்வனவு செய்யும் நாடுகளில் தொடரும் அரசியல் அமைதியின்மை, இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கைகள் ஆகிய காரணிகளைக் குறிப்பிடலாம். இதன் காரணமாக தோட்ட முகாமைத்துவம் அல்லது பெருந்தோட்ட கம்பனிகள் தோட்ட தொழிலாளர்களின் அபிவிருத்திக்காக அதிக பணத்தை முதலீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதில்லை. அதிகமான சேமநல வேலைத் திட்டங்கள் தோட்டங்களில் கைவிடப் பட்டுள்ளன. பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நிதியத்தின் (PHDT) ஊடாக மேற்கொள்ளப்பட்ட ஒரு சில சேமநல வேலைத்திட்டங்களும் நிதிப்பற்றாக்குறையால் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக தோட்டப்புற மக்களின் எதிர்காலம் அச்சத்துக்குள் தள்ளப்பட்டுள்ளது. பெருந்தோட்ட கட்டமைப்புக்குள் சுமார் 800000 பேர் வாழ்ந்தாலும், தோட்ட தொழிலாளரின் எண்ணிக்கை இன்று சுமார் 197000 என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இங்கு குறிப்பிட வேண்டிய முக்கிய விடயம் யாதெனில் சேமநல வேலைத்திட்டங்களில் தோட்டத்தில் தொழில் செய்வோருக்கே அதிக முக்கியத்துவம் வழங்கி வருவதாகும். தோட்டத்தில் தொழில் செய்யாத மக்களுக்கு தோட்ட முகாமைத்துவத்தால் பெரியளவிலான முக்கியத்துவம் அல்லது சேவைகள் வழங்கப்படுவதில்லை. ஆயினும் இவர்களும் இந்நாட்டின் பிரஜைகளாவர். இவர்களின் நலன்கள், அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு குறித்து சிந்திக்க வேண்டும். இதில் அரசாங்கத்திற்கு முக்கியப் பங்குண்டு. மறுபுறமாக கைவிடப்பட்ட தோட்டங்கள் மற்றும் அங்கு வாழும் மக்களின் நிலைக் குறித்து ஆராய வேண்டும். இவர்கள் எத்தகைய சமூக பாதுகாப்பும் அற்ற அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியாது நிரந்தர வருமானமின்றி நிச்சயமற்ற வாழ்க்கையினை அனுபவித்து வருகின்றனர். கைவிடப்பட்ட தோட்டங்களில் வாழும் மக்கள் தோட்ட முகாமைத்துவத்தாலும் அரசாங்கத்தாலும் ஓரங்கட்டப்பட்ட அல்லது கைவிடப்பட்ட மக்களாக வாழ்ந்து வருவது அதிகம் பேசப்படாத ஒரு விடயமாகும். தோட்டப்புறங்களில் அரச நிறுவனக்கட்டமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் விருத்தியடையாமையும் அரச சேவைகளை வழங்குவதில் தடையான அமைந்துள்ளது. மறுபுறமாக, தோட்டங்களில் காணப்படும் மரபு ரீதியான, இறுக்கமான நிர்வாகக் கட்டமைப்பு அரசாங்க சேவைகளை தடுத்துவிடுகின்றது. புவியியல் ரீதியான தனிமைப்படுத்தலும் அரச நிறுவனங்களின் சேவைகள் தோட்டங்களை சென்றடைய தடையாக உள்ளது. தோட்டங்களையும் கிராமங்களையும் இணைத்த வகையில் அரச நிறுவனங்களை அமைப்பதன் மூலம் இப்பிரச்சினைக்கு தீர்வு காணலாம்.

எல்லாவற்றுக்கும் அப்பால், மலையக அரசியல் தலைமைகளின், புத்திஜீவிகளின், சிவில் அமைப்புகளின் நீண்ட கால கோரிக்கையாக காணப்பட்ட மலையக அபிவிருத்திக்கான அதிகார சபை ஒன்றினை தாபிப்பதற்கான அனுமதியினை தற்போதைய அரசாங்கம் வழங்கியுள்ளது- இது எதிர்காலத்தில் செயல் வடிவம் பெறும் என்பது எமக்குள்ள நம்பிக்கையாகும். இது பெரிதும் வரவேற்கதக்க விடயமாகும். அதிகார சபையொன்று தாபிக்கப்படும் பட்சத்தில் அது அபிவிருத்திப் பணிகளை சீராகவும் செம்மையாகவும் மேற்கொள்ள உதவும். எந்த அரசாங்கம் பதிவிக்கு வந்தாலும் அதனை அழிக்க முடியாது -ஒரு நிரந்தர நிறுவனமாக காணப்படும். இன்று மலையக மக்களுக்கான அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கு அரச நிறுவனக் கட்டமைப்பொன்று இன்மையானது மிகப்பெரிய குறைப்பாடாகும். தற்போது இருக்கின்ற பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நிதியம் (PHDT) பெரிதும் ஊழல் மோசடிகள் மலிந்த இடமாகக் காணப்படுவதாகவும், இவ்வமைப்பின் மூலம் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் குறைந்த தரத்தினை கொண்டதாகவும், மக்களின் விருப்பங்களுக்கு அப்பாட்பட்டு காணப்படுவதாகவும் பொதுவில் விமர்சிக்கப்படுகின்றது. மேலும், இந்நிறுவனத்தை அழிக்க வேண்டும் என்ற பொதுவான கருத்தும் பரவலாகவே காணப்படுகின்றது. ஆகவே, அதிகார சபையொன்று வரும் பட்ச்சத்தில் அது நிச்சயமாக பல சாதகமான மாற்றங்களை ஏற்படுத்தும். இவ்வாதிகார சபையில் மலையகத்தை சேர்ந்தவர்கள் உயர் பதவிகளில் அமர்த்தப்பட வேண்டும் - அதேபோல் ஏனைய பதவி நிலைகளிலும் மலையக இளைஞர் யுவதிகள் நியமிக்கப்பட வேண்டும். அதன்மூலம் மலையக மக்களின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற் கொள்ளும் ஏகபோக உரிமையினைக் கொண்ட அமைப்பாக இது விளங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவுரை :

இக்கட்டுரையானது 70 வருட சுதந்திர இலங்கையில் மலையக மக்களின் சமூக உரிமைகளின் நிலையினைக் காட்டுகின்றது. இம்மக்களின் சமூக குடியுரிமையினைக் கட்டுப்படுத்தும் காரணிகளை விளக்குகின்றது. மேலும் அரசாங்கம் பாகுபாடற்ற பொதுச் சேவையினை வழங்க கொள்கை, சட்ட மற்றும் நிறுவன ரீதியான மறுசீரமைப்புகளை மேற்கொள்ள வேண்டியதன் தேவையினையும் காட்டுகின்றது. மலையக மக்களுக்கு ஆட்சி முறைக்கட்டமைப்புகளில் காட்டப்படுகின்ற பாகுபாடுகளை ஆராயும் போது ஒரு முடிவுக்கு வரலாம். அதாவது, அரசாங்கம் இம்மக்களுக்கு சட்ட பிரஜாவுரிமையினை வழங்கியப்போதும் அதன் பயன்களை முழுமையாக அனுபவிப்பதற்கு ஏற்ற சட்ட, நிர்வாக, கொள்கை ரீதியான சீர்த்திருத்தங்களை செய்வதில் இருந்து அரசாங்கம் விலகிக்கொண்டது எனலாம். நீண்ட காலம் அரச சட்டங்கள் மற்றும் நிர்வாக நிறுவனங்களின் மூலம் பாகுபாடுகளை அனுபவித்த ஒரு சமூகப்பிரவினர் சட்ட குடியுரிமையினைப் பெறும்போது அவர்கள் காலம் காலமாக பாகுபாடுகளை அனுபவிப்பதற்கு காரணமாகவிருந்த சட்டங்கள், கொள்கைகள் மறுசீரமைப்பது, நிர்வாக மறுசீரமைப்புகளை மேற்கொண்டு அம்மக்களை ஆட்சிமுறையில் உள்வாங்க நடவடிக்கை எடுப்பது பெரிதும் அவசியமாகும். ஆயினும் அத்தகைய ஏற்பாடுகளை இலங்கையில் மாறி மாறி வந்த அரசாங்கங்கள் மேற்கொள்ள வில்லை என்பது வருந்ததக்க விடயமாகும். ஆண்டுதோரும் சுதந்திர தினம் கொண்டாடப்படுகின்றது – ஆயினும், அச்சுதந்திரத்தின் உண்மையான பயனை, அதன் அர்த்தத்தினை முழுமையாக அனுபவிக்க முடியாத சமூகமாக காணப்படுகின்றனர் என்பது கவலைக்குறிய விடயமாகும். இது இலங்கையில் பெரும்பான்மை சமூகம் சுதந்திர தினத்தை ஆடம்பரத்துடன் கொண்டாடுவதனையும், அதேவேளை, சிறுபான்மை சமூகமான மலையக மக்கள் முழுமையான இலங்கைப் பிரஜை என்ற எண்ணம் ஏற்படாத நிலையில் வாழந்து வருவதனையும் காட்டுகின்றது. மலையக மக்களும் உண்மையான சுதந்திர தினத்தை அனுபவிக்க வேண்டுமாயின், அதற்கு அவசியமான கொள்கை, சட்ட சீர்த்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் - அவை முறையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அவை இதுவரைக்காலம் அனுபவித்த பாகுபாடுகளுக்கு நீதி வழங்குவதாக அமைய வேண்டும். இதற்காக விசேட நிறுவனக்கட்டமைப்புகளை, குறைதீர் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

இன்று நாட்டில் அரச மறுசீரமைப்புக்கான முயற்சிகள் இடம் பெற்று வருகின்றன -இவை மலையக மக்களை அட்சி முறைக்கட்டமைப்பில் முழுமையாக உள்வாங்குவதற்கான சட்டகத்தினை உருவாக்குவதாக அமைய வேண்டும். அரசியல் அதிகார பரவலாக்கத்துடன் இணைந்த வகையில் நிர்வாக அதிகாரப்பரவலாக்கத்தை மேற்கொள்ள வேண்டும். இத்தகைய உபாயங்களின் மூலம் மலையக மக்களும் முழுமையாக சமூக பிரஜாவுரிமையின் பயன்களை அனுபவிக்க வாய்ப்புண்டு. இவை எல்லாவற்றுக்கும் அப்பால் அரசாங்கத்தின் குறைந்த தரமும் இம்மக்கள் சமூக குடியுரிமையினை அனுபவிப்பதில் பெரிதும் செல்வாக்கு செழுத்துகின்றது. ஆகவே அரசாங்கத்தின் தரத்தினை முன்னேற்றுவது காலத்தின் தேவையாகக் காணப்படுகின்றது. அரசாங்கத்தின் தரம் (the quality of governenment) என்பது சில அடிப்படைத் தத்துவங்களைக் கொண்டுள்ளது – அந்தவகையில் பக்கசார்பின்றி நடுநிலையாக, நியாயமான முறையில் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற உயர் தத்துவத்திற்கு முன்னுரிமையளித்து வினைத்திறன் மிக்க வகையில் அரச நிறுவனங்களும் அதிகாரிகளும் சட்டத்திட்டங்களை, கொள்கைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் அதிகாரத்தினை பிரயோகித்தல் என்பதே இதன் அடிப்படைத் தத்துவமாகும். இதன் போது எத்தகைய தனிப்பட்ட விடயங்களையும் (இனம், மதம், மொழி, அரசியல், சாதி போன்ற) கவணத்தில் கொள்ளக்கூடாது என வளியுருத்தப்படுகின்றது. இவ்வெண்ணப்பாங்கு அரச அதிகாரிகளின் மன நிலையில் கட்டியெழுப்பப்பட வேண்டும். இதன் மூலம் அரசாங்கத்தின் தரத்தினை உயர்த்த முடியும் - அது மலையக மக்களும் சமூக குடியுரிமையினை சமமாக அனுபவிக்க வழி செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்தளைப் பிரந்தியமும் மலரன்பனின் படைப்புலகமும்

கோடிச்சேலைச் சிறுகதைத் தொகுப்பை முன்னிறுத்தி : சில அறிமுகக் குறிப்புக்கள்

பெ. சரவணகுமார் (விரிவுரையாளர், பேராதனைப்பல்கலைக்கழகம்)

இலங்கைத் தமிழ்ச் சிறுகதை வரலாறு எனும் பெருந்தொகுதிக்குள் மலையகச் சிறுகதை வரலாறு ஓர் உபபண்பாட்டுக் கூறாக இருந்து வருகின்றது. அவ்வாறு அமைவு பெறுவதற்கு அது தனக்கெனத் தனித்துவமான பண்புகளைக் கொண்டதாகவும், குறிப்பிடத்தக்களவு சிறுகதைகளை உள்ளடக்கியதாகவும் விளங்குகின்றமை முக்கியமான காரணமாகும். மலையகச் சிறுகதைகள் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையைக் களமாகக் கொண்டு வெளிவருகின்றமையும் அவற்றின் தனித்துவத்துக்கு முக்கிய காரணமாகும். அத்தோடு, இலங்கைத் தமிழ்ச் சிறுகதையின் பொருட்பரப்பை விரிவாக்கம் செய்ததிலும், தமிழ்ச் சிறுகதையின் அனுபவ வெளிப்பாட்டை விசாலித்ததிலும் மலையகச் சிறுகதைகளுக்கு முக்கிய இடம் உண்டு எனலாம்.

மலையகச் சிறுகதைகள் என்ற பொதுத் தளத்தில் அவற்றைச் சுட்டினாலும் அதற்குள்ளும் பல பிராந்திய அடையாளங்கள் முனைப்புப் பெற்றுள்ளன. இக்கதைகள் பெருந்தோட்ட வாழ்வுப் புலத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும் மலையகச் சிறுகதை வரலாற்றை நோக்கும் போது, இந்த பிராந்திய அடையாளங்களும் வேறுபாடுகளும் மேற்கிளம்பியுள்ளமையினை அவதானிக்க முடிகின்றது. ஒவ்வொரு பிராந்தியமும் தமக்கேயுரிய புவியியல் சூழமைவுகளைக் கொண்டு அமைகின்றது. இந்தப் புவியியல் சூழமைவுக்கேற்ற பல தனித்துவமான வாழ்க்கை முறைகளும் இடம்பெறுகின்றன. அவ்வகையில், மலையகச் சிறுகதைப் பரப்பில் பதுளைப் பிராந்தியக் கதைகள், சப்ரகமுவப் பிராந்தியக் கதைகள், மாத்தளைப் பிராந்தியக் கதைகள், கண்டிப் பிராந்தியக் கதைகள், நுவரெலியா பிராந்தியக் கதைகள் என்ற ரீதியிலான வகைப்பாடுகள் மேலெழுவதற்கும் காரணமாயின. அவ்வாறு பகுத்து நோக்கு வதற்கான சிறுகதைப் பரப்பையும் படைப்புவெளியையும் கொண்டிருக்கின்றன. இந்தப் பிராந்திய அடையாளங்களை உருவாக்கும் பிரதான அம்சமாக அமைவது கதாசிரியர்கள் சித்திரிக்கும் சமூகச் சூழலே எனலாம். இந்த சமூகச் சூழல் பற்றிய சித்திரிப்பே ஒவ்வொரு கதாசிரியரினதும் படைப்பாளுமையைக் காட்டிவிடுகின்றன. இவ்வகையான பிராந்திய அடையாளங்களை மலையகச் சிறுகதை வெளியில் மிக அழுத்தமாகப் பதிவுசெய்த பிராந்தியங்களுள் மாத்தளைப் பிராந்தியக் கதைகள் தனித்துவம் பெறுகின்றன.

மாத்தளைப் பிராந்தியத்திலிருந்து முகிழ்ந்த ஒருசில படைப்பாளிகள் இந்தப் பிராந்திய அடையாளத்தைத் தமது படைப்புவெளிக்குள் கொண்டுவந்திருக்கின்றார்கள். மாத்தளைப் பிராந்தியத்தின் வாழ்வியலை புனைகதை வெளிக்குள் சித்திரித்துக் காட்டியவர்களுள் மாத்தளை சோமு, மாத்தளை வடிவேலன், மலரன்பன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். மலையக இலக்கிய வரலாற்றில் மாத்தளைப் பிராந்தியத்தின் மண்மணத்தைக் கமழவிட்டவர்களாக இவர்களைச் சொல்லலாம். இவர்களது புனைகதை எழுத்துக்களே இந்த அடையாள உருவாக்கத்திற்கான சான்றுகளாகவும் அமைகின்றன. அவ்வகையில், மாத்தளை சோமுவின் அவன் ஒருவனல்ல (1989), நமக்கென்றொரு பூமி (1984), அவள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழத்தான் போகிறாள், அந்த உலகத்தில் இந்த மனிதர்கள், எல்லைத்தாண்டா அகதிகள், கண்டிச்சீமை (2017) முதலானவைகளும், மாத்தளை வடிவேலனின் கதைகள், மாத்தளை கார்த்திகேசுவின் வழி பிறந்தது முதலான புனைகதைப் பிரதிகள் மலையக இலக்கியப் பரப்பில் மாத்தளைப் பிராந்தியத்தின் வாழ்வியல் கோலங்களைப் பதிவுசெய்வனவாக அமைகின்றன. தமிழ்ச் சிறுகதை உலகில் மாத்தளைப் பிராந்தியக் கதைகளை படைத்தவர்களில் மலரன்பன் தனித்துவமானவர்.

மலையக இலக்கியப் பரப்பில் மலரன்பனின் படைப்புலகம் பல்வேறு வகைப்பட்டது. சிறுகதையாசிரியர், மெல்லிசைப் பாடலாசிரியர், தொகுப்பாசிரியர், மொழிபெயர்ப்பாளர் முதலான தளங்களில் இயங்கி வருபவர். இவ்வாறு பல துறைகளில் இயங்கி ஒவ்வொரு துறையிலும் தமது இலக்கிய முகத்தைக் காட்டினாலும் அவரது தனித்துவமான ஆளுமை அவரது சிறுகதைகளிலேயே வெளிப்படுகின்றது எனலாம். அதற்கான அடிப்படைக் காரணம் அவரது சிறுகதைகளின் படைப்புவெளியும், கதைசொல்லும் முறைமையும் ஆகும். இதுவரைக்கும் அவரது கோடிச்சேலை, பிள்ளையார் சுழி ஆகிய இரண்டு சிறுகதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன. இத்தொகுப்புகளுள் மலரன்பன் என்ற சிறுகதை ஆசிரியனின் படைப்பாளுமையை இலக்கிய உலகுக்கு அறிமுகப்படுத்திய தொகுப்பாக அமைவது அவரது கோடிச்சேலை என்ற சிறுகதைத் தொகுப்பாகும். இந்நூல் 1989 ஆம் ஆண்டு வெளிவந்தது.

கோடிச்சேலை என்ற சிறுகதைத் தொகுப்பில் அக்கினிக்குஞ்சுகள், கோடிச் சேலை, இலையுதிர் காலத்து மரங்கள், ஞானரதம், இவர்களும் மனிதர்கள், கறிவேப்பிள்ளை, மலர் வளையம், வானவில், உறவுகள், தார்மீகம், பார்வதி, சுயம்வரம் முதலிய பன்னிரெண்டு கதைகள் இடம்பெறுகின்றன. இக்கதைகளின் படைப்பு வெளிகள் பெரும்பாலும் மாத்தளைப் பிராந்தியத்தைச் சுற்றியே இயக்கம் கொள்கின்றன. அப்பிராந்தியத்துக்கேயுரிய சூழலையும், தொழில் முறைகளையும், மனிதர்களையும் வெளிக்கொணரும் படைப்புக்களாகவும் விளங்குகின்றன. இத் தன்மைகளே மலரன்பனின் படைப்புலக மாகவும் விரிகின்றது எனலாம்

கோடிச்சேலைத் தொகுப்பில் இடம்பெறும் முதலாவது கதை "அக்கினிக்குஞ்சுகள்" என்பதாகும். பெருந்தோட்டத்துறைக்குள் மேலெழுந்த தொழிலின்மை பிரச்சினையினால் மக்கள் எவ்வாறெல்லாம் பாதிக்கப்பட்டார்கள் என்பதையே இக்கதை வெளிப்படுத்துகின்றது. தொழிலின்மை வறுமையையும், உணவுக்காகப் போராட வேண்டிய நிலையையும் தோற்று விக்கின்றது. பசியின் கொடுமையில் சிக்கித்தவிக்கும் சிறுவர்களின் அவலநிலையை அக்கினிக்குஞ்சுகளாக வடிக்கிறார், ஆசிரியர். கண்டாக்டர் வீட்டு மரவள்ளிக் கிழங்குகளைத் திருடி, தமது பசியைப் போக்கவேண்டிய சூழலுக்குத் தள்ளப்பட்டவர்கள், மிகக் கொடூரமாகத் தாக்கப்படுகின்ற யதார்த்தத்தைக் கதை பதிவுசெய்கின்றது. மேலும், பெருந்தோட்டங்களை அண்டியுள்ள கொலனிகளில் கூலிவேலைச் செய்யும் பெருந்தோட்ட மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளையும் கதையின் ஓட்டத்துக்கேற்ப மலரன்பன் சித்திரிக்கின்றார்.

"எங்க வூட்டுக்கு அடுத்த வீட்டு ராமு அவங்க அம்மா கூட நாட்டுக்கு நெல்பொறக்க போயிட்டான்" சரோஜா கூறினாள்.

"நாட்டுல நெல் பொறக்கினா புடிக்க மாட்டாங்களா" சாமித்துரை கேட்டான்.

"வயல்ல நெல் அறுத்தோடன தப்பித் தவறி ஒவ்வொரு நெல் கெடக்கும் அத ஒன்னு ஒன்னா வயல்காரனுக்குத் தெரியாம பொறக்கி எடுத்துக்கிட்டு வருவாங்களாம். வயல்காரன் கண்டா நெல்ல புடுங்கிடுவானாம்".

இவ்வாறான சமுதாயச் சூழலைத் தமிழ்ச் சிறுகதை உலகுக்குக் கொண்டுவந்தவர்களுள் மலரன்பன் முக்கியமானவர். அக்கினிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குஞ்சுகள் கதையில் இடம்பெறும் பின்வரும் சித்திரிப்பும் கதாசிரியரின் சமுதாய நோக்கைக் காட்டுகின்றது எனலாம்.

"கேட்டுக்க சுப்பு நான் எதுக்கு தெரியுமா? மரவள்ளி உண்டாக்கினேன். தோட்டத்திலேயும் சாப்பாட்டுக்குச் சாமான் உண்டாக்கனுமின்னு கவண்மெண்ட்ல சொன்னாங்க தொர ஒவ்வொரு ஸ்டாப்பும் ஏதாவது உண்டாக்கினும்னு சட்டம்போட்டாரு. தொர கோவிச்சுக்கிருவாரென்றுதான் நான் மரவள்ளித் தோட்டம் போட்டேன். பிச்சக்கார பயல்களுக்கு திங்க இல்லேங்கிறதுக்காக நான் மரவள்ளித்தோட்டம் உண்டாக்க இல்ல....." என உறுமியபடி சோடியம் ஆர்சனைட் மருந்தை மீதியாய் நின்ற மரவள்ளித்தூரில் தெளிக்கத் தொடங்கினான்."

இக்கதையில் வரும் சிவராசா, வீரமணி முதலான சிறுவர்கள் அக்கினிக்குஞ்சுகளாக உருமாறும் சமுதாயச் சூழலை முன்னிறுத்துவது பாத்திரங்களின் உரையாடல்களில் வெளிப் படுகின்றது. "நான் கெட்டபோல் கொண்டு வந்திருக்கேன். நாய் வந்தால் மண்டையை ஒடைப்பேன் பயப்படாதீங்க" என்று சிவராசன் கூறுவதும், "வேலைக்காரன் இல்ல எவன் வந்தாலும் பயப்படாம ஒளிஞ்சி கிட்டு இதவுட்டு வீசினா வயிறு கிழிஞ்சு போயிடும்" என்று வீரமணி கூறுவதும் அக்கினிக்குஞ்சுகள் என்ற கதையின் தலைப்புக்கு மேலும் வலிமையூட்டுவதாகவும் அமைந்துவிடுகின்றது.

இத்தொகுப்பிலுள்ள கோடிச்சேலை, இலையுதிர் காலத்து மரங்கள் முதலான கதைகளும் வறுமையின் கொடுமையைக் கசியவிடுகின்றன. ஒரு சிலரின் நன்மைக்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் எவ்வாறு ஒரு சமுதாயத்தையே பாதிக்கின்றது என்பதையே இக்கதைகள் பதிவு செய்கின்றன. "இத்தொகுதியில் இடம் பெற்றுள்ள கதைகள், மலையகப் பிரதேசத்தையும் அப்பிரதேசத்திற்கென அமைந்த வாழ்க்கைச் சூழலையும் அச்சூழலில் தொழில் புரியும் மக்களை அழுத்தும் பிரதான பிரச்சினைகளையும் காட்டுவதை நோக்கமாகக் கொண்டவை. வளங்களும் வாய்ப்புக்களும் முறையாகப் பங்கிடப்படாத ஒரு சமுதாய அமைப்பில் வறுமை தோற்றுவிக்கும் அவலங்களும் முரண்பாடுகளும் போராட்டங்களும் காட்டப்படுகின்றன" (தில்லைநாதன் : 1989).

கோடிச்சேலைக் கதையில் நடமாடும் நடேசன், அஞ்சலை, சாமிக்கிழவி முதலான பாத்திரங்கள் வறுமையின் கொடுமையினால் தவிக்கின்றார்கள். இவர்கள் அனுபவிக்கும் வறுமை அவர்களே உருவாக்கிக் கொண்டதுமல்ல. அவர்கள் வாழுகின்ற சமுதாயச் சூழலே அதற்கு அடிப்படையாக அமைகின்றது. "மூணு நாளா அன்னந் தண்ணி ஆகாரமில்லாம கெழவி பெனத்திட்டு கெடந்திருக்கா. ஒரு பிடி சோறு குடுக்க நாதியில்ல. பட்டினி தான் கெழவிய கொன்னுபுடிச்சி" என்று கதாசிரியர் கூறுவதும், சாமிக்கிழவிக்குப் போட்ட கோடிச்சேலையைக் கட்டிக்கொண்டு அஞ்சலை நிற்பதும், இலையுதிர்காலத்து மரங்கள் கதையில் "மூனு நாளா பட்டினி கெடந்த பனிய லயத்து கறுப்பையாவுட்டு புள்ளைக ரெண்டு பசி தாங்க ஏலாம நேத்து காட்டுக்குபோய் என்னமோ காய்களை புடுங்கி தின்னுருக்குக நேத்து அந்திக்கு ரெண்டு புள்ளைக்கும் வாந்தியும் வைத்தாலையும் போயிருக்கு. விடிஞ்சதும் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகலாமின்னு என்னமோ கைமருந்து குடுத்திருக்காங்க. நடுச்சாமத்தில் மூத்தது செத்துப்போச்சு. மத்தது அந்தா இந்தான்னு இழுத்துக்கிட்டு இருக்கு... என்று சித்திரிப்பதும் தற்செயல் நிகழ்வல்ல என்பதை மலரன்பன் பதிவுசெய்கின்றார்.

மாத்தளைப் பிராந்தியத்தின் சமூக அடையாளங்களுள் ஒன்று மாத்தளைக் கோயில். அக்கோயிலை மையமாக வைத்துக்கொண்டு மலரன்பன் தீட்டும் சித்திரம் 'ஞானரதம்' என்ற கதையாக உருவாகின்றது. மாத்தளைத் தேர் பார்ப்பதற்குச் செல்லும் கந்தசாமியின் குடும்பத்தை வைத்துக்கொண்டு மனித மனத்தின் அசைவுகளை அலையவிடுகின்றார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர். இக்கதையில் வரும் சின்னவன் என்ற பாத்திரம் மறக்கமுடியாத பாத்திரமாக வார்க்கப்பட்டுள்ளது. ஒரு கால் ஊனமான சின்னவன் மாத்தளைத் தேர் பார்க்கச் சென்றபோது காணாமல் போய்விடுகின்றான். தந்தையான கந்தசாமியின் மூலமாகவே சின்னவனின் உடல் ஊனம் சுட்டிக்காட்டப் படுகின்ற அவலநிலை வாசகனை மௌனிக்கச் செய்துவிடுகின்றது. மனித உறவுகளுக்கிடையே முட்டிமோதிக் கொள்ளும் உணர்ச்சிகளை பதிவுசெய்யும் கதையாகவும் ஞானரதம் மிளிருகின்றது. ஞானரதம் புறத்தே ஓடுகிறதா அல்லது அகத்தே ஓடுகிறதா என்பதைச் சொல்லாமல் சொல்லும் கதையே மலரன்பன் ஓடவிடும் ஞானரதம் கதையாகும்.

மலையகச் சிறுகதைப் பரப்பில் மாத்தளைப் பிராந்தியக் கதைகளுக்குச் சிறப்பிடம் உண்டென்பதை அப்பிராந்தியக் கதைகளின் கதைக்களமும் வாழ்வுமுறைகளும் எடுத்து ரைக்கின்றன. மாத்தளைப் பிராந்தியத்தில் பெரும்பான்மை சமூகமும் வாழ்ந்து வருகின்றது. அவ்வகையில் பல்லின பண்பாட்டுச் சூழலிலிருந்து வெளிவரும் கதைகளாக மாத்தளைப் பிராந்தியக் கதைகளைச் சுட்டமுடியும். மலரன்பன் கதைகளிலும் இந்த பன்முகச் சமூக அடையாளங்களும் சமூகங்களுக்கிடையே நடைபெற்ற முரண்பாடுகளும் முதன்மை பெற்றுள்ளன. இலங்கையில் இனத்துவ முரண்பாடுகள் தீவிரமடைந்த காலங்களில் அதிகளவு பாதிக்கப்பட்ட பெருந்தோட்ட மக்கள் பற்றிய இலக்கியப் பதிவுகளை வெளிக்கொணந்தவர்களுள் மலரன்பனும் ஒருவர். இதற்கு அவரது தார்மீகம் என்ற கதையே மிகச் சிறந்த உதாரணமாக அமைகின்றது. இக்கதையின் சமூகப் பெறுமதியை பேராசிரியர் க. கைலாசபதி மேல்வருமாறு பதிவுசெய்வது சுட்டிக்காட்டத் தக்கது.

"இனக்குரோதம், வகுப்புவாதவெறி இவற்றின் மத்தியிலும் ஆங்காங்கு உழைக்கும் மக்களின் உணர்வு வர்க்க அடிப்படையில் தோய்ந்ததாக இருக்கமுடியும் என்பதையும் மலரன்பன் காட்டியுள்ளார். தார்மீகம் என்ற கதை, அஞ்சலைப்பாட்டியின் மனிதாபிமான தர்மத்தைச் சிறப்பாகக் காட்டும் அதேவேளையில், பொடி அப்புஹாமி என்ற சிங்களத் தொழிலாளியின் வர்க்க உணர்வையும் ஒரு மின்னற் கீற்றாகக் காட்டுவதாய் உள்ளது. "இந்தாப் பாருங்க இங்க உள்ளவங்க எல்லாம் தோட்டத்தில பாடுபட்டு கால்வயிறு, அரைவயிறு கஞ்சிகுடிக்கிறவங்க. ஒருபாவமும் செய்யாத இவர்கள ஒன்னும்செய்யவேனாம்..... நான் தமிழன் பக்கம் சேரலடா. நியாயம் பக்கம் சேர்ந்திருக்கேன்" என்று சிங்களக் காடையர் கூட்டத்திற்குக் கூறும் அப்புஹாமியும் நமது நாட்டு யதார்த்தத்தில் ஒரு அம்சம் என்பதை மலரன்பன் காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கதே" (கைலாசபதி, க. : 1980).

மலரன்பன் சித்திரித்துக்காட்டும் அப்புஹாமி போன்ற சிங்களப் பாத்திரங்களை மலையகச் சிறுகதைப் பரப்பில் காணமுடியாதுள்ளது. இனத்துவவாதம் கடந்த, மனிதத்தை நேசிக்கின்ற, படைப்பாளுமை மிக்க ஒரு படைப்பாளியே இவ்வாறான பாத்திரங்களை தமது படைப்புகளில் நடமாட விடமுடியும். இதற்கு நல்ல உதாரணம் மலரன்பனும் அவரது கதைகளுமாகும்.

மலையகச் சமுதாயத்தின் பொருளாதார உற்பத்தி உறவுகளில் றப்பர் தோட்டம், கோப்பித் தோட்டம், தேயிலைத் தோட்டம் முதலான தொழில்முறைகள் செல்வாக்குச் செலுத்தி வந்தன: வருகின்றன. இந்த பொருளாதார உற்பத்தி நடவடிக்கையினைப் பின்புலமாகக் கொண்டே அச்சமுதாயத்தின் சமூக, பண்பாட்டு வரலாறும் கட்டமைக்கப்பட்டது. ஆயினும், இலக்கிய உருவாக்கம் என்ற நிலையில் பார்க்கும்போது, கோப்பித் தோட்ட வாழ்வு முறைகள் குறித்த பதிவுகள், றப்பர் தோட்ட வாழ்வுமுறை பற்றிய பதிவுகள் ஒரு சிலவே வெளிவந்துள்ளன. அவ்வாறு வந்த ஒருசிலவற்றுள் மலரன்பனின் கதைகளுக்கு முக்கிய இடம் உண்டு. அவரது 'இவர்களும் மனிதர்கள்' என்ற கதை இதற்கு நல்ல உதாரணம்.

றப்பர் தோட்டத் தொழில் முறைகள் பற்றியும், அத்தொழில் முறைக்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படும் அதிகார முகங்கள் பற்றியும், அத்தொழில் முறைக்குள் காணப்படும் முரண்பாடுகள் குறித்தும் மிக அழுத்தமாகப் பதிவுசெய்யும் கதையாக 'இவர்களும் மனிதர்கள்' என்ற கதை விளங்குகின்றது. இக்கதை 'வீரமணி' என்ற பாத்திரத்தைச் சுற்றியே நகர்த்தப்படுகின்றது. றப்பர் மரம் வெட்டச் சென்ற வீரமணியின் மேல் றப்பர் மரமே விழுந்து விடுகின்ற துயர்தோய்ந்த வாழ்வை இக்கதைப் பதிவுசெய்கின்றது. இக்கதையில் வரும் ஆசிரியர் என்ற பாத்திரம் முற்போக்குக் குணமுடைய பாத்திரமாகவும், தொழிலாளர்களின் விடுதலையை அவாவி நிற்கும் பாத்திரமாகவும் அமைந்துள்ளமை மனங்கொள்ளத்தக்கது. இதனை ஆசிரியர் நிகழ்த்தும் உரையாடல்களே வெளிப்படுத்துகின்றன. "ஒரு தொழிலாளி வேலை செய்கின்ற நேரம் ஏற்பட்ட விபத்துக்கு ஆஸ்பத்திரிக்கு கொண்டு போக லொறி கொடுக்க மாட்டேன்னு சொன்னா அது எவ்வளவு பெரிய அநியாயம். என்கிட்ட இப்ப முப்பது ரூபாதான் இருக்கு. இதவச்சிக்கங்க. றோட்டுக்கு தூக்கிட்டு போய் எப்படிச்சரி பஸ்ஸில வச்சி, ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போங்க. நான் அந்திக்கு வாரேன்" என்று ஆசிரியர் பணத்தைச் சண்முகத்திடம் கொடுத்தார்," என கதாசிரியர் பதிவுசெய்கிறார்.

இக்கதையின் ஊடாக மலரன்பன் சித்திரித்துக்காட்டும் றப்பர் தோட்ட வாழ்வுப் புலம் மிக முக்கியமானது. சில எடுத்துக்காட்டுக்கள் வருமாறு:

"றோட்டின் இருமருங்கிலும் இலவம்பஞ்சு மரங்கள் வரிசையாய் அணிவகுத்து நிற்க, பஞ்சு மரங்களில் பற்றிப் படர்ந்துள்ள மிளகுக் கொடிகளில் சடை சடையாக மிளகுக் கதிர்கள் நிறைந்திருக்கின்றன. இறப்பர் மரங்களிடையேயுள்ள கோப்பி மரங்களில் மல்லிகைப் பூக்களைப் போல பூத்துக் குலுங்கும் கோப்பிப் பூக்களின் வாசம் கம்மென்று வீசுகிறது."

"பத்தாம் நம்பர் மலையிலுள்ள - வாளி வாளியாக இறப்பர் பாலைச்சுரந்த மரங்கள் - காயப்படாமல் வெட்டு சீவி, மண்பூசி மருந்து பூசி கெந்தகம் தெளித்து என்றெல்லாம் பாதுகாக்கப்பட்ட மரங்கள் கிழடு தட்டிப்போனதால் விறகுக்காகவேரோடு வெட்டப்படுகின்றன. பால் சுரக்காத பசுமாட்டை இறைச்சிக்காக வெட்டுவது போல!"

"பால்வாளி தலையிலும், ஒட்டுப்பால் குட்டிச்சாக்கு தோளிலுமாக ஸ்டோருக்கு ஆண்களும் பெண்களுமாய் மண்றோட்டில் திரும்பிக் கொண்டிருந்தவர்களுக்கு மலையில் ஐயாவந்து கொண்டிருப்பது தெரிகின்றது."

இவ்வகையான சித்திரிப்புக்கள் தமிழ்ச் சிறுகதைவெளிக்கும் புதுமையானவை. புதிய படைப்புவெளியைத் திறந்துவிடுபவை எனலாம்.

கோடிச்சேலைத் தொகுப்பில் காணப்படும் 'கறிவேப்பிள்ளை' கதையும் மிக முக்கியமானது. மலையகச் சூழலில் பொருளாதாரச் சுரண்டலும் உழைப்புச் சுரண்டலும் எவ்வாறு காணப்படுகின்றன என்பதற்கு நல்ல உதாரணம் கறிவேப்பிள்ளை கதையாகும். கதையின் தலைப்பே கதைப் பொருண்மையைக் காட்டிவிடுகிறது. மலையகச் சமூகச் சூழலில் கண்டாக்கையாவின் அதிகாரமுகத்தையும் உழைப்புச் சுரண்டலையும் வெளிப்படுத்திய கதையாக இதனைச் சொல்லலாம். கறிவேப்பிள்ளை கதையில் நடமாடும் பச்சைமுத்து என்ற பாத்திரம் ஒரு சமுதாயத்தின் குறிகாட்டியாகவும் அமைந்து விடுகின்றது.

மலரன்பனின் கோடிச்சேலைத் தொகுப்பில் இடம்பெறும் வானவில், உறவுகள், பார்வதி, சுயம்வரம் முதலான கதைகளும் கதாசிரியரின் படைப்பாளுமையையும் அவரது படைப்புலகத்தையும் காட்டுகின்றன. இவரது படைப்புலகம் வளமானதாக அமைந்திருப்பதற்கு முக்கிய காரணம் அவரது மொழிக்கையாளுகையும் கதைசொல்லும் முறைமையும் ஆகும். மலையகச் சிறுகதைகள் தமக்கேயுரிய உற்பத்தி உறவுகளின் பின்னணியிலிருந்து உருபெறுகின்றன. அந்த உற்பத்தி உறவுகளின் அடியாகவிருந்தே இலக்கிய படிமங்களும் உருவாக வேண்டும். மலையகத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதையாசிரியர்களாக முகிழ்ந்த பலரிடம் இல்லாத ஒரு சிறப்புக்கூறு மலரன்பன் கதைகளில் விரவிவந்துள்ளது. அதுதான் அவரது பிராந்தியத்துக்குரிய படிமங்களைக் கதையின் ஓட்டத்திற்கேற்ப பயன்படுத்தும் விதமாகும். அவரது கதைகளிலிருந்து சில எடுத்துக்காட்டுக்கள் வருமாறு:

"நிலவு ஊமையாய் காய்ந்துக் கொண்டிருந்தது. சலவைக்குப் பின்னர் சாயம் மங்கிப்போன பண்டிகை ஆடையிலுள்ள பூக்களைப்போல நட்சத்திரங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தெரிந்தன."

"இதைப்பற்றிப் பிரச்சினையைக் கிளப்பினால் 'ஒட்டுப்பாலாய்' இழுபடுமே ஒழிய, ஒரு நல்ல முடிவு வராதென்பதெல்லாம் பழைய கதைகள்!"

மஞ்சள் பூசி முகம் கழுவியிந்த வானத்தின் நெற்றியில் சூரியன் சிகப்புத் திலகம் வைக்க, நாணத்தினால் செம்மைபடரும் கீழ்வானம் தூரத்தில்... விரித்துவிட்ட மேகக்கூந்தலுடன் நீர் சொட்ட சொட்ட ஈரத்துகிலுடன் நிற்கும் தேயிலை மலைகள்.

மலையுச்சியில் வெள்ளித்தகடாய் மின்னும் தேயிலை ஸ்டோர், ஸ்டோரை ஒட்டி பெரிய டீ மேக்கர் பங்களா. அதிலிருந்து ஒரு இரண்டு முடக்குத்தள்ளி ஒரு சிறிய குன்றில் சிகப்பு வண்ணம் பூசப்பட்ட கூரையுடன் தனியாகத் தெரியும் சின்னபங்...களா..

இவ்வாறான சித்திரிப்புமுறை குறிப்பிட்ட கதையைக் கட்புலகலைநெறியாகக் கொண்டு வந்துவிடுகின்றது எனலாம்.

மலையகச் சிறுகதைப் பரப்பில் மாத்தளைப் பிராந்தியத்தின் மக்களையும் அவர்களது தொழில் முறைகளையும், வாழ்க்கை முறைகளையும், அவர்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளையும், அப்பிரச்சினைகளுக்கான சமுதாயச் சூழலையும் தமது படைப்பாளுமையினால் சிறுகதை வெளிக்குள் கொண்டு வந்ததில் மலரன்பன் முதன்மை பெறுகின்றார். கோடிச்சேலைச் சிறுகதைகள் ஊடாக மலரன்பன் சித்திரித்துக்காட்டும் சிறுகதை உலகம் மலையகச் சிறுகதைகளின் பன்முகத் தன்மையைக் காட்டுவனவாகவும் அமைந்து விடுகின்றது.

ஒவ்வொரு நாளையும் கொண்டாடு!

ஒவ்வொரு நாளையும் கொண் டாடு!
உனக்கென விடிந்தது பண் பாடு!
உலகத்தில் பிறந்திட் டாய் மனிதனாக
வாழ்க்கையை வாழு வாய் புனிதனாக

❋ ❋ ❋

கண்ணுண்டு உனக்கு பார்ப் பதற்கு
காதுண்டு இனியவை கேட் பதற்கு
கையும் காலும் இருக்கும் போது
கவலைகள் எதற்கு உழைப் பதற்கு?

❋ ❋ ❋

உணவும் உனக்குண்டு உண் பதற்கு
நீரும் உனக்குண்டு குடிப் பதற்கு
நிம்மதி கொண்டே வா ழாமல்
வீணாய் போவதும் சரியாய் சொல்!

❋ ❋ ❋

சிறுசிறு நிகழ்வுக்கு சிரித்து விடு!
குறுகுறு எண்ணங்கள் தவிர்த்து விடு!
உண்மையை மட்டுமே பேசி விடு!
நன்மையை மட்டுமே நினைத்து விடு!

❋ ❋ ❋

இருப்பதைக் கொண்டு மகிழ்ச்சி கொள்ளு!
மழலைப் போலே நீயும் துள்ளு!
நல்லோர் சிறந்திட மன் றாடு!
கவலைகள் மறையும் இன் றோடு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களின் ஊக்கத்தொழிற்பாட்டில் பெற்றோரினதும் ஆசிரியர்களினதும் செல்வாக்கு

செல்வி ஜெயராம் சசிகலா BA
ஆசிரியை

இன்றைய மாணவர்களே நாளைய உலகத்தை உருவாக்குபவர்கள். ஆகவே மாணவர்களின் எதிர்கால விருத்தியை பொருத்தமானவகையில் மேம்பாடடையச் செய்ய உதவுவது பாடசாலையின் கடமை யாகவும், பொறுப்பாகவும் உள்ளது. ஆகவே பாடசாலைகள் என்பவை சேவை நோக்கம் கொண்ட நிறுவனங்களாகும். குழந்தைகளை சமூக மயப்படுத்துவதற்காக முதிர்ச்சி பெற்ற மனிதர்களாக மாற்றுவதோடு சிறந்த உழைப் பாற்றல் மிக்க மனிதவளமாகவும் மாற்றுவதில் ஈடுபடுகின்றது.

இத்தகைய வாழ்க்கையில் தொழிற்பாட்டில் கற்றல் கற்பித்தல் என்பது அடிப்படையானதும் உன்னதமானதும் ஆகும். ஆகவே மாணவர்களை அவதானித்து நல்வழிப்படுத்தி அவர்களது திறன்களை வளர்த்தெடுப்பதில் அவர்களது அறிவத்தேவைக்கு மேலதிகமாக அன்பு, அரவணைப்பு, ஆதரவு போன்ற உணர்ச்சி தேவைகளை வழங்கி ஊக்கப்படுத்துவதிலும் ஆசிரியர்கள் முக்கியத்துவம் பெறுவதோடு பெற்றோர்களின் பங்களிப்பும் செல்வாக்கு செலுத்துகிறது.

மனித வாழ்க்கையில் எல்லா மனித நடத்தைகளும் இலக்கினை உடையவை. இலக்கை நோக்கிச் செல்ல ஊக்கல் உதவுகின்றது. ஊக்கல் என்பது "ஒருவரிடம் ஒரு தேவைக்காக ஆரம்பித்து அத்தேவை நிறைவடையும் வரை நடைபெறுகின்ற ஓர் உள, உடலியல் தொழிற்பாடு ஊக்கல் எனப்படுகின்றது." அந்தவகையில் ஊக்குவித்தல் என்பது ஒரு தேவையை நிறைவு செய்ய நம்மை முயலத்தூண்டும் நம் உள்ளிருந்து இயங்கும் உந்துதலாகும்.

உயிர்களின் நடத்தை ஊக்கிகளாக இயற்கையாக காணப்படும் இயல்பூக்கங்கள் உள்ளதாக மக்டுகல் குறிப்பிட்டார். மேலும் ஊக்கிகளின் அவசியம் பற்றி ஸ்கினர், சிக்மன்புரொய்ட், மாஸ்லோ போன்றோர் கூறியுள்ளனர். ஊக்குவித்தல் செயலாற்றல் சக்தியை அளிக்கின்றது. இலக்குகளை அடைய நோக்கங்களை நிறைவேற்ற உதவுகின்றது. ஆகையால் மாணவர்களுக்கு தமது கற்றலில் முழுத் திறன்களையும் பயன்படுத்தி ஆர்வத்துடன் ஈடுபட ஊக்குவித்தல் பயன்படுகின்றது.

ஊக்கத்தின் இயல்புகள்:

1. ஊக்குவித்தல் கற்றல் செயன்முறைக்கு சக்தியை அளிக்கின்றது.
2. சாத்தியமான வெற்றிகரமான நடத்தை முறைகளுக்கு வழிகாட்டுகிறது.
3. ஊக்கல் இலக்கினை விரைவாக அடைய நெறிப்படுத்துகின்றது.
4. ஊக்கம் ஒருசெயலை ஆரம்பிக்க உந்துகிறது. அதுவே தொடர்ந்து செய்யவும், தொய்வில்லாது முடிக்கவும் துணை நிற்கின்றது.

ஊக்கிகளின் வகைகள் :

1. உடல் தேவைகளுடன் இணைந்த ஊக்கிகள் : பசி, தாகம், சுவாசம், நித்திரை, பாலுணர்வு.
2. உளவியல் ஊக்கிகள் - இடைவினை ஊக்கிகள் : காப்புணர்ச்சி தேவைகள், குடும்பம், சமவயது குழுவினரின் ஏற்பு, பாராட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. சமூக தேவைகளால் எழும் ஊக்கிகள்: இவை தனித்தன்மை வாய்ந்த ஆளுமையினால் தோன்றுபவை. தற்கருத்து, இலக்கு, விழுமியங்கள், கவர்ச்சிகள் தொடர்பான ஊக்கிகள்.

4. அடைவு ஊக்கிகள் : ஒவ்வொரு மனிதரும் எல்லா செயல்களிலும் சிறப்புமிக்க உயர் சாதனையை அடைய முற்படுதல், தன்மதிப்பு, சமுதாயத்தில் போட்டி.

ஊக்கலில் செல்வாக்குச் செலுத்துபவை பாடசாலைக் கவின்கலை.

பிள்ளைகளின் தேவைகளை கவனிக்கும் வகுப்பறைச் சூழல் எல்லோரையும் பெறுமதி மிக்கவராக மதிப்பிடுதல் சிறந்த கற்றல் - கற்பித்தல் சூழலை ஏற்படுத்தல் பல்வேறு பணிகளுக்கும் ஊக்கல் வழங்குதல். அவசியமான ஒன்றாக காணப்படுகிறது. ஆகவே வகுப்பறையிலே மாணவர்களுக்கு வழங்கப்படும் ஊக்கம் அக ஊக்கம், புற ஊக்கம் என இரண்டு வகைப்படும். ஒரு மாணவனிடம் இருந்து உள்ளார்ந்த ரீதியாக தோன்றும் எண்ணங்கள், ஆசைகள், விருப்பு வெறுப்புகள், தேவைகள், மனப்பாங்குகள், வேலைகள் போன்ற உணர்வு ரீதியான காரணிகள் அக ஊக்கல் எனப்படும். பெற்றோர்களினாலும் ஆசிரியர்களினாலும் வழங்கப்படும். புகழ்ச்சி, பாராட்டுதல், பரிசு வழங்குதல், தட்டிக்கொடுத்தல், குறைகூறல், தண்டனை வழங்குதல், மற்றவர்களின் விருப்பங்கள் என்பன ஒரு மாணவனுக்கு வெளியிலிருந்து கிடைக்கும் புற ஊக்கங்கள் எனப்படும்.

அதனடிப்படையில் தண்டனை வழங்குவதும் சிலவேளைகளில் ஊக்கியாக அமைகின்றது. பொருத்தமற்ற நடத்தைகளை இல்லாமல் செய்வதற்கும் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலைநிறுத்துவதற்கும் பிறவாழ்வான நடத்தைகளிலில் இருந்து காப்பாற்றுவதற்கும் தண்டனை சிறந்த நுட்பமாக பயன்படுகின்றது. இருப்பினும் வழங்கப்படும் தண்டனைகள் ஊக்குவிப்பை ஏற்படுத்தவேண்டுமே தவிர மாறாக தண்டனை வழங்கும் ஆசிரியர்கள், பெற்றோர்கள் மீதும் கற்றல் செயற்பாட்டின் மீதும் வெறுப்பை ஏற்படுத்துவதாக அமையக்கூடாது. மேலும் விலங்குகளின் நடத்தையிலும் சூழலுக்கு ஏற்ப வேறுபாடுகள் இருக்கின்றன. அவ்வாறே மனித இயல்பூக்கங்களும் சூழலுக்கேற்ப மாற்ற மடையக்கூடிய தன்மை கொண்டன.

மனிதனுடைய அறிவு, அனுபவம் ஆகியன இயல்பூக்கங்களை மாற்றியமைத்துள்ளன. நுண்ணறிவு, சிந்தனை ஆகியனவும் மனித நடத்தைகளை கட்டுப்படுத்தும் என்று இயல் பூக்கக் கொள்கையாளர்கள் கூறுகின்றனர். குழந்தை பிறந்ததும் எல்லா இயல்பூக்கங்களும் முழு வலுவுடன் தொழிற் படுவதில்லை எனவும் சில இயல்பூக்கங்கள் குழந்தைகள் வளர்ச்சிப் போக்கில் ஒரு பருவத்தில் வலுப் பெறுவனவாகவும் வேறு பருவத்தில் வலு குன்றுவனவாகவும் அமைகின்றன. ஒவ்வொரு பிள்ளையிடமும் பல்வேறு வகையான விசேட திறன்கள் காணப்படுகின்றன. நடனம் ஆடுதல், விளையாட்டுக்களில் ஈடுபாடு, சித்திரம் வரைதல், கவிதை எழுதுதல், பாட்டுப் பாடுதல் போன்றனவாகும். சில பிள்ளைகள் கற்றலில் மட்டுமே ஈடுபாடு காட்டுவார்கள். ஒவ்வொரு பிள்ளையிடமும் இருக்கும் விசேட திறன்களை இனங்காண்பதும் அவற்றை ஊக்குவிப்பதும் பெற்றோர்களினதும் பாடசாலை அதிபர், ஆசிரியர்களினதும் கடமையாகும்.

எல்லாப் பெற்றோர்களினதும் எதிர்பார்ப்பு தங்களது பிள்ளைகள் ஒரு வைத்தியராக அல்லது பொறியியலாளராக அல்லது விரிவுரையாளராக வரவேண்டும் என்பதாக அமைகின்றதே தவிர பிள்ளைகளின் உண்மையான விருப்பு வெறுப்புக்கள், பிரச்சினைகள் என்பவற்றை விளங்கிக் கொள்வது இல்லை. பிள்ளைகள் சுயகற்றல், ஆர்வம் எதனையும் கண்டுகொள்ளாது வெறுமனே கௌரவம் எனும் மாய வலைக்குள் நின்று பிறருக்காக வாழும் பொதுவாழ்க்கைக்கு அடிமையாகின்றனர். மேலும் பிள்ளைகள் எத்துறையை விரும்புகின்றார்கள் என்பதை அறிந்து ஊக்குவிப்பதில்லை. மாறாக அவர்களின் விருப்பங்களை பிள்ளைகள் மீது திணிக்கின்றனர்.

அது அவர்களுக்கு சுமையாக அமைகின்றது. இதன் காரணமாக பிள்ளைகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோரின் ஆசைகளுக்கு இணங்க கடமைக்காக கற்றலில் ஈடுபடுகின்றார்களே தவிர முழுமையாக விருப்பத்துடன் ஈடுபடுவதில்லை. அதனால் அவர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாக்கப்படுவதுடன் பெற்றோரின் ஆசையும் நிராசையாகிறது. இதனால் குடும்பத்தில் சண்டை சச்சரவுகள், பெற்றோரை விட்டுப் பிரிந்து செல்லுதல், தற்கொலை, போதைவஸ்துக்கு அடிமையாதல் என்பன ஏற்படுகின்றன.

பாடசாலைக்கும் வீட்டுக்கும் தொடர்பு இருக்க வேண்டும். வீட்டில் பிள்ளைகள் எவ்வாறு செயற்படுகின்றார்கள் எவ்வாறான விடயங்களில் ஆர்வத்துடன் ஈடுபடுகின்றார்கள் என்று ஆசிரியர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். அதே போன்று பாடசாலையில் எவ்வாறு செயற்படுகின்றார்கள் என்று பெற்றோரும் தெரிந்துகொள்ள வேண்டும். இதற்கு ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் இடையில் பிள்ளைகள் கற்றலில் காட்டும் ஈடுபாடு அவர்கள் ஈடுபாடு காட்டும் ஏனைய விடயங்கள் தொடர்பாக அறிந்து கொள்ள இலகுவாக இருக்கும்.

சில பெற்றோர்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை செலுத்துவது குறைவு. பிள்ளைகள் ஏதாவது ஒரு செயலைச் செய்துகாட்டும் போது அதனைப் புறக்கணித்துவிடுகின்ற நிலையும் உள்ளது. அதாவது ஒரு பிள்ளை சித்திரம் வரைந்து காட்டும்போது, பாடல் பாடும் போது பெற்றோர்கள் அதனை ஆர்வத்துடன் பார்ப்பதோ, கேட்பதோ இல்லை. மாறாக நான் கதை பார்த்துக் கொண்டிருக்கிறேன் இப்போது என்னால் முடியாது பிறகு பார்க்கின்றேன் கொண்டுபோய் வை என்று சொல்லும்போது அங்கு பிள்ளையின் ஆர்வம் மழுங்கடிக்கப்படுகின்றது. இதனால் பிள்ளைக்கு அத்துறை சார்ந்த ஈடுபாடு குறைவடைகின்றது. இதனைப் போன்றே பாடசாலையிலும் ஆசிரியர்கள் மாணவர்களின் திறன்களை அறிந்து அதற்கு ஏற்றவகையில் அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

மூவிரண்டு அகவைதனில் முந்நூறு ஆசை கொண்டு மனம் நிறைந்த ஆர்வத்துடன் பள்ளி வரும் அரும்புகள் பதின்மூன்று ஆண்டுகள் பள்ளிப் படிப்பை நிறைவுசெய்து பயனற்றவனாய், பக்குவமாய் வெளியேற யார் காரணம்? வெறும் காகிதத்தை மட்டும் கொண்டு வாழ்வில் தோற்றுப் போனவனாய், கையாலாகதவனாய் சமூகத்தில் புறந்தள்ளப்படுவதற்கு வழி சமைக்காதவர்களாய் உருவாக்குவதோடு வாழ்வில் வெற்றி பெறுவது மட்டும் அவர்களது நோக்கமாக இல்லாமல் தொடர்ந்தும் வரும் தோல்விகளையும் உற்சாகம் குறையாது ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தையும் வளர்க்கவேண்டும்.

"நாம் விழாமலே வாழ்ந்தோம் என்பதில் அர்த்தம் இலை. வீழ்ந்த பொழுதுகளில் எல்லாம் எழுந்து நிற்கின்றோம் என்பதில் தான் எமது பெருமை தங்கியிருக்க வேண்டும்"

எம் குழந்தை சேற்றையும் புழுதியையும் பூசிக்கொண்டிருந்தால் அதை கழுவி மடிமீது அமர்த்த வேண்டிய கடமை எமதல்லவா? ஆகவே, எமது எதிர்கால சந்ததியினராகிய மாணவரை பெற்றோர் வெறுமனே பெற்றோர்களாக அன்பு செய்தல் மட்டுமன்றி அவர்களை ஊக்குவிப்பவர்களாகும். ஆசிரியர்கள் வெறுமனே ஆசிரியர்கள் கல்வியறிவூட்டுவதுடன் நின்று விடாது அவர்களின் தனித்திறமைகளை கண்டு அவர்களை ஊக்குவிப்பதோடு அவர்களின் கற்றல் வெற்றிக்கு பங்களிப்பு செய்கின்றவர்களாக மாறவேண்டும். அப்போதே எம்மால் பல ஆற்றல் நிறைந்த மாணவச் செல்வங்களை உருவாக்க முடியும்.

அன்பின் மூலமாகச் செய்யப்படும்
ஒவ்வொரு செயலும்
மகிழ்ச்சியை கொண்டு வந்தே தீரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக இலக்கியமும் சி. வி. வேலுப்பிள்ளையும்

இராகலை மைக்கல் பன்னீர்செல்வம் M.A.
விரிவுரையாளர், பேராதனை தேசிய கல்வியற் கல்லூரி

மலையக இலக்கியத்தின் சமூக பின்புலம்

இலங்கையில் ஆங்கில காலனித்துவ ஆட்சியின் விளைவாக பெருந்தோட்டப் பயிர் செய்கைகள் உருவாகின. இந்நிலைமை பிரித்தானிய ஆட்சிக்குட்பட்ட பல நாடுகளிலும் தோற்றம் பெற்றது. குறிப்பாக தேயிலைத் தோட்டங்கள் (1816), கரும்புத் தோட்டங்கள் (1837), இறப்பர் தோட்டங்கள் (1875) என அவர்கள் பெருந்தோட்டங்களை அறிமுகப் படுத்தி தமது பொருளாதார வளங்களைப் பெருக்கலாயினர். இத் தோட்டங்களில் வேலை செய்வதற்கென குறைந்த கூலி பெறும் தொழிலாளர்களை தேடினர். அதன் விளைவாக இந்தியாவில் இருந்து இக் கூலிகளை பெற்றுக் கொள்வதற்கு அவர்களுக்கு இலகுவாயிற்று. இதனடிப்படை யில் பெருந்தோட்ட தொழிலுக்கான கூலிகள் இறக்குமதி செய்யப்பட்டனர். *Ceylon Reporton Constitutional Report London 1994 - Page 34).



தம் வறுமையைப் போக்க வந்த இத் தொழிலாளிகள் இலங்கையில் மலைநாட்டுப் பகுதிகளில் குடியேற்றப்பட்டதோடு பல்வேறு சொல்லொணத் துயரங்களுக்கும் ஆளாகினர். மனித வாழ்க்கைக்கு தேவையான அடிப்படை வசதிகள்கூட இல்லாத நிலையில் பலர் நோயினாலும் பட்டினியாலும் காலநிலை சீர்கேட்டாலும் இம் மண்ணிலேயே மாண்டும் போனார்கள். இத்தகைய வரலாற்று துயரங்களை அனுபவித்த ஒரு இனம் இந்நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் கடந்த இருநூறு வருடகாலமாக பங்களிப்பை நல்கி வருவதுடன் பல்வேறு வகையில் உழைப்புச் சுரண்டலுக்கும் உள்ளாகி வருகின்றனர்.

இவர்களுக்கான கல்வி, அரசியல், குடியுரிமை போன்றவற்றில் நீண்டகாலமாகவே பாகுபாடு காட்டிவந்த நிலையிலும் பேரினவாதத்தின் செயற்பாட்டாலும் தேசிய இனத்துக்கும் இவர்களுக்குமான இடைவெளி அதிகரித்தே வந்துள்ளது. தோட்டக்காட்டான், மலைவாழ் இனம், மலைநாட்டு மக்கள், இந்திய வம்சாவழியினர் என்ற பல பெயர்கள் இவர்களை குறிக்க பயன்படுத்தப்பட்டதோடு இன்று மலையக மக்கள் என்ற பெயரே இவ்வினக் குழுமத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது.

இந்த இருநூறு ஆண்டு கால இம் மக்களின் வரலாற்றில் மூன்று வாழ்வியல் பண்புக்கூறுகளை தரிசிக்க முடிகிறது.

1. தமிழ் நாட்டில் இருந்து வந்தபோது இருந்த வாழ்க்கை முறையும் பண்பாட்டுக் கூறுகளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. நூற்றாண்டு கால வாழ்க்கையின் அடிப்படையில் ஏற்பட்ட நிலைமாறு பண்பாட்டுக் கூறுகள்.

3. இன்றைய நிலையில் மலையக மக்களின் தனித்துவமான பண்பாட்டுக் கூறுகள்.

மலையக இலக்கியத்துக்கான அரசியல் பின்புலம்:

இந்தியாவில் இருந்து ஏனைய நாடுகளுக்கு கூலிகளாக சென்றவர்கள் தொடர்பாக 1923 ஆம் ஆண்டில் இந்திய அரசாங்கம் இயற்றிய 1922 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க தொழிலாளர் சட்டத்தின்படி இத் தொழிலாளர்களை கவனிப்பதற்கான முகவர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்றும், அவர்கள் இத் தொழிலாளிகள் தொடர்பான நலனை கவனிக்க வேண்டும் என்றும் இவர்கள் குறித்த நாட்டிற்கு தொழிலுக்காக கொண்டு செல்வது கொண்டு வருவது இலவசமாக அமைய வேண்டும் என்றும் கூறியபோதும் இது ஒரு சட்டமாகவே மட்டும் இருந்துவிட்டது. தம் சமூகத்தினராலேயே (முகவர்கள்) இவர்கள் வஞ்சிக்கப்பட்டது மிகப் பெரும் கொடுமையாகும். இவர்களின் அடிப்படை உரிமைகள் மட்டுமன்றி உழைக்கும் கூலியைகூட முழுமையாக பெற்றுக்கொள்ள முடியாதவர்களானார்கள். இவர்களுக்கான மருத்துவச் சட்டம் (1912), கல்விச் சட்டம் (1920), தொழிலாளர் நலன்புரிச் சட்டம் (1921), சம்பளச் சட்டம் (1927) போன்ற சட்டங்களும் இவர்களுக்கு ஏட்டிலேயே அமைந்தது.

இலங்கை 1948 ஆம் ஆண்டு சுதந்திரமடைந்த போது சுதந்திர இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்தில் இம் மக்களின் பிரஜா உரிமை பறிக்கப்பட்டது. 1948 ஆம் ஆண்டு பிரஜா உரிமை சட்டத்தின் படியும் 1949 ஆம் ஆண்டு இந்திய பாகிஸ்தானிய பிரஜா உரிமை சட்டத்தின்படி இம்மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. "இம் மசோதா சர்வஜன வாக்குரிமைக்கு பாரதூரமான விளைவு. எதிர் காலத்தை வேரறுக்கும் வண்ணம் இனவாத மண்வெட்டியால் தோண்டப்பட்ட ஒரு குழி" என டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா (1948) வும், "இம் மசோதா இனவாதத்தின் தலையிலே இக் கொள்கைக்கு உரு கொடுக்கப்பட்டு தனிச்சிறப்பு தரப்பட்டுள்ளது. இந்த நாட்டில் அவர்கள் பல தலைமுறைகளாக வாழ்ந்து வருகின்றனர் என்பதையும் இந்த மக்கள் பிரஜைகளாகும் உரிமையில் இருந்து தள்ளி வைக்கப்பட்டுள்ளார்கள். இம் மசோதாவின் மூலம் தமது உயிரையே அர்ப்பணித்த இந்த மக்களின் பெற்றோர்களின் எலும்புகளும் இங்கே புதைக்கப்பட்டுள்ளது. இந்த நாட்டின் முதலாளித்துவ சக்திகளின் மேன்மைக் காகவே என்பது வெளிப்படை" என டாக்டர் என். எம். பெரேராவும் வாதிட்டபோதும் பேரின ஆட்சியார்களின் காதில் அது விழவில்லை.

1935 இல் இருந்து இம்மக்களின் நிலத்தை அபகரிக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட குடியேற்றங்கள் இம் மக்களின் செறிவை குறைக்க மேற்கொள்ளப்பட்ட சதியாகும். 1956 இல் கொண்டுவரப்பட்ட தனிச்சிங்கள சட்டம் 1960 ஆம் ஆண்டுகளில் தேசியமயமாக்கல் என்ற ரீதியில் ஏற்படுத்தப்பட்ட சிங்களமயமாக்கம், 1964 இல் மேற்கொள்ளப்பட்ட சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் மூலமாக 500,000 பேர் இந்தியாவிற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பி அனுப்பப்பட்டமையும் இம் மக்கள் மீது விழுந்த மிகப் பெரிய அரசியல் அடிகளாகும். இத்தகைய சட்டங்கள் இம்மக்களை மேலும் மேலும் அரசியல் அநாதைகளாக்கும் முயற்சி என்றே கொள்ளவேண்டும்.

1972 ஆம், 1974 ஆம் ஆண்டுகளில் கொண்டுவரப்பட்ட நிலச்சீர்திருத்தம் மற்றும் 1983 ஆம் ஆண்டின் இனக்கலவரம், மற்றும் தொழிற்சங்க ரீதியான சுரண்டல், ஒடுக்கு முறைகள் என்பன இம் மக்களின் வாழ்வியலை இழி நிலைக்குத் தள்ளின.

மலையக இலக்கியம் தோற்றமும் வளர்ச்சியும்:

200 வருடத்திற்கு மேற்பட்ட காலம் இம் மண்ணில் தம் வாழ்வியலை கொண்டு நகர்த்தும் இம் மக்களின் துயரங்கள் தோய்ந்த வாழ்க்கை முறையை சித்தரிக்கும் பல இலக்கியங்கள் தோற்றம் பெற்றுள்ளன. குறிப்பாக "ஸிலோனில் இந்தியத் தொழிலாளர்கள்" என்ற ஜனமித்திரன் கட்டுரை (25. 08. 1919) இம் மக்களின் துயர்நிறைந்த வாழ்வை அப்பட்டமாக எடுத்துக் கூறுகிறது. மலையக இலக்கியம் ஒரு நூற்றாண்டு காலமாக வாய்மொழி மூலமான நாட்டாரியலாகவே அமைந்தது. இந்நாட்டார் பாடல்கள் பல காலத்தால் அழிந்து போனாலும் அவற்றில் பல இலக்கிய ஆர்வலர்களால் ஆவணப்படுத்தி பேணி பாதுகாக்கப்பட்டுள்ளன. இதற்குப் பின்னான மலையகத்தின் பல்பரிமாண ஆளுமை கொண்டதாக தோற்றம் பெறுவதைக் காணலாம். இத்தகைய இலக்கியங்களைப் படைத்த படைப்பாளிகளை மூன்று பிரிவுக்குள் உள்ளடக்கலாம். அவர்கள்:

1. மலையக மண்ணிலேயே பிறந்து வாழ்ந்து இம் மண்ணை நன்கறிந்த படைப்பாளிகள்.
2. மலையகத்திற்கு வெளியிலிருந்து பல்வேறு தேவை நிமித்தம் இம் மண்ணில் வாழ்ந்த படைப்பாளிகள்.
3. மலையகத்திற்கு வெளியில் இருந்து உணர்ந்து இலக்கியம் படைத்த படைப்பாளிகள்.

இத்தகைய மூன்று நிலைகளிலும் நின்று இலக்கியம் படைத்த படைப்பாளரின் இலக்கியங்களில் இரண்டு விடயங்கள் வெளிப்பட்டு நிற்பதை அவதானிக்க முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. மக்களின் வாழ்க்கையை வெளிப்படுத்திக் காட்டுவது

2. சமூக மாற்றத்தை ஏற்படுத்துவது.

இந்நிலையில் மலையகத்தின் முதலாவது இலக்கியமாக அறிஞர் சித்திலெப்பை எழுதிய அசன்பேயுடைய சரித்திரம் (1885) எனும் நாவலைக் கொள்ளவேண்டும். எனினும், இது மலையகம் தொடர்பான ஒரு கதையாக இல்லாமல் வேற்று நாட்டு இளவரசன் ஒருவரின் கதையாக இருப்பதால் இதனை முதலாவது மலையக நாவலாக கொள்ள பெரும்பாலானவர்கள் உடன்படுவதில்லை. மலையக இலக்கியத்தின் ஆரம்ப கருத்தாவாக கோ. நடேசஐயரயே சுட்ட வேண்டியுள்ளது.

எனினும், ஜேம்ஸ்மில், மேஜர் வோர்பஸ், லெப்டினன்ட் கெம்பல், பென்னட் ஜேம்ஸ், செவ்கோர்க், வில்லியம் விருட்டோன், சேமுவெல் பேக்க்ர், வில்லியம், ஸ்பீன் போன்றோர் 1920 க்கு முன் மலையகத்தின் அழகை வர்ணித்து பல கட்டுரைகள் எழுதியுள்ளனர். இவைகளே ஆங்கிலேயர்கள் பெருவாரியாக இலங்கைக்கு வர காரணமாய் அமைந்தது என சாரல் நாடான் கூறுவார்.

நிர்வாகம் செய்த ஆங்கிலேயர் தொழிலாளர்களுடன் பேசுவதற்கு ஏற்றவகையில் சில நூல்களும் வெளியாகின. பொதுவாக இத் தொழிலாளர்கள் பேசும் பேச்சினை கூலித்தமிழ் எனவே அவர்கள் அடையாளப்படுத்தினர். இதனை ஆங்கில நிர்வாகிகளே புத்தகங்களையும் எழுதினர்.

அதன்படி அலிக்பேர் குசனின் "இங்கே வா", மார்க்ஸ் சுமிதின் "அறிவு", டி. ஏ. வில்கினின் "அடேயப்பா" போன்ற கூலித்தமிழ் சிற்றேடுகள் வெளியாகின.

மலையக இலக்கிய வரலாற்றில் மலையக மக்களின் மொழிகள் மிக நீண்ட காலத்துக்கு பின்பே அங்கீகாரம் பெறுவதைக் காணலாம். இதன் பரிமாண வளர்ச்சியை பின்வருமாறு நோக்கலாம்.

1. கூலித்தமிழ் - 1930 வரை

2. தோட்டக்காட்டுத் தமிழ் -1930- 1970 வரை

3. மலையகத் தமிழ் 1970 களுக்குப் பின்

இத்தகைய மொழிப் பிரிப்பு வர்க்க அடிப்படையை அடிப்படையாகக் கொண்டது. ஆளும் வர்க்கம் தன் மொழியை உயர்வாகக் காட்டவும் தொழிலாளி மொழி கீழ்தரமானது என்பதையும் காட்டவே இத்தகைய பிரிப்பு முறை அடைந்தது. தொல்காப்பியர் காலத்திலும் உயர்ந்தார் என்று சுட்டப்பட்ட மேட்டுக்குடிகளின் மொழியை தீந்தமிழ் என்றும் சேரிப்புற மக்களின் மொழியை கொடுந்தமிழ் எனவும் வகைப்படுத்தினார் என்பது மனங்கொள்ளத் தக்கது.

1930 ஆம் ஆண்டு வெளியான புதுமைப் பித்தனின் துன்பக் கேணி எனும் சிறுகதை - மலையக மக்களின் அவல வாழ்வை அப்பட்டமாகச் சித்தரித்த அற்புதமான சிறுகதை எனலாம். கோ. நடேசஐயரின் இராமசாமி சேர்வையின் சரிதம் எனும் சிறுகதையும், அவரின் தொழிலாளர் வாழிப்பு பாடல்களிலும் மீனாட்சி அம்மையாரின் பாடல்களும் மலையக இலக்கியத்தினில் ஆரம்பமாக அமைந்தன. லங்கா மித்திரன் (1916), ஜன மித்திரன் (1918), தேசமித்திரன் (1921), தேசபக்தன் (1924), இலங்கா இந்தியன் (1928), ஜனநேசன் (1928) பத்திரிகைகளும் தோற்றம்பெற்ற வகையில் மலையக இலக்கியத்தின் படிமுறை வளர்ச்சியை நான்கு காலகட்டங்களாக நோக்குவது பயனுடையதாகும் :

1. நாட்டார் இலக்கியங்களின் காலம் (1820 - 1920)
2. இலக்கிய எழுச்சிக் காலம் (1920 - 1950)
3. இலக்கிய மறுமலர்ச்சிக் காலம் (1950 - 1980)
4. புதிய பரம்பரையினரின் தோற்றக் காலம் (1980 க்குப்பின்)

மேற்கூறப்பட்ட நான்கு காலகட்டங்களில் நாட்டார் இலக்கியம் தோற்றம்பெற்று வளர்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தை நாட்டார் இலக்கியங்களின் காலம் என்றும் (1820 - 1920), கோ. நடேசஐயர் காலத்தை (1920 - 1950) இலக்கிய எழுச்சிக் காலம் என்றும், சி. வி. வேலுப்பிள்ளையின் படைப்புகள் மற்றும் நாவல், சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் என மலையக இலக்கியத்தில் தோற்றம் பெற்ற காலத்தை 1950 - 1980 வரை மறுமலர்ச்சிக் காலம் என்றும், மலையகத்தில் படித்த வர்க்கத்தின் தோற்றமும் நவீன இலக்கியத்தாக்கமும் ஏற்பட்டு புதிய இலக்கியப் படைப்பாளிகள் பல்கிப் பெருகிய காலத்தை 1980 க்கு பின்னான நான்காவது காலமாக கொள்ளலாம்.

மலையக இலக்கியத்தில் சி. வி. வேலுப்பிள்ளை:

"இலங்கை தமிழ் இலக்கியத்தில் மலையக இலக்கியம் என்ற தனித்துவமிக்க இலக்கிய முயற்சிகள் பேசப்படுவதற்கு முன்னோடியாக திகழ்ந்தவர் சி. வி. வேலுப்பிள்ளையாகும்." (அந்தனி ஜீவா 2002). சி. வி. என இலக்கிய உலகிலும் தொழிற்சங்கத்திலும் அழைக்கப்பட்ட (கண்ணப்பன்) வேலுச்சிங்கம் வேலுப்பிள்ளை (1914. 09. 14) என்ற ஆளுமை ஒரு இலக்கிய படைப்பாளியாக, தொழிற்சங்கவாதியான மலையக தொழிலாளி வர்க்கத்தின் சமூக மாற்ற முகவராக வாழ்ந்தவர். கோ. நடேசஐயரின் மலையக இலக்கிய முயற்சி சி. வி. யினால் வளர்க்கப்பட்டது. தமது சமூகம் ஒடுக்கப்படும் நிலைகண்டு அவர்களின் பிரச்சனைகளில் ஒரு பார்வையாளனாக இல்லாமல் பங்காளியாக வேண்டும் என்ற எண்ணத்தில் 1940 களில் தொழிற்சங்கப் பணியில் இறங்கி 1947 களில் ஒரு பாராளுமன்ற உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டார். பெரிய கங்காணி பரம்பரையில் வந்தாலும் மக்கள் நேயமிக்கவராகவும் மக்கள் கவிஞனாகவும் மக்களோடு மக்களாக வாழ்ந்தவர்.

1934 இல் ரவிந்திரநாத் தாகூர் இலங்கை வந்தபோது தாம் எழுதிய விஷ்மாயினி எனும் நூலை அவரிடம் சமர்ப்பித்து தமது இலக்கியப் பணியை தொடர்ந்தவர். பின் தேயிலை தோட்டத்திலே (In Ceylon Tea Garden - 1956), உழைக்கப் பிறந்தவர்கள் (Born to labour - 1969), வீடற்றவன், வாழ்வற்ற வாழ்வு (Life less life), எல்லைப்புறம் (The Boardes Land - 1962), பார்வதி (1966) இனிப்படமாட்டேன் (1982) போன்ற நாவல்களையும் எமது கதை (நாடற்றவன் கதை) கட்டுரைகளையும் ஆபிரிக்க கவிதையின் முதலாவது தொகுப்பையும் (1963), மலைநாட்டுத் தமிழர்கள், தலைவர்கள் (வரலாறு), தேயிலை நிலத்தின் சிறு தெய்வங்கள் (ஆராய்ச்சி), மலைநாட்டுக் கடிதம் விளக்கக் கட்டுரை, மலைநாட்டு நாட்டார் பாடல் தொகுப்பு என தமது கனதியான இலக்கிய பங்களிப்பை நல்கி மலையக இலக்கியத்தின் மறுமலர்ச்சிக்காக செயற்பட்டவர். மலையக இலக்கியத் தளத்திலே அதிகமான நாவல்களை எழுதியவரும் இவரே. கோ. நடேசஐயர் பண்படுத்திய மலையக இலக்கிய மண்ணில் 1960 ஆண்டுகளுக்கு முன் விரல்விட்டு எண்ணக்கூடிய மரங்கள் தான் முளை விட்டன. அறுபதுகளுக்கு பின் ஏற்பட்ட இலக்கிய விளிப்புணர்ச்சிக்குப் பின் மலையக இலக்கியம் தோப்பாகிவிட்டது. இத்தகைய மாற்றத்தின் மைல்கல்லாக திகழ்ந்தவர் சி.வி.யாகும் என்பர் இலக்கிய ஆர்வலர்கள்.

பிரட்டுக்களத்திலும், மலைச்சாரலிலும், லயன் காம்பராக்களிலும் வாழும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய வாழ்க்கையிலே புகுந்துள்ள வேறுபாடுகள், உள்ளியல்பு சம்பந்தமானவை. எனது ஈழ தமிழ் தேசிய இலக்கியம் மலையகத்தின் வாழ்க்கையையும் உள்ளடக்கியது தான். அது முழுமை நோக்கியல்ல பிறகாரணமும் கூட. இது குறித்த பங்களிப்பினை நல்ல மலையக எழுத்தாளர் முந்தி நிற்க வேண்டும் என்ற எஸ். பொன்னுத்துரையின் கூற்று மனங் கொள்ளத்தக்கது.

சி. வி. யின் தமிழ் நாவல் பிரவேசம் 1960 களின் பின்னரேயே ஆரம்பித்தது. அதற்கு முன் ஆங்கிலத்தில் எழுதும் கவிஞராகவே அவர் இலக்கிய உலகில் அறியப்பட்டார். வாழ்வற்ற வாழ்வு தமிழில் முதல் மலையக நாவலாகும். சி. வி. படைப்பு தமிழுக்கு புதிய ஒரு வழக்கை அறிமுகப்படுத்தியது. நாவல் உலகிலே மற்றவர்கள் நாவலை வெளியில் இருந்து படைக்க சி.வி.யோ தன்னையும் தன்னுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலில் உட்படுத்தி யதார்த்த படைப்பாக வெளிப் படுத்தினார். அத்தோடு சி.வியின் கதை சொல்லும் பாங்கும் வேறுபட்டது. 1960 இல் எழுதப்பட்ட இந்நாவல் 2001இலேயே வெளிவந்தது.

மலையக இலக்கியத்திலேயே மறு மலர்ச்சிக் காலத்தில் மூன்று ஆங்கிலம் கற்ற இலக்கியயவாதிகளாக அறிமுகமாயினர். சி. வி வேலுப்பிள்ளை, கே. கணேஷ், சக்தி பாலையா இவர்களில் கே. கணேஷ், தொடர்ந்து ஆங்கில பரிவர்த்தனையிலே ஈடுபட சக்தி பாலையா ஒரு கவிதையை மொழிபெயர்ப்புடன் நின்றுவிட சி. வி. வேலுப்பிள்ளை தொடர்ந்து எழுதவும் தனது ஆங்கில படைப்பை தமிழ் படைப்பாகவும் மாற்றிக் கொண்டார். இம் மூவரும் மக்கள் மத்தியிலே காலம் கடந்து அறியப்பட்டனர். பெரிய கங்காணி பரம்பரை என்பதும் இவர்களை மக்கள் மத்தியில் இருந்து தள்ளியே வைத்தது என்றாலும் படைப்பாளி தன் வர்க்க நலன் சார்ந்தே சிந்திப்பான் என்றாலும் சி. வி. யின் சிந்தனையோ தொடர்ச்சியாக தொழிலாளர் வர்க்க நலனிலேயே தங்கி இருந்தது.

சி. வி. யின் படைப்பிலே அவரை உலகுக்கு அறிமுகப்படுத்தியது தேயிலை தோட்டத்திலே (In Ceylon Tea Garden) எனும் கவிதையாகும் இதனை தமிழ்படுத்திய சக்தி பாலையா இதனை மக்களுக்கு அறிமுகப் படுத்தியதோடு இக்கவிதை மலையகத் தொழிலாளர்களை உலகறியச் செய்தது என்பர். சி. வி. க்கு பிடித்த கிலி நாட்டு கவிஞரான பாப்லோ நெருடாவுக்கு காண்பிக்கப்பட்டதாகவும் அவர் இக் கவிதையை வெகுவாக இரசித்ததாகவும் அந்தனி ஜீவா குறிப்பிடுவார். எனினும் சி. வி. யின் ஆங்கில கவிதையின் தமிழ் மொழி பெயர்ப்பு ஒரு தழுவலாக அமைந்துள்ளது என்றும் இதில் படைப்பாற்றல் முழுமையாக வெளிப்படவில்லை என்பாரும் உளர். சி.வி. யின் இலக்கியப் படைப்புகள் மீட்டுருவாக்கம் செய்யவும் பொருத்தமான மொழிபெயர்ப்பு செய்வதும் காலத்தின் தேவையாகும்.

பாரதியின் கரும்புத் தோட்டத்திலே என்ற கவிதை சி.வி. யின் தேயிலைத் தோட்டத்திலே என்ற கவிதை தோன்றுவதற்கு காரணமாயிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகின்றது. பாரதி தமது கரும்புத் தோட்டத்திலே எனும் கவிதையிலே,

“கரும்புத் தோட்டத்திலே அவர்
கால்களும் கைகளும் சோர்ந்து விழும்படி
வருத்துகின்றனரே” எனப் பாடுவார்.

சி. வி. தனது தேயிலைத் தோட்டத்திலே எனும் கவிதையில் இதே வகை புலம்பலை வெளிப்படுததுவதைக் காணலாம்.

“தேயிலைத் தோட்டத்திலே ....
புதைந்த அம்மக்கள்
போற்றும் இரங்கல்
புகழ் மொழி இல்லை
பழுதில்லா அவர்க்கோ
கல்லறை இல்லை”

சி.வி. தொடர்பாக முன் வைக்கும் விமர்சனங்களும் உண்டு. மலையக வாழ்வின் துன்பியல் அம்சங்களை முன்னிலைப்படுத்திய அளவுக்கு அக்காலப் போராட்டங்கள் அவர் படைப்பில் முனைப்புப் பெறவில்லை. மக்கள் எழுச்சி பற்றியோ, புரட்சி பற்றியோ தமது படைப்பில் பதிவு செய்யவில்லை என்பதை இர. சிவலிங்கம், பெ. முத்துலிங்கம், லெலின் மதிவாணம் போன்றோர் எடுத்துக் காட்டினர். சி.வி., ரவீந்திர நாத் தாகூர் மற்றும் இலங்கையின் காந்தி என்றழைக்கப்பட்ட கே.இராஜலிங்கம் போன்றவர்களை முன்னுதாரணமாக கொண்டதனால் அதே சமரச போக்கையே சி.வி. கடைப்பிடித்தார் என்று கூறுவாரும் உளர்.

சி.வி. பற்றிய மேற்படி குற்றச்சாட்டுக்கு மறுதலையாக சி. வி. யின் படைப்புக்கள் போற்றப்பட்ட குணாம்சங்களை கொண்ட தாகவும் அது சமூக மாற்றத்தினை சார்ந்தது எனவும் மு. சிவலிங்கம், கிங்ஸிலி ரோமல் போன்றவர்கள் கூறுவர். சி.வி யை ரஷ்ய கவிஞர் மாயா கோப்ஸ்கியுடன் ஒப்பிட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் கவிமணி சிவியின் கவிதைகளும் மக்கள் வாழ்வியலை மாற்றுவதற்கான ஆயுதங்களாகவே காணப்படுவதாக கூறு வாரும் உளர். சி. வி. மலையக மக்களின் வாழ்க்கையை வெளி உலக்கு அம்பலப் படுத்தினார். மாட்டின் விக்கிரமசிங்கா, டேவன் போல்ரிச், பப்லோ போன்றவர்கள் சி.வி யின் இலக்கியப் படைப்பில் தாக்கத்தை ஏற்படுத்தினர். இவற்றின் பின்னணியில் மலையக இலக்கியத்திற்கு சி.வி. ஒரு வளமாகவும் பலமாகவும் அமைந்தார் என்பது மறுப்பதற்கில்லை. மலையக இலக்கியத்தின் வளர்ச்சி தொடர்பாகவும் இதன் புதிய செல் நெறி தொடர்பாகவும் மிக அவதானம் செலுத்திய பேராசிரியர் க. கைலாசபதி சி.வி. க்கு முக்கிய இடம் அளித்திருந்தார். அதனாலேயே "மக்கள் கவிமணி சி.வி." என்ற அடை மொழியையும் வழங்கி இலங்கை இலக்கியத்தில் இலக்கிய ரீதியான சமூக அங்கிகாரத்தையும் வழங்கினார்.

உசாத்துணை நூல்கள்:

1. சாரல் நாடன் (2014) 'இலங்கை மலையகத் தமிழ் இலக்கிய முயற்சிகள்' குமரன் புத்தக இல்லம் - கொழும்பு - சென்னை

2. 'பன்முக ஆய்வில் கைலாசபதி' - பதின்மூன்று ஆய்வுக்கட்டுரைகள் - 19 சவுத் ஏசியன் புக்ஸ் - கொழும்பு

3. சாரல் நாடன் (2007) - 'குறிஞ்சித் தென்னவன் கவிச்சரங்கள்' சாரல் வெளியீட்டகம் - கொட்டகலை.

4. அருணாசலம் (1994) 'இலங்கை மலையக தமிழ் இலக்கியம்' தமிழ் மன்ற வெளியீடு - கொழும்பு

5. கைலாசபதி, க. (2002) 'நவீன இலக்கியத்தின் அடிப்படைகள்' - கொழும்பு

6. அந்தனி ஜீவா (2002) "சி.வி. சில சிந்தனைகள்" மலையக வெளியீட்டகம் - கண்டி.

7. சி.வி. வேலுப்பிள்ளை (2014) '100வது ஜனனதின நினைவு மலர்' நினைவுக்குழு - ஹற்றன்

8. மலையகப் பரிசுக் கட்டுரைகள் (2010) 'அமரர் இர. சிவலிங்கம் அவர்களின் நினைவாக' குழு

9. பாரதியார் கவிதைகள்

10. அருணாசலம், க. (2002) மலையக நாவல் வரலாறு
(Ceylon Report on Constitutional Report London (1994)

கவலையை விட்டொழிப்பதும் எரியும் ஆசையை அணைப்பதும்தான்... ஓ... எவ்வளவு பெரிய விஷயம்! எப்போதுதான் இந்த மனம் சாந்தமும் அமைதியும் அடைவது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலைப் பூக்களின் தொலைப் பயணம்!

கவிஞர் பூணாகலை நித்தியஜோதி

எ.்.கு வேலி அமைத்தன பேனைகள்!
இங்கோர் முப்பது...
தேகங்கள் சேர்ந்து!
அழியும் மொழியென
எழுதிய எழுத்தாணி முறியச்செய்து
வெள்ளைக் கொக்கின்
மூக்கு வியர்க்க ...
வலைப்பூக்களை விரியவைத்தன!
இணையத்தில என்மொழி...
ஆட்சிமொழிதான் காண் என!
மகுடம் சூட்டின!

எத்தனை இதழ்கள்
எத்தனை காட்சி அலைகள்
கலைக்களஞ்சியத்தின் சேமிப்புகள்
புதிய படைப்புகளின் அணிவகுப்புகள்!
ஒரு இனத்தின் எழுச்சி... முன்னே!
தோற்றுப் போகும்... தோற்று ஓடும்!
மூக்கு கண்ணாடி முடி அறிக்கைகள்!

எங்கள் இளையோர் கைகளில்
உலகம் குந்திக் கொள்ள..
இணையம் கைபேசிகளில்
கண்சிமிட்டும்! ஒரு நொடியில்...
கோடிக்கணக்கான - அகத்தியன்
எழுத்துக்கள் திரையில் தெரிகின்றன!

முதலில் தோன்றியது ... பூமியின்
நெருப்புக்கோளம் முடியுமட்டும்
இருக்கப்போவதும் எம் தமிழாம்!
விழிதிறந்தோம்! வீழாதிருப்போம்!
எழுவென இணையத்தமிழ்
இனிதே ரசிப்போம்! ருசிப்போம்!.

Uyar Naado

உயர்நாடு

மாதாந்த இதழ்

ஊவா மாகாணத்தை
மையமாகக்கொண்டு
மக்களின் குரலாக
பல்கலைப் பட்டதாரி இளைஞர்
– யுவதிகள், அதிபர்கள்,
ஆசிரியர்கள், கல்விமான்கள்.
எழுத்தாளர்களின்
சிந்தனைச் சிறப்பிதழாக
வெளிவரும் மாதாந்த
பத்திரிகையாகும்.

தொடர்புகளுக்கு :

இரா. நித்தியானந்தன்
நித்தியஜோதி

ஆசிரியர் உயர்நாடு
B-4, 2nd Floor
Commerical Centre,
Bandarawela.
Tel : 077 718 3173
E-mail : nithinero9@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தமிழ் வளர்ச்சியும் பெண்களின் வகிபாகமும்

செல்வி செல்லத்துரை பரமேஸ்வரி
ம/மா/கொத்./ விக்னேஸ்வரா ம.வி. கலைப்பிரிவு

"மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா" என்று பெண்ணின் பிறப்பையே பெரும் பேறாக கருதிப் பாடினார் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை. சமுதாயம் முன்னேற ஆடவரைக் காட்டிலும் பெண்களின் பங்கு மகத்தானது. சமுதாயத்தில் பெண்களுக்கு என்றுமே சிறப்பிடம் உண்டு. முற்காலத்தில் தமிழ் மக்கள் தம் வாழ்வில் மகளிருக்குத் தனியிடமளித்துள்ளனர் என்பதை சங்க நூல்கள் பறைசாற்றுகின்றன. ஔவையார், காக்கை பாடினியார் போன்ற பெண்பாற் புலவர்கள் பீடுபெற வாழ்ந்த வரலாறுமுண்டு.

இறைவனது படைப்பில் ஆண், பெண் இரு பாலாரும் சமமே. ஆண்கள் உயர்ந்தவர்கள் என்றும் பெண்கள் தாழ்ந்தவர்கள் என்றும் பேசுதல் பேதமையாகும். குறிப்பாக பெண்கள் அன்பிலும் பண்பிலும் உயர்ந்தவர்கள். அன்பின் பண்பே பெண்மை. அறத்தின் வடிவே பெண்மை. கற்பின் உயர்வே பெண்மை. உயிரின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் வாழ்விற்கும் பெண்ணே முதன்மையானவள். இதனாற்றான் பெண்ணைத் தியாகத்தின் சின்னமாகவும் கடமையின் காப்பாகவும் பொறுமையின் இருப்பிடமாகவும் போற்றினர். பெண்ணைச் சக்தியின் வடிவமாக போற்றின சமயங்கள். வாழ்க்கைத் துணைவியாகவும் வாழவைக்கும் தாயாகவும் வழிநடத்திச் செல்பவளே பெண். அவளுக்கு ஈடாக எதையுமே எடுத்துரைத்தல் இயலாது.

இத்தகு சிறப்பு மிகு பெண்களை இழிவுபடுத்தும் வேதவிதிகளும் சமூக, மதக் கொடுமைகளும் இடைக்காலத்தே புகுந்தன. இதன் பேறாகப் போற்றிப் பேணப்பட்ட பெண்குலம் தாழ்வுற்றது. பெண்ணடிமை நிலை பெற்றது. வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டி வைக்கும் வேதனை நிலை உருவாயிற்று. அடுப்பூதும் பெண்ணுக்குப் படிப்பெதற்கு? என்று கேட்டனர்.

சென்ற நூற்றாண்டுவரை இந்நிலை நிலவிற்று. பெண்ணடிமைத் தளைகளைத் தகர்த்தெறிந்து ஆணுக்கிங்கே பெண் சமனென ஆர்த்தெழுங்கள் என அறைகூவல் விடுத்தார் பாரதியார்.

> "பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
> பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்.
> எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்
> இளைப்பில்லைக் காண்."

என்று அவர் முழங்கிய பின்னர் தான் பெண்ணுரிமை மலரத் தொடங்கியது. பெண்கள் விழித்தெழுந்தனர். மகளிர் வாழ்வில் புதிய ஒளி மலர்ந்தது. பெண்கள் சமூகம், அரசியல், பொருளாதாரம் போன்ற துறைகளில் பங்குகொள்ளும் வாய்ப்புக் கிட்டியது.

இன்று பெண்கள் சகல துறைகளிலும் ஆண்களோடு சரிநிகர் சமானமாகப் பங்கு கொண்டு வருகின்றனர். சமுதாயத்தின் பல்வேறு ஆக்கப் பணிகளிலும் அவர்கள் ஈடுபட வேண்டியது, காலத்தின் கட்டாயமாகும். இதனை நன்குணர்ந்து சமுதாய முன்னேற்றத்திற்கான பணிகளில் பெண்களும் பங்குகொள்ள வேண்டும்.

தமிழ் மறை தந்த திருவள்ளுவர் வாழ்க்கைத் துணை நலம் பற்றிக் கூறும்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லறவாழ்வில் ஆணுக்குப் பெண்ணும் பெண்ணுக்கு ஆணும் துணைவர் எனக் கொண்டு ஒற்றுமையோடு செயற்பட்டால் வாழ்க்கை சிறப்புறும்; பண்பட்ட சமுதாயம் உருவாகும் என்கிறார். ஒவ்வோர் ஆணின் முன்னேற்றமும் ஒரு பெண்ணாலே என்பர். எனவே, ஆண்களின் முன்னேற்றத்திற்குப் பெண்களே பின்னணியில் திகழ்கின்றார்கள் என்ற உண்மையை நாம் மறந்துவிடக் கூடாது. ஆடவர் முன்னேற்றமே மகளிரால் என்பதால் சமுதாய முன்னேற்றமும் அவரால் தான் ஆகும்.

தொட்டிலை ஆட்டும் கையே உலகை ஆளும் கை என்பதை நாம் நினைவிற் கொள்ளவேண்டும். நமது நாட்டை பொறுத்தவரையில் பெண்களே இன்று முன்னணியில் திகழ்கிறார்கள். சனாதிபதி முதல் உயர் நீதிமன்றம் வரை, பல்கலைக் கழகங்கள் தொட்டு பாடசாலைகள் வரை, பாராளுமன்றம் தொட்டு உள்ளூராட்சிச் சபைகள் வர அவர்கள் உயர்ந்த அந்தஸ்தில் இருப்பதைக் காணமுடிகிறது.

இத்தகு சிறப்புகள் பெண்கள் பெற்றிருந்தபோதிலும் அவர்களது உரிமைகளுக்கு வேட்டு வைக்கும் சில நிகழ்வுகள் இன்னும் காணப்படுகின்றன. வரதட்சணை எனப்படும் சீதனக் கொடுமையால் கன்னியர் பலர் கண்ணீருடன் காலங் கழித்திடும் அவல நிலையும் உள்ளது. பெண்களை வெறும் மோகப் பொருளாகவும் விளம்பரப் பொருளாகவும் வியாபாரப் பொருளாகவும் சிலர் நடத்துகின்றனர். இந்நிலை மாறவேண்டுமாயின் சமூகம் விழிப்புற வேண்டும். சமூகப் பணிகளில் பெண்கள் துணிச்சலுடன் ஈடுபடுவதன் மூலமே இக் கொடுமைகளை ஒழித்திட முடியும். சமுதாய முன்னேற்றத் திற்கான பணிகளில் பெண்கள் ஆர்வத்துடன் பங்கேற்க வேண்டியது அவசியமாகும். மேலை நாடுகளில் சமுதாய முன்னேற்றத்திற்கான சகல துறைகளிலும் பெண்கள் முக்கிய பங்கேற்று வருகிறார்கள். அதனால் அவர்கள் சமூகத்தின் உன்னத நிலையைப் பெற்றுத் திகழ்கின்றார்கள். நமது நாடு வளம் பெற நங்கையர் வாழ்வு சிறப்புறச் சமுதாய முன்னேற்றத்தில் பெண்களின் பெரும் வகிபாகம் வேண்டும்.

இன்று பெண்கள் தம் அறிவாலும் ஆற்றலாலும் உழைப்பாலும் முன்னேறி வருகின்றனர். ஆடவர்க்கு நிகராகச் சமுதாயத்தில் அங்கம் வகிக்கின்றனர். இத்தகைய மகளிர் பங்கு சமுதாய முன்னேற்ற பணிகளிலும் இடம்பெற வேண்டும். இதன்மூலம் மகளிர் வாழ்வும் சமுதாயமும் நாடும் வளம் பெறும் என்பதில் ஐயமில்லை.

- எவ்வழி நல்லவர் ஆடவர், அவ்வழி நல்லை. வாழிய! நிலனே!
- உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு.
- இனிது! இனிது!! ஏகாந்தம் இனிது!!!
- ஆருயிர்த் தோழனாயிருந்தாலும், உன்னுடைய இயலாமையையோ, ஏழ்மையையோ பற்றிப் பேசாதே! எவர் முன்னும் உன் தன்மதிப்பினை விட்டுவிடாதே! தாழ்வு மனப்பான்மையை நீக்கிவிடு!
- நம்முடைய குற்றங்கள் இவைகள் என்று தெரிவித்து அவைகளை நீக்கி நன்னெறியை நமக்குப் போதிக்கின்றவர்களே நமக்கு உத்தம நண்பர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக இலக்கியமும் எழுத்தாளர்களின் இன்றைய நிலையும்

பாலா சங்குப்பிள்ளை
மலையக ஜனரஞ்சக எழுத்தாளர்

இலக்கியம் என்பது என்ன? என் அறிவுக்கு எட்டிய வகையில் 'ஒரு நாட்டின் அல்லது பிரதேச மக்களின் வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டு வரையறுக்கப்பட்ட அல்லது வரையப்பட்ட ஒரு கோட்பாடுதான் இலக்கியம்' என்று புரியாத வார்த்தைகளை வைத்து சித்து விளையாட விரும்பவில்லை. ஏனென்றால் மலையகத்தைப் பொறுத்தவரை இப்போதுதான் கல்வியில் ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டு வருகின்றது. ஆனால் அன்று எழுதப் படிக்க தெரிந்தவர்கள் சொற்பமாக இருந்தமையினால்தான் அவர்களை அற்பமாக நினைத்து அடிமைகளாக நடத்தினார்கள் மேல்வர்க்கத்தினர். எழுதப் படிக்கத் தெரிந்த வர்கள் குறைவாக இருந்தாலும் தமிழகத்தி லிருந்து பிழைப்புத் தேடி வந்த தொழிலாள வர்க்கத்தினர் வரும்போதே அங்கேயிருந்த தமிழர்களின் பண்பாட்டையும் கலை கலாச்சாரத்தையும் வாய் மொழியாக கொண்டு வந்தனர். அவர்களுக்கு இலக்கியமென்பது என்னவென்று தெரியாமலேயே அதையும் சேர்த்து கொண்டு வந்தனர்.

மலையக இலக்கியம் சற்று பரந்து விரிந்தது. அதில் எல்லாமே இருந்தது. பாரம் பரிய கலைகளான காமன் கூத்து, அர்ச்சுனன் தபசு, கரகாட்டம், காவடி, வில்லுப்பாட்டு என்று எல்லாவற்றிலும் இலக்கியம் இருந்தாலும் கவிதை, சிறுகதை, கட்டுரை போன்ற உப செயற்பாடுகளின் வளர்ச்சியை எடுத்து நோக்கினால் மற்றவை அழிந்து வரு வதைத்தான் கவலையுடன் காணக்கிடக்கின்றது.

ஏற்கனவே கூறியதைப்போலவே அன்று எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தமையினால் வாசிப்பில் விருப்பம் குறைவாக இருந்தது. ஆனால், கல்வியின் வளர்ச்சி படிப்படியாக உயர்ச்சியடைந்து வந்த வேளையிலும் வாசிப்பில் எழுச்சியேற்படவில்லை. காரணம் இலக்கியம் என்ற பெயரில் படைக்கப்பட்டவை யாவும் மிகவும் கடுமையான சொற்களையும் கரடுமுரடான வார்த்தைகளையும் வைத்து எழுதப்பட்டமையால் அது அவர்களை கவர்வதற்கு பதிலாக கசந்தது.

மலையக எழுத்தாளர்களை பட்டியல் போட்டு பெருமைப்படுவதை விட பட்டினியால் மடிந்து மறக்கப்பட்டவர்களுக்காகச் செய்ய வேண்டியவை எவ்வளவோ இருக்கின்றன. குறிஞ்சித் தென்னவன், குறிஞ்சி பாலன்போன்ற பலர் பல்கலைக்கழகங்களில் பாடங்களாக வைக்க தகுதியான பல கவிதைகளை, ஆக்கங்களை எழுதியபோதும் வறுமையினால் வாடிய அவர்களுக்கு யாருமே ஊக்கமளிக்க வில்லை, மறைந்த பின்னரும் குறிஞ்சித் தென்னவனின் கவிதைகளை சேகரித்து புத்தகமாக போட்ட இன்னொரு சக எழுத்தாளர் அதற்காக கிடைத்த பெருந்தொகை பணத்தை தென்னவனின் குடும்பத்துக்கு தராமல் மன்னவனின் கணக்கில் வரவு வைத்துக் கொண்டார். இலக்கிய குழுவுக் குள்ளேயே சில குள்ளநரிகள். இதை யெல்லாம் எழுதினால் கெட்டவன் மலையக இலக்கியத்தை கெடுக்க வந்தவனென்ற பெயர் வேறு..? நல்ல இலக்கியம் என்பதைவிட நேர்மையான பொதுநலமுள்ள உண்மையான எழுத்தாளனாக இருக்க வேண்டியது அவசிய மாகின்றது. அப்படிப்பட்டியலிட்டார் தி. கோபாலன், மு. சிவலிங்கம், லெனின் மதிவானம், மல்லிகை சி. குமார், தெளிவத்தை ஜோசெப், சிவனு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோகரன் என்று கூறிக்கொண்டே போகலாம். மலையக இலக்கியம் சர்வதேசமளவுக்கு புகழ் பெற வேண்டிய ஒரு தரமான இலக்கியம். ஆனால் தரமற்ற வெறும் போட்டி, பொறாமை, சூழ்ச்சிகள் நிறைந்த சிலரின் கைகளில் சிக்கியமையினால் அது வளரவும் இல்லை - அவர்களும் உயரவில்லை.

மலையக இலக்கியமும் அதனை படைக்கும் படைப்பாளிகளும் ஆளுமையும் திறமையுமுள்ளவர்கள் தான். அதை மறுப்பதற்கில்லை. ஆனால் வளர்ந்துவரும் இளம் படைப்பாளிகளையும் மனதில் கொள்ள வேண்டும். கைப்பிள்ளையாக இருக்கும் அவர்களை கைதூக்கிவிட வேண்டும். புத்தக வெளியீடுகளையும் புகழ்ச்சி கூட்டங்களையும் குறைத்து அவர்களின் எழுச்சிக்காகப் பாடுபடவேண்டும்.

இங்கே நான் எல்லோரையும் குறை கூறவுமில்லை. குற்றவாளிகளென்று சுண்டு விரலை நீட்டவும் இல்லை. பாதிக்கப்பட்டவர்கள் பரிதாபத்துடன் என்னுடன் பகிர்ந்து கொண்டதை கூறுகின்றேன். அரச இலக்கிய விழாக்களில் திறமையானவர்கள் தட்டிவிடப் பட்டு வேண்டியவர்கள், உறவினர்கள் தட்டிக் கொடுக்கப்படுகின்றார்கள். அதனால்தான் இன்று மலையகத்தில் புதிய எழுத்தாளர் களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கின்றது. இன்னொருவிடயம் - மலையக இலக்கியமென்பது எந்தவகையிலும் குறைந்ததில்லை, தரமானது. உலகளவில் போற்றக்கூடிய எல்லா தகுதிகளும் அதற்கு இருக்கின்றது. ஆனால், அதை ஏன் சர்வதேசமளவுக்கு கொண்டு செல்ல யாரும் முன்வராமலிருக்கிறார்களென்பது புரியாத புதிர்தான்.

ஏற்கனவே சொன்னது போல இலக்கிய மென்பது கசப்பான விரும்பத்தகாத ஒரு விடயமல்ல. அதை எளிமைப்படுத்தும் போது வலிமைப்படுகின்றது. அப்படி எளிமை யான சொற்களை வைத்து புனையப்படும் ஆக்கங்கள் தரமற்றவையா? அவர்கள் ஒதுக்கப்பட வேண்டியவர்களா? அந்த இலக்கியம் நிராகரிக்கப்பட வேண்டியதா?

இந்தக் கேள்விகளுக்கு ஆம் என்றோ அல்லது இல்லையென்றோ பதில் கூறி அதற்கான விளக்கத்தையும் மிக இலகுவாக கொடுத்துவிட முடியும். ஆனால், விடயம் அதுவல்ல. எதனை எப்படி எழுதினாலும் படைத்தவனின் நிலையென்ன? மலையக எழுத்தாளர்களில் எத்தனைபேர் வசதி வாய்ப்புடன் இருக்கிறார்கள்? எழுத்தாளர்கள் என்ற கௌரவம், அவர்களுக்கான மரியாதை வழங்கப்படுகின்றதா? மலையகத்தில் இலக்கிய எழுச்சியுடன் அரசியல் புரட்சியை யும் ஏற்படுத்தும் எழுத்தாளர்களுக்கு என்றும் உண்மையான அங்கீகாரமும் உயரிய இடமும் கொடுக்கப்படவில்லை. மலையக அரசியல் வாதிகளும் இவர்களைக் கண்டுகொள்வதில்லை. கைதூக்கி விடுவதுமில்லை. எத்தனையோ வீடமைப்பு திட்டங்கள் செயல் படுத்தப்பட்டாலும் கூட எழுத்தாளர்களுக்கென எந்த திட்டமும் இல்லை.

இலக்கிய சித்தர்களான இவர்களை பித்தர்களாக நினைப்பதனால் தான் யாரும் கண்டுகொள்வதில்லைபோலும். இறுதியாக உறுதியாக ஒன்றை சொல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றேன். கிரிக்கெட் விளையாட்டில் சிக்ஸர் அடித்தவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்படுகின்றது. அரசியலில் நுழைந்து பாராளுமன்ற உறுப்பின ராக, அமைச்சராக பதவி வகிப்பவர்களுக்கு எல்லா வரப்பிரசாதங்களுடன் இருப்பவர் களுக்கு புகழ்மாலை சூட்டப்படுகின்றது. ஆனால், இலக்கியத்தில் மறுமலர்ச்சியையும் மக்களின் மனங்களில் எழுச்சியையும் ஏற்படுத்தும் எழுத்தாளர்கள் எல்லாவற்றையும் இழந்து போர்க்களத்தில் - நிராயுதபாணியாக எதுவும் செய்யமுடியாமல் செத்து மடிகின்றனர். இதுதான் மலையகத்தில் இலக்கியத்தின் இன்றைய நிலையும். எழுத்தாளர்களின் நிலையும் இலக்கியமும் வாழ வேண்டும். படைப்பாளியும் உயர வேண்டும். இது நடக்காவிட்டால் - மலையக இலக்கியம் மண்ணோடு மண்ணாகி மக்கிப் போவதைவிட வேறு வழியில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவின் கட்டளைகள்

இரா. சடகோபன்
சட்டத்தரணி, எழுத்தாளர்

எனக்குத் திருமணமாகி மூன்று குழந்தைகள் பிறக்கும் வரை நான் என் அம்மாவைப் பற்றி தவறாகவே புரிந்து கொண்டிருந்தேன். அதுவரை அவரை நான் இந்த உலகத்திலேயே இருந்த மிகக் கொடுமையான அம்மா என்றுதான் எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் இப்போது என் குழந்தைகளை நான் வளர்க்க முற்படும் போதுதான் தெரிகிறது என் அம்மா எவ்வளவு உயர்ந்த உள்ளம் கொண்டிருந்தார் என்பது.

எங்கள் அப்பா எங்களையெல்லாம் தவிக்க விட்டு விட்டு சிறு வயதிலேயே இறந்து போனபோது குடும்பத்தின் முழுச்சுமையையும் என் அம்மாதான் தன் தோளில் தூக்கிப் போட்டுக்கொண்டார். நாங்கள் மொத்தமாக ஐந்து பிள்ளைகள், மூன்று பெண்கள் இரண்டு ஆண்கள். எனது அப்பா ஒரு தமிழ் வாத்தியாராக இருந்த ஒரு சிறந்த ஆசான், தர்மவான், பண்பாளர் என்று பேரும் புகழையும் சம்பாதித்திருந்தாரேயன்றி எங்களுக்கென எந்த சொத்தையும் விட்டுச் செல்லவில்லை. அவர் இறந்ததும் எங்களுக்கு இருந்த சொற்ப வருமானமும் இல்லாமல் போய் மேலும் மேலும் வறுமையில் தள்ளப்பட்டோம். என் அம்மா தாதியர் பயிற்சி நெறி பயின்றிருந்ததால் முதியோர் பராமரிப்பு மற்றும் பிள்ளைகள் பராமரிப்பு போன்றவற்றில் ஈடுபட்டு கடுமையாக உழைத்து எங்களை வளர்ப்பதற்கான போதுமான வருமானத்தைப் பெற்றுக் கொண்டார். அதனால் எங்களை வளர்ப்பதில் மிகக் கண்டிப்புடன் இருந்தார்.

மற்றப் பிள்ளைகள் ஐஸ்கிறீமும் சொக்லேட்டும் கேட்டு வாங்கித் தின்றபோது எங்கள் வாய்களில் கடலைக் கொட்டைகளையும் தானிய உருண்டைகளையுமே அள்ளித் திணித்தார். அவற்றில் கூட இனிப்பு குறைவாகவே போடப்பட்டிருக்கும். எல்லாப் பிள்ளைகளும் கொக்கா கோலா, பென்டா, மிரிண்டா என்று குலுக்கிக் குலுக்கி நுரை பொங்க குடித்தபோது அவையெல்லாம் நஞ்சு என்று ஒதுக்கித் தள்ளிவிட்டு எங்களுக்கு மட்டும் பசும்பாலை கெட்டியாகக் காய்ச்சி குடி குடியென குத்தாமல் குத்துவார். இது எனக்கு மட்டுமல்ல என் தம்பி தங்கச்சிகளுக்கும் அப்படித்தான்.

எங்கள் அம்மா, நாங்கள் எங்கு போனாலும் அதனை அவதானித்து எங்கள் நடமாட்டங்களை அவர் கண்ணுக்குள்ளேயே வைத்திருப்பார். எங்களை அவர் சங்கிலி போட்டு கட்டி வைத்திருக்கிறார் போலவே நாங்கள் உணர்ந்தோம். நாங்கள் ஒரு மணி நேரத்துக்கு வெளியே நண்பர்களைப் பார்க்கப் போய்விட்டு வருகிறோமென்றால் அது கட்டாயம் ஒரு மணி நேரமாக மட்டுமே இருக்க வேண்டும். ஒரு மணி நேரம் முடிந்து ஒரு நிமிடம் தாண்டினால் கூட அதற்கு பதில் சொல்லியேயாக வேண்டும். நாங்கள் எப்போதும் அம்மாவுக்குப் பிடித்ததை மட்டுமே செய்தோமேயன்றி ஒரு போதும் எங்களுக்குப் பிடித்ததைச் செய்ய முடிந்ததில்லை.

நாங்கள் ஏதும் தவறு செய்தால் முதுகுத் தோலை உரித்து உப்புக் கண்டம் போட்டுடுவேன் என்று மிரட்டுவார். அப்பா இறந்த பின்னர் அவர் இடுப்புக்குக் கட்ட பயன்படுத்திய ஒரு தடித்த தோலாலான இடுப்புப் பட்டியை உருண்டையாகச் சுருட்டி முன்னறையில் கதவுக்குப் பக்கத்தில் ஒரு ஆணியடித்து எங்கள் கண்களில் படும்படி வைத்திருந்தார். அதை எடுத்து எங்கள் முதுகில் அடித்தால் எங்கள் முதுகுத் தோல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிந்து விடும் என்ற பயம் எப்போதும் எங்களுக்கு இருந்து கொண்டே இருந்தது. ஆனால் நல்ல வேளையாக அதனை பயன்படுத்தும் சந்தர்ப்பத்தை அவருக்கு நாங்கள் வழங்கவேயில்லை.

நாங்கள் ஒவ்வொரு நாளும் குளித்து முகங் கைகால் கழுவி சுத்தமாக இருக்க வேண்டுமென்பதிலும், சுத்தமான சலவை செய்த ஆடையணிகள் அணிய வேண்டுமென்பதிலும் கண்டிப்பாக இருந்தார். அவருக்கு தையற்கலை தெரிந்திருந்ததால் அவர் தைத்த துணிகளையே நாங்கள் எப்போதும் அணிந்தோம். அதனால் நாங்கள் விதவிதமாக அணிய முடியவில்லையே என்ற ஆசையை அடக்கிக் கொள்ள வேண்டியிருந்தது. அவர் தன் வருமானத்தை மிச்சம் பிடித்து மிகச் சிக்கனமாக வாழவேண்டியிருந்ததாலேயே அப்படிச்செய்தார் என்பது எங்களுக்கு விபரம் தெரியவந்த பிறகுதான் புரிந்தது.

நாங்கள் இரவு சரியாக எட்டு மணிக்கெல்லாம் நித்திரைக்குச் சென்றுவிட வேண்டும் என்றும், காலையில் ஆறு மணிக்கு எழுந்துவிட வேண்டும் என்றும் சட்டம் விதிக்கப்பட்டிருந்தது. நாங்கள் பாடசாலைக்குச் செல்லாத சனி, ஞாயிறு நாட்களிலும் கூட இந்த சட்டம் அமுலில் இருந்தது. லீவு நாட்களில் மற்றப் பிள்ளைகள் பத்து பதினொரு மணிவரைக்கும் கூட நித்திரை கொள்கிறார்களே எம்மால் அப்படிச் செய்ய முடிவதில்லையே என்ற ஏக்கம் நீண்ட நாட்கள் வரை எங்கள் மனதில் இருந்தது. அதேபோல் எங்களை வேலை வெட்டியில்லாமல் சும்மா இருக்கவும் அனுமதிக்க மாட்டார். நாங்களே எங்கள் அழுக்கடைந்த உடுப்புகளை கழுவித்துவைத்து ஸ்திரிக்கை செய்யவேண்டும். படுக்கை விரிக்கவும் மடிக்கவும் வேண்டும். பண்டம், பாத்திரங்களை கழுவவேண்டும். வீட்டைக்கூட்டி அந்தந்தப் பொருட்களை அந்தந்த இடத்தில் வைக்க வேண்டும். சமைக்கும் போது உதவ வேண்டும். இப்படி வீட்டுக் காரியங்களைச் செய்ய பழக்கப்பட்டோம்.

நாங்கள் எந்த காரணத்தை முன்னிட்டும் உயிர் போகிற காரியமென்றாலும் கூட பொய் பேசக்கூடாது என்பதில் அம்மா மிகத் தீவிரமாக கவனம் செலுத்தினார். எங்கள் பாடசாலைப் பிள்ளைகள் எத்தனையோ முறை காய்ச்சல், தலைவலி என்று பொய் கூறி பாடசாலைக்குப் போகாமல் கட்டடித்துள்ளார்கள் என்பது எமக்கும் தெரியாததல்ல. ஆனால் நாங்கள் எங்கள் வாழ்நாளில் ஒரு தடவைகூட அப்படிச் சொல்லி பாடசாலைக்குப் போகாமல் இருந்ததில்லை. இதனை எங்கள் மனதில் அழுத்திப் பதிய வைப்பதற்காக "நான் சொல்வதெல்லாம் உண்மை, உண்மை, உண்மை, உண்மையைத் தவிர வேறொன்றுமில்லை" என்று எங்கள் கைகளில் பைபிளைக் கொடுத்து சத்தியம் செய்து வாங்கிக் கொண்டார். எங்களுக்கும் அத்தகைய இக்கட்டான தருணங்கள் வந்தபோதெல்லாம் இந்த சத்தியம் நினைவுக்கு வந்து அதனை மீற முடியாமல் தடுத்துவிடும்.

அம்மா அவர் பிள்ளைகளான ஐந்து பேர்களிடத்தும் அளவற்ற அக்கறை கொண்டிருந்தாலும் தனது மூன்று பெண் பிள்ளைகளின் பாதுகாப்பில் கண்ணும் கருத்துமாக இருந்தார். நாங்கள் யாருடன் பழகுகிறோம்? எங்கள் நண்பர்கள் யார்? எங்கெல்லாம் போய் வருகின்றோம்? என்பதையெல்லாம் விசாரித்து அறிந்து வைத்திருந்தார். நாங்கள் பருவ வயதையடைந்த போது இந்த அக்கறை மேலும் அதிகரித்தது.

பாடசாலையிலும் கல்லூரியிலும் நாங்கள் முதல் மாணவராக இருக்கும்படி பார்த்துக் கொண்டார். படிப்பில் மாத்திரமின்றி விளையாட்டு, நீச்சல், ஓவியம், பிறமொழிகள் கற்றல் என்பவற்றிலும் ஊக்கமளித்தார். இன்று நாங்கள் காலடி எடுத்து வைத்த ஒவ்வொரு துறையிலும் உச்சாணிக் கொம்புவரை வளர்ந்திருக்கிறோம் என்றால் அது அம்மாவின் தூர தரிசனம் தான்.

அம்மா எங்கள் ஐவருக்கும் திருமணம் முடித்துவிட்டுத்தான், தான் கண்மூட வேண்டு மென்று பிரார்த்திப்பார். அவரது பிரார்த்தனை வீண்போகவில்லை. அவர் தனது பேரப் பிள்ளைகளை தன் மடியில் போட்டு கொஞ்சி மகிழ்ந்திருந்த ஒரு மாலை வேளையில்தான் அவர் உயிர் அவரை விட்டுப் பிரிந்து போனது. எங்களுக்குக் கிடைத்த அம்மாபோல் எல்லோருக்கும் வந்து வாய்த்தால் இந்த உலகம் எவ்வளவு உயர்ந்ததாக இருந்திருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வோல்ட் டிஸ்னி
(Walt Disney)
கடல் அளவு ஆசை கொள் குளமாவது வெட்டலாம்

கவிஞர் எம். பிரேம்ராஜ்

உலக மக்கள் தொகை எவ்வளவு? என்று கணக்கெடுத்தால் (சென்சஸ்) என்ன விடை வருமோ... ஏறக்குறைய அதே விடைதான் மிக்கி மௌஸ் ரசிகர்களைக் கணக்கெடுத்தாலும் வரும்.

குழந்தைகள் மட்டும் அல்ல பெரியவர்களுக்கு ''உள்ளே'' இருக்கும் குழந்தைகளை கூட வெளியே ஈர்த்துவந்து பரவசப்படுத்தும் இந்த மந்திரக் கார்ட்டூன் கரெக்டரை பெற்றெடுத்தவர்தான் வோல்ட் டிஸ்னி. மிக்கி மௌஸின் குரலுக்கு சொந்தக்காரரும் இதே டிஸ்னி தான்.

வோல்ட் டிஸ்னி வாய்ப்புத் தேடி சினிமா ஸ்ருடியோக்களின் பக்கம் போனபோது ''பொம்மை'' படம் போடுபவன் எல்லாம் எப்படி சினிமா எடுக்க முடியும் என்று கேலியாகச் சிரித்து அவமானப் படுத்தினார்கள். அமெரிக்காவில் சிக்காக்கோ நகரில் பிறந்த டிஸ்னி தனது 21 வது வயதில் ஹாலிவூட்டில் காலடி வைத்தபோது நடந்த நிகழ்ச்சி இது.

அனிமேஷன் சினிமாவுக்கு வரவேற்பு இருக்காது என்ற வாதத்தை ஒப்புக்கொள்ள வில்லை. கடல் அளவு ஆசை கொண்டால் தான் குளமாவது வெட்டலாம் என்று, அறிந்தவர் தெரிந்தவர்களிடம் கடன் வாங்கி சொந்தமாக Alice In Cartoon ஐ உருவாக்கினார். தனக்கு கை கொடுக்கும் என்று இவர் நினைத்த இந்தப் படம் இவரின் காலை வாரிவிட்டது. டிஸ்னி தோல்வியை ஒப்புக்கொள்ளும் ரகம் இல்லை.

தோல்வி தவிர்க்கப்படக்கூடியதல்ல. நீ தேன் சாப்பிட வேண்டுமாக இருந்தால் தேனீ தீண்டுவதைப் பெரிதுபடுத்தாதே. நீ கடவுளை



நினைப்பதற்கு தோல்வி கதவு திறந்து விடுகிறது. வெற்றி தருகிற பலத்தை விட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோல்வி அதிக பலம் தருகிறது. உனக்கு ஏற்படும் தோல்வி உன்னைத் தூக்கிவிடும் இன்னொரு கை.

"போதும் ... போதும் .. என்கின்ற அளவுக்கு ஏமாந்துவிட்டேன். இனிமேல் ஏமாறப் போவதில்லை" என்று சபதம் செய்து விட்டு காரியத்தில் குதித்தபோது டிஸ்னியின் சிந்தனைப் பொறியில் ஒரு சுண்டெலி சிக்கியது. தனது கார்ட்டூனில் அந்தச் சுண்டெலிக்கு டிஸ்னி உயிர் கொடுத்தார். "மார்டிமர்" என்று அதற்குப் பெயரும் சூட்டினார். ஆனால் இவரது நண்பர்கள் இந்தப் பெயரை ஒப்புக் கொள்ளவில்லை. சுருக்கமாக "மிக்கி" என்று வையுங்களேன் என்று அவர்கள் யோசனை சொல்ல ... "மிக்கி மௌஸ்" என்ற சாகாவரம் பெற்ற கரெக்டர் உதயமானது. முகத்துக்கு ஓர் வட்டம், இரண்டு காதுகளுக்கு இரண்டு வட்டம் என்று மூன்றே வட்டங்களில் பிறந்த மிக்கி மௌஸ், தான் பிறந்த ஒரு சில ஆண்டுகளுக்குள்ளாகவே உலகையே தன் பக்கம் வளைத்துப் போட்டது. டிஸ்னி அடுத்தடுத்து தயாரித்த Steam Boat Willied, The Skeleton Dance போன்ற படங்களில் மிக்கி அடித்த லூட்டியை மக்கள் திறந்த வாய் மூடாமல் ஆச்சரியத்தோடு பார்த்து ரசித்தனர். பணம் குவிந்த அதே வேகத்தில் டிஸ்னியை அங்கீகாரமும் தேடி வந்தது. ஆம். 1932 ம் ஆண்டு டிஸ்னி உருவாக்கிய Flowers and trees என்ற திரைப்படத்திற்கு ஆஸ்கார் (Oscar) விருது கிடைத்தது. இந்த நேரம் டிஸ்னி "டொனால்ட் டக்" என்ற வாத்தினை உலகத்திற்குப் பரிசாகப் பிடித்து வந்தார். சிறியவர் முதல் பெரியவர் வரை அத்தனை பேரும் அந்த வாத்தின் சேட்டைகளைப் பார்த்து மூச்சு முட்டச் சிரித்து மகிழ்ந்தனர்.

பீரங்கிகளையும் வெடிகுண்டுகளையும் பயன்படுத்தி ஹிட்லரும் முசோலினியும் மொத்த ஐரோப்பாவையும் ஆக்கிரமிக்கப் புறப்பட்ட சமயம் அது. டிஸ்னி ஒரு சுண்டெலியையும் வாத்தையும் வைத்துக் கொண்டு மொத்த உலகையும் முற்றுகையிட்டார். திரைப்படங்கள் மட்டுமல்ல T.V. கார்ட்டூன், புத்தகங்கள், டிஸ்னி லாண்ட் என்று டிஸ்னியின் சாம்ராஜ்யம் விரிவடைந்தது. தனது ஓவியர்களையும் கலைஞர்களையும் டிஸ்னி மாய்ந்து மாய்ந்து உற்சாகப்படுத்துவார்.

காரணம் டிஸ்னி சிறுவனாக இருந்தபோது இவருக்கு ஓவியம் வரைவதற்கு பேப்பரும், பிரஷும் வாங்கிக் கொடுக்கும் அளவுக்குக்கூட .இவர் வீட்டில் வசதியில்லை. அது மட்டுமல்ல ஒருமுறை ரோடு போட அரசாங்கம் வைத்திருந்த தாரை குச்சியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்து இவர் குதிரை, மாடு என்று ஓவியம் போட ஆரம்பித்தபோது இவரின் அப்பா “தறுதலையே” என்று திட்டினார். இவரின் ஓவிய ஆர்வத்திற்கு பள்ளிக் கூடத்திலும் இதேமாதிரி “உற்சாகம்” தான் உருப்படாதவன் என்கின்ற உயர் பட்டம் வேறு. மிகப் பெரிய தோல்விகள். அப்போதெல்லாம் கூட டிஸ்னி சொன்னார் கடல் அளவு ஆசை கொள் குளமாவது வெட்டலாம் என்பதே.

ஒரு தோல்விக்குள் உன் மகிழ்ச்சி உடைந்து விட்டதா? உன் முயற்சி அழிந்து போனதா? உனது முயற்சியில் ஓட்டை இருந்திருக்கிறது.

நீ மனிதன் என்பதை தோல்விதான் உனக்கு ஞாபகப்படுத்துகிறது. தோல்வியைச் சந்திக்காத வெற்றியாளன் இதுவரை இந்த பூமிக்கு வந்ததில்லை. தோல்வி தொடராக உன்னைத் திருடினால் நீ எச்சரிக்கையாக இல்லை. நீ விழுந்தால் தான் உன்னால் எழ முடியும் என்று நம்பு. சூரியன் மறைந்து விட்டதே என்று நீ கண்ணீர் திறந்தால் அடுத்த விடியலில் நீ மடையன். தோல்வியைக் கற்களாக்கி வெற்றி வீடு செய். வெற்றியின் மரியாதை உனக்குப் புரிய வேண்டுமா? நீ தோல்வி சூடிப்பார். உன் மனதைப் பாழாக்கி விட்டு உடலை மட்டும் நீ வருத்தினால் வெற்றி உன் விலாசத்திற்கு வராது. நீ மனதைப் பலமாக்கு, வளமாக்கு, நீ மீண்டும் மீண்டும் விழுகிறாயா? நீ உன் பலத்தை இன்னும் கண்டெடுக்கவில்லை. தோல்வி உன்னைப் பரீட்சிக்கின்ற வினாத்தாள். பயப்படாமல் துணிவோடு பதில் எழுது. வெற்றி உன் தோள்களில்.

உலகத்தில் இருக்கும் உல்லாசப் பொழுது போக்கு பூங்காக்களை வரிசைப் படுத்தினால் இன்று உலகத்திலேயே “நம்பர் வண்” அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் இருக்கும் “டிஸ்னி லேண்ட்” தான். நமது மதிப்பில் சில ஆயிரம் ரூபாய் நுழைவுக் கட்டணமாக வசூலிக்கும் இந்த பார்க் பூலோகத்தில் இருக்கும் ஒரு சொர்க்கம் ஒரு ஆண்டுக்கு இந்த பார்க்குக்கு வருகை தரும் விசிட்டர்களின் எண்ணிக்கை என்ன தெரியுமா? சுமார் ஒனறரைக் கோடி பேர்கள். இந்த நிறுவனத்தின் ஆண்டு வருமானம் இன்றை திகதிக்கு சுமார் 30 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். 3,00,000 கோடி ரூபாய்க்கள்.

இதில் ஒரு விசித்திரம் இருக்கிறது. டிஸ்னி சிறுவனாக இருந்தபோது பள்ளிக்கூடம் போகும் வழியில் ஒரு சின்னப் பூங்கா இருந்தது. கட்டணம் செலுத்தினால் தான் அதன் உள்ளே போய் விளையாட முடியும். ஒவ்வொரு நாளும் பள்ளி முடிந்து வீடு திரும்பும்போது டிஸ்னி அந்தப் பூங்காவை ஏக்கத்தோடு வெறித்துப் பார்த்துவிட்டுத்தான் வீடு திரும்புவார்.

ஆனால் ஏழ்மையில் வாடிய சிறுவன் டிஸ்னியால் ஒரே ஒரு நாள் கூட அந்தப் பூங்காவுக்குள் சென்று விளையாட முடிந்ததில்லை. பிற்காலத்தில் பணத்திலே விழுந்து புரளும் அளவுக்கு டிஸ்னியிடம் செல்வம் சேர்ந்தாலும் சாதாரண அமெரிக்கர்களைப் போலத்தான் வாழ்க்கை நடாத்தினார். வெற்றியாலும் செல்வத்தாலும் அவரின் வாழ்க்கை முறையை மாற்ற முடியவில்லை. இருந்தாலும் அவருக்கு என்று ஒரே ஒரு ஆடம்பரம் இருந்ததுண்டு அது என்ன தெரியுமா? ரயில்.

சின்ன வயதில் இருந்தே டிஸ்னிக்கு ரயில் என்றால் கொள்ளை ஆசை. அதனால் வசதி வந்த பிறகு அவர் தனது வீட்டைச் சுற்றி ரயில் பாதை போட்டு அதில் ஒரு பழைய கால ரயிலை அவரே ஓட்டி விளையாடுவார்.

வளைந்து வளைந்து நதி போல் நீ ஓடினால் கடலை அடைவதற்கு நேரமாகலாம். மழைத்துளிகள் போல் நேராக விழு. நீ உனது நேரங்களை அட்டவணைப்படுத்தும் போது வெற்றியை அண்மித்து விட்டாய். உன் மூச்சைக் காலத்திடம் ஒப்படைத்து நீ இயங்கினால் வெற்றி உன் விரலில் உட்காரும். தோல்வி உன்னில் காயம் உண்டாக்கினால் இன்னும் பலம் இழக்கிறாய். உன்னை இன்னும் இயக்கினால் பலன் அடைவாய். பலம் வெறுவாய்.

“கடல் அளவு ஆசை கொள், குளமாவது வெட்டலாம்.”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்பாடாகச் செயற்பட வேண்டிய கண்டி மாவட்ட தமிழர்கள்

த. மனோகரன்

துணைத் தலைவரும் கல்விக்குழுச் செயலாளரும்
அகில இலங்கை இந்துமாமன்றம்

கண்டி மத்திய மாகாகணத்தின் ஒரு மாவட்டமாகியுள்ளதுடன் கண்டி மாநகரமும் அம் மாகாணத்தின் தலைநகரமாகவுமுள்ளது. 1815 பெப்ரவரி 18 ஆம் திகதி ஆங்கிலேயரால் அன்றைய கண்டி மன்னன் கண்ணுசாமி என்ற ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் கைது செய்யப்பட்டு 1815 மார்ச் 02 ஆம் திகதி ஒப்பந்தத்தின் மூலம் கண்டி இராச்சியம் ஒப்படைக்கப்பட்டது. கண்டி அரசன் அவ்வொப்பந்தத்தில் ஒப்பமிடவில்லை. கண்டியைச் சேர்ந்த சிங்களப் பிரதானிகளும் மத குருமாரும் ஆங்கிலேயருடன் அவ் வொப்பந்தத்தில் ஒப்பமிட்டனர் என்பது வரலாற்றுப் பதிவாகும். இக் கண்டி இராச்சியம் சுதேசிகளின் ஒப்புதலுடன் ஆங்கிலேயரின் ஆட்சிக்கு அடிமைப்பட்டது. 1985 அதாவது கண்டி அரசின் வீழ்ச்சிக்கு முந்திய எழுபத்து நான்கு ஆண்டுகள் நாயக்க வம்சத்தைச் சேர்ந்த தமிழர்களே கண்டியை ஆண்டனர் என்பது வரலாற்றுப் பதிவு.

கண்டித் தமிழர்களின் பண்டை இருப்பின் உறைவிடம் பாரம்பரிய பூமி என்றாலும் மறுக்க முடியாது. கண்டியின் கடைசி அரசன் கண்ணுசாமி என்கின்ற ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் 1815 ஜனவரி 21 ஆம் திகதி நாடு கடத்தப்பட்டு தமிழ்நாட்டிலுள்ள வேலூ ரில் சிறையில் அடைக்கப்பட்டான்.

இந்நிகழ்வு நிகழ்ந்து இருபத்தி நான்கு ஆண்டுகளுக்குப் பின் அதாவது 1839 இல் இந்தியாவிலிருந்து பெருந்தோட்டங்களில் வேலை செய்வதற்காக தொழிலாளர்களாகத் தமிழர்கள் கொண்டுவரப்பட்டனர். அவர்களையே அதாவது 1839 க்குப் பின் வந்தவர்களையே இந்திய வம்சாவளித் தமிழர்கள் என்கின்றோம். குறித்த காலத்தின் பின் தொழிலாளர்கள் மட்டுமல்ல வர்த்தகர்களும் பிறதொழில்களை ஆற்றுவோரும் வந்து குடியேறியுள்ளனர். எவ்வாறாயினும் இன்று மலையகத் தமிழர் என்று அடையாளப்படுத்தப்படும் இந்திய வம்சாவளித் தமிழர்களின் வருகைக்கு முன்பே மலையகத்தில் தமிழர்கள் வாழ்ந்தார்கள், ஆண்டார்கள் என்பதற்குத் தெளிவான சான்றுகளுள்ளன. அவை மறைக்கப்படுகின்றன.

இவ்வாறுள்ள நிலையில் கண்டி மாவட்டத்தில் வாழும் இன்றைய தமிழர் நிலையை ஆராயும்போது பல நிறைவேற்றப் படாமலுள்ள தேவைகளைக் கண்டுகொள்ள முடிகின்றது. போதிய அரசியல் பலமின்மையும் அரசியல் மற்றும் தொழிற்சங்க ரீதியாக நிலவும் போட்டிகளும் கண்டி மாவட்ட தமிழர்களின் முன்னேற முடியாமைக்கான ஏதுக்காளக உள்ளன. பெரும்பாலும் பெருந்தோட்டங்களிலேயே தமிழர்கள் வாழ்கின்றபோதிலும் கணிசமான அளவினர் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வசதிகளுடன் வாழ்பவர்களாயுமுள்ளனர். அதிக அளவில் ஆசிரிய தொழிலிலும் பணியாற்றுகின்றனர். தனியார்துறையும் இவர்களுக்குக் கைகொடுத்து வருகின்றது. கண்டி மாவட்டத்திலிருந்து பாராளுமன்றத் திற்கு ஒருவரும், மாகாணசபைக்கு இருவரும் தெரிவு செய்யப்பட்டனர். மக்கள் எண்ணிக்கை வீதத்தை நோக்கும்போது இதற்கு மேலும் ஒற்றுமையாயிருந்தால் பெற்றிருக்கலாம். மாநகர, நகர, பிரதேச சபைகளிலும் தமிழர்களின் பிரதிநிதித்துவ வீழ்ச்சிக்கு அவர்களிடையே நிலவும் போட்டி பொறாமைகளே அடிகோலுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2003. 04. 07 ஆம் திகதி 1287-3ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் கண்டி மாவட்டத்தின் பன்வில, அக்குறணை, தெல்தோட்டை, உடபலாத்த, பஸ்பாகே கோறளை ஆகிய ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளும் அன்றைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவால் சிங்களத்தடன் தமிழுக்கும் சம இணை ஆட்சிமொழி உரிமையுள்ள பிரதேச செயலகப் பிரிவுகளாகப் பிரகடனப்படுத்தப் பட்டன. குறித்த வர்த்தமானி அறிவித்தலுக்கு இன்று வயது பதினைந்து.

அதேபோல 2012. 10. 10 ஆம் திகதிய 1771-16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் கண்டி மாவட்டத்தின் கங்கஇஹல கோறளை மற்றும் கண்டி நகர் சூழ் பிரதேசமும் கங்கவட்ட கோறளையும் தமிழுக்கும் சிங்களத்துடன் சமத்துவ ஆட்சியுரிமை கொண்ட பிரதேச செயலகப் பிரிவுகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இப்பிரகடனத்தின் வயது ஆறு.

இது தவிர நான்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு கண்டி மாவட்டத்தின் தொழுவை, மெததும்பற, பாத்ததும்பற, உடுநுவர ஆகிய நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளும் தமிழ் மொழிக்கும் இணையுரிமை உள்ள செயலகப் பிரிவுகளாகப் பிரகடனப்படுத்தப்பட அடையாளம் காணப்பட்டுள்ளபோது அது தொடர்பில் மேற்கொண்டு எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. கண்டி மாவட்ட அரச அலுவலகங்களில் தமிழ் மொழியில் சேவைகளைப் பெற்றுக்கொள்ள வசதிகள் அற்ற நிலையே காணப்படுகின்றது.

இம் மாவட்டத்திலுள்ள ஆறு கல்வி வலயங்களான வத்தேகம, தெல்தெனிய, கட்டுகஸ்தோட்டை, கம்பளை, கண்டி, தேநுவர ஆகியவற்றில் நூற்றுநான்கு தமிழ்ப் பாடசாலைகள் இயங்குகின்றன. இவற்றில் நாற்பத்தொரு ஆரம்பப் பாடசாலைகளும் கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரணதரம் வரையுள்ள நாற்பத்துமூன்று பாடசாலைகளும் கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்புகளில் கலை மற்றும் வர்த்தகப் பிரிவுகளைக் கொண்ட பதினாறு பாடசாலைகளும் உயர் தரத்தில் கணிதம் மற்றும் விஞ்ஞான பிரிவுகளைக் கொண்டதாக நான்கு தமிழ்ப் பாடசாலைகளும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

பல பாடசாலைகள் குறிப்பாக ஆரம்ப பாடசாலைகள் பெருந்தோட்டப் பகுதிகளிலே உள்ளன. அவற்றிற்குச் சீரான பாதை மற்றும் குடிநீர், கழிவறை வசதிகளும் குறைபாடுகள் நிறைந்தவைகளாகவே கண்டறியப்பட்டுள்ளன.

மாவட்டத்திலுள்ள தமிழ்த் தேசிய பாடசாலைகளிலாகட்டும் மாகாண சபைக்குரிய பாடசாலைகளிலாகட்டும் அவற்றில் நடைபெறும் வகுப்புகளுக்குரிய தகைமையான ஆசிரிய ஆளணிப்பற்றாக்குறை தொடர்கின்றது. பல பாடசாலைகள் பெயரளவில் தரமுயர்த்தப்பட்டுள்ள போதிலும் அவற்றில் கற்கும் மாணவ மாணவிகளின் கல்வித் தேவையை உரியபடி நிறைவேற்றக் கூடியதாயில்லை. இதுவே யதார்த்த நிலை. கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்கள் இன்றியே அப்பாடங்கள் சாதாரண தரப் பொதுப் பரீட்சைக்குக் கட்டாய பாடங்களாகவுள்ள போதும் குறித்த பரீட்சைக்கு தமிழ் மாணவ, மாணவியர் தோற்றி வருகின்றனர். இரு மொழிப் பாடசாலையான கண்டி மகளிர் உயர்தரப் பாடசாலையும் அதேபோல் இராஜவெல இந்து தேசிய பாடசாலையும் 1 ஏ.பி. தரத்திலுள்ள உயர்தர வகுப்பில் கலை, கணிதம், வர்த்தகம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளை உள்ளடக்கிய தேசிய பாடசாலைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ள போதிலும் தமிழ்ப் பிள்ளைகள் உரிய உயரிய சமத்துவக் கல்வியைப் பெற பல தடைகளும் காணப்படுகின்றன.

தமிழ்ப் பாடசாலைகளின் சிற்றூழியர் களாக நியமனம் செய்வதற்கு அதற்கேற்ற தகைமை இன்மையாலோ என்னவோ தமிழர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாதவர்கள் பெருமளவில் நியமிக்கப் பட்டுள்ளனர். அரச சேவையில் உரிய தகைமையுள்ள தமிழர்கள் உள்ளீர்க்கப்படாத நிலையை உணர முடிகின்றது. இது தொடர்பில் உள்ளூர் அரசியல்வாதிகள் கவனமெடுக்க வேண்டும். உரிய பொறுப்பைத் தட்டிக் கழிக்க முடியாது.

ஒட்டுமொத்தமாக நோக்கும்போது கண்டி மாவட்டத்தின் தமிழ் மக்கள் தமது பிள்ளைகளின் தரமான கல்வியுரிமையைப் பெற்றுக் கொள்வதற்கும் மொழியுரிமையைப் பயன்படுத்துவதற்கும் அதன் மூலம் தொழில் மூலம் மற்றும் இருப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் அரசியல், தொழிற்சங்க மற்றும் வெறுபாடுகளைக் கைவிட்டு சமூக நலன்கருதி ஒன்றுபட்டு இணைந்து செயற்பட வேண்டும்.. நம்மிடையே நிலவும் பிளவுகளும், பகைமையும் நமது சமுதாயப் பின்னடைவுக்கான ஏதுக்கள் என்பதை உணர்ந்து கட்டுப்பாடாகச் செயற்பட்டால் நமது தேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். நமது பிரதிநிதித்துவங்களைப் பேணவும் அதிகரித்துக் கொள்ளவும் முடியும்.

குடும்பத்திலும் சரி, அலுவலகத்திலும் சரி, மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும் ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமல் இருக்க ....

- ❖ நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை விடுங்கள்.
- ❖ அர்த்தமில்லாமலும் பின்விளைவு அறியாமலும் பேசிக் கொண்டேயிருப்பதை விடுங்கள்.
- ❖ எந்த விஷயத்தையும் பிரச்சினையையும் நாசுக்காக கையாளுங்கள் - விட்டுக்கொடுங்கள்.
- ❖ சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆக வேண்டும் என்று உணருங்கள்.
- ❖ நீங்கள் சொன்னதே சரி, செய்ததே சரி என்று வாதாடாதீர்கள் குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள்.
- ❖ உண்மை எது, பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும் அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள்
- ❖ மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர்கள்
- ❖ அளவுக்கதிகமாய், தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள்
- ❖ எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும் அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்
- ❖ கேள்விப்படுகிற எல்லா விஷயங்களையும் நம்பி விடாதீர்கள் அற்ப விஷயங்களைப் பெரிதுபடுத்தாதீர்கள்
- ❖ உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள்
- ❖ மற்றவர் கருத்துக்களில் செயல்களை நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாக புரிந்து கொள்ளாதீர்கள்
- ❖ மற்றவர்களுக்குரிய மரியாதை காட்டவும், இனிய, இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள்
- ❖ புன்முறுவல் காட்டவும் சிற்சில அன்புச் சொற்களை சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.
- ❖ பேச்சிலும் நடத்தையிலும் பண்பில்லாத வார்த்தைகளையும் தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதைத் தவிர்த்து அடக்கத்தையும் பண்பையும் காட்டுங்கள்
- ❖ அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்
- ❖ பிரச்சினைகள் ஏற்படும்போது அடுத்தவர் முதலில் இறங்கி வர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத்துவக்க முன் வாருங்கள்.

- தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்னஸ் சாதனைக் கனவுகளுடன் நடனக்கலைஞரான ஆர். ஏ. விக்னேஷ்வரன்



கனவுகள் பல கண்டு சில கனவுகள் நிறைவேற மிகுதி கனவுகளை எப்பொழுது நிறைவேற்ற வாய்ப்பு கிடைக்குமென ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர் நான் மலையக மண்ணான பொகவந்தலாவை கொட்டியாகலை தோட்டத்தைச் சேர்ந்த விக்னேஷ்வரன்.

சிறுவயதில் இருந்து தந்தையின் அரவணைப்பின்றி தாய் மனோன்மணி, மற்றும் அம்மம்மாவின் அரவணைப்பில் வாழ்ந்தேன். நடனத்திலும் நடைப் பயணத்திலும் அன்றி கரப்பந்தாட்டத்திலும் ஒரு சாதனையை நிலைநாட்ட வேண்டுமென்று பல வருடங்களாக கண்ட கனவுகள் ஒரு சில நல்ல உள்ளங்களான தாயான மனோன்மணி, தோட்டத் தலைவர்களான மணிவண்ணன், வெள்ளையன், சந்திரபோஸ், சிவன் ஆகியோராலும், விளையாட்டுத் துறையில் சரவணன், பன்னீர்செல்வம், பாஸ்கரன், சூட்டி, சிவனேசன் ஆகியோராலும் முக்கியமாக சிறி அண்ணாவின் மூலமும் நிறைவேறியது. நான் 2016.06.17 ந் திகதி காதல் திருமணம் செய்துகொண்ட பின்பு எனது கனவுகளை இடைநிறுத்தம் செய்துவிட்டேன். அடுத்த மாதம் எனது புதிய உறவாக இந்த உலகத்தை எனது மகனோ, மகளோ பார்க்க இருக்கின்றார்கள். அதனால் மீண்டும் எனது கனவுகளை நிறைவேற்ற தயாராகப் போகிறேன்.

நடனத் துறையில் செய்த சாதனைகள்:

முதல் சாதனையாக 2002ஆம் ஆண்டு தெரண சுப்பர் ஸ்டார் பட்டத்தை நானும் எனது இரட்டைச் சகோதரனான தயாபரனும் பெற்றது. 2013ஆம் ஆண்டு ஸ்பாக்ஸ் மைதானத்தில் தொடர்ந்து 12 மணித்தியாலங்களும் 2015ஆம் ஆண்டு இந்தியாவிற்குச் சென்று ராகவா லோரன்ஸ் சேருடன் நடனம் பயின்று நடனத்தில் ''சாதனை தமிழன்'' பட்டம் பெற்றதும், மேலும் 2015.06.06ந் திகதி தொண்டமான் விளையாட்டுத் திடலில் 100 மாணவர்களுடன் 12-1/2 மணித்தியாலங்கள் தொடர்ந்து நடனமாடி சாதனை புரிந்தேன். 2015.10.21ந் திகதி மேலும் தொடர்ந்து 09 நாட்கள் நானும் 10 நாட்கள் எனது சகோதரனும் நடன சாதனையைப் புரிந்தோம்.

நடைப் பயணத்தில் செய்த சாதனை :

2013.09.22 ந் திகதி புத்தளத்திலிருந்து கொழும்பு ஊடாக பொகவந்தலாவை நோக்கி 22 மணித்தியாலங்கள் 45 வினாடிகளில் நடைப் பயணத்தையும், 2015.06.27 ந் திகதி கொழும்பிலிருந்து பொகவந்தலாவை நோக்கி 18 1/2 மணித்தியாலங்கள் நடைப் பயணத்தை மேற்கொண்டு சாதனை புரிந்தது.

நான் செய்யவிருக்கும் சாதனை:

இந்த வருடம் (2017) ஒக்டோபர் மாதம் 01 ந் திகதி சீதுவை ஆடை நிறுவனத்தின் உதவியோடு மீண்டும் ஒரு நடைப் பயணத்தை நிகழ்த்தி இருக்கின்றேன். புத்தளத்திலிருந்து சீதுவை நோக்கி 12 மணித்தியாலத்தில் நடைப் பயணத்தை மேற்கொண்டிருந்தேன். எனது முயற்சிக்கு முடிந்தளவு உதவுமாறு எனது நண்பர்கள், உறவினர்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

நான் சாதனை செய்வது புகழுக்காகவோ, பணத்திற்காகவோ அல்ல. மலையக மக்களின் சாதனைகளை, திறமைகளை இந்த உலகத்திற்கு வெளிக்காட்டி மலையக மண்ணிற்கு பெருமையை சேர்க்க வேண்டுமென்ற எனது ஆசை. என்னைப் பார்த்து என்னைப்போன்ற திறமைசாலிகளும் அவர்களது சாதனைகளை நிலைநாட்ட முன்வர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக தலைநகராம் கண்டியில் வரலாற்று முத்திரை பதித்த அமரர் P. T. ராஜன்



1933 ம் ஆண்டு ஜூன் மாதம் 8ம் திகதி ஒரு இளைஞர் ஒரு ஹாக்கி ஸ்டிக்கை (Hockey Stick) கையில் எடுத்துக்கொண்டு இலங்கையை நோக்கி புறப்படுகின்றார். அவரின் கைகளில் இருந்தது ஹாக்கி மட்டை என்றால் அவன் நெஞ்சத்தில் இருந்தது துணிச்சல், தன்மானம், ஆர்வம் இவை மூன்றும் தான். அவர் தான் பின்னர் இலங்கையின் பிரபல்யம் பெற்ற சமூக சேவகனாகவும் அசோகா ஹாஸ்டல், அசோகா வித்தியாலயம் என்பவற்றின் உரிமையாளராகவும் விளங்கிய பீ. டி. ராஜன் ஆவார்.

அமரர் பீ. டி. ராஜன் அவர்கள் அன்று காலடி எடுத்து வைத்தபோது தான் ஒரு இலங்கையில் பேசத்தகு பிரபல்யமான குடிமகனாக இருப்பேன் என்றோ அல்லது மலையக மாணவர்களை வழிநடத்தும் பெரும் பணியாற்ற முடியும் என்றோ கிஞ்சித்தும் எண்ணவில்லை.

இலங்கை வந்தவுடன் அமரர் ராஜன் அப்படியொன்றும் திடீரென்றும் சமூகசேவையில் ஈடுபடவில்லை. முதல் அவர் கிங்ஸ்வுட் கல்லூரியில் ஆசிரியரானார். அங்கு தமிழ் இலக்கியத்தை கற்பிக்க ஆரம்பித்த அவர் மிக நிதானமாக மலையக மக்களின் வாழ்க்கையை நோக்குகின்றார். கல்வி அறிவில் குறைவாக மூடநம்பிக்கை, வறுமை என்பவற்றில் அல்லல்படுகின்ற மக்களை எண்ணி இவர் கவலைப்படுகின்றார். எனவே, கல்வியில் முன்னேற்றம் காணவேண்டும் என்ற எண்ணம் அவர் மனதில் இளையோடிப்போனது. அவர் கண்டி புனித சில்வஸ்டர்ஸ் கல்லூரியில் தமிழ் ஆசிரியராக கற்பிக்க ஆரம்பித்த காலத்தில் பலருடைய அறிமுகம் அவருக்குக் கிடைக்கின்றது. அத்துடன் அவரிடம் கல்வி கற்ற, கற்கின்ற மாணவர்கள் அவரின் முயற்சிக்கு துணை நிற்கின்றனர். உதாரணமாக திரு. பழ தங்கவேல் போன்றவர்களின் ஆலோசனை அவருக்கு துணையாக இருந்தது. இச்சமயத்தில் புனித சில்வஸ்டர்ஸ் கல்லூரியின் மாணவர் விடுதியை மூட வேண்டிய சூழ்நிலை நிர்வாகத்திற்கு ஏற்பட்டது. எனவே, அங்கிருந்த மலையகத்தைச் சார்ந்த மாணவர்களின் நன்மைகருதி அசோகா ஹாஸ்டல் என்ற விடுதியை பீ. டீ. ராஜன் ஆரம்பிக்கின்றார். இது 1935ம் ஆண்டு இடம்பெறுகின்றது. ஆரம்பத்தில் 09 மாணவர்களுடன் ஆரம்பமான ஹாஸ்டல் பின்னர் பல நூற்றுக்கணக்கான மாணவர்களைக் கொண்ட விடுதியாக மாறுகின்றது. மாணவர்களிடம் காணப்பட்ட சமூக பிளவுகளை முதலில் களைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னம் பிக்கை, விடாமுயற்சி என்பவற்றுடன் ஒழுக்கத்தையும் மாணவர்களிடம் வளர்த்தார். எனவே, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பன அசோகா ஹாஸ்டலில் தாரக மந்திரமாகியது.

மாணவர்களின் சமூக வாழ்க்கை கல்வி, அறிவு, நாகரீகம், தேச சேவை ஆகிய பல சேவைகளிலும் புத்துயிரளிக்க முயற்சி செய்தார். கல்வி, ஒழுக்கம், விளையாட்டு என்பன முக்கியமானதாக ஹாஸ்டலில் பின்பற்றப்பட்டன.

1951ம் ஆண்டு இந்திய அரசியல் தலைவர் சுதந்திர இந்தியாவின் போராளியான ராஜகோபாலாச்சாரியரின் ஆலோசனையின்படி இந்திய மாணவர் ஹாஸ்டல் ''அசோக மாணவர் ஹஸ்டல்'' என்று பெயர் சூட்டினார் பீ. டி. ராஜன். இப்பெயர் மாற்ற வைபவத்திற்கு சட்டத்தரணி திரு. ஏ. எஸ். கருணாரட்ன ஜே. பி. யூ. எம். தலைமைதாங்கினார். அமரர் பீ. டி. ராஜனின் நெருங்கிய சகாக்களாக திரு. ஈ. எல். சேனாநாயக்க, திரு. கனகநாயகம், டாக்டர் சேர். சீ. பி. இராமசாமி ஐயர், திரு. வில்மட் ஏ. பெரேரா, திரு. ஏ. வீ. பாய், திரு. க. ப. சிவம் என்போர் ராஜன் அவர்களின் முயற்சிக்கு தமது ஆதரவை வழங்கினர்.

திரு. க. ப. சிவம் ஹாஸ்டல் மாணவர்களைக் கொண்டு வெள்ளிவிழா மலர் ஒன்றை வெளியிட்டமை பீ. டி. ராஜன் எப்போதும் எல்லா உரைகளிலும நினைவு கூர்ந்தார். இவர் தனது வாழ்க்கையில் தனக்குதவிய அனுசரணையாக இருந்த ஆலோசனை வழங்கிய துணையாக நின்ற தனது சக பெரியோர்கள், நண்பர்கள், மாணவர்கள் என்போரை எப்போதும் நினைவு கூருவார். அவர்களை முக்கியமாக இந்திய தூதுவர் விடல் பாய், ராஜாஜீ, வில்பர்ட் ஈ. டீ. சில்வா, எஸ். என். நடராஜா, டீ. ஏ. தேவேந்திரா, கண்டி நகரபிதா ஈ. எல். சேனநாயக்க, எம். பி., திரு. டீ. ஜே. என். செனவிரத்ன, திரு. க. ப. சிவம், திரு. சி. மயில்வாகனம், திரு. எஸ். எஸ். நாதன், ஏ ரட்நாயக்க, திரு. ஜோர்ஜ் டீ சில்வா, திரு. ஆர் கோவிந்தசாமி, திரு. கே. கனகநாயகம் முதலியார், ..திரு. எச். எட். அலுவிகார, கெப்டன் ஏ. எல். பெருமாள், திரு. ரணராஜா, திரு. டீ. ஜே. வி. என். செனவிரத்ன, திரு. கி. வா. ஜெகநாதன், திரு. ஜே. டி. ராவ், திரு. வி. சுப்ரமணியம் என்போர் முக்கியமானவர்கள்.

மலையக இளைஞர்களை ஒன்று திரட்டி இளைஞர் அணி ஒன்றை ஏற்படுத்த வேண்டும். அதன் மூலம் சமூக சீர்திருத்த கருத்துக்களை முன்னெடுக்க வேண்டும் என்று ராஜன் எண்ணம் கொண்டார். எனவே மலைநாட்டு நல்வாழ்வு வாலிபர் சங்கம் என்ற அமைப்பை உருவாக்கி அதில் இளைஞர்களை அணி திரளச் செய்தார். திரு. இர. சிவலிங்கம், திரு. திருச்செந்தூரன் போன்றவர்கள் ஆரம்பகால உறுப்பினர்களாக இருந்தனர்.

இந்த அமைப்பு இக்கால இளைஞர்கள் சமூக வாழ்வில் ஒன்றிணைய வழிகாட்டியாக அமைந்தது. இதில் இணைந்திருந்த இளைஞர்களே பின்னர் மலையக இளைஞர் முன்னணி உறுப்பினர்களாகி சமூகமாற்றத்து அரசியலை ஆர்வத்தை ஆரம்பித்தனர். அசோகா வித்தியாலய அதிபர் செ. நடராஜா அவர்களுக்கும் பி.டி. ராஜன் அவர்களுக்குமான தொடர்பு மிகவும் உத்தமமானது. அமரர் ஏ. கே. கந்தையா, பி. பீ. விஜேசேகர ஆகியோருக்கு பின் ஜே. ஓ. மென்டிஸ் அசோக வித்தியாலய அதிபராகிறார். அவரின் பின் 1972ம் ஆண்டு செ. நடராஜா அவர்களிடம் வித்தியாலாய பொறுப்பு நம்பிக்கையுடன் ஒப்படைக்கப்படுகின்றது. 1980ம் ஆண்டு பாடசாலை வெள்ளி விழாவை செ. நடராஜா அவர்கள் கொண்டாடியதை பீ. டீ. ராஜன் அவர்கள் என்றும் நினைவு கூருவார். இதிலிலுள்ள பெறுமதி என்னவென்றால், பீ. டீ. ராஜனின் மாணவரே செ. நடராஜா ஆவார். அவரை செம்மொழிப் பேச்சாளராக்கியதே பீ. டீ. ராஜனும் அசோக ஹஸ்டலும் தான்.

இந்திய பிதா மகன் மகாத்மா காந்திக்கும் பீ. டீ. ராஜன் அவர்களுக்கும் அசோகா ஹாஸ்டலுக்கும் நெருக்கமான தொடர்பிருந்து வந்திருக்கிறது. அன்னை கஸ்தூரிபாய் தேசிய ஞாபகார்த்த நிதிக்கு அசோகா மாணவர்களிடமிருந்து சேர்த்த 133 ரூபாவை 1944ம் ஆண்டு அனுப்பினார். அதற்கு மகாத்மா காந்தி அனுப்பிய நன்றி கடிதம் குறிப்பு கூறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றென்றும் மறக்க முடியாத எழுத்தாளர் தலாத்து ஓய

கே. கணேஷ்

நிர்வாக ஆசிரியர்
செய்தி ரா. மு. நாகலிங்கம்

மறைந்த அன்பர் கே. கணேஷ் அவர்களோடு சுமார் 50 வருடங்களுக்கு மேலாக மிக மிக நெருங்கிப்பழகியவை பசுமையாக நினைவில் நிற்கின்றன. அவர் தலைசிறந்த எழுத்தாளர் மட்டுமல்ல நட்புக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர். நான் கம்பளையிலிருந்த பின் கண்டியிலிருந்து நான்கு கல் தொலைவில் உள்ள குருதெனிய என்ற ஊருக்கு 1949 ஆம் ஆண்டு வந்து தென்னங்கீற்றுகள் வேய்ந்த ஒரு சிறிய வீட்டில் தங்கி "ஜெகஜோதி" என்ற பெயரில் தொழில் நடத்தி வந்த காலம். அருமை நண்பர் கணேஷ் அவர்களைப்பற்றி எழுத ஆரம்பித்த நான் சுயபுராணத்தை அதிகமாக எழுதுவதற்கு விரும்பவில்லை.

என்னுடைய இளமைக் காலம் முதல் இலக்கிய ஆர்வம் காரணமாக தமிழ் தினசரிகள் குறிப்பாக 'வீரகேசரி', 'கல்கி', 'ஆனந்தவிகடன்', 'கலைமகள்', அக்காலத்தில் வெளிவந்த ஜனசக்தி, தமிழ்மணி முதலிய பல பத்திரிகைகளை வாங்கிப் படித்து என்னுடைய இலக்கிய ஆர்வத்தை வளர்த்துக் கொண்டேன். 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஆனந்தவிகடனை விட்டு விலகி 'கல்கி' பத்திரிகை தொடங்கிய காலத்திலிருந்தே வாங்கி படித்து வருபவன். சுமார் 50, 60 வருடங்களுக்கு முன்பு தமிழ் தினசரிகளில் வீரகேசரி பத்திரிகையை தமிழ் மக்கள் விரும்பி வாங்கி படிப்பதை அறிவேன். வீரகேசரியில் அமரர், வ. ரா. நல்லையா போன்றவர்கள் ஆசிரியர் பீடத்தில் அமர்ந்து சிறப்பளித்து அவர்கள் மறைவுக்குப் பின் அமரர் கே. பீ. ஹரன் அவர்கள் ஆசிரியராக இருந்த சமயத்தில் அமரர் லோகநாதன் ஆதித்தன் போன்றவர்கள் உதவி ஆசிரியராக இருந்தார்கள். அச்சமயம் ஹரன் அவர்கள் வீரகேசரியில் "ஊர்குருவி"

என்ற தலைப்பில் (வீரகேசரி கடைசிபராவில்) எழுதி வந்தார்கள். 1950-51 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன்.

ஒரு நாள் கே. கணேஷ் அவர்களைப் பற்றி ஒரு சிறிய குறிப்பு எழுதி இருந்தார்கள். அமரர் கணேஷ் அவர்கள் களங்கமற்ற உள்ளம் கொண்டவர், ஆன்மீகத்தில் பற்றுக் கொண்டவர், தலாத்து ஓயா என்ற ஊரில் இருக்கிறார் என்றெல்லாம் குறிப்பிட்டிருந்தார்கள். நான் இந்த செய்தியை படித்த பிறகு நேராக தலாத்து ஓயா கரந்தக் கொல்லை என்ற இடத்தில் அவர் தங்கி இருந்த வீட்டுக்குச் சென்று நானே அறிமுகப் படுத்திக் கொண்டு அன்று முதல் அவர் வாழ்க்கையின் இறுதிவரை அவரோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1983ல் நான் தமிழகம் வந்த பிறகும்கூட கடிதத்தொடர்புகள் தொடர்ந்தன. சளைக்காமல் Fullscap தாளில் 5 - 6 பக்கங்கள் எழுதுவார். அவர் இடதுசாரி கொள்கையை ஆதரிப்பவர். ஆனாலும் அரசியல், ஆன்மீகம், சமூக ஒன்றுமை இவைகளைப் பற்றி எல்லாம் விரிவாகக் குறிப்பிட்டு எழுதுவார். அப்பாஸ், ஹோசிமின் முதலியவர்களின் ஆங்கில நூல்களை எல்லாம் தமிழில் மொழி பெயர்த்து தமிழ் மக்களுக்கு வழங்கினார். "நீங்காத நினைவுகள்" என்ற தலைப்பில் எழுதிக் கொண்டிருக்கிறேன் என்று எனக்கு அடிக்கடி எழுதுவார். அவர் கனவு நினைவாகாமல் போய்விட்டது. சிங்கள இடதுசாரி தலைவர்களான கொல்வின் ஆர். டி. சில்வா, எம். ஜீ. மெண்டிஸ், பீற்றர் கெனமன், டி. பி. இலங்கரத்ன போன்றவர்களோடு நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார். தமிழக பொதுவுடமைத் தலைவர் ப. ஜீவானந்தம் என்பவர் தலைமறைவாக இலங்கை வந்திருந்தபோது அவருக்கு தக்க பாதுகாப்பு அளித்து அனுப்பி வைத்தார். எனக்கும் அவரை அறிமுகப்படுத்தி வைத்தார். 1951 என்று நினைக்கிறேன். உலப்பனை எஸ்டேட்டில் வாழ்ந்த பெரியண்ணபிள்ளை அவர்கள் கே. கணேஷ் அவர்களின் மாமா பீஜோ 203 என்ற ஒரு புதிய கார் வாங்கி இருந்தார். அதை கே. கணேஷ் அவர்கள் உபயோகத்துக்கு கொடுத்து கலைமகள் ஆசிரியர் மறைந்த கி. வா. ஜெகநாதன் அவர்களை இலங்கைக்கு அழைத்துவந்து இலங்கை முழுவதும் சுற்றி காண்பித்தார். எனது செய்தி பத்திரிகை காரியாலயத்திற்கும் வருகைதந்தது மட்டுமல்லாமல் என்னையும் உடன் அழைத்துச் சென்றார்.

பிற்காலத்தில் இலங்கை அரசு சாகித்திய அகாடமி பரிசு கொடுத்து கௌரவித்தது. வெளிநாட்டு இலக்கிய அன்பர்கள் கனடாவிலிருந்து வந்து பாராட்டும் பரிசும் அளித்துச் சென்றார்கள். கடந்த கால இந்து கலாசார, இராஜாங்க அமைச்சர் பீ. பீ. தேவராஜ் அவர்கள் இவருடைய மைத்துனர் என்பது குறிப்பிடத்தக்கது. அவருடைய பூர்வீக கிராமம் திருச்சி மாவட்டம் தத்தமங்கலம் என்றாலும் அவர் தந்தை அவர்கள் தலாத்து ஓயாவில் வாழ்ந்ததால் அமரர் கணேஷ் இலங்கையில் பிறந்து ஆரம்ப கல்வியை கற்றிருந்தாலும் கூட பின்பு மதுரை வந்து இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் ஜ. மாயாண்டி, பாரதி இல்லத்தில் தங்கி மதுரை தமிழ்ச் சங்கத்தில் ஈடுபாடு கொண்டு படித்து வளர்ச்சி அடைந்தார். அவருடன் முன்னாள் ஆசிரியராக பணியாற்றிய திரு. டி. எம். முருகையா அவர்களோடு நட்புக்கொண்டு உற்சாகத்துடன் இலக்கிய முயற்சிகளில் ஈடுபடத் தொடங்கினார். தமிழகத்தில் உள்ள மணிக்கொடி காலத்து எழுத்தாளர்கள் சரஸ்வதி "விஜயபாஸ்கரன்" போன்ற பல நூற்றுக்கணக்கான நண்பர்களின் தொடர்புகள் உண்டு. கே. கணேஷ் அவர்களின் மறைவின்போது நான் மதுரையில் மிகவும் உடல் நலம் பாதிக்கப்பட்டிருந்தேன். ஆகவே, அவர் ஆத்ம சாந்திக்காக என்னால் எதுவும் செய்ய முடியாமலிருந்தது.

அமரர் கணேஷ் அவர்களின் மறைவு இலக்கிய உலகுக்கு அளவிட முடியாத பேரிழப்பாகும்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ஈழநாடு பத்திரிகையின் வளர்ச்சிக்காகவும் அதன் உரிமையாளர் அமரர் கே. சீ. தங்கராஜா, கே. சீ. ஷண்முகரட்ணம் போன்றவர்களோடு நெருங்கிய நட்புக் கொண்டிருந்தார் என்றும் குறிப்பிடலாம்.

மதத்தின் பெயரால் எங்கள் மத்தியிலே தோன்றும் காட்சிகள் அச்சத்தைத் தருகின்றன. குருட்டு நம்பிக்கை, பிற்போக்கு, சாரமற்ற கொள்கை, துவேஷ மனப்பான்மை, மூடப் பழக்கவழக்கம், பிறரைச் சுரண்டுதல் முதலியவற்றின் பிரதி நிதியாகவே மதம் உபயோகம் பெறுகிறது. இதை நான் வெறுக்கிறேன்.

- ஜவஹர்லால் நேரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவலைகள் :

செம்மொழி வல்லான் மானுட நேயன் முதுநிலைத்தமிழ் விரிவுரையாளர் கலாநிதி எஸ். வை. ஸ்ரீதர் அவர்கள்

உலகிலேயே உலகப் பல்கலைக் கழகங்களின் வரலாற்றில் இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் மட்டுமே ஏறக்குறைய கால் நூற்றாண்டுகளாகப் பல்கலைக்கழகப் பட்டப்படிப்புக் கலைமாணி (B.A) ப் பரீட்சைக்குச் சிங்கள மொழிமூல மாணவர்களுக்குத் தமிழும் தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயிலும் தமிழ் சிறப்புக் கலைப் பட்டதாரிகளுக்குச் சிங்கள மொழியும் கற்பிக்கப்பட்டு வருகிறது. சப்ரகமுவ பல்கலைக்கழக சமூக விஞ்ஞான மொழிகள் பீடத்திலுள்ள மொழிகள் துறையில் (Department of Languages) இப்பொழுதும் 7 மொழிகள் கற்பிக்கப்படுகின்றன.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் அனுமதியுடன் சப்ரகமுவ பல்கலைக் கழகத்தை சமூக விஞ்ஞான மொழிகள் பீடத்தைத் திட்டமிட்டுத் தீர்க்கதரிசன நோக்குடன் வடிவமைந்த பெருமை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி தயானந்த சோமசுந்தர அவர்களையே சாரும். இப்பல்கலைக் கழகத்திலே தந்போது துணைவேந்தராயுள்ள பொருளியற்றுறைப் பேராசிரியர் கலாநிதி சுனில்சாந்த அவர்களது பரிபூரண ஒத்துழைப்புடன் இன்றும் மும்மொழித் திட்டம் நடைமுறையிலே உள்ளது. குறிப்பாக சிங்கள மொழி மூல மாணவர்களுக்குத் தமிழும் தமிழ் மொழி மூல மாணவர்களுக்குச் சிங்கள மொழியும் பட்டப்படிப்பு நிலையில் வழங்கப்பட்டு வருவது குறிக்கற்பாலது. அத்துடன் மொழிபெயர்பியல் என்னும் பாடநெறியும் உள்ளது.

சப்ரகமுவ பல்கலைக்கழக மொழிகள் துறையிலே கடந்த 22 வருடங்களாக ஒன்றாகப் பணிபுரியும் முதுநிலைத் தமிழ் விரிவுரையாளனாகவும் ஆப்த நண்பனாகவும் விளங்கிய குழந்தையுள்ளம் கொண்ட மானுடநேயன் கலாநிதி எஸ். வை. ஸ்ரீதர் திடீர் சுகயீனமுற்று எம்மைவிட்டுப் பிரிந்தமை ஆறாத் துயரை ஏற்படுத்தியுள்ளது.

தமிழைப் போதிப்பதையே தமது வாழ்விலட்சியமாகக் கொண்ட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஸ்ரீதர், சப்ரகமுவ பல்கலைக்கழகத்திலே சிங்களமொழி மூல மாணவர்களுக்குத் தமிழ் விரிவுரையாற்றிக் கொண்டிருந்தபோது வகுப்பில் திடீரென சுய நினைவிழந்து மயக்கமுற்றார். இயலாத நிலையிலே அவரை மாணவர்களும் விரிவுரையாளர்களும் முதலுதவிச் சிகிச்சைக்கென அண்மையிலுள்ள பம்பஹின்ன அரசினர் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றோம். பின்னர் வைத்திய நிபுணரின் பணிப்பின் பேரில் பலாங்கொடை அரசினர் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு அவருக்கு மேலதிக சிகிச்சை வேண்டும் என வைத்திய நிபுணர்குழு தீர்மானித்ததன் பேரில் இரத்தினபுரி அரசினர் வைத்தியசாலைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பின்னர் கொழும்பு அரசினர் வைத்தியசாலைக்கும் கொண்டு செல்லப்பட்டுத் தலையில் சத்திர சிகிச்சை இடம்பெற்றது. இக்கட்டுரையாளர் நாட்டில் இல்லாத போது அருமை நண்பராக ஸ்ரீதரின் மரணம் நிகழ்ந்துள்ளது. யான் எனது ஆப்த நண்பனை-அன்பனை-அபிமானியை--கிடைத்தற்கரிய மானுடநேயனை இழந்து துடிக்கிறேன்.

பேராதனைப் பல்கலைக்கழகத்திலே தமிழ் மொழியைச் சிறப்புப் பாடமாகப் பயின்று சிறப்புப்பட்டம் பெற்று இதன்பின் முதுகலை மாணிப்பட்டம் பெற்றுள்ளதுடன் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்ட இவர் மாணவர்களாலே பாராட்டுப்பெற்ற நல்லதோர் தமிழாசான், மொழிபெயர்ப்பாளன், அடிப்படை இலக்கண இலக்கிய விடயங்களைத் தெளிவுறப் போதிக்கும் ஆற்றலும், ஆளுமையும், திறமையும் மிக்கவர். தமிழகத்திலும் இலங்கையிலும் சர்வதேச ஆராய்ச்சி மாநாடுகளிலேயும் பங்கேற்றவர். ஊவா வெல்லஸ பல்கலைக்கழகத்துத் தமிழ்ப் பாடத்தின் பரீச்சகராகவும் பணிபுரிந்தவர்.

திருவையாறு கரந்தைத் தமிழ்ச் சங்கம் ஔவைக்கோட்ட அறிஞர் பேரவை, வவுனியா அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரர் திருக்கோயில் என்பன இணைந்து நடாத்திய 14 ஆவது அனைத்துலக உரைநடை மாநாட்டுத் தொடக்க விழாவிலே பங்கேற்று உரை நிகழ்த்தினார். தமிழகத்து அறிஞர் பெருமக்கள் 40 பேரை அழைப்பித்துத் தொடக்க நாள் விழாவைப் பொலிவுற அமைத்த பெருமை கலாநிதி எஸ். வை. ஸ்ரீதர் அவர்களையே சாரும். அவரது பங்களிப்புகள் விதந்து குறிப்பிடத்தக்கவை.

பல்கலைக் கழகத்துக் கல்விமான்கள், குறிப்பாகத் தமிழ்த்துறைசார் புலமையாளர்களது அன்புக்குப் பாத்திரராய் விளங்கிய இவர், எவர் எவ்வுதவியைப் கேட்டாலும் மனங்கோணாது செய்துதவுவார். பரோபகாரி, பண்பன், ஆபத்துக்கு உதவும் அருமை நண்பன், சப்ரகமுவ பல்கலைக்கழகத்திலே பயின்ற பயிலுகின்ற பட்டதாரிகள் மத்தியில் கீர்த்திமிக்கவர். கடின முயற்சியாளன், கடுஞ்சொற் கூறாதவர். எத்தகு அலுவல்களையும் காரியங்களையும் நிதானமாகவும் நேர்மையாகவும் உண்மையாகவும் நேர்த்தியுடனும் செய்ய வேண்டும் என்பதிலே அதீத அக்கறையும் கவனமும் மிக்கவர். பாசமும் நேசமுமுள்ள அருமைத் தந்தை, குடும்பத்திலே பொறுப்புடன் செயற்பட்ட கனவான், அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினர்க்கும் நண்பர்களுக்கும் உறவுகளுக்கும் தமது குருவை இழந்துவிட்ட பல்கலைக்கழகப் பட்டதாரி மாணவர்களுக்கும் ஆறுதல் கூற வார்த்தைகள் இல்லை. உலகின் நியதியை மாற்றவல்லவர் யார்? என்ற வினா எழுகிறது! மனத்திட சித்தத்தை இறையருனள் நல்க வேண்டிப் பிராத்திக்கிறோம்.

ஆத்மா சாந்தியடைவதாகுக!.

பேராசிரியர் கலாநிதி
கனகசபாபதி நாகேஸ்வரன்
மொழித்துறை
இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்
பெலிகுலோயா.

‘உன்னையே’ நீ அறிவாய்’ என்பதையும் ஏன், எதற்காக, எப்படி என்றும் கேள். அப்படிக் கேட்டதால் தான் சிலை வடிக்கும் இந்தச் சிற்பி சிந்தனைச் சிற்பியாக மாறினேன். அவர் சொன்னார், இவர் சொன்னார் என்று நம்பி அறிவிழந்து தடுமாற்றமடைய வேண்டாம். அவர் சொன்ன சொல்லானாதும், அதனை உந்தன் இயல்பான பகுத்தறிவால் எண்ணிப் பார்ப்பாய்! இதைத்தான் உனக்கும் இந்த உலகிற்கும் சொல்ல விரும்புகிறேன்.

- சோக்கிரட்டீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்பின் சிகரமாய் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து உள்ளத்தால் உயர்ந்த மாமனிதர்

அமரர் நாகலிங்கன் இரத்தினசபாபதி ஐயா அவர்கள் ஐந்து தசாப்தங்களாக அன்போடும் பண்போடும் வாழ்ந்துவந்த மறக்கமுடியாத ஒரு மாபெரும் மனித நேய மிக்கவராவார்.

ஐயா அவர்களை நாங்கள் எல்லோரும் மிகவும் அன்புடனும் பண்புடனும் மரியாதையுடனும் ஐயா என்று அழைப்பது வழக்கம்.

மத்திய மாகாண இந்து மாமன்றத்தில் ஆரம்ப காலமுதல் அங்கத்தவராகவும் உப தலைவராகவுமிருந்து அனைவரையும் அன்போடு உபசரிக்கும் நற்குணம் படைத்த எப்பொழுதும் புன்சிரிப்புடன் இனிய முகத்தோடு வரவேற்று உபசரிக்கும் ஒரு பண்பாளர்.

இந்த நிலையற்ற உலகில் பிறப்பும் இறப்பும் நிச்சயமானது. அதுவும் பிறப்பில் மானிடப் பிறப்பு அரிதானது இவ்வுலகில் வாழ்கின்றபோது சீரும் சிறப்புமாக வாழ்வதுதான் மானிட வாழ்க்கை. பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் சிறப்புற விளங்க வேண்டுமென்று பெரும் பேறுபெற்ற ஐயா அவர்கள் பிள்ளைகளுக்கும் மருமகளுக்கும் கலை, இலக்கிய ஆர்வலர்களுக்கும் நல்வழிகாட்டியவராகவும் சிறந்த ஆலோசகராகவும் விளங்கிய பெருமகனாவார்

வாழும் போதே இறைபத்தியாளராகவும் சிறந்த இலக்கியக் காவலராகவும் தன்னை நாடி வரும் நலன்விரும்பிகள் அனைவருக்கும் தான தருமங்கள் செய்வது நிறைந்தது என்ற பெரும் நம்பிக்கையின் நட்சத்திரமாகத் திகழ்ந்தவர் என்றால் மிகையாகாது.

மத்திய மாகாண இந்து மாமன்ற ஆரம்ப கால உபதலைவராக இருந்த அவரோடு நானும் நிர்வாகக்குழு அங்கத்தவராகவிருந்து இணைந்து செயல்பட்ட அந்த நாட்களை மறக்க முடியாது. இன்முகம் காட்டி அனைவரையும் அன்போடு அரவணைக்கும் சிறந்த நற்குணம் கொண்ட யுக புருஷர். கண்டியிலோ, மலையகத்திலோ அல்லது தலைநகர் கொழும்பிலோ அவர் கலந்து சிறப்பிக்காத நிகழ்ச்சிகளே இல்லை. அநேகமாக இரு கண்களைப்போல ஐயா அவர்களும் சேவாஜோதி எஸ். முத்தையா அவர்களும் கலந்து கொள்ளாத நிகழ்ச்சிகளே இல்லை.

அதுமட்டுமல்லாமல் கண்டி கலை, இலக்கிய இரசிகர் மன்ற போஷகராகவும், "அகிலம்" அறிவியல் சஞ்சிகை வளர்ச்சிக்கு உதவியாகவும் இருந்த அவரது பங்களிப்பு என்றும் என் மனதைவிட்டு நீங்காத நினைவாகும்.

சுகவீனம் காரணமாக அவர் மருத்துவமனையில் இருந்த சமயம் பார்க்கச் சென்றபோது இரு கரம் கூப்பி வணங்கியதும் அதற்கு அடுத்த நாள் அவர் (31.07.2010) இறைபதம் அடைந்த செய்தி கேட்டதும் இதற்காகவா வழக்கத்திற்கு மாறாக கையெடுத்து கும்பிட்டது எங்களை விட்டுப் பிரிவதற்கு தான் என்பதை அறிந்து அதிர்ச்சி மட்டுமல்லாமல் எங்கள் எல்லோரையும்மிகுந்த துயரத்திற்குள்ளாக்கிவிட்டது.

ஐயா அவர்களின் பிரிவினால் துயருறும் அவரது அன்புச் செல்வங்கள், குடும்பத்தினர், உளவினர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் மன ஆறுதல்களையும் தெரிவிப்பதோடு அன்னார் நித்திய ஆத்ம சாந்தி பெற அனைவரும் இறைவனை வணங்கி பிரார்த்திப்போமாக!

கலாபூஷணம் கே. வி. இராமசாமி, ஜே.பி.
– ஆசிரியர் – "அகிலம்" அறிவியல் சஞ்சிகை
தலைவர், கண்டி கலை, இலக்கிய இரசிகர் மன்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி கலை இலக்கிய இரசிகர் மன்றம்
கலை, இலக்கிய அறிவியல் சஞ்சிகை

அகில இலங்கை ரீதியில் இணைந்து நடாத்திய

மாபெரும் கலை இலக்கியப் பரிசுப் போட்டி 2017-18

"அகிலம்" கலை இலக்கிய அறிவியல் சஞ்சிகை 2017 இல் அகில இலங்கை ரீதியில் நடாத்திய பேச்சுப் போட்டி, கவிதை, கட்டுரை (பாடசாலை மட்டம்), கவிதை, கட்டுரை, சிறுகதை, நாடகப் பிரதி போட்டி (திறந்த மட்டம்) ஆகியவற்றில் பரிசு பெறுவோர்களின் விபரங்கள் பின்வருமாறு:

பேச்சுப் போட்டி

(பாடசாலை மட்டம்)

முதலாம் பரிசு

செல்வி ரவிச்சந்திரன் பிரவீனா
பெண்கள் உயர்தர பாடசாலை, கண்டி

இரண்டாம் பரிசு

செல்வி லக்ஷலா பெரியசாமி
பெண்கள் உயர்தர பாடசாலை, கண்டி

மூன்றாம் பரிசு

செல்வி இராஜேந்திரன் பானுஜா
நல்லிளைப்பாற்றி மகளிர் பாடசாலை, நுவரெலியா

ஆறுதல் பரிசு பெறுவோர்

1. **செல்வி ரட்ணவேல் சுதேஷிகா**
   பெண்கள் உயர்தர பாடசாலை, கண்டி
2. **செல்வி T. யஷ்திகா**
   இந்து சிரேஷ்ட பாடசாலை, கண்டி
3. **செல்வி மோகன கிருஷ்ணாகரன் சங்கமி**
   நல்லிளைப்பாற்றி மகளிர் பாடசாலை, நுவரெலியா
4. **செல்வி டிலக்ஷாயினி வசீகரன்**
   பெண்கள் உயர்தர பாடசாலை, கண்டி
5. **செல்வி A. சிந்துஜா**
   இந்து சிரேஷ்ட பாடசாலை, கண்டி
6. **செல்வி சந்திரமோகன் சாந்திமலர்**
   நல்லிளைப்பாற்றி ம. பாடசாலை, நுவரெலியா
7. **செல்வி தர்ஷிகா விநோதினி**
   இந்து சிரேஷ்ட பாடசாலை, கண்டி
8. **செல்வன் S. M. சிமாஸ்**
   புனித அந்தோனியார் கல்லூரி, கண்டி
9. **செல்வி மகேந்திரன் அனோஜா**
   நல்லிளைப்பாற்றி ம. பாடசாலை, நுவரெலியா
10. **செல்வி ரகுநாத குருக்கள் கஜலக்ஷ்மி**
   விவேகானந்தா தமிழ் ம. வித்தியாலயம், கண்டி

கட்டுரைப் போட்டி

(பாடசாலை மட்டம்)

முதலாம் பரிசு

செல்வி நஸார் அலாபேகம்
நிலாவெளி, திருகோணமலை

இரண்டாம் பரிசு

செல்வி லோகநாதன் ஜெயஜாலினி
விபுலானந்த த.ம.வி. ஹல்துமுல்லை

மூன்றாம் பரிசு

செல்வன் சோ. விநோத்குமார்
கோரக்கார் வீதி, சம்மாந்துறை

ஆறுதல் பரிசு பெறுவோர்

1. **செல்வன் E. K. டெப்டிஸ்பெக்**
   கோரக்கார் வீதி. சம்மாந்துறை
2. **செல்வி M.M.. பாத்திமா துஷ்ரா**
   பாடசாலை வீதி. சம்மாந்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. **செல்வி யோகேஸ்வரன் கிஷோவினி**
சுமணதிஸ்ஸ கம, பதுளை

4. **செல்வி சந்தனராஜ் ஸ்கொலஸ்டிகா**
க/நல்லாயன் மகளிர் கல்லூரி, கண்டி

5. **செல்வி சுப்ரமணியம் சர்மிளா**
டிக்கோயா தமிழ் மகா வித்தியாலயம்

6. **செல்வி பெனடிக் அந்தோனி மேரி**
ராணிவெத்த தோட்டம், லிந்துலை

7. **செல்வி யோ. கோமிரா துஷாந்தி**
சுமணதிஸ்ஸகம, பதுளை

8. **செல்வி P. ரூபாஷிணி**
ப/விபுலாந்த தமிழ் மகா வித்தியலயம், ஹல்துமுல்லை

9. **செல்வி இராமசந்திரன் அக்ஷயா**
சிலா/ஸ்ரீ வடிவாம்பிகை இந்துக் கல்லூரி, சிலாபம்

10. **செல்வி கிருஷ்ணபிள்ளை சர்மிணி**
ஹெவன்பிட்டிய த.ம.வி. முத்துகல பொலனறுவை.

கவிதைப் போட்டி

(பாடசாலை மட்டம்)

முதலாம் பரிசு

செல்வி வினோத்குமார் தவதாரணி
பாக்கியம் தேசிய கல்லூரி, மாத்தளை

இரண்டாம் பரிசு

செல்வி மனோகர் சுலக்ஷினி
நெலுக்குளம் கலைமகள் வித்தியாலயம், வவுனியா

மூன்றாம் பரிசு

செல்வி எம். யாழினி
கொத்மலை வீதி, நாவலப்பிட்டி

ஆறுதல் பரிசு பெறுவோர்

1. **செல்வி இஸ்மயில் பாத்திமா ஷகிலா**
ஜமாலியா மு.ம.வித்தியாலயம், திருகோணமலை

2. **செல்வன் சோமசுந்தரம் வினோஜ்குமார்**
சம்மாந்துறை

3. **செல்வி ரோஹினி சிங்கராஜா**
வ/விவேகானந்த த.ம.வி. - வவுனியா

4. **செல்வி ராசமூர்த்தி சுகணா**
நெலுக்குளம் கலைமகள் வித்தியாலயம், வவுனியா

5. **செல்வி கிருஷ்ணமூர்த்தி லதுஷனா**
ப/தமிழ் மகளிர் ம. வித்தியாலயம், பதுளை

6. **செல்வி சிவபாலன் கற்பஹாசினி**
சைவமங்கையர் வித்தியாலயம், கொழும்பு

7. **செல்வி சந்திரகுமார் மிதுஷிகா**
புனித அந்தோனியார் மகளிர் கல்லூரி, கண்டி

8. **செல்வி M.S.M. ரிவாஷி**
அளுப்பொத்த முஸ்லிம் ம.வி. படால்கும்புர

9. **செல்வி உதயச்சந்திரன் ஹம்ஸாந்தினி**
க/பெண்கள் உயர்தர பாடசாலை, கண்டி

10. **செல்வி சு. குலக்ஷிகா**
க/இந்து சிரேஷ்ட பாடசாலை, கண்டி

கட்டுரைப் போட்டி

(திறந்த மட்டம்)

முதலாம் பரிசு

செல்வி சி. சிந்துஜா
பேராதனைப் பல்கலைக்கழகம்

இரண்டாம் பரிசு

திருமதி ம. மாசிலாமணி
க/புனித ஜோசப் கல்லூரி. மஸ்கெலியா

மூன்றாம் பரிசு

செல்வநாயகம் இராஜதுரை
பங்ளலா டிவிஷன், ஹொப்டன். லுணுகலை

ஆறுதல் பரிசு பெறுவோர்

1. **திரு. இராஜசிங்கம் ஸ்ரீதரன்**
திருநகர், கிளிநொச்சி

2. **செல்வன் மரியநாயகம் கேசவன்**
மொறட்டுவை பல்கலைக்கழகம்

3. **திருமதி எஸ். ராஜேஸ்வரி**
பிரதான வீதி, நோர்வூட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. **திரு. ஸக்கியா சித்திக் பரீத்**
தெஹிவளை
5. **செல்வி சி. சத்தியகலா**
கிழக்குப் பல்கலைக்கழகம், மட்டக்களப்பு
6. **திரு. க. பிரசன்னகுமார்**
கொழும்பு 13
7. **செல்வி நீலமேகம் சரண்யா**
பொகவந்தலாவை
8. **திருமதி யோகேஸ்வரன் நிஷாந்தினி**
சுமணதிஸ்ஸகம, பதுளை
9. **திரு. அ. புஷ்பகுமார்**
டயகம மேற்கு, டயகம
10. **செல்வி சண்முகதாசன் ஷமிலாஜோதி**
தொட்டுலாகெல, ஹப்புத்தளை

கவிதைப் போட்டி

(திறந்த மட்டம்)

முதலாம் பரிசு

திருமதி நாகராஜன் சுகந்தி
நெலுக்குளம் கலைமகள் வித்தியாலயம், வவுனியா

இரண்டாம் பரிசு

கலாபூஷணம் மீரா அப்துல் பரீத்
மூதூர்

மூன்றாம் பரிசு

கலைமாமணி கார்த்திகேசு சிவலிங்கம்
மட்டக்களப்பு

ஆறுதல் பரிசு பெறுவோர்

1. **திரு. எம். ஐ. அச்சி முஹமட்**
சம்மாந்துறை
2. **திரு. சி. இரத்தினசிங்கம்**
சேனையூர், மூதூர்
3. **திரு. மூத்ததம்பி மகாதேவர் (முத்துமாதவன்)**
கறுவாக்கேணி, வாழைச்சேனை
4. **திருமதி குழந்தைவேல் ஞானவள்ளி**
கந்தப்பளை

5. **திரு. விக்னேஸ்வரன் அஜந்தன்**
கிழக்குப் பல்கலைக் கழகம், மட்டக்களப்பு
6. **செல்வி புண்ணியமூர்த்தி சத்தியவாணி**
பலாபத்வெல, மாத்தளை
7. **திரு. க. ஜெயநாதன், ஜே. பீ.**
உவர்மலை, திருகோணமலை
8. **செல்வி கே. பவித்திரா**
சார்ணியா, கந்தேகெதர
9. **திரு. த. விஜேந்திரன்**
செஸ்போர்ட், வகாரகா
10. **செல்வி V. M. எலிசபெத்**
காசல்ரீ டிவிசன், ஹட்டன்

சிறுகதைப் போட்டி

(திறந்த மட்டம்)

முதலாம் பரிசு

திரு. மகாலிங்கம் நிரேஸ்குமார்
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்

இரண்டாம் பரிசு

திருமதி ரேனுகா ஜெயரூபன்
நெலுக்குளம், வவுனியா

மூன்றாம் பரிசு

யாழ். தர்மினி பத்மநாதன்
வீரகேசரி, யாழ்ப்பாணம்

ஆறுதல் பரிசு பெறுவோர்

1. **திருமதி கனகா கந்தசாமி**
வகுகாபிட்டிய. புசல்லாவை
2. **திரு. அழகு கனகராஜ்**
அக்கரபத்தனை
3. **செல்வி M. M. H. P. மபாஷா**
மரிக்கார் வீதி. களுத்துறை தெற்கு
4. **திருமதி C. V. சந்திரசேகரம் (வயலற் சரோஜா)**
ஜெயந்திபுரம், மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. **செல்வி சல்மான் மேரிஸ்ரா**
மன்னார்

6. **திருமதி யோகா யோகேந்திரன்**
யோகவாசல், திருக்கோவில் 01.

7. **திருமதி V. விஜயலக்ஷ்மி**
பொன்சேகா ரோட், கல்கிசை

8. **செல்வி குழந்தைவேல் ஞானவள்ளி**
எஸ்கடேல், கந்தப்பளை

9. **திரு. வை. கஜேந்திரன்**
எழில்நகர், மன்னார்

10. **திருமதி பானுப்பிரியா தயானந்த்**
மாப்பனாவத்துர, கண்டி

நாடகப் பிரதி

(திறந்த மட்டம்)

முதலாம் பரிசு

யாழ். தர்மினி பத்மநாதன்
வீரகேசரி, யாழ்ப்பாணம்

இரண்டாம் பரிசு

கலைமாமணி கார்த்திகேசு சிவலிங்கம்
மட்டக்களப்பு

மூன்றாம் பரிசு

திரு. இராஜலிங்கம் ஸ்ரீதரன்
திருநகர் வடக்கு, திருநகர்.

ஆறுதல் பரிசு பெறுவோர்

1. **செல்வன் அருந்தவநாதன்**
உக்கிலாங்குளம், வவுனியா

2. **திரு. க. பாலன்**
வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்

3. **ஆதம் லெப்பை (பாலமுனை ஆதம்)**
பாலமுனை - 01

4. **திரு. A. R. முஹமட் அஸ்கான்**
சாளம்பைக்கேணி, அம்பாறை

5. **திருமதி V. விஜயலக்ஷ்மி**
பொன்சேகா ரோட், கல்கிசை

கண்ணீர் அஞ்சலி

கண்டி செய்தி பத்திரிகை நிர்வாக ஆசிரியர் **ரா. மு. நாகலிங்கம்** ஐயா அவர்கள் மூன்று மாதங்களுக்கு முன்பு இறைவனடி எய்திவிட்டார் என்ற செய்தி கேட்டு மிகவும் மனச்சோர்வும் கவலையும் அடைந்தோம். அவரது பிரிவினால் துயருறும் அன்புச் செல்வங்கள், குடும்பத்தினர், உறவினர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் மன ஆறுதலையும் தெரிவிப்பதோடு அன்னார் நித்திய ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நீங்காத நினைவில்
அகிலம் – ஆசிரியர், எழுத்தாளர்கள், கல்விமான்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தசாப்தம் காணும்

மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றம்

කඳුරට අධ්‍යාපන සංවර්ධන සංගමය

UPCOUNTRY EDUCATION DEVELOPMENT SOCIETY

UEDS
Reg. GA 2341

UEDS 10 ANNIVERSARY 2006 - 2016

பத்தாண்டு கால வெற்றிப் பாதையில்...

கடின உழைப்பு, கட்டுப்பாடு, சிறந்த ஒற்றுமை, சீரிய நேர்மை கொண்ட ஆற்றல்மிகு நிர்வாகத் திறமைகளுடன் கூடிய ஒரு இலட்சியப்பாதையில் பயணித்துவருகின்ற மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றமானது "கல்விக் கண் திறப்போம்" என்ற எண்ணக்கருவோடு மலையகத்தில் வீட்டுக்கொரு பட்டதாரியை உருவாக்குவோம் என்ற உன்னத குறிக்கோளுடன் முன்னெடுத்துச் செல்லும் தன் மகத்தான சேவையின் மூலம் மலையகக் கல்வி வரலாற்றில் ஒரு பாரிய மாற்றத்தை ஏற்படுத்திய பெருமையுடன் தனது பத்தாவது ஆண்டில் தடம் பதிக்கின்றது.

இதுவரையில் 500றிற்கும் அதிகமான பல்கலைக்கழக மாணவர்களுக்கு மன்றம் மாதாந்த புலமைப்பரிசில் வழங்கி உதவிக்கரம் நீட்டியுள்ளது. க.பொ.த சாதாரண தரம், க.பொ.த உயர்தரம் மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு இலவசக் கருத்தரங்குகள், முன்னோடிப் பரீட்சைகளை நடத்தி மாணவர்கள் சிறந்தபெறுபேறுகளை பெற்றுக்கொள்வதற்கு வழியமைத்துள்ளது.

கல்வியில் மட்டுமல்லாது, கலை, கலாச்சாரம், விளையாட்டு போன்ற சகல துறைகளிலும் மலையக மாணவர்களின் திறமைகளை வெளிக்கொணர்வதற்கு, மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றம் மிகுந்த அர்ப்பணிப்புடன் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது.

மாணவர்களின் எதிர்பார்ப்புக்களையும், கனவுகளையும் பல சவால்களுக்கு மத்தியில் நிறைவேற்றிய பெருமையுடன், வெற்றிநடைபோட்டு தனது 10வது வருட நிறைவைக் காண்பது நமது மன்றத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றியென்றால் அது மிகையல்ல.

மலையகக் கல்வி அபிவிருத்தி மன்ற போஷகர்கள்

சாதனைமிகு வெற்றிக்கு வழிவகுத்த மன்ற தலைமைகள்

மன்றத்தின் வளர்ச்சியானது, அதன் உயரிய நோக்கத்தின் வழிநின்று உலகளாவிய தமிழ் நெஞ்சங்களின் நல்வாழ்த்துக்களுடனும் பல்வேறுபட்ட சமூக மற்றும் கல்விசார்ந்த நிறுவனங்கள் பெரியோர்களின் பாராட்டுக்களின் மத்தியில் மன்றமானது மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக இதுவரையில் எத்தனையோ மகத்தான வெற்றிப்படிகளைக் கண்டு பெருமையடைகின்றது.

உருவாக்குவோம் எதிர்கால தலைமுறைக்கு...

[illegible] மன்ற நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கும், மன்ற வெற்றியின் உயிர்நாடியாக இருக்கும் அங்கத்தவர்களுக்கும், மன்ற ஆலோசகர்களுக்கும், [illegible] சார்ந்த பெருந்தகைகளுக்கும், மன்றத்தின் சேவைகளை உலகறியச் செய்த ஊடகத்துறைசார் நண்பர்களுக்கும், இதுவரைகாலம் மன்றத்தின் வளர்ச்சிக்கு [illegible] உறுதுணையாக நின்ற அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றோம்.

மன்ற நிர்வாகக்குழு உறுப்பினர்கள்

Ravi Jewellers (Pvt) Ltd. | Bobby JEWELLERS | Subani Jewels | CROWN JEWELS | SARRITA Jewellery | JB Jewellery (Pvt) Ltd.

No.189, 3rd Floor, Sea Street, Colombo 11, Sri Lanka. Tel : 011-2424886 / 2444339 E-mail : arivoliorg@gmail.com Web : www.arivoli.org

வாழ்க வளமுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகவை **12** இல் காலடி பதிக்கும்

மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றம்

26-08-2017

கல்வி | கலை | கலாசார | விளையாட்டு | சமூக பணிகள்

என்பவற்றிற்காக அயராது உழைத்து

12th Anniversary

நாம் கண்ட வெற்றிகள் அனைத்திற்கும்-கரம் கொடுத்தவர்கள் இவர்களே..!

* அன்றும் இன்றும் என்றும் எம்முடன் கரம் கோர்த்திருக்கும் மன்றத்தின் கௌரவ போசகர்கள்

N. Rengarajan | N. Seenivasagam | T. Namasivayam | R. Maheswaran | R.M. Ramajeyam | R. Krishnasamy | R. Balasubramaniyam | R. Seetharaman | P. Jeyabalan | P. K. Palanisamy

சிரேஷ்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள்

மலையகத்தில் கல்வி புரட்சியை ஏற்படுத்தும் கொழும்பு தலைநகர் தந்த மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றம்

மலையகத்தில் ஒரு கல்வி மன்றம் திறக்கவென 2006ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் உதயமான மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றம் மலையக் கல்வி வளர்ச்சியின் சவால்களை எதிர்கொண்டு தனது பயணத்தை ஒரு தசாப்த காலத்திற்கு மேலாக தொடர்ந்து அர்ப்பணிப்புடன் தொடர்ந்து கொண்டிருப்பதை "அகிலம்" கலை இலக்கிய அறிவியல் சஞ்சிகை பெருமிதம் கொள்கிறது.

மலையகத்தில் வீட்டுக்கொரு பட்டதாரியை உருவாக்குவதை இலட்சியமாகக் கொண்டு வெற்றி நடைபோட்டு கொண்டிருப்பது மலையகத்தின் விடியற்கானதொரு நல்ல சமிக்கையாக நாம் கொள்ளலாம்.

கல்வியைக் கருப்பொருளாகக் கொண்டு அர்ப்பணிப்புடன் பணியாற்றிவரும் மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றத்தின் வெற்றிக்கு அதன் திருமிகு போஷகர்கள், பணிப்பாளர்கள், தலைவர், செயலாளர் பொருளாளர் மற்றும் அனைத்து மன்ற அங்கத்தவர்களையும் ஆக்க சிந்தனையும் தெளிவான இலட்சிய நோக்குமே சிறந்த உதாரணமாகும்.

அனைவருக்கும் நன்றிகள்..! நன்றிகள்..! நன்றிகள்..!

எம்மைப்போன்று நம் சமூகத்திற்காக பாடுபடும் அனைத்து அமைப்புகளுக்கும் எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்...

"கல்விக் கண் திறப்போம் கற்போருக்கு கரம் கொடுப்போம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ANOKI JEWELLERS

Your partner in Gold

No. 72, Yatinuwara Veediya, Kandy
Tel : 081 2232932
Email anoki.aj@gmail.com
Web : www.anokijewellers.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது இலங்கைத் திருநாடும் மக்களும் சாந்தியும்,
சமாதானமும் பெற்று நல்வாழ்வு வாழ்ந்திட பிரார்த்திக்கின்றோம்.

வெள்ளி விழா - பவள விழா சிறப்பு மலராக வெளிவரும்

'அகிலம்' அறிவியல் சஞ்சிகை

அனைத்துக் கரங்களிலும் பவனிவர

எமது நல்லாசிகள்

Luckyland

LUCKYLAND BISCUIT MANUFACTURERS

NATTARANPOTHA, KUNDASALE, SRI LANKA.
TEL : 0094-081-2420574, 2420217. FAX: 0094-081-2420740
Email: luckyland@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DESIGNED & PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO-13. TEL: 011 2330195